# T.N.L.A Debates

OFFICIAL REPORT

VOL: LV NO: 1 and 2

November 17 and 18

1983

D
211,31 N83
N83.55142
136070

வெளியீடு 29-5-1984]

[Issued 29-5-1984

30

6-ஜூலை 1984
2745

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**வியாழக்கிழமை 1983 நவம்பர் 17 - தொகுதி LV எண். 1**

**Thursday 17th November 1983—Volume LV No. 1**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்.

*17—11—1983*


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள் —** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—34 |
| **2. தகவல் கோரல் —** | |
| உறுப்பினர்கள் விடுநிலையைப் பழுது பார்த்தல் .. .. .. .. | 34—35 |
| **3. உரிமைப் பிரச்சினைகள் —** | |
| (அ) "சவுத் இந்தியா விஸ்கோஸ்" நிர்வாகத்தின் மீது .. .. | 35—36 |
| (ஆ) "தினகரன்", முரசொலி நாளேடுகள் மீதும் உறுப்பினர் திரு. அழகர்சாமி மீதும் .. .. .. .. | 36—37 |
| **4. ஒழுங்குப் பிரச்சினை —** | |
| நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றவை—தீர்ப்பு .. .. .. | 37—39 |
| **5. ஒத்திவைப்புத் தீர்மானம் —** | |
| சென்னை, ஐஸ் அவுஸ் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து .. .. | 39—46 |
| **6. கவன ஈர்ப்புகள் —** | |
| (அ) சென்னை பி. அண்டு சி. மில்லைச் சுற்றியுள்ள கால்வாய்களைச் சீர் செய்தல் .. .. .. .. | 46—48 |
| (ஆ) கரூரில் உள்ள சாயப் பட்டறைகளின் கழிவு நீரை அமராவதி ஆற்றில் விடுவது | 48—50 |
| **7. அரசினர் தீர்மானங்கள் —** | |
| (அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை-உறுப்பினர்கள் தேர்தல் .. .. .. .. | 50 |


D 2 A 195 —i

136070



பக்கங்கள்


(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை-உறுப்பினர் தேர்தல் .. .. .. 50—51

(இ) அலுவல் வரிசையில் மாற்றம் .. .. 202

(ஈ) விதி 31 ஐத் தளர்த்தல் .. .. 209

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் —

(அ) வேளாண்-விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1983 .. .. .. 51

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 51—52

(இ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 52

(ஈ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 53

(உ) நிதி ஒதுக்க (எண் 7) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 53—103

(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1983 .. .. 103—162

(எ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1983 .. 163

(ஏ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 .. .. 163—164

(ஐ) மதுரை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 .. 164—166

(ஒ) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 .. .. 166—167

(ஓ) இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தம் செய்திறன்) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 168—177




பக்கங்கள்


(ஔ) நில உரிமை பதிவேடு (பட்டா பாஸ் புக்) வழங்கல் சட்ட முன்வடிவு, 1983 178—196

(க) பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1983 .. 196—202

(ங) வேளாண்-விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 1983 .. .. .. 203—208

9. அறிவிப்புகள் —

(அ) பேரவை அலுவல் .. .. 167—169

(ஆ) நில உரிமைப் பதிவேடு (பட்டா பாஸ் புக்) வழங்கல் சட்ட முன்வடிவு, 1983 (ஆ. இ.) .. .. .. .. 178

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 209

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச, ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகுக் கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி (பால்பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கமும் கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித்துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு.எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள். அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்தம், நிர்வாகம்.



21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மண்ணாபுமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப்பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU S. SUNDAR LAL KURANA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. HON. DR. M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy and Excise.

2. HON. DR.V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU.S.RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU. K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. HON. THIRU.S.D.SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes and Census.

6. HON. THIRU RM. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism, Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor permits.

7. HON.THIRU.C.ARANGANAYAGAM(Minister for Education)—Education, including Technical Education, Official Language.

8. HON. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering, Wing and Agro-Engineering.

9. HON. Thiru. C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru.P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru.S.RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) —Health.

13. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transport ) — Transport, Nationalised Transport, Motor Vehicles Act and ports

14. Hon. Thiru S .THIRUNAVUKKARASU (Minister for Industries Large scale industries, Mines and minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S.N.RAJENDRAN : (Minister for Public Works) — Prohibition excluding grant of liquor permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon.Thiru M.VIJAYASARATHI (Minister for Adi Dravidar)— Welfare )—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru Thiruchi R. SUNDARARAJAN (Minister for Nutritious Meals) —Nutritious Meals.

18. Hon. Thiru S.R. RADHA (Minister for Environmental Pollution Control) —Environmental Pollution Control.

19. Hon. Thiru M.R. GOVENDHAN (Minister for Backward Classes): Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) —Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirmathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi —Khadi.

22. Hon. Thiru Y.S.M. YUSUF (Minister for Irrigation and Wakf) — Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries) — Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) — Fisheries.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
2. திரு. மா. சின்னராசு.
3. திருமதி டி. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராசன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி எல்.

### குழு அலுவலர்

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.,

### சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

‡25—10—1983 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

**எஸ்டேட் அலுவலர்**

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்**

திரு. பி. கோதண்டராமன்.

**தலைமை நிருபர்**

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை. |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர். |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 4 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி. |
| 8 | அரங்கநாதன், திரு. மு. .. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 10 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 11 | அருணகிரி, திரு. இரா. .. | திருப்பத்தூர். |
| 12 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 14 | வெற்றிடம் .. .. .. | புரசைவாக்கம். |
| 15 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 16 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 19 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.). |
| 20 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 21 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 22 | ஆலூர் ஜெகதீசன், திரு. ப. கோ. | செங்கல்பட்டு. |
| 23 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 24 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி. |
| 25 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம். |
| 26 | இராசரத்தினம், திரு. நு. .. | பூந்தமல்லி |
| 27 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.). |
| 28 | இராசாராம், திரு. க. .. | பனைமரத்துப்பட்டி. |
| 29 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 30 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 31 இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |
| 32 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. .. | மதுரை (மேற்கு). |
| 33 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 34 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 35 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. .. | செஞ்சி. |
| 36 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம். |
| 37 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 38 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம். |
| 39 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 40 இராமலிங்கம், டாக்டர் கே.பி. | இராசிபுரம். |
| 41 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 42 இராஜசேகரன், திரு. வே. .. | இராதாகிருஷ்ணன் நகர். |
| 43 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 44 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 45 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.). |
| 46 ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், திரு. | அம்பாசமுத்திரம். |
| 47 உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம். |
| 48 உச்சி, திரு. கே. .. | கூடலூர். |
| 49 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 50 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 51 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 52 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 53 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 54 கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 55 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 56 கந்தசாமி, திரு. பி. .. .. | பொங்கலூர். |
| 57 கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 58 வெற்றிடம் .. .. .. | அண்ணா நகர். |
| 59 கருப்பசாமிப் பாண்டியன், திரு. இரா. .. | பாளையங்கோட்டை. |
| 60 கருப்பையா, திரு. வி. .. | குளித்தலை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 61 கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை. |
| 62 கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 63 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 64 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.). |
| 65 கலையரசன், திரு. அ. நன்னிலம் .. | நன்னிலம் (செ.வ.). |
| 66 காளிமுத்து, டாக்டர் கா. .. | திருப்பரங்குன்றம். |
| 67 வெற்றிடம் .. .. | மாயவரம். |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கா.கோ. | காங்கேயம். |
| 69 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 70 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 71 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிகுப்பம். |
| 72 கிருஷ்ணராஜ், திரு. ஜி. ... | சேலம்-1. |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 74 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 75 குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 76 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 77 குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 78 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.). |
| 79 குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர். |
| 80 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 81 குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை. |
| 82 கோபால், திரு. சி. .. | சோளிங்கர். |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 84 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம். |
| 85 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ). |
| 86 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 87 கோவைத்தம்பி, திரு. .. | பேரூர். |
| 88 சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி. |
| 89 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு). |
| 90 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 91 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 92 சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 93 சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 94 சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 95 சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.). |
| 96 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 97 சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 98 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 99 சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம். |
| 100 சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 101 சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி |
| 102 சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 103 சிவப்பிரகாசம், திரு. சி .. | சேந்தமங்கலம் (செ.வ). |
| 104 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 105 சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 106 சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 107 சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 108 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 109 சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர். |
| 110 சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 111 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 112 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 113 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். ... | முகையூர். |
| 114 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 115 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 116 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 117 சுப்பிரமணியன் திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர். |
| 118 சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |
| 119 சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 120 சுப்பிரமணியன், திரு. ஜி.கே. | பவானிசாகர். |
| 121 சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 122 செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 123 செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 124 செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 125 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 126 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 127 சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 128 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர். |
| 129 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 130 சோமு, திரு. என்.வி.என். .. | பூங்கா நகர். |
| 131 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சி-2. |
| 132 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர். |
| 133 தங்கமணி திரு. கே. எம். .. | திண்டிவனம். |
| 134 தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 135 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான். |
| 137 தவசி, திரு. ஆர். .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 138 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 139 தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 140 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 141 தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 142 சௌந்திரராஜன், திரு. ஆர். திருச்சி | ஸ்ரீரங்கம். |
| 143 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 144 திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 145 திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.). |
| 146 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 149 துரைமுருகன், திரு. .. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 துரைராஜ், திரு. பி. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 152 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 153 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 157 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 158 நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 159 நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி. |
| 160 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய). |
| 162 பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 164 பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம். |
| 165 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம். |
| 166 பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 167 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 168 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 169 பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம். |
| 170 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 171 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |
| 172 பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 173 பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு. |
| 174 பாரமலை, திரு. கு. .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 176 பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி. |
| 177 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 178 பாலசுப்பிரமணியன், வேடசந்தூர், திரு. வி.பி. | வேடசந்தூர். |
| 179 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 180 பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 181 பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 182 பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம். |
| 183 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை. |
| 184 பூங்காவனம். திரு. என். ஏ. — | காட்பாடி. |
| 185 பெரியசாமி திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.). |
| 186 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.). |
| 187 பெருமாள், திரு. என். .. | வாசூர் (செ.வ.). |
| 188 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 189 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 190 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 191 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு. |
| 192 மணி, திரு. டி. .. .. | விளவங்கோடு. |
| 193 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 194 மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம். |
| 195 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 196 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 முசிறிபுத்தன் திரு. பி. .. | திருச்சி-1. |
| 198 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. — | கன்னியாகுமரி. |
| 199 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 200 முத்துராமலிங்கம், திரு. இ. .. | இராதாபுரம். |
| 201 முத்துவேல், திரு. என் .. | வானூர் (செ.வ.). |
| 202 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 203 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி. |
| 204 முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு. |
| 205 மூர்த்தி, திரு. ஜி. ... .. | பேரணாம்பட் (செ.வ.). |
| 206 மொக்கையன், திரு. பி. .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 207 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 208 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 209 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 210 ரங்கசாமி, திரு. க. .. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 211 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி. |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல். |
| 215 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 216 விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி.. |
| 217 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 218 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம். |
| 219 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 219 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 220 விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 221 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு. |
| 222 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு. |
| 223 வீரானம்பலம், திரு. க. வெ... | மேலூர். |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு.ப | காஞ்சீபுரம். |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர். |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம்... | பெரணமல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை. |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர். |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார். |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. இராம வீரப்பன் —அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் —அமைச்சர்.

3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே —அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்.

5 மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்.

6 மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்.

7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1983 ஆம் ஆண்டு நவம்பர் 17, வியாழக்கிழமை

கார்த்திகை 1, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்."

தாம் செய்து முடிக்க எண்ணிய செயலைச் செய்வதற்குத் தகுந்த இடத்தை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பிறகு, தமக்கு நெருக்கமான அன்பர்களை ஆதரவாகக் கொண்டு அச் செயலைச் செய்து முடிக்கலாம். இவ்வாறு செயல்படுவோரை எளிதில் வென்றுவிடலாம் என்று எண்ணி இருந்த பகைவர்கள் தங்களுடைய இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் பரிசுச்சீட்டுத் திட்டம்.

*வினா எண் 198—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதம் ஒன்றுக்கு எத்தனை ஆயிரம் ரூபாய்க்குப் பரிசுச் சீட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது?

(ஆ) எந்தெந்த சமயத்தில் விசேட பரிசுச் சீட்டு வெளியிடப் படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சாதாரணக் குலுக்கலாக இருந்தால் வரிசைக்கு 10 இலட்சம் சீட்டுகள் வீதம் மாதம் ஒன்றுக்கு ஆறு வரிசைகளாக 60 இலட்சம் சீட்டுகள் வெளியிடப்படுகின்றன. இந்த குலுக்கல் 10 நாட்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது,

சிறப்புக் குலுக்கலாக இருந்தால் வரிசைக்கு 10 இலட்சம் சீட்டுகள் வீதம் மூன்று அல்லது நான்கு வரிசைகள் வெளியிடப்படுகின்றன சிறப்புக் குலுக்கல் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது.

(ஆ) சனவரி மாதத்தில் பொங்கல் சிறப்புக் குலுக்கலும், ஏப்ரல் மாதத்தில் தமிழ் புத்தாண்டு சிறப்புக் குலுக்கலும், ஜூலை மாதத்தில் ஒரு சிறப்புக் குலுக்கலும் மற்றும் அக்டோபர் மாதத்தில் தீபாவளி சிறப்புக் குலுக்கலும் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 199, 200, 201 ஆகியவைகளும் பரிசுச் சீட்டுகள் பற்றிய கேள்விகளே யாதலால், அவைகளுக்கான விடைகளையும் அளிக்கும்படியாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*வினா எண் 199—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

(ஆ) இலாபத் தொகையை எந்த வழியில் செலவு செய்ய அரசு ஒதுக்கியது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் தமிழ் நாடு பரிசுத் திட்டத்தின் மூலம் அரசுக்கு கிடைத்த நிகர லாபம் முறையே ரூபாய் 1,64,30,808, 2,29,00,390 ஆகும்.

(ஆ) 1979–80 ஆம் ஆண்டு பரிசுச்சீட்டின் மூலம் கிடைத்த நிகர வருமானத்தில் 75 விழுக்காடுத் தொகையான ரூ. 1,23,23,114-ஐ தமிழ்நாடு சிறப்பு நல நிதிக்கு மாற்றப்பட்டு கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகளுக்காக செலவு செய்ய அரசு ஒதுக்கீடு செய்தது: —

| | ரூ. |
|---|---|
| கிராம குடிநீர் திட்டத்திற்காக .. .. .. | 77,51,114 |
| முன்னாள் இராணுவத்தினர் நல நிதிக்கு .. | 10,52,000 |
| முதலமைச்சரின் குழந்தைகள் நல நிதிக்கு (அமைக்கப்பட இருக்கிறது) .. .. .. | 35,20,000 |



1980–81 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டின் மூலம் கிடைத்த நிகர வருமானத்தில் 75 விழுக்காடுத் தொகையான ரூ. 1,73,30,864ஐ தமிழ்நாடு சிறப்பு நல நிதிக்கு மாற்றப்பட்டு கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகளுக்காக செலவு செய்ய அரசு ஒதுக்கீடு செய்தது :—

| | ரூ. |
|---|---|
| கிராம குடிநீர் திட்டத்திற்காக .. .. .. | 1,00,00,000 |
| ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைக்காக .. | 67,08,578 |
| முன்னாள் இராணுவத்தினர் நலநிதிக்காக .. | 6,22,286 |

*வினா எண் 200—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு பரிசு குலுக்கலை அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் ஏற்பாடு செய்யாமல் தனியார் இடங்களில் கூடுதல் வாடகைக் கொடுத்து ஏற்பாடு செய்வது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அந்த நிலையை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இல்லை. பொதுவாக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே நடத்தப்படுகிறது. குலுக்கல் நடைபெறும் நாளில் அரசு கட்டிடங்கள் கிடைக்காதபோது, தனியார் சபாக்களில் அல்லது கட்டிடங்களில் குறைந்த வாடகைக்கே நடத்தப்படுகிறது.

* வினா எண் 201—திரு என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டு (lottery) ஒவ்வொரு குலுக்கலுக்கும் எவ்வளவு சீட்டுக்கள் அடித்து வெளியிடப்படுகின்றன ?

(ஆ) அவற்றுள் விற்கப்படாமல் ஏதாவது சீட்டுக்கள் தேங்கி விடுவதுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) சாதாரண குலுக்கல்களுக்கு 2 வரிசை சீட்டுகள், வரிசைக்கு 10 இலட்சம் வீதம் 20 இலட்சம் சீட்டுகள் வெளியிடப்

படுகின்றன. சிறப்புக் குலுக்கலுக்கு நான்கு அல்லது மூன்று
வரிசைகள். அதாவது 40 அல்லது 30 இலட்சம் சீட்டுகள்
வெளியிடப்படுகின்றன.

(ஆ) ஆம் மற்ற மாநில பரிசு சீட்டுகளுடன் வியாபார
ரீதியில் போட்டியிட வேண்டுவதால், நம் மாநில பரிசுச்சீட்டுகள்
விற்காமல் சில சமயங்களில் தேங்கிவிடுவதுண்டு.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு
தலைவர் அவர்களே, சமீப காலத்திலே தமிழகத்திலே வெளி
மாநில லாட்டரி சீட்டுகள் அதிக அளவில் விற்பதால் நமது மாநில
லாட்டரி சீட்டுகளின் விற்பனை குறைந்துள்ளது என்பது
உண்மையா? ஆமெனில் வேறு மாநில பரிசுச் சீட்டுகளுக்கு பந்தய
வரியோ அல்லது அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கிற
மற்றைய வரிகளையோ விதிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, வேறு மாநிலங்களைச் சேர்ந்த பரிசுச்சீட்டுகள்
அதிகமான அளவுக்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது
தமிழகத்திலே விற்கப்படுகின்றன என்பது உண்மையாகும்.
ஆனால் மற்ற மாநிலங்களோடு இரண்டு வகைகளில் உடன்பாடு
செய்துகொண்டு நம்முடைய மாநில பரிசுச் சீட்டுகளை அந்த
மாநிலங்களிலேயும் அந்த மாநில பரிசுசீட்டுகளை இந்த மாநிலத்
திலேயும் விற்கவேண்டுமென்ற அடிப்படையில் பல மாநிலங்கள்
அதற்கு வந்துகொண்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட
அதிகமான அளவுக்கு இங்கே பரிசுச்சீட்டுகளை விற்கவேண்டு
மென்ற சூழ்நிலையை சட்டத் துறையினர் ஆராய்ந்து வரு
கின்றனர். சட்டம் இடம் கொடுக்குமானால் அதற்கான நட
வடிக்கைகளை அரசு எடுக்கலாம் என்று கருதிக்கொண்டு
இருக்கிறது. பிற மாநில பரிசுச் சீட்டுகள் தமிழகத்திலே
விற்கப்படுமானால் அதற்கு ஓரளவுக்கு வரி விதிக்க இயலுமா
என்பதை சட்டத்துறை ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்
பட்டிருக்கிறது. அதை சட்டத்துறை ஆராய்ந்துகொண்டிருக்
கிறது. மற்றும் மத்திய அரசுக்கு பாராளுமன்ற உறுப்பினர்
களும் மற்றவர்களும் தெரிவித்திருக்கிறார்கள், அந்த அந்த
மாநிலங்களின் பரிசுச்சீட்டுகள் அந்த அந்த மாநிலங்களிலே
தான் விற்கவேண்டுமென்றும் பிற மாநிலங்களுக்கு செல்லக்
கூடாது என்றும் அகில இந்திய அளவிலே மத்திய அரசு சட்டம்
கொண்டுவரவேண்டுமென்றும் ஒரு கருத்து இருக்கிறது. தலைமை
உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருக்
கின்றன. அந்த முடிவுகளை மத்திய அரசும் எதிர்பார்க்க
வேண்டியிருக்கிறது, மாநில அரசும் எதிர்பார்க்கவேண்டி இருக்
கிறது.

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, தமிழக
அரசு பரிசுச்சீட்டுகளின் லாபத்தில் ஒரு பகுதியை குடிநீர்
வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்குவதாக மாண்புமிகு நிதியமைச்சர்





அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது கிராமப்புறங்
களிலே மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பல கிராமங்
களிலே இல்லாத காரணத்தினால் லாபத் தொகை முழுவதையும்
குடிநீர் திட்டங்களுக்கே செலவிட அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, குடிநீர் ஒவ்வொரு சிற்றூருக்கும் தரவேண்டு
மென்று, முன்னுரிமை அளித்து, ஒரு கொள்கையை அரசு மேற்
கொண்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக
குடிநீர் வழங்குகிற திட்டம் பொதுவாக ஆண்டுக்காண்டு மேற்
கொள்ளப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் தன்னிறைவுத்
திட்டத்தின் மூலமாக 378 ஊராட்சி ஒன்றியங்களில் தனித்தனி
யாக எடுத்து அதிலும் குடிநீர்த்திட்டத்தைப் பல்வேறு சிற்றூர்
களுக்கும் பேரூர்களுக்கும் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்
கொள்ளப்பட்டு வருகின்றன. பரிசுச்சீட்டு வருவாயின் ஒரு
பகுதியை குடிநீர் திட்டங்களுக்கு ஒதுக்கி வருகிற அதே நேரத்திலே
பல்வேறு முக்கியமான சமுதாய நலத் திட்டங்களைக் கருத்திலே
கொள்ளவேண்டி இருப்பதன் காரணமாகவும் பெருமளவு குடிநீர்
திட்டத்திற்கும் ஊனமுற்றோருக்கு ஆகவும், முன்னாள் இராணு
வத்தினர் நல நிதிக்காகவும், குழந்தைகள் நலநிதிக்காகவும்
மற்றவைகளுக்காகவும் ஒரு பங்கு ஒதுக்கவேண்டிய அவசியம்
இருக்கிறது.

**திரு. கோவைத்தம்பி :** தலைவர் அவர்களே, வெளிமாநில
பரிசுச் சீட்டுகள் இந்த மாநிலத்திலே அதிகமாக விற்பதால் என்டர்
டெய்ன்மென்ட் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ், கமர்ஷியல் டாக்ஸ்
போன்ற வரிகள் குறைந்திருக்கின்றன என்ற ஒரு பேச்சு பேசப்
படுகிறதே அது உண்மையா? வெளிமாநில பரிசுச்சீட்டுகளுக்கு
தமிழகத்தைப் பொறுத்தவரையில் 300 கோடி ரூபாய் வருகிறது
என்றும் அதுவும் என்னுடைய கோவை மாவட்டத்திலே வருடத்
திற்கு 100 கோடி ரூபாய் வருகிறது என்றும் சொல்லப்படுகிறதே,
அரசு அதை ஆராய்ந்து ஒன்று 300 கோடிக்கு நுழைவு வரி
என்ற விதத்திலே 25 சதவீதம் விதிக்க அல்லது அரசே அந்த
லாட்டரிகளை எடுத்து மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு
முன்வருமா ?

(முற்பகல் 9.10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பரிசு சீட்டு விற்பனையின்
காரணமாக விற்பனை வரியோ அல்லது வருமான வரியோ அல்லது
வேறு பல வரிகளோ பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்று கூறு
வதற்கு இல்லை, ஆனால் பிற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகள்
அதிகமாக இங்கே விற்கப்படுகின்றன. அதிகமாக வாங்குகிற
அளவுக்கு ஒரு பழக்கத்தை பயிற்சியை தமிழக மக்கள் பெற்று
இருக்கிறார்கள் என்பதும் அதே சமயத்தில் கோவை மாவட்
டத்தைப் பொறுத்தவரையில் அதிக அளவுக்கு வாங்குகிற அந்த
பணப் புழக்கம் அங்கே அதிகமாக இருக்கிறது என்றும்

தெரிகிறது என்ற காரணத்தாலும் மக்களுக்கு பேராசை எண்ணம்
அதிகமாக ஏற்பட்டு விட்ட காரணத்தாலும் பேராசை தூண்டு
கின்ற அளவுக்கு ராசிபலன்கள் தினந்தோறும் வந்து கொண்டு
இருக்கின்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட நிலைமைகள்
தமிழகத்தில் நிலவி வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அதை
தடுத்து நிறுத்துவதற்கான வழிகளை அரசு மேற்கொண்டு
வருகிறது. நான் முதலில் எடுத்துச் சொல்லிய மாதிரி பிற மாநில
பரிசு சீட்டுகள் அதிகமாக இங்கே வந்து தொகை இந்த
நிலத்தை விட்டு அதிகம் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு
என்று ஒரு தனி டாக்ஸ் போட முடியுமா அல்லது என்டர்
டெயின்மெண்டு டாக்ஸ் என்பதற்கு கீழ் அது வருமா என்பதை
பற்றி சட்டத்துறையினுடைய ஆலோசனைக்கு நாம் விட்டு இருக்
கிறோம். சட்டத் துறையினுடைய திட்டவட்டமான குறிப்புகள்
வந்த பிறகு அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்று தமிழக
அரசு இருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழக அரசு வெளியிடக்கூடிய பரிசு சீட்டுகளும்
அதேபோல் வெளி மாநிலத்தில் இருந்து வரக்கூடிய பரிசு சீட்டு
கள் தமிழகத்தில் அதிகமாக விற்பனை ஆகின்ற காரணத்தால்
தமிழகத்தில் படித்து வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள்
அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்த மாநிலத்தில் தனி
யாருக்கு ஏஜென்சி கொடுக்காமல் அரசு ஒவ்வொரு மாவட்டத்
திலும் படித்து வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களை அதில்
அமர்த்தி இந்த லாட்டரி விற்பனையை செய்வதற்கு ஏதாவது
ஏற்பாடுகளை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டு முகவர்கள்,
ஸ்டாக்கிஸ்டுகள் இன்னார் தான் இருக்கவேண்டும் என்று ஒரு
கட்டாயம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று
படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்கள் இதன் மூலம்
லாபம் வருகிறது என்ற முனைப்பான உள்ளத்தோடு அவர்கள்
முயற்சி செய்தால் அவர்கள் முகவர்களாக, ஸ்டாக்கிஸ்டுகளாக
ஆகலாம். எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் படித்தவர்கள்
இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடாமல் இருக்கிறார்களே என்பது
தான். படிப்பு அறிவு இல்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட வேலை
களை விட்டுவிடுகிறார்களே என்பது தான். நமக்கு இருக்கிற
வருத்தம் எல்லாம். அதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்
கூறுவது போன்று ஒழுங்குபடுத்தி அரசு எல்லாவற்றையும் செய்
கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அப்படிப்பட்ட நிலைமை
களில் மிக மிக நலிந்தவர்கள், ஏழை எளிய மக்கள், குடும்பத்தை
காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் இருக்கிறவர்களுக்கு வீட்டுக்கு
ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தோடு இதை இணைத்துக்
கொள்ளலாம் என்பதை ஆராயலாம். ஆனால் அதற்கான சூழ்
நிலைகள் நமக்கு ஏற்பட வேண்டும்.





**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குழந்தைகளுடைய சத்துணவு திட்டத்திற்காக ஆண்டு
ஒன்றுக்கு பல கோடி ரூபாயை இந்த அரசு செலவிட்டு வருகிறது.
இதனை ஓரளவுக்கு ஈடுகட்டுகின்ற முறையில் சத்துணவு திட்ட
விசேச குலுக்கல்கள் என்ற அளவில் பரிசுச் சீட்டு நடத்தப்
போவதாக அன்று அறிவிக்கப்பட்டது. அது எந்த அளவில்
இருக்கிறது. அந்த திட்டத்தை பரிசீலித்து அதை உடனடியாக
நிறைவேற்ற அரசு முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறு
வதுபோன்று ஒரு செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில்
இருந்து வருகிறது. ஆக ஏராளமாக செலவு ஆகும் மதிய
சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் ஓரளவுக்கு
வேறு பல வகைகளுக்கு செல்கின்ற நிதி இந்த வகையிலே செல்
லும் அளவுக்கு பரிசு சீட்டு நடத்தலாம் என்பது தனியாக
ஆராயப்பட்டு வருகிறது. அதற்கு என்று தனியாக குலுக்கல்
வைத்து அதற்கு கொடுக்கிற பணத்தை மக்களுக்கு சத்துணவு
திட்டத்திற்காக கொடுக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுகிற
அளவுக்கு இந்த வகையில் விரிவாக சிறப்பாக நடத்தலாம் என்ற
அளவுக்கு அரசு ஆராய்ந்து வருகிறது. இன்னும் முடிவு எடுக்க
வில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பரிசு சீட்டுகள் அதிகமான அளவுக்கு விற்பனை
ஆகின்ற காரணத்தாலும் மக்கள் அதில் அதிகமாக ஆர்வம்
காட்டுகின்ற காரணத்தாலும், ஏராளமான போலிச் சீட்டுகள்
அச்சடிக்கப்பட்டு சில காலத்திற்கு முன்னால் சிவகாசியில் போலி
சீட்டுகள் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக கேள்விப்
பட்டோம் அதை மேலும் தடை செய்கின்ற வகையில் இந்த
மாதிரி போலி சீட்டுகள் அச்சடிப்பவர்கள் மீது கடுமையான நட
வடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை பொறுத்தவரை
தமிழக அரசு பரிசு சீட்டுகள் தமிழக அரசினுடைய அச்சகத்தில்
அச்சடிக்கப்படுகிறது. ஆகவே தனியாருக்கு இது விடப்பட
வில்லை. வேறு பல மாநிலங்களில் பரிசு சீட்டுகளை தனியார்
துறைக்கு விட்டு இருக்கிறார்கள். ஆனால் எந்த மாநிலமாவது
இப்படி தனியாக அச்சடித்து வருகிறார்கள் என்று குறைபாடுகள்
வந்தாலும் அல்லது பொது மக்களிடத்தில் அது நிலவி அது
புகாராக வருமானால் அதைப் பற்றி ஆராய்ந்து அறிந்து தக்க
நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருந்து வருகிறது. அது
பற்றியும் ஆராய்ந்து வருகிறது. ஆக அப்படி புகார்கள் வருமா
னால், தமிழக அரசு காவல் துறையினருக்கு அப்படிப்பட்ட
கண்டுபிடிப்புகள் கிடைக்குமானால் அப்படிப்பட்ட போலி சீட்டு

களுக்கு இடம் தரக்கூடாது என்ற நோக்கத்தை தான் அரசு வைத்து இருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சீட்டுத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கக் கூடிய இலாபத்தில் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக செலவழிக்கப்படும் என்று சொன்னார்கள். ஒரு பகுதி பல்வேறு திட்டங்களுக்குப் போகும் என்று அறிவித்தார்கள். நான் கேட்டுக் கொள்வது இந்தப் பரிசுச் சீட்டு திட்டத்தின் மூலமாகக் கிடைக்கக் கூடிய உபரி இலாபத்தில் பெரும்பகுதி தொகையை கிராமங்களில் வாழக் கூடிய ஏழை மக்கள் தங்களுடைய குழந்தைகளை வைத்துக் கொண்டு வேலைக்குச் செல்ல முடியாத அவல நிலைமை இருக்கிறது. அப்படி அந்தக் குழந்தைகளைப் பாதுகாக்கின்ற ஒரு பாதுகாப்பு இல்லம் ஒரு ஆண்டிற்கு 100 அல்லது 200 என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டு - அந்தத் தொகையில் கிராமங்களில் குழந்தைகள் பாதுகாப்பு இல்லம் கட்டி அந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பதன் மூலமாக, அந்தக் கிராமப் புறங்களில் இருக்கிற ஏழை மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற ஒரு யோசனை சீரிய யோசனை என்றாலும் கூட, அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தை எந்த, எந்த வகைகளுக்குச் செலவழிக்கலாம் என்பதைப் பற்றி ஆண்டுக்காண்டு நாம் யோசித்து வருகின்றோம். அதற்கான ஒதுக்கீடும் செய்து வருகின்றோம். 1976-77 ல் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 1 கோடியும் 1977-78-ல் ரூ. 1,02,39,176-ம், 1978-79-ல் ரூ. 1 கோடியும், 1979-80-ல் ரூ. 77,51,114-ம் 1980—81-ல் ரூ. 1 கோடியும், 1981—82-ல் ரூ. 1 கோடியும், 1982-83-ல் ரூ. 1 கோடியும் குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கினோம். அது மாதிரி அரிசன வீட்டு மனைகளுக்கு 1976—77, 1978—79, 1980—81, 1981—82, 1982—83-ல் ஒதுக்கித் தந்துள்ளோம். முதலமைச்சரின் வெள்ளம் மற்றும் புயல் நிவாரண நிதிக்கு 1977—78-ல் ஒதுக்கினோம். அது மாதிரி முன்னாள் இராணுவத்தினர் நிதிக்காக 1979—80 லிருந்து, 1982—83 வரையில் 4 ஆண்டுகளுக்கு ஒதுக்கியிருக்கிறோம். ஊனமுற்றோர் நல நிதிக்காக 1980—81, 1981—82ல் ஒதுக்கியிருக்கிறோம். உறுப்பினர் கூறுகின்ற யோசனை நல்ல யோசனை என்றாலும் அதற்கு ஒதுக்கீடு செய்வதற்காக போதுமான அளவு நிதி இருந்தால், இந்தத் திட்டத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் மட்டும் தனியார் நடத்தும் லாட்டரி சீட்டுகள் கவர்ச்சிகரமாகவும் பரிசுத் தொகை ரூ. 1 கோடி



ரூ. 2 கோடி என்றும் வைத்திருப்பதால், தமிழகத்தில் அதிகமாக விற்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, வருகின்ற தமிழ்ப் புத்தாண்டில் தமிழக அரசு பரிசுச் சீட்டுத் தொகையை உயர்த்தவும் அதிகமான பரிசுகள் தரவும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற அப்படிப்பட்ட யோசனையை அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. அண்மையில் ஒரு திங்களுக்கு முன்னால் இரண்டு கூட்டங்களை கூட்டி முக்கியமாக, பரிசுச் சீட்டு நடத்துகின்ற முக்கிய ஏஜெண்டுகளை, மற்றவர்களை அழைத்து வைத்து, எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் மிகச் சிறப்பாக நடத்த தமிழகத்தில் வாய்ப்பிருக்கும் என்பது பற்றி யோசனைகளைச் சொல்லுமாறு நான் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று மற்ற மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது நம்முடைய மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டு அவ்வளவு கவர்ச்சிகரமாக இல்லையென்பது உண்மை தான். நம்முடைய அச்சகத்தில் அச்சடிப்பதன் காரணமாக, பல வண்ணங்களில் அச்சடிப்பதற்கான இயந்திரங்கள் இங்கே இல்லாததன் காரணமாக, அதற்கென்று தனியாக ஒரு இயந்திரப்பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு அரசிடம் இருக்கிறது. அதுவரையிலும் மற்ற மாநிலங்களைப் போல், தனியாரிடம், சிவகாசி போன்ற இடங்களில் உள்ள, அல்லது வேறு வித்தா பிரஸ்களில்கூட அச்சடிக்கலாமா என்ற யோசனை கேட்கப்பட்டிருக்கிறது. பரிசுச் சீட்டுக்குக் கொடுக்கின்ற தொகையினை ஓரளவுக்கு உயர்த்துவதன் மூலம் இலாபம் வருமா என்பதையும் நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. மற்றொன்று நாம் பரிசுச் சீட்டுக் கொடுப்பது, பணத்தை வாங்குவது போன்றவற்றை, கருவூலத் துறையின் மூலமாகச் செய்வதன் காரணமாக, அதிலே அவர்கள் அதிக அக்கறை எடுக்காததன் காரணமாக, விரைவாக நடைபெறாததன் காரணமாக, சுணக்கம் ஏற்படுகிறது என்றும் எடுத்துச் சொன்னார்கள். பரிசுச் சீட்டு விழுந்து அந்தத் தொகையை வாங்க வேண்டுமென்றால், காலந்தாழ்வு ஏற்படுகிறது ; அதனாலே மனச் சலிப்பு ஏற்படுகிறது என்று ஏஜெண்டுகள் எல்லாம் என்னிடத்திலே சொன்னார்கள். சிலபல அரசாங்கக் கட்டுபாட்டு விதிகளுக்குட்பட்டு ஏஜெண்டுகளிடமே பொறுப்புக்களை ஒப்படைத்தால் வேகமாக நடைபெற முடியும் என்றும் சொல்லப்பட்டது. மற்ற மாநிலங்களில், ஏஜெண்டுகளிடமே முழுப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதன் காரணமாக, விளம்பரம் செய்வது, விற்பனை செய்வதெல்லாம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அவர்கள்

தீவிரமாக, மும்முரமாக நடத்துகிறார்கள். கருவூலத் துறையின் மூலமாக நடத்துவதன் காரணமாக, அவ்வளவு விறுவிறுப்பாக, சுறுசுறுப்புபாக நடைபெறவில்லை என்ற குறைபாடுகளையும் எடுத்துச் சொன்னார்கள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து தக்க முடிவுகளை விரைவிலே அரசு எடுக்கும் என்று நான் கூறிக்கொள் கிறேன்

(முற்பகல் 9—20)

திரு. சோ. அழகர்சாமி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய - மக்களுடைய பேராசையை அதிகப்படுத்தக் கூடிய முறையில், ராசி, பலனை எல்லாம் கூட நாம் அதிகமாகப் பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆகவே பகுத்தறிவை ஒரு இலட்சியமாக ஏற்றுக் கொண்ட கட்சி ஆட்சி நடத்தக்கூடிய நம்முடைய மாநிலத்தில் இந்தப் பரிசுச் சீட்டு என்று சொல்லக்கூடிய முறையை அறவே நிறுத்து வதற்கான ஏடுபாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

எல்லா மாநிலங்களுக்கும் நாம் டூர் போய் வருகிறபோது பார்க்கிறோம். தமிழ் நாட்டில் பல மாநிலங்களின் பரிசுச் சீட்டுக் களும் விற்பனை ஆகின்றன. தமிழ் நாட்டினுடைய பணம் வேறு மாநிலங்களுக்கு போவதோடு மட்டுமல்லாமல், சாதாரண ஏழை, எளிய மக்கள் ஏதோ ஒரு லட்சம் தங்களுக்கே விழுந்து விடுமென்று நினைத்து பணத்தைச் செலவழித்து பேராசையால் சீட்டுக்களை வாங்கி ஒட்டாண்டிகளாக ஆகின்றார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கூறியதைப் போல அகில இந்திய அளவில் மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்து, இந்தப் பரிசுச் சீட்டு முறையை அறவே ஒழித்து விடுமேயானால் நாமும் வர வேற்கலாம். இல்லாவிட்டால் இந்த பேராசையை மற்ற மாநிலக் காரர்கள் பயன்படுத்திக் கொண்டு, அந்த பேராசையும் இருக்க, நாமும் ஏமாளிகளாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நாமும் போட்டி போட வேண்டியிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இப்போது கூட அனுமதியில்லாமல் பரிசுச் சீட்டு விற்க வருகிறபோது நாம் தடைபடுத்தினோம். இப்போது பாண்டிச்சேரியிலிருந்து நமக்கு அனுமதியில்லாமல் வந்தது, அதைத் தடைப்படுத்தினோம். ஆனால் உயர்நீதிமன்றம் அதற்கு ஸ்டே கொடுத்து, விற்பனை செய்கிறவர்கள் வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் வட நாட்டைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் ஒரு பரிசுச் சீட்டைத் துவக்கி தமிழ்நாட்டிலே கொண்டு வந்து விற்றார்கள். இங்கே





அந்தப் பரிசுச் சீட்டுக்களை எல்லாம் ஒரு மாத காலத்திற் குள்ளாக கைபற்றி வைத்திருந்தோம். ரிட்டிற்குப் போன பிறகு அவர்கள் ஸ்டே கொடுத்து அவர்கள் விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று சொல்லி, நாம் பறிமுதல் செய்த 7½ லட்சம் பரிசுச் சீட்டுக்களை திருப்பித் தரவேண்டுமென்று உத்தரவு இட்டார்கள். அதைப் போல பம்பாய் மாநிலத்தில் உயர்நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். உச்ச நீதி மன்றத் திலும் சிலபல வழக்குகள் இருக்கின்றன. அந்த வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் நாம் தக்க முடிவை எடுக்க வேண்டும். நான் முதலில் சொன்ன மாதிரி அந்தந்த மாநிலத்தி னுடைய பரிசுச் சீட்டுக்கள் அந்தந்த மாநிலத்தில் விற்கிற அளவிற்கு ஒரு கட்டுப்பாடான சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றுமேயானால் அது எல்லா மாநிலங்களுக்கும் கூட பொதுவாக இருக்கும். அந்தந்த மாநிலத்தினுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்து அது அமையக் கூடும் என்ற கருத்துக்கூட தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர் களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது பரிசுச் சீட்டு சம்பந்தமாக சொன்னார்கள். கிராமப்புற பகுதி களில் ரெக்கார்டு டான்ஸ் என்றும், டிராமாக்கள் என்றும் வைத்துக் கொண்டு அரசாங்கத்தினுடைய அனுமதியில்லாமல் பரிசுச் சீட்டுக்களை நடத்தி கிராமப்புற மக்களை ஏமாற்று கிறார்கள். அதே போல விற்பனை வரியையும் ஏமாற்றி, ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு கிராமத்திலும் பெறு கிற வகையில் செய்து வருகிறார்கள். பரிசுச் சீட்டு என்று அவர்களும் வைத்துக்கொண்டு செய்கிறார்களே, அதை அரசாங்கம் உடனடியாக தடை செய்வதற்கு ஆவன செய்யுமா? அந்தப் பணத்திலே ஏழை விதவைகளுக்கும், வயதானவர்களுக்கும் ஓரளவிற்கு மேல் நம்மால் பணம் ஒதுக்க முடியவில்லை. ஆகவே ஒருவன் இறந்தால்தான் வயதானர்களுக்கு பணம் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிக்கும் பணம் கிடைக் கிற வாய்ப்பை உருவாக்க முடியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டு தனியார் நடத்துவதற்கு சட்டப்படி நாம் இப்போது அனுமதிப்பதில்லை. யாராவது தனி யாக பரிசுச் சீட்டு நடத்துவதற்கு முன் வருவார்களானால், அரசினுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் நடத்தவேண்டு மென்று சட்டம் இருக்கிறது. அப்படி சட்டத்தை மீறி,, அனுமதி பெறாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி யதைப் போல, யாராவது நடத்துவார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முழு உரிமையும் அரசிற்கு இருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் வருமேயானால் அரசு அதை ஏற்று, தக்க நடவடிக்கையெடுக்க ஆயத்தமாக இருக்கிறது. இப்போது

இந்தப் பரிசுச் சீட்டிலே கிடைக்கிற தொகையினுடைய அளவு ஓரளவிற்கு குறைந்து கொண்டு வருகிறது. அதனுடைய அளவு அதிகமாகுமானால், மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல, நாம் இப்போது எடுத்து சிலபல துறைகளுக்கு நிதியுதவி செய்வதைப் போலவே விதவைகளுக்கும், மற்றவர்களுக்கும், செய்வதைக்கூட இப்படிப்பட்ட நல்வாழ்வுத் திட்டங்களில் சேர்த்துக்கொள்வதிலே ஆட்சேபனை இருக்காது. போதுமான அளவு நிதிவசதிகள் ஏற்படுகிறபோது அவற்றையும் மனதிலே கொள்ளலாம்.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களின் பரிசுத் தொகை கோடிக்கணக்கிலே இருப்பதன் காரணமாக தமிழ்நாடு அரசினுடைய பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைகின்றது. ஆகவே மற்ற மாநிலங்கள் வெளியிடுகிற அதிகப் பரிசுத் தொகையுள்ள பரிசுச்சீட்டுகளுக்கு தமிழகத்திலே அனுமதி மறுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி நான் முதலிலேயே கூறிவிட்டேன். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு இப்போது சட்டம் இல்லை. அதற்கான சட்ட திட்டங்களை மத்திய அரசு வகுத்து தருவார்களானால், நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டேன். இந்தப் பரிசுத் தொகையை அதிகரிக்கிற செயல் குறிப்பும், பரிசுச் சீட்டை வண்ணத்தில், கவர்ச்சிகரமாக அச்சிடுகின்ற செயல் குறிப்பும், மற்றவைகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன என்று முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களின் பெயரால் பரிசுச் சீட்டுகள் வெளியிடப்பட்டு அந்தச் சீட்டுக்களுக்கான குலுக்கல் தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான ஊரில் சில ஹோட்டலில் நடைபெறுவதாகவும் அந்த ஹோட்டலிலிருந்து பரிசு விழுந்த சீட்டு எண் அறிவிக்கப்படுவதாகவும் தகவல் வந்திருக்கிறது. இதுமாதிரித் தகவல் அரசுக்கு வந்துள்ளதா ? ஆம் எனில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? இல்லை என்றால் இனிமேல் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஒன்றும் தமிழக அரசுக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வேறு மாநிலங்களின் பரிசுச் சீட்டுக் குலுக்கல் அந்தந்த மாநிலத்தில் நடைபெறுகிறதே தவிர வேறு மாநிலங்களில் நடைபெறுவதில்லை. அப்படி மீறி நடைபெறுமானால், அந்த மாநில அரசேகூட நடவடிக்கை எடுக்காலம். இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்படி கூறலாம். அப்படி குறிப்பாக வரும்போது அப்படி வருமானால், தக்க நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளும்.



**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்துகிற பரிசுச் சீட்டை தனியார் நடத்துவதற்காக விட்டுவிடலாமா என்று அரசாங்கம் ஆலோசிப்பதாக நிதி அமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் சொன்னதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அப்படி ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பல்வேறு யோசனைகளில் அப்படி ஒரு யோசனை உண்டு. பரிசுச் சீட்டை அடித்துத் தருகிற முழுப் பொறுப்பும் நமக்கு. ஒரு இருபது இலட்சம் சீட்டுகள் என்றால் அதை அடிக்கிற பொறுப்பு நமக்கு, முத்திரை போடுகிற பொறுப்பு நமக்கு, வினியோகிக்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதை கருவூலத் துறையில் வாங்கி கருவூலத் துறையில் பணம் கட்டுவதற்குப் பதிலாக டெண்டர் முறையில் அதன் மூலம் யார் அதிக பர்செண்டேஜ் கொடுத்து எடுக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுத்தால் முழுப் பொறுப்பு—அந்த சீட்டுகளை அவர்கள் ரிட்டர்ன் செய்யக் கூடாது. ஆகவே நமக்கு வர வேண்டிய இலாபம் வந்துவிடும். விளம்பரம் மற்றவை எல்லாம் செய்ய முடியும். அதில் அவர்கள் எந்தத் தவறும் செய்ய முடியாது. அச்சடிக்கிற பொறுப்பு முழுவதும் நம்மிடத்தில்தான் இருக்க வேண்டும். வினியோகப் பொறுப்பு முழுவதும் நம்மிடத்தில்தான் இருக்கவேண்டும். ஆகவே விற்பனை செய்கிற பொறுப்பு, விளம்பரப்படுத்துகிற பொறுப்பு, விழுந்த பரிசுச் சீட்டுகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வரை வழங்குகிற பொறுப்பு குறிப்பிட்ட தொகைக்கு மேல் போகுமானால் அதை கருவூலத்துறை மூலம் வினியோகிக்கிற, இப்படிப்பட்ட சில ஆலோசனைகள் இருந்து வருகின்றன என்று நான் சொன்னேன். அதில் தவறு ஏற்படக் கூடாது. தவறு ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். இதையெல்லாம் அடிப்படையாக வைத்துதான் ஆலோசனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன்.

•

## மத்திய அரசு விண்வெளித் துறைக்குத் தமிழக அரசால் இலவசமாக அளிக்கப்பட்ட நிலம்.

*வினா எண் 202—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு நிறுவ இருக்கும் "Department of Space for the establishment of Liquid Test Facility Centre" அமைப்பதற்குத் தமிழக அரசு இலவசமாக நிலம் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நிலம் எந்த இடத்தில் அளிக்கப்பட்டுள்ளன ?

[1983 நவம்பர் 17

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) மத்திய அரசு நிறுவனமாக இருக்கிற திரவப்பொருள் சோதனை வசதி நிலையம் அமைக்கவேண்டும் என்பதற்காக திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் வட்டத்திலிருந்து 332 ஏக்கரும், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 27.97 ஏக்கர் நிலமும் ஆக 359.97 ஏக்கர் நிலம் இலவசமாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் காட்டு நிலங்கள் 2,800 ஏக்கர் நிலமும், மொத்தம் 2,998 ஏக்கர் நிலமும் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசு நிறுவனங்களுக்கு மாநில அரசு நிலங்களைக் கொடுக்கும்போது என இலாகா நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கொடுக்கப்படுகிறவன இலாகா நிலங்கள் எந்தெந்த நிபந்தனைகளின் அடிப்படையில் மாநில அரசினால் கொடுக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, காட்டு நிலங்களைக் கொடுக்கிறபோது அதை கிரயமாகக் கொடுக்காமல் உபயோகத்திற்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி கொடுக்கிறபோது லீகல் ஸ்டாட்டஸ், நம் மாநில அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கே இருக்கிற மரங்களை வெட்டக்கூடாது. அங்கிருக்கிற மரங்களை கள்ளத்தனமாக யாரும் வெட்டிக் கொண்டு போகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகளைப் போடுகிறபோது அந்த அதிகாரிகளுடைய செலவை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற நிபந்தனைகளின் பேரில் காட்டு நிலங்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருகிற விவரங்களிலிருந்து ஏறத்தாழ மூவாயிரம், நாலாயிரம் ஏக்கர் நிலங்களை மாநில அரசு மைய அரசுக்கு கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இவைகளை இலவசமாக மைய அரசுக்குக் கொடுத்திருப்பதாகவும் தகவல் தெரிய வருகிறது. அப்படி இவ்வளவு நிலங்களை மாநில அரசு மைய அரசுக்கு இலவசமாகக் கொடுக்கிறபோது மாநில அரசு பயன்படுத்திக்கொள்ளத் தக்க வகையில் மைய அரசுக்கு சொந்தமான ஜலண்ட் கிரவுண்டை மாநில அரசுக்கு வழங்கவேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?



1983 நவம்பர் 17]

(முற்பகல் 9—30)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக கொடுக்கப்பட்ட நிலங்கள் 4,391.67 ஏக்கர். சகாய விலையில் 64 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. விலை மதிப்பின்படி 3,780 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இந்த அரசு வந்த பிறகு, ஐந்தாண்டுகளில் 8,236.93 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐலண்டு கிரவுண்டை எடுத்துக் கொள்வதைப் பற்றிச் சொன்னார்கள். நமக்கு அது தேவை என்கிறபோது, நாம் மத்திய அரசை அணுகுவோம். அவர்கள் கொடுத்தால், வாங்கிக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தாலம் ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்களை மயிலாடுதுறை வட்டத்தில் சேர்ப்பதற்கான கோரிக்கை.

*வினா எண் 203 —திரு. இரெ. இராமமாணிக்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தரங்கம்பாடி தாலுகாவில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள குத்தாலம் ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்களை மயிலாடுதுறை வட்டத்தில் சேர்க்க அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கிராமங்கள் தரங்கம்பாடி வட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்றும், சில கிராமங்கள் மயிலாடுதுறை வட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் மனுக்கள் வந்திருக்கின்றன. இவைகளைச் சேர்த்துவிட்டால் அவ்வாறு சேர்த்தது சரியில்லை என்று பின்னால் புகார்கள் வரக்கூடும். ஆகையால், இதைப்பற்றி மாவட்ட கெஜட்டில் விளம்பரப்படுத்தி, அதிலே யாராவது மறுப்பு சொன்னால், அதைப் பார்த்து, அதற்குப் பிறகு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கொண்டு வரப்பட்டு, அங்கே ஏகமனதாக கருத்து வந்தால், ஏற்றுக் கொள்ளப்படும்.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை வட்டத்தில் சேர்க்கப்பட உள்ள அல்லது ஆய்வில் உள்ள கிராமங்கள் எவை எவை? இந்த

ஆண்டு இந்த ஆய்வு முடிவு செய்யப்பட்டு, மயிலாடுதுறை வட்டத்தில் தரங்கம்பாடி வட்டத்திலுள்ள கிராமங்களை சேர்த்துக்கொள்ள முடிவெடுக்கப்படுமா? மயிலாடுதுறை வட்ட அலுவலகத்திற்கு அருகே இருக்கின்ற கிராமம்கூட, 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளதுகூட, தரங்கம்பாடி வட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இவற்றை பரிசீலனை செய்து, உடனடியாக மயிலாடுதுறை வட்டத்தோடு சேர்க்க முடிவு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி அந்தக் கிராமங்கள் எல்லாம் எந்தெந்த வட்டத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்தாலும், அது பொதுமக்களுக்குத் தெரிவதில்லை. பொதுமக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக அந்த மாவட்டத்தினுடைய அரசு கெஜட்டில் விளம்பரப்படுத்தப்படும். அவ்வாறு விளம்பரப்படுத்தப்படுவது மட்டுமல்ல. அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கொண்டு வந்து, அதைப் பற்றிப் பேசவேண்டும். அப்படி பேசி ஒருமித்த கருத்து வருகிறபோது, மாற்றங்கள் இருந்தாலும் அப்போது உங்கள் கருத்துக்களைச் சொல்லும்படியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெரிய மாவட்டங்களைப் பிரித்தமைக்கும் திட்டம்.

* வினா எண் 204—திரு. செ. செம்மலை மற்றும் திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய மாவட்டங்களைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களைப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறது. இப்போது அப்படி பிரிக்கிறபோது, தொடராச் செலவு 400 இலட்சமும், தொடரும் செலவு 40 இலட்சமும் ஆகிறது. இப்போது இருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்றவாறு, இதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. வேடசந்தூரார் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதிலே செலவுகள் இருப்பதாக மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்டத்தைப் பிரிப்பதிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் தவிர, மாவட்ட அந்தஸ்துள்ள அனைத்து அலுவலகங்களையும் திண்டுக்கல்லுக்கு அரசு அளித்துவிட்டது. ஆகவே, செலவு இல்லாத சூழ்நிலையில், மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற தலைநகர் பிரச்னை, பெயர் பிரச்னை இல்லாததன் காரணமாக, மதுரை மாவட்டத்தைப் பிரிப்பதில் அரசு முன்னுரிமை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தைப் பிரிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை நான் சொல்லக்கூடாது. சொன்னால், மற்ற மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் சண்டைக்கு வருவார்கள். பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்படும். நீண்டகாலமாக மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லப்படும் மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டமாகும். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை தரப்படும். வேண்டுமென்றால், இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்ட பிறகு, மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களைப் பிரிக்கின்ற வகையில், திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இரண்டாகப் பிரிக்கின்ற அபிப்பிராயம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிரிவினையை விட்டு விட்டார்கள் என்று நாங்களெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் பிரிவினையை விடவில்லை என்பது இங்கே உறுதிப்படுத்தப்படும் வகையில், மாவட்டங்களுக்கே பிரிவினை வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரிக்கின்ற முறையில் அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிப்பதில் முன்னுரிமை கொடுப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தலைநகரம் எங்கள் மாவட்டத்தில் இல்லாத நிலையில், மிக நீண்ட பெரிய மாவட்டமாக இருப்பதால் மக்களுக்கு வசதியாக இருக்கக்கூடிய வகையில் நீங்கள் அதை இரண்டாகப் பிரித்து, தொடர் செலவு, தொடராச் செலவு போன்றவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் மக்களின் வசதிகளைக் கருத்திற்கொண்டு

[1983 நவம்பர் 17

உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப்
பிரித்து தலைநகரங்களை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, '' யாதும் ஊரே யாவரும்
கேளிர் '' என்பதற்கேற்ப, ' நீங்கள் ' என்று சொல்லாமல்
' நாம் ' என்று சேர்த்துக்கொள்ளலாம். நாம் என்று சொல்லும்
விதத்தில், மக்களுடைய வசதிக்காக அதையும் அரசு
பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப்
பிரிக்கும்பொழுது மேற்கு இராமநாதபுரத்தில் சகல வசதிகளும்
நிறைந்த சென்டராக இருக்கக்கூடிய ஸ்ரீவில்லிப்புத்தூர் தலை
நகரமாக ஆக்கப்படுமா ? தமிழுக்காக உயிர் நீத்த சங்கர
லிங்கனாரின் பெயர் அந்த மாவட்டத்திற்கு வைக்கப்படுமா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத்தைப் பிரிக்கின்ற இடத்
திற்கே இன்னும் வரவில்லை. பிரிப்பதற்கு முன்னாலேயே தலை
நகரம், பெயர் என்பதையெல்லாம் சொன்னால் பிரிக்க முடியா
மலே போய்விடும். ஆகவே திருமணமாகி, பிறகு குழந்தை
பிறக்கட்டும். பின்னர் பெயர் வைத்துக் கொள்ளலாம்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே,
பெரிய மாவட்டங்களைப் பிரிப்பது நிர்வாக சௌகரியங்களுக்கு
அவசியமானது என்பதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.
ஆகவே, ஆண்டுக்கு ஒரு மாவட்டம் என்ற முறையில் இந்த
மாவட்டப் பிரிவினை மேற்கொள்ளப்படுமா ? பெரியார்
மாவட்டம் பிறந்தபிறகு நீண்டகாலமாக இதுபோன்ற நடவடிக்
கைகள் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறதே, எனவே இதில்
துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய நலன்களைக் கருதி
இந்த அரசு வந்தவுடனே சில நடவடிக்கைகளைச் செய்திருக்
கிறது. உங்களுக்குச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.
49 டிவிஷன்கள் இருந்ததை 54 டிவிஷன்களாக ஆக்கியிருக்கிறோம்.
130 தாலுக்காக்கள் என்று இருந்ததை 166 தாலுக்காக்கள்
என்று ஆக்கியிருக்கிறோம். 770 பிர்க்காக்கள் என்று இருந்ததை
1,097 பிர்க்காக்களாக ஆக்கியிருக்கிறோம். மக்களுடைய
சௌகரியங்களைக் கருதி கீழேயுள்ள அமைப்புக்களை விரிவு
படுத்த வேண்டுமென்ற முறையில் இந்த அரசு இவைகளைச்



1983 நவம்பர் 17]

செய்திருக்கிறது. அதேபோன்று, மாவட்டங்களைப் பிரிப்ப
திலேயும் மக்களுடைய சௌகரியங்களை ஏற்றுக்கொண்டு செய்ய
வேண்டுமென்றாலும்கூட, அதைவிட மக்களுக்குச் செய்ய வேண்
டிய பணிகளைச் செய்வதற்கு நிதி அதிகமாகத் தேவைப்படுவ
தால் அதன் காரணமாக இவை ஒத்தி வைக்கப்பட்டிருக்
கின்றன. ஆனால் இவை நிரந்தரமாக ஒத்திவைக்கப்படவில்லை.
விரைவில் அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வோம் என்பதை
யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, பெரிய மாவட்டங்களைப் பிரிக்கின்ற நோக்
கத்தை ஒட்டிய அளவில், 1979 ஆம் ஆண்டு என்னுடைய
தொகுதியில் கமுதி வட்டாட்சியர் அலுவலகத்தை நம்முடைய
அமைச்சரவர்கள் திறந்து வைக்கும் நேரத்தில் உடனடியாக இந்த
மாவட்டம் பிரிக்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்தார்கள்.
அதே நேரத்தில் பிரிக்கப்பட்டு புதிதாக அமைக்கப்படும் மாவட்
டத்திற்குத் தேசிய தலைவர் தேவர் பெயர் வைக்கப்படுவது
எந்த அளவிற்கு இருக்கிறது ? அது நடைபெறுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப்
பொறுத்தவரையிலும் மிகமிகச் சிக்கலான பிரச்னை. ஏனென்
றால், நாங்கள் எவ்வளவு விரைவில் அதைச் செய்ய வேண்டு
மென்று எண்ணினாலும், எதைத் தலைநகரமாக வைக்கவேண்
டும், என்ன பெயர் வைக்க வேண்டும் என்பதிலேயெல்லாம்
அங்கேயுள்ள மக்களுடைய ஒற்றுமை மிகக் குறைவாக இருக்கிறது
என்பது இப்பொழுது கேட்கப்பட்ட கேள்விகளிலேயே வந்து
விட்டது. முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைக்க வேண்டு
மென்று ஒருவர் சொல்கிறார். சங்கரலிங்கனார் பெயரை வைக்க
வேண்டுமென்று ஒருவர் சொல்கிறார். இன்னும் கேள்வி கேட்ப
தற்கு அனுமதித்துக்கொண்டே போனால் எல்லோருடைய
பெயர்களையும் வைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருப்
பார்கள். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த
வரையிலும் உள்ள சங்கடங்கள் என்னவென்றால், தலைநகர்
எதுவாக இருக்க வேண்டுமென்பதிலே மிக அதிகமான போட்டா
போட்டிகள், என்ன பெயர் வைக்க வேண்டுமென்பதிலே மிக
அதிகமான போட்டா போட்டிகள் இருக்கின்றன. இதில் விட்டுக்
கொடுக்கின்ற மனப்பான்மை இராமநாதபுரம் மாவட்டத்து
மக்களிடத்திலே வளர்ந்தால் விரைவில் நடந்து விடும்.

[1983 நவம்பர் 17

### பெரியகுளம் ஏ. புதுப்பட்டியிலுள்ள விவசாயப் பண்ணையை விஸ்தரிக்கும் திட்டம்.

*வினா 205 – திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியகுளம் –ஏ. புதுப்பட்டியிலுள்ள விவசாயப் பண்ணையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) இப் பண்ணை லாபகரமாக இயங்கி வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் அரசு தோட்டக்கலைப்பண்ணை செயல்பட்டு வருகிறது. இதனை விரிவாக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) ஆம்.

(முற்பகல் 9-40)

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணையினால் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் இலாபகரமான பயன் ஏற்படுவதன் காரணத்தால் இந்தப் பண்ணையை விஸ்தரிப்பது இன்னும் அதிக அளவு பய னைத் தரும். இதனால் நல்ல இலாபமும் விவசாயிகளுக்குக் கிடைக்கும். எனவே, இந்தப் பண்ணையை விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இன்னும் அதிகமான அளவில் பயன்படுத்துகின்ற செயற்குறிப்புத் தான் உண்டு. விரிவாக்குகின்ற திட்டம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந் தப் பண்ணை இப்போது எத்தனை ஏக்கர் பரப்பில் இருக்கின்றது? அந்தப் பண்ணைக்கு அருகிலேயே மிகக் குறைந்த விலையில் நிலங்கள் கிடைப்பதால் அதனை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, அந்தப் பண்ணையின் பரப்பு 23.28 ஏக்கர். எனவே, விரிவாக்குகின்ற திட்டம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந் தப் பண்ணையில் விவசாயப் பணியினைச் செய்கின்றவர்கள் அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா ? அப்படி ஏதேனும் குறை இருந்தால் மாண்புமிகு



1983 நவம்பர் 17]

அமைச்சர் அவர்கள் அதனை நிவர்த்தி செய்து சட்டப்படி அவர் களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கூலி கொடுப்பதற்குரிய நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் இல்லை. அப்படி இருந்தால், அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலியைக் கொடுப்ப தற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

### தருமபுரி மாவட்டத்தில் அதிகமாகப் பயிரிடப்படும் திராட்சை

*வினா 206—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் திராட்சை அதிகமாகப் பயிரி டப்பட்டு அதிக மகசூல் வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு தரப்பில் ஒரு பழரச ஆலை அமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) தெரியும்.

(ஆ) இல்லை.

திரு. ஆ. நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர் களே, தமிழ்நாட்டிலே எந்த மாவட்டத்தில் திராட்சை அதிக மாக பயிரிடப்படுகின்றது? திராட்சை அதிகமாக உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஊக்க போனஸ் அளிக்கும் திட்டம் இருக்கின்றதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. திராட் சையே அதிகமான இலாபத்தைத் தருகின்ற காரணத்தால் அதற்கு ஊக்க போனஸ் அளிக்கத் தேவையில்லை.

### பருத்தி பயிரிடுவது குறித்து இம் மாநிலத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு.

*வினா 207 —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பருத்திப் பயிரிடுவது குறித்து ஆய்வு ஏதேனும் இம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

[1983 நவம்பர் 17

(ஆ) பருத்தி பயிரிடுவதற்கான ஆய்வுகள் 1924 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விளைச்சலை அதிகப் படுத்தல், பயிர் காலத்தைக் குறைத்தல், நோய்ப் பூச்சிகள் தாக்குதலைச் சமாளிக்கத் தேவையான பாதுகாப்பு முறைகளை ஆய்வு செய்தல், குறைந்த செலவில் அதிக வருவாய் பெற, மற்றும் குறிப்பிட்ட பருவங்களுக்கேற்ற நூற்பு ஆலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதிய புதிய இரகங்களைக்கண்டு பிடித்து, விவசாய தொழில் தேவைக்கேற்ப அளித்தல் ஆகியவை இந்த ஆய்வுகளின் குறிக்கோளாகும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி பயிரிடுவது குறித்த ஆய்வு தமிழ்நாட்டில் எங்கெங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது? இதனால் ஏற்படும் பலன்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, கோவில் பட்டி, ஆடுதுரை, பையூர் ஆகிய ஊர்களில் இந்த ஆய்வு நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆய்வினால் ஏற்படும் பலன்களாவன :

புரட்டாசி, மாசிப்பட்ட இறவை கம்போடியா பருத்தி விளைச்சலை ஹெக்டேருக்கு 8 குவிண்டாலிலிருந்து 21 குவிண்டாலாகவும், அறைவைத் திறனை 32 விழுக்காட்டிலிருந்து 37 விழுக்காடாகவும் ஆக்கப்படுகின்றது. வயது 200 நாட்களில் இருந்து 135 நாட்களாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. 100 சிட்டம் நூற்கவல்ல பருத்திகள் எகிப்து நாட்டிலேதான் விளைவிக்க இயலும் என்ற கருத்தை மாற்றி தமிழ்நாட்டிலும் விளைவிக்கலாம் என சாதித்துக் காட்டிய பெருமை நமது ஆய்வாளர்களைச் சாரும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் பருத்தி பயிரிடுவது குறித்த குழு ஆய்வு நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அது என்ன ஆய்வு என்பதை விவரிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைக்கப்பட்ட ஆய்வுக்கூடத்தில் இறவைக் கம்போடியா பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**திரு. செ. குப்புசாமி :** தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் பருத்திக்கு தேவையான நிலங்கள் இருப்பதால், அதாவது ஏற்ற நிலங்கள் இருப்பதால் பருத்தி பயிரிடுவதை விஸ்தரிப்பு செய்வதற்கு அரசு முன்வருமா?



1983 நவம்பர் 17]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இது பருத்தி ஆய்வு பற்றிய கேள்வி. பொதுவாகப் பருத்தி பயிரிடுவதை விரிவாக்கவேண்டும் என்ற வகையில் இது செயல் படுத்தப்படுகின்றது. எனவே அந்த வகையிலே விரிவாக்கப் பட்டும் வருகின்றது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, பருத்தி சாகுபடியினைப் பெரிதும் பாதிக்கின்ற 'புரடீனியா' என்ற புழு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றதா? அதற்கான தடுப்பு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு அது வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றதா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதற்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தடுப்பு முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்விலே இருந்து பல்வேறு வகையான முறைகள் பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பருத்தி பயிரிடுவது குறித்து ஆய்வு செய்வதன் மூலம் பருத்தி பயிரிடும் பரப்பு அதிகரித்து வருவதாகவும், அதனுடைய உற்பத்தியை அதிகரிக்க ஆய்வுகள் செய்வதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திற்குத் தேவையான 12 லட்சம் பேல்களில், உற்பத்தி 4 லட்சம் பேலாக இருந்து, குறைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். உற்பத்தி குறைவதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வுசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? அதைத் தடுத்து நிறுத்த அரசு முயற்சிக்குமா? சரியான விலை கிடைக்காத காரணத்தால் தான் இந்த உற்பத்தி குறைவு என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அதை அதிகரிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பரப்பு அதிகமாக இருக்கிறதே தவிர, தமிழ்நாட்டின் தேவைக்கு ஏற்ப உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பது உண்மை தான். அதை அதிகரிக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப் படும். அதிக விலை கிடைக்கவில்லை என்பதும் ஓரளவிற்கு உண்மைதான். அதை எந்த அளவிற்கு உயர்த்திக் கொடுக்க முடியும் என்பதற்காக ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமும், இந்திய பருத்திக் கழகத்தின் மூலமும் எடுக்கின்ற அந்த முயற்சிகளை நாம் ஓரளவிற்கு ஊக்குவித்துக் கொண்டு இருக்கிறோம்.

[1983 நவம்பர் 17

தஞ்சை மாவட்டத்தில் பரிசிலனையில் உள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 208—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த நகராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 நகராட்சிகளில் சீர்காழி நகராட்சியைத் தவிர மற்ற 7 நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் ஏற்கெனவே செயலில் உள்ளன. சீர்காழி நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும். இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 148.85 லட்சம் ஆகும்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலம் கடன் பெற்று அனைத்து நகராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குடிசைப் பகுதியில் வாழும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை என்பதை அரசு அறியுமா ? அதைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்டால் சரியான விடை தரப்படும்.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, தேசிய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் மத்திய அரசு ஒதுக்கும் நிதியிலிருந்து உடனடியாக நகராட்சிகளில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்திலுள்ள நகராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது பற்றியதாகும். அந்த மாவட்டத்தில் உள்ள 8 நகராட்சிகளில் 7 நகராட்சிகளில்



1983 நவம்பர் 17]

நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இருக்கிறது. சீர்காழி நகராட்சியில் தான் தற்போது இல்லை. அந்த சீர்காழி நகராட்சிக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என்பதையும் இங்கே இப்போது நான் சொன்னேன். அதுவே மாண்புமிகு உறுப்பினரைத் திருப்திப்படுத்தும் என்று நான் கருதுகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருவதற்கு உலக வங்கியின் உதவி எதிர்பார்ப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த ஆய்வு அல்லது அந்த வேலைகள் எப்போது தொடங்கும் ? எவ்வளவு காலத்தில் அந்த சீர்காழி மக்களுக்கு குடிநீர் வசதி கிடைக்கும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, திட்ட அறிக்கை இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது. இதற்குப் பின்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் எடுத்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படும்.

சென்னை கல்யாண மேஸ்திரி தோட்டத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 209—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கல்யாண மேஸ்திரி தோட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகட்ட திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலைமை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னை கல்யாண மேஸ்திரி தோட்டத்தில் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்கு குடிசை மாற்று வாரியம் ஒப்புதலளித்தது.

(ஆ) சென்னை மாநகராட்சியின் ஆட்சேபணையின் காரணமாக திட்டம் கைவிடப்பட்டது.

(முற்பகல் 9–50)

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் குடிசைமாற்று வாரியம் ஒப்புதல் அளித்தது என்று சொன்னார்கள். ஆனால் சென்னை மாநகராட்சி எதிர்ப்பு என்றும் சொன்னார்கள். ஏன் அந்த எதிர்ப்பு

என்று தெரியவில்லை. மற்றொன்று. கடந்த 8 ஆண்டுகளாக அங்குள்ள மக்கள் அவல நிலையில் இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். அந்த மக்களுக்கு என்ன உதவி செய்வது? மாநகராட்சியைக் கேட்டபோது அரசாங்கத்திற்கு அனுப்பி விட்டோம். அவர்கள் செய்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று மாநகராட்சி ஸ்பெஷல் ஆபீசர் சொன்னார். ஆகவே, இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இதை உடனடியாகச் செய்ய அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, அவர்கள் என்னைக் கேட்டிருந்தால் சரியான பதில் சொல்லியிருப்பேன்; இப்போது சொல்கிறேன். இந்தத் திட்டப் பகுதியின் வழியாகச் செல்லும் கழிவுநீர் கால்வாயின் ஸ்திர தன்மைக்கு ஊறு விளைவிக்கும் என்பதால் இத்திட்டத்திற்கு மாநகராட்சி ஆட்சேபனை செய்தது. அதனால் குடியிருப்பு கட்டுவது கைவிடப்பட்டது. அதோடு நிற்கவில்லை. அந்த இடத்தை அபிவிருத்தி செய்து கொடுக்கும் திட்டக் குறிப்புகள் (ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட்ஸ்) வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. எஸ். இளையபெருமாள்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள சொன்ன பதிலிலே இந்தத் திட்டப் பகுதியில் செல்லும் கழிவுநீர் கால்வாய்கு ஊறு ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த ட்ரெயினேஜ் சானலுக்கு வடபுறத்தில் பக்கிங்ஹாம் அன்ட் கர்நாட்டிக் நிறுவனத்திற்கு பக்கத்தில் பெரிய தோட்டம் இருக்கிறது. அது மாநகராட்சிக்கு உட்பட்ட இடம்தான். அங்கே சுமார் 2 ஏக்கர் இடம் இருக்கிறது. மாநகராட்சி சொல்வது உண்மையான காரணமாக இருந்தால், அந்த ட்ரெயினேஜ் சானலுக்கு வடபுறத்தில் பி. அன்ட் சி. நிறுவனத்திற்குப் பக்கத்தில் இருக்கிற இடத்தை எடுத்துக் கொண்டு, இம்ப்ரூவ் செய்யும் குறிப்பு இருப்பதால், அங்கே கட்டிடம் கட்டிக்கொடுக்கும் பணியை உடனடியாகச் செய்ய அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தைச்சொன்னார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் மாநகராட்சி வல்லுநர்கள் கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இருக்கிறது. எனவே அவர்கள் சொன்ன கருத்தை அரசு ஏற்று இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டது. இந்தத் திட்டம் கைவிடப்பட்டாலும் அந்த மக்களை கைவிடக் கூடாது என்பதால் 'ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட்ஸ்' செய்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவரவர்களே, இந்த கல்யாண மேஸ்திரி தோட்டத்தில் குடிசைமாற்று வாரியம் வீடு கட்ட ட்ரயினேஜ் தடையாக இருப்பதாகச் சொன்னார்கள். சென்னை மாநகரம் முழுவதும் தற்போது பழுதடைந்த ட்ரெயினேஜ் தான் இருக்கிறது. சுமார் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை இந்த ட்ரெயினேஜ்கள். ஆகவே அந்தப் பகுதியிலுள்ள ட்ரெயினேஜை மாற்றிவிட்டு, அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, இதில் மாநகராட்சி ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. அதற்கான காரணத்தை ஏற்கனவே சொன்னேன். திட்டப் பகுதி வழியாகச் செல்லும் கழிவு நீர் கால்வாயின் ஸ்திர தன்மைக்கு இத்திட்டத்தினால் ஊறு விளையும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஊறு விளையும் என்பதால் அங்கே இத்திட்டத்தை நாம் நிறைவேற்றுவது சரியல்ல. மாநகராட்சியின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் குடிசைமாற்று வாரியத்திடம் வீடு கட்டும் திட்டம், அதாவது அபிவிருத்தித் திட்டம் இருக்கிறது. எனவே அந்தத் திட்டத்தை விட்டுவிட்டு, இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சென்னையில் செயற்கை முறையில் மழை பெய்விக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண் 210—திரு. பொ. சு. திருவேங்கடம், திரு. என். வரதராசன் மற்றும் வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் செயற்கை முறையில் மழை பெய்விக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் முன் எப்போதும் இல்லாத அளவு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் நகர நீர்பிடிப்பு நிலைகளான ரெட்ஹில்ஸ், பூண்டி மற்றும் சோளவரம் நீர்பிடிப்பு பகுதிகள் மற்றும் நீலகிரியின் நீர்மின் நிலையங்கள் ஆகிய பகுதிகளில் மேகத்தை செயற்கை முறையில் குளிர்வித்து மழையை

அதிகரிக்கச் செய்யும் திட்டம் ஒன்றினை நிறைவேற்றுவதற்காக அரசு இத்துறையில் வல்லுநர்களான அட்மாஸ்ஃபெரிக்ஸ் இன் கார்ப்பரேட்டட் காலிபோர்னியா என்ற அமெரிக்க நிறுவனத்தை பணியமர்த்தியது. இத்திட்டம் ஜூலை மாதம் முதல் மூன்று மாதங்கள் நடைபெற்று அக்டோபர் 7 ஆம் தேதி அன்று முடிவுற்றது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின், இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

(இ) ரூ. 27 இலட்சம்.

திரு. பொ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, சென்னை மாநகரினுடைய குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக செயற்கை முறையிலே மழை பெய்விக்கும் திட்டத்திற்கு 27 இலட்சம் ரூபாய் செலவாயிற்று என்று சொன்னார்கள். ஏற்கலவே, இத்திட்டத்தை இன்னும் கொஞ்சம் முன்கூட்டியே நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருந்தால் சென்னை மாநகர மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவஸ்தையைப் போக்குவதற்கு வழிவகை பிறந்திருக்காதா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அரசு ஆலோசனை செய்து, அதன் பிறகுதான் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறது. உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத்தான் அரசு கருதுகிறது.

திரு பொ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதில் காலதாமதமாக நடவடிக்கை எடுத்த காரணத்தாலே, தமிழ்நாடு அரசாங்கமும் இதுபோன்ற செயற்கை மழையை தருவிக்கின்ற கருவிகளை சொந்தமாக வாங்குவதாகவும், அதற்காக நம்முடைய அதிகாரிகளிடையே சில பேர்களை பயிற்சி பெற நடவடிக்கை எடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தி எந்த அளவிலே உள்ளது ? அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு செலவு என்று கேட்டார்கள். அதற்காக ஒதுக்கப்பட்டது, ரூ. 27.00 இலட்சம். ஆனால் செலவாகியது இதுவரையில் ரூ. 26.00 இலட்சம். இந்த அரசைப் பொறுத்தவரையில் உரிய காலத்திலேதான் நடவடிக்கை எடுத்தது என்று உறுதியாக நம்புகிறேன். அதன் பலனாக எப்போதும் கிடைப்பதை விட மும்மடங்கு அதிகமாக கிடைத்திருக்கிறது. நாமே இப்படி நிரந்தரமான ஒரு ஏற்பாட்டை





செய்து கொள்ளலாமா என்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நல்ல மழை பெய்ததால் ஆல்ட்டர்னேடிவ் டேய்ஸ்— ஒரு நாள் விட்டு ஒரு நாள் விட்ட தண்ணீரை 12—10—83 லிருந்து தினமும் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கு செயற்கை மழை தருவிக்க அரசு செய்த முயற்சிகள் தான் காரணம் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செயற்கை முறையில் மழை பெய்வதற்கு ரூ. 26.00 இலட்சம் செலவு ஆகியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செலவைப் பார்த்தால் கூடுதலாகத் தெரிகிறதே. அந்த செலவுக்குத் தகுந்த வரவு இருந்ததா ? அல்லது நமக்கு போதுமான அளவிற்கு மழை கிடைத்து இருக்கிறதா என்ற விவரம் தர முடியுமா ?

இன்னொன்று, இப்படிப்பட்ட செயற்கை மழைப் பெய்யும் ஏற்பாடுகள் உலகத்தில் எந்தெந்த நாடுகளில் சிறப்பாக இருக்கிறது என்பதை அரசு ஆராய்ச்சி செய்ததா ? அவைகளில் சிறப்பான அம்சங்கள் என்ன என்பதை கண்டறிந்து உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே Money should not be a problem. நாட்டு மக்களுக்கு நன்மை செய்வது என்பதிலே பணத்தைப் பார்க்கக்கூடாது. சென்னையிலே வறட்சி ஏற்பட்டபோது ஏறத்தாழ 8 கோடி ரூபாய்கள் செலவு செய்திருக்கிறோம். ஒரு நாளைக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, நீங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையில் அந்தப் பிரச்சினையை அரசு தீர்த்திருக்கிறது. அதேபோல இதில் அதிகமாக செலவாகியதாக அரசு கருதவில்லை. இருப்பினும் டிசம்பர்—ஜனவரி மாதங்களில் இது பற்றிய 'புல் ரிப்போர்ட்டு' கொடுப்பார்கள். அது கிடைத்த பிறகு நீங்கள் சொன்ன கருத்துக்களை மனதிலே வைத்து அரசு முயற்சி செய்யும்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நான் கேட்டதில் செலவு கூடுதலாக இருக்கின்றது என்ற பிரச்சினையே, எழவில்லை. எவ்வளவு கோடி ரூபாய்கள் ஆனாலும் மக்களுக்கு வேண்டிய தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்பதுதான். நாம் செலவழித்ததற்குப் பலன் உண்டா ? அந்தப் பலன் எவ்வாறு இருந்தது. பலன் இல்லை என்று தகவல் இருக்கிறது. இதைவிட சிறப்பான முறையில் பயன் கிட்ட இந்த செயற்கை மழையைப் பற்றி உலக நாடுகளோடு நம்முடைய அரசு தொடர்பு கொண்டதா, இது சம்பந்தமாக பரிசீலித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 17

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, நல்ல விளைவுகளைத் தந்திருக்கிறது என்று
தான் இந்த அரசு கருதுகிறது. காரணம் சென்ற ஆண்டு
ஆகஸ்டு மாதத்தில் பெய்த மழையை விட மும்மடங்கு அதிக
மாகப் பெய்திருக்கிறது. இது நல்ல விளைவுகளைத் தந்தி
ருக்கிறது. இதைவிட சிறப்பாக ஏதாவது செய்ய முடியுமா
என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நான்
ஏற்கனவே சொன்னதைப்போல 1983 டிசம்பர், 1984 ஜன
வரியிலே ஒரு அறிக்கை கிடைக்கும். அதைப்பற்றி ஃபுல் ரிப்
போர்ட் கிடைக்கும். அதைப் பரிசீலனை செய்து விட்டு,
மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை எல்லாம் மனதிலே
வைத்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆலோசனை செய்யும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம்
நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோவையில் செட்டிப்பாளையம் என்ற ஊரில் இருக்
கிற ஒரு பெரியவர் அவருக்கே உரிய சில முறைகளைக் கொண்டு
அரசாங்கத்திற்கு எழுதி செயற்கை மழையை உண்டாக்க முடி
யும் என்று சொல்லியிருக்கிறார். அதை அக்ரிகல்சுரல் யூனிவர்-
சிட்டிக்கு ரெபர் செய்து, அக்ரிகல்சுரல் யூனிவர்சிடியினரும், மழை
பெய்தது, ஆனால் அவர் என்ன மெத்தேடைக் கையாள்கிறார்
என்று சொல்லவில்லை என்பதற்காக அதை ஏற்றுக்கொள்ள
வில்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கம் உறுதி தந்தால்
அதில் ஈடுபடுவதாக அவர்கள் அரசாங்கத்திற்குக்கூட எழுதியிருக்
கிறார்கள். அந்தத் தகவல் அரசுக்குத் தெரியுமா ? அப்படி
தெரிய வந்தால் அவரை ஊக்கப்படுத்தி அவருக்குரிய ராயல்டி
கொடுப்பதோ—அல்லது கொடுக்காமலேயே அவர் செய்யத்
தயாராக இருக்கிறார்—இதைப்பற்றி அரசு பரிசீலிக்க முன்வருமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்
வது மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களுடைய
இலாக்காவைச் சேர்ந்தது. எனவே அவர்களிடம் இந்தக் கேள்வி
யைக் கேட்டால் சரியான பதில் கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே,
நல்ல மழை பெய்திருக்கிறது. அதற்கு செயற்கை மழைக்கு
ஏற்பாடு செய்ததும் ஒரு காரணம் என்று மினிஸ்டர் ஸ்ட்ரஸ்
பண்ணினார்கள். அந்தச் செயற்கை மழை பெய்வதற்கு முன்ன
தாக, குன்னக்குடி வைத்தியநாத அய்யரை வைத்து வயலின்



1983 நவம்பர் 17]

வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டு அந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு
அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். எனவே,
வயலின் வாசித்ததன் விளைவாகவும், பெய்த மழையிலே ஒரு
பங்கு உண்டு என்று அவர்கள் சொல்கிறார்களா என்பதைக்
கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜனநாயக நாட்டில் எல்லா
மக்களுடைய கருத்துக்கும் மதிப்புத் தரவேண்டும். விழுப்புரத்தில்
கம்யூனிஸ்ட் பிள்ளையார் கோயில் என்று ஒன்று இருந்தது.
(குறுக்கீடு) இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது (குறுக்கீடு)
நான் சொல்வதில் தவறு இருந்தால் எக்ஸ்பஞ்ச் பண்ணிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வயலின் வாசித்ததன்
மூலமாக மழை பெய்ததா என்பது கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வர் அவர்களே, நான் சொல்வது இர்ரெலவன்ட்டாக இருந்தால்,
எக்ஸ்பஞ்ச் பண்ணிவிடுங்கள் (குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : நான் கேட்ட கேள்விக்குப் பதில்
வேண்டும். சொல்லிவிட்டு அதை எக்ஸ்பஞ்ச் பண்ணுங்கள் என்ற
அந்த முறையை ஆதரிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தவர். அவர்
சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விழுப்புரத்தில்
கம்யூனிஸ்ட் பிள்ளையார் கோயில் என்று ஒன்று இருந்தது.
அதைப்பற்றி குத்தூசி குருசாமி அவர்கள் விடுதலையில் எழுதி
யிருக்கிறார்கள். அப்போது நானும், மிஸ்டர் அனந்தன் நம்பியார்,
திரு. எம். கல்யாணசுந்தரம் ஆகியவர்கள் தொழிற்சங்கத்திலே
ஈடுபட்டு இருந்தோம். அந்தப் பகுதி மக்கள் அந்தக் கோயிலுக்குப்
போகிறார்கள் என்பதை தடை செய்யக்கூடாது என்பதற்காக
அங்கே அரிவாள் சுத்தியைக்கூட வைத்திருந்தார்கள். அதைப்
போலவே இது சனநாயக நாடு என்ற காரணத்தாலே சில பேர்கள்
வயிலின் வாசித்தால் மழை வரும் என்று கருதியதால் ஏற்பாடு
செய்து அதற்கு மதிப்புக் கொடுத்து அங்கே போய் நானும் என்
துணைவியாரும் பார்த்தோம். இல்லை என்று சொல்லவில்லை.
(குறுக்கீடு) அதனாலே மழை பெய்து இருக்குமா என்பதைப்
பரிசீலித்து யோசனை செய்து முடிவு எடுக்கவேண்டிய விஷயம்.

[1983 நவம்பர் 17

**திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோழிப் பண்ணைகள்.**

*வினா எண் 211—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை கோழிப் பண்ணைகள் உள்ளன ?

(ஆ) அவைகள் இலாபகரமாக செயல்படுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) கால்நடைப் பராமரிப்புத்துறையின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று கோழிப்பண்ணைகள், முறையே கோவில்பட்டி, அபிஷேகப்பட்டி, மற்றும் கொண்டாநகரம் ஆகிய இடங்களில் உள்ளன.

(ஆ) இல்லை.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற போது அவைகள் இலாபகரமாக நடைபெறவில்லை என்று சொன்னார்கள். ஆகவே நட்டத்தில் ஓடுகின்ற அந்தக் கோழிப் பண்ணைகளை எடுத்துவிட்டு, வேறு ஏதாவது அங்கே பண்ணைகள் வைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஏதாவது நடத்தவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு தற்போது இல்லை. ஆனால் இந்தக் கோழிப் பண்ணைகள் வியாபார ரீதியில் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படவில்லை. குறிப்பாக ஏழை எளிய மக்கள் கோழி வளர்ப்பிலே ஆர்வம் காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக முட்டைகள் அதிகரிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடும், கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இருக்கின்ற அந்தக் கோழிப் பண்ணைகள் உயரினக் கோழிகளை வெளி மார்க்கெட்டில் விற்கின்ற விலையைக் காட்டிலும் குறைவான விலையில் அவர்களுக்குக் கொடுத்து அந்தத் தொழில் நடத்துவதற்கான ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தக் கோழிப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. வியாபார ரீதியில் அமைக்கப்படவில்லை.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற போது, இந்தக் கோழிப் பண்ணைகளிலிருந்து மக்களுக்கு கோழிகளையும், முட்டைகளையும் கொடுப்பதற்காக, லாபகரமான



1983 நவம்பர் 17]

முறையில் இல்லாமல், அது அரசாங்கத்தினுடைய திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் இதுபோன்ற பல கோழிப் பண்ணைகளை அமைப்பதற்காக முன்பே நம்முடைய வேளாண்மைத் துறை மூலம், பல கிராமங்களில் கோழிகளை வளர்க்க கொடுத்தார்கள்; ஆனால் இப்போது அந்த இடங்களில் அப்படிப்பட்ட கோழிப் பண்ணைகளே நாட்டில் இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இன்றைக்கு இருக்கின்ற கோழிப் பண்ணைகளின் மூலமாவது நல்ல முறையில் முட்டைகளையும் கோழிக் குஞ்சுகளையும் கிராமங்களில் வினியோகம் செய்யப்படுகிற முறையை ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகள் ஆங்காங்கே செயல்படுகின்றன. ஏழை மக்களுடைய பொருளாதார வருமானத்தை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, நான் முன்பே குறிப்பிட்டதுபோல, முட்டைகளையும், கோழிகளையும், வெளி மார்க்கெட்டில் விற்கின்ற விலையைக் காட்டிலும் குறைவான விலையில், அவர்களுக்கு விற்கப்படுகின்றன. அத்தோடு மட்டும் அல்லாமல், மருத்துவ சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. விஞ்ஞான ரீதியில், நவீன விஞ்ஞான முறைப்படி வளர்க்கும் முறைகளையும், அதாவது எந்த முறையில் வளர்க்க வேண்டும் என்கிற கருத்துரைகளும் அவர்களுக்கு எடுத்து வைக்கப்பெறுகின்றன.

**கிராமப் பஞ்சாயத்துக்களின் பராமரிப்பில் பொலி காளைகளை வளர்க்கும் திட்டம்:**

*வினா எண் 212—திரு. சி. கணேசன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராமப் பஞ்சாயத்துக்களின் பராமரிப்பிலேயே பொலி காளைகளை வளர்க்கும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவ மனைகளில் மேற்கொள்ளப் பெறும் செயற்கை முறை கருத்தரிப்புகள் பெரும்பாலும் தோல்வியில் ஆகிவிடுகின்றன. ஆகவே, ஒவ்வொரு கால்நடை

மருத்துவ மனையிலும் இப்படிப்பட்ட பொலி காளைகளை வைத்துப் பராமரித்தால் ஓரளவிற்கு இந்த செயற்கை முறை கருத்தரிப்பை விட, பொலி காளைகளை வைத்து கருத்தரிப்பு செய்கின்ற முறையில் அந்த திட்டத்தை அமல் படுத்தினால், கிராமங்களிலேயிருக்கின்ற விவசாயிகளுக்கு நல்ல முறையில் கால் நடை இனவிருத்தி ஏற்படுவதற்கு அது ஒரு நல்ல ஏற்பாடாக இருக்கும். ஆகவே, அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 59 பொலி காளை நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொலி காளை நிலையங்களில் உயரின காளைகளும், அயல் நாட்டு காளைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, அவைகளிலிருந்து எடுக்கின்ற விந்தை பயன்படுத்தித்தான், செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்து இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இருந்தாலும், விந்து, திரவ விந்து என்று சொல்லப்படுகின்ற இவற்றின் மூலமாக செய்யப்படும் செயற்கை முறையில், பலரும் குறிப்பிடுவது போல அவ்வளவு வெற்றிகரமாக இல்லை என்று குறிப்பிட்டாலும், உறை விந்து நிலையம் என்கிற ஒரு நிலையம் ஈச்சங்கோட்டையிலே ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக, அதாவது இந்த உறைவிந்து மூலமாக செயற்கை முறை கருத்தரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஒரு திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது. அதை இன்னும் முழுவதுமாக தமிழகம் முழுவதற்கும் செயல்படுத்துகின்ற அளவுக்கு, அதை செயலாக்கத்தில் இன்றைக்கு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் விடுதியை பழுது பார்த்தல்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதிகளில், புதிய தங்கும் விடுதியில் 5ஆவது மாடிக்கும், 6ஆவது மாடிக்கும் இடையிலே இருக்கிற நடைபாதை பழுதுபட்டிருக்கிற காரணத்தால், அவைகள் நேற்றைக்கு முன் தினம்





என்னுடைய அறைக்கு முன்னால் இடிந்து விழுந்தது. என்னுடைய அறைக்கு மேல் அறையிலே தாமரைக்கனி போன்ற பெரிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, அது அடிக்கடி இடிந்து விழுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் எனக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

*(முற்பகல் 10-10)*

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட மன்றக் கட்டிடம் இடிந்து விழுகிறது என்று அவர் சொல்லலாம். ஆனால் என்னைவிட பருமனாக உள்ள எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டதற்கு நன்றி. ஏதாவது பிரச்னையிருந்தால், என் அறையிலே வந்து பேசும்படி உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்னைகள்

### (அ) சவுத் இந்தியா விஸ்கோஸ் நிர்வாகத்தின் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246ஆவது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களிடமிருந்து அவை உரிமைமீறல் குறித்த ஒரு பிரச்னையை பேரவையில் எழுப்ப என் அனுமதிகேட்டு முன்னறிவிப்பு வந்துள்ளது. இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.எம். ஆறுமுகம், டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோரிடமிருந்தும் முன்னறிவிப்புகள் வந்துள்ளன.

திரு. உமாநாத்தின் அறிவிப்பை பேரவைக்குப் படிக்கிறேன்.

Under Rule 246 of the Tamil Nadu Assembly Rules, I give notice of a breach of privilege against the Management of the South India Viscose. The Spokesman of the company has openly told the Press.

"The letter purported to have been written by Mr. P. Sabanayagam to Labour Minister Mr. S. Ragahavanandam a photostat copy of which was produced in the Assembly by C.P.I. Leader Mr. Alagarswamy and referred to the Privileges Committee is obviously forged with a view to tarnishing the image of the company", according to a spokesman of South India Viscose (Indian Express, dated 11th November 1983).

The representative of the company on behalf of the company has referred to a document which is before the Assembly and the veracity of which is pending before the Privileges Committee as "forged" thus committing a breach of privilege of contempt of the House. Please permit me to raise it.

சொன்ன குற்றச்சாட்டிற்கு திரு. சோ. அழகர்சாமி பொறுப் பேற்றதினால் இதுகுறித்து ஆய்வுசெய்ய இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவும் அப் பிரச்சினையை ஒட்டியே இருப்பதனால் அத்துடன் சேர்த்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இந்தப் பிரச்சினையையும் விதி 255-ன் கீழ் எனக்குள்ள அதிகாரத்தின்படி இதையும் நான் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கிறேன்.

திரு. சபாநாயகம் பத்திரிகைக்கு என்ன சொன்னார் என்பதை யும் எனக்கு எழுத்து மூலமாக 12-11-1983 அன்று அனுப்பியுள் ளார் என்பதையும் அவைக்குத் தெரிவிக்கிறேன்.

### ஆ. தினகரன், முரசொலி நாளேடுகள் மீதும் உறுப்பினர் திரு. அழகர்சாமி மீதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 246 ஆவது விதியின் கீழ், அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையின்முன் எழுப்ப அனுமதிகேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். அதைப் பேரவைக்கு நான் படிக்கிறேன்.

''சட்டப் பேரவை விதி 246-ன் கீழ் அடியிற்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 9–11–1983 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு அழகிரிசாமி அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் மீது கூறிய சில குற்றச்சாட்டு களையும், பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட கடிதம் சம்பந்தமாகவும் செய்திகளை வெளியிடக் கூடாது என்று தீர்ப்பு அளித்தார்கள். அடுத்த நாள் 10–11–1983 அன்று அப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளித்தார்கள்.

ஆனால் பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்ட அக் கடிதத்தை 11–11–1983-ம் தேதிய தினகரனும், 12–11–1983 தேதிய முரசொலியும் பிரசுரித்துள்ளது.



உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மிக முக்கிய பங்காக விளங்கும் அக்கடிதத்தை பிரசுரித்துள்ளது அவையை அவமதிப்பதாகவே அமைகிறது.

ஆகவே, உரிமைக் குழுவுக்கு பேரவைத் தலைவர் அவர்களால் அனுப்பப்பட்ட இப்பிரச்சினையின் கடிதத்தை பிரசுரித்த தினகரன், முரசொலி பத்திரிகைகளும் படித்ததை சபையிலே சமர்ப்பித்ததோடு நில்லாமல் இது வெளியாவதற்குக் காரணமாக விளங்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் அவையின் உரிமையை மீறியுள்ளார்கள். எனவே இது சம்பந்த மாக அவையினுடைய உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி வழங்க வேண்டுகிறேன்.

இந்தப் பிரச்சினையும், பேரவையில் ஏற்கெனவே எழுப்பப் பட்டு அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள பிரச்சினையை ஒட்டியே உள்ளதால், இதனையும் ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : சபையிலே படித்தது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கே பேசிக் கொள்ளலாம், இங்கே பேச நான் அனுமதிக்கவில்லை. நான் ஸுவோ மோட்டோவாக (Suo Motu) எல்லாவற்றையும் அங்கே அனுப்பிவிடுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கடிதத்தை அன்று நான் இங்கே வாசித்து பேரவைத் தலைவரிடம் அதை ஒப்படைத்துவிட்டேன். அதற்குப் பின்னால் எந்தப் பத்திரிகை கும் நான் அந்தக் கடிதத்தைக் கொடுக்கவும் இல்லை. அந்த நகலை தங்களிடத்திலே கொடுத்ததோடு சரி என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அங்கேயே சொல்லலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : எல்லோருக்கும் காப்பி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு அது எப்படித் தெரியும்? (குறுக்கீடு).

### 4. ஒழுங்குப் பிரச்சினை.

### நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கப் பெற்றவை—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் (16–11–1983) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பினார்கள். 11–11–1983 அன்று பேரவையில் தான் பேசிய பேச்சில் நான்கு

பக்கங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நான் பேரவை நடவடிக்கைக் குறிப்பை வாங்கிப் பார்த்தேன். பேரவையிலேயே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளை நீக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டாரோ அவை மட்டும்தான் நீக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிய சமயத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ** என்ற வார்த்தைகளை ஆட்சேபித்த போது பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினீர்கள். நான் நடவடிக்கைக் குறிப்பை வாங்கிப் படித்துப் பார்த்தேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் படித்து இருப்பீர்கள். என்னை கூப்பிட்டு இருந்தால் நான் அதை எக்ஸ்பிளைன் செய்து இருக்க முடியும்.**

அதைக் கூட நீக்க என்ன அதிகாரம்? எப்படி நீக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று சொல்லி நீக்கப் பட்டதுதான் இது. இப்போதும் அது அவைக் குறிப்பில் ஏறக் கூடாது என உத்தரவிடுகிறேன் (குறுக்கீடு).

பேரவையிலேயே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகள் நீக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டாரோ அவை மட்டும்தான் நீக்கப்பட்டுள்ளன. நான்கு பக்கங்கள் என்று குறிப்பிட்டார். முதல் பக்கத்தில் 8 வரிகள், இரண்டாம் பக்கம் 4 வரிகள், மூன்றாம் பக்கம் 5 வரிகள், நான்காம் பக்கத்தில் சில பகுதிகள்—இவை தான் நீக்கப் பட்டுள்ளன. பேரவையில் ஆணையிடப்பட்ட பகுதிகள் மட்டுமே நீக்கப்பட்டுள்ளன. 4 பக்கங்கள் என்றாலும் நீக்கப் பட்ட பகுதிகள் எல்லாம் சேர்த்தால் ஒரு பக்கம் கூட வராது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் ஒழுங்கு மீறல் எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலும் நீக்குவதற்கான ஆணை பேரவையில் அளிக்கப்படும் போதே இது குறித்து விளக்கம் தேவையெனில் பெறலாமே யொழிய, பிறகு மேல் முறையீடு என்ற வகையில் இது குறித்துப் பேரவையில் எழுப்புவது முறையாகாது என்பதையும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்

### சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் : திருவாளர்கள் கே. எஸ். ஜி. ஹாஜா செரீப், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், மு. அப்பா துரை, என். ஏ. பூங்காவனம், சோ. அழகர்சாமி, என். எஸ். வி. சித்தன் மற்றும் ப. பொன்னுரங்கம் ஆகியோர் "சென்னை ஐஸ்ஹவுஸ் பகுதியில் 12—11—1983 அன்று திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு 400 குடிசைகள் சாம்பலாகியதாலும் பல லட்ச ரூபாய் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாலும், சிலர் தீயில் வெந்து கருகிவிட்டதாலும் இன்னமும் நிவாரணப் பணி துவங்காததாலும் மக்களிடையே எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவை யின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர் மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத் துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி மாண்பு மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, சனிக்கிழமை 12 ஆம் தேதி பகல் சுமார் 12 மணி அளவில் டாக்டர் பி. நடேசன் ரோடு, லாயிட் ரோடு ஜங்க்ஷனில் கீரைத் தோட்டம் என்ற பகுதிக்கு அருகாமை யில் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக, சுமார் 400 குடிசைகள் எரிந்தன. 1,500 நபர்கள் அதில் மிகவும் பாதிக்கப்பட்டு திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். உடனே, அங்கே, கலெக்டர் அவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்து மறுநாள் சாப்பாடும் ஒரு சேலை, வேஷ்டியும் ரூ. 200-ம் கொடுத் தார்கள். அதற்குப் பின் சில நபர்கள் அவர்களுக்கு மற்ற நன்கொடைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலுங்கூட அதில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் எளிய வாழ்க்கை உடையவர்கள். பீடித் தொழிலில் உள்ளவர்கள், மற்ற எளிய வாழ்க்கை நடத்துபவர்கள். அவர்களுடைய உடமைகள் எல்லாம் எரிந்து போய்விட்டன. அவர்களுக்கு ஒன்றுமே கிடை யாது. உடுத்திருந்த உடுப்பு மட்டும்தான் அவர்களிடம் இருந் தன. அது தர்கா நிலம் என்று சொல்லப்படுகிறது. ரூ. 200-ல்

குடிசை கட்ட முடியாது. அதனால் அதற்குப் பக்கத்தில் 3, 4
ஏக்கர் கொண்ட கீரைத் தோட்டம் இருக்கிறது. அது வக்ப்
போர்டைச் சேர்ந்தது என்று நான் கேள்விப்படுகிறேன். அதைப்
பற்றி மாண்புமிகு அமைச்சர் திரு. யூசுப் அவர்களிடம் கூடச்
சொன்னேன். அதை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, விடிழந்த
அந்த மக்களுக்கு அங்கே நல்ல முறையில் குடிசைக் கட்டிக்
கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது எரிந்து
போன குடிசைகள் ஒன்றுக்கொன்று இரண்டு அடி அகலம் கூட
இல்லை; அவ்வளவு நெருக்கமான இடத்தில், அவ்வளவு
கஷ்டங்கள் உள்ள இடத்தில் அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கி
றார்கள். இப்பொழுது அரசாங்கம் நல்ல முறையில் கட்டிக்
கொடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கலாம். அப்படி
அவர்கள் கட்டிக் கொடுப்பதற்கு முன்னால், அதையே சீர்படுத்தி,
கொடுக்க வேண்டும். அவர்கள் பல காலமாக அங்கே இருப்ப
தால், எந்த வித சங்கடமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும். நான் முதலில் குறிப்பிட்டபடி இப்பொழுது எரிந்து
போனது தர்கா இடத்தைச் சேர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.
இதற்கு முன்னாலே அங்கே பல பெரியவர்களை அடக்கம்
செய்திருக்கிறார்கள். ஆனால், 6, 7 வருஷங்களாக இப்பொழுது
மக்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரண
மாக, இப்பொழுது ஏற்பட்ட தீ விபத்து எந்த, எந்தப் பெரியவர்
களை அங்கே அடக்கம் செய்திருக்கிறார்களோ, அவர்களுடைய
சொந்தக்காரர்களுக்கெல்லாம் மிகவும் வருத்தத்தைக் கொடுத்தி
ருக்கிறது. ஆகவே, அரசாங்கம் பக்கத்திலே கட்டிக்
கொடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் திரும்பவும் பழையபடி,
அந்த இடத்தை அங்கே இருக்கிற மாஸ்கோடு சேர்த்து விடலாம்.
அங்கே இருக்கிற தர்காவுக்குப் பக்கத்திலே பெரிய பள்ளிவாசல்
இருக்கிறது. எனவே, அரசாங்கம் அதை உடனடியாகக்
கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி
திரு. இராஜசேகரன் தொகுதியில் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.
அதிலும் எந்தவிதமான ஏற்பாடும் பெரிதாக நடக்கவில்லை
யென்று அவர் கூறுகிறார். அதையும் கவனிக்கும்படி நான்
கேட்டுக்கொள்கிறேன்.

இவற்றை விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு
பேரவை துணை சபாநாயகர் அவர்களே, சென்ற சனிக்கிழமை
யன்று சென்னையிலே நடைபெற்று தீ விபத்திலே சுமார் 400 க்கு
மேற்பட்ட குடிசைகள் சாம்பலாகி இருக்கின்றன. தீ பிடித்த
வுடனேயே தகவல்கள் எல்லாம் அறிந்திருந்துங்கூட, தீ அணைப்
புப் படைகள் காலாகாலத்திலே வந்து சேர முடியாததன் விளை
வாக, எல்லா குடிசைகளுமே தீ பிடித்து எரிய வேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் தீ அணைப்புப் படைகள்



வந்திருந்தால், அதில் ஓரளவு சேதத்தைத் தவிர்த்திருக்க முடியும். அதைப் பற்றியும் மீண்டும் நல்லமுறையிலே விவாதிக்கப்பட வேண்டியிருக்கிறது என்பது ஒருபுறம். இரண்டாவது, தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதிலே, வேஷ்டி, சேலை, அரிசி மாத்திரம் முதலிலே கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நிவாரணம் பொறுத்த மட்டிலே இப்பொழுது சமீபத்திலேதான் காலதாமதமாக வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்திலே பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசிகளைப் பொறுத்தமட்டிலே, ராக்கெட் வேகத்திலே உயர்ந்திருக்கும் இந்த நேரத்திலே, தீ பிடித்த வீடுகளுக்கு ரூ. 200 நிவாரணம் கொடுத்திருப்பது போதாது. அதை உயர்த்துவதற்கான முறையிலே, அதை அதிகப்படுத்த வேண்டுமென்றெல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான நிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எரிந்ததிலே பெரும் பகுதி குடிசைகள். அந்தத் தீ விபத்திலே கூட மரியம்பீகம் என்ற பெண்ணும் வேறு சிலரும் இறந்ததாகக் கூட பல செய்திகள் எல்லாம் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு விசேஷமான முறையிலே ஏதாவது நிவாரணம் அளிப்பது பற்றி விவாதிப்பது மட்டுமல்ல, குறைந்தபட்சம் உடனடியாக முதல்வர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து அந்தப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுவது பற்றி விவாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. எரிந்த குடிசை என்ற முறையிலே பார்க்கின்ற பொழுது, குடிசை மாற்று வாரியத்தின் ஏற்பாட்டிலே அந்த வட்டாரத்திலே கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து, அவர்களை எல்லாம் அங்கே குடியேற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது பற்றி எல்லாம் விரிவாகப் பேச வேண்டியிருப்பதன் காரணமாக, இன்று அவையின் இதர அலுவல்களை ஒத்து வைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு சபை துணைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையுன்று ஐஸ் ஹவுசில் இருக்கக்கூடிய குடிசைப் பகுதிகள் தீப்பிடித்து எரிந்தன. தீயை அணைப்பதற்காக நம்முடைய தீயணைப்புத் துறை சற்று உடனடியாக வந்திருந்தால் அந்தச் சேதாரத்தை இன்னும் குறைத்திருக்க முடியும். நான் நேரிலே சென்று பார்த்த காரணத்தால் இந்த மன்றத்திலே கூறுகிறேன். அந்தத் தீயணைப்புப் பணியில் இங்கே இருக்கக் கூடிய நம்முடைய வருவாய்த்துறை அக்கறை எடுத்துக் கொண்டாலும் கூட நாம் ஏற்கனவே ரூ. 200 நிவாரணம் என்று அறிவித்து இருக்கிறோம், இன்றைக்கு ஏறியிருக்கிற விலைவாசியின் காரணமாக அந்த நிவாரண நிதியை ரூ. 500 ஆகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்

கிறேன். அது மட்டுமல்லாமல், இந்தத் தீ பிடித்ததற்கு அடிப்படையே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் மனைவி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டதன் காரணமாக, தீ பிடித்துக் கொண்டதாக, நான் சென்று விசாரித்தபொழுது அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள். ஆகவே அப்படிப்பட்ட ரூபத்தில் நடந்தாலும் இன்றைக்கு 400-க்கும் மேற்பட்ட குடிசைகள் அங்கே எரிந்திருக்கின்றன. இதைப் போல குடிசைகள் அடிக்கடி தீ பிடித்து எரிகிற காரணத்தால் சென்னை மாநகரத்தில் நம்முடைய குடிசை மாற்று வாரியம் துரித நடவடிக்கை எடுத்து இந்த குடிசைகளை எல்லாம் மாற்றி அவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இதுபோன்ற பெரிய நகரில் அப்போதுதான் தீ விபத்துக்களை தடுக்க முடியும். இப்பொழுது தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பூரண நிவாரணங்களை செய்யவேண்டியிருப்பதால் அதைப்பற்றி விவாதிப்பதற்கும், இதுபோன்ற தீ விபத்துகள் நடக்காமலிருப்பதற்கு அதைப்பற்றி விவாதிப்பதற்கும் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் சென்னையில் ஏற்பட்ட பல்வேறு தீ விபத்துக்களைப் பற்றிய பேச்சுக்களை கேட்டிக்கிறது. அதிலே ஒன்று தான். இது. ஐஸ் ஹவுசில் நடைபெற்ற இந்தத் தீ விபத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய அனைவரும் சம்பவங்களைச் சொல்லி விட்டார்கள். நாம் மீண்டும் அதிலே செல்ல விரும்பவில்லை. ஆனால் அண்ணா அவர்கள் காலத்தில் இதுபோன்ற தீ விபத்துகள் தொடர்ச்சியாக நடைபெற்றன, இப்போது நடைப்பெறுவதைப் போல. ஆனால் அண்ணா அவர்கள் தீ விபத்து நடந்தவுடன் அதற்காக நஷ்டயீடு கொடுப்பதிலே நாட்டம் செலுத்தவில்லை. அதற்கு மாறாக தீ பிடிக்காத வீடுகளை கட்டிக் கொடுக்க திட்டமிட்டார்கள். அதை செய்து காட்டினார்கள். அதுவும் எங்கே செய்தார்கள் ? தீ விபத்து நடந்த இடத்திற்கு பக்கத்திலே ; அதன் தொடர்ச்சியாக அண்ணா அவர்கள் வழி நடந்த எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணாவிற்கு பின்னால் அண்ணாவின் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் ; குடிசைகள் இதுபோல தீ விபத்திற்கு ஆளாகக்கூடாது. எனவே விபத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிற எண்ணத்தில், 1970-ம் ஆண்டில் என்று நினைக்கிறேன். குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கினார்கள். குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியதன் நோக்கமே, இதுபோன்ற விபத்துகள் ஏற்படுவதும், அதனால் மக்கள் அவதியுறுவதும், அதற்காக நம்முடைய ரெவின்யூ மினிஸ்டர் அவர்கள் தற்போது உடனே கொடுப்பதைப்போல— உடனே புடவை, சேலை, எடுத்துக் கொடுக்கிறார் ; அரிசி கொடுக்கிறார் ; 200 ரூபாயை உடனே கையில் வைத்துக் கொள்கிறார். அதைத்தான் செய்து





கொண்டிருககிறோம். ஆனால் நிரந்தர பரிகாரமா அது ? நிரந்தரமாக மக்களை காப்பாற்றுகிற வழியா அது ? அது அல்ல என்று அண்ணா அவர்கள் முடிவு எடுத்தார்கள். அதையொட்டி தான் தீ பிடிக்காத வீடுகளைக் கட்டினார்கள். அதையொட்டி தான் கலைஞர் அவர்கள் தீ பிடிக்காத வீடுகளைக் கட்டினார்கள். அவர் குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி, இதுபோன்ற குடிசைகள் இருக்கிற பகுதிகளுக்கெல்லாம் எஸ்டிமேட் போர்டு போட்டு, இந்தக் குடிசைகளை எல்லாம் குடிசை மாற்று வாரியத்தால் மாற்றி கட்டிடங்களாக ஆக்கப்படும் என்று எஸ்டிமேட் போர்டு எல்லாம் போடப்பட்டது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை ; அவருடைய ஆட்சியும் போயிற்று ; எஸ்டிமேட் போர்டும் அதற்குப் பின்னாலே போயிற்று. ஆகவே இப்படி தேவையற்ற நடவடிக்கைகள், காழ்ப்புணர்ச்சி நடவடிக்கைகள் எடுக்கிற காரணத்தால் தான் குடிசைகள் நிலைக்கின்றன. நேற்றைக்கு கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திரு. உமாநாத் அவர்கள் சொன்ன பதிலுக்கு பதில் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் ? நான் குடிசை வாழ் மக்களுக்கு மத்தியிலே இருப்பவன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் குடிசைவாசிக்கும் குடிசைவாசிக்கும் மத்தியிலே இருப்பவன் என்று உமாநாத் அவர்கள் சொன்னார்கள். உடனே முதலமைச்சர் என்ன சொன்னார் ? அவர்கள் எழுந்து நான் குடிசைவாசி மட்டுமல்ல, பிளாட்பாரம் மக்களின் மத்தியிலே இருப்பவன் ; மரத்தடி மக்கள் மத்தியிலே இருப்பவன் என்று சொன்னார்கள். ஆகவே நம் மக்களை மரத்தடி மத்தியிலும் பிளாட்பாரத்தின் மத்தியிலும் தொடர்ந்து வைக்கக்கூடாது. அதுதான் இதுபோன்ற சம்பவங்களுக்கு காரணம். (குறுக்கீடு) எதுவும் அன்பார்லியமெண்டரியாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்க.நாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அன்பார்லிமெண்டரி அல்ல. சம்பந்தமில்லாமல் நேற்றைக்கு பேசிய பேச்சை திருப்பி பேசுவதென்று ஆரம்பித்தால் நேற்றைக்கு நடந்தவைகளைத்தான் மறுபடியும் கேட்க வேண்டியிருக்கும். புதியதாக, இப்போது எடுத்திருக்கிற பிரச்சினையில் அவருடைய கருத்து என்னவென்று சொல்லவேண்டும். மரத்தடி, பிளாட்பாரம் என்பதெல்லாம் வேண்டாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடிசைகளில்தான் தீ பிடிக்கிறது. எனக்கு முன்னாலே கூட நம்முடைய இராகவானந்தம் அவர்கள் பதில் சொன்னார். என்ன சொன்னார் ? அதற்கு ஒரு காரணம் சொன்னார். கீரைத் தோட்டத்திலே வீடு கட்டிக்கொடுங்கள் என்று ஹாஜா செரிப் அவர்கள் கேட்டார்கள். அதற்கு என்ன சொல்கிறார்கள் ? அங்கே கால்வாய் தகராறு இருக்கிறது ; குழாய் தகராறு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எதையாவது இப்படி சொல்கிறார்கள். அதிகாரிகள் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்வது சரியல்ல. அந்த முறை இல்லாமல், தீ பிடிக்கிற விவகாரமே சென்னையிலே ஏற்படக் கூடாது.

தமிழ்நாடு முழுவதும் அந்த நிலைமை ஏற்படக்கூடாது, குறிப்பாகச் சென்னையிலே அந்த நிலைமை ஏற்படக் கூடாது. குடிசைகளே இருக்கக் கூடாது. அதற்குக் குடிசை மாற்று வாரியம் குடிசைகளை அகற்றுவதிலே துரிதமாக ஈடுபட வேண்டும்.

(முற்பகல் 10-30)

என்னுடைய தொகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் தீ விபத்து ஏற்பட்டது. இதுவரை அங்கே என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது எனக்குத் தெரியவில்லை. கட்டிடம் கட்டுவதாக அறிவித்தார், ஆனால் இன்னும் கட்டிடம் அங்கே வரவில்லை வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கத் தயார் என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களுக்குக் கட்டிடம்தான் வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது உறுதி கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கக் கூடாது. தீ விபத்து என்பது சென்னையிலும் தமிழகத்திலும், தொடர் கதையாக ஆகிவிட்டது. உடனே அரிசியை எடுத்துக் கொடுப்பது என்பதும் தொடர்கதை ஆகிவிட்டது. இந்த நிலைமை நீக்கப்பட வேண்டும்.

மற்ற பயர் ஆக்சிடெண்டுகளைப் போன்று இல்லாமல் இது பெக்கூலியர் பயர் ஆக்சிடெண்டாக இருக்கிறது. மற்ற பயர் ஆக்சிடெண்டுகளில் சாதாரணமாகக் குடிசைகள் எரியும், ஆடு, நாய் எரியும். ஆனால் இதில் ஒரு உயிரே சேதமடைந்திருக்கிறது. ஆகவே மற்ற பயர் ஆக்சிடெண்டுகளைப் போல் இதையும் கருதாமல், நஷ்டயீட்டைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் மீது ஸ்பெஷல் அட்டென்ஷன் செலுத்தி நஷ்டயீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Either from the Chief Minister's Relief Fund or from the State Government's Fund கொடுக்க வேண்டும். அந்தக் குடும்பத்திற்கு மட்டும், தனியான முறையில் கணிசமான தொகையை இந்தச் சர்க்கார் கொடுக்கவேண்டும்.

இவைகளை யெல்லாம் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 12-11-1983-ஆம் நாள் 12 மணிக்கு தீப்பற்றியது என்றும், தீப்பற்றியவுடனே அங்கே தீயணைப்புப்





படையினர் செல்லவில்லை என்றும் சொன்னார்கள். எனக்கு கொடுக்கப்பட்ட செய்திப்படியும், நாங்கள் விசாரித்தபடியும் தீயணைப்புப் படையினர் உடனே சென்றிருக்கிறார்கள். உடனே சென்று மூன்று மணி நேரம் போராடி அந்தத் தீயை அணைத்திருக்கிறார்கள். என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்பாராதவிதமாக, இங்கே சொல்லியது மாதிரி திருமதி மாரியம் பீவி என்பவர் இறந்திருக்கிறார்கள். அவர்கள் இறந்ததைப்பற்றி விசாரித்து அதற்கு நிதி கொடுப்பதற்காக அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீ ஏன் ஏற்பட்டது என்பதுபற்றி ஆராய்ந்து அது எப்படி ஏற்பட்டது, இயற்கையாக ஏற்பட்டதா அல்லது வேறு எதனால் ஏற்பட்டது என்று பார்க்க வேண்டிய முயற்சிகளிலும் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது.

தீ ஏற்பட்டவுடனே மாநகராட்சி ஆணையாளர், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், மாவட்ட ஆட்சியாளர் ஆகியவர்கள் சென்று அவர்களுக்கெல்லாம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு நாட்கள் மாநகராட்சி அலுவலர்கள் மூலமாக உணவு வகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட தீ விபத்து ஏற்படுகின்ற குடிசைகளைப் பராமரிக்க வேண்டுமென்பதிலே இங்கேயிருக்கின்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கின்றதோ அந்த அளவிற்கு அமைச்சர்களுக்கும் அக்கறை இருக்கிறது. அதற்காகத்தான் குடிசை மாற்று வாரியம் போடப்பட்டது என்று சொன்னார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது எப்பொழுதையும்விட அதிகமாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி குடிசைகளை மாற்றிப் புதிதாக கட்டிடமாகக் கட்டிக்கொண்டு போனாலும், கூட, ஜனநாயக முறையில் குடிசைகள் புதிது புதிதாக வந்து கொண்டேயிருக்கின்றன. அவைகள் எங்கே இருந்து வருகின்றன என்று தெரியவில்லை அவைகளைத் தடுப்பதற்கும் இந்த அரசு முயற்சிக்கிறது. நீங்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு என்று ஆரம்பித்தார்கள் என்று சொன்னார்கள். அதை ஸ்லம் கிளீயரன்ஸ்க்காக ஆரம்பித்தார்களா அல்லது ஸ்லம் கிரியேஷனுக்கான போர்டா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) இப்பொழுது அல்ல, 1970-லே. அப்பொழுது எவ்வளவு குடிசைகள் இருந்தனவோ அந்த அளவிற்கு இப்பொழுதும் இ

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 17

ஆனால் இந்த அரசு வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைக் கேட்டால் இப்பொழுதே கணக்குக் கொடுப்பார், பல்லாயிரக்கணக்கான புதிய வீடுகளைக் குடிசை மாற்றுவாரியம் கட்டிக் கொண்டிருப்பதை நாம் எந்தப் பக்கம் போனாலும் காண முடிகிறது. குடிசைகளைப் போக்குவதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப் படுகிறது.

சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் அளவிற்கு அவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

உடனடியாகப் பணம் கொடுக்கவில்லை என்றால் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். பணம் கொடுத்தால் ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் உடனடியாக பணம் மற்றவைகளை எல்லாம் கொடுக்கிறோம். அத்தனை பேர்களுக்கும் 1,720 கிலோ அரிசி கொடுக்கப்பட்டிருக்கின்றது. 200 ரூபாய் வீதம் 72,800 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படி எல்லா விஷயங்களும் உடனடியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று இராதாகிருஷ்ணன் நகரில் மழையினால் குடிசைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கும் பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அரசு தீயினால் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்றது. அதேபோன்று அதிகமான மழை பெய்த காரணத்தால் வீடுகள் இடிந்திருக்கின்றன என்றாலும் அவர்களுக்கும் உதவி கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இன்றைக்கு எல்லா நிலைமைகளும் கட்டுக் கடங்கி சீராக இருக்கின்ற நிலைமை இருப்பதால் இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 6 கவன ஈர்ப்புகள்.

### (அ) சென்னை பி. அண்டு சி. மில்லைச் சுற்றியுள்ள கால்வாய்களைச் சீர் செய்தல் :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன், என்.வி.என். சோமு, எல். இளையபெருமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



1983 நவம்பர் 17]

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சென்னை பி. அண்டு சி ஆலை அருகிலுள்ள பெரும்பகுதி கால்வாய் மண் நிரம்பி உள்ளதால் மழை நீர் தேங்கி அப்பகுதி மக்கள்படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் அவர்களே, சென்னை பி. அண்ட் சி. ஆலையைச் சுற்றியுள்ள எல்லா வடிகால் அமைப்புகளும் மாநகராட்சி அதிகாரிகளால் பார்வையிடப்பட்டுள்ளன. இந்த ஆலைக்கு அருகிலுள்ள டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலை இப்போது மீண்டும் போடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக சில கட்டிடக் கழிவுப்பொருள்களும் மண்ணும் வடிகாலில் கலந்து, இரண்டு மூன்று இடங்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வடிகால் நீர் தாராளமாக செல்வதற்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது. இது இப்போது சரிசெய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலையின் வடக்குப் புறத்திலுள்ள வடிகாலும் இவ்வாறு சீர் செய்யப் படுகிறது.

டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையை ஒட்டியும் பி. அண்ட் சி. சாலைக்கு அருகாமையிலும் புதிதாக ஒரு வடிகால் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியிலுள்ள குடியிருப்பு வசதிக்காக ரூ. 4.2 லட்சம் மதிப்பீட்டில் இந்த வடிகால் அமைக்கப் படுகிறது. இந்தப் பணி முடிந்ததும், வடிகால் வசதியில் எந்த இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, பி. அண்ட். சி. மில்லிற்கு அருகாமையிலே ஓட்டேரி நல்லா என்ற கால்வாய் ஓடுகின்றது. அந்தக் கால்வாயிலே மண் அடைத்து மழை நீர் தேங்கி இருப்பதால் ஓட்டேரி, பட்டாளம் போன்ற பகுதிகளில் வெள்ளம் ஏற்படுகின்றது. எனவே அந்த மண்ணை வாரினால் வெள்ளம் குறையும். எனவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, ஓட்டேரி நல்லாவைப் பொறுத்தவரையில் அது பொதுப் பணித்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அது மாநகராட்சிக்குச் சம்பந்தப்பட்டதல்ல. எனினும் பொதுப்பணித் துறையின் மூலமாக உரிய நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, இந்த 54-வது விதியின் கீழ் இந்தப் பிரச்னையைக்கொண்டு வந்ததற்கான முக்கிய நோக்கம் கல்யாண மேஸ்திரி கார்டனில்

கழிவு நீர் செல்ல முடியாமல் நீண்டநாட்களாக அந்த மக்கள் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதை எத்தனையோ முறை கார்ப்பரேஷனிடத்தில் சொல்லியிருந்தும், அமைச்சர் அவர் களிடத்தில் நேரில் சொல்லியிருந்தும், இதுவரை அது முழுமை யாகச் சுத்தம் செய்யப்படவில்லை. இதுபோல், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரிலும், நிலைமை இருக்கிறது. ஓட்டேரி நல்லாவிலும் இந்த நிலமைை இருக்கிறது. இவற்றிற்கு எல்லாம் உலக வங்கியிடமிருந்து பணம் வாங்கி செலவு செய்யப் புடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த இடங்களை உடனடியாக அந்தத் திட்டத்தின் கீழ் எடுத்து, அதைச் செய்து முடிக்க இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, வடிகால் பணிகளைப் பொறுத்தவரையில், அதற் கென தனியான ஒருவாரியம் வைத்து இருக்கிறோம். அது மாநகராட்சி பொறுப்பில் இல்லை. அதேபோல், ஓட்டேரி நல்லா பொதுப்பணித்துறை பராமரிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எல்லா வேலைகளையும் மாநகராட்சி செய்ய முடி யாது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மேலான கருத்துக்களை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

(ஆ) கரூரிலுள்ள சாயப்பட்டறைகளின் கழிவு நீரை அமராவதி ஆற்றில் விடுவது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, ''கரூர் நகரிலுள்ள சாயப்பட்டறைகளின் கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலப்பதால் குடிநீர் கெட்டுப் போவது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற் றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்துதல் துறை அமைச்சரின் கவ னத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் நகரிலுள்ள பல சாயப் பட்டறைகளில் சுமார் 10 சாயப் பட்டறைகளிலிருந்து வரும் கழிவு நீர் அமராவதி ஆற்றில் கலக்கிறது. சம்மந்தப்பட்ட தொழிற் சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவு பெற்று கழிவு நீரைச் சுத்திகரித்துத்தான் வெளியிட வேண்டும். இத்தொழிற்சாலைகளிலிருந்து இசைவு மனுக்களைப் பெற்று கழிவு நீர் சுத்திக்கரிக்கும் முறைகளை அவைகள் மேற்கொள் வதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அமராவதி ஆற்றில் மூன்று இடங்களிலிருந்து தண்ணீர் எடுத்து கரூர் நகருக்கு வழங்கப்படுகிறது. இந்த மூன்று தலைப் பிடங்கள் (Head Works) சின்னாண்டான் கோயில், திருமாநிலையூர், வாங்கல் ரோடு ஆகியுவைகளாகும்,





தண்ணீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரி யத்தால் நிறைவேற்றப்பட்டு கரூர் நகராட்சியால் பராமரிக் கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றிய பிறகு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடத்திய பரிசோதனை களில் திருமாநிலையூரில் மட்டும் சாயப் பட்டறைகளில் கழிவு நீரினால் தண்ணீர் சிறிதளவு பாதிக்கப்படுகிறதென்றும் ஆனால் இது குடிநீருக்குக் குறிப்பிட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டுள்ள தாகையால் குடிப்பதற்குத் தகுதியுள்ளதென்றும் தெரிந் தது. மற்ற இடங்களில் சாயப் பட்டறைகளின் கழிவு நீர் மூலம் தண்ணீரின் குடிப்பதற்கான தன்மை பாதிக்கக்படவில்லை யென்று முன்பு நடத்திய பரிசோதனைகளிலிருந்து தெரிந் தது. ஆயினும் தண்ணீரின் மாதிரி எடுத்து இரசாயன முறை யில் பரிசோதித்து அது குடிப்பதற்குத் தகுந்ததா என்று கண்காணிக்க தமிழ்நாடு மாசு கட்டுப் பாடு வாரியத்திற்கு அதி காரம் இருக்கின்றபடியால் இவ்வாரியம் இந்தப் பரிசோதனை களை விரைவில் நடத்தி அதன்முடிவை அறிவிக்கும்படி கேட் டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இவ்வாரியம் தண்ணீரின் தன்மையை பாதுகாக்க தேவையான எல்லா நடவடிக்கையும் தீவிரமாக எடுக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக தண்ணீரைப் பரிசோதனைக்கு எடுத்து அனுப்பியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பரி சோதனை எவ்வளவு காலகட்டத்திற்குள் முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கரூர் நகரைப் பொறுத்தவரையில் மட்டு மல்லாமல், பல்வேறு இடங்களில் இருந்து இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்று வந்து இருப்பதால், கட்டுப்பாட்டு வாரி யத்தின் மூலமாக தனியாக ஒரு பரிசோதனைக் கூடம் அமைப் பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போது பரிசோதிப்பதற்கு எடுக்கப்படும் அத்தனையும் பரிசோதிப் பதற்காக கிங் இன்ஸ்டியூட்டிலே தான் பரிசோதிக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, அதற்குப் பின்னாலே அதற்கான நட வடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நிலை இருக்கிறது. பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், தனியாக ஒரு பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் ஆய்வு முடிவு அடைகிறபோது, எந்தெந்த சாயப் பட்டறைகளில் இருந்து கழிவு நீர் வந்து பாதிப்பு ஏற்படுகிறது என்பதைத் தெரிந்து, அதை உடனடியாகத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 நவம்பர் 17

**திரு. எம். சின்னசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே இந்தப் பரிசோதனை கூடம் அமைக்கும் வரையில், அங்கே சாயப்பட்டறையில் இருந்து வெளியாகும் தண்ணீரை அருகில் உள்ள பாசனக் கால்வாய் மூலம் வெளியேற்றுவதற்கு அந்த வாரியத்தின் மூலம் அந்த சாயப் பட்டறை உரிமையாளரைக் கேட்டுக்கொள்வதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவரவர்களே, அந்தத் தொகுதியினுடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் கேட்டுக்கொள்ளுகின்ற காரணத்தால் வாரியத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்து, அந்தக் கழிவு நீரை ஆற்றிலே விடுவதைத் தடுத்து, வேறுவகையிலே எங்காவது திருப்பிவிட வழியிருக்கிறதா என்பதை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும் :

1. திரு. இரா. மணிமாறன்.
2. திரு. கே. கல்லன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.



1983 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

"திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்:

1. திரு. பி. முசிறிப்புத்தன்.
2. திரு. ஜே. எஸ். இராசு."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன் வடிவு, 1983.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்முடிவு எண் 46/1988) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

[1983 நவம்பர் 17

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (இ) நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1983 நவம்பர் 17]

(முற்பகல் 10—50)

### (ஈ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (உ) நிதி ஒதுக்க (எண் 7) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 7) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/83) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா மீது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக வறட்சி ஏற்பட்ட நிலையில் வறட்சி நிதி மத்திய நிதியிலிருந்தும், மாநில நிதியிலிருந்தும் வறட்சி பகுதியிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகமாக செலவழிக்கப்படுகிறது. ஆனால், குறிப்பாக வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே அவர்களுக்குப்

பல்வேறு உதவிகளை இந்த ஆட்சி செய்யவில்லை. அடிப்படைப்
பிரச்சினையான குடிநீர் பிரச்சினை, வேலையில்லாத பட்டதாரி
களுக்கு வேலை கிடைக்காத பிரச்சினை போன்றவற்றிற்காக
மிகவும் அதிகமாக நிதி ஒதுக்கப்படாதது ஒரு குறை என்பதை
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நல்ல திட்டங்களை இந்த
அரசு செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயிகளுக்குத் தேவையான கசிவுநீர்க் குட்டை
ஏற்படுத்துவது என்பது ஒரு திட்டம். அந்தத் திட்டத்தை நிறை
வேற்றினால் வறட்சி காலங்களில் வேளாண்மை செய்வதற்கு
கிணற்றில் இருக்கும் நீரைத் தேக்கிவைத்து அந்தத் தண்ணீரைக்
கொண்டு விவசாயிகள் நன்மை அடைவார்கள் என்ற நோக்கத்தில்
அதை நன்றாக செய்து இருக்கவேண்டும். அதைச் செய்யத் தவறி
இருக்கிறீர்கள். இனியாகிலும் வறட்சி நிதியிலிருந்து வருங்காலத்
திலாவது இந்தக் கசிவு நீர் குட்டையை ஏற்படுத்தினால் நல்லது.
அதற்கு அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்ததாக வறட்சி நேரத்தில் விவசாயிகளுக்கு மூட்டை
ஒன்றுக்கு 15 ரூபாய் மானியமாக அளிப்பது 31-1-1984 முடிய
தான் இருக்கிறது. அதை மார்ச்சு மாதம் முடிய நீட்டித்துக்
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத்
திட்டத்திலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக்
குறையைக் களைய வேண்டும். குறிப்பாக என்.ஆர்.டி.பி. என்ற
திட்டத்தில் அதிகாரிகள் சில குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்
வேலை கொடுக்கிறார்கள் என்ற புகார் இருக்கின்ற காரணத்தால்
இதற்கு ஒரு வரைமுறை இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து படித்த பட்டதாரிகள், பொறியியல் பட்டதாரிகள
ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும். கூட்டுறவு
சொசைட்டிகளுக்கு கொடுத்து அந்தக் குறைகளைப் போக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய குறை
களைக் களைய அரசாங்கம் நிலையான ஒரு கொள்கையை
கையாள வேண்டும். ஆளுங்கட்சிக்காரர்களுக்கு மட்டும் அதிகாரி
கள் உரிமை கொடுப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
அத்தகைய திட்டங்களை மேலும் ஆலோசனை செய்து அதற்
கென்று ஒரு கொள்கையை வகுத்து ஒப்பந்தப் புள்ளிகளைக்
கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்தது கிருஷ்ணா நதி நீர்த்திட்டம். இது நல்ல
திட்டம். வருங்காலத்தில் சென்னை நகருக்கு ஒரு வரப்பிர
சாதமாக அமையப்போகிற திட்டம். நான் ஒன்றை
மட்டும் சொல்ல விரும்புகிறேன். பிரதமர் இந்திரா காந்தி
அம்மையார் அவர்கள் மகாநதியையும், வைகையையும்





ஒன்றாக இணைத்து, சாதாரணமாக வீணாகும் மழைத்
தண்ணீரை மட்டுமல்ல. மழைக்காலத்தில் வீணாகச் சென்று
கடலிலே கலக்கின்ற அந்தத் தண்ணீரைத் தடுத்து, வறட்சியால்
பாதிக்கப்பட்டு இருக்கின்ற அந்த மக்களுக்கு கிடைக்கும்
நல்ல திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இந்த
திட்டத்தை உடனடியாக பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்
களோடு தொடர்பு கொண்டு உடனடியாக நிறைவேற்ற
வேண்டும். அதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை
களில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
குறிப்பாக கிருஷ்ணா நதி நீர்த்திட்டம், ஆந்திராவில் எல்லை
யிலேயிருந்து கடந்து நம்முடைய தமிழக எல்லைக்கு வருகின்றது.
இதற்காக பெரிய அளவிலே இப்போது நிலத்தை ஆர்ஜிதம்
செய்து வருங்காலத்தில் நல்ல பயன் உள்ள திட்டமாக, நாட்டு
மக்களுக்கு உகந்த திட்டமாகச் செய்யக்கூடிய அளவிற்கு
மத்திய மாநில அரசுகளோடு தொடர்புகொண்டு, அதற்கான
செயல்முறைகளில் தமிழக சர்க்கார் இறங்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சிறுபாசனத்திட்டம். அதற்கு மத்தியிலேயிருந்து
ஏராளமான நிதி உதவி செய்கிறார்கள். மாண்புமிகு பெருந்
தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே ஏராளமான அணைகள்
கட்டப்பட்டன. இப்போது அதற்கான நல்ல திட்டங்கள்.
இல்லை. இருந்தாலும் சிறுசிறு பாசனத் திட்டத்தை மேற்
கொண்டு, கடலிலே வீணாகச் சென்று கலக்கின்ற தண்ணீரைத்
தேக்கி வைத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக்
கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்
பாக இதற்கு முன்னால் இருந்த நீர்ப்பாசன அமைச்சர் அவர்
கள் என்னுடைய தொகுதியில் மயிலமுத்துவாரி திட்டத்தை
3.5 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தை அறிவித்தார்கள்.
ஆனால் அந்த திட்டம் நிறைவேற்றப்படவில்லை. காரணம்
என்னவென்றால், சிகப்பு நாடா முறையிலே பல இலாக்காக்
களிலே அந்த திட்டம் இழுபறியாக இழுத்துக்கொண்டு கிடப்
பிலே போடப்பட்டுள்ளது. ஆகவே இதைப்போன்ற திட்டங்
களை நிறைவேற்ற வேண்டும் என்றால், மத்திய அரசு
கொடுக்கும் கிராண்ட்டை நல்ல முறையிலே வாங்கி பயன்
படுத்தவேண்டும் என்று சொல்கிறேன். நல்ல முறையில் பல்
வேறு திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப்
பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆடிட்டர் ஜெனரலினுடைய அறிக்கையில்
சொல்லப்பட்டு இருப்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட
விரும்புகிறேன்.

The provision was for paym nt a grant-in aid to Madras Metropolitan Water Supply and Sew rage Board for ex cuting th Cauvery (Kattalai) Water Supply Scheme for augmenting water supply to Madras City. As a firm decision was not taken by Governm nt on the implementation of th sch me, the provision was surrendered in March 1982.

[திரு. ந. சிவஞானம்] [1983 நவம்பர் 17

ஆகவே இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களில் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசோடு கலக்காமல் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை சரண்டர் செய்கின்ற நிலையை பார்க்கின்றபோது இந்த ஆட்சி சுறுசுறுப்பாக இயங்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.

அடுத்தது, கடலிலே, வீணாகச் சென்று கலக்கும் தண்ணீரை தேக்கி வறட்சியால் வாடுகின்ற மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை 1981–82 நிதி நிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். இதற்கான ஆய்வு இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதா? இல்லையானால் எப்போது ஏற்படும்? இப்போது தென்மேற்குப் பருவமழை பெய்திருக்கின்ற காரணத்தால், சாதாரணமாக கடலில் சென்று கலக்கின்ற அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு 'நல்லமுறையிலே பலன் தரும் என்றும், அதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் நிறைவேற்றவில்லை.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய காலத்திலேதான் கல்வியிலே ஒரு புரட்சி ஏற்பட்டது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்தான் இந்த நாட்டு ஏழை மக்களுக்கு கல்வி கண் கொடுத்தவர். அப்போது மொத்தத் தொகையிலே 25 சதவீதத்தை கல்விக்காக என்று ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் இப்போது என்ன நிலை என்றால், பல உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான தனியான கட்டிடங்கள் இடையாது. சாதாரணமாக மரத்தடியிலும், குடிசைகளிலும் வகுப்புகள் நடைபெறும் நிலையிலிருக்கிறது. எனவே அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அதிகமான அளவிலே நிதி ஒதுக்கம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது ஒரு ஆலோசனை, இப்போது என்.ஆர்.டி.பி. திட்டத்திலே பல பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. என்றாலும் இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்த நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பெரும் முயற்சி செய்யவேண்டும். இந்தத் திட்டத்திலே பள்ளிக் கூடங்கள் கட்டுவது, ரோடுகள் போடுவது போன்ற பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்கிறார்கள். எனவே இந்த திட்டத்திலே, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்களையும் இணைத்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



983 நவம்பர் 17] [திரு. ந. சிவஞானம்]

அடுத்து சாதாரணமாக உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும், விவசயிகளுக்கு கடன் பளு அதிகமாகியிருக்கின்றது என்று. அந்தக் கடன் பளுவை குறைக்க, இந்த ஆட்சி இன்னும் முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைசியாக, ஒரு ஊழல் இல்லாத, லஞ்சம் இல்லாத ஆட்சியை தமிழகத்தைப் பொறுத்தவரையில், வருகிற காலத்தில் தேசிய சக்திகள் அமைக்கும் காலம் விரைவில் வர இருக்கிறது என்ற கருத்தைத் சொல்லிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 11-00)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பல்வேறு மானியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், மன்னிக்க வேண்டும். அவர்களுடைய துறையில் பல்வேறு மானியங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. குன்றத்தூர்-செங்கை மாவட்டம்-பிளாக்குக்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், லிங்க் ரோடு போடுகிறார்கள். 1978–79, 1980–81-ல் ரீ-மெட்டலிங் ரோட்ஸ் என்ற வகையில் 11 ரோடுகள் போடுகிறார்கள். வேலை 1980-81 லே முடிந்துவிடுகிறது ..........

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டு குறித்து, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்த அவையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதிலே பதில் சொல்லியாகிவிட்டது. குன்றத்தூர் பிளாக்கிலே 11 சாலைகளை எடுத்துக் கொண்டது உண்மை. அவைகள் எல்லாம் வில்லேஜ் வொர்க்ஸ் புரோக்கிராம் என்ற வகையில், 1979–80 ஆம் ஆண்டிலே எடுக்கப்பட்டது. யெர்த் ரோடாகப் போடப்பட்டது. முதலிலே அதனுடைய திக்னஸ் 7.5 சென்டிமீட்டர் என்ற முறையில் தான் வைத்துப் போடப்பட்டது. அதிலே பெரிய வாகனங்கள் அதிகமாகச் செல்கிற காரணத்தால் மீண்டும் 15 சென்டி மீட்டருக்கு அந்த திக்னசை வைத்து, அந்தச் சாலை போடப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்னதன் காரணமாக, அதனால் ஏற்பட்ட அதிகச் செலவுதான் 2.5 லட்சம், ஆகவே, 2.5 லட்சம் எப்படி அதிகமாகச் செலவழித்தார்கள் என்று ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் ஒரு கொரியை எழுப்பினார்கள். அதற்கான விளக்கத்தை அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அதில் ஒன்றும் தவறு இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, Prima facie fraudulent ·xp nditure என்று நான் சொல்லவில்லை. உங்களுடைய ஆடிட் ரிப்போர்ட்டிலே ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா சொல்கிறார்கள், அரசாங்கம் ஒதுக்கிய தொகையே 1¾ லட்சம் ரூபாய்தான். ஆனால் ரீ-மெட்டலிங் போடுகிறோம் என்று சொல்லி பிராடுலன்டாக செலவழிக்கப்பட்ட பணம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அதை ஆடிட்டரே சொல்லியிருக்கிறார். அவர் கூறியிருப்பதை நான் வாசித்துக் காட்டுகிறேன்.

*'On the scheme pointed out in audit'*

Th: Gov rnment agreed that it was a *Prima facie* case of frauoul nt expenditur and asked the District Coll ctor to investigated t c matter and the result of the investigation is awaitःd. நான் கேட்க விரும்புகிறேன்......

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற அந்தக் குறிப்பை தான் ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் நமக்கு அனுப்பினார்கள் அதற்குரிய விளக்கத்தை நாம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்களா அல்லது மறுக்கிறார்களா என்பதை நாம் பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும். யார் தவறு செய்திருக் கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயாராக இருப்போம். ஆகவே, எந்த ஒன்றியத்தில் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அங்கே அந்த தவறுகளை போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனிப்பட்ட முறையிலே யார் மீதாவது குற்றச்சாட்டுகளை சொல்கிற எண்ணமோ, கருத்தோ இருந்தால் தயவுசெய்து சொல்லுங்கள். நடவடிக்கை எடுப்போம். ஏற்கனவே திரு. உமாநாத் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலேதான், ஆடிட்டர் ரிப்போர்ட்டை உடனடியாகப் பார்த்தோம். அதற்குரிய எக்ஸ்பிளனேஷன் விளக்கங்கள் கொடுத்து டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அதை ஏற்றுக் கொள்ளுகிறார்களா இல்லையா என்பதைப் பார்த்து விட்டுத்தான் இதில் பதில் சொல்லமுடியும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் இதிலே சொல்லவிரும்புவதெல்லாம், அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் அவர்கள் இதிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். குன்றத்தூர் பிளாக்கிலே மிகப் பெரிய தவறு ஏற்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறது. மற்ற விவரம் எனக்குத்தேவையில்லை. நீங்கள் கொடுத்த ரிப்போர்ட்டிலேயே இருக்கிறது.





அடுத்துச் சொல்லவிரும்புவது, இன்றைக்கு பல மானியங்களிலே தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஈ. எஸ். ஐ. ஹாஸ்பிடல் மற்றும் டிஸ்பென்சரியில் மதுரை, கோயம்புத்தூருக்கு மருந்து வாங்கியிருக்கிறார்கள். 7 வகையான மருந்துகள். அவைகளுக்கு ஆர்டர் கொடுக்கப்படுகிறது. யார் கொடுக்கிறார்கள். டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ் 1981-லே கொடுக்கிறார்கள். பல்க் ரிக்குயர்மெண்ட்ஸ் எங்களுக்குத் தேவை இந்த 7 வகையான மருந்துகளிலே என்று முதலிலே ஆர்டர் கொடுத்து வாங்கிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் திடீரென்று பல்க் ரிக்குயர்மெண்ட்ஸ் வேண்டாம். எங்களுக்கு வேண்டியது சுமால் பேக்கேஜிலே இருந்தால்போதும் என்று சொல்லி மருந்துகள் வாங்கப்பட்டன. ஆனால் பல்கிலே ஆர்டர் கொடுத்தார்கள். பல்கிலே இதே காண்ட்ராக்ட் ரேட்டிலே ரேட்டாகவும் தரமாகவும் இருக்கிறது. ஆனால் பல்கிலே வாங்கினால் மருந்து நீண்டகாலமாக இருக்காது என்று சொல்லி வாங்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஆர்டர் எப்படி கொடுக்கிறார் டி. எம். எஸ். நாம் இதை பேக்கேஜஸாக வாங்கவேண்டுமென்று ஆர்டர் கொடுக்கப்படுகிறது. தனி காண்ட்ராக்ட் கொடுக்கப்படுகிறது. இப்படி தனி காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டதால் எவ்வளவு ரூபாய். நாலே முக்கால் லட்ச ரூபாய் கொள்ளையடிக்கப்படுகிறது. இந்த நாலே முக்கால் லட்ச ரூபாய் கொள்ளையடிக்கப்படுவது மட்டுமல்ல, சுமால் பேக்கேஜஸ் வேண்டுமென்று சொன்னார்களே அதற்குப் பதிலாக பல்க் பர்ச்சேஸ் 1982 இல் வாங்கியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். அந்த நாலே முக்கால் லட்சம் எக்ஸ்ட்ரா எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்லப்பட்டது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அதைப்பற்றி உங்களுடைய பதில் என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த டி. எம். எஸ். பற்றி நான் ஏற்கெனவேகூட இந்த மன்றத்திலே குற்றஞ்சாட்டினேன். கர்நாடகத்திலே இட ஒதுக்கீட்டிலே அவர் சம்பந்தப்பட்டிருக்கிறார். அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களுக்குத் தெரியும், அவர் பிள்ளைக்கு இடம் கொடுத்திருக்கிறார் தகுதியில்லாமல் என்று. நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கேள்விப்படுகிறேன். அந்த டி.எம்.எஸ்.-க்கு எக்ஸ்டன்ஷன் கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு நாலே முக்கால் லட்ச ரூபாய் ஏழு மருந்து வகைகள் வாங்குவதில் மிகப் பெரிய கொள்ளை. எக்ஸ்ட்ரா எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்லப்படுகிறது. இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் சிறந்த நிர்வாகி என்பதற்காக சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து எனக்கு மகிழ்ச்சிதான்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, இ.எஸ்.ஐயைப் பொறுத்தவரையிலும் தொழிலாளர்களும் முதலாளிகளும் கொடுக்கிற பணம், மாநில அரசு, சார்ப

ரேஷன் கொடுப்பது போன்றவற்றைக் கொண்டு நடத்தப்படு கிறது. அது சரியாக நடக்கிறதா என்று பார்த்துக் கொள்கிற வேலைதான் தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்தது. மருந்து போவது, பார்ப்பது என்பது எல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தமானது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, * * * நல்வாழ்வுத் துறை அமைச்சர் கொடுக்கவேண்டு மென்று சொன்னதற்காக நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் அப் படியா சொன்னார் ? அவையிலே இவ்வளவு முக்கியமான ஆட்கள் இருக்கும்பொழுது அவர் சொல்லாததை சொன்னதாகச் சொல் கிறீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என உத்திரவிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** நல்வாழ்வுத் துறை சம்பந்தப் பட்டது என்று சொன்னார். நான் சொல்லியது குற்றச்சாட்டு கூட அல்ல. நாலே முக்கால் லட்சம் ரூபாய்க்கு small package வாங்குகிறோம் என்று சொல்லி சர்க்காருடைய பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் குற்றச்சாட்டு. அது எனக்குத் தெரியாது என்கிறார், சரி பரவாயில்லை. சம்பந்தப் பட்ட அமைச்சராவது பதில் சொல்லட்டும். இங்கே கலக்டிவ் ரெஸ்பான்சிபிளிட்டி என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அமைச்சர் திரு. வீரப்பன் இங்கு இல்லை என்று கருதுகிறேன். ஆனால் அவர் சார்பில் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். தமிழகத்திலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல்வேறு இருக்கின்றன. அது வெண்மையாக்கப்பட வேண்டுமென்று, பள பளப்பாக இருக்கவேண்டுமென்றால் Wattle bark என்று சொல் லப்படுகிற சீகைப்பட்டை பயன்படுத்தப்படவேண்டும். ஈஸ்ட் ஆப்பிரிக்காவிலிருந்து இப்போதுகூட இம்போர்ட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே கொடைக்கானலி லும், நீலகிரியிலும் சர்க்காருடைய வன இலாகா இதை விளை விக்கிறது. இன்னும் சொல்லப்போனாலும் 1940 இல் Public sale by action என்று கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 1979 இல் No Public sale by auction என்று உத்திரவிடப்படுகிறது. யாருக்குப் கொடுக் கிறார்கள் என்று கேட்டால் நம்முடைய முதலமைச்சருக்கு மிக வும் நெருக்கமானவர் வேண்டியவர் குமாரபாளையம் சுப்பிர

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





மணிய செட்டியார், அதைப்போலவே நம்முடைய அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவர், தியாகராஜன் அதிலே டைரக்டராக இருக்கிறார். அந்த கம்பெனியினுடைய பெயர் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். Tan India Company Mettupalayam என்ன ரேட்டிலே கொடுக்கிறார்கள் என்றால் டன் 600 ரூபாய்க்கு. வியாபாரிகளுக்கு, ரிஜிஸ்டர்டு டைரக்டர்ஸ் ஏறத்தாழ பலபேர்கள் இருக்கிறார்கள். டீலர்ஸ் இருக்கிறார்கள். 1,500 ரூபாய்க்கு வாங்குவதற்குத் தயார். ஆனால் 600 ரூபாய் ரேட்டிற்கு நம்முடைய அமைச்சர் உத்திரவு போட்டிருக்கிறார், 10 ஆயிரம் டன் எஸ்டிமேட், பல ஏக்கர்கள் அந்த லிமிடெட் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு டன்னுக்கு எவ்வளவு கணக்கு என்று கேட்டால் 900 ரூபாய்ரேட் சர்க்காருக்கு நட்டம். 10 ஆயிரம் டன் என்றால் 90 லட்சம் ரூபாய் நட்டம். ரூபாய் 90 லட்சம் யாருக்கு லாபம். சுப்பிரமணிய செட்டியார் இருக்கிறார் நம்முடைய முதலமைச்சருக்கு வேண்டியவர், எஸ் .எஸ். எம். தியாகராஜன் இருக்கிறார்கள் அமைச்சருக்கு வேண்டியவர்கள்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தம் இல்லாமல் —முதலமைச்சருக்கு வேண்டியவர் என்றால், திரு. ரகுமான்கான் அவர்கள் கூட எனக்கு வேண்டியவர்தான். எனக்கு வேண்டாதவர்கள் கிடையாது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே நான் கேட்கிறேன் 90 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அது யாருக்கு லாபம், தனி நபர்களுக்கு. முதலாளிகளுக்குச் சலுகையை சர்க்கார் செய்து கொடுப்பதன் மர்மம் என்ன என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் ஐ.நா. மன்றத்திலே * *

ஆகவே அமைச்சரவை சார்பாக....(கூச்சல் குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த் தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் பண்ருட்டி அவர்கள் வெளிநாடு போய் இருக்கிறார்கள். சபையில் இல்லை. நான்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1983 நவம்பர் 17

ஏற்கனவே சொன்னதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். அதில் ஒரு முக்கியமான பிரச்சனை, அவர் இல்லாத காரணத்தால் நம்முடைய அமைச்சரவையில் பதில் சொன்னால் நன்றாக இருக்கும். காவேரி நீர் ஓட்டத்தை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்கிற மேட்டூர் நீர் மின் திட்டம், குலோபல் டெண்டர் விடப்படுகிறது, 6 பேர்களிடமிருந்து டெண்டர் கால் ஃபார் செய்கிறார்கள், அதிலே 2 பேர் 6 கோடியே 40 லட்சம் என்று கேட்கிறார்கள். 6 கோடியே 40 லட்சம் உயர்ந்த தொகை அதை ஏற்றுக்கொள்கிறார்கள். இன்னும் 2 பேர் 6 கோடியே 26 லட்சம், 6 கோடியே 25 லட்சம் என்று லோயர் கொட்டேஷன் கொடுக்கிறார்கள். லோயரை விட்டுவிட்டு 6 கோடியே 26 லட்சத்தை விட்டுவிட்டு, 6 கோடியே 25 லட்சத்தை விட்டுவிட்டு 6 கோடியே 40 லட்சம் டெண்டர் கேட்டவர்களுக்கு அரசு கொடுக்கிறது. ஹைக்கோர்ட்டில் என்ன தீர்ப்புச் சொன்னார்கள், ஏன் ஐயா இப்படி குறைந்த டெண்டரை விட்டுவிட்டு அதிக தொகைக்கு கொடுத்தீர்கள் என்று கேட்டால் அதற்கு பதில் சொன்னார்கள் மின்சார இலாக்கா சார்பாக, எங்களுக்கு வேலை சீக்கிரம் முடியவேண்டும், ஆகவே குறைந்தது, அதிகம் என்ற டெக்னிக்களை பற்றி எல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன் இது என்ன நியாயம்? ஹைக்கோர்ட் அந்த டெண்டரை கேன்சல் செய்து இருக்கிறது. ஆகவே இதில் எவ்வளவு பெரிய தவறுகள் நடந்து இருக்கிறது என்பதை அரசு சார்பாகச் சொல்லவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்கள் கவனிக்கவேண்டும். அவர் இல்லை என்று நினைக்கிறேன். ஆனாலும் மந்திரிசபையில் இருப்பவர்கள் தாராளமாக பதில் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். சென்னையில் ஹைக்கோர்ட்டில் இருக்கக்கூடிய ரிட் கேஸ் சம்பந்தமாக பேசினால் சப்ஜுடீஸ் வந்துவிடும். ஆகையால் அதைப்பற்றி நான் பேசவில்லை. ஆனால் இன்டர்வீவ் என்ற ஒரு ஏற்பாட்டை வைத்துக்கொண்டு, ரிஜிஸ்டர் நம்பர் 1025, 200 மார்க்குக்கு 163 மார்க் வாங்கியிருக்கிறார் இடம் கிடைத்து இருக்கிறது (குறுக்கீடு) இது லிஸ்ட்டில் இல்லை. ரிஜிஸ்ட்டர் நம்பர் 14484, 200 மார்க்குக்கு 166 மார்க் வாங்கி இருக்கிறார் இடம் கிடைக்கவில்லை. அதைப் போலவே இன்னும் ஒருவர்..........

**திரு. ஆர். மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை தெரிந்துகொள்ள விரும்புகிறேன், பில்லின் மீது மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரா அல்லது நம்பிக்கையில்லா தீர்மானத்தில் சொன்ன அதே குற்றச்சாட்டுக்களைச் சொல்ல இந்த பில்லை பயன்படுத்திக் கொள்கிறார்களா ?



1983 நவம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போதே நான் நினைத்தேன், யாராவது ஆட்சேபிப்பார்கள் என்று, அது சம்பந்தமான ரிட் மனுக்கள் தான் உயர்நீதி மன்றத்தில் உள்ளன. வழக்குமன்றத்திலுள்ள பிரச்சினைகள் குறித்து எதுவும் பேச வேண்டாம். தற்போது அவைமுன் விவாதத்தில் உள்ள நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு சம்பந்தமாகப் பேச வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரவு செலவு கணக்கு ஜெனரல் பட்ஜெட் வருகின்றபோது அதிலே கொள்கைகள் மற்ற விளக்கங்கள் எல்லாம் சொல்லி ஒவ்வொரு மானிய கோரிக்கையின் மீதும் பேசி முடிவு எடுக்கின்ற அளவுகள் வரும். துணை மானியக் கோரிக்கைகள் என்பது ஏற்கெனவே செய்யப்பட்ட செலவுகள் அப்படி செய்யப்பட்ட செலவுகளைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்காக துணை மானியக் கோரிக்கை வருகிறது. அந்தத் துணை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வருகிறபோது விரிவாக, விளக்கமாக, தெளிவாக, திட்டமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதில் குறிப்பிட்ட அளவுக்கு பதில் சொல்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கிறது. ஆகவே, பொதுவாக நிதி ஒதுக்க மசோதா வரும்போது பெரும்பாலும் பேசுவது இல்லை.

நிதி ஒதுக்க மசோதாவைப் பொறுத்தவரையில் சுட்டிக் காட்ட வேண்டிய நிதி சம்பந்தமான தன்மைகள் இருக்குமானால்எடுத்துச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் பேசுவேனென்று சொன்னால் பேசலாம். அவ்வளவுக்கும் மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் சொல்கின்ற சூழ்நிலை ஏற்படாது. ஆகவே, பதில் சொல்லாவிட்டால், பேசுவதைப் பேசி வைப்போம் என்பதும் நல்லதல்ல. அந்தந்தச் சர்தர்ப்பம் வருகின்றபொழுது அந்தந்த அமைச்சர்கள் எடுத்துப் பேசுகின்ற அளவுக்கு வந்தால், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுடைய கருத்துக்கு உள்ளபடியே வலிவிருக்குமானால் கூட அதற்கேற்ற பதிலை அந்தந்த அமைச்சர்கள் சொல்வதற்கு அவர்களுக்கும் நல்லது. அரசுக்கும் அந்தப் பிரச்சினையைப் பற்றி தெளிவுபடுத்துவதற்கும் நல்லது. இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பிருக்க முடியும். ஆகவே, அந்த வகையிலே தான் குறிப்பிட்ட வகையிலே இந்த நிதி ஒதுக்கத் தன்மையிலே ஏதாவது இருக்குமானால் அதைப்பற்றிக்கேட்டால், குறைபாடுகளோ, மற்றவைகளோ இருக்குமானால், அதுபற்றிய விளக்கங்களை நான் தரமுடியும். ஆகவே, அந்த வகையிலே சிலவற்றைப் பேசிவிட்டு மேலெழுந்தவாரியாக கோடிட்டுக் காட்டுவதிலே தவறில்லை. அந்த வகையிலே மாண்புமிகு ரகுமான்கான் ஒவ்வொன்றிற்கும் டீடெய்ல்ட் ஆகப் பேசுவாரானால் ஒவ்வொன்றிற்கும் பதில் கிடைப்பது என்பது இயலாது. ஒவ்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 நவம்பர் 17

வொன்றிற்கும் தர இயலாது. ஆகவே, ஒரு முறையை கடைப் பிடிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மன்றத்திலே, அப்ரோபிரியேஷன் பில்லிலே என்ன, என்ன எல்லாம் பேசவேண்டும். 'பொலிட்டிக்கல் மேட்டர்ஸ்' பற்றி பேசக் கூடாது என்பதற்கு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள்.

The discussion on an Appropriation Bill in respect of demands or supplementary or additional grants should be confined to the details of which they are composed. There are other forums and opportunities for discussing political matters and the precious time of the House should not be availed of for the same.

திரு. துரைமுருகன்: அவர் பொலிட்டிக்கல் சம்பந்தமாக பேசவில்லை.

திரு. ரஹுமான்கான்: நான் இதுவரையில் அப்ரோபிரியேஷன் பில்லில் பேசியதைப் படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பில்லில் உள்ள சமாச்சாரம் பற்றிப் பேசுங்கள்.

விதி 205-ன் படி, '........துணை மானியக் கோரிக்கை ஒன்றின் அல்லது கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை ஒன்றின் மீதான விவாதம், அதற்குள் அடங்கிய விவரத்திற்குள் மட்டும் இருத்தல் வேண்டும்'. அடுத்து விதி 203-ன் படி,' நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீதான விவாதம், அச் சட்ட முன் வடிவில் குறிக்கப் பெற்ற மானியங்களில் அடங்கியுள்ள பொது முக்கியமான அல்லது நிர்வாகக் கொள்கைகள் பற்றியதாகவும், அவற்றுக்குப் பொருந்தமான மானியக் கோரிக்கைகள் பேரவையின் ஆய்வில் இருக்கும்பொழுது எழுப்பப் பெறாததாகவும் இருத்தல் வேண்டும்'. ஆகவே, நீங்கள் சொன்ன விஷயங்களை ஏற்கெனவே டிஸ்கஸ் செய்தாகிவிட்டது. நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு இப்பொழுது ஆய்விலே இருக்கிறது. அதிலே உள்ளதுபற்றிப் பேசுங்கள்.

Page 8 Grant 18.

அதிலே இரண்டே 'மேட்டர்ஸ்'தான் ரெய்ஸ் ஆகியிருக்கிறது. Medical Allopathy அதைப்பற்றி நீங்கள் பேசவில்லை. Relief Scheme அதைப் பற்றி நீங்கள் பேசவில்லை. Medical படித்ததன் நோக்கமே— நாம் 'ஜெனரலாக'த்தான் விதியைப் கொண்டிருக்கிறோம். இந்த விதியைப் படித்ததன் நோக்கமே, சட்ட முன்வடிவைப் படித்து விட்டு, அதன்மீது ...... வேண்டுமென்பதுதான்.



1983 நவம்பர் 17]

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பெரிய விவாதம் தேவையில்லை. நீங்கள் படித்தது ரூல்ஸ். ஆனால், நடைமுறையிலே, இந்தச் சபையிலே நடந்திருக்கக்கூடிய விவாதத்தை நீங்கள் பார்த்தால் Matters of public importance என்று வரக்கூடியதை, கடைசியாக இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே பேசுகிற வழக்கம் உண்டு. அதிலே பல பிரச்சினைகள் பேசப்பட்டிருக்கின்றன. ஆகவே, ரொம்ப டெக்னிக்கலாகப் போக வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுவரையில் இருப்பதை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நல்ல முன்மாதிரியை நாம் 'ஃபாலோ' பண்ணுவோம். புதிதாக, நல்ல நடைமுறையை நாம் எல்லோரும் சேர்ந்து ஏற்படுத்துவோம். அதனால், scope for discussion வைத்துப் பார்த்தால், நான் குறிப்பிட்ட இரண்டைத் தவிர வேறு பேச முடியாது.

திரு. என். சங்கரய்யா: நீங்கள் இப்படியெல்லாம் வியாக்கியானம் செய்தால் எங்கே வருகிறது என்று நான் சொல்கிறேன். இதுவரை வந்திருக்கிற நிதி ஒதுக்க மசோதா விவாதங்களை எடுத்துக் காட்டட்டுமா? அதிலே என்ன, என்ன விஷயம் வந்திருக்கிறது....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை ஜெனரல் டிஸ்கஷன், டிமான்ட்ஸ் விவாதம் வருகிறபோது சொல்லலாம். இது அப்ரோபிரியேஷன். இதிலே கொடுத்திருப்பதைப் பற்றிப் பேசலாம்.

திரு. என். சங்கரய்யா: நிதி ஒதுக்க மசோதாவில்........

(முற்பகல் 11-20).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே மெடிக்கல் காலேஜா இருக்கிறது? நமக்கு வாய்ப்பு கிடைத்தால் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அது முடியாது.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதற்காகச் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு உடனடியாக பதில் அளிக்க முடியாது என்பதைப் பற்றி; பதில் அளிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லப் போவதில்லை. இங்கே சொல்லக்கூடிய விஷயங்களைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்ற அர்த்தம்தான் அதிலே அடங்கி இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்த போது நான் என்னால் முடிந்த

வரையில் எத்தனை பேர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லி இருக்கிறேன் என்பது மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். ஆனால் நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் இந்த மன்ற உறுப்பினர் ஒருவர் பேசியிருக்கிறார். முதலமைச்சர் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. என்னுடைய கேள்விக்கு பதில் சொல்ல வில்லை என்று பேசியிருக்கிறார்கள். அந்தப் பொதுமக்களுக்கு தெரிவிக்கிற வகையில் இங்கே சில பிரச்னைகளைச் சட்டத்திற்கு உட்படாத வேறு வகையில் புகுத்திவிட்டு நிதியமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டால் நாங்கள் குற்றவாளிகள் என்று ஆகிவிடுமே தவிர, நாங்கள் உண்மையில் குற்றம் செய்யவில்லை ; நாங்கள் தவறு செய்யவில்லை என்பதை நிரூபிப்பதற்கோ, பதில் சொல்வதற்கோ வாய்ப்பு இல்லாமல் போகிறது. நடந்ததை மாற்றிப் பேசுகிறவர்கள் இதை எப்படி பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும், இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் களும் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, அமைச்சர்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்பு உள்ள நிலையில் குற்றச்சாட்டு இருக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆடிட் ரிப்போர்ட்டைப் பற்றி பேசலாமா, கூடாதா ? (கூச்சல், குழப்பம்).

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் சொன்னார்கள். அது பற்றி இங்கே சொல்கிறபோது தான் எனக்குத் தெரியும். அப்படி ஒரு உறுப்பினர் பேசினார் என் றால்................

திரு. துரைமுருகன் : நான் தான் பேசினேன். நான் சொல் கிறேன்.. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி இருக்கிறது. விதிகளைப் பின்பற்ற வேண்டும். நடைமுறைகளைப் பின்பற்றி னால் தான் அவையை சுமுகமாக நடத்த முடியும். நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவின் மீது, பொது விவாதத்தில் பேசுவது போல பேச அனுமதிக்க முடியாது.

திரு. என், சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு பதில் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் சொன்ன எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் அவர்கள் பதில் சொல்ல முடியாது. அவர்கள் சொல்லியிருக்கிற எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் நாங்களும் பதில் சொல்ல முடியாது. ஆகவே



ஒரு வாதத்திலே வரக்கூடிய எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் எல்லாத் தரப்பினர்களும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் வேறு, குற்றச்சாட்டு வேறு. நீங்கள் பெர்சனலாக, டிஸ்பாரிட்டி ரிமார்க்ஸ், டெபர்மேட்டரி ஸ்டேட்மெண்ட் மாதிரி சொல்கிற போது, அதற்கு பதில் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : மருத்துவக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமான குற்றச்சாட்டிற்கு நேற்று பதில் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பற்றிய வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இருக்கின்றன. பதில் இப்போது சொல்ல முடியாது. நீதிமன்றத்தில் அந்த வழக்குகள் இருப்ப தால் தான், இப்போதும் அதுபற்றி பேச வேண்டாம் என்று உங்களுக்குச் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : நீதிமன்றத்திலே சில ஸ்பெசிபிக் பெட்டிஷன்ஸ் இருக்கின்றன. சப்ஜூடிஸ் என்பது அந்தக் குறிப்பிட்ட சப்ஜெக்ட் எங்கே இருக்கிறதோ, —அது கோர்ட் முடிவிற்கு, அந்தக் குறிப்பிட்ட பெட்டிஷன் பேரிலே வருவதை இன்க்லூட் பண்ணக் கூடாது. அந்தப் பெட்டிஷன் இல்லாமல் நேற்று நோ-கான்பிடன்ஸ் மோஷனில் நான் பேசியிருக்கிறேன். ஏனென்றால் நீதிமன்றத்திலே இல்லாத ஒரு பெட்டிஷன். அதிலே என்ன மார்க். என்ன மார்க் என்று நான் கொடுத்திருக்கிறேன். ஹோல் செலக்ஷன் புரசீஜரைச் சொல்லவில்லை. ஆகவே, அதிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற விஷயங்களைப் பற்றிப் பேச லாம். இருக்கின்ற சப்ஜெக்டில் எக்சாம்பிளைப் பேசலாம். எல்லாப் பிரச்னைகளையும் நீதிமன்றத்தில் வைக்க முடியாது. வைக்கவும் இல்லை. நாம் ஏற்கனவே பேசியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மார்க்கைப் பற்றிச் சொல்கிறார்கள். மார்க்கை சேலஞ்ச் செய்து தான் போயிருக்கிறார்கள். எனவே, அது பற்றிய வழக்கு உயர்நீதி மன்றத்தின் முன்னுள்ள போது அதுபற்றி எப்படிப் பேச முடியும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி''யில் 203 (1)-இன்படி ''அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பற்றிய நடைமுறைகள் பேரவைத் தலைவர் அவசியம் எனக் கருதும் மாறுதல்களுடன், பொதுவாக ஏனைய சட்ட முன் வடிவுகளைப் போன்றதாகவே இருத்தல் வேண்டும்'' என்றும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 நவம்பர் 17

203 (2) இன்படி ''நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீதான
விவாதம், அச் சட்ட முன்வடிவில் குறிக்கப் பெற்ற மானியங்களில்
அடங்கியுள்ள பொது முக்கியமான அல்லது நிர்வாகக் கொள்
கைகள் பற்றியதாகவும், அவற்றுக்குப் பொருத்தமான மானியக்
கோரிக்கைகள் பேரவையின் ஆய்வில் இருக்கும்பொழுது எழுப்பப்
பெறாததாகவும் இருத்தல் வேண்டும்'' என்றும் இருக்கிறது.
அதை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள் சுருக்கமாகவும், மேலெழுந்தவாரியாகவும் இதைப்பற்றி
மட்டும் பேசுவது நல்லது.

திரு. துரைமுருகன் : ஒரேயொரு விஷயம். நேற்று நான்
பொதுக் கூட்டத்திலே பேசியதை, ஒரு கேள்விக்குக் கூட பதில்
சொல்லவில்லை என்று நான் பேசியதாக, அதைத்தான் முதல
மைச்சரவர்கள் இங்கே ஒரு உறுப்பினர் பேசினார் என்று
சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே இப்பொழுதும் கேட்கி
றேன். * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்பிக்கை
இல்லாத் தீர்மானம் முடிந்து, வாக்கெடுப்பு முடிந்து விட்டது.
எனவே, இப்பொழுது திரு. துரைமுருகன் கூறியதை அவைக்
குறிப்பில் ஏற்ற வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது மாண்புமிகு
உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒன்றைச் சொல்லி
இருக்கிறார்கள். அந்தப் பிரச்னைக்குள் நான் போகவில்லை.
எனக்கு இருந்த நேரத்தில்—இரண்டரை மணி நேரத்திற்கு மேல்
நிகழ்ச்சி நடந்து முடிந்திருக்கிறது—அதற்கிடையிலே எத்தனை
பேர்களுக்குப் பதில் சொல்ல முடியுமோ அத்தனை பேர்களுக்குக்
கூறியிருக்கிறேன். பெயர்களைக் குறிப்பிட்டும் சொல்லியிருக்கி
றேன். பல பேர் பல கேள்விகளைக் கேட்டிருக்கலாம். ஒவ்
வொருவருக்கும் ஒரு கேள்விக்குப் பதில் என்று வைத்துக்
கொண்டாலும் எத்தனை பேர்களுக்குச் சொல்லியிருப்பேன்
என்பது தெரியும்.

அதிகமாகக் குறிப்பிட்டுக் கேட்கப்பட்ட கேள்வி, பஞ்சாயத்
துத் தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறீர்களே
என்ற மோசமான குற்றச்சாட்டைப் பற்றியதாகும். அதற்கு
மட்டும் குறிப்பிட்டுப் பதில் சொல்லியிருக்கிறேன்.

இதை அங்கே வெளியிட்டு, மற்றக் கேள்விகளுக்குப் பதில்
சொல்ல வில்லை என்று சொல்லியிருந்தால் நான் இப்பொழுது
பேசியிருக்கமாட்டேன். ஆனால், முதலமைச்சரைக் கேட்கின்ற

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின்
ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 நவம்பர் 17] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

கேள்விகளுக்குப் பதில் சொல்வதே இல்லை என்று ஒட்டுமொத்த
மாகச் சொன்னால் அது எந்த விதிக்குள் செல்கிறது என்பது
பேரவைத் துணைத் தலைவரவர்கள் தான் முடிவு செய்ய வேண்
டிய விஷயம். அந்தப் பிரச்னையை நான் இப்பொழுது எடுக்க
வில்லை. வாய்ப்பு, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது எந்த
வகையில் கொண்டு வர வேண்டுமோ அப்பொழுது கொண்டு
வருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மேடையிலே சொன்னால் மேடையிலே பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, இங்கே எனக்குப் பாதுகாப்பு தேவை. ஏனெனில் ஒரு முதலமைச்சர் பதில் சொல்லியிருக்கும் பொழுது பொது மக்களிடம் சட்டமன்றத்தில் பதில் சொல்லவில்லை என்று சொல்வது இந்தச் சட்ட மன்றத்தையே அவமானப்படுத்துவதாக இருக்கும்.

திரு. துரைமுருகன் : என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. இப்பொழுதும் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நடந்த குறிப்பை எடுத்துப் பாருங்கள். திரு. துரைமுருகன் இன்னது பேசியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு அந்தப் பேச்சுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். அது அந்தக் குறிப்பில் இருக்கிறது. ஆகவே, நான் பதில் சொல்ல வில்லை என்று அவர்கள் இப்பொழுதும் சொல்வது என்றால், அது இத்தனை பேர்களையும், சட்டத்தையும் அவர்கள் எந்த விதத்தில் மதிக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. துரைமுருகன் : நான் சொல்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்னமும் நான் சொல்கிறேன், என்னுடைய கேள்விக்குப் பதிலே சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் என்பதைத் துணைத் தலைவரவர்கள்தான் பெற வேண்டும்.

திரு. துரைமுருகன் : அவர் சொல்லிவிட்டார் அல்லவா ? நான் விளக்கம் கொடுப்பதற்கு எனக்கும் வாய்ப்பு கொடுங்கள்.

[திரு. துரைமுருகன்] [1983 நவம்பர் 17

(முற்பகல் 11-30)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எடுத்து இந்த அவையிலே வைத்திருக்கிறேன். ஆனால் பஞ்சாயத்துத் தேர்தலை இந்த அரசு நடத்தவில்லை என்பது இந்த அவையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே கலந்து கொண்டு பேசிய அவ்வளவு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் கருத்து. எனவே அந்தக் கருத்தைத்தான் நானும் சொல்லி இருக்கிறேன்.

* * *

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். திரு. துரைமுருகன் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன் என்று குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறேன். அது குறிப்பேட்டில் இருக்கின்றது. அத்தனை கேள்விகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டும் என்றால் வாய்ப்பு கிடைக்கும் போது சொல்லப்படும். நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன், இந்தக் கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை என்று மேடையிலே அவர் சொல்லி இருந்தால் இந்தப் பேரவையை அவர் மதிக்கிறார் என்று பொருள். ஆனால் அதை மீறி (குறுக்கீடு) இப்போதும் அதையே பேச முனைந்து (குறுக்கீடு) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வர விரும்புகிறாரா என்பது தெரியவில்லை. ஆனால் என்னுடைய கேள்விக்கு முதலமைச்சர் எந்தப் பதிலுமே சொல்லவில்லை என்றால் என்ன அர்த்தம் ? 'திரு. துரைமுருகன் அவர்கள் கேட்ட கேள்வி இது, இதற்கு என்னுடைய பதில் இது' என்று மாதத்தைக் குறிப்பிட்டு ஒரு பெரிய பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொன்னது பற்றி வெளியே சொல்வதற்குத் துணிவு இல்லாமல், பதிலே சொல்லவில்லை என்று சொல்வது நியாயம் இல்லை. பல பேர் கேட்டிருக்கலாம். அவரும் கேட்டிருக்கலாம். ஆனாலும் அந்தப் பதில் மற்றவர்களுக்கும் சேர்த்துத்தான். ஆதி திராவிடர்களைப் பற்றிப் பல பேர் பேசி இருக்கிறார்கள். அதிலே ஒருவர் பேசியதைப் பற்றி நான் 3 மணி நேரம் மட்டுமல்ல, 3 பகுதிகளாகப் பிரித்துச் சொல்லி இருக்கிறேன். எனவே இதையெல்லாம் நான் பேசி இருக்கும் போது எதுவுமே பேசவில்லை என்பது நியாயமல்ல. வருத்தத்தோடு சொல்கிறேன். இது நல்ல முறை அல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல. சபைக்கும் மரியாதையாக இருக்காது. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லோரும் அமருங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். சட்ட

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைங்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 நவம்பர் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

மன்றம் நடந்து கொண்டிருக்கும் போது வெளியே பொதுக் கூட்டத்திலே, இங்கேயுள்ள நிலைமைகளைப்பற்றி விமர்சிப்பது நல்லதல்ல. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சங்கரய்யா அவர்கள் கூறியது போன்று எதிர்க் கட்சித் தரப்பிலே இருந்து பல பேர் பல பிரச்சினைகளைப் பற்றி எழுப்பி இருக்கிறார்கள். குற்றச்சாட்டுகளை எழுப்பி இருக்கிறார்கள். அதைப் போன்று ஆளும் கட்சி தரப்பிலே பேசிய உறுப்பினர்களும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். எழுப்பப்பட்ட அத்தனை பிரச்சினைகளுக்குமே பதில் சொல்லி விட்டோம் என்று நாங்களும் சொல்லவும் இல்லை ; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவ்வாறு சொல்லவில்லை. மேலும் எங்களால் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் அத்தனையும் உங்களுக்குத் திருப்தியை அளித்து விடும் என்று சொல்வதற்கு இல்லை. நீங்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. அதே போல் நீங்கள் சொல்கின்ற கருத்துக்கள் எல்லாம் எங்களுக்கு திருப்தி அளிக்கும் என்றும் சொல்ல முடியாது.

இப்போது இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால். ஒரு கேள்விக்குக் கூட பதில் சொல்லவில்லை என்று அவர் சொன்னது பற்றித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'நான் அத்தனை பிரச்சினைகளுக்கும் பதில் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குப் பதில் சொல்லி இருக்கிறேன்.' என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே பதிலே சொல்லவில்லை என்பதற்கும், பல கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை என்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. அதை உணர வேண்டுமே தவிர இந்த விவாதத்தை நீட்டித்துக் கொண்டு போவது நல்லதல்ல. அதாவது பதிலே சொல்லவில்லை என்று அவர் சொன்னது தவறு என்று சொல்கிறார்களே தவிர வேறல்ல. அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். பலவற்றுக்கு நேரம் இல்லாமல் இருந்திருக்கலாம், அவ்வளவுக்கும் நேரம் எடுத்துக் கொண்டு பதில் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் பதிலே சொல்லவில்லை என்று அவர் சொன்னது தவறு என்பதைத்தான் குறிப்பிடுகிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமே தவிர வேறல்ல. அவர் எழுப்பிய பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்லி விட்டேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. (கூச்சல், குழப்பம்).

**திரு. என். சங்கரய்யா :** நான் ரொம்பப் பணிவோடு கேட்கிறேன். இது பற்றி ஏதாவது சம்பிரதாயம், கன்வென்ஷன் சட்ட மன்றத்தில் இருந்து இருக்கிறதா ?

[1983 நவம்பர் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பல மரபுகள் இருக்கின்றன. பல விதிகள் இருக்கின்றன. விதிகள் மரபுகளுக்கு உட்பட்டுத்தான் நாம் அவையை நடத்துகிறோம். அவ்வப்போது எழும் புதுப் பிரச்சினைகளுக்கு புது மரபுகளும் உருவாக வேண்டியிருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : அப்படியானால் சட்டமன்றம் நடைபெறும் காலத்தில் வெளியில் இதைப் பற்றி எதுவுமே பேசக் கூட முடியாத நிலை ஏற்படும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். கன்வென்ஷன் இருக்கிறதா என்று. இங்கே எதிர்க் கட்சித் தலைவராக கலைஞர் கருணாநிதி இருந்தபோது நான் 9 மணி நேரம் பேசிய போது, அவர்களுக்கு என்று இப்படி கொடுக்கிறீர்களே இது எப்படி நியாயம் என்பது போன்று பிரச்சினை எழுந்தது. நான் அப்போது சொன்னேன். நீங்கள் கேட்டதற்கு பதில் சொல்லவில்லை என்று மக்களிடம் போய் சொல்கிறீர்கள். பதில் சொல்ல முயன்றால் நீங்கள் இத்தனை மணி நேரம் எடுத்துக் கொள்கிறீர்களே என்று குற்றஞ்சாட்டுகிறீர்களே, இது எப்படி நியாயம் என்று கூட கேட்டது இந்தக் குறிப்பிலே இருக்கிறது. ஆகவே, குற்றச்சாட்டு ஏதாவது நியாயம் இருக்குமானால் எங்களுக்கு அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. பதில் சொல்ல வேண்டிய கடமை, பொறுப்பிலே இருக்கும் எங்களுக்கு இருக்கிறது. ஒன்றுமே பதில் இல்லை, எதற்கும் பதில் சொல்லவில்லை என்ற முறையில் வருகிறபோது தான் பிரச்சினை கிளம்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு முதலமைச்சர் கூறியதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். அவருக்கு இருக்கும் மனக் குறையை அவர் சொல்லியிருக்கிறார். அது உங்களுக்கும் தெரியும். ஆனால், நீங்கள் சொல்லியிருக்கும் விஷயம், ஒரு மாதத்திற்கு சட்டமன்றம் நடக்கிறது என்று சொன்னால், பல்வேறு எதிர்க் கட்சிகள் பல்வேறு கோணங்களில் இருப்பதால், சட்ட சபையில் நடக்கக் கூடியவைகளை அவரவர்கள் கோணங்களில் தான் விமர்சிப்பார்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஃபேர் கமெண்ட் என்ற வகையில் இருந்தால் பிரச்சினை எழாது. லெட் இட் நாட் பி அன் ஃபேர் கமெண்ட். அந்தப் பிரச்சினை முடிந்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்).

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் இப்போதும் சொல்கிறேன். ** **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 நவம்பர் 17]

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, அரிசனங்களுக்கு உதவி, மத்திய அரசு எவ்வளவு நிதி உதவி அளிக்கிறது, நாங்கள் எப்படி அதற்கு அதிகமாகச் செலவு செய்கிறோம் என்பதை யெல்லாம் நேற்றைய தினம் புள்ளி விவரத்தோடு சொல்லியிருக்கிறேன். அவர் குறிப்பிட்டதற்குப் பதில் சொல்லவில்லை என்றது சரியல்ல. மற்றவர்கள் குறிப்பிட்டதைப் போல், அவர் குறிப்பிட்டதைப் பற்றியும் நான் சொல்லி இருக்கிறேன். பஞ்சாயத்து தேர்தலைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அரிசனங்கள் விஷயத்தைப் பற்றி மற்றவர்கள் கேட்டதற்கு நான் விளக்கம் தந்து இருக்கிறேன். அவர் இதையும் சேர்த்து இன்னும் தவறு செய்ய நினைக்கிறார் என்று சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. அவர் தவறு செய்யாமல் இருப்பது அவர் கட்சிக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது அவைக்கு மிகவும் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : திரு. துரைமுருகன் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

திரு. என். சங்கரய்யா : திரு. துரைமுருகன் பேசியதை நீக்கினால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்களே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரது குற்றச்சாட்டைத் தான் நீக்கி இருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் சொன்ன குற்றச்சாட்டு 'அவையில் நடந்த ஒன்றை இல்லையென்று சொல்லியிருக்கிறார் ஒரு உறுப்பினர்' என்று சொன்னேன். அவராக எழுந்து, 'அது நான் தான்' என்று சொன்னார். அவரே ஒத்துக் கொண்டுள்ளதால், அது குறித்து நான் சொல்லியுள்ள கருத்துக்கள் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அவைக் குறிப்பைப் பார்த்து, என்னுடைய தீர்ப்பை பின்னால் சொல்கிறேன்.. அது வரையில் இது சம்பந்தமாக யாரும் எதையும் வெளியிட வேண்டாம் என்று உத்தரவிடுகிறேன்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே நீங்கள் அளித்த தீர்ப்பின் படியும், மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்லியபடியும்

நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை ; இங்கே தகவலுக்காகச் சொல்கிறேன். உங்களுக்கு இப்போது அவகாசம் இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் எப்போது வேண்டுமானாலும் பதில் சொல்லலாம்.

எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தமான் தீவிலே இருக்கிற ஒரு தமிழருக்கு மெடிக்கல் சீட் கொடுக்க வேண்டுமென்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் கேரளாவிலே இருந்து அங்கே போய் குடியிருக்கிற ஒருவர் ; அந்தமான் தீவிலே 10 வருஷம் கூட குடியிருக்காதவர். அவருக்கு சீட் கொடுத்திருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது ; எனக்கும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தமிழனுக்கு உரிய கோட்டா என்று அவருக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று கர்நாடகம் மற்ற மாநிலங்களில் இருக்கிற தமிழர்களுக்கு என்று ஏதாவது கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆடிட்டட் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் ? பல்வேறு காரியங்களுக்கு நாம் நிதி ஒதுக்கீடு செய்கிறோம். படித்த பட்டதாரிகள் ஏராளமான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் நிவாரணம் என்று அறிவித்தார்கள். அதற்கு தொகை ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால் 76 இலட்சம் ரூபாய் இன்னும் செலவிடப்படவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் 'அடிக்குவேட் ஸ்டாஃப்' தாசில்தார் ஆபீசில் இல்லை, போதுமான ஆள் இல்லை என்று சொல்கிறார்கள்.

ஏற்கனவே படித்து, வேலையில்லாதவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தாசில்தார் ஆபீசில் ஆள் இல்லை என்று சொல்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கிற படித்த பட்டதாரிகளை அங்கே போட்டு, தகுந்த ஏற்பாடு செய்யலாமே. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கூட குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லும்போது அது சம்பந்தமாக ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று முதலமைச்சர் ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். அந்த சம்பவத்தை நினைவுபடுத்துகிறேன்.

ஒரு குடும்பத்தில் புருஷன், பெண்டாட்டி இரண்டு பேர். இரண்டு பேரும் வேலை பார்க்கிறவர்கள். மனைவி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொன்னதால் குடும்பத்தில் ஒருவர்தானே வேலை பார்க்க



வேண்டும், எப்படி இரண்டு பேர் வேலை பார்க்கலாம் என்று முடிவு செய்து, அந்த ஆசிரிய பெண்மணியை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். குடும்பத்திற்கு இரண்டுபேர் இருக்கக் கூடாது என்று இப்படி தப்பாக அர்த்தம் பண்ணிக்கொண்டார்கள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களே ஒரு கூட்டத்தில் பேசி, தினமணியில் ரிப்போர்ட் வந்திருக்கிறது.

ஆக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் நான் கேட்கிறேன். கிராம அதிகாரிகள் இன்றைக்கு பல பேர் தெருவிலே நிற்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாதா ? இருக்கிற ஆட்களையும் எடுக்காமல் இருக்கக் கூடாதா ? 10,000 போலீஸ்காரர்களை நியமித்தீர்களா ? நான் கேட்கிறேன். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு இருக்கிறதா ? அது மட்டுமல்ல. எஸ். ஐ. செலக்‌ஷன் என்று சொன்னோமே. அவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறதா ? இப்படியெல்லாம் பார்த்தால், தாசில்தார் ஆபிசில் ஸ்டாப்ஃ இல்லை என்று சொல்லிவிட்டு, படித்து வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு 76 இலட்சம் ரூபாய் இன்னும் பட்டுவாடா பண்ணாமல் இருப்பதைக் கண்டித்து, அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தையும் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் இலவசமாக பயணம் பஸ்களிலே செய்கிறார்கள். அதற்கு இன்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் அதாரிட்டி 31,86,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சேங்ஷன் ஆகாததினாலே அந்தத் தொகை சரெண்டர் செய்யப்பட்டது. நான் கேட்கிறேன். நீங்கள் நிர்வாகத் திறமை என்று சொல்கிறீர்களே, இந்தத் தொகையை நீங்கள் சரெண்டர் செய்யலாமா ?

திரு. சி. கோபால் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று சொன்னதைத் தவறான முறையிலே அந்த கருத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு அமைச்சர் பேசும்போது பதில் சொல்வார். உறுப்பினர் தற்போது அமரட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை பற்றி முதல்வர் விள 10—7—1983 தினமணியில் வந்திருக்கிறது.

அடுத்து, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மாணவர்கள் இலவசமாக பஸ்களில் பயணம் செய்வதற்கு இவ்வளவு தொகை கொடுத்தது யார் தெரியுமா? உலக வங்கியிலுள்ள இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் அதாரிட்டி, 3,31,87,000 அதை நீங்கள் சரெண்டர் செய்கிறீர்கள். இது எந்த விதத்திலே நியாயம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, Madras Metropolitan Water Supply and Swerage Board குடிநீர் வழங்கு துறை, மற்றும் கழிவுநீர் அகற்று துறை ஆறாவது திட்டத்திற்காக 1.03 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதைப்போலவே, தொடர்ந்து இம்மீடியட் ஆக வேலைகள் செய்யப்படவேண்டும். உடனடி வேலைத் திட்டத்தின்கீழ் 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. சென்னைக்குக் குடிநீர் உடனடியாக வழங்கப்படுவதற்காக 21.79 ரூபாய் இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால் என்ன சொல்லப்படுகிறது?

The provision could not be utilised—அந்தப் பணத்தை உபயோகப்படுத்த முடியவில்லை. என்ன காரணம்?

Non-finalisation of tender for the new Sixth Plan. ஆறாவது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு டெண்டரிலே பிரச்சினை என்னவென்றால், எதிர்பார்த்தது எப்படியோ. அவர்கள் எதிர்பார்த்ததற்கு தக்கபடி டெண்டர் அமையாத காரணத்தாலே அவ்வளவு பெரிய தொகை சரெண்டர் செய்யப்பட்டது. கேட்டால், தலைசிறந்த நிர்வாகிகளை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்று நீங்கள் பேசுகிறீர்கள்.

அதுமட்டுமல்ல. 150 பிரைமரி ஹெல்த் சென்டர்களை அப்கிரேட் பண்ணவேண்டும். அதற்கு 33 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒருவேலையும் நடைபெறவில்லை. Amount Surrendered. சென்னை மாநகராட்சி கன்சர்வென்சி இம்ப்ருவ்மெண்ட் ஒர்க்குக்காக Madras Urban Development Project அடிப்படையிலே ஒதுக்கப்பட்ட தொகை மொத்தம் ஏறத்தாழ 1 கோடி. ஆனால் அவை கம்ப்ளீட்டாக சரண்டர் பண்ணப் பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. வைகைக் கால்வாயை நவீனப்படுத்துவதற்காக 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒருவேலையும் நடக்கவில்லை. சரண்டர் செய்யப்பட்டது தொகை. அது மட்டுமல்ல. குடகனாறு அணை வேலையை புதுப்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல இரசாயன உரங்கள் Chemical Fertilizers வாங்கி விநியோகிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூ. 1 கோடிக்கு மேலே. அதுவும் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல தக்காவிக் கடன் ரத்து. வரத்துக் கடன் ரத்து



செய்தாகிவிட்டது. இதை அட்ஜெஸ்ட் பண்ணுவதற்காக சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 19,67,57,000. இது இன்னும் பயன்படுத்தப்படாமல் அந்தத் தொகை அப்படியே சேவிங்ஸ்-லே இருக்கிறது. கேட்டால் தலை சிறந்த நிர்வாகம் என்று நீங்கள் பேசுகிறீர்கள்.

(முற்பகல் 11–50)

அது மட்டுமல்ல. கட்டபொம்மன் உங்களுக்குத் தெரியும். கட்டபொம்மன் கோட்டை இப்போது இருளிலே ஆழ்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய டூரிஸ்ட் டிப்பார்ட்மெண்ட்தான் அதைக் கவனிக்கிறது என்று நினைக்கிறேன். என்ன காரணம் என்று கேட்டால் கட்டபொம்மன் எலக்ட்ரிசிட்டி பில் கட்ட வில்லை. வெள்ளைக்காரனை எதிர்த்து வரி கொடுக்க மாட்டேன் என்று சொன்னான். வெள்ளைக்காரன் தூக்கிலே போட்டான். ஆனால் டூரிஸ்ட் டிப்பார்ட்மென்ட், எலக்ட்ரிசிடி பில் கட்டவில்லை என்பதற்காக கட்டபொம்மன் கோட்டையை இருட்டில் ஆழ்த்திவிட்டார்கள். நான் கேட்கிறேன். எலக்ட்ரிசிடி போர்டு, அதுவும் அரசாங்கத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்டது. டூரிஸ்ட் டிப்பார்ட்மென்டும் அரசாங்கத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்டது. கட்டபொம்மனார் எலக்ட்ரிசிடி பில் கட்டவில்லை என்றால் அதற்காக கட்டபொம்மனாரை இருட்டிலே ஆழ்த்துவதா? இந்தச் சர்க்கார் இதுபோன்ற காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது. மின்சார இலாகா இன்றைக்கு பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேசனுக்கு பல இலட்சக்கணக்கான தொகையை நிலுவையாக கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்காக நிலக்கரி கொண்டுவராமல் இருக்கிறீர்களா? ஆகவே இன்றைக்குக் கட்டபொம்மன் உங்களுடைய ஆட்சியிலே இருட்டிலே தவித்துக்கொண்டிருக்கிறார். அவரைக் கொஞ்சம் வெளிச்சத்திற்குக் கொண்டு வர இந்த எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மென்ட் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நுழைவு வரியை ரத்துசெய்துவிட்டேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுபற்றி எதுவும் சொல்ல மறுக்கிறார். கேட்டால் மற்ற மாநிலங்களிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மற்ற மாநிலங்களிலே, இன்றைக்கு ஆந்திராவிலே அங்கே மேல்சபை இல்லை, எடுத்துவிட்டாரா நம்முடைய முதல்வர் என்று கேட்கிறேன். ஆந்திராவிலே கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். ஆந்திராவிலே ராஜ்நர்த்தகி பதவியே எடுக்கப்பட்டுவிட்டது. முதல் அமைச்சர் அவர்கள் எடுக்கத் தயாராக இருக்கிறார்களா? ஆந்திர அமைச்சர் சம்பளம் வேண்டாம், குடிசையிலே இருக்கிறேன் என்று பொட்டை அடித்து. காவி உடை அணிந்து இருக்கிறார்கள். பிற மாநிலத்தில் செய்கிறார்கள் என்பதற்காக நாம் செய்ய முடியுமா?

[திரு. அ. ரகுமான்கான்] [1983 நவம்பர் 17

ஆகவே நுழைவு வரி ரத்து செய்துவிட்டதாகச் சொல்லி இருக்கிறார்கள். ரத்து செய்தால் இங்கே ரிப்பீலிங் ஆக்ட் கொண்டு வந்திருக்கிறார்களா ?

அடுத்து பத்திரிகைச் சட்டம் பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நுழைவு வரியைப் பொறுத்தவரையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறதே தவிர, ரத்து செய்யப்பட்டதாகச் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நுழைவு வரி ரத்து செய்யப்படவில்லை, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமையைச் சொல்லியதற்காக நன்றி,

அடுத்து இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஸ் தேசியமயக் கொள்கை மிக முக்கியமானக் கொள்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக இதே சட்டசபையில் பேசுகிறபோது சொல்லி இருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பேசுகின்றபோது சொன்னதை நான் சொல்லவிரும்புகிறேன். '' வரிகள் போடாமலே நாட்டை ஆளவேண்டும் என்றால், சர்க்காருக்கும், சத்திரம் சாவடிக்கும் வித்தியாசம் இல்லை. ஒரு சர்க்காருக்குள்ள வருமானம் இரண்டு வழிகளில் இருக்க வேண்டும். ஒன்று வரி மூலம். இரண்டாவது வருவாய் தரக்கூடிய விகத்தில் இருக்க வேண்டும். ஆனால் தனியார் கையில் இருக்கிறதே. தனவந்தர்கள் கையில் இருக்கிறதே என்று பற்றோ பாசமோ காட்டக்கூடாது. '' என்று அண்ணா அவர்கள் பஸ்களை தேசியமயமாக்கும் கொள்கையைப் பற்றி வலியுறுத்தி பேசி இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் தனியார்களுக்கு பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இரண்டு பஸ்கள் வைத்திருந்தவர்கள் எல்லாம் இப்போது 9 பஸ்கள் வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு உதாரணத்திற்கு நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். TNV 7544, TDD 7597, TDE 7576, TDE 7799, MDN 925 and TDE 1155. இவைகள் எல்லாம் என்ன பஸ் ரூட்டுக்கள் என்று கேட்டால் அண்ணாவின் பஸ் தேசியமயமாக்குகின்ற கொள்கையிலே நம்பிக்கையிருக்கிறது சர்க்காருக்கு என்று சொல்கிறீர்கள். ஆனால் இரண்டே பஸ் வைத்திருந்த ஒரு நபருக்கு இவ்வளவு ரூட்டுக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. * * குற்றச்சாட்டு சொல்லவில்லை. விளக்கம் கேட்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 நவம்பர் 17]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே நான் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். ஏன் என்றால் ஒரு குற்றச்சாட்டு சொல்லுகின்ற நேரத்தில், இரண்டு நாட்களுக்கு முன்பே அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று (குறுக்கீடு), ஏற்கெனவே தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : அது குற்றச்சாட்டு அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் சபை தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்கிறீர்களா ? இது குற்றச்சாட்டு இல்லாமல் வேறு என்ன ? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்களை மீண்டும் மீண்டும் கேட்கிறேன்.* *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையில் ஒரு குற்றச்சாட்டை சொல்வது என்றால் (குறுக்கீடு) எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும், 2 நாளைக்கு முன்பே அறிவிப்பு கொடுக்க வேண்டும்.

திரு அ. ரகுமான்கான் : சரி, நான் சொன்னதை வேறு பிராப்பர் பார்மிலே சொல்கிறேன். சொல்வதற்கு என்னை அனுமதியுங்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே * * * * நான் எந்தவிதமான குற்றச்சாட்டும் சொல்லவில்லை. ஆனால் அண்ணாவினுடைய தேசியமயக் கொள்கையை பின்பற்ற வேண்டும். ஆனால் இங்கே தனி நபர்களுக்கு ரூட்டுகள் கொடுக்கப்படுகின்ற முறையைப் பார்த்தால், * * * (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுதான் குற்றச்சாட்டு.

திரு. அ. ரகுமான்கான் : சார், நான் அதை சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. துரைமுருகன் : நீங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டால் ..ப்படி ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சாதாரணமாக சொன்னால் பரவாயில்லை. திடீர் என்று அலிகேஷன் சொன் னால் எப்படி ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் பஸ் உரிமையாளர்கள் யார் யாரோ அவர் களுடைய பெயரைச் சொல்லி, ரூட்டைச் சொல்லவேண்டும் மாறாக * * பெயரை இழுக்க வேண்டாம். * பெயரைத்தான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : நாவலர் சொன்னமாதிரி. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரை முருகன் உட்கார வேண்டும். திரு. ரகுமான்கான் அவர்களின் குற்றச்சாட்டும், அதையொட்டி எழுந்த விவாதமும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது அப்ரோப் பிரியேஷன் பில். பில்லிலே பேசுங்கள். எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அனுமதிக்க முடியாது. அமருங்கள். ( குறுக்கீடு ) நீங்கள் பேசுவதெல்லாம் அப்பிரியேஷன் பில்லிலே வராது. (குறுக்கீடு) பொதுவாகப் பேசலாம் என்று சொல்கிறீர்கள். அப்படிப் பேச முடியாது. இதை ஒரு பொதுக்கூட்டம் மாதிரி ஆக்கிவிடக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : மந்திரிகள் சொத்துக் கணக்கு காட்ட வேண்டும் என்பது சட்டம் இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அப்ரோப் பிரியேஷனிலே வராது. அரசாங்க நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு களுக்கு அப்பாற்பட்டு வேறு எதையாவது பேசினால் — யார் பேசினாலும் — அவைகள் எல்லாம் நீக்கப்படும், அவைக் குறிப்பிலேயிருந்து, என்று சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு பேசப்படுபவை எல்லாம் அவைக் குறிப்பிலே இடம் பெறாது. (குறுக்கீடு) நான் எல்லோருக்கும் தான் சொல்கிறேன். திரு. ரகுமான்கானுக்கு மட்டும் அல்ல. (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.





இவை எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. பேரவை விதி களுக்கு உட்பட்டு திரு. ரகுமான்கான் பேசவேண்டும்.

(நண்பகல் 12-00)

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த வீரர்களுக்கு ஏற்கெனவே டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே ஒரு தொகை கொடுக்கப்பட்டது. அதுபற்றி சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகு அகில இந்திய அ.தி.மு.க. ஆட்சியிலே வேறு வகையில் இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மாதம் 150 ரூபாய் கொடுக்கலாம் என்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதுவரையில் அது கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என்ன ஆயிற்று, என்ன காரணம் என்பதை நாவலர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற விஷயம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கு. ரா ணா : தலைவர் அவர்களே, இந்த அப்ரோப்ரி யேஷன் பில்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே நாம் சொல்கிற காலத்திலே முக்கியமான சில விஷயங்கள் கூறப் பட்டுள்ளன. பஞ்சாலைத் தொழிலிலே ஏற்பட்டு இருக்கும்படி யான நெருக்கடி தீவிரப்படுத்தப்பட்டுக் கொண்டே போகிறது. அதற்கான குறிப்பான நடவடிக்கை எதுவும் இல்லை. உதாரண மாக கோவை மாவட்டத்திலே பல பஞ்சாலைகள் மூடப் பட்டும் பல பஞ்சாலைகள் நலிவுற்ற நிலையில் இருப்பதும் பற்றி எடுத்துச் சொன்னோம். இவையெல்லாம் அப்ரோப்ரியேஷன் பில்லுக்கு உட்பட்டவைதான். எஸ்.ஆர்.சி. மில் இன்னும் மூடப்பட்டுத்தான் இருக்கிறது, திறக்கப்படவில்லை. சிங்க நல்லூர் ஜனார்த்தனா மில் திறக்கப்பட எந்த நடவடிக்கையும் இல்லை, வசந்தா மில் மூடப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்லும் மூடப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் திறக்கும் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை, பல பஞ்சாலைகள் மூடப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டியும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை, இதை நான் அரசுக்கு எடுத்துக்காட்ட விரும்பு கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

அதே மாதிரி குமரி மாவட்டத்திலே ரப்பர் தோட்டங்களிலே உள்ள தொழிலாளர்கள் போராடினார்கள். அவர்களுக்கு டி.ஏ. மறுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கிறவர்களுக்கு—தனியார் ரப்பர் தோட்டங்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு டி.ஏ. நிறுத்தப்பட்டாலோ, குறைத்தாலோ--நாங்களும் அப்படிச் செய்வோம் என்று அரசும் அந்த முறையைக் கையாளுகிற முறை தப்பானது, உடனே அது திருத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட தவறுகளுக்கு இடம் இல்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

1982 ஆம் ஆண்டுக்கு நான்கு மாத கால போனஸ் மேட்டுப் பாளையம் விஸ்கோஸ் தொழிலாளர்களுக்கு — 2,500 பேர்கள் இருக்கிறார்கள் — கொடுக்கப்படவில்லை. இன்னும் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. 34 சதவீதம் போனஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னபிறகு கூட கணக்குத் தீர்த்து போன தீபாவளிக்குக்கூட போனஸைக் கொடுக்கவில்லை. கொடுக்க வேண்டியதைக் கூட இதுவரையில் கொடுக்கவில்லை. 12 (3)ன் படி போட்ட ஒப்பந்தத்தை அந்த நிர்வாகம் மீறியிருக்கிறது. அரசாங்கம் சட்டப்படி அந்த மீறிய குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வருடமும் தீபாவளிக்கு அந்த நிர்வாகம் போனஸ் கொடுக்கவில்லை. அவர்களுக்கு இப்படி போனஸ் கொடுக்கவில்லையென்பது மிகப் பெரிய வேதனைக்குரிய விஷயமாகும். லேபர் கமிஷனர் குறைந்தபட்ச கூலி சட்டப்படி கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை கூறியும் அதை நிர்வாகம் நிராகரித்துவிட்டது. அந்த நிர்வாகத்தைப் பற்றித்தான் இங்கே பலவிதமான பேச்சுக்கள் நடந்தன. அது தலைவர் அவர்களுக்குத் தெரியும். கைத்தறி நெசவாளர்களுக்கு சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படவில்லை. மதுரை போன்ற இடங்களிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதற்காகப் போராடினார்கள். சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டபடி கூலி கொடுக்கப்படாமல் தொழிலாளர் நல இலாகா உள்பட, அதிகாரிகள் உள்பட குறைவான கூலிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இது மிகவும் தவறானது. இது நிறுத்தப்படவேண்டும். இந்தக் கைத்தறி தொழிலாளர்களுக்கு வந்த நிலையே பவர் லூம் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டு வேலைக்குத் தகுந்த சம்பளம் இல்லாமல் சம்பளத்தைக் குறைக்க ஆரம்பித்தார்கள்.

அதே மாதிரி இன்றைக்கு மிகவும் கஷ்டமான நிலையில் பொது விநியோக முறையில் அரிசி குறைவு குறித்து அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டப்பட்டது. அரிசி கிடைக்காத கஷ்டத்தை எல்லாம் அரசு சுட்டிக் காட்டியது. ஆனாலும் 2 கிலோவில் இருந்து 8 கிலோ வரைக்கும் பல அளவில் இன்றைக்கு அரிசி





கொடுக்கப்படுகிறது. விலை ஏறிக் கொண்டு இருப்பதால் ஏழை எளிய மக்கள் லட்சக்கணக்கான மக்கள், 10 லட்சம் மக்கள் அரிசி வாங்க முடியாமல் திணறும்படியான நிலை இருக்கிறது. இதற்கு உடனடியாக பரிகாரம் காணவேண்டும். அரிசியின் அளவை அதிகப்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் விளைவாக வெளி மார்க்கெட்டில் விலை மேலும் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. இதற்கு இந்த அரசுக்கு மற்றொரு யோசனையை வைக்க விரும்புகிறேன். காய்கறிகளின் பயங்கரமான விலை ஏற்றத்தினால் சாதாரண ஏழை மத்திய தர மக்கள் உட்பட இன்றைக்குக் காய்கறி வாங்கி சாப்பிட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அரசு 20 பண்டங்கள் வரை கொடுக்க வேண்டும் என்று உணவு அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் கூடியது எடுத்துக் காட்டியிருப்பதால் இங்கே தமிழ்நாட்டில் அத்தனை ஐட்டங்கள் கொடுப்பது இல்லை. 4, 5 ஐட்டங்களுக்கு மேல் கொடுப்பது இல்லை. காய்கறிகளை அவர்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்தால் ஜனங்களுக்கும் விலை குறையும், விவசாயிகளிடத்தில் அதற்கு நியாய விலை கொடுத்து வாங்கவும் முடியும். இன்றைக்கு விவசாயிகளும் கொள்ளை அடிக்கப்படுகிறார்கள். நகரத்தில் இருக்கக் கூடிய மக்களும் கொள்ளை அடிக்கப்படுகிறார்கள். ஆகவே அரசு காய்கறி விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வறட்சி நிவாரணப் பணிகள் எல்லாம் இப்போது நிறுத்தப் பட்டுவிட்டன. ஏற்கெனவே நடைபெற்ற வேலைகளில் எவை எல்லாம் செய்யப்படாமல் பாக்கி இருக்கின்றனவோ அத்தனையையும் செய்து முடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள், ஆதிவாசிகள், பிற்பட்ட மக்களுடைய பிரச்சனை. அதிலே ஆதிவாசி மக்கள் நீலகிரி மலையிலே பல லட்சக்கணக்கானவர்கள் கொத்தடிமைகளாக இருந்தார்கள். அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய பெயர்கள் முழுவதையும் அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகள் பதியவில்லை. அப்படி பதியாதது பெருந் தவறு. அதனால் இன்றைக்கு அவர்கள் மேலும் அடிமைகளாக இருக்கும்படியான நிலை இருக்கிறது. அதே போல் அவர்களுக்கு, விடுவிக்கப்பட்டவர்களுக்கு ஒரு அடிமைத் தனம் சில அரசு அதிகாரிகளாலே இன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. உதாரணமாக கூடலூர் தாலுகாவில் இருக்கும்படியான எருமாடு பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் அங்கே விடுவிக்கப்பட்ட ஆதிவாசிகளுக்கு 104 ஏக்கர் அரசு நிலத்தில் பண்ணை ஏற்படுத்தப்பட்டு, பண்ணையில் வேலை செய்யக்கூடிய விடுவிக்கப்பட்ட ஆதிவாசி மக்களுக்கு சட்டப்படி கூலி கொடுப்பது இல்லை. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலுக்கு அளவு சரியாக கொடுக்கப்படாமல் திருடப்படுகிறது. அதை எதிர்த்துப் பேசுவதற்கு, கேட்பதற்கு உரிமை இல்லை. கேட்ட ஆதிவாசிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாக்கியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக

[திரு. கு. ரமணி] [1983 நவம்பர் 17

நீலகிரி மாவட்ட கலெக்டருக்கு நானே ரிப்போர்ட் செய்தேன். அதற்கு அவர் எனக்கு பதில் கொடுத்து இருக்கிறார், நடவடிக்கை எடுக்கப்படும் என்று. ஆனால் நடவடிக்கை இல்லை. ஆதிவாசிகள் நிலைமை அப்படி இருக்கிறது.

அதே சமயத்தில் சத்துணவு மையத்தில், நீலகிரி மாவட்டத்தில் மானார் பகுதியில் இருக்கக் கூடிய ஆதிவாசிகள் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் சத்துணவு வழங்குவதற்காக உதவியாளராக இருக்கிற சுசீலா என்ற பெண்ணை ஒரு ரவுடி தாக்கியிருக்கிறார். அந்த அம்மாவுக்கு காயம்பட்டு மேட்டுப்பாளையம் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்தும் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் இந்தச் சத்துணவு திட்டத்தில் வேலை செய்யக்கூடியவர்கள் எல்லாம் தாக்கப்படுவது என்றால் அது சகிக்க முடியாத நிலை. இதற்கு கூட காவல் துறை பாதுகாப்பு இல்லை என்று சொன்னால் என்ன நிலை ஏற்படும். பெண்களே அந்த மாதிரி தாக்கப்படுகிறார்கள். அந்த அம்மா தாக்கப்பட்டதற்கு காரணம் அந்தச் சத்துணவு மையத்திலிருந்து அரிசி, பருப்பு, எண்ணெய் எடுத்து அந்த ரவுடி முத்து என்ற ஆளுக்கு இதை விற்க வேண்டும் என்று, அவர் மேல் பல கிரிமினல் கேஸ்கள் நடந்து இருக்கின்றன. அவருக்குக் கொடுக்க மறுத்ததால் இந்த மாதிரி தாக்கப்பட்டிருக்கிறார். இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட காரியத்தில் அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அரசாங்கம் கோரிய பணத்தை எவ்வளவு வித்தியாசம் இருந்தபோதிலும் நாம் இங்கே சேங்ஷன் செய்து கொடுக்கிறோம். ஆனால் மக்களுடைய இந்தக் காரியங்களில் அவர்கள் அக்கரை எடுத்து கொள்ளவேண்டும்.

(பிற்பகல் 12-10)

அதே சமயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பத்திரிகைத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்தில் ஏற்கெனவே கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தச் சட்டம் செத்துப் போய்விட்டது என்று குறிப்பிட்டார்கள். சட்டம் தனியாக சாகாது. அந்தச் சட்டத்தை நீங்கள் பயன்படுத்தா விட்டாலும் அந்தச் சட்டம் செத்து விடாது. அந்தச் சட்டத்தை ரீப்பில் பண்ணுவதற்குச் சட்டத்தை இங்கே கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும். அதிலே நம்முடைய கோரிக்கை என்னவென்றால், அந்த 292 (ஏ) என்ற சட்டப்பிரிவை எடுத்துவிட வேண்டும். அதற்குப் பதிலாக இப்பொழுது நாம் என்ன கேள்விப் படுகிறோமென்றால், அரசாங்க வக்கீலே அண்மையிலே ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னாலே கோர்ட்டிலே பேசும்பொழுது அந்தப் பத்திரிகைத் தடைச் சட்டத்தை எடுத்துவிடுவதற்குப் பதிலாக, அதிலே இன்னும் ஒரு திருத்தம் செய்யப் போவதாக பேசிய விவரங்கள் வந்திருக்கின்றன. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அந்த 292 (ஏ) பிரிவை எடுத்துவிட வேண்டும்.



1983 நவம்பர் 17] [திரு. கு. ரமணி]

எந்த காரணத்தைக் கொண்டும் பத்திரிகைத் தடைச் சட்டம் என்பது ஒரு நிமிஷம்கூட சட்டப் புத்தகத்திலே இருக்கக் கூடாது. அதற்கு நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது உறுதியான உத்தரவாதத்தை, பதிலைக் கொடுப்பார் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

அதே மாதிரி பஸ் தேசியமயம்பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசும்பொழுது கூட குறிப்பிட்டார்கள். தேசியமயக் கொள்கை இந்த அரசாங்கத்தின் கொள்கைதான் என்று ஆரம்பத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். ஆனால், இப்போழுது முதலமைச்சர் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், கிராமத்தில் இருக்கின்ற மக்களுடைய நன்மையை முதலில் பேணிப்பாதுகாப்பது எங்களுடைய பிரதான கொள்கையாக கடமையாக இருக்கிறது என்று, வங்காளத்தைச் சுட்டிகாட்டினார். வங்காளத்திலே, ஆரம்பத்திலே பஸ் தேசியமயக் கொள்கையை தேர்தல் சமயத்திலே மக்கள் மத்தியிலே வைத்து ஆட்சிக்கு வரவில்லை. அந்த விஷயத்தை தேர்தல் சமயத்திலே கொண்டுவரவில்லை. கிராம மக்களுக்கு நிலம் இல்லை. ஆகவே, 12 இலட்சம் ஏக்கர் நிலத்தை கிராம மக்களுக்குக் கொடுக்கும்படியான ஒரு மிகப் பெரிய சாதனையை இந்திய நாட்டிலே முதன் முதல் சாதித்துள்ள அரசு அது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு முதலுரிமை கொடுத்ததால், பஸ் தேசிய மயத்திற்கான முழு நிதியும் டைவர்ட் செய்கிற நிலைமை ஏற்பட்டது. முன்னாலேயே, மக்களிடம் தேசியமயமாக்குகிறோம் என்று சொல்லி செய்யப்பட்ட ஏற்பாடல்ல. ஆனால் இங்கே நிலைமை அப்படி அல்ல. இங்கே அந்த மாதிரி வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். பல ரூட்டுகளை தேசியமாக்கியிருக்கிறோம். தேசிய மயமாக்கி இருக்கின்ற பஸ்கள் அதிகம் இருக்கின்றன. அப்படியிருக்கும் போது இப்பொழுது திடீரென்று இவ்வாறு தெரிவிப்பது ஆரம்பத்தில் வைத்த கொள்கைக்கு மாறுபட்டதாக இருக்கிறது, அந்த நிலை கூடாது ; கோர்ட்டுகளிலே சொன்னதற்கு ஒத்து வராத நிலையிருக்கிறது என்பதை அரசு கவனித்து, தேசிய மயக் கொள்கையிலே அரசு உறுதியாக இருக்கிறதா, இல்லையா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரியாக, போலீஸ் நடவடிக்கைகளிலே இருக்கும்படியான ஏராளமான தவறுகள். அவர்களுடைய நடவடிக்கைகளிலே ஏராளமான குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. அவையும்கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்பொழுது புள்ளி விவரத்தோடு வைக்கப்பட்டன. அவை அத்தனையும் உண்மையா, இல்லையா என்பது வேறு பிரச்சினை. அந்தக் கேள்வி இரண்டு பக்கத்திலும் எழுகிறது. ஆனால், அதற்குப் பல்வேறு விதமான பதில்கள் எதிர்பார்க்கப்பட்டன. அந்தப் பதில்கள் பலவும் வரவில்லையென்பதை எடுத்துக் காட்டுகிறேன்.

[திரு. கு. ரமணி] [1983 நவம்பர் 1

இராமநாதபுரத்திலே, மைனாரிட்டி மக்கள் மீது குறிப்பாக
முஸ்லிம்கள் மீது போலீசார் பலவிதமான தவறான வழக்குகளைப்
போட்டிருக்கிறார்கள். குண்டா சட்டத்தின் கீழ் அங்கே இருக்கும்
படியான முஸ்லீம்கள் மதத் தலைவர்களது வக்கீல்கள் போன்ற
வர்களைக் கூட கைது செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிடு
கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது என்றால் அது
எப்படிப்பட்ட மோசமான இடத்திற்குக் கொண்டு செல்லும்,
ஆகவே காவல் துறையினுடைய அப்படிப்பட்ட நடவடிக்கைகளை
அரசு கட்டுப்படுத்தி அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும்.
மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும்.
அது இல்லையென்றால், அப்புறம் வகுப்புக் கலவரத்தைத்
தடுக்க வேண்டும், சமாதானம் வேண்டும், சனநாயக முறையில்
ஆட்சி முறை இருக்க வேண்டுமென்றெல்லாம் நாம் சொல்வதில்
அர்த்தமே இல்லாமல் போய்விடும். அந்த நிலை ஏற்பட்டுவிடும்.

அதே மாதிரி தொழிலாளர்கள் மீதும் காவல்துறை பலவித
மான வழக்குகளைப் போடுகிறது. எதை எடுத்தாலும் 307
செக்ஷன் கீழே வழக்கு போடுகிற நிலைமை ஏற்படுகிறது. அது
தவறு என்பதை எடுத்துக் காட்டி எத்தனையோ வாதாடினாலும்,
கோர்ட்டிலே எடுத்துக் காட்டினாலுங்கூட, அதிலே காவல்
துறையினர் வழக்குகளுக்கு எதிராக கோர்ட்டு தீர்ப்புகள் வந்த
பொழுதுகூட, அந்த முறையைக் காவல் துறையினர் கைவிட
மறுக்கிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்கும் உழைப்பாளி
மக்களுக்கும் அவர்களுடைய சங்கங்களுக்கும் காவல் துறையின
ருடைய நடவடிக்கையால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை
இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டாக வேண்டும். இதை
மாதிரி இருக்கும்படியான பல்வேறு விஷயங்களை அரசு உடனடி
யாக தகுந்த நடவடிக்கை எடுத்து கவனித்து, வெளியிலே உள்ள
மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

அதே மாதிரி கன்னியாகுமரி மாவட்டத்திலே பல்லிக்கூடம்
என்ற இடத்திலே ஒரு அணை கட்டுவது சம்பந்தமாக 1978-லே
இருந்தே ஆய்வில் இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது என்று
தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். அந்த நிலையைக்
கொஞ்சம் மாற்றி சீக்கிரத்திலே அணை கட்டித்தர வேண்டும்.
பல விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு மட்டுமல்ல, குடி தண்ணீர்
உட்பட பலவிதமான காரியங்களுக்கு அது பயன்படுகிறது.
ஆகவே, அப்படிப்பட்ட திட்டங்களையும் அரசு உடனடியாகக்
கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த முறையிலே இவைகளை
நடத்தி அரசு கேட்கக்கூடிய பணத்தை பெறுவது, அதன் மூலமாக
மக்களுக்கு நிறைவு ஏற்படுத்துவதற்கும், பிரச்சினைகளை தீர்ப்ப
தற்காகவுமாக அது இருக்க வேண்டுமென்ற உணர்வோடு காரியங்
கள் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.
வணக்கம்.



1983 நவம்பர் 17]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, 1983 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு சட்டமுன்
வடிவு சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு
சில கருத்துக்களை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவை
மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடிய பகுதிகளில், சில பகுதி
கள் மட்டும் நீர்ப்பாசன பிடிப்புள்ள பகுதிகளாகவும், பல்லடம்,
அவிநாசி, தொண்டாமுத்தூர் போன்ற பகுதிகள் எல்லாம்
எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாமல் இருக்கின்ற சூழ்
நிலை இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இப்
போது வறட்சி அங்கே நிலவிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில்
ஓரளவிற்கு மழை பெய்து இருந்தாலும் கூட கோவை மாவட்டத்
தில் அவிநாசி, தொண்டாமுத்தூர் பல்லடம் ஆகிய பகுதிகளில்
சரிவர மழை பெய்யாத சூழ்நிலை இருக்கிறது. இது மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். இந்த நிலையில் வறட்சி
நிவாரணப் பணிகளை எடுத்துச் செய்வது செப்டம்பர் 30-ந்
தேதியுடன் நிறுத்திவிட்டதாக அரசு அறிவித்திருக்கின்றது. எங்
களுடைய மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து
நடைபெறச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருகக்கிறேன். வறட்சி நிவாரணப்
பணிகளை நிறுத்திவிட்ட காரணத்தால் விவசாயத் தொழிலாளர்
களுக்கு வேலை கிடைக்காதது மட்டுமல்லாமல் அதே நேரத்தில்
விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.
மழை இல்லை; வறட்சி கடுமையாக இருந்து கொண்ருக்கிற இந்த
நேரத்தில் அரசாங்கம் கொடுக்கிற மின்சாரத்தை இரவு வேளை
யில் தான் கொடுக்கிறார்கள். இதனால் கிணறுகளில் இருக்கக்
கூடிய தண்ணீரை அவர்களால் எடுக்க முடியாத சூழ்நிலை,
அவல நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. எனவே தமிழகம்
முழுவதிலும் இருக்கிற விவசாயிகள் பயன்பெறுகின்ற முறையில்
இரவு வேளையில் கொடுக்கிற மின்சாரத்தை பகல் வேளையில்
கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி
நிவாரணப் பணிகளை எடுத்துச் செய்வதை நிறுத்தியிருப்பதை
மறுபரிசீலனை செய்து, மேலும் டிசம்பர் மாதம் முடிய
தொடர்ந்து நடைபெறுவதற்கான உத்தரவை தமிழக அரசு
பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி
நிவாரணப் பணிகளை எடுத்துச் செய்கிற நிலையில், சாலை
போடுதல், குளம் குட்டைகளை ஆழப்படுத்துதல் இவைகளைப்
போன்ற பணிகளை செய்கிற இந்த நேரத்தில் கிராமப்புறங்களில்
இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை
உருவாக்கி கொடுப்பதோடு மட்டுமல்லாமல், வேலையில்லாமல்
இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை
மேலும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அந்தப் பணியை
தொடர்ந்து நடத்துவீர்களானால் கோவை மாவட்டத்தில்
இருக்கிற குடிநீர் பஞ்சத்தை கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு
தீர்க்க முடியுமென்று நான் கருதுகிறேன். எனவே இப்போது
மழை பெய்து விட்டது ; ஆகவே எல்லா கிராமங்களிலும் தண்ணீர்
இருக்கிறது என்ற முடிவிற்கு அரசு வருமேயானால் அது தவறு.

[திரு. எம். ஆறுமுகம்] [1983 நவம்பர் 17

என்னுடைய தொகுதியிலே கூட கிணறுகளில் தண்ணீர் இல்லை. சரிவர மழை பெய்யாததால் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டி யிருக்கிறது. குளங்களை ஆழப்படுத்த வேண்டியிருக்கிறது என்ற நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துச் செய்வதை செப்டம்பரோடு நிறுத்துவதை மீண்டும் மறுபரிசீலனை செய்து, இந்தப் பணிகளை தொடர்ந்து டிசம்பர் வரையில் நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில், குறிப்பாக என்னுடைய தொகுதியான அவிநாசி பகுதியில் விவசாயிகளுக்கு கிணறுகளை அடிவெட்டுவதற்கு லோன் கொடுப்பதற்கு தடை விதித்திருப்பதாக கேள்விப்பட்டேன். ஆகவே இருக்கிற சூழ் நிலையில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அடிவெட்டு லோன் கிடைப்பதற்கும், அரசு மறுபரிசீலனை செய்து, கோவை மாவட்டத்திலிருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் பயன் கிடைக்கிற வகையில் இதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அடுத்து விவசாயிகள் வாங்கி யிருக்கிற கடன் ; வறட்சி கடுமையாக இருக்கிற இந்த நேரத்திலே அவைகளை வசூலிப்பதிலே அரசாங்கம் கெடுபிடி காட்டக்கூடாது. வாங்கியுள்ள கடன்களை வசூலிப்பதற்கு, பின்னாலே நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, அனைத்துக் கட்சிகளும் எடுக்கிற முடிவு களின் அடிப்படையில் வசூல் செய்யலாம் என்று சொல்லி இந்த வசூல் கெடுபிடிகளை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பல்வேறு சிறு பாசனத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களெல்லாம் இப்பொழுது எந்த நிலையில் இருக்கின்றன என்பது தெரிய வில்லை.

(பிற்பகல் 12-20)

சின்ன வேடம்பட்டி நீர்த் தேக்கத் திட்டம் பற்றி பதினைந்து ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. 3.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ள திட்டம் அது. ஆனால் இப்பொழுதும் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. அது பற்றிய ஆய்வு நடவடிக்கைகளிலே இருக்கிறது என்று அமைச் சரவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஆய்வு நடவடிக்கைகளிலேயே பதினைந்து ஆண்டுகள் தாமதப்படு மானால் நிச்சயமாக அது விவசாயிகளுக்குப் பயன்படாமல் போய்விடக் கூடும். எனவே, கோவை மாவட்டத்தில் உள்ள



983 நவம்பர் 17] [திரு. எம் ஆறுமுகம்]

இந்த சின்ன வேடம்பட்டி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆய்வுத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை விரைவில் நடை முறைக்குக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணி குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் நவம்பர், டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையாகக் குடிநீர் சப்ளை செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அணை கட்டி முடிக்கப் பட்டும்கூட கோவை மாவட்டத்திலுள்ள காப்பரேஷனுக்கு, உட்பட்டிருக்கும் சுமார் ஏழரை இலட்சம் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு முழுமையாகக் குடிநீர்த் திட்டம் அமலுக்கு வர வில்லை. அப்படிப்பட்ட நிலையை நீக்குவதற்கு அரசு நட வடிக்கையெடுக்க வேண்டும். அந்தப் பகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லப் படுகின்ற எச்.ஏ.டி.பி., மற்றும் மேற்கு மலைத் தொடர்ச்சி மேம் பாட்டுத்திட்டம் ஆகிய இந்த இரண்டு திட்டங்களுமே மத்திய அரசின் உதவியோடு செய்யப்படுவதாகக் கருதுகிறேன். இந்த இரண்டு திட்டங்களுக்கும் மத்திய அரசின் உதவியைத் தமிழக அரசு பெற்றிருக்கிறதா? அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக் கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. எனவே, மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தையும், மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தையும் மத்திய அரசின் உதவி யோடு செய்வதற்குத் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் பெருக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஈரோட் டிற்கு முன்பே கோவை மாவட்டத்தில் போடப்பட்ட திட்டமாக இருக்கிறது. கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படக் கூடிய அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ? அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா இல்லையா ? கோவை மாவட்டத்தில் எத்தனை பகுதிகளில் பால் பெருக்கத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதோடு, பால் பெருக்கத் திட்டத்தைக் கோவை மாவட்டம் முழுவதும் கொண்டு வந்து அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தைப் பகல் நேரத் தில் கொடுத்தால் அது விவசாயிகளுக்குப் பயன்பட முடியும். அப்படியில்லாமல் இரவு நேரத்தில் கொடுப்பதால் விவசாயிகள் பயன்பெற முடியவில்லை. பகல் நேரத்தில் எட்டு மணி நேரம் முழுமையாக மின்சாரம் கொடுத்தால் நல்லது.

[திரு. எம் ஆறுமுகம்] [1983 நவம்பர் 17

என்னுடைய தொகுதியாகிய அவினாசியில் உள்ள பிரைமரி ஹெல்த் சென்டரில் சாதாரண ஏழைகளுக்குக்கூட மருந்துகள் கொடுப்பதில்லை. எனவே, அவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்கும் வகையில் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மருந்துகள் உடனடியாகக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருந்து இல்லை என்ற புகார் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோழர் ரமணி அவர்கள் சொல்லியதைப்போல, கோவை மாவட்டம் பஞ்சாலைகள் நிரம்பியிருக்கக் கூடிய பெரிய மாவட்டமாகும். ஆனால் பல தொழிற்சாலைகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன. எஸ்.ஆர்.சி. மில் சுமார் ஒன்றரை ஆண்டுக் காலமாக மூடப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் கிட்டத்தட்ட நான்காண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. கோவையிலுள்ள காளப்பட்டி பத்மா மில் ஐந்தாண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அதே போன்று புதுக்கோட்டையிலுள்ள காவேரி ஸ்பின்னிங் மில்லை மூடுகின்ற அபாயம் இருக்கிறது.

இந்த அரசின் கொள்கை, மாரட்டோரியம் ஆக்டின்கீழ் எடுத்து ஓராண்டு, ஈராண்டுகளுக்குப் பிறகு அவைகளைத் தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கொடுப்பது என்கிற நிலையைக் கைவிட வேண்டும். அரசே வங்கியின் உதவியோடு இலாபத்தில் கொண்டு வந்தபிறகு தனியாரிடம் கொடுக்கின்ற கொள்கையை இந்த அரசு கைவிட வேண்டும்.

கோவை மாவட்டத்தில் உள்ள எஸ்.ஆர்.சி. மில், ஜனார்த்தனா, வசந்தா, பத்மா, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், புதுக்கோட்டையிலுள்ள காவேரி ஸ்பின்னிங் மில் போன்ற மில்களைத் தமிழ்நாடு நூற்பாலைக் கழகமே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திலுள்ள சின்கோனாத் தோட்டத் தொழிலாளர் சம்பளம் பற்றிய பிரச்னையை எடுத்துக் கொண்டால், தனியார் தேயிலைத் தோட்டங்களில் கொடுக்கப்படும் சம்பளம் நாள் ஒன்றுக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் 14 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அரசு நடத்தும் விலை உயர்ந்த மருந்துகளைத் தயாரிக்கும் சின்கோனாத் தோட்டத்தில் வேலைபார்க்கின்ற தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ஏழு ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரையில் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகளை மாற்றி தனியார் கொடுப்பதைப்போல சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு 14 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். 1965ஆம் ஆண்டிலே இருந்து இருக்கக் கூடிய போனஸ் சட்டப்படி குறைந்தபட்ச போனஸ் கொடுக்கப்



983 நவம்பர் 17] [திரு. எம் ஆறுமுகம்]

பட வேண்டும் என்ற சட்டத்தை சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அமல் நடத்தவில்லை. எனவே அந்த போனஸ் சட்டப்படி போனஸ் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பல்வேறு சட்டங்களை இந்தச் சட்டமன்றத்திலே சட்டமாகக் கொண்டுவந்திருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் சட்டத்திற்கு உச்சநீதிமன்றத்திலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள், மதுரை போன்ற மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள் நடக்கின்றன. அரசாங்கம் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டங்களையே அமல் நடத்தாமல் இருக்கின்ற மாஸ்டர் வீவர்களுக்கு அரசாங்கமே உதவியாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே நீங்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தை அமல்நடத்த வேண்டும் என்றும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாண்டுகளில் தொழிலாளர்கள் 480 நாட்கள் பணி புரிந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு நிச்சயமாக பணிப் பாதுகாப்பு செய்ய வேண்டும் என்ற சட்டத்தை மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதே சட்டமன்றத்திலேயே கொண்டு வந்தார்கள். ஆனால் கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பஞ்சாலைகளில் 10 ஆண்டுக்காலம், 12 ஆண்டுக்காலமாக வேலைசெய்யக்கூடிய பஞ்சாலைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் நீங்கள் கொண்டு வந்த சட்டம் அமல்படுத்தப்படவில்லை. மேலும் பல பெரிய தொழிற்சாலைகளில் இன்ஜினியரிங் தொழிலாளர்களுக்குக் கூட அந்தச் சட்டத்தை அமல்நடத்துவதற்கு முதலாளிகள் தயாராக இல்லை.

உதாரணமாக பெரியார் மாவட்டத்திலே உள்ள கந்தசாமி நூற்பாலையில் 12 ஆண்டுகள், 13 ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள் கூட பெர்மனன்ட் செய்யப்படாத காரணத்தால் போராட்டம் நடத்தினார்கள். அப்படி போராட்டம் நடத்தியதற்காக இப்போது 600 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் கொண்டுவந்த சட்டத்தின்படி 480 நாட்கள்பணி புரிந்திருந்தாலே அவர்களை பெர்மனன்ட் செய்திருக்க வேண்டும். ஆனால் ஈரோட்டிலே இருக்கக் கூடிய கந்தசாமி மில், சுந்தரம் ஸ்பின்னிங் மில் ஆகிய இரண்டு ஆலைகளிலும் இந்தச் சட்டம் அமல் நடத்தப்படாத நிலைமை இருக்கின்றது. எனவே அவர்கள் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். என்வே இப்படிப் பட்ட சட்டங்கள் ஏட்டளவிலே இல்லாமல் முறையாக அமல் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. எம் ஆறுமுகம்] [1983 நவம்பர் 17

கோவைக்கு அருகாமையிலே இருக்கக்கூடிய கணபதி டவுன்
வில்லேஜிலே உள்ள 4 ஏக்கர் சர்ப்ளஸ் லேன்ட் என்று சொல்லக்
கூடிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து சேரன் போக்குவரத்துக் கழகத்
திற்கு குடோன் கட்டுவதற்காக அளித்தார்கள். அதற்கான
பணத்தை அவர்களும் ஸ்டேட் பேங்கிலே கட்டி விட்டார்கள்.
இவ்வாறு நிலைமைகள் ஏற்பட்டதற்குப் பிறகு அந்த நிலத்திற்குச்
சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் இப்போது சைட் போட்டு
விற்றுக் கொண்டிருக்கிறார்களே, இதனுடைய உண்மையான
நிலைமை என்ன ?

அதே போல் மலைவாழ் மக்கள் பிரச்சினையைச் சொல்
கிறேன். உடுமலைப் பேட்டையிலே இருக்கக் கூடிய உச்சவரம்பு
மிச்ச நிலம் வினியோகம் செய்யப்பட்டது. உடுமலை தாலுகா
மெட்ராத்தி கிராமம் க. ச. எண். 441/3 பி-யில் 15-11-79-ல்
23 அரிசனங்களுக்கு தலா 1 ஏக்கர் விதம் பட்டா வழங்கியுள்ளனர்.
ஆனால் இதுவரையில் அரிசனங்களுக்கு அந்த பட்டாப்படி நிலம்
ஒப்படை செய்யப்படவில்லை.

அதே போல் ராமேகவுண்டன் புதூர் ஜமீன், 17 ஏக்கருக்குச்
சொந்தக்காரரான திரு. பழனிச்சாமி கவுண்டர், 1.36 ஏக்கருக்குச்
சொந்தக்காரரான திரு. நாச்சியப்ப கவுண்டர், திரு. ஆறுச்சாமி
நாயக்கர், 19 ஏக்கருக்குச் சொந்தக்காரரான முத்து ரங்கசாமிக்
கவுண்டர், 20 ஏக்கருக்குச் சொந்தக்காரரான பழனிக் கவுண்டர்,
ஆகியவர்கள் எல்லாம் அரிசனங்களுக்குப் பட்டா வழங்கியுள்ள
நிலத்தில் உழவடை செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக
பலமுறை அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.
அரிசனங்களுக்கு பட்டா வழங்கியுள்ள நிலத்திலே நிலச்
சொந்தக்காரர்கள் உழுவடை செய்கிறார்கள் என்றும், எனவே
பட்டாப்படி நிலத்தைத் தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்றும் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் பல
முறை மனுச் செய்தும் கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட
வில்லை.

எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்கு
வதற்கு அரசாங்கம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றி கூறி விடைபெறுகிறேன்.

[முற்பகல் 12-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, அண்மையில் இந்த அவையிலே
விவாதத்திற்கு வைக்கப்பட்ட துணை மானியக் கோரிக்கையை
ஒட்டி, ரூபாய் 1,58,75,30,000-க்கு மேற்படாத தொகை ஒதுக்
கீடு செய்யவேண்டிய முறையில் இந்த நிதி ஒதுக்க
மசோதா இந்த அவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. மாண்
மிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரி
வித்து இருக்கிறார்கள், பொதுவாகவே, முதல் மானியக்



1983 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோரிக்கைகள் வருகிறபோது விரிவாகவும், விளக்கமாகவும்
மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது பேசுவதும், பிறகு தனித்
தனி மானியக் கோரிக்கைகள் வருகிறபோது அந்தந்தத் துறை
களைப்பற்றி விளக்கங்களையும், விவரங்களையும், நிலைமைகளை
யும் எடுத்துச் சொல்கிறபோது, அந்த நிலைமைகளை எல்லாம்
அறிந்து இருக்கிற அந்தந்தத் துறை அமைச்சர்கள் அவற்றிற்கு
தெளிவான முறையில் விளக்கங்கள் அளிக்கவும் வாய்ப்பு ஏற்
படும். ஆனால் துணை மானியக் கோரிக்கை என்று வருகிற
போது, ஏற்கனவே செலவு செய்யப்பட்டவைகளுக்கு இந்த மன்
றத்தின் ஒப்புதல் பெறுகின்ற ஒரு நிலைமைதான் வருகின்றது.

ஆனால் இதற்கான நிதி ஒதுக்க மசோதா வருகிறபோது,
அந்த வாய்ப்பைப் பொதுவாகப் பயன்படுத்திக்கொண்டு, மாண்பு
மிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துவைக்கின்ற
நிலைமை இருந்தாலும், இங்கே பலரும் பல கருத்துக்களை
எடுத்து வைத்து இருக்கிறார்கள். ஆனால் விதி 206-ஐ எடுத்துக்
கொண்டால், '' நடைமுறையில் இருக்கும் ஓர் பணிக்கான
துணைமா'னியக் கோரிக்கை ஒன்றின் தொடர்பான ஓர் நிதி
ஒதுக்க சட்டமுன்வடிவாயின் விவாதம் அதற்குள் அடங்கிய
இனங்களைப் பற்றியதாக மட்டும் இருத்தல் வேண்டும்.
மேலும் விவரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தை
விளக்குவதற்கு அல்லது எடுத்துக் காட்டுவதற்கு அவசியமாக
இருந்தாலன்றி மூல மானியம் அல்லது அதனை ஒட்டிய
கொள்கையைப் பற்றி விவாதம் எதையும் எழுப்புதல் கூடாது ''.

விதி இப்படி இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்
துக்கள் எடுத்து வைத்ததைப் பற்றி எந்தத் தவறும் இல்லை
என்றாலும் உரிய நேரத்தில் உரிய அமைச்சர்களிடத்தில் அதை
எடுத்து வைப்பார்களானால், அவர்களிடமிருந்து தெளிவு
களையும், விளக்கங்களையும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.
மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகள் எல்லா
வற்றிற்கும் நான் பதில் அளிக்கக்கூடிய சூழ்நிலையில் இல்லை.

நிதி ஒதுக்க மசோதா பற்றி கருத்துக்களைச் சொன்னார்கள்.
நான் ஓரளவிற்கு அதற்கு விளக்கங்களைத் தர முடியும். ஆகவே,
மற்ற விவகாரங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து
வைக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால்
அதற்கு இந்த வாய்ப்பு பொருத்தமானது அல்ல. இந்த வாய்ப்
போடு நம்முடைய வாழ்வு முடிந்து விடும் என்பது அல்ல, மாண்பு
மிகு உறுப்பினர்களுக்கு தொடர்ந்து இந்த அவையில் பேசு
கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அதனை எல்லாம்
அவர்கள் அவ்வப்போது ஏற்படும் தன்மைகளுக்கு ஏற்ப
கிடைக்கின்ற வாய்ப்புகேற்ப அந்தந்த அமைச்சர்களிடத்தில்
எழுப்பவேண்டிய நேரத்தில் எழுப்புவார்களானால், மாண்பு
மிகு உறுப்பினர்களின் குறைகளும் நிறைவேறும் வாய்ப்பு
ஏற்படும். அதேநேரத்தில் அமைச்சர்களும் அரசின் நிலையை
எடுத்துச் சொல்ல வாய்ப்பு ஏற்படும்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 நவம்பர் 17

ஒரு நாட்டிலே 2000 கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவு செய்கிறபோது, பல்வேறு இடங்களில் பல்வேறு துறைகளில் என் னென்ன நடைபெறுகின்றன என்பதை ஆட்சிபீடத்தில் இருக் கும் நாங்கள் மட்டும் முழுவதும் தெரிந்து வைத்து இருக்க முடி யாது. ஆங்காங்குள்ள குறைகளை, குற்றங்களை எடுத்துச் சொல்ல எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், சில நேரங்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், பயன்படும் வகையில் இந்த மன்றம், இருக்கிறது. அப்படி எடுத்து வைக்கிறபோது, எந்தெந்த கருத்துக்கள், மீது நடவடிக்கை எடுக்க முடியுமோ அதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த வகையில் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஓரளவிற்கு அந்தந்தத் துறையினரும் எடுத்து ஆராய்ந்து பார்ப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இந்த வரவு-செலவு திட்டத்தில் சொன்னார்கள். வேலை வாய்ப்பு பற்றியும், உணவுக்கொள்கை பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். நாளுக்கு நாள் வேலை வாய்ப்பு ஓரளவிற்கு பெருகி வருகிறது. வேலை கேட்போர் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. நேற்று வந்த, ' பைனான்சியல் எக்ஸ்பிரஸ் '' என்ற பத்திரிகையில் வந்ததைச் சொல்கிறேன். அதிகமாக வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்கிறவர்கள் 26 சதவிதம் கேரளாவில் இருக்கிறார்கள். அடுத்து பாண்டிச்சேரி, அடுத்து, தமிழ்நாடு என்று வருகிறது. அதற்குக் காரணம் இருக்கிறது. எங்கே படிப்பு நிலை அதிகமாக இருக்கிறதோ, படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதோ, அங்கே வேலை வாய்ப்பு கேட்டு விண்ணப்பிக்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. எங்கே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமாக இருக்கிறார் கள் இந்த 22 மாநிலங்களில் என்று எடுத்துப் பார்த்தால், முதலிடம் கேரளாவிற்கு வருகிறது. இரண்டாவது இடத்தில் தமிழகம் வருகிறது. பிரதேசங்களைப் பொறுத்த வரையில், டெல்லி போன்ற இடங்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. அந்தவகையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் படித்த வர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அவர்கள் பிரச்சினை சம்பந்தமாக நாம் ஓரளவுக்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்ற காரண காரியங்களை எல்லாம் சொன்னார்கள். பொதுவாக எடுத்துச் சொல்லும் போது, பதில் சொல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31 இலட்சத்துச் சில்லரை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது சாதாரண வகையிலும் முயன்று கொடுக்கின்ற வகையிலும் என்று சொன்னார்கள்.

தனியாக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதற்கு என்று 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேர்களுடைய கோரிக்கை களையும் நிறைவேற்றிவிடுவோம் என்று இந்தத் தொகை



1983 நவம்பர் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒதுக்கப்படவில்லை. இந்த ஆண்டு ஒதுக்க முடிந்தது 15 கோடி ரூபாய். இதில் என்ன என்ன வசதிகளை, எந்த அளவுக்கு ஏற்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு ஏற்படுத்த வேண்டும். அதுவும் ஒரு குடும்பத்தில் யாருமே வேலையில் இல்லாமல் இருந்தால், அந்தக் குடும்பத்தில் தகுதி படைத்தவர் வர்கள் இருந்தால், அவர்களில் ஒருவருக்கு அவருடைய தகுதிக்கு ஏற்ப வேலை தரவேண்டுமென்ற வகையில் அதற்கான துறை திட்டமிட்டு இந்த 15 கோடி ரூபாயின் மூலமாக வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான விரிவான விளக்கங்களை எல்லாம் தனியாக வாய்ப்பு வரும்போது சொல்லலாம் என்று கருதுகிறேன்.

அதைப்போன்று திரு. ரகுமான்கான் அவர்கள் பல்வேறு கருத் துக்களை, குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். குறிப்பாக தணிக்கை அறிக்கையிலிருந்து ஒரு குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னார்கள். அது புதிதாக இப்போது ஏற்படுகிற ஒன்று அல்ல. 1950-லிருந்தே, புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்தே இருந்து வருகிற ஒன்று. அகில இந்திய தணிக்கைத் துறை தணிக்கை செய்து தருகின்ற வகையில் பொதுக் கணக்குக் குழு ஆராய்ந்து, விளக்கங் கள் கேட்டு, அதற்கு தகுந்த விளக்கங்களைத்தந்து, அந்த விளக்கங் கள் சரியாக இல்லை என்று தெரிந்தால் மீண்டும் விளக்கங்கள் பெற்று, அதன்மீது முடிவு எடுக்கும் சூழ்நிலை இருக்கிறது.

சில இனங்களில் ஒதுக்கும் பணத்தைவிட கூடுதலாக செல வாகிறது. அப்படி வரும்போது நமக்கு தனியாக இருக்கும் தொகையிலிருந்து செலவிடுகிறோம். பின்னால் துணைமானி யக் கோரிக்கைகள் மூலமாக, கூடுதலாக இந்த இனத்தில் இன்ன காரணத்தால் செலவாகிவிட்டது, அதை அனுமதிக்க வேண்மென்று மன்றத்திலே கேட்டு, அதற்கு அனுமதி கொடுக்கி றோம். சில நேரங்களில் சில இனங்களுக்கு ஒதுக்கும் தொகை செலவிடப்படாமல் நின்றுவிடுகிறது சில காரணங்க ளால். அப்படி செலவிடப்படாமல் இருக்கும்போது அந்தத் தொகையை மார்ச் மாதத்திற்குள் ' சரண்டர் ' செய்துவிட வேண்டுமென்ற நிலைமை வருகிறது. அப்படி சரண்டர் செய்யும்போது, தணிக்கைத் துறை அதிகாரிகள் ஏன் சரண் டர் செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். அல்லது ஏன் கூடுதல் செலவாயிற்று என்று கேட்கிறார்கள். அந்தந்த துறையில் இருப்பவர்கள் அதற்குத் தகுந்த விளக்கம் தருகி றார்கள். அது திருப்தி இல்லை என்றால் மறுபடியும் பொதுக்கணக்குக் குழு விளக்கம் கேட்கிறது அல்லது உரிய நட வடிக்கை சம்பந்தப்பட்டவர்கள்மீது எடுக்க வேண்டுமென்று சொல்கிறது. தவறுகளை சுட்டிக்காட்டி உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லுகின்ற அதிகாரம் பொதுக் கணக்குக் குழுவுக்கு இருக்கிறது.

ஒரே ஒரு குற்றச்சாட்டை திரு. ரகுமான்கான் அவர்கள் முக்கியமாகக் குறிப்பிட்டார்கள். கீழ்மேட்டூர் மின் திட்ட டெண்டர் பற்றியும் அதில் முறை கேடுகள் நடந்திருக்கின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும். மிகக் குறைந்த தொகை கேட்டவர்களுக்கு டெண்டர் கொடுக்கபடாமல் அதிக தொகை குறிப்பிட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது அவருடைய குற்றச்சாட்டாகும். வழக்கு மன்றம் இதற்கு எதிராக தீர்ப்பு அளித்துள்ளது என்று குறிப்பிட்டார். உண்மையில் வழக்கு மன்றம் எந்த அடிப்படையில் இதை அனுமதித்தது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். டெண்டர் விண்ணப்பதாரர்கள் காப்பீட்டுத் தொகையை மின்சார வாரிய அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய ரசீதுகளை டெண்டர் விண்ணப்பங்களோடு இணைக்க வேண்டும் என்பது டெண்டர் சரத்தாகும். ஆனால் இரண்டு டெண்டர் விண்ணப்பதாரர்கள் மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்குப் பதிலாக இந்தத் தொகையை வங்கியில் செலுத்தி அந்த டிமான்ட் டிராப்டுகளை டெண்டர் டாகுமென்டுகளோடு சேர்த்திருந்தார்கள். இதனால் ஏதும் தவறு இல்லை என்பதால் அந்த டெண்டர்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, குறைந்த தொகை குறிப்பிட்டவர்களுக்கு டெண்டர் வழங்கப்பட்டுள்ளது. இந்த வங்கி ரசீதுகள் இணைத்தவர்களுடைய டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கது அல்லது என்பது இதர டெண்டர் விண்ணப்பதாரர்களின் நிலையாகும். அதை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டு, இதன் மேல் தீர்ப்பு கூறியுள்ளது. அந்த வகையில் அந்த வங்கி ரசீதுகள் இணைத்திருந்த டெண்டர்களை நிராகரித்து மற்ற டெண்டர்களை மட்டும் பரிசீலித்திருந்தால் மின் சார வாரியம் குறைந்த தொகை கேட்டவர்களை விட்டுவிட்டு அதிக தொகையை கேட்டவர்களுக்கு டெண்டர் அளித்திருக்க வேண்டியிருக்கும். இந்தச் செயல் நியாயமானதே தவிர எந்த விதமான உள்நோக்கத்துடனும் செய்யப்படவில்லை. வாரியம் இந்த நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்துள்ளது. இந்த மேல் முறையீடு முடிவடையாத நிலையில், விசாரணையில் இருப்பதால் இதற்குமேல் நாம் எடுத்துச் சொல்வதற்கு இல்லை; நாம் அனுமதித்தது குறைந்த டெண்டரை தான்.

(பிற்பகல் 12-40)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தீர்ப்பிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், வாரியத்தின் சார்பிலே தரப்பட்ட பதிலை கோர்ட்டு ஏற்கவில்லை. (குறுக்கீடு) நான் அதனுடைய டிரான்ஸ்லேஷன் படிக்கிறேன். மக்கள் நல அரசு இதுபோல தாங்கள் போட்டவிதிகளைத் தாங்களே மீறி துணிச்சலாக வேண்டுமென்றே ஒருவருக்கு சலுகை தரவேண்டும் என்பதற்காக மற்றவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அநாவசியமாக முகாந்திரம் இல்லாமல் விதிமுறைகளை மீறி சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் குறிப்பிட்டேன். டெண்டர் ஷரத்திலே கூட சேர்க்கவேண்டும் என்று. ஆனால் இந்த இரண்டு டெண்டர்களும் வங்கியிலே செலுத்தி வைத்தார்கள். அதிலே தவறில்லை என்று கொடுத்தார்கள். குறைந்த அளவுக்கு டெண்டர் அவர்களிடத்தில் இருப்பதன் காரணமாக. அந்த அடிப்படையிலேதான் மற்ற டெண்டர்காரர்கள் வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்கிலே, ஷரத்திலே இருப்பதை நிறைவேற்ற வேண்டுமே தவிர, வங்கியிலே கொடுத்து வந்ததை நீங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கீழ்க்கோர்ட் தீர்ப்பளித்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே தவறு இல்லை என்பதைச் சொல்வதற்காகத்தான் இப்போது இந்த அரசு மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்கிறது. உள்ளுக்குள்ளே எதுவும் இல்லை என்பதற்காகத்தான். இது தான் குறைந்த டெண்டர். இப்போது கொடுத்திருப்பதுதான் குறைந்த டெண்டர். அதை நிராகரித்துவிட்டால் மற்றவை அதிக டெண்டர். ஆகவேதான் மேல் முறையீட்டுக்கு போயிருக்கிறது. மேல்முறையீட்டில் என்ன தீர்ப்பு அளிக்கிறார்களோ அதன்படி நடக்கும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர, வேறல்ல. ஆகவே ஷரத்துப்படி இல்லை என்ற குற்றச்சாட்டின் மீதுதான் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஷரத்து இல்லாமல் இருந்தாலும்கூட அதிலே தவறு இல்லை என்ற காரணத்தினாலே அந்த டெண்டர் வழங்கி இருக்கிறார்கள் என்பதுதான் கூறப்பட்டிருக்கிறது. மேல் முறையீட்டிலே என்ன தீர்ப்பு வழங்குகிறார்களோ அதன்படி இந்த அரசு நடந்துகொள்ளும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். தொழிலாளர்கள் தன்மை பற்றியும், காவல் துறை பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஒரளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னாலும் தனியாக மறுபடியும் வாய்ப்பு ஏற்படும்போது அதற்கான விளக்கங்களையெல்லாம் தருவார்கள்.

நியாயவிலைக் கடைகளில் அதிகமான அளவுக்கு அரிசி தரப்படுவது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள குறிப்பிட்டார்கள். 20 கிலோவாவது மொத்தத்திலே தரவேண்டும் என்பது நம்முடைய கொள்கை. இருந்தாலும் கூட இப்போது தரமுடியாத அளவுக்கு நம்முடைய இருப்பு இருப்பதன் காரணமாகத்தான் வெளிச்சந்தையினுடைய விலைக்கும், நியாயவிலை கடைகளுடைய விலைக்கும் கிட்டத்தட்ட 50 காசு, 40 காசு, 60 காசு வித்தியாசம் இருக்கிற காலத்தில், பெரும்

பாலும் வெளிச்சந்தையிலே வாங்கியபோது நம்முடைய 'ஆப்
டேக் என்று சொல்வது கிட்டத்தட்ட 24 ஆயிரம் டன்னிலிருந்து
30 ஆயிரம் டன் வரை இருந்தது ஆண்டு ஒன்றுக்கு. இப்போது
கிட்டத்தட்ட 80 ஆயிரம் டன்னை 18 ஆயிரத்துச் சில்லரை
கடைகளுக்கு விநியோகிக்கிறோம். இந்த 80 ஆயிரம் டன்
அரிசியையும் இந்த அளவுக்குத் தான் நம்மாலே கொடுக்க
முடிகிறது. 6 கிலோ, 7 கிலோ என்று சில
இடங்களிலும் மீதியை 10 கிலோ, 12 கிலோ கோதுமையும்
சேர்த்து கொடுக்கிறோம். கோதுமை 30,000 டன்கள் தரு
கிறார்கள். நாம் கூட மத்திய அரசுக்கு எழுதினோம். இந்த
கோதுமையை தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.
30,000 டன் கோதுமைக்கு பதிலாக அரிசியாகவே தந்து விடுவீர்
களானால், கோதுமையை உபயோகிக்கின்ற மாநிலத்திற்கு தந்து
விட்டு அரிசியைத் தாருங்கள் என்று சொன்னோம். அரிசியினு
டைய இருப்பு குறைவாக இருப்பதாகவும், அதனால் கோதுமையே
தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். சென்ற மாதம்
வரையிலும் 30 ஆயிரம் டன் அரிசி, 30 ஆயிரம் டன் கோதுமை
தந்தார்கள். இந்த மாதத்திலிருந்து 40 ஆயிரம் டன் அரிசியை
யும், 30 ஆயிரம் டன் கோதுமையையும் தருகிறார்கள். ஆனால்
இருப்பைப் பொறுத்த வரையில் கிராமங்களில் 4 கிலோ 3 கிலோ
தான் தர முடிகிறது. அங்கே கோதுமையை 8 கிலோ 10 கிலோ,
வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று குறைந்த அளவு 20
கிலோவாவது தர வேண்டும் என்ற எண்ணம் அரசிற்கு இருந்
தாலும், அரசினுடைய இருப்பு — நாம் கொள்முதல் செய்து,
நம்முடைய மாநிலத்திலே விளைந்து கொள்முதல் செய்வது —
பிற மாநிலங்களில் வாங்குவது — மத்திய அரசு தருவது —
மாவட்டங்கள் பங்கிட்டு தரக்கூடிய முறையில் இவைகள் செய்ய
முடிகிறது என்ற காரணத்தாலேதான் இந்த அளவிற்கு தர
முடிகிறது.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, நமக்கு 30
ஆயிரம் டன் இப்பொழுது 40 ஆயிரம் டன் மாதா மாதம் ஒதுக்கப்
பட்டிருக்கிறது என்று அடிக்கடி கூறுகிறார்கள். ஒதுக்கப்
என்பது உண்மை. கைக்கு கரக்டாக வருவது என்பது இன்
னொன்று. ஒதுக்கப்படுவது முழுவதும் மாதா மாதம் நமக்குக்
கிடைக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் எழுப்பிய
வினா சரியான வினாதான். நான் ஒதுக்கப்படுவதைத் தான்
சொல்லிக்கொண்டு வந்தேன். ஒதுக்கப்பட்டதிலே வந்து சேர்ந்
தது 40 ஆயிரம் டன், 30 ஆயிரம் டன், 7 ஆயிரம் டன் என்று
எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்தக் கணக்கும்
ஒரு பக்கம் இருந்து கொண்டு வருகிறது. அதனாலேயே நமக்கு





பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். எல்லா கடைகளிலும், இன்றியமையாத பண்
டங்கள் இருக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் கொண்டிருப்
பதனாலே ஒரு சில கடைகள் தான் வைக்க முடிகிறது.

பல இடங்களிலே வைக்கவேண்டுமென்ற எண்ணமும், பொது
வாக எல்லாக் கடைகளிலும் அந்த நிலைமை ஏற்பட வேண்டும்
என்பதும் தான் அரசுக்கும் எங்களுக்கும் இருக்கிற எண்ணம். அதன்
மூலமாக ஓரளவிற்கு மற்றைய பண்டங்கள் விற்கின்ற சூழ்நிலை
ஏற்பட்டால்தான் இப்போது நாம் விநியோகம் செய்கின்ற அரிசி
யானாலும், கோதுமையானாலும், மைதாவானாலும், கெரோசி
னானாலும், பாமாயிலானாலும், அவைகள் எல்லாம் கொடுக்கப்
படுகின்ற விலையைவிட குறைந்துக் கொடுப்பதால்தான் இப்
போது கடைகள் லாபகரமாக நடத்த முடியவில்லை. ஏன் என்
றால் சப்சிடி ரேட்டிலேதான் கொடுப்பது காரணம். மற்றைய
பண்டங்களையும் நாம் சேர்த்து விற்கின்றபோது ஓரளவுக்கு
லாபம் தருகின்ற தன்மைகள் ஏற்படுமானால் அந்தக் கடைகளும்
வயபிள் யூனிட்டாக இருக்கும், நடத்த முடியும், என்பது மட்டு
மல்லாமல், அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும்,
கொஞ்சம் கூடுதலாகச் சம்பளம் தர முடியும். மாண்புமிகு உறுப்
பினர் கூறுவது போன்று அந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்த
வேண்டும் என்ற எண்ணம்தான் அரசுக்கு இருக்கிறது. ஆக,
இட வசதி, ஆங்காங்கு இருக்கின்ற கடை வசதி மற்றவைகளை
யும் பார்த்து அதை நடைமுறைப்படுத்தவேண்டிய தன்மைகள்
இருப்பதன் காரணமாக அதை மெல்ல மெல்ல செய்து கொண்டு
வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்கு
சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்
பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட
சங்கடங்கள், பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட கூற்று
கள் வருவதன் காரணமாக அதற்காக ஒரு தனிக் குழு கூட
போட்டு பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த காவல்துறை அதி
காரிகளை எல்லாம் அழைத்து, இப்படி திருட்டுக் குற்றம் நடக்
கும்போதும் சரி, அல்லது சில பேர்கள் வன்முறையிலே ஈடுபட்டு
அதிலே வேலை செய்கின்றவர்களுக்கு தொந்திரவு கொடுக்கின்ற
சூழ்நிலை ஏற்படுத்தும்போதும் சரி, கடுமையான நடவடிக்கைகள்
எடுக்க வேண்டும் என்று காவல்துறையினருக்கு நாம் எச்சரிக்கை
செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள்
கூறுவது போன்று அவர்கள் குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்
காட்டியிருப்பதன் காரணமாக துறையினர் அதுபற்றி கவனித்து
அதன் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி
செய்வார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
மற்ற பல விஷயங்களைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள்
பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது ஈ. எஸ். ஐ. பற்றிக்
குறிப்பிட்டுச் சொன்னார்கள்

Drugs required by the ESI Institutions are, on rate contract by the Director–General, ESI Corporation, New Delhi and this rate contract information is sent to all the Medical Directorates in the State. According to this, after obtaining the requirements the Hospitals and Dispensaries directly, send the indents to the rate contract firms and the drugs are received by the Institutions. If it is not available, in the rate contract, on public sector undertakings like IDPL, Smith Stains street, Tamil Nadu Dadha, indents are placed by the Civil Surgeons ilke Regional Administrative Medical Officers, and Superintendents of the Hospital themselves.

Urgent medicines in small quantities are purchased by the Medical Officers of the Dispensaries and Hospitals என்று விளக்கங்கள் தந்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தை வாசித்தார்கள். ஆடிட் ரிப்போர்ட்டிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட ரிப்போர்ட் தான்.

A review of the supply orders placed by the Director of Medical Services in March 1981 and September 1981 for supply during 1981-82 disclosed that in respect of bulk requirements of seven medicines, orders were placed for supply in small packages, though the medicines were available for supply in bulk at cheaper rates under the same similar Rate Contracts. This resulted in an extra expenditure of Rs. 4.45 lakhs. Though the department stated (September 1982) that small packings were preferred as these medicines could not be preserved for long if purchased in bulk, bulk purchase of these medicines was actually resorted to during 1982.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, இங்கே வந்து அகில இந்தியாவிலே டைரக்டர்-ஜெனரல் ஆஃப் ஈ.எஸ்.ஐ. அவர்கள் சில கோட்பாடுகளை, சில முறைகளை வைத்து, அந்த முறைகளுடைய அந்த எல்லைக்குள்ளே நாம் மருந்துகளை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 2 மாதங்களுக்கு, 3 மாதங்களுக்கு ஒரு முறை நம்முடைய ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேசனுடைய அமைப்பு கூடுகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அதற்குத் தலைவர். நான் துணைத் தலைவர். இப்போது இங்கே எழுப்பப்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால் இப்போது பல்க்காக நாம் ஏராளமாக டேப்லெட்ஸ் வாங்கிக் கொண்டு இருக்கிறோம். அந்தக் கொடுப்பதன் மூலமாக நோயாளிகளுக்கு கொஞ்சம் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது தின் பாயிலில்



136070
சென்னை-600 008

லூசாக இருக்கக்கூடிய டேப்லட்ஸ் கொடுத்தார்களென்றால், அது வெளியிலே மார்க்கெட்டிலே வாங்கக்கூடிய மற்ற டேப்லட்ஸ்விட நன்றாக இருக்கும். அவர்களும், அதாவது அந்த நோயாளிகள், நோயாளிகள் என்றால் தொழிலாளர்கள், அதை விரும்பி ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆகவே, தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இருந்தாலும், பல்க் ஆகத்தான் வாங்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். பெராசிட்டமால் என்ற டேப்புலட்டும், அனால்ஜின் என்ற டேப்புலட்டும், பிரைவேட் டிஸ்பன்சரியில் ஸ்டிரிப்பிளாக நிறைய கொடுக்கிறார்கள். பல்க் ஆக வாங்கும் போது, அவைகள் தருவது இல்லை. ஆகவே, தரமான மருந்துகள் வெளியிலே கிடைக்கிறதே, நமக்கு இந்த ஆஸ்பிடல்களில் அப்படி கிடைக்கவில்லையே என்று குறைபாடு அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, எழுதியிருக்கிறோம். ஆனால் ஆடிட்டிலே அப்ஜெக்ஷன் தெரிவித்தார்கள். அந்த ஆடிட் அப்ஜெக்ஷனை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால், நாம் தொழிலாளர்களுடைய அதிருப்திக்கு ஆளாவோம்; தொழிலாளர்களின் அதிருப்தியைப் போக்க வேண்டுமென்றால் ஆடிட்டிலே வாதாடி பெற வேண்டும். அதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. கம்பெனி ஒன்று தான். டைரக்டர் ஜெனரல் என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

D V211,31 N83

(பிற்பகல் 12-50)

Whether we should buy in bulk or whether we should buy in packages is a point to be decided. If it has to be in favour of the workers then we have to take a decision to fight against the audit.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவைகள் எல்லாம் பி.ஏ.சி.க்கு P.A.C. வரவேண்டியவை. அந்தக் கமிட்டியிலே உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

N83-55-1C

திரு. அ. ரகுமான்கான்: பல்க் ஆகத்தான் 1982-லே வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால் விளக்குவதற்கு, என்னை பேச விடமாட்டேன் என்கிறீர்களே—(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தணிக்கை அறிக்கையிலிருந்து இந்தக் குற்றச்சாட்டு எடுத்துக் கூறப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்களும் விளக்கம் அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இதில் திருப்தி ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் அது பற்றிய விவரங்களை உள்ளபடியே பொதுக் கணக்குக் குழு தீவிரமாக ஆராயத்

தான் போகிறது. டிபார்ட்மெண்ட் அதற்கு பதில் சொல்லத் தான் போகிறது. அப்போது சமாதானப் படுத்துகிறார்களா இல்லையா என்பதை பார்த்து முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். நான் கேட்பது எல்லாம், பல்க் ஆக வாங்கக் கூடாது, பாக்கேஜ்ஜாக வாங்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, மறுபடியும் பழையபடி பல்க் ஆகத்தானே வாங்கியிருக்கிறார்கள். இதனால் 4.45 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலும் அங்கே தான் வர வேண்டும். அதை பொதுக் கணக்குக் குழுவிலே தான் கேட்க முடியும். அதிலே மாண்புமிகு உறுப்பினர், உறுப்பினராக இருந்தால், இங்கே எழுப்புகிற காரசாரமான கேள்விகளை அதிகாரிகளிடத்திலே மற்றவர்களிடத்திலே எழுப்பினால், அவர்கள் சமாதானம் சொல்வார்கள். அவர்கள் சொல்கிற விவரங்களை சரியான சமாதானமாக ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது அப்போது தெரியும். ஏ.ஜி. அவர்களும், மற்ற உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பதை, குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு பார்த்தால் தெரியும். அதற்கு குழுவிற்கு பொறுப்பு இருக்கிறது என்று சொல்லி, இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பிரச்சினைகளை தனித் தனியாக ஆராய்வதற்கு நேரம் இல்லை, ஆகவே அவைகளை எல்லாம் கவனத்திலே கொண்டு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று உறுப்பினர்களை உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 7) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 7) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் ஒன்றை திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன், கு. பா. பழனியப்பன் ஆகியோர் கொடுத்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''ஆளுநர் அவர்களால் 9—9—1983 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 11/1983)-ஐ இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறையே வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 50/1983) ஆய்வுக்கு** எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

---

** 1983 ஆம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 17

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே முன் மொழிந்திருக்கக்கூடியதிலே ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவின் காரண காரிய விளக்கங்கள் சொல்லப்பட்டிருப்பதிலே நான் அதை எழுப்ப விரும்புகிறேன். நேற்றைய தினம் மிகத் தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் இங்கே பேசுகின்ற போது சொல்லியிருக்கிறார்கள், தேர்தல் இன்ன மாதத்திலே நடக்கும் உயர் நீதி மன்றத்திலே வழக்குப் பிரச்சினைகள் இருந்தாலும் நிச்சயமாக அந்த மாதத்திலே நடைபெறும் என்று சொல்லி விட்டார்கள். ஆனால் இங்கே இதிலே சொல்லப்பட்டிருக்கிற காரண காரிய விளக்கத்திலே முரண்பட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்த மாதத்தில் நடைபெறும் என்று சட்ட சபையில் சொல்லப்பட்டாகி விட்டது. உயர் நீதிமன்றத்திலே உள்ள வழக்குகள் பிரச்சினையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

That is an assurance given on the floor of the House. ஆனால் அதற்குப் பிறகு இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது Objects and Reasons-ல் சொல்லப்பட்டிருப்பது மாறுபட்ட கருத்தாக இருக்கிறது. ஆகவே காரண காரிய விளக்கத்தை திருத்தி புதிதாகச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நடந்த விவாதத்திலே பங்கு கொண்டு பேசிய தமிழக முதல்வர் அவர்கள் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நகராட்சி மன்றத் தேர்தல்களை எல்லாம் வருகிற பிப்ரவரி மாதத்தில் நடத்திவிடலாமென்ற எண்ணத்தை அவர்கள் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தலை யொட்டி ஏற்கனவே மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்திலே நிலுவையாக இருந்து வருகிறது. அதிலே தடை கொடுக்கவில்லை. ஆனாலும் தடை இல்லாவிட்டாலும் கூட அந்தத் தேர்தலை நடத்தலாமா அல்லது வேண்டாமா என்று ஒரு தீர்ப்பை உச்ச நீதி மன்றம் கொடுத்து விட்டால் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நாம் நடத்தலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே நாம் இருந்தோம். தடையில்லை. அதனால் நாங்கள் அந்தத் தேர்தலை நடத்தயிருக்கிறோம் என்று தெரிவித்து விட்டு அந்தத் தேர்தலை நடத்தலாம். எனவே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் எழவில்லை. ஒழுங்குப் பிரச்சினையென்றால் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் வந்தால் தான் வரும். இங்கே இருக்கிற நிலைமைகளை விவரமாக விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். இருக்கிற நிலைமைகளிலே எதுவும் மாறாக கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவித்து ஒழுங்குப் பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 நவம்பர் 17]

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் நகராட்சிகள் போன்றவற்றின் தேர்தலை 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் தேதிக்கு மேல் ஜனவரி மாதம் 30 ஆம் தேதிக்குள் நடத்த வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த பஞ்சாயத்துக்கள் தேர்தலை நடத்துவதற்காக மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் தேதியைக் குறிப்பிட்டு நீங்கள் சொல்லும் தேதியிலே நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று இந்தப் பேரவையிலே கூறினார்கள். அதை வைத்துத்தான் முதற்கட்டமாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஜனவரி மாதம் 20 ஆம் தேதிக்கு மேல் ஜனவரி மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாக அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொண்டு அந்த உறுதியை நீங்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

கிராமப் பஞ்சாயத்துக்களின் நிலை, யூனியன்களின் நிலை, நகராட்சிகளின் நிலை எப்படி இருக்கின்றன என்பதைப்பற்றி பல்வேறு கட்டங்களிலே பல்வேறு கட்சிகளும் எப்படி எப்படி எல்லாம் அவைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் நகராட்சி மன்றங்கள் எப்படி பாதிக்கப்பட்டு இருக்கின்றன, என்பதையும் அதனால் கிராம வளர்ச்சியும் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அடுக்கடுக்காக எல்லாக் கட்சிகாரர்களும் ஆளுங்கட்சி நண்பர்கள்கூட கூறியிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்ட பிறகு கிட்டத்தட்ட 6, 7 ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படவில்லை. அங்கே மக்கள்' பிரதிநிதிகள் இல்லை, கிராமங்களிலே உள்ள குறைகளைப்பற்றி மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகளிடம் சொல்லி தீர்க்கமுடியவில்லை. பஞ்சாயத்து அதிகாரிகளின் காலத்தை நீட்டித்துக்கொண்டே போவதால் அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் எந்த எந்த இடத்தில் என்ன என்ன பண்ணியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். கிராமத்திலே பாதுகாப்பு இல்லை. கிராம ராஜ்யம் என்று திரு. காமராஜர் அவர்கள் திட்டமிட்டு அந்த அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களை அமைத்து அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு சர்வே அதிகாரங்களையும் கொடுத்து வளர்ச்சி மன்றத்திலே அனைத்து அதிகாரிகளும் வந்திருந்து பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள், செய்யவேண்டிய வளர்ச்சித் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் என்ன என்ன செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம்—லைட் வசதி வேண்டுமென்றால் அவைகளையும் செய்தார்கள். சுகாதார வசதிகள் வேண்டுமென்றால் அவைகளையும் செய்தார்கள்—செய்து வளர்ச்சிபெறுவதற்காகத்தான் அந்தத் திட்டம் வகுக்கப்பட்டது.

[திரு. ஆர். தியாகராசன்] [1983 நவம்பர் 17

இன்று அந்தக் கிராமத்தில் இருந்து பிரதிநிதிகள் எல்லாம் போய்விட்டார்கள். நீங்கள் 1975-ல் பஞ்சாயத்தை கலைத்து விட்டு இன்று வரைக்கும் அந்த கிராமங்கள் மிகவும் பிற்போக் கான நிலையில் போய்க் கொண்டு இருக்கிறது என்பதும் உங் களுக்குத் தெரியும். இருந்தாலும் அதிகாரங்கள் பஞ்சாயத்து யூனியன் ஊராட்சி ஒன்றிய அளவில் கிராம ராஜ்யம் என்று வாயார நாம் சொல்லிவிட்டு இன்றைக்கு கிராம ராஜ்யம் நடத்து வது இல்லை, அதிகாரிகள் ராஜ்யம்தான் நடந்துகொண்டு இருக்கிறது. இந்த அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் 1,100 ரூபாய்க்கு குறைந்து அந்த திட்டத்திலேயே பஞ்சாயத்து யூனியன்களில் பணங்களை எடுத்து வேலைகளைச் செய்து வருகிறார்கள். அந்த அளவுக்குத்தான் அதில் செய்ய முடியும். அந்த 1,100 ரூபாய் அளவுக்கான வேலைகளைத்தான் செய் கிறார்கள். டெண்டர் விடும்படியான வேலைகளை செய்ய வில்லை.

(பிற்பகல் 1—00)

உங்களுக்குத் தெரியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வருடத்திற்கு 3 ஆயிரம் ரூபாய் கூட வருமானம் இல்லாத பஞ்சாயத்துகள் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்தில் ஒரு வருடத்திற்கு 1,500 ரூபாய் கூட வருமானம் இல்லாத அள வுக்கு இருக்கிறது. ரூபாய் 100-க்கு 4 அணா வீதம் வரி விதித்த பஞ்சாயத்துகள் இருக்கின்றன. எங்கள் ஊரில் உள்ள காலனி யில் உள்ள பஞ்சாயத்தில் 22 ரூபாய் தான் வீட்டுவரியாக வரக்கூடிய அந்த நிலை இருக்கிறது. நிலப் பத்திரங்கள் ரிஜிஸ்ட்டிரேஷன் பணம், அரசாங்கத்திற்கு பலவிதமாக வந்து கொண்டு இருந்த பணங்கள் கூட இப்போது வருவது இல்லை. ஹைவேஸ் மரங்களை ஏலம் விட்டுக்கொண்டு இருந்தார்கள். பஞ்சாயத்தில் , இப்போது அதைக் கொடுப்பது இல்லை. பி.டபுள்யூ.டி. ஏரிகளை எல்லாம் ஏலத்திற்கு விடுவோம், மத்திய மகசூல் குத்தகைக்கு விடுவோம் அவை எல்லாம் இப்போது பி.டபிள்யூ.டி. எடுத்துக்கொண்டார்கள்.

அதே போல்ஹைவேஸ் ரோட்டையும் ஹைவேஸ்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். அந்தவருவாய் எல்லாம் பஞ்சாயத்து களுக்கு வரவேண்டும். கிராம ராஜ்யம் நடத்த வேண்டும். அந்த கிராம திட்டத்திற்கு உதவ வேண்டும் என்பதற்கு திட்டம் தீட்டப்பட்டு இருந்து அது எல்லாம் இன்று அதிகாரங்கள் எல்லாம் பிரிந்து போய்விட்டது. பஞ்சாயத்து யூனியனிலிருந்து அவர்கள் எல்லாம் பிரிந்துகொண்டு போய்விட்டார்கள். பள்ளிக் கூடங்களில் இருந்த ஆசிரியர்கள் எல்லாம் எங்களுக்கு தனியாக அசோசியேஷன் வேண்டும் என்று கேட்டு நாங்கள் அரசாங்கத்தோடு இருக்கவேண்டும் என்று அவர்கள் பிரிந்து போய்விட்டார்கள். ஆக எதற்கு பஞ்சாயத்து உண்டு என்று செய்தார்களோ அது இப்போது நடைபெறவில்லை. இருக்கிற அதிகாரிகள் எல்லாம் கிராமத்தில் இருக்கிற பிரச்சனைகளை தீர்க்கவேண்டும். எல்லா அதிகாரிகளும் ஒன்றுபட்டு செட் பிளாக் ஆரம்பித்து அந்த செட் பிளாக்கில் அனைத்து அதிகாரி



1983 நவம்பர் 17] [திரு. ஆர். தியாகராசன்]

களும் வந்தார்கள். நான் ஆரம்பித்தேன், பஞ்சாயத்து பிரசிடெண்டாக இருந்தேன். அப்போது பி.டபுள்யூ.டி. ஹை வேஸ், வேளாண்மை, கல்வித்துறை எல்லாத் துறை அதிகாரி களும் வந்தார்கள. கிராமத்தில் இருக்கிற அத்தனை பிரச் சனைகளும் ஒருங்கிணைந்து பேசி கிராமத்திற்கு என்ன என்ன செய்யவேண்டும் என்பதை விவாதித்து எதைச் செய்ய முடியுமோ அதை அப்போது செய்து கொண்டு இருந்தார்கள். ஆனால் அதற்கு பின்புவந்த அரசுகள் அதை மாற்றி மாற்றி ஒவ்வொன்றாக எடுத்துவிட்டார்கள். போலீஸ்காரர்கள் கூட அந்தப் பகுதிக்கு வந்து அந்த பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாகச் கூட்டத்தில் கலந்து கொள்வது வழக்கம். இப்போது எந்த அதிகாரமும் கிடையாது. ஒவ்வொரு அதிகாரமாக போய் விட்டது. அதிகாரம் அதிகமாக வேண்டும் என்று சொல்லுகின்ற நீங்கள், மத்திய அரசு பல அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு இந்த மாநிலங்களுக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை என்று நீங்கள் கேட்கிறீர்கள். அதேபோல் கிராம ராஜ்யம் என்ற அளவில் கொடுத்து இருந்த அதிகாரத்தை எங்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பிரித்து எடுத்துக்கொண் டீர்கள். பஞ்சாயத்து யூனியனில் வேலை எதுவும் இல்லை. ரோடு போடும் வேலைதான். அது ஒன்று தான் இருக்கிறது. வேறு எந்த வேலையும் பஞ்சாயத்தில் இல்லை.

கிராம சேவக்குகள் இருக்கிறார்கள், அந்த கிராம சேவக்குகள் என்ன செய்கிறார்கள் என்றால், வேலைக்கு உணவு திட்டம் அவர்கள் மூலமாகத்தான் நடக்கவேண்டும் என்பது சட்டம், விதி, அப்படி வகுத்து இருக்கிறோம். ஆனால் ஒரு வேலையைக் கூட ஒரு கிராம சேவக்கும் செய்வது இல்லை. அத்தனையும் அவர்கள் பெயரால் மற்றக் கட்சிக்காரர்கள், மற்ற காண்டிராக்டர்கள் செய்கிறார்களே தவிர அந்த கிராம சேவக்குகள் அந்த வேலையைச் செய்யவில்லை. அரசு அதில் கவனம் செலுத்தவேண்டும்; அமைச்சரும் அதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த கிராம நிர்வாகத்திற்கு டெண்டர் மூலமாக விட்டால் கூட அரசுக்கு லாபம் வரும். நான் சொல்கிறேன் என்று வருத்தப்படக்கூடாது, ஆதிக்கத்திற்கு அதி காரத்திற்கு உட்பட்டு ஒரு சிலருக்கு உதவுகிறார்களே தவிர அந்த நிர்வாகத்தில் அந்த வேலையை கிராம சேவக்குகள் செய் வது இல்லை.

அரிசி கொடுப்பதிலே ஒன்று சொல்கிறேன். வேலைக்கு உணவு திட்டத்திற்கு அரிசிதான் கொடுக்கவேண்டும், அது தான் முறை. ஆனால், அப்படி அரிசி கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். பணம்தான் கொடுக்கிறார்கள். அந்த அரிசி யெல்லாம் மூட்டையாக இருக்கின்றன. புழுத்து ஜனங்களுக்கு உபயோகம் இல்லாமல் இருக்கின்றன. பல டன் அரிசி கொடுத் துங்கூட அந்த அரிசியாலே இப்பொழுது பயன் கிட்டவில்லை. எனவே பஞ்சாயத்து யூனியன்களுக்கே நீங்கள் மீண்டும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

என்ன அதிகாரம் என்றால், சகல துறைகளிலே உள்ள உதவிப்
பொறியாளர்களோ அல்லது பொறியாளர்களோ, பஞ்சாயத்து
யூனியன் கூட்டத்திற்கு, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்
கூட்டத்திற்கு—சகலவிதமான பொறுப்பிலே உள்ள அனைத்து
அதிகாரிகளும், வளர்ச்சி மன்றத்திலே உள்ள சகல அதிகாரி
களும்—பங்கேற்றுக் கொள்ள இந்தச் சட்டத்திலே வழிவகை
செய்ய வேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலமாக,
மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன். அது போல், கிராமப் பஞ்சாயத்திலே
நடக்கக்கூடிய பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு அந்தக் கிராமத்திலே
உள்ள கிராம நிர்வாகஸ்தர்கள்—கர்ணம் போன்றவர்கள்—
அந்தப் பஞ்சாயத்திலே உள்ள நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள
வேண்டும். இதையெல்லாம் நீங்கள் கொண்டு வர வேண்டு
மென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது
நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஒவ்வொன்றாக நீக்கிக் கொண்டே
போய், பஞ்சாயத்தை பேப்பரிலே வைத்துக் கொண்டு,
பஞ்சாயத்து தலைவரை ஏதோ ஓட்டு போட மட்டும் வைத்
திருப்பது நியாயம் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
எல்லா அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் கிடைத்து அவர்கள்
அதிலே கலந்து கொள்ள வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பஞ்சாயத்திலே தன்னிறைவு வேலைகள் எல்லாம் நடந்தன.
பல இடங்களிலே சாதாரணமாகத் தன்னிறைவு வேலைகள்
என்று சொன்னால், ரூ. 1 இலட்சத்துக்கு உட்பட்டதுதான்
தன்னிறைவு வேலைகள் என்று சொல்லி விட்டார்கள். ரூ. 1
இலட்சத்திற்கு உட்பட்டவைகளைத் தன்னிறைவு வேலையிலே
எடுத்துக் கொண்டார்கள். ஆனால், அங்கேயிருக்கிற அதிகாரி
களும் மற்றவர்களும் அங்கே ரூபாய் ஒரு இலட்சத்திலோ அல்லது
ரூ. 50,000-லோ ஒரு திட்டம் வேண்டுமென்று சொன்னால்,
இது ரூ. 2 இலட்சம் திட்டம், ஆகவே எடுத்துக் கொள்ள
முடியாது என்று பல இடங்களிலே ஒதுக்கி இருக்கிறார்கள்.
என்னுடைய விருத்தாசலம் தொகுதியிலே வீரிட்டுக்குப்பத்தி
லிருந்து தாத்தாங்குளம் வரையிலே ஒரு சின்ன ஓடை. அந்த
ஓடையினால் ரொம்பக் கஷ்டம். அதை எடுத்து, ஒரு சிறு
கல்வெர்ட் கட்ட வேண்டுமென்று கேட்டால், அதைத் தன்
னிறைவில் எடுக்க முடியாது, பார்ட்-டு-ஸ்கிமில்தான் எடுக்க
வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ரூ. 1 இலட்சம்
மற்றும் அதற்கும் உள்ளே இருக்கிற வேலைகள்
கூட நடக்கவில்லை. அதனால் தன்னிறைவு பெற்று
விட்டோம் என்று அர்த்தம் இல்லை. பெரிய திட்டங்களை
விட்டுவிட்டு, சின்ன, சின்ன 10 காரியங்களைச் செய்துவிட்டு,
இதுதான் தன்னிறைவு என்று சொன்னால், அதனால் நிறைவு
பெறவில்லை, தன்னிறைவு சரியாகப் பெறவில்லை யென்பதை
மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.





அதே போல், விருத்தாசலத்திலிருந்து போகிற மணி
முத்தாறு என்ற பெரிய ஆறு ஒன்று இருக்கிறது. அங்கே 25
கிராமங்கள் இருக்கின்றன. நாடு விடுதலை அடைந்து சுமார்
36 ஆண்டுகள் ஆகியும் அந்தப் பகுதி மக்களை இன்னமும்
நகரத்தோடு நம்மால் சேர்க்க முடியவில்லை. காரணம் அங்கே
பாலம் இல்லை. பாலம் வேண்டுமென்று பல தடவைகள்
அங்குள்ள மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா
கிராமங்களையும் நகரத்தோடு இணைக்க வேண்டுமென்று
சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், 25 கிராமங்கள்,
2,500 மக்கள் நகரத்தோடு இணைவதற்கு முடியாமல் இருக்
கிறார்கள். இன்று வரை நானும் சொல்லியிருக்கிறேன்.
எல்லோரும் சொல்லியிருக்கிறோம். அந்தப் பாலம் வந்த
பாடில்லை. இது தன்னிறைவா? ஆக, தன்னிறைவு என்று
சொல்கிறபொழுது, குடிநீர் தேவை, பெரிய பாலமோ, சிறிய
பாலமோ, அந்தத் தேவை, சுகாதார வசதி போன்ற சகலவித
மான திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டால்தான் தன்னிறைவு
என்ற பெயரே தவிர, ஏதோ ரோடு போட்டுவிட்டு, இரண்டு
கிணறுகளை வெட்டிவிட்டு, இரண்டு பகுதிகளுக்குத் தண்ணீர்
கொடுத்துவிட்டு, தன்னிறைவை எய்தி விட்டோம் என்று
சொன்னால், நாட்டு மக்களுக்கு நிறைவு செய்வதாக நாம்
பெருமை பட்டுக்கொள்ளலாமே தவிர, திட்டங்களை முடித்து
விட்டதாகப் பொருள் படாது. அவர்களுடைய குறைகளை
நிறைவு செய்ததாக ஆகாது என்பதை மரியாதைக்குரிய
தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 1—10)

வேஷ்டி, துணிமணி எல்லாம் ஊராட்சி ஒன்றியம் மூலமாகக்
கொடுத்தார்கள். ஆனால், அந்த வேஷ்டி, துணிமணி கொடுக்
கின்ற திட்டத்தினுடைய அடிப்படை வறட்சியால் பாதிக்கப்
பட்டவர்களுக்கு அல்லது முதியோர்களுக்கு அல்லது விவ
சாயத் தொழிலாளிகளுக்கு அல்லது கூலி வேலை செய்யக்
கூடியவர்களுக்கு அன்றாடம் ஊதியம் பெறக்கூடிய சிறு
தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பது. அவர்
களுக்குப் பஞ்சாயத்து யூனியன் மூலம் வேஷ்டி, துணிமணி
கொடுத்தார்கள். ஆனால், ஒரு யூனியனிலாவது முழுக்க
எல்லா கிராமங்களுக்கும் கொடுக்கப்படவில்லை. அதுவும்
என்னுடைய விருத்தாசலம் ஏரியா, கம்பு, கேழ்வரகு, முந்திரி
விளையக்கூடிய டிரை ஏரியா வறட்சிப் பகுதி. அந்த கிராமப்
பகுதிகளுக்கு போவதுதான் சரியாக இருக்கும். ஆனால் உடனே
டவுனில் கொடுத்து விட்டார்கள். டவுனிற்கும், விவசாயத்
திற்கும் சம்பந்தம் இருக்கிறதா? டவுனில் இருப்பவர்களுக்கு
வேஷ்டி, துணிமணி கொடுப்பதென்றால் அதில் என்ன நியாயம்
இருக்கிறது?

[1983 நவம்பர் 17

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தியாகராசன் அவர்கள் இலவச வேஷ்டி, சேலைகள் நகராட்சிப் பகுதிகளில் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அப்படி கொடுக்கப்படவில்லை. கிராமப்பகுதிகளில் மட்டும் தான் வேஷ்டி சேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : அமைச்சர் அவர்களுக்கு தவறானத் தகவலை கட்டாயம் கூற மாட்டேன். என்னுடைய விருத்தாசலம் தொகுதியில் இந்த வேட்டி, துணிகள் கொடுத்து பக்கரி என்பவர் 40 துணிகளை ஒன்றாக வாங்கிக் கொண்டு போய் அதன்பேரில் போலிஸ் ஸ்டேஷனில் கம்ப்ளெயின்ட் செய்து திரும்ப வாங்கியிருக்கிறோம், நகராட்சியிலே கொடுத்திருக்கிறார்கள். இதை என்னால் நிருபிக்க முடியும். ஆர்.டி.ஓ.-க்கு கூட போன் செய்து சொன்னேன். இவ்வாறு நடந்திருக்கிறது. ஆகவே கிராமப் பகுதிகளில் மட்டும் அவற்றைக் கொடுங்கள். நகராட்சிப் பகுதிகளில் கொடுப்பது நியாயமில்லை என்று சொல்லியிருக்கிறேன். என்னுடைய கிராமத்தில், அது என் தொகுதியில் இல்லை, அது மங்களூர் தொகுதியில் இருக்கிறது. அங்கே கூட வேட்டி, துணிகள் சரியாக போய்ச் சேரவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதை நிரூபிக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டப்படி, அவரின் பெருந்தன்மைப்படி கிராமப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு, உண்மையாக சேர வேண்டியவர்களுக்கு அந்த வேட்டி, துணிகள் போய்ச் சேரவில்லை என்பதை இங்கே மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து வேலைக்கு உணவுத் திட்டம். இந்தத் திட்டத்திலே, ஒரு ரோட்டிற்கு சரளை போடவேண்டுமென்றால் அல்லது ஏதாவது ரோட்டை மெயின்டெய்ன் பண்ணவேண்டுமென்றால் அதைச் செய்வதில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக டிஸ்ட்ரிக்ட் போர்ட் காலத்திலே சில கிராமங்களுக்கு ஜல்லி போட்டு ரோடு போட்டோம். 15 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட காரணத்தால் அந்த ஜல்லி புரண்டு ரோடுகள் தரை மட்டமாகி விட்டன. அவற்றை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே சொன்னாலும் அந்தப் பணியை யாரும் எடுத்துக் கொள்வதில்லை. தன்னிறைவுத் திட்டத்திலும் அதற்கு வழி பிறக்கவில்லை. அந்த ரோட்டை யார் பாதுகாக்கிறார்கள்? யார் பராமரிப்பில் அந்த ரோடு இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே தன்னிறைவுத் திட்டத்தில் இல்லையென்றாலும், வேலைக்கு உணவுத் திட்டத்திலே எடுத்துச் செய்யுங்கள் என்று சொன்னாலும் யாரும் செய்வதில்லை. எனவே சில வேலைகளை மட்டும் தான் கொடுக்கவேண்டும் ; எர்த் ஒர்க்கிலே மட்டும் தான் வருமானம் வரும் ; அதை





மட்டும் தான் எடுத்துக் கொள்ள முடியும் என்று கிராம சேவக்குகள் செய்கிறார்களே தவிற வேறில்லை. இவையெல்லாம் ஏதாவது கட்டிடத்திற்கு கொடுத்தாலும் கூட இன்ன கட்டிடம் என்று ஒரு பெயரை வைக்க முடியும். ஆகவே இதை பரிசீலனை செய்யவேண்டும். இதுபோல நிறைய இருக்கிறது. அவற்றை ஒரளவிற்குத்தான் சொல்ல முடியும். அந்த கிராம சேவக்குகளுக்குத்தான் அதிகாரம் என்று கொடுத்து விட்டு இப்போது கிராம சேவக்குகள் ஒன்று கூட செய்வதில்லை. அவர்கள் செய்வதில்லை, வேறு யாரோ செய்கிறார்கள். அந்த நிலைமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, நகராட்சிகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். விருத்தாசலம் நகராட்சியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அதே ஒவர்—டாங்க் தான் இருக்கிறது. அது தான் இன்றைய வரைக்கும் அப்படியே இருக்கிறது. அன்றைய ஜனத்தொகை 10 ஆயிரம்; ஆனால் இன்றைக்கு ஜனத்தொகை 30 ஆயிரம். அந்த ஒரே டாங்க் தான் இன்றைய வரைக்கும் சப்ளை செய்து கொண்டு வருகிறது. தண்ணீர் இல்லாமல் கை-பம்ப் வைத்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மூன்று டாங்க்களுக்கு இங்கே வேலை நடக்கிறது. ஒரு வருடத்திற்கு முன்பு கடலூர் ரோட்டிலுள்ள ஒவர்-டாங்க் ஒப்பனாகி விட்டது. கேட்டால் அதை நகராட்சித் தலைவர் ஒட்டவில்லை என்கிறார்கள். நகராட்சியில் கேட்டால் எங்களுக்கு அந்தமாதிரி பவர் பம்ப் செட் கிடைக்கவில்லை; ஆகவே ஒட்டவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இரண்டு, மூன்று ஒவர் டாங்க் கட்டியும் கூட தண்ணீர் கிடைக்கவில்லை. குடிதண்ணீர் கிடைக்காமல் வண்டி கட்டிக்கொண்டு நாச்சியார்பேட்டை போய், அங்கே ஜங்ஷனில் தண்ணீர் பிடிக்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்ததற்கு பின்னாலும், ரெயில்வே ஸ்டேஷனில் தண்ணீர் பிடிப்பது உண்மையில் நம்முடைய மாநில வளர்ச்சியை மிகவும் குறைத்துக் காட்டுகிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அங்கே மேல்நிலைத் தொட்டிகள் வேலை முடிந்து விட்டன. அமைச்சர் அவர்கள் அந்தத் தொட்டியை திறந்து வைப்பதற்கு தேதி, கொடுத்தால் அங்கு தண்ணீர் கிடைக்கும். எப்போது அமைச்சர் வருகிறார்களோ அப்போது தான் தண்ணீர் கொடுக்கிறேன் என்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே விஜயம் செய்து, அந்தத் தொட்டிகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தது, எதையெடுத்தாலும் இந்த மன்றத்திலே பேசுகிறபோது, மத்திய அரசு அதிகாரத்தை குவித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள். அது அதிக அதிகாரத்தை குவித்து வைத்துக்கொண்டிருக்கிறது, எனவே, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்பதைப் போலத்தான் இந்த ஊராட்சி மன்றங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் கிராம இராஜ்யம் என்ற முறையில் இந்த

அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கிறேன். எந்தெந்த அதிகாரங்கள் நகராட்சிகளுக்கும், பஞ்- சாயத்துக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெள் ளத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு த. வேணுகோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்திலே பலமுறை உறுதியாகவும், இறுதியாகவும் ஊராட்சி மன்றத் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல், நகராட்சித் தேர்தல் வரும் என்று சொல்லப்பட்டு பல ஏமாற்றங் களை நாங்கள் அடைந்திருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் நேற்றையதினம் இந்த மாமன்றத்திலே ஊராட்சித் தேர்தல் வரும்; பிப்ரவரி மாதத்திலே நடைபெறும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது எங் களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு முதல்வ வரவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்து இந்த வார்த்தையைச் சொன்னதில்லை. இருந்தாலும் இப்பொழுது சொல்லியிருக்கி றார்கள். இது நடைபெறுமா நடைபெறாதா என்பது பிறகு பார்த்துக்கொள்ளப்பட்ட வேண்டிய ஒரு விஷயம்.

எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தின் சார்பாக நான் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி போன்றவைகளுக்கான தேர்தலை நடத்தினால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட் டித்துக் கொண்டேயிருப்பதாலும், உள்ளாட்சி அமைப்புகளுக் கான தேர்தலை நடத்தாத காரணத்தினாலும் கிராமங்களும், நகரங்களும் இருளிலே மூழ்கிக் கிடக்கின்றன. இப்படி இருளில் மூழ்கிக் கிடக்கின்ற நிலைமை கிராமங்களிலே மட்டுமல்ல, தமிழ கம் முழுவதுமே இருக்கிறது.

காரணம் என்னவென்றால், எங்கே பார்த்தாலும் கிராமங் களில் விளக்குகள் எரிவதே இல்லை. அரசு அதிகாரிகள் சொல் வதையும், பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளையும் பார்த் தால் தெரு விளக்குகளெல்லாம் செம்மையாக எரிகின்றன என்ற முறையில் தெரிகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கூட சொல்கிறோம். தொகுதியிலே பல கிராமங்களில் விளக்குகள் எரிவதே இல்லை,—பல கிராமங்கள் என்று ஏன் சொல்கிறேன்





என்றால், அதன் எண்ணிக்கையைச் சொல்ல முடியாத அளவிற் குப் பல கிராமங்கள் இருப்பதால்தான் — இவ்வாறு எரியவில்லை என்று சொன்னால் அங்கே கூடச் சொல்கிறார்கள், போதுமான மெட்டீரியல்ஸ் எங்களிடத்தில் இல்லை என்று எஸ்.ஈ. சொல் கிறார். மெட்டீரியல்ஸ் வந்தபிறகு உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று சொல்கிறார்கள். அரசுத் தரப்பிலே சொல்லப் படும் இந்த வாதம் எப்படி உகந்ததாக இருக்கும்? எனவே, தனி அதிகாரிகள் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்கள் பிரதி நிதிகள் அந்த ஊராட்சிகளில் இருந்தார்கள் என்றால் அப் பொழுது அவர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் உள்ள பல கிராமங்கள் மலைப் பகுதிகளில் அமைந்திருக்கின்றன. கல்நாட்டூர் புதூர், அருவங் காடு, புளியம்பட்டி, மேட்டுப்பாளையம், பிமரப்பட்டி, மோத்தக் கல், சதக்குப்பம், பெருமணம் போன்ற பல கிராமங்களில் ஏற் கெனவே இரும்புக் கம்பங்கள் நடப்பட்டு இருக்கின்றன. நடப்பட்ட அந்த இரும்புக் கம்பங்கள் துருப்பிடித்துக் காட்சி யளிக்கின்றன. அவைகளையெல்லாம் உடனடியாகக் கவனித்து, இந்தக் குறைகளை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று ஏற்கனவே நான் சொல்லியிருந்தும் இதுவரையில் அவைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை.

போதுமான மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள். 1975ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் இல்லை என்பது நம் எல் லோருக்கும் நன்றாகத் தெரியும். தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்பது எங்களுடைய எண்ணம்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல ஊராட்சி ஒன்றியங் களில் இரண்டு மூன்று கட்டமாக வேலைகளை மேற்கொண்டிருக் கிறார்கள், அங்கு வேலைகள் முடிந்திருக்கின்றன. ஆனால் தன் னிறைவுத் திட்டத்தின் மூலம் நடந்து முடிந்த வேலைகளை மீண் டும் ஒரு முறை தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் செய்ய வேண் டிய நிலைமையில் இப்பொழுது இருக்கிறது.

(பிற்பகல் 1.20)

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நடைபெற்ற வேலைகளைப் பொறுத்தவரையில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றி மட்டும் சொல்கிறேன். பல பள்ளிக் கட்டிடங்களைக் கட்டினார்கள்.

[திரு. த. வேணுகோபால்] [1983 நவம்பர் 17

ஆனால் கிட்டத்தட்ட 1981 ஆம் ஆண்டிலே இருந்து சரியான மழை இல்லை. வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தண்டராம்பட்டுத் தொகுதி, மாவட்டத்திலே கடைசிப் பகுதி யாக இருப்பதால் மழை மிகவும் குறைவுதான். பெய்த பருவ மழை கூட மிகவும் குறைவாகத்தான் பெய்திருக்கின்றது. இப் படிப்பட்ட மழை நேரத்திலே கூட அந்தக் கட்டிடத்திலே மாணவர்கள் உட்கார்ந்து படிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு பழுதுபட்ட நிலைமையில் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் எல்லாம் இருக்கின்றன. இவை எல்லாம் தன்னிறைவுத் திட்டத்திலே கட்டப் பட்ட பள்ளிக்கூடங்களின் நிலைமை. இலேசான தூறல் தூறினால் கூட மழைத் தண்ணீர் முழுவதும் பள்ளிக்கூடக் கட்டிடத்திலே தான் இருக்கின்றது. மழை பெய்கின்றபோது மேலே இருந்துதான் தண்ணீர் கட்டிடத்திற்குள் வருகின்றது என்ற நிலை மட்டும் இல்லாமல் கீழே தரையே மோசமான நிலைமையில் இருக்கின்றது. கிராமங்களில் நெற்களங்களிலே அவ்வப்போது சாணத்தைக் கொண்டு மெழுகி நெற்களம் அமைப்பார்கள். அதே மாதிரி சாணத்தைக் கொண்டு மெழுகப்பட்ட நிலையில்தான் பள்ளிக் கட்டிடங்களில் உள்ள தரை இருக்கின்றது. இவை எல்லாம் தன்னிறைவுத் திட்டத்திலே செய்யப்பட்ட வேலைகள். தன் னிறைவுத் திட்டத்தின் மூலமாக ரோடுகள், குளங்கள் போன்ற வேலைகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். அவற்றின் நிலைமை கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பதை நான் இப்போது விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை. அதுபற்றி எல்லாம் பலரும் பேசி இருக்கின்ற காரணத்தால் அந்த விளக்கத்திற்குள் தானும் போகவேண்டிய அவசியம் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வேலைகள் எல்லாம் யார் யாரிடமோ ஒப்படைக்கப் பட்டாலும் கிராம நல அலுவலகத்திலே ஒப்படைக்கப்பட்ட தாகத்தான் பொருள். ஆனால் யார், யாரிடம் ஒப்படைக்கப் படுகின்றது என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் அதனுடைய நிலைமைகள் நன்கு புரியும். அதைப்பற்றி எல்லாம் நான் விளக்கமாகச் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் அதை நான் சொல்வதற்கான காரணத்தைச் சொல்கிறேன். அதாவது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலே எடுத்துக்கொண்டு செய்யப்படுகின்ற குளங்கள், சாலைகள் போன்றவற்றை அமைக் கின்ற பணிகள் எல்லாம் ஓரளவிலே நடந்து முடிந்திருக்கிறது. மீண்டும் அவற்றை அவ்வாறு செய்யாமல் அந்தத் திட்டங்களை எல்லாம் இன்னும் நல்ல முறையில் செய்ய வேண்டும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் தொகை பல நல்ல வடிவத்திலே தோன்றக்கூடிய அளவிலே உள்ள கட்டிடங் களாகக் கட்ட வேண்டும். ஏற்கெனவே கட்டிய கட்டிடங்கள் தன்னிறைவுத் திட்டக் கட்டிடங்கள் எந்த நிலைமையில் இருக் கின்றன என்று நான் சொன்னேன். அதைப்போல அவைகளை எல்லாம் நல்ல முறையிலே கட்டவேண்டும். உதாரணமாக



1983 நவம்பர் 17] [திரு. த. வேணுகோபால்]

ஊராட்சி ஒன்றியங்களிலே பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்ப்பதே இல்லை. கிட்டத்தட்ட நான்கைந்து ஆண்டுக் கால மாக கிராமப் பள்ளிகள் எல்லாம் பழுதடைந்த நிலைமையில் தான் இருக்கின்றன. சில கிராமங்களிலே மரத்தடியிலே வைத்து பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள். எனவே இந்த நிலைமை களைப் போக்குவதற்காக தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தின் கீழ் செய்யப்படும் மற்ற பணிகளை எல்லாம், அதாவது ரோடு போடுவது போன்ற பணிகளை எல்லாம் நிறுத்திவிட்டு நிரந்தரமான பணிகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியிலே மழை சற்று பெய்திருந் தாலும் கூட குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் இன்னும் சில இருக்கின்றன. அந்த வகையிலே பல வேலைகளை பல திட்டங் களிலே எடுத்துக்கொண்டு செய்திருப்பதாகக் கூட சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அல்லிகொண்டாம்பட்டு, சின்னக் கல்லப்பாடி, அப்புநாயக்கன்பாளையம், தேவரடியார்குப்பம் போன்ற பல கிராமங்கள் இன்றும் கூட குடிநீர் இல்லாத நிலைமை யில் இருக்கின்றது. எனவே இந்த நிலைமையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து வேட்டி, சேலைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதாவது கிராமங்களிலே ஒரு குறிப்பிட்ட வயதினருக்குத்தான் வேட்டி, சேலைகள் வழங்கவேண்டும் என்று ஆணை இருக் கின்றது. ஆனாலும் கிராமங்களிலே வசதி படைத்தவர்கள் பலருக்குக் கிடைத்திருக்கின்றது. நிலம் இல்லாதவர்களுக்குக் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் என்ன வாகும்? இதை வழங்குவது யார்? அரசு அதிகாரிகள். ஆனால் கிராமங்களில் எப்படி வழங்கப்படுகிறது? ஆளும் கட்சி நண்பர்கள், அரசு அதிகாரிகளோடு ஒன்று சேர்ந்து தாங்கள் தான் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்து அந்த வேட்டி, சேலைகளை வழங்குவதுபோல் நடக்கிறார்கள். ஆங்காங்கு கிராமத்திற்குச் சென்று, அதிகாரிகளை வைத்துக்கொண்டு, அவர் கள் சொல்கிற ஆட்களுக்குத்தான் வேட்டி, சேலை வழங்கும் நிலைமை இருக்கிறது. அப்படித்தான் பல கிராமங்களில் வழங்கப் பட்டு இருக்கிறது.

இன்னும் சில கிராமங்களில் வேட்டி, சேலை வழங்கப்பட வேண்டும். ஏன் இதுவரையில் வழங்கப்படவில்லை என்று தெரியவில்லை. அதுவும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள், நிலமற்ற ஏழை மக்கள் ஆகியோர் இருக்கும் பகுதிகளில் கொடுக்கப்படவில்லை. சாதரணமாக ஒரு கிராமத் தில் வேட்டி, சேலைகள் வழங்கப்பட வேண்டும் என்றால், அங்கே எத்தனை ஆண்கள், பெண்கள் இருக்கிறார்கள் என்பதைக்

கணக்கிட்டு, ஒட்டுமொத்தமாகத்தான் தரவேண்டும்.
ஒரு கிராமத்தில் குறிப்பிட்டு, ஒரு 15 பேர், அல்லது 20 பேர் ஆனால்
அல்லது 30 பேர் அல்லது 40 பேர் என்ற அளவில்தான்
கொடுக்கப்படுகிறது என்றால் அதனுடைய நோக்கம் என்ன?
அதுவும் அதிகாரிகளை வைத்துக்கொண்டு, ஆளும் கட்சியினர்
சொல்கிற ஆட்களுக்குக் கொடுப்பது என்றால் அதனுடைய
நோக்கம் என்ன? இப்படி அரசாங்கம் இந்தக் காரியங்களைத்
தவறாகச் செய்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்பு
கிறேன். உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று அங்கே மக்கள்
பிரதிநிதிகள் இருந்து இருந்தால் இந்தக் காரியங்களும், நிர்வாக
மும் நல்ல முறையில் செம்மையான முறையில் நடக்கும்
என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வேலைகளை ஒப்படைப்பது என்பதை அங்கேயுள்ள கிராம
நல அலுவலர்கள் அல்லது சாலை ஆய்வாளர்கள் மூலமாக
செய்ய வேண்டும் என்று பெயருக்கு வைத்து விட்டு, அங்கே
யுள்ள அதிகாரிகள் மூலமாக இன்னின்னாருக்கு இந்தக் காண்ட்
ராக்ட் விடப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பிப்பது எந்த
விதத்தில் நியாயம் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு
ஊராட்சி மன்றத்தில் ஒரு தலைவர் இருப்பார். அவர் மூலம்
பலவேலைகள் செய்யப்படும். ஆனால், அந்த நிலைமை போய்,
இப்போது 5—6 ஊராட்சி மன்றங்களுக்குச் சேர்ந்து ஒரு கிராம
நல அலுவலர் மேற்பார்வையில் இந்தப் பணிகள் நடைபெற
வேண்டுமானால் எப்படி அவர் அந்தப் பணிகளை மேற்பார்வை
யிட முடியும். அங்கே நடக்கும் வேலைகள் எப்படி செம்மையாக
நடக்கும்? ஊராட்சி மன்றத் தலைவர்கள் அங்கே இருந்து
அந்த வேலைகளை கவனிக்கவேண்டிய நேரத்தில், இப்படி
5—6 ஊராட்சி மன்றங்களுக்கு கிராம நல அலுவலர் பல
வேலைகளைச் செய்யும்படி கொடுப்பது சரியல்ல. ஆகவே,
இந்த நிலைமை ஊழலை உருவாக்குவதற்குத்தான் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். கிராம நல அலுவலர்கள், அல்லது
சாலை ஆய்வாளர்கள் மூலம் பணிகள் கொடுக்கப்படுகின்றன
என்று சொன்னாலும், அந்த வேலைகளை அதிகாரிகளிடத்தில்
சொல்லி, ஆளும் கட்சி நண்பர்களுக்கு கிடைக்கச் செய்யும்
நிலைமை இருக்கிறது என்பதை மீண்டும் சொல்கிறேன். குறிப்
பாக, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திலும், தண்டராம்
பட்டு ஒன்றியத்திலும் (என்னுடைய தொகுதியான தண்டராம்
பட்டிலும்) இப்படி பல வேலைகள் நடைபெற்று இருக்கின்றன.
ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலையும் ஒன்றியத்
தேர்தல்களையும் உடனடியாக நடத்த வேண்டும் என்று நான்
இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.





பணங்களை பொறுத்த வரை
ஒதுக்கீடு செய்யப்பட்ட பணங்கள்
யில், ஒவ்வொரு வேலைக்கு என்று ஒதுக்கப்படும் பணங்கள்
சரியாக செம்மையாக செலவழிக்கப்படுகிறதா, அது மக்களுக்குப்
போய்ச் சேருகிறதா என்பதை நாம் பார்க்கவேண்டும். தமிழக
அரசு பல வேலைகளை மேற்கொண்டு, பல லட்சம் பணங்களைச்
செலவழிக்கிறது. ஆனால் அந்தப் பணம் குறிப்பிட்ட மக்களுக்குப்
போய்ச் சேருகிறதா என்றால் போய்ச் சேரவில்லை. அது
அரசு அதிகாரிகளுக்கும், ஆளும் கட்சி நண்பர்களுக்கும், பல
வாடிக்கையாளர்கள் என்ற பெயரில் அங்கே இருப்பவர்களுக்கும்
போய் சேருகிறது. இந்த வகையில் அதிகார துஷ்பிரயோகம்
செய்யப்படுகிறது என்று கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அவையின்
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின்
முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

நான் ஒன்றை
மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குற்றச்சாட்டை ஆதாரத்
மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்றுக்கொள்ள
தோடு சொல்வதாக இருந்தால் கண்டிப்பாக அவர்களுடைய
வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் 'ஆளும் கட்சிக்காரர்
பேச்சில் முதலிலே இருந்து இதுவரையில் வேண்டுமென்று வேலை
களுக்கு ஏதோ நாங்கள் அனுதாபத்தோடு முறையில் பேசுவது
கொடுக்க ஏற்பாடு செய்கிறோம்' என்ற தயவுசெய்து பேசுகின்ற
சரியாக இருக்க முடியாது. அதனால் ஏனென்றால்
போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். சேர்ந்
இன்றைக்கு ஒப்பந்தக்காரர்களாக எல்லாக் கட்சிகளையும் யார்,
தவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கிறார்
யார் எந்த எந்த கட்சியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் அதற்குள்ளே
என்ற லிஸ்டை வைத்திருக்கிறோம். ஆகவே, இருந்தால்
போகவேண்டாம். குற்றச்சாட்டைச் சொல்வதாக
ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வேணு
கோபால் அவர்கள் மாலையில் தொடர்ந்து பேசுவார்கள்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,
மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1983. (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வேணுகோபால்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று நான்கு பில்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நான்கு பில்களையும் ஒன்றாகச் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மொத்தமாக கருத்துக்களைச் சொல்லிவிடட்டும். பில்களை தனித்தனியாக எடுத்து முடிவு செய்யலாம்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : நான் ஒரு பில்லை மட்டும்தான் மூவ் செய்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மொத்தமாக எல்லாவற்றையும் சேர்த்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பில்களை தனித்தனியாகத்தான் மூவ் செய்யவேண்டும்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். குற்றச்சாட்டு சொல்லும்போது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஒரு குற்றச்சாட்டுக்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குற்றச்சாட்டைச் சொல்லும்போது குறிப்பிட்ட நபருடைய பெயரைச் சொல்லாமலே இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்லும்போது அவருடைய பதவியை, அவர் வகிக்கும் பதவியின் பெயரை வைத்துச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும் என்று நான் கருதுகிறேன்.

உதாரணமாக, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மெய்யூர் என்ற ஊராட்சி இருக்கிறது. அதனுடைய மதுரா கிராமம் திருமூர்த்தி நகர். மெய்யூரிலிருந்து திருமூர்த்தி நகர் செல்வதற்கு ரூ. 40,000 மதிப்பீட்டில் எஸ்டிமேட் தயாரித்து ** ** என்பவர் பெயரால் அந்த வேலை கொடுக்கப்பட்டது. அந்த வேலை எப்படி நடைபெற்றது என்பதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. அதை ஒரு உதாரணமாக எடுத்துக்கோள்ளும்படி நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதேபோல் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் திருவானைமுகம் வலசை இணைந்த ஊராட்சி இருக்கிறது. அதில், திருவானைமுகத்திற்கு உட்பட்ட எல்லையில் ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஒருமுறை ரூ. 2,500-க்கு வேலை செய்யப்பட்டது. அதற்கு பணம் பெறப்பட்டுள்ளது. ஏரியே இல்லாத — வலசை என்ற பெயரில் ஏரியே கிடையாது — திருவானைமுகம் ஏரிக்கே மீண்டும் ரூ. 7,400 பட்டுவாடா பெறப்பட்டுள்ளது. அந்த நபர் ஏற்கனவே ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் தேர்தல் வருகிறது என்று குறிப்பிட்ட நேரத்தில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் தேர்தலுக்கு போட்டியிட நியமித்தவர் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மன்னிக்க வேண்டும். இப்பொழுது ஆளும் கட்சிக்காரர்கள் இந்த வேலைகளையெல்லாம் எடுத்துச் செய்வதாகச் சொல்வதற்கு அறிகுறியாக இவைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் கேட்கிற கேள்வி எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒப்பந்தக்காரர்கள் இல்லையா ? அவர்கள் ஊராட்சி ஒன்றிய வேலைகளைச் செய்யவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்களா ? அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், நான் மனம் திறந்து என் கருத்தைச் சொன்னேன். எல்லாக் கட்சிக்காரர்களிலும் ஒப்பந்தக்காரர்கள் இருக்கிறார்கள் எல்லாக் கட்சிக்காரர்களும் தன்னிறைவுத் திட்டத்தில் வேலைகள் செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் ஒத்துக்கொண்டால் இந்தக் குற்றச்சாட்டு வராது. நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால், நான் அதை நிரூபிக்க வேண்டிய சூழ்நிலைக்கு என்னைத் தள்ளுகிறீர்கள். நான் நிரூபிக்க வேண்டும். ஆகவே அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : இந்த ஒப்பந்தக்காரர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் ஊழல் செய்தால் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இரண்டாவதாக, ஒப்பந்தக்காரர்கள் லிஸ்டை அவரவர்கள் கட்சி கொடுத்து அவர்கள் அந்தக் கட்சிக்காரர்களா என்று பார்ப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : வேலை செய்யக் கூடாது என்று சொல்லவில்லை. என் கருத்து, ஒரு கட்சியில் இருக்கிறவர்கள் ஒப்பந்தக்காரர்களாக இருக்கக்கூடாது என்பது அல்ல. அது விதியும்கூட அல்ல. நெய்யூரில் திருமூர்த்தி நகரில் 40,000 ரூபாய் மதிப்பீட்டில் வேலை கொடுக்கப்பட்டது என்று சொன்னார். (குறுக்கீடு). * * * * *

[1983 நவம்பர் 17

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் யார் என்று சொல்லி விட்டுப் போகட்டும் * * என்று ஏன் சொல்ல வேண்டும் ? அவ்வாறு சொல்லக் கூடாது. (குறுக்கீடு) * * *

திரு. துரைமுருகன் : * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த மாதிரி விதண்டாவாதம் பண்ணக்கூடாது. தயவுசெய்து சொல்லட்டும். ஒப்பந்தக்காரர் பெயரைச் சொல்லட்டும். ஊழல் என்று ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை முன்னவர் சொன்னதும், திரு. துரைமுருகன் சொன்னதும் அவைக் குறிப்பில் ஏறாது. என் அனுமதி இல்லாமல் பேசினால் எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல வேலைகள் இப்படி நடைமுறையில் நடந்து கொண்டிருக்கின்றன. அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவ ராக இருந்தாலும், இப்படி தவறு நடக்கக்கூடாது என்பதற் காகத்தான் நான் இங்கே இதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதே போல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை நகருக்கு பலமுறை வந்திருக்கிறார்கள். அங் குள்ள நகராட்சியில் பல நிகழ்ச்சிகளிலே பங்கு பெற்றிருக்கி றார்கள். இப்போது திருவண்ணாமலையில் கார்த்திகை தீப விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே சுகாதார முறைகள் நல்ல முறையில் இல்லை. சீர்கேடான முறையில் இருக்கிறது. திருவண்ணாமலைக்கு தமிழகத்தின் எல்லாப் பகுதி களில் இருந்தும் மக்கள் வந்து செல்கிறார்கள். ஆனால் திரு வண்ணாமலைக்கு வாரத்திற்கு இரண்டு முறைகள் தான் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை நகராட்சி விழாவில் பங்கு கொள்ளும்போது, சாத்தனூர் பிக்கப் அணையிலே ஜெனரேட்டர் வைத்து, நிரந்தர மாக குடிதண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்று வரை நிலைமை என்ன ? நடந்தது என்ன ? வாரத்திற்கு இரண்டு முறைதான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. எனவே, திருவண்ணாமலையில் இந்த நிலைமையை உடனடியாகப் போக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



983 நவம்பர் 17]

[மாலை 4–10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையிலேயே ங்கள் 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். எனவே, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. த. வேணுகோபால் : அடுத்து, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் நடைபெறாத காரணத்தால் ஊராட்சி நிதிகள் எல்லாம் ந்த முறையில் செலவழிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு மைச்சர் அவர்கள் அறிவார்கள். ஊராட்சிகளில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருக்கும்போது அந்த கிராமப் பணிகள் செவ்வனே நடைபெறவேண்டும் என்று கண்ணுங்கருத்துமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இல்லாத காரணத்தினால் ஊராட்சி நிதிகள் எல்லாம் அரசு அதிகாரிகளால் வீணாக செலவழிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பிற்கு சொல்லப்பட்ட காரண விளக்கத்தில் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் 1—3—1984 வரை நீட்டிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. அதிலே 'தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், மலை வாழ் மக்கள், பெண்கள் என்று இட ஒதுக்கீடுகள் செய்ய வேண்டுமென்றும், அது உச்ச நீதிமன்றத்தில் சென்றிருக்கிற காரணத்தால் ....' என்று காரண விளக்கத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதம் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் விரைவிலே தேர்தலை நடத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு மெரினா கடற்கரை யிலே அல்லது சென்ட்ரல் ஸ்டேஷனிலே அடிக்கடி மாங்காய், தேங்காய், பட்டாணி சுண்டல் என்று வியாபாரம் செய்வதை போல இந்தத் தேர்தல் வியாபாரமாக நின்று விடக்கூடாது. பிப்ரவரி மாதத்திலேயே நடத்தப்படவேண்டும் என்று சொல்லி வாய்ப்புத் தந்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.'

திரு. ரா. இருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சிகள் தனி அதிகாரிகள் நியமித்தல் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு விவாதிக்கின்ற நேரத்தில், இந்தத் திருத்தம் ஏற்படு வதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், சனநாயக உணர்வு படைத்த தமிழ் மக்கள் சார்பாகவும், நான் கடுமை யான எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

ஏற்கெனவே நேற்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் பிப்ரவரி மாதம் தேர்தலை நடத்த இருக்கின்றோம் என்று உறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இப்போது இந்தத் திருத்தம் மார்ச் மாதம் வரை கோரப்படுகிறது. எது உண்மை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதிகமாக எல்லோரும் இதைப்பற்றி பேசிவிடக் கூடாது என் பதற்காகச் சொல்லுகிறேன். It can be restricted to five mo'hts 6 மாதமாக இருந்தாலும் அதை 3 மாதங்களுக்கு ரெஸ்டிரிக்ட் பண்ண முடியும். அந்த புரொவிசோவை வைத்துதான் கொண்டு வந்திருக்கிறோம். தேர்தல் எவ்வளவு காலத்திற்குள் நடக்கிறதோ அதுதான் முக்கியுமே தவிர, 6 மாதமாக இருந்தாலும் அதை 3 மாதங்களுக்குள் குறைத்துக் கொள்வதற்குரிய புரோவிசோ இருக்கிறது. 6 மாதங்கள் வைத்துக் கொள்வதால் எந்தவிதமான பாதகமும் இல்லை.

திரு. ரா, கிருஷ்ணன் : ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு கருத்து இருக்கக் கூடிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தேதியை இன்றைக்கே அறிவித்து விடலாம். எங்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில் சனவரி மாதம் 15-ஆம் தேதியிலிருந்து 30-ஆம் தேதிக்குள் அறிவிக்கப்பட வேண்டும். சனவரி கடைசி வாரத்திலே முடிக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

இந்த உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் பொது வாக சனநாயகத்தைப் பாதுகாக்கின்ற முறையிலும், அதிகாரக் குவியல் இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்ற முறையிலும், நடத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது.

குறிப்பாக அடிப்படைத் தேவைகளான தெருவிளக்கு, குடிநீர் பர்தை, இவைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி மன்றங்கள் தான் ஆக்கப் பூர்வமான பணிகளைச் செய்யமுடியும். அதோடு இன்றைக்குப் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களிலே, ஊராட்சி மன்றம் அல்லது முனிசிபாலிட்டிகளிலே தேவையான நிதி ஆதாரம் கிடையாது. அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே நிதி ஆதாரத்தை உருவாக்கு வதும், அல்லது அரசினுடைய கோரிக்கையை வகுக்கச் சொன்னா லும் கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள்தான் அந்தக் கோரிக்கைகளை விடுக்கமுடியும். தமிழக மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டு மென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், அமைச்சரவை இருந்தால்தான் முடியும். அதேபோல உள்ளாட்சியில் சாதாரண அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று எண் ணிக்கொண்டு பொதுமக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், அதற்கு நிதி ஆதாரம் தேவையென்றால், இந்த மன்றங்கள் அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்கெனவே பல்வேறு துறைகள் இந்த ஊராட்சி மன்றங்களில் இருந்தன. குறிப்பாக, விவசாயம், மீன் வளர்ச்சி எல்லாம் இந்த ஆட்சி வருவதற்கு முன்பாகவே போய்விட்டது



எடுக்கப்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன். இப்போது கல்வி பறிபோய்விட்டது. பொதுச் சுகாதாரம் போய்விட்டது. இனி மிஞ்சியிருப்பது என்னவென்றால், பேமலி பிளானிங், குடும்பக் கட்டுப்பாடு ஒன்றுதான். இது உண்மை. இதற்கு ஒரு துறை தேவையா ? இதுதான் என்னுடைய கேள்வி. இதிலே இன்றைக்கு சாதாரணமாக முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டத்தில் உள்ள அமைப்பாளர்களை இந்தக் குடும்பக் கட்டுப் பாட்டிற்கு குறைந்த பட்சம் 2 பேர்களைக் கொண்டுவரவேண்டும் என்று நிர்பந்திக்கிறார்கள். அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களு டைய ஆணையாளர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். அதுவும் உண்மை. ஆகையினாலே இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி யமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் பொது வாகவே இந்தக் குண்டு விளக்குகளுக்கு பொருத்தக்கூடிய அந்த ஷேட்களில் குருவிகள் கூடு கட்டிக் கொண்டு இருக்கின்றன. பல இடங்களில் இன்றைக்கும் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? ஏற்கெனவே பல்புகளை வாங்கிப் போடுவதற்கு பஞ்சாயத்துக்கள் தயாராக இல்லை. ஏற்கெனவே பஞ்சாயத் துக்கள் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் பாக்கி இருக்கிறது. அதைச் செலுத்துவதற்கு வழியில்லை. பணம் செலுத்தவில்லை என்றால் புதிதாகப் போடக்கூடிய வழியில்லை. பல்புகளைப் போடுவதற்கு வழியில்லை. இதுதான் காரணம். இதற்குத் தேவையான அடிப்படை நிதி ஆதாரம் கிடையாது என்பதுதான். நிதி ஆதாரம் இல்லை. இருக்கக்கூடிய ஆதாரத்தை மிஸ்-யூஸ் பண்ணுகிறார்கள் அதிகாரிகள், எந்தவித மான தடையும் இல்லாமல், எனவே இப்படிப்பட்ட நிலைமை களின் காரணமாக இன்றைக்கு தமிழ் நாட்டிலே குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் உள்ள தெருக்கள் இருட்டில் இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

அடுத்து அடிபம்புகள், கைபம்புகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தப் பம்புகளை குடிநீர் வடிகால் வாரியம்தான் பராமரிக்க வேண்டும் என்று சொல்லப் பட்டது. ஏன் என்றால் இந்தத் துறை அதற்காக என்று இருக்கிற துறை. ஆனால் அவர்கள் எங்களால் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பரவாயில்லை. இப்போது பஞ்சாயத்து யூனியன் அல்லது ஒன்றியத்திற்கு ஒரே ஒரு நபர் தான் அதை ரிப்பேர் செய்வதற்கு என்று இருக்கிறார். ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 100 கைபம்புகள் இருக்கின்றன. அது பல்வேறு இடங்களில் ரிப்பேர் ஆகக்கூடிய நேரத்தில் அதைப் பராமரிப்பதற்கு என்று இருக்கிற அந்த ஒரு ஊழியர் போதாது. மற்றும் அவருக்கு வாகன வசதி கிடையாது

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 நவம்பர் 17

எந்த வசதியும் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு நிலை
யில் கிராமப்புறங்களில் உள்ள பம்புகளை ரிப்பேர் செய்வதற்கு
அதிகமான ஆட்களை நியமிக்கவேண்டும், அதை அமைச்சர்
அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, குறிப்பாக
திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டைப் பகுதியில்
இருக்கக்கூடிய தெருக்களிலே எல்லாம் சிமென்ட்டைப்
போட்டிருக்கிறார்கள். பல்வேறு இடங்களிலே தாரும்
போட்டிருக்கிறார்கள். டவுன் ரோட்டில் குடிநீர்க் குழாய்
களைப் பதிப்பதற்காகவும் மற்றும் சாக்கடைக் குழாய்களைப்
பதிப்பதற்ககாவும் அந்த சிமென்ட்டை உடைத்து தெருக்களில்
அந்தக் குழாய்கள் பதிக்கப்பட்டன. அதற்குப் பிறகு அந்த
சிமென்டை போட்டு, அந்த ரோட்டை மூடுவதற்கு வழியில்லாமல்
இன்றையவரையிலும் அந்த ரோடுகள் போடப்படவில்லை.
அதற்கு வழியில்லை. வக்கில்லை. இதன் காரணமாக தெருக்
கள் பூராவும் நாசமாக்கப்படுகின்றன. அதுவும் திருநெல்வேலி
போன்ற பகுதிகளில் பேருந்துகள் செல்வதற்கு மிகவும் சிரமப்
படுகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, பேரூராட்சி, நகராட்சிகள் என்று எடுத்துக்
கொண்டால், அங்கே உள்ள பாதைகளில் அனைத்திலுமே
பஸ்கள் செல்லமுடியாத நிலையில் இருக்கிறது. இருப்பினும்
சரியில்லாத அந்தப் பாதைகள் வழியாகத்தான் பஸ்கள் செல்ல
வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக அங்கே
ரத வீதி என்று ஒரு வீதி இருக்கிறது. அந்த வீதி வழியாகத்
தான் பஸ்கள் போய் பஸ் ஸ்டாண்டிற்குத் திரும்பவேண்டும்.
அப்படிப்பட்ட அந்த முக்கியமான ரத வீதியைப் பராமரிப்பதற்கு
டவுன் பஞ்சாயத்திடம் நிதி வசதி கிடையாது. இதுவரையிலும்
அது பராமரிக்கப்படாமல் இருக்கிறது. காரணம் கேட்டால்
நிதி இல்லை என்கிறார்கள். ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டைக்
கேட்டால், அவர்களைப்பொறுத்தவரைக்கும் செய்யமுடியாது—
அது எங்களுடைய சாலை அல்ல என்று சொல்லி, அதை ரிப்பேர்
செய்வதற்கு மறுக்கிறார்கள்.

[மாலை 4-20]

டவுன் பஞ்சாயத்திலிருந்து சிமென்ட் ரோடோ, தார்
ரோடோ போடுவதற்கு நிதி ஆதாரம் கிடையாது. அனாதை
மாதிரி சாலை கிடக்கிறது. இப்படிப்பட்ட கடுமையான பாதிப்பு
இருக்கிறது. ஏற்கெனவே இந்த டவுன் பஞ்சாயத்தைப் பொறுத்த
வரையில் இதற்கென்று தனியாக ஒரு இயக்குநரகம் டைரக்டரேட்
அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீண்ட நெடிய காலமாகவே
இந்த டவுன் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் நிதி ஆதாரம்



1983 நவம்பர் 17] [திரு. ரா. கிருஷ்ணன்]

என்ன இருக்கிறது? வீட்டு வரி ஒன்றுதான். தேர்ந்து
எடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லாத காரணத்தால், வீட்டு வரியை
உயர்த்த முடியாது. உயர்த்த வேண்டும் என்று சொல்லவில்லை.
உயர்த்தக் கூடாது. ஆனால் அதே நேரத்தில் பஞ்சாயத்து
யூனியன் மூலமாக இதற்கு முன்பாக சில வேலைகள் சில அடிப்
படை வேலைகள் செய்யப்பட்டன. ஆனால் பஞ்சாயத்துக்
களிலேயிருந்து ஜெனரல் ஃபண்டை இதற்கு டைவர்ட் பண்ணி
செய்ய முடியாது. ஏனென்றால் இது செப்பரேட் டிபார்ட்
மெண்ட். வேறு நிதி ஆதாரமும் கிடையாது. அரசாங்கத்திடம்
இருந்தும், நிதி ஒதுக்கீடு இல்லை. இதன் காரணமாக டவுன்
பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் எந்த விதமான அடிப்படை
வசதிகளும் செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
(குறுக்கீடு) எஸ்.எஸ். கொடுக்கிறீர்கள். ஆனால் எஸ்.எஸ். கொடு
ப்பதில் போதுமான சில அடிப்படை வேலைகள் நடக்கவில்லை.
அது தான் உண்மை. நான் கேட்க விரும்புவது என்னவென்றால்,
கல்வர்ட்ஸ்ஸோ லெட்ரினோ கட்ட வேண்டுமென்றால்
என். ஆர். இ. பி. மூலமாக டைவர்ட் பண்ணியாவது செய்ய
வேண்டும் என்பதுதான். டவுன் பஞ்சாயத்து ரூலிலே வராது,
ஆகவே என்.ஆர்.இ.பி.யிலே இதைச் செய்ய முடியாது என்று
சிலர் வியாக்கியானம் செய்கிறார்கள். ஆகவே, என்.ஆர்.இ.பி.
யின் மூலமாகவாவது, அடிப்படையான கன்ஸ்டிரக்ஷன்
வொர்க்ஸ்களை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான்
கோரிக்கை விடுக்கிறேன்.

அத்தோடு, இன்றைக்கு பல்வேறு முனிசிபாலிட்டிகளிலும்
சரி, டவுன் பஞ்சாயத்துக்களிலும் சரி, பல்வேறு இடங்களிலே
அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய
சில இடங்களை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அதைத்
தடுப்பதற்கு அதிகாரிகள் தயாராக இல்லை. அதனுடைய
இரகசியத்தை சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அது
ஒன்று. அடுத்து, ஏற்கெனவே திருநெல்வேலி ஜங்ஷனில்
இருக்கக்கூடிய பேருந்து நிலையத்தைச் சுற்றி பிளாட்பார்ம்கள்
இருந்தது. பயணிகளில் சில பேர் அங்கே போய் இருப்பது
வழக்கம். ஆனால் இப்போது எல்லா பிளாட்பார்ம்களையும்
கடைகளுக்கு விட்டு விட்டார்கள். வரக்கூடிய பயணிகளுக்கு
நிற்பதற்குக்கூட வழியே கிடையாது.

அதேபோல தர்மபுரியில், அங்கேயிருக்கிற பஸ் ஸ்டாண்டுக்கு
பக்கத்தில் தீர்த்தகிரி மைதானம் என்று ஒன்று உண்டு. அந்த
இடத்தையெல்லாம் பிளாட் போட்டு விற்றுவிட்டார்கள். பொதுக்
காரியங்களுக்காக இருக்கிற இப்படிப்பட்ட இடங்களை பல்வேறு
நகராட்சிகளும் சரி, டவுன் பஞ்சாயத்துக்களும் சரி பல்வேறு
இடங்களில் பிளாட்போட்டு, அந்தந்த அதிகாரிகள் விற்று
விடுகிறார்கள் என்றுதான் சொலல முடியும். ஆகவே, இப்படிப்

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 நவம்பர் 17

பட்ட நிலைமைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆக்கிர மிப்புகள் செய்தவர்களை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். அது அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அத்தோடு இன்றைக்கு, இந்த அவையில் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டன. அதில் குறிப்பாக, கான்டிராக்டர்கள், பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய கான்டிராக்டர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் முறையாகச் செயல்படவில்லை என்று அந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது. சிமென்டைப் பொறுத்தவரையில், கான்டிராக்ட் எடுக்கக்கூடிய அந்த கான்டிராக்டர்கள், பணம் கட்டிவிட்டுத்தான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அரசு உத்திரவு இருக்கிறது. இருந்தாலும் கூட, சிமென்டை கடனில் வழங்கிவிட்டு, லட்சக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது என்று அந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே கூறப்பட்டிருக்கிறது.

அடுத்து, சித்தா மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், திருச்சியிலே ஒரு சித்தா மருத்துவமனை கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே மருந்தே கிடையாது. ஆனால் ஊழியர்களுக் காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று அந்த ஆடிட்டர் குறிப்பிலேயே கூறப்பட்டிருக்கிறது.

அத்தோடு, 16 ஆசிரியர்கள் குடியிருப்புகள குறித்து—அவைகள் ரிப்பேர் காரணமாக தங்க முடியாத நிலைமையில் இருப்பதாக சொல்லப்படுகிறது—பல ஆண்டுகளாக தங்க முடியாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. லட்ச கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து கட்டப்பட்ட அந்த ஆசிரியர் குடியிருப்புகள், பயன்படுத்தப்பட முடியாத நிலைமை யில் இருக்கிறது என்று தெளிவாக அந்த ரிப்போர்ட்டில் கூறப் பட்டிருக்கிறது.

அத்தோடு, நான் இங்கே தெரிவிக்க விரும்புவது என்ன வென்றால், ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்டைப் பொறுத்த வரையில், அந்தப் பாயின்ட்ஸ் எல்லாம்,

"Were reported to the Government in September 1982. Their reply has not yet come. It is awaited."

பிப்ரவரி மாதம் 1983 வரையில் பதில் வரவில்லை.

The Hon. Thiru P. KOLANDAIVELU: We have already sent a suitable reply to the Auditor General.



1983 நவம்பர் 17]

திரு. ரா. கிருஷ்ணன் : 1983ஆம் ஆண்டு பிப்ரவரி வரைக்கும் பதில் வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால் ஒரு வருஷத்திற்கு மேலாக அது பெண்டிங்காக இருக்கிறது. 1982 செப்டம்பர் மாதம் நாங்கள் கேட்டிருந்தும் 1983ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பதில் வரவில்லை என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சார்ஜஸ்—அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அது குற்றச் சாட்டுதான்—பற்றி பதில்வரவில்லை. அப்படியென்றால் நிச்சயமாக அது சரியல்ல. (குறுக்கீடு) அனுப்பினால் நல்லதுதான், இன்றைக்கு பல்வேறு இடங்களில் இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தவறு செய்கிறவர்கள் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கிறார். சில இடங்களில் விஜிலன்ஸுக்குப் போயும் திடீரென்று ரீஇன்ஸ்டேட்மெண்ட் பண்ணிவருகிறார்கள். விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டிற்குப் போய்வருகிறபோதுகூட வழக்குத் தொடுக்கவேண்டிய அவசியம் இல்லை, ஆனால் துறையி லிருந்து நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆலோசனை கூறப் படுகிறது. உடனடியாக சஸ்பென்ஷன் செய்ய அமைச்சர் உத்தரவிடுகிறார். வரவேற்கத்தக்கது. ஆனால் எந்தவித மான நடவடிக்கையோ பனிஷ்மெண்டோ இல்லாமல் மறுபடியும் ரீஇன்ஸ்டேட்மெண்ட் செய்யப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர் களே, எப்போதுமே விஜிலன்ஸுக்கு சென்று லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு அனுப்பி, அவர்களுடைய அறிக்கையைப் பெற்றால் பிரைமா பேஸி கேஸ் என்ற முறையில் வந்த பிறகு எந்த வழக்காக இருந்தாலும் உடனடியாக சஸ்பெண்ட் செய் கிறோம். டைரக்டர் ஆப் விஜிலன்ஸிடமிருந்து "They are recommended for Departmental action" என்று வந்த பிறகு நான் என்ன செய்கிறேன் என்றால், பிரைமா பேஸி கேஸ் இருந்தாலும் உடனடியாக சஸ்பெண்ட் செய்கிறேன். அந்த நிலைமையை என்னுடைய துறையைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : ஒரு கிளாரிபிகேஷன் *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கிளாரிபை பண்ணத் தயாராக இல்லை. திரு. இராசு அவர்கள் பேசியது நீக்கப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். விஜிலன்ஸ் அன்ட் ஆண்டி கரப்ஷன் டிபார்ட்மெண்டிடமிருந்து ஆக்ஷன் எடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பிரைமா பேஸி கேஸ் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் 1, 1 1/2 மாதங் களுக்குள் மறுபடியும் ரீஇன்ஸ்டேட்மெண்ட் செய்யப்படுகிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்படி மாநிலத்திலே 30, 35 பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ரீஇன்ஸ்டேட்மெண்ட் செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன்.

G.O. No. 729 R.D. & L. A, dated 20-‑-1983 என்ற ஜி.ஓ. அமைச்சரால் போடப்பட்டது. ஏன் இதைக் கேட்கிறேன் என்றால் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தவறு செய்கிறார்கள் என்று பொதுமக்கள் பிடிக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சஸ்பென்ட் செய்யப்படுகிறார்கள். அப்படிப் பட்ட ஒரு பி.டி.ஓ. சொல்கிறார், சவால்விடுகிறார், நான் மறுபடியும் இதே இடத்திற்கு வருகிறேன் என்று சவால்விடுகிறார். அந்த ஜி.ஓ. போட்டு அதே இடத்திற்கு வந்திருக்கிறார். இப்படிப் பல்வேறு அரசாங்க உத்திரவுகள் மூலம் செய்யப் படுவதாக அறிகிறேன்.

மாநிலத்திலே உள்ள நகரப் பகுதிகள், பேரூராட்சிப் பகுதிகள், மாநகராட்சிப் பகுதிகளில் கொசுத் தொல்லை மிக மிக அதிகம். குறிப்பாக சென்னை மாநகராட்சி போன்ற பகுதிகளிலே பிரிவெண்டில் மெஷர்ஸ் எடுக்கப் படுகிறதா என்பது பெரிய சந்தேகத்திற்குரியதாக இருக் கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் சொல்கிறார்கள், கடிக்கக்கூடிய கொசு மலேரியா கொசுவா அல்லது யானைக்கால் கொசுவா என்று கேட்கிறார்கள். கடிக்கக் கூடிய கொசு யானைக்கால் கொசுவாக இருந்தால் உலக வங்கி உதவியிலிருந்தும் மலேரியா கொசு கடித்தால் உலக சுகாதார அமைப்பிலிருந்தும் உதவி கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். கடிக்கக்கூடிய கொசு எது என்று சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். போனவர்கள் என்ன சொல்கிறார்கள், கடிக்கப்பட்டவர்களைக் கேட்டுவந்து சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். பல கிராமப்புறங்களிலும் பேரூராட்சி களிலும் நகரப்புறங்களிலும் கொசுத் தொல்லை மிக மிக அதிகம். அதன் மூலமாக மலேரியா காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. இப்படிப்பட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வது அவசியம். கன்னியாகுமரி மாவட்டத்திலே முன்சிறை பகுதியிலிருந்து தூத்தூரிலிருந்து இரணியல் என்ற இடம் வரைக்கும் குடிநீர் குழாய் பழுதுபட்டது. 2 ஆண்டுகள் ஆகியும் பழுதுபார்க்கப்படவில்லை என்று திரு. மணி அவர்கள் சொல்கிறார்கள். யூனியன் ஜீப் அங்கு இல்லை என்று கூறப்படுகிறது. இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4–30.)

அடுத்து இந்த ஆக்கிரமிப்பு என்பது மிகவும் ஓரவஞ்சகமானது. சென்னை நகரத்தில் கிரிம்ஸ் ரோடு பக்கத்தில் மகிஸ் கார் டன் அங்கே நேற்றைக்கு 55 குடிசைகள் அடித்து தரைமட்ட



மாக்கப்பட்டு இருக்கின்றன. கடந்த 30 ஆண்டுக் காலமாக அங்கே குடியிருக்கிறார்கள். ரிக்ஷாக்காரர்கள், ஏழை கூலித் தொழி லாளர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். கடந்த 5, 6 தேர்தல் களில் அவர்கள் வாக்கை போட்டு இருக்கிறார்கள். வோட்டர் லிஸ்டில் அவர்கள் பெயர்கள் இருக்கின்றன. திடீர் என்று நேற்றைக்கு வந்து அந்த குடிசைகளிலிருந்து போலீஸ் மூலம் நீக்கப்பட்டு விட்டார்கள். அதில் 6 பேர்கள் காயம் அடைந்து இருக்கிறார்கள். அவர்கள் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். ஆக இப்படி ஒரு நிலைமை தொடர்ச்சியாக இருக்கிற காரணத்தால் அவர் களுக்கு முடிவான நிரந்தரமான வழியை அரசு செய்ய வேண்டும். இப்படி குறைபாடுகள் அடிக்கடி ஏற்படுவதற்கு காரணமே தேர்ந் தெடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லாதது தான். ஆகையால் உடனடியாக தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேதியை அறிவிக்க வேண்டும். இப்போதே அறிவிக்க வேண்டும் என்று நான் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 31–3–1984 வரை நீட்டித்து ஒரு சட்டத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் ஆனாலும், பேரூராட்சிகள் ஆனாலும், நகராட்சிகள் ஆனா லும், மாநகராட்சிகள் ஆனாலும் கடந்த 3 ஆண்டுகள், ஏன் 3 1/2 ஆண்டுகள் தொடர்ச்சியாக அ.இ.அ.தி.மு.க. அரசு பல்வேறு முறை வாக்குறுதி கொடுத்தாலும் தேர்தல் நடத்தவில்லை. இதை நாங்கள் சொல்வதோடு மட்டும் அல்லாமல் அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் சொல்லப் போகிறார்கள் என்ற நிலையில் அரசு கொண்டுவந்துள்ள இந்த கால நீட்டிப்புச் சட்டத்தை நாங்கள் ஆரம்பத்திலேயே வன்மையாகக் கண்டிக்கிறோம். எதிர்க்கிறோம். இப்போது இந்த விவாதத்திற்கு வருகிறேன். தனி அதிகாரிகள் ஆட்சி யில் இருக்கிற காரணத்தால் ஊராட்சி ஒன்றியங்களில் நடக் கிற வேலைகளில் குறிப்பிட்டு சொல்கிற அளவுக்கு உண்மை யான ஆதாரங்கள் இருக்குமானால் அவை சொல்லப்படு மானால் உரிய நடவடிக்கை எடுக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஓர ளவுக்கு சற்று வேகமாகவும் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது, பாராட்டக் கூடியது என்றாலும் நாங்கள் சொல்கிற ஒரு நியாயமான குற்றச்சாட்டு–ஒரு பக்கம் பெய ரைக் குறிப்பிட்டால் கட்சி வருகிறது, ஆளைக் குறிப்பிட்டால் வேறு திசையாக அது மாறுகிறது. அது இல்லாமல் நான் ஓரளவு மையமாக நின்று–சொல்லலாம் என்று கருதுகிறேன்.

[திரு.என். ஏ. பூங்காவனம்] [1983 நவம்பர் 17

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

முதன்முதலாக ஊத்தங்கரை என்ற பகுதி இருக்கிறது.
தர்மபுரி மாவட்டத்தில். அந்த ஊத்தங்கரை ஊராட்சி
ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு பகுதியில், இராமப்புற வேலை
வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஒரு புதிய சாலை அமைப்பதற்கு
ஒரு வேலையை எடுத்திருக்கிறார்கள். அந்த வேலையின்கீழ்
100 மூட்டை அரிசியை அந்த கான்ட்ராக்டர் பெற்றுக்கொண்டி
ருக்கிறார். சாலை அமைக்க வேண்டுமென்று சொன்ன பகுதி
புறம்போக்கு நிலம். அதற்கான எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்
பட்டு வேலைக்காக, 100 மூட்டைகள் அரிசி கொடுக்கப்பட்டு
வேலை தொடங்கியவுடன் வசதியான இரண்டு பேர்கள் அந்தப்
பக்கம் புறம்போக்கு நிலம் என்று சொன்னார்களே, அங்கே
கூடாது என்று சொல்லி, சின்ன விவசாயிகள் 1 ஏக்கர் 11/2
ஏக்கர் வைத்திருக்கிறவர்களுடைய பட்டா நிலத்தில் போட
வேண்மென்று வற்புறுத்தியதன் காரணமாக ரோடு போடு
வது நின்றிருக்கிறது. ரோடு போடவேண்டுமென்று, பொது
மக்களும், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த,
அந்த ஊத்தங்கரை வட்டாரக் குழுவும் தொடர்ந்து பல்வேறு
போராட்டங்களை நடத்தி முடியாமல் போனதால் 1-7-1983
லிருந்து தொடர் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள.
அந்த வேலையை நடத்த வேண்டுமென்று.
கொண்டு வந்துள்ள ஒரு நியாயமான வேலை நடைபெற வேண்டு
மென்று வற்புறுத்தி உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசாங்கம
அந்த ஒன்றியத்தின் ஆணையாளர், இந்தக் கோரிக்கை வந்த
பின்னால், 100 மூட்டை அரிசி போனது, வேலை நின்று
விட்டது, ரோடு போடுவது நின்று விட்டது, புறம்போக்கு
நிலத்தில் ரோடு போட வேண்டுமென்று வலியுறுத்துவதை ஒத்துக்
கொண்டு, நான் அதைச் செய்கிறேன், இந்த உண்ணாவிரதத்தை
வாபஸ் வாங்குங்கள் என்று சொல்லி, முடித்து ஒரு அக்ரிமென்
டும் போட்டிருக்கிறார். அதாவது, கடிதம் எழுதியிருக்கிறார்.

* * * *

(மாலை 4-40)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) :
அந்தக் கடிதத்தை என்னிடத்தில் காண்பித்த பின்னால் தான்
நீங்கள் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாற்றுத் தலைவர்
அவர்களே, கடிதத்தை நீங்கள் பார்க்க வேண்டும். பார்த்து
நீங்கள் அனுமதித்தால்தான் கடிதத்தைப் படிக்கலாம். இது

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



1983 நவம்பர் 17] [திரு. ப. குழந்தைவேலு]

பி.ஏ.சி. யில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து எடுத்த முடிவாகும். தங்களுக்குக் காட்டாமலேயே கடிதத்தை படித்துவிட்டார். ஆகவே அது அவைக் குறிப்பிலே இருக்கலாமா என்பதற்கு தங்கள் ஆணையைப் கோருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) கடிதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் அவைக் குறிப்பிலே யிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே சில கோரிக்கைகளைச் சொல்வதற்கும், இருக்கிற உண்மை நிலையை அரசிற்கு எடுத்துச் சொல்வதற்கும் தான் ஜனங்கள் எங்களை அனுப்பிவைத்தார்கள் என்று நினைக்கிறேன். அந்த வகையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிற போது, நியாயம் வேண்டும், உண்மை வேண்டும், நேர்மை வேண்டும், நீதி வேண்டும் என்று சொல்கிற அமைச்சர் அவர்கள், நான் நியாயமாக பேசுகிறபோது—அவன் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்டான் என்று நான் சொல்லவில்லை ; வாங்கிய அரிசி உண்மை ; ரோடு போட வேலைகள் ஆரம்பித்தது உண்மை ; புறம்போக்கிலே போடு என்றால் பட்டா நிலத்தில் போட்டு வேலை நின்றிருக்கிறது என்று தான் நான் சொன்னேன். உடனே அதை பூராவும் நீக்கிவிடுகிறேன் என்று சொன்னால் என்ன நியாயம் ? நான் எல்லாவற்றையும் பேசி முடித்ததற்கு பிறகு தலைவர் அவர்கள் ஒரே வார்த்தையில் பூங்காவனம் பேசியவை எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது என்று சொல்லிவிட்டால் முடிந்தது கதை. ஆகவே அந்த ஊரை பொறுத்தவரையில் நான் ஒரு தகவலை சொல்லி முடித்து விடுகிறேன். சாலை அமைக்க வேண்டிய புறம்போக்கு இடம், சர்வே நம்பர் எல்லாவற்றையும் நான் கொடுத்து விடுகிறேன். இதையெல்லாம் பார்த்து, நீதியின் பெயரால் உண்மையின் பெயரால் இந்த அரசு மக்கள் பக்கம் நிற்பது உண்மையானால், இதன்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி போன்றவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் இல்லாத காரணத்தால் பலவித சிரமங்கள் ஏற்படுகின்றன. நான் வசிக்கிற ஊரின் பக்கத்திலே ஒரு நகராட்சி இருக்கிறது. அந்த நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் கிடையாது ; அதாவது மக்கள் தலைவர்கள் இல்லை ; உறுப்பினர்கள் இல்லை. நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு ஒரு கோடியே முப்பது இலட்சம் வருமானம். அந்த வருமானத்தில் 88 இலட்சம் ரூபாயை சம்பளமாக கொடுக்கிறார்கள். அரசிடம் வாங்கிய பணத்திற்கு வட்டியாக திருப்பிச் செலுத்த வேண்டியதற்கு 30 இலட்சம் கொடுக்கிறார்கள். மீதம் இருக்கிற 12 இலட்சம் ரூபாயில் மக்கள் வசதிகளுக்கு, அபிவிருத்தி வேலைகளுக்கு, மின்சாரம்,

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1983 நவம்பர் 17

வைத்தியம், சாலைகள் போன்றவைகளுக்கு செலவு செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் செலவு செய்வதில்லை. ஏன் சொல்கிறேன் என்றால், இதிலே ஒரு கொடுமை இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கொள்கை எல்லோருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுக்க வேண்டும் என்பது ; ஆனால் குடி தண்ணீர் வழங்குவதற்காக தமிழகம் முழுவதிலும் இருக்கிற ஊராட்சியானாலும், நகராட்சியானாலும், மாநகராட்சியானா லும் அந்தந்த இடத்திற்கு என்று மின்சார கோட்டாவை வைத்திருக்கிறார்கள். இத்தனை யூனிட் தான் வேலூருக்கு; சென்னைக்கு இத்தனை யூனிட், மதுரைக்கு இத்தனை யூனிட் என்று இதுபோல வைத்திருக்கிறார்கள். அந்த யூனிட்டிற்கு மேலே போனால் சர்சார்ஜ் விதிக்கிறார்கள். இது என்ன நியாயம் ? தனிநபர் அல்ல ஒரு நகராட்சி. மின்சார வாரியம் என்பது தனியாக இருக்கலாம். ஆனால் அது அரசினுடைய ஒரு பகுதி. அரசு அதற்கு 200 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றிற்கு கொடுக்கிறது. மின்துறை அமைச்சர் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள், 200 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றிற்கு துண்டு விழுகிறது என்று. ஆனால் நகராட்சியின் பணியின் கீழ் அந்த மக்களுக்கு குடிதண்ணீர் அளிக்க வேண்டிய மின்சாரத்திற்கு சார்ஜ் விதிப்பது சரிதானா ? அதை பரிசீலிக்க வேண்டும். வேலூருக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 55 ஆயிரம் ரூபாய் மின்சாரத்திற்கு பணம் கட்டவேண்டும். சர்சார்ஜ் சேர்த்து இந்தத் தொகை. அப்படியானால் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மின்சாரத்திற்கே வருஷத்திற்கு கட்டி விடுகிறார்கள். இதிலே சர்சார்ஜ் அடங்கும். அந்த நிலை இருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். அதை பரிசீலித்து அந்த நகரத்திற்கு என்ன செய்யலாம் என்பதை முடிவெடுக்க வேண்டும்,

இன்னொன்று என்னவென்றால் வேலை ஆட்கள். நகரம் முழுவதும் சுத்தம் செய்யப்பட வேண்டும் ; கால்வாய் எடுக்க வேண்டும் ; குப்பை அள்ள வேண்டும் ; என்று எல்லா வற்றையும் சொல்கிறார்கள். அதை வரவேற்கலாம். ஆனால் நடைமுறையில் 40 ஆண்டுகளுக்கு முன்பு போட்ட ஊழியர்கள் தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம் ? (குறுக்கீடு) 20 வருஷத்திற்கு முன்னால் போட்டது ; ஒப்புக்கொள்கிறேன். ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மக்கள் வாழ்கிற வேலூருக்கு அப்போது போட்ட அதே ஊழியர்கள் தான் ; எப்போது போட்டார்களோ தெரியவில்லை. அதே மாதிரி என்னுடைய தொகுதியில் களிஞ்சூர், காட்பாடி, காந்தி நகர், தாராப்பாடி, திருவலம் போன்ற பகுதிகளுக்கு பணியாளர் களே கிடையாது. அந்தப் பகுதிகளிலே உள்ள தெருக்களில் உள்ள குப்பைகளை அள்ளி சுகாதாரப் பணிகளைச் செய்வதற்குத் தேவையான ஆட்கள் அதிகமாக இல்லாமல் இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்குமானால் அவர்கள் இதையெல்லாம் வற்புறுத்துவார்கள், நீங்களும் தருவீர்கள்.



1983 நவம்பர் 17] [திரு. என். ஏ. பூங்காவனம்]

ஊராட்சி மன்றங்களில் எந்தத் கிராமங்களிலேயாவது முறையாக லைட் எரிகிறதா ? என்னுடைய தொகுதியில் டவுன் பஞ்சாயத்துக்கள் ஐந்து நீங்கலாக, 62 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சி மன்றங்களில் உள்ள எந்தக் கிராமத்திலேயாவது முறையாக லைட் எரிகிறதா ? இதைப்பற்றிக் கேட்டவுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ன சொல்கிறார்கள் ? உதிரி பாகங்கள் இல்லை" என்று ஒரு முறை சொல்கிறார்கள், இன்னொரு முறை பல்புகள் இல்லை என்று சொல்கிறார்கள், ஸ்டாக் வரவில்லை என்று சொல்கிறார்கள். இதனால் லைட் எரியாத கொடுமைகள் நிலவுகின்றன. இதற்குக் காரணம் ஊராட்சி மன்றங்கள் இல் லாதது தான்.

என்னுடைய தொகுதியிலே கழிஞ்சலூர், வெஞ்சூர், சேலூர், ஜாபராபேட்டை பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் தண்ணீர் கொடுப்பதாக ஒரு நிலைமை. அந்தத் தொட்டி ஹைதர் அலி காலத்தில் கட்டப்பட்டது ; சிறிய தொட்டி ; பக்கங்களில் பத்து ஓட்டைகள், அதற்குத் தண் ணீர் வருகின்ற வழி முழுவதும் ஓட்டைகள். எனவே, அந்தத் தொட்டிக்குத் தண்ணீர் வரவில்லை, ஆனால் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. மோட்டார் மட்டும் ஓடுகிறது. ஆனால், தண்ணீர் எங்கே போகிறது. என்று தெரியவில்லை. இதைப்பற்றி யார் கேட்பது ? குடிநீர் வாரி யத்தில் ஐந்து பிரிவுகள் இருக்கின்றன. இவரைக் கேட்டால் அவரை கேட்கச் சொல்கிறார்கள், அவரைக் கேட்டால் இவ ரைக் கேட்கச் சொல்கிறார்கள். ஆகவேதான் இந்தக் குறை பாடுகளை நீக்குவதற்காகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று கோருகிறோம்.

முதலமைச்சரவர்கள்கூட எதிர்த்தார்கள், அந்த '' தண்ணீர் தண்ணீர் '' படத்தில் உள்ள அளவிற்கு நிலைமைகள் மோச மாகப் போய்விடக் கூடாது. அந்த நிலைமை நமக்கு வரக்கூடாது தண்ணீர் நிச்சயமாக வேண்டும், அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வேட்டி, சேலைகளைக் கொடுப்பது மிகவும் அத்தியாவசிய மான விஷயம்தான். என்னுடைய தொகுதியிலே சேலை, வேட்டி கொடுப்பதற்காக என்னைக் கூப்பிட்டார்கள். அங்கே போய்ப் பார்த்தால் யார் யார் வருகிறார்கள் தெரியுமா ? வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களும், வீட்டைக் கட்டி வாடகைக்கு விட்டுக் கொண்டிருப்பவர்களும், நான்கைந்து மாடுகளை வைத் துக் கொண்டிருப்பவர்களும் வருகிறார்கள்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஹைதர்அலி காலத்தில் கட்டப்பட்டது என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது அடிக்கல்லை அங்கே நாட்டியிருக்கின்றார்களா ? அல்லது ஹைதர் அலி காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ?

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, எங்கள் ஊர்ப் பக்கத்திலே நிறைய ஆற்காட்டு நவாப்புகள் இருந்திருக்கிறார்கள். நான் அதற்காகச் சொல்லவில்லை, அது உங்கள் ஆட்சிக்கு முன்னால் கட்டப்பட்டது. இப்படிப் பழமையானவற்றையும், உதவாமல் இருப்பதையும், தேவையில்லாமல் இருப்பதையும் பற்றிச் சொல்லும்பொழுது ஹைதர் அலி காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லுவது வழக்கம். அந்த முறையில்தான் சொல்கிறேன்.

வேட்டி, சேலை கொடுக்கும்பொழுது யாருக்குக் கொடு[க்]கிறோம்?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) ஹைதர் அலியை இது அவமானப்படுத்துவதைப் போல் இரு[க்]கிறது. அதை ஏன் சொல்கிறீர்கள் ?

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த வேட்டி, சேலைகளை வாங்க வந்த பெருவாரியா[ன]வர்கள் என்னைப் பார்த்தவுடன் திரும்பி விட்டார்கள். சேலை[...] வேட்டியை வாங்கவில்லை. ஏனென்றால் அவர்கள் வசதியா[...]வர்கள். யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தா[...]கள் ? இந்த மன்றத்தில் பேசப்பட்டது. வறட்சி வந்துவிட்ட[...] காரணத்தால் கைத்தறித் தொழிலில் உற்பத்தி செய்த து[ணி]களை கிராம மக்கள் வாங்கவில்லை, அதனால் கைத்தறி நெ[ச]வாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களைப் பாதுகாக்[க] வேண்டும், ஆகவே, வேட்டி, சேலை என்று அவர்களிடமிருந்[து] வாங்கிக் கொடுக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் சொ[ன்]னார்கள். அதை நாங்களும் ஒத்துக்கொண்டோம். வேலை[...]யில்லாத கிராமப்புற விவசாயிகள், நிலமற்ற கிராமப்புற விவசா[யி]கள் துணிகளை வாங்குவதற்கு வசதியில்லாமல் இருக்கிறார்க[ள்]. கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்திருக்கும் துணியி[ன்] விலை பத்து கோடி ரூபாய் இருக்கும். அதனால் அவர்களிடமிருந்[து] துணி வாங்கப்பட்டிருக்கிறது. அது உண்மை. அவர்களி[ட]மிருந்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட[து]. அதை நாங்கள் வரவேற்றோம். ஆனால் கொடுத்தது யாருக்கு[...] நலிவுற்ற மக்களுக்கு கிடைத்திருக்கிறதா ? யார் யாரோ வாங்[கி]யிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள நலிவுற்[ற] பலருக்குந்த் துணியே கிடைக்கவில்லை. இதையெல்லாம் சொல்[...]லாம் என்றால் அமைச்சர்கள் அந்தப் பக்கமே வருவதில்லை





வேறு ரூட்டிலே போய்விடுகிறார்கள். அண்மையிலே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொனனார்கள், உங்கள் தொகுதிக்குத் தேதி கொடுத்துவிட்டேன் என்று. அவ்வாறு இல்லை அது வேறு, அதை நான் சொல்லவில்லை. உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்கவில்லை. நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஏழை எளிய கிராம விவசாயிகளுக்குக் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

(மாலை 4—50)

அடுத்து பழனி நகராட்சி இருக்கின்றது. அங்கேயுள்ள தனி அதிகாரியின் கொடுமை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே 200 கை வண்டி இருந்தது. அதாவது நான்கு சக்கர வண்டி. ஒரு வண்டிக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் வாடகை. அதனால் 400 ரூபாய் நகராட்சிக்கு வருவாய் வந்தது. அந்தப் பணத்தை வசூலிக்கின்ற நபர் ஒரு தனி அதிகாரி என்பதால், அதாவது தேர்ந்தெடுக்கப்படாத நகராட்சியின் தனி அதிகாரி என்பதால் அந்த வரியினைப் பூராவையும் ரத்து செய்துவிட்டார்கள். ஏன் அப்படி ரத்து செய்யப்பட்டது என்பது பற்றி சிந்திக்க வேண்டும். அங்கே மீண்டும் அந்த வரியினை விதிப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வால்பாறையிலே டவுன்ஷிப் கமிட்டி போட்டிருக்கிறார்கள்......

மாண்புமிகு திரு.எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழனி நகராட்சி பற்றிச் சொல்கிறார்கள். நான் பழனி நகராட்சிக்குச் சமீபத்திலே சென்று இருந்தபோது நகராட்சியினுடைய பயணிகள் விடுதிக்குள்ளே போகும்போது நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் அதாவது எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பழ வியாபாரம் செய்கின்றவர்கள் எல்லாம் என்னை மறித்துக் கொண்டு இவ்வளவு வரி போட்டுக் கொடுமைப் படுத்துகிறார்கள், நகராட்சியிலே வரி வாங்குகிறார்கள், எனவே எப்படியாவது இதற்கு ஒரு வழி செய்யுங்கள் என்று கேட்டார்கள். அப்படி எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்று கூடி கேட்டார்கள். நண்பர் திரு. குப்புசாமி எம். எல். ஏ., அவர்களும் இருந்தார்கள். அது அவர்களுக்கும் தெரியும். திரு. குப்புசாமி அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி ஏற்பாடு செய்வதாகச் சொல்லி இருக்கிறார்களே தவிர இன்னும் அதை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 நவம்பர் 17

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. என். பழனிவேல் : * * *
* * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி எல்லாம் திடீரென்று எழுந்து பேச முடியாது. எனவே என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியவை நீக்கப்படுகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். 200 வண்டிகளுக்கும் வரி ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. * * *

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் தனி அதிகாரி மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். அதிகாரிகள் இங்கே உறுப்பினர்களாக இல்லை. மேலும் ஏதாவது குற்றச்சாட்டு சொல்வது என்றால் அதற்கான ஆதாரத்தை அவர்கள் கொடுக்கவேண்டும். அப்படி கொடுத்தாலாவது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே அவர்களிடத்திலே ஆதாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொட்டைக் கடுதாசியை வைத்துக் கொண்டு குட்டையைக் குழப்பவேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பூங்காவனம் அவர்களிடத்தில் ஆதாரம் ஏதேனும் இருக்கிறதா ?

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. வேண்டுமானால் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அது பற்றிய விவரங்கள் விவரமாக எழுதிக் கொடுப்பார்கள். நானும் கொடுக்கிறேன். அதைப் பற்றி எனக்கு ஒன்றும் பயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுப்பார் என்று சொல்லிப் பேசுவது சரியல்ல. அந்த ஆதாரத்தை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் கொடுத்து, அவருடைய அனுமதியைப் பெற்று பேசியிருக்கவேண்டும். அப்படி முன்கூட்டியே பேரவைத் தலைவரின் அனுமதி பெறாத காரணத்தால், அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1983 நவம்பர் 17]

திரு என். ஏ. பூங்காவனம் : என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்று சொல்லிக் கொள்கிறேன். கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த நிகழ்ச்சியைச் சொல்கிறேன். அரசாங்கம் தீ விபத்து, மற்ற விபத்துக்கள் ஏற்பட்டால், அதனால் குடிசைகள் இழந்தவர்களுக்கு ரூ. 200 கொடுப்பது என்று ஆணையிட்டுள்ளது. அந்தப் பணத்தைத் தாசில்தார் நேரில் பார்த்து அல்லது வேறு மற்ற அதிகாரிகள் பார்த்து 200 ரூபாய் ஒரு குடிசைக்குஎன்று கொடுக்கிறார்கள். 3 மாதங்களுக்கு முன்னால் சேதுவனம் என்ற இடத்தில் நடந்ததை குடியாத்தம் தாசில்தார் அவர்களிடத்தில் கூட நான் சொல்லியிருக்கிறேன்.

இது ரெவின்யூ இலாக்கா பற்றியது என்றாலும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறேன். அந்த இடத்தில் ஒரு ஆர். ஐ. 75 ரூபாய் தான் கொடுத்து இருக்கிறார். நானே தாசில்தாரிடத்தில் நேரிலே சொன்னேன். இது மாதிரி ஆர். ஐ. 75 ரூபாய் தான் கொடுத்தார், மீதமுள்ள 125 ரூபாய் கொடுக்கவில்லை என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வருவாய்த் துறை அமைச்சரிடத்தில் சொல்லவேண்டியவைகளை இப்போது பேச வேண்டாம். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தேர்தல் சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் சொல்லிக் கொள்கிறேன். ஜனவரி மாதம் 15-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதிக்குள் அந்தத் தேர்தலை நடத்திக் கொள்ளலாம். எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. கண்டிப்பாக அந்தத் தேர்தலை நடத்தவேண்டும். இதை ஆணையாக அல்ல, அன்போடு வேண்டுகிறோம். எவ்வளவோ திட்டங்களை நாம் இப்போது நிறைவேற்றி வருகிறோம். தன்னிறைவுத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்று பல முன்னேற்றத் திட்டங்களை நடத்தி வருகிறோம். உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி காரியங்களைச் செய்து வருகிறோம். (மணியடிக்கப்பட்டது). இந்தத் தேர்தலை— மீண்டும் சொல்கிறேன்—ஜனவரி 15-ம் தேதியிலிருந்து 30-ம் தேதிக்குள் நடத்திவிடுங்கள். ஆணையாகச் சொல்லவில்லை, அன்போடு வேண்டுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேர்தலை நடத்துவார்கள் என்று நம்புகிறோம். அதிலே மாற்றம் வரும் என்று நாங்கள் ஐயப்படுகிற காரணத்தால், இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் 31—3—1984 வரை நீங்கள் நீட்டிப்புக் கேட்பதை, 3 மாதம் குறைத்து, 31—1—1984 வரை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, ஜனவரி மாதத்தில் தேர்தலை வைத்துக் கொண்டால் நல்லது. தேர்தல் நடத்துவது உறுதி தானா ? ஊரிலே போய் சொல்லலாமா (சிரிப்பு) .(மணியடிக்கப் பெற்றது).

[1983 நவம்பர் 17

(மாலை 5—00)

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ் சாத்துத் தேர்தல் ஜனவரி மாதம் வரும் என்று நேற்றையதினம் அறிவித்தார்கள், மகிழ்ச்சி. அதே நேரத்தில் பஞ்சாயத்துத் தேர்தலோடு சேர்த்து நகராட்சிகள் தேர்தலையும் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே கிராமங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலை நடத்தி ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரும் தொண்டு செய்து, அந்தக் கிராமங்களிலே நல்ல முறையில் செய லாற்றி வந்திருக்கிறார்கள். கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்ன தாக நடந்த தேர்தலுக்குப் பிறகு தனி அதிகாரிகளை நியமித்த தன் மூலம் இன்று கிராமங்களிலே நடைபெறவேண்டிய நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்பட முடியாமல், நடைமுறைக்கு வரா மல் இருப்பதை நாம் நன்றாக அறிவோம். கிராமங்களில் இன் றைக்கு ஒரு சிறு காரியம் நடைபேற வேண்டுமென்றாலும், கிரா மத்திலே மின்சார விளக்கு எரிய வெண்டுமென்றாலும் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப அங்கே சட்டமன்ற உறுப்பினர்களைத் தேடு கின்ற சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். காரணம் என்னவென் றால் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறாதது தான்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கிராமங்களிலே பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற்றிருந்தால் அந்தக் கிராமங்களுடைய குறைகளை அவர்கள் எடுத்துச் சொல்லி நல்லமுறையில் செயலாற்ற வாய்ப்பாக இருக்கும். இப்போது இருக்கிற நடைமுறையில் அங்குள்ள கிளார்க்குகள் பகுதிநேர ஊழியர்களாக இருந்துகொண்டு இருப்பதால் அவர்கள் சரியான முறையிலே வேலை பார்க்க முடியாமல் இருக்கிறார்கள். அத னால் சில பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடைபெற முடியா மல் இருக்கின்றன. அந்த அடிப்படையை எடுத்துவைத்து, இன்ன பஞ்சாயத்தில் இன்ன குறை இருக்கிறது என்று சொல்ல வேண்டு மென்றால் பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற தனி அதிகாரிகளை பார்க்க வேண்டியிருக்கிறது. அதே மாதிரி, கிராம சேவக்கு களின் பொறுப்பை பார்த்தால், ஒரு கிராம சேவக் கிட்டத்தட்ட 4 அல்லது 5 ஊர்களை மேம்பாட்டுப் பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, இப்போது இருக்கக்கூடிய கிராம சேவக்குகள் கிட்டத்தட்ட 10 மைல் 15 மைல் தூரத்தில் குடி இருந்துகொண்டு இருப்பதால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக் களில் நடைபெறுகின்ற நல்லவற்றைக் கண்டுகொள்ள முடியாமல் இருக்கிறது.



1983 நவம்பர் 17] [திரு. எஸ். என். இராமசாமி]

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் வர வேண்டுமென் றால் கிராமங்களில் இருக்கிற நிலங்களை மாற்றுதல் செய்து, விற்பனை செய்வதன் மூலம், அந்தப் பத்திரம் வாயிலாக அதிக மான வருவாய் ஏற்கெனவே வந்து கொண்டிருந்தது. இப் போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக தற்போது எந்த விதமான நில விற்பனையும், நிலம் வாங்குவதும் இல்லாத காரணத்தால் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் இல்லாமல் இருக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தை அரசு தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்து கிராமத்தினுடைய அடிப்படை வேலை களை கவனிக்கும்போது தனிஅதிகாரிகள் அவற்றை நல்லமுறையில் சரியான முறையில் செயல்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, தன்னிறைவுத் திட்டத்தின் வேலை கிராமங்களுக்கு சரி யாகப் பயன்படவில்லை.

நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த மட்டில் இன்று எந்த நகரப் பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குக் கூட நகரப் பஞ்சாயத்துக்களுக்கு வசூல் வரவில்லை. அதனால் நல்ல காரி யங்கள் செய்ய முடியாமல் இருக்கின்றன.

வறட்சி ஏற்பட்டு, மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் வைக் கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை சம்பந்தப்பட்ட பம்பு செட்டுகள் ரிப்பேர் ஆனால் அந்த பம்புசெட்டுகள் ரிப்பேர் செய்யப்பட்டு, கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கக்கூடிய அள வுக்கு பஞ்சாயத்து நிர்வாகம், தனி அதிகாரிகள் நிர்வாகம் சரி யாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜெகத்ரட்சகன்) :

** * **

** * **

திரு. எஸ். என். இராமசாமி : மாற்றுத் தலைவர் அவர் களே, வறட்சி ஏற்பட்டு, குடிநீர் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக, அங்கே அடிப்பம்புகள், சரியாக வேலை செய்ய வில்லை. அதை ரிப்பேர் பண்ணவேண்டுமென்றால், அந்தத் தனி அதிகாரிகளிடம்தான் சொல்லவேண்டும். ஏற்கனவே, ஒரு கிராமத்தைப் பொறுத்தவரையில், ஒரு யூனியனுக்கு கிட்டத்

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்படுகிறது.

[திரு. எஸ். என். இராமசாமி] [1983 நவம்பர் 17

தட்ட 100 அடிப் பம்புகள் இருக்கின்றன. அவற்றை ரிப்பேர்
பண்ணக்கூடியவர்கள் ஒருவர்தான் ஒரு யூனியனுக்கு இருக்
கிறார். எனவே, 100 அடிப்பம்புகள் இருக்கிற யூனியனுக்கு
குறைந்தது 2 பேர்களாவது இருக்கவேண்டும்.

இன்று தனி அதிகாரிகளுடைய நிலை எந்த நிமிஷமும் யூனி
யனுக்குச் சென்று அவர்களைப் பார்க்கவேண்டுமென்றால்,
அந்த யூனியனைப் பராமரிக்கின்ற பி.டி.ஓ. சரியாகச் செயல்
படுவதாகக் காணவில்லை. காரணம் நம்மைப் போன்றவர்கள்
குறைகளைக் கூறவேண்டுமென்று சென்றால், பி.டி.ஓ. இல்லை
என்று தெரிவிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. மேலும் மக்கள்
குழு ஒன்றை யூனியன் மூலமாக செயல்படுத்தி வந்தார்கள்.
ஆனால் கடந்த 6, 7 மாதங்களாக அந்த மக்கள் குழுக்
கூட்டம் நடைபெறவில்லை. இரண்டு மாதங்களுக்கு ஒரு
முறை அந்த மக்கள் குழுக் கூட்டம் நடைபெறுமானால், கிரா
மத்திலேயுள்ள குறைகளை எடுத்துச் சொல்லி, அந்த மக்கள்
குழுக் கூட்டத்தின் வாயிலாக செயலாற்றுவதற்கு வாய்ப்பாக
அமையும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு
யூனியனிலும் கூட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர
வர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தனி அதிகாரிகள் ஏற்கனவே, குடும்ப கட்டுப்பாட்டிற்குக்
கொடுத்துக் கொண்டிருந்த ரூபாய்களை அறுவை சிகிச்சை
செய்துவிட்டோம் என்ற அடிப்படையில் வைத்து கணக்கு
களை எழுதி, சம்பந்தப்பட்ட கிளார்க்குகள், தனி அதிகாரிகள்,
தாங்களே எடுத்துக்கொள்வதாக கிராம மக்கள் பேசுகிறார்கள்.
அது எந்தச் சூழ்நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு
அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

மேலும் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில், கிட்
டத்தட்ட 10 ஆண்டுக் காலமாக, ஏர் உழும் மிஷன்கள் ஒவ்
வொரு பஞ்சாயத்திலும் பழுதுபட்டு, வெளியிலே ரூம்களிலே
வைக்கப்பட்டிருக்கின்றன. உடனடியாக அரசு கவனம் செலுத்தி
வீணாகக் கிடக்கின்ற அந்த மிஷன்களை விற்றுவிடவேண்டும்
என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : *

* * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜெகத்ரட்சகன் :

* * *

இதுகுறித்த விஷயங்களை எல்லாம் நீக்கும்படி உத்தரவிடு
கிறேன்.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



1983 நவம்பர் 17]

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். என். இராமசாமி: துணைத் தலைவர் அவர்களே,
என்னுடைய தொகுதியில் ஆழ்வார் திருநகரியைப் பொறுத்த
வரையில் இதுபோன்ற ரோடு மிஷன்கள், இரண்டு மூன்று
ரோடு ரோலர்கள் வெளியிலே மழையிலே நனைந்து
கொண்டிருக்கின்றன. அவற்றையாவது உடனடியாக விற்பதற்கு
அரசு ஆவண செய்யவேண்டும் என்று கேட்டு, இந்தத் தனி
அதிகாரிகளுடைய காலத்தை நீட்டாத வகையில் ஜனவரி
20-ஆம் தேதியிலிருந்து 30-ம் தேதிக்குள் இந்தத் தேர்
தலை உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று ஜனதா கட்சி
சார்பில் கேட்டு அமர்கிறேன்.

(மாலை 5-10)

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்று எடுத்துக்கொண்டு இருக்கிற

Tamil N1du Panc'iayats Union C)uncils (Appointment of Special Officers, S:cond Amendm.nt, L.A. Bill No.51 of 1983

Tamii Nadu Panchayats (Second Amendm:nt), L. A. Bill No. 52 of 1983,

Tamil Nadu Panchayats (Third Amendment L. A. Bill No. 53 of 1983.
ஆகிய

இந்த பில்களின் மீது சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்பு
கிறேன். முதலிலே அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்
டத்திலேயும் சரி, டிமான்ட் வந்தபோதும் சரி, அந்த இரு சம
யங்களிலேயும், பஞ்சாயத்துக்கள், மேஜர் பஞ்சாயத்துக்கள்,
பஞ்சாயத்து யூனியன்கள், ஆகிய அமைப்புகள் நல்ல முறையில்
பணி செய்வதற்கு அதிகாரிகளை நாம் நியமித்து இருக்கி
றோம் என்று சொன்னார்கள். மேலும் அவர்களுக்குக்
காலத்தை நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று இப்போது
சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நான் ஒன்றைச்
சொல்லவிரும்புகிறேன். முனிசிபாலிட்டிகளிலும், பஞ்சாயத்து
யூனியன்களிலும் மற்றும் மேஜர் பஞ்சாயத்து யூனியன்களி
லும் குற்றம் குறைகள் அதிகமாக நடந்து கொண்டு இருக்கின்
றன. இவைகளைக் கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் அங்கே
கிடையாது. பஞ்சாயத்து யூனியனிலே கமிஷனர் இருக்
கிறார். என்ஜினியர்கள் இருக்கிறார்கள். ஓவர்சியர்கள்
இருக்கிறார்கள். கமிஷனர்தான் பைனல் பில் பாஸ் பண்ணக்
கூடியவர். கமிஷனர்தான் எஸ்டிமேட்சை அப்ரூவ் பண்ண
வேண்டியவர். அவர் எஸ்டிமேட்சை கண்ட்ரோல் பண்ண

வேண்டியவர். அங்கேயிருக்கின்ற என்ஜினியர்தான் எஸ்டிமேட்டைப் போடுகிறார். கடைசியில் பைனல் பில் பாஸ் பண்ணுவதும் இந்த கமிஷனர்தான். என்ஜினியர், அந்தக் கமிஷனருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர். ஓவர்சியர் அந்த என்ஜினியருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர். அவருக்குக் கீழ் இருக்கிற கிராம சேவக் மூலமாகத்தான் இந்தப் பணிகள் எல்லாம் கொடுக்கவேண்டும் என்று இன்றைக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த 4 பேர்களும் கமிஷனருடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்கள். இப்படியிருக்கும்போது என்ன கணக்கை எப்படி சரி செய்யமுடியும்? நான் எந்தக் கட்சியையும் பற்றிச் சொல்லவில்லை. அரசியல் காரணத்திற்காகச் சொல்லவில்லை. எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, மற்ற பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும், முனிசிபாலிட்டியாக இருந்தாலும், இப்படி நடக்கிற குற்றங்கள் உண்மையா, இல்லையா என்பதை ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிசரை ஒன் மேன் கமிஷனாகப் போட்டு கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டு காலமாக நடந்து இருக்கின்ற பல்வேறு தொல்லைகளைக் களைய, அவை உண்மையா என்பதைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏன் என்றால் மக்களுடைய பணத்தை வீணடிக்கச் செய்யமாட்டோம் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இங்கே உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள்; மிக கண்டிப்பான முறையிலே சொல்லியிருக்கிறார்கள். எந்த அதிகாரிகள் தவறு செய்தாலும், அவர்கள் யார் என்று பார்க்காமல் தயவு தாட்சண்யம் இல்லாமல், கடுமையாக நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதிமொழியைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சரோடு கலந்தும், அல்லது கேபினட்டோடு கலந்தும், இந்த ஒன் மேன் கமிஷனை அமைத்தால்தான் நேர்மையாக இந்தப் பேரவையிலே கொடுத்த உறுதிமொழிக்கு உரியவர்கள் ஆவார்கள் என்று நான் நம்புகிறேன். மெம்பர்களிலே சில பேர்கள் ஆதாரங்களைச் சொல்லியிருக்கலாம். சிலவற்றில் ஆதாரங்கள் இல்லாமலும் இருக்கலாம். ஆனால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தேவையில்லாமல் பேசுவதும், வீணாகக் காலதாமதம் செய்து மக்களுடைய பணத்தை வீணடித்து, இதை விளையாட்டுக் கூடமாக நினைத்துக்கொண்டு பேசுவதும் ஆகிய அந்த எண்ணங்களை எல்லாம் விட்டுவிட்டு, யார் யார் என்னென்ன பேசினார்கள், அவை உண்மையா என்ன என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். அதிகாரிகள் தவறு செய்திருப்பது உண்மையா, அப்படியிருந்தால் அதற்கு என்ன பரிகாரம் போன்றவற்றை கவனிப்பதற்கு இந்த ஒன் மேன் கமிஷனை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட கடந்த 10, 13 ஆண்டுக்காலமாக பஞ்சாயத்து போர்டானாலும், மேஜர் பஞ்சாயத்தானாலும், முனிசிபாலிட்டியானாலும் பஞ்சாயத்து கவுன்சில்களானாலும் தேர்தல்கள்





நடைபெறாமல் இருப்பதால் இவைகளை எல்லாம் உட்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது இந்த ஸ்பெசல் ஆபிசர்கள் போடுவதிலே நீங்கள் சொல்லியிருப்பது தேர்தல் முறை. அந்த முறையிலே 1981 ஆம் வருஷம் எடுத்த சென்சஸ் பிரகாரம் தேர்தல் நடத்தப்போகிறீர்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் பிப்ரவரி மாதம் தேர்தல் நடக்கும் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த 1983 ஆம் ஆண்டு சென்சஸ் பிரகாரம், மக்கள் தொகைப்படி தேர்தல் வைக்கப் போகிறோமா, அல்லது 1981-ம் ஆண்டு எடுத்த சென்சஸ்படி வைக்கப்போகிறறோமா என்பதைத் தெரிவிக்கவேண்டும். அப்படி 1981-ல் எடுத்த சென்சஸ்படி வைப்பதாக இருந்தால், இப்போது ஹைகோர்ட் தீர்ப்பு, பிறகு அதன்மேல் சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்று இருக்கிற இந்த ரிசர்வேசன் ஃபார் எஸ்.சி., எஸ்.டி. ஆகிய இவை எல்லாம் இருக்கின்றனவே—இவைகளுக்கு நீங்கள் அமென்ட்மென்ட் கொண்டுவந்து, நீங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி, முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி, பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கொடுக்கவும் இருக்கின்ற இந்தச் சட்டத்திற்கு ஒரு அமென்ட்மென்ட் கொண்டுவந்து செய்யப் போகிறீர்களா? அல்லது, இன்று இப்போதிருக்கிற நிலைமையிலேயே செய்யப்போகிறீர்களா? எப்படிச் செய்யப்போகிறீர்கள் என்று புரியவில்லை. ஆகவே, இந்த சந்தர்ப்பத்திலே, இந்த பில்லுக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூட, நம்முடைய ....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில்லுக்கு சம்பந்தம் இல்லாததைப் பேச வேண்டாம்.

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய துணை சபாநாயகர் அவர்களே பில்லுக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டார்.............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்லவில்லை. நீங்களே ஒப்புக்கொண்டதினால், அதைப் பேசவேண்டாம் என்று சொன்னேன்.

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய உதவி சபாநாயகர் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்கிறேன், மறுக்கவில்லை. ஆனால், ஏன் அதைக் குறிப்பிட்டேன் என்றால். தேர்தல் என்ற வார்த்தை இதில் இருக்கிறது. ஆகவே, தேர்தலை நடத்துவதற்கு முன்பாக எப்படி நம்முடைய சர்க்கார் நடந்து கொள்ள இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அதில் சம்பந்தப்பட்டவர் என்பதால் குறிப்பிட்டேன். நீங்கள்

[திரு. எல். இளையபெருமாள்] [1983 நவம்பர் 17

எங்கே இது சம்பந்தம் இல்லாதது என்று அதையும் எடுத்து
விடுகிறேன் என்று சொல்லிவிடுவீர்களோ என்று பயந்துதான்
நான் முன் கூட்டியே அதைச் சொன்னேன். எப்படியும் மார்ச்
1984-க்குள் கொண்டு வரவேண்டும். அதை எப்படிச் செய்யப்
போகிறீர்கள் என்று தெரியவில்லை.

ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு
தினங்களுக்கு முன்பு சொன்னது, பிப்ரவரியிலே தேர்தல்
என்று. இப்போது நீங்கள் 1984-லே மார்ச்சிலே வரும் என்கி
றீர்கள். சீக்கிரமாகக் கொண்டு வந்தால் குறையில்லை.
ஆனால் நிச்சயமாக பிப்ரவரிக்குள் நடக்குமா ? நடக்கும்
என்ற நம்பிக்கையை முதல்வர் அவர்கள் சொல்லி
யிருப்பதால், நிச்சயமாக நடத்த நீங்கள் உறுதி கொடுத்
திருப்பதால், எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும்
ஒத்தி வைக்காமல் இருந்தால், கொடுத்த வாக்குறுதியை நிறை
வேற்றிய பெருமையை நீங்கள் நிச்சயம் அடைவீர்கள் என்று
சொல்லி (குறுக்கீடு), ஆகவே அதைத் தடையில்லாமல் நடத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்லவிரும்புவது, சில பஞ்சாயத்து யூனி
யன்களிலே துணி உதவிகள் கொடுப்பதாகச் சொல்லப்படு
கிறது. ஆனால், அப்படி எல்லா இடங்களிலும் கொடுக்கப்
படுவது இல்லை. குறிப்பாக, புவனகிரி பகுதியிலே—நம்
முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களின்
ஊர்—நெல்லி மலை, குறிஞ்சி மலைப் போன்ற பல இடங்களில்
உள்ள ஏழை எளிய மலைவாழ் மக்களுக்கு இந்தத் துணி உதவி
கொடுக்கப்படுவதே இல்லை. கொடுக்கப்பட்ட சில இடங்களிலும்
அந்த ஏழை எளிய மக்களிடம் 5 ரூபாய் வாங்கிக் கொண்டு
கொடுத்திருக்கிறார்கள். அப்படி பண்ணக்கூடாது, அது சரி
யல்ல என்று நான் கமிஷனரிடத்திலே கூறியபோது, அங்கே
அந்த 5 ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்
னும் பல இடங்களில் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. ஏன்
அதை உதாரணமாகச் சொன்னேன் என்றால் குற்றங்குறை
களைச் சொல்லும்போது, அவைகளுக்கு ஆதாரமே இல்லை.
சொல்கிற அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்று நினைக்
கக் கூடாது. சில இடங்களில் சில விஷயங்களில் உண்மை
களும் இருக்கும். அவைகளைக் கண்டறிந்து, விசா
ரணை செய்ய கமிஷன் அமைக்க முன் வர வேண்டும்.
அப்படிச் செய்தால், கொடுத்த வாக்குறுதிகளைக் காபந்து
செய்கிற தகுதி வாய்ந்த அரசாங்கம் என்ற பெயர் உங்களைச்
சேரும்.

அதே போல கீரிப்பாளையம் பஞ்சாயத்து யூனியன், பண்
ணப்பட்டி வில்லேஜ், சிதம்பரம் தாலூகா, ஏரிக்கரை
தீவு—இந்த இடங்களிலே உள்ள மக்கள் உண்ணாவிரதம் இருந்
தார்கள். அவர்கள் வேறு எதையும் கேட்கவில்லை. பாலம்



1983 நவம்பர் 17] [திரு. எல் இளையபெருமாள்]

கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். வெள்ளைக்
காரன் காலத்திலே கட்டப்பட்ட பாலம் அது; இடிந்து
விட்டது. பிறகு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே, மூங்கில்
பாலம் கட்டிக் கொடுக்கப்பட்டு, அதுவும் இடிந்து விட்டது.
இப்படிப்பட்ட சூழ்நிலையை கீரிப்பாளையம் பஞ்சாயத்து
யூனியன், குமராட்சி பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடம்
சொல்லியிருக்கிறார்கள். பிறகு கலெக்டரிடம் சொல்லியிருக்
கிறார்கள். ஆனால் இன்னும் அவர்களுக்கு எதுவும் செய்
யப்படவில்லை.

அதேபோல ஆதிதிராவிட மக்களுக்கு நிலம் கொடுப்பது சம்
பந்தமாக, கலெக்டர் அவர்கள் தெரிவிக்கிறபோது சொன்னார்
கள். அரசாங்கத்தின் நஞ்சை நிலத்தை எடுத்து அவர்களுக்குக்
கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேருக்கு
மேல் அப்படி நிலம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.
ஆனால் ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்தபட்டாக்கள்
உள்ள நிலம் 3 அடி, 4 அடி பள்ளத்தில் இருக்கிறது. இவைகளை
சமன்படுத்த, நம்முடைய தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்
படி, அல்லது தன்னிறைவுத் திட்டத்தின்படி ஒரு பஞ்சாயத்திலா
வது, ஒரு கிராமத்திலாவது இந்த உதவியை அவர்களுக்குச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக ஜெனரல்
பண்டிலேயிருந்து 18 சதவீதம் அல்லது 20 சதவீதம் எடுத்தாவது
அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று சொன்னேன். ஆனால்
நிலைமை இப்படி இருக்கிறது என்று கலெக்டரிடம் சொல்லியும்,
டி.டி.ஓ. விடம் சொல்லியும், டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபிசரிடம்
சொல்லியும், எந்த வேலையும் நடைபெறவில்லை. தமிழகம்
பூராவிலும் இப்படி ஒரு நிலை இருக்கிறது.

நாம் இங்கே சட்டங்கள் போடுகிறோம். உத்தரவுகள் இடு
கிறோம். ஆனால் அவை நிறைவேற்றப்படுவதில்லை. குறிப்
பாக, உதாரணத்திற்காக சொல்கிறேன், வீட்டு வசதி
அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார், முதலில்
ரூ. 3 ஆயிரம் கொடுத்தோம், ரூ. 4 ஆயிரம் கொடுத்தோம்,
அதை ரூ.4,000, ரூ. 4,500 என்று ஆக்கி இப்போது
ரூ. 5,000 கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால்
இன்றுவரையில் இதெல்லாம் நடைமுறையில் இல்லை. அமைச்
சர்கள் சொல்வதை சட்டமாகவேதான் நாங்கள் நம்புகிறோம்,
உறுதியாக நம்புகிறோம். இதை ஏன் உதாரணமாகச் சொன்
னேன் என்றால், அமைச்சர் பெருமக்கள் சட்டசபையிலே கொடுக்
கிற உறுதிகளை நாங்கள் நம்புகிறோம், மதிக்கிறோம். ஆனால்,
உத்தரவுகளை இட்டு, 3 மாதங்கள் ஆகியும், 6 மாதங்கள் ஆகியும்,
1 ஆண்டு ஆகியும், அதை அதிகாரிகளுக்கும் செல்லவில்லை; மக்க
ளுக்கும் சொன்னது நடக்கவில்லை. ஆகவே, இதுபோன்ற
விஷயத்தில் கவனமாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு,
வருங்காலத்தில், இந்தத் தேர்தலை ஒத்தி வைக்காமல் நடத்த

[திரு. எல். இளையபெருமாள்] [1983 நவம்பர் 17

வேண்டும், ஒன் மேன் கமிஷனைப் போட வேண்டும். அத்
தோடு மீண்டும் இதுபோன்ற குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி
சட்டமன்றத்திலே கேட்கிறவர்களுக்கு விளக்குவதற்காவது, தீர்க்க
மாக நீங்கள் விசாரிக்க வேண்டும். ஏதோ பேசிவிட்டுப் போய்
விட்டார்கள் என்ற எண்ணங்கள் இருப்பதாகக் கருதுகிறேன்.
அந்த எண்ணங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்று
அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் கேட்டு, என்
வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

[மாலை 5—20]

*திரு. க. பாரமலை : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்
வடிவு மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்பு
கிறேன். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின்
தனி அதிகாரிகளுடைய காலம் 1984 ஆம் ஆண்டு
மார்ச் 31 வரை நீட்டிக்கப்படுகின்றது என்று அவர்களே
சட்ட முன்வடிவிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அமைச்
சர் அவர்கள் அதிகாரிகளுடைய காலவரம்பை மார்ச் 31 ஆம்
தேதிவரை நீடித்தாலும்கூட, நேற்றையதினம் நமது முதலமைச்
சர் அவர்கள கொடுத்த வாக்குறுதிக்கேற்ப பிப்ரவரி மாதத்தில்
தேர்தல் நடக்கும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன்.

அப்படித் தேர்தல் நடக்கின்றபோது, எனக்குஒரு சிறிய ஐயப்
பாடு இருக்கிறது. சென்ற மாதம் நடந்த சர்வகட்சித் தலைவர்
கள் கூட்டத்திலே கூட, எல்லோரும் தேர்தலை விரைவாக நடத்த
வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஊராட்சி, ஊராட்சி
ஒன்றியங்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பெண்களுக்கு ஒதுக்
கீடு செய்து, அதன்படி தேர்தலை நாம் நடத்தத் தயாராக இருந்த
நேரத்தில், சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுவிட்ட
காரணத்தினால், தேர்தலை நடத்த இயலாமற் போய்விட்டது.
ஆனால், சென்னை உயர்நீதி மன்றம் அரசுக்குச் சாதகமாக
தீர்ப்பு அளித்திருந்தாலும், அதன்மீது உச்ச நீதிமன்றத்திற்கு
மேல் முறையீடு செய்திருக்கின்ற காரணத்தினால், இந்தத் தேர்
தலை நடத்தவில்லை என்று சொன்னார்கள். அதே நேரத்தில்
அப்படி விரைவாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பெற்று, தேர்
தலை நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால், ஏற்
கனவே இருந்த சட்டத்தின்படி தேர்தலை நடத்த வேண்டுமென்று
சிலர் கூறியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. ஆகவே, இந்த
ஐயப்பாடு தோன்றுகிறது.



1983 நவம்பர் 17] [திரு. க. பாரமலை]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று கொடுத்த வாக்குறுதியைப் பார்த்தால், உச்ச நீதிமன்ற தீர்ப்பு நமக்கு விரைவாக கிடைக்குமென்ற நம்பிக்கையில் சொல்லியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். Stat ment of Objects and Reason இல் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "A petition for fixing early date was filed in Supreme Court on behalf of the State Government. The Chief Justice's Bench has directed the appeal to be expedited" என்று.

ஆகவே, அந்த நம்பிக்கையில் தான் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். ஆகவே, அப்படி தீர்ப்பைப் பெற்று, தேர்தலை நடத்துகின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் உரிய பிரதிநிதித்துவத்தைக் கொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், தமிழகத்தில் இருக்கின்ற 375 பஞ்சாயத்து யூனியன்களில் ஏறக்குறைய 60-க்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்காக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதேபோல், 12,000-க்கும் அதிகமான பஞ்சாயத்துக்களில், ஏறக்குறைய 2,000-க்கும் அதிகமான பஞ்சாயத்துக்களில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்காக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதை ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எவ்வளவோ நல்ல திட்டங்களை இயற்றியிருந்தாலும், அவற்றினுடைய முழு பலன் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கனவே ஒரு சந்தர்ப்பத்தில், இதே மாமன்றத்தில் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். இதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு தமிழகத்திலே மட்டுமல்ல, தேசம் முழுவதிலும் இருக்கின்ற சூழ்நிலை என்னவென்று சொன்னால் — குறிப்பாக தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் பிரிவைச் சார்ந்த அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் எண்ணிக்கையையும் கிராம நிர்வாக அலுவலர்களின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்துப் பார்த்தாலும், நிச்சயமாக அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கைதான் குறைவாக இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கலெக்டராகக்கூட வந்துவிடலாம்; ஆனால் கிராம நிர்வாக அதிகாரியாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வந்துவிட முடியாது. அத்தகைய நிலைமை இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. இந்த நிலையைப் போக்க நம்முடைய தமிழ்நாடு அரசு ஏற்கனவே இருந்த கிராம அதிகாரிகளை நீக்கிவிட்டு, புதியதாக கிராம நிர்வாக அலுவலர்களை நியமிக்க ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அது நடைமுறைப்படுத்தப்படுகிறபோது, ஏறக்குறைய 2,000-க்கும் அதிகமான

[திரு. க. பாரமலை] [1983 நவம்பர் 17

தாழ்த்தப்பட்ட மக்கள் கிராம நிர்வாக அலுவலர்களாக பதவி
யேற்கப் போகிறார்கள், அதன்மூலம் சமூகத்தில் ஒரு அந்தஸ்து
கிடைக்கப் போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள்.
ஆனால், அந்த விஷயம் வழக்கு மன்றத்திற்குப் போய்விட்ட
காரணத்தினால், அதை அமுல்நடத்த முடியாமல் போய்விட்டது.
அதன் காரணத்தால், அரிசனங்கள் அதன் பலனை அனுபவிக்க
முடியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போலவே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்,
நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக
இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டு, அதன்
அடிப்படையிலே தேர்தல் நடக்க ஆயத்தமாக இருந்த நேரத்தில்,
அந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்
தினால், அதனுடைய பலனையும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுப
விக்க முடியவில்லை. இதைக் குறிப்பிட்டு நான் சொல்கிற
போது, நான் ஏற்கெனவே சொன்னேன். இந்த நிலைமையினா
னாலே தமிழகத்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை எப்படி
இருக்கிறது என்றால் "Beggars sitting on the Golden Bench"
தங்க நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு இருக்கிற பிச்சைக்
காரர்களைப்போல் தமிழகத்து தாழ்த்தப்பட்ட மக்கள் ஆக்கப்
பட்டிருக்கிறார்கள். இத்தனை சலுகைகள் இருந்தும், வசதிகள்
இருந்தும், அதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தும் முழுமை
யான பலனை அவர்கள் அடையமுடியாமல் இருக்கிறார்கள் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவாக நீங்கள் தேர்
தல் நடத்துகிற முயற்சியை நான் வரவேற்கிறேன், பாராட்டு
கிறேன். ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினாலே அரசுத்
திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் ஊழலுக்கு அப்பாற்பட்டு
நாம் அவற்றை நிறைவேற்றமுடியாது இருக்கின்றது. பல
சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட
முடியாமல் போயிருக்கிறது. விரைவில் ஜனநாயக அமைப்புகள்
வரவேண்டும். அதே நேரத்திலே இந்த ஒதுக்கீடுகளைக் கொண்டு
தான் தேர்தல் நடத்தவேண்டுமென்ற நிலையை நான் வற்
புறுத்திக் கூறவிரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே சொல்லப்
பட்டிருக்கிறபடி தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக பொருளாதார
அந்தஸ்தைப் பெற வேண்டுமென்ற திட்டத்திற்கு இந்த ஒதுக்
கீடுகள் மிக மிக அடிப்படையானது என்பதை மறந்துவிடக்கூடாது.
அப்படிப்பட்ட ஒரு சமூக அந்தஸ்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு
அளிக்கிற அந்தத் திட்டங்கள் முழுமையாக அமல் நடத்தப்பட
வேண்டும். அப்போதுதான் அரசியல் சட்டத்திலே சொல்லப்
பட்டிருக்கிற அந்த நோக்கம் நிறைவேறும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், விரை
வாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொல்கிறபோது
இட ஒதுக்கீடுகளைச் செய்துதான் அந்தத் தேர்தல்களை நடத்த



1983 நவம்பர் 17] [திரு. க. பாரமலை]

வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் பழைய சட்டப்படி
தேர்தலை நடத்தக் கூடாது. அப்படி பழைய சட்டப்படி
தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்லி தேர்தல் நடத்துவதை
நான் வன்மையாக எதிர்க்கிறேன். அப்படி நடத்துவது
என்றாலும்கூட புதிய ஒரு சட்டத்தைக் கொண்டுவந்துதான்
நடத்தவேண்டும். அப்போதும் அதை எதிர்த்து வழக்கு
மன்றத்திற்கு போகமாட்டார்கள் என்ற உத்திரவாதம்
கிடையாது. ஏற்கெனவே இங்கே நாம் நிறைவேற்றியிருக்கிற
சட்டத்தின் அடிப்படையில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்
களின் ஒதுக்கீடுகளைக் கொண்ட தேர்தலை நடத்த வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய மாற்றுத் தலை
வர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்
கக்கூடிய இந்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாமைக்கு நான் பெரி
தும் வருந்துகிறேன். காரணம் இன்றைக்குத் தனி அதிகாரி
களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடிய மசோதாவை இங்கே
கொண்டுவந்திருக்கிறார்கள். தனி அதிகாரிகள் பதவிகாலத்தை
நீட்டிக்கிறோம் என்று சொன்னால் மீண்டும் தவறு செய்கிறவர்
களுக்கு மறைமுகமாக அனுமதி வழங்குகிறோம் என்று பொருள்.
மீண்டும் தனி அதிகாரிகள் நிர்வாகத்தின்கீழ் பஞ்சாயத்து யூனி
யன்களும் ஊராட்சிகளும் இன்றைக்கு இருட்டறையில் இருப்பது
மீண்டும் தொடரப்போகிறது என்றுதான் அதற்குப் பொருள்
என்று நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்கள் வரும்
என்பது குறித்து அவர்கள் வேறு ஒரு தேதியைக் குறிப்பிட்டாலும்
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையிலே முந்தாநாள்
பேசுகின்றபோது பிப்ரவரி மாதம் கடைசிக்குள் தேர்தல் நடை
பெறும் என்று குறிப்பிட்டாலும் ஏற்கனவே பேசுகின்றபோது
ஜூலை மாதம் என்று குறிப்பிட்டு நடக்கப்போகிறது என்று
குறிப்பிட்டாலும் இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு, பிப்ரவரி மாதம் கடைசி வாரத்திற்குள் இந்தத்
தேர்தல் நடைபெற இருக்கிறது என்ற நம்பிக்கை அரசாங்கத்தின்
சார்பாக முதலமைச்சர் சார்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது
ஆனால் முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது அதில் குறிப்
பிட்டு இருக்கிறார்கள் எதிர்க்கட்சிகள் தேதியைக் குறிப்பிடவேண்
டும் நம்முடைய சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கலந்துபேசி
என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் நடத்துகிறவர்
முதலமைச்சர், அறிவிக்கிற இடத்தில் இருப்பவர் முதலமைச்சர்
நாங்கள் எதிர்க்கட்சிகள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக
இருக்கிறோம். எந்த மாதம் நடைபெறும், பிப்ரவரி மாதம்
நடைபெறும் என்பதை முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்,
மாதத்தை சொல்வதற்கு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்
கிறார்கள், ஆனால் தேதியைக் குறிப்பிடுவதில் என்ன சிக்கல்?
அதையும் அவரே குறிப்பிடலாம். நீங்கள் தேதியைக் குறிப்பிடக்
கூடாது, மாதத்தைக் குறிப்பிடக்கூடாது என்று யாராவது
முதலமைச்சர் அவர்களைத் தடுத்தோமா ?

[1983 நவம்பர் 17

(மாலை 5—30).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 12—10—1983—ஆம் தேதி அன்று சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நாங்கள் கூட்டி இருந் தோம். அந்தக் கூட்டத்தில் எல்லாக்கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டது தி.மு.க. தவிர; அவர்கள் அதில் பங்குகொள்ள வில்லை—பாக்கி இருக்கக்கூடிய எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டது பிப்ரவரி மாதத்தில் தேர்தலை நடைமுறைப் படுத்தவேண்டும் என்ற ஒருமித்த கருத்தை அவர்கள் தெரிவித் தார்கள். ஆகவே அந்த கருத்தின் அடிப்படையில்தான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாதத்தை குறிப்பிட் டிருக்கிறார்கள். ஆகவே சர்வ கட்சிக் கூட்டத்தை மீண்டும் கூட்டி எந்த தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்பதை முடிவு செய்யலாம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல கட்சிகள் அரசாங்கம் போட்ட கூட்டத்திற்கு போகவில்லை. காரணம் பல தடவை நடந்து ஆகிவிட்டது. ஆகவே நீங்கள் தேர்தல் தேதியை அறிவிப்பது போதும் என்று சொல்லிக் கொள்கிறேன். இப்போது மறுபடியும் நீங்கள் சர்வ கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டிய தேவையில்லை. இங்கே பேசிய கட்சிகள் பூராவும் ஜனவரி மாதம் 20—ஆம் தேதியிலிருந்து 30—ஆம் தேதிக்குள் நடத்தச் சொல்லி ஆகிவிட்டது. அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதை சொல்லவேண்டுமே தவிர (குறுக்கீடு) சி.பி.ஐ. வரவில்லை, ஜனதாகட்சி வரவில்லை, பல கட்சிகள் அதில் பங்குகொள்ளவில்லை. ஆகவே இன்றைக்கும் நாங்கள் மறுபடியும் சொல்கிறோம் இன்னொரு சர்வ கட்சி கூட்டம் கூட்டுவது அவசியம் இல்லை. இங்கே சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகள் பூராவும் ஜனவரி மாதம் இறுதிக்குள் இதை நடத்துங்கள் என்று கேட்டு ஆகிவிட்டது. அரசாங்கம் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டியது தானே தவிர மறுபடியும் கூட்டம் அவசியம் இல்லை. இந்த பில்லுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசாங்கத்திலுடைய முடிவை தெரிவிக்க வேண்டும். வேறு ஒன்றும் அதில் கட்சிகள் கூடி பேச வேண்டிய அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத் திற்கு கொண்டு வர விரும்புகிறேன் தவறாக கருதக் கூடாது. ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸ் என்று சொல்கிறபோது தனி அதி காரிகள் பதவி நீட்டிப்பு பற்றி வெளியில் இருப்பவர்களுக்கு ஒரு தவறான எண்ணம் வந்து விடக்கூடாது. பத்திரிகையில் கூட தவறாக பிரசுரித்து விடுவார்கள். வெளியில் இருக்கக்கூடிய மக்கள் தப்பாக கருதுவார்கள். சர்வ கட்சித் தலைவர்கள்



1983 நவம்பர் 17] [திரு. அ. ரகுமான்கான்]

கூடிய கூட்டத்தில் இந்த சிவில் அப்பீல் இட ஒதுக்கீடு சம்பந்த மாக வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் இருப்பதால் அந்த வழக்குகள் முடிந்தவுடன் தேர்தல் நடத்தலாம் என்று ஏகமனதாக அறிவித்து இருக்கிறார்கள் என்று இதில் போட்டு இருக்கிறார்கள். இந்த கருத்து தான் வெளியே போகும். எனவே ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்ல் இருக்கக்கூடிய அந்த பிரிவை நீங்கள் எடுத்து விட வேண்டும்.

இங்கே நம்முடைய மாண்புமிகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் எடுத்துச் சொல்லி யது போல் நாங்கள் ஏகமனதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாதத்திற்குள் எந்தத் தேதியை வேண்டுமானாலும் நீங்கள் குறிப்பிடலாம், நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கத் தயாராக இருக்கிறோம் மக்கள் சார்பாக. எனவே அந்தப் பிரிவை எடுத்து விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிப்ர வரி மாதத்தை அறிவித்த நம்முடைய முதலமைச்சர் தேதியையும் தாராளமாக அறிவிக்கலாம்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இர்ரெலவண்டு என்று கருதி விடக்கூடாது. நாங்கள் எல்லாம் சென்னை நகரத்திலுடைய சட்டமன்ற உறுப்பினர்கள். எனவே ஊராட்சிக்கு தேர்தலை அறிவிக்கக்கூடிய முதலமைச்சர், நகராட்சிக்கு தேர்தல் இந்த மாதத்திலே அறிவிக்கிறேன் என்று சொல்கிற முதலமைச்சர், சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் அறிவிப்பேன் என்று ஏன் குறிப்பிடவில்லை. இது உள்ளூர இருக்கிறதா ? அவர் சொல்லிய யதில் இந்த பிப்ரவரிக்குள் சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் வந்து விடப்போகிறதா ? காரணம்............

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சித் தேர்தலையும், கோவை மாநகராட்சித் தேர்தலையும் இரண்டையும் ஒரு சேர நடத்தலாம் என்று ஏற்கனவே சர்வ கட்சித் தலைவர்கள் கூட் டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், இன்னும் 3 மாநகராட்சிகள் வேறு வர இருக்கின்றன. திருநெல்வேலி, திருச்சி, சேலம் போன்ற 3 மாநகராட்சிகள். ஆகவே எல்லா மாநகராட்சிகளுக்கும் ஒன்றாக தேர்தல் வைத்துக்கொள்வது இன்னும் நலமாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அலைகள் எப்போது ஓய்வது, அதில் எப்போது நீந்து வது. ஆக நீங்கள் உங்களுடைய வசதி, வாய்ப்பு, சௌகரியங் களை ஒட்டி இவைகளை எல்லாம் மாநகராட்சிகள் ஆக ஆக்கிய தற்கு பிறகு தான் தேர்தல் என்று சொன்னால்

அதுவரைக்கும் இன்றைக்கு சிங்காரச் சென்னை சீரழிந்து
கொண்டு போன நகரமாக இருப்பது தாங்காது. இன்
னும் சொல்லப்போனால் நாங்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள்
ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் சகோதரர்
கே. ஏ. கே. அவர்கள் இருக்கிறார்கள். அவரும் இந்த பகுதி
யினுடைய சட்டமன்ற உறுப்பினர் தான். அங்கே என்ன கேட்
கிறார்கள், நீங்கள் அமைச்சராக இருந்தும் கூட இங்கே கொசுத்
தொல்லை இருக்கிறதே. சாக்கடை இருக்கிறதே. கழிவு நீர்
இருக்கிறதே, இவ்வளவு மோசமாக இருக்கிறதே, அரசாங்கம்
உங்களிடத்தில் தானே இருக்கிறது, உங்களை நம்பித்தானே
மக்கள் அனுப்பினார்கள். இந்த எங்கள் பிரச்சனையைத் தீர்க்க
வில்லை. என்று தொகுதியிலே அவரைக் கேட்கிறார்களா
இல்லையா, கேட்டுப் பாருங்கள். அவரைக் கேட்கிறார்கள்.
அவரை மட்டுமா கேட்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இந்தக் கொசுத் தொல்லை தி.மு.க. ஆட்சிக்
காலத்திலும் இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் இருந்
தது ; ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலே மட்டும் கொசுக்
கள் வந்து விட்டனவா ?

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், தி.மு.க. ஆட்சிக்
காலத்திலும் கொசு இருக்கிறது என்ற காரணத்தால்தான்
அ.தி.மு.க.வை அனுப்பினார்கள். இப்பொழுதும் கொசுக்கள்
இருக்க வேண்டுமா ?

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு உறுப்பினர் பூங்கா
வனம் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கொசு வந்தது என்று
சொல்லியிருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் இந்த உலகத்தில்
இருக்கிற வரையில் கொசுக்கள் இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தின் மாற்றுத் தலைவர்
அவர்களே, சென்னை நகரத்தினுடைய சுகாதாரக் கேடுகளை
வெளிப்படுத்துகின்ற விதத்திலேதான் இதைச் சொல்கின்றோம்.
போதுமான கழிப்பிடங்கள் இல்லை. பாதை சரியில்லை, ரொம்ப
வும் மோசமாக இருக்கிறது. அதிலே இருக்கிற வேடிக்கை என்ன
வென்றால் ...............(குறுக்கீடு) சென்னை நகரத்தினுடைய
நிலைமைகளை சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலேதான்
அவற்றையெல்லாம் சொல்கிறார்கள். தொகுதியிலே மக்கள்
பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தோம், அவர்கள் செய்யவில்லை
யென்று சொல்கிறார்கள். ஆகையினாலே சென்னை நகரத்து
மக்களுடைய பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்
னால் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்து இருந்தாக வேண்டும்.



தொடர்ந்து பல காரணங்கள் சொல்லப்பட்டு விட்டன. ஊராட்சிகளுக்குப் பொருந்துகின்ற நியாயம், ஒன்றியங்களுக்குப் பொருந்துகின்ற நியாயம், சென்னை மாநகராட்சிக்கும் பொருந்தும். அந்தக் காரியத்தை இந்தச் சர்க்கார் செய்யவேண்டும். பிப்ரவரியில் இல்லையென்றால் மார்ச்சிலே நடத்த வேண்டும், ஏப்ரலில் வேண்டாம். காரணம் என்னவென்றால், ஏப்ரலில் நடத்துகிறோம் என்று சொல்லி ஏமாற்றுகின்ற சூழ்நிலை வந்துவிடக் கூடாது, ஜனங்கள் ஏமாந்து விடக் கூடாது, தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகையினாலே, அதற்கான தேர்தலை விரைவாக நடத்தவேண்டும். அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வாக்குறுதிகள் ஒருபுறத்திலே கொடுக்கப்பட்டாலும், நிறைவேற்றப்பட்டாலொழிய கொஞ்சம் சந்தேகமாகத் தானிருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சம்பந்தம் இல்லை என்று நீங்கள் கருதாதீர்கள், நான் அதற்கு உதாரணமாகச் சொல்கிறேன். பிரசவமான தாய்மார்களுக்கு, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் சத்துணவிற்காக ரூ. 150 தருவோம் என்று சொல்லப்பட்டது, ஆனால் நிறைவேற்றவில்லை. அதைப் போலவே, கண்டிஷன் இல்லாமல், 5 கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி இனாமாகத் தரப்படும் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை..........

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அரைத்த மாவையே மீண்டும் அரைத்துக் கொண்ருக்கிறீர்கள் என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால், பழைய மாவு வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாவு புளித்துப் போய்விட்டது. (சிரிப்பு).

திரு. அ. ரகுமான்கான் : நமது மந்திரியும் அந்தப் பழைய மாவையே அரைக்கின்ற காரியத்தைச் செய்கின்ற காரணத்தினால், பாவிகள் அந்தப் பழைய மாவிலே செய்யப்பட்ட பல காரங்களைச் சாப்பிட வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே, நான் சொல்ல விரும்புவது இன்றைக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அதுபோல் இதுவும் ஆகிவிடக்கூடாது என்ற எண்ணத்திலேதான் அவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சிகள், நகராட்சிகள், ஆகியவற்றிற்கு இன்றைக்குப் போதுமான வருமானம் இல்லாமல் இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள்கூட இங்கே பேசுகிறபொழுது சொன்னார்கள். மாநகராட்சிக்கு எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன, வருமானம் இல்லை. எனவே அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கத்தான் செய்யும், வேறுவழியில்லையென்று சொன்னார்கள். எலெக்டிரிசிட்டி போர்ட் கூட லாசிலேதான் ஓடுகிறது. அரசாங்கம் நிதி உதவி செய்யவில்லையா ? வருமானத்தைக் கொடுக்கவில்லையா ? அது போல் சென்னை மாநகராட்சிக்கு நிதி உதவி செய்யுங்கள். வருமானத்தை அதிகப்படுத்துங்கள். ஆனால் அதை விட்டுவிட்டு வருமானம் குறைவாக இருக்கிறது. ஆகவே, சென்னை நகரத்திலே நிலைமைகள் இப்படித்தான் இருக்கும் என்ற வாதம் தேவை இல்லை.

அடுத்து, ஸ்தல ஸ்தாபன தொகுதிகள் மேல்சபையிலே 13 இடங்கள் பல வருஷங்களாகக் காலியாக இருக்கின்றன : நிரப்பப்படாமல் இருக்கின்றன.

(மாலை 5-40)

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தனி அதிகாரிகள் தவறுகள் செய்கின்ற நிலைமைகள் ஒருபுறம் இருக்கட்டும். மக்கள் பிரதிநிதிகள் ஊராட்சிகளிலே இல்லை : கிராம அதிகாரிகள் நியமனம் இன்றைக்கு முழுமையாக எல்லா கிராமங்களுக்கும் செய்யப்படவில்லை. ஆகவே, பல நடைமுறைச் சிக்கல்கள் வருகின்றன. லோக்கல் செஸ் வசூலாகிறதா ? இல்லை. ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரக்கூடிய ரெவின்யூ போதுமான அளவுக்கு அவர்களாலே வசூலிக்கப்படுகிறதா தனி அதிகாரிகளால் என்றால் அந்த ஒன்றியங்களில் தொடர்புடைய நண்பர்கள் எனக்குத் தகவல் கொடுக்கிறார்கள், இல்லையென்று. இன்னும், சொல்லப் போனால், நாச்சியார்கோவில்—திருவிடைமருதூர் ஒன்றியம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. எஸ். மாவட்டத்தில் இருக்கிறது. அதைப்போலவே பந்தநல்லூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் நகரசுத்தி தொழிலாளர்களுக்கு சம்பளமே கிடையாது. ஏனென்றால் அமைச்சர் அவர்கள் ஆதாரம் கேட்பார்கள். அதற்காகச் சொல்கிறேன். நகரசுத்தி தொழிலாளர்களுக்கு அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் சம்பளமே கிடையாது. அந்த அளவிற்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. தனி அதிகாரிகள் தான் பணத்தை சாங்ஷன் செய்பவர்கள் ; அவர்கள் தான் எடுத்து செலவழிப்பவர்கள் ; அவர்கள் தான் கணக்கும் பார்ப்பவர்கள். பகவத் கீதையில் எல்லாம் நானே, நீரும் நானே, நிலமும் நானே என்று சொல்வதை போல தனி அதிகாரிகள் தொகையை ஒதுக்குவதும் நானே, தொகையை எடுத்து செலவழிப்பவனும்





நானே, அது சரியாக இருக்கிறதா என்று கணக்கு பார்ப்பதும் நானே என்று நவீன பரமாத்மாக்களாக, நவீன கண்ணன்களாக இருக்கக்கூடிய காட்சி தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், மத்திய சர்க்கார் நிதி ஒதுக்கீடு செய்கிறது. அது முறையாக செலவு செய்யப்படுகிறதா ? யாருக்காவது தெரியுமா ? அதைப்போல இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 328 டிராக்டர்கள் பஞ்சாயத்து யூனியன்களில் தமிழ் நாடு முழுவதிலும் இருக்கின்றன. அந்த 328 டிராக்டர்களில் 169 டிராக்டர்கள் ஐடிலாக இருக்கின்றன. வேலை செய்யவில்லை. ஆனால் இந்த 169 டிராக்டர்களுக்கு டிரைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஒரு டிரைவருக்கு என்ன சம்பளம் ? அப்படியானால் 169 டிரைவர்களுக்கு என்ன சம்பளம் ? பல வருஷங்களாக இருக்கிறார்கள். பல வருஷங்களுக்கு என்ன சம்பளம் ? ஆகவே இந்த அளவிற்கு இன்றைக்கு பணம் வீணடிக்கப்படுகிறது என்பதைத் தான் இவைகள் குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றன.

அதோடு இன்னொன்றையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே ஒரே ஒரு வேண்டுகோளோடு என்னுடைய உரையை நான் முடிக்க விரும்புகிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இங்கே லேபரர்ஸை எல்லாம் பர்மனன்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்டாக ஆக்காமல் இருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற வில்லிவாக்கத்தில் அந்த நிலைமை இல்லை. பல்வேறு மாநகராட்சிகளில் அந்த நிலைமை இல்லை. ஆனால் இவர்கள் மட்டும் பர்மனன்ட் எஸ்டாபிளிஷ்மெண்ட்டாக ஆக்காமல் இருப்பது சரியல்ல. காரணம் அவர்களுக்கு போனஸ். கிராச்சுட்டி வாய்ப்பு கிடையாது. இன்னும் பல சலுகைகள் எல்லாம் கிடையாது. எல்லா இடங்களிலும் இருக்கின்றன. அதைப்போல இன்றைக்கு அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும், என்று சொல்லி இந்த அவையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் தேதியை அறிவித்தால் நாட்டு மக்கள் வாக்குறுதி காப்பாற்றப்பட்டது என்று நம்புவார்கள் : எனவே உடனே தேர்தலை நடத்துங்கள் என்று வேண்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொண்டு வரப்பட்ட ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டுகிற சட்டத்தின் மீது ஏறத்தாழ எட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் சொன்னதிலே அதிகமாக ஜனநாயகத்தினுடைய தொட்டிலாக இருக்கக் கூடிய ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடைபெறவில்லை. அதை உடனடியாக நடத்தவேண்டுமென்று ஒருமித்த கருத்தை எல்லோரும் கூறியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே பல்வேறு

நேரங்களில் இதே போன்ற சட்டத்தைக் கொண்டு வந்து, அதன்
மூலமாக இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுடைய
எண்ணங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, பல்வேறு நேரங்களில்
இதே தனி அதிகாரிகள் காலத்தே நீட்டுகின்ற சட்டங்களை எல்
லாம் நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் இப்போதும் அதே
பல்லவியை, அதே இராகத்திலே பாடுகிற ஒரு சூழ்நிலை ஏற்
பட்டிருக்கிறது என்றாலும் பழைய இராகத்திற்கும்,
பல்லவிக்கும், இன்றைகு இருக்கிற இராகத்திற்கும், பல்லவிக்கும்
கண்டிப்பாக ஒரு மாறுதல் இருக்கத்தான் செய்கிறது என்பதை
நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்
கள் தேர்தலை நடத்த வேண்டுமென்ற முறையில்
1958-ஆம் ஆண்டு ஊராட்சி மன்றச் சட்டத்தில், பல்
வேறு திருத்தங்களைக் கொண்டு வந்தோம். அதற்குத்தான் கால
நீட்டிப்பு ஏற்பட்டதே தவிர வேண்டுமென்றே தேர்தலை ஒத்திப்
போடவேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல; தேர்தலை நடத்தக்
கூடாது என்ற எண்ணத்தோடு அல்ல: ஜனநாயகத்திற்கு சாவு
மணி அடிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டவை அல்ல என்
பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே,
இந்த அரசைப் பொறுத்தவரையில் தேர்தலை சீக்கிரமாக நடை
முறைப்படுத்த வேண்டுமென்பது தான்; இங்கே இருக்கிற
நிலைமை, ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொன்னதைப்போல ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி
ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடுகள் எல்லாம் கொண்டு வந்தோம்.
அந்த ஒதுக்கீடுகளுக்கு எதிராக உயர்நீதி மன்றத்திலே தடை
வாங்கப்பட்டது. கடந்த 16—4—82 தேதியன்று அந்தத் தடை
நீக்கப்பட்டது. ஆகவே நீக்கப்பட்டதற்குப் பின்னாலே, அதற்கு
மேல் முறையீடு செய்து இந்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில்
நிலுவையில் இருப்பதாலே தான் இங்கே நடத்த முடியாத சூழ்
நிலை ஏற்பட்டது. ஆனாலும், உச்ச நீதிமன்றத்தில் இருக்கும்
மேல் முறையீடு உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டு
மென்று உச்ச நீதிமன்றத்தில் உள்ள தலைமை நீதிபதியினிடத்தில்
ஒரு மனுவைக் கொடுத்தோம். அந்த மனுவை எடுத்துக்கொண்டு
கடந்த 29—4—83-ஆம் நாளன்று ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கி
றார்கள். அதன் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற
மேல் முறையீடு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று
உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வழக்கு சீக்
கிரமாகத் தீர்ந்து விட்டால் அதன் மூலமாக நாம் கொண்டு வந்த
ஒதுக்கீடு செல்லும். இனிமேல் யாரும் கோர்ட்டுக்குப் போக
மாட்டார்கள். கோர்ட்டுக்குப் போய் தடை வாங்க முடியாத
நிலை ஏற்படும்.

ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அந்த மேல்
முறையீடு சீக்கிரமாக நடைமுறைப்படுத்தப்படும். விரைவில்
தீர்ப்பு வழங்குவார்கள் என்ற எண்ணத்தில் நாம் இருக்கிறோம்.





அவ்வாறு வழங்காவிட்டால் என்ன செய்வது என்ற கேள்விக்
கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.
இப்பொழுது இருக்கின்ற மேல் முறையீட்டில் தடை இல்லை,
அதனால் அங்கே உள்ள வழக்குமன்றத்தில் கேட்டு விட்டு, எங்
களுக்குத் தடை இல்லை, அதனால் இருக்கக்கூடிய முறைப்படி
தேர்தலை நடத்தப் போகிறோம். தடை கொடுக்க வேண்டா
மென்று கேட்டுக்கொண்டு இந்தத் தேர்தலை நடைமுறைப்படுத்
லாம் என்ற எண்ணத்தில்தான் நேற்றுக்கூட தமிழக முதல்வரவர்
கள் ஒரு அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். அதற்கேற்ப வரு
கின்ற பிப்ரவரி மாதத்தில் இந்தத் தேர்தலை நடைமுறைப்படுத்த
லாம் என்ற எண்ணத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

12—10—1983 ஆம் நாளன்று சர்வ கட்சித்தலைவர்கள் கூட்
டத்தைக் கூட்டினோம். அந்தக் கூட்டத்திற்குத் திராவிட முன்
னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூ
னிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளெல்லாம் வரவில்லை. வராததற்குக்
காரணமாக என்ன சொன்னார்கள் என்றால், இப்படி அடிக்கடி
கூட்டத்தைக் கூட்டி இந்தத் தேர்தல்களை ஒத்தி வைத்துக்
கொண்டே இருக்கிறீர்கள். ஆதலால் நாங்கள் வரத் தயாராக
இல்லை என்ற எண்ணத்தை அவர்கள் பிரதிபலித்தார்கள்.

கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில்தான் இலங்கையில் இனப்
படுகொலைகள் நடந்தன என்பது உங்களுக்குத் தெரியும். பக்கத்
திலுள்ள இலங்கையில், அந்தச் சிங்களத் தீவில் எற்பட்ட நிலை
மைகள் உங்களுக்குத் புரியாதது அல்ல, புரியாத புதிரும் அல்ல.
ஆனால் எந்தக் காரணத்திற்காக நாம் தேர்தலைக் தள்ளிப்
போட்டோம் என்ற காரணத்தைப் பல்வேறு சர்வகட்சித் தலை
வர்களுக்கு அனுப்பினோம். ஆனால் எந்தக் கட்சித் தலைவரும்
இப்படி இலங்கைத் தமிழர்களின் இன்னலைத் துடைப்பதற்காக,
இடர்ப்பாட்டைப் போக்குவதற்காக, அவர்களின் துன்பங்களை
யும் அவலங்களையும் போக்குவதற்காக இந்த அரசாங்கம்
அன்றைக்கு இந்தத் தேர்தலை நடத்தாமல் கொஞ்ச நாட்கள்
தள்ளிப் போடுகிறது என்ற எண்ணத்தைப் பிரதிபலித்ததை
ஏற்கவில்லை.

நான் கேட்பதெல்லாம், தமிழ் இனம் என்றும், தமிழ் இன
உணர்வு என்றும் எந்த உணர்ச்சியோடு பாடுபடுகின்றார்களோ,
பட்டாளத்தைக் கூட்டி வந்து போராட்டத்தை நடத்த வேண்டு
மென்று சொல்கின்றவர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக
இப்பொழுது இந்த அரசாங்கம் தேர்தலை நடைமுறைப்படுத்த
வேண்டாம், இந்த இன்னல் தீர்ந்த பிறகு நடத்தலாம் என்று
எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏன் சொல்லவில்லை என்று
நான் கேள்வி கேட்டால் கண்டிப்பாக அவர்கள் பதில் சொல்ல
மாட்டார்கள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அவசியமற்ற முறையில் அமைச்சரவர்கள்
இந்தச் சர்ச்சைகளைக் கிளப்பியிருக்கிறார்கள். இலங்கைத்
தமிழர்கள் அங்கே ஜனநாயகத்திற்குப் பாடுபடவேண்டுமென்று
நினைக்கின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறங்
களுக்கும், நகரப் புறங்களுக்கும், ஜனநாயகம் மறுக்கப்பட வேண்
டுமா? அந்தப் போராட்டத்திற்கும் இந்தப் போராட்டத்திற்கும்
பார்த்தால் ஒன்றுக்கொன்று எதிர்புதிரானது. ஆகவேதான்
சொன்னோம், பலமுறை யோசனை சொல்லியும் தேர்தல் நடத்
தப்படவில்லை, ஆகவே, நீங்கள் எந்தத் தேதியிலே என்று சொன்
னால் அந்தத் தேதியை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். இதில்
விவாதம் வேண்டாமென்று சொன்னோம்? அதில் என்ன தடை
இருக்கிறது? இலங்கைப் பிரச்சினைக்காகப் போராடிக் கொண்
டிருந்தால் அதற்கும் தமிழ்நாட்டு மக்களின் அவதியைப் தீர்ப்
பதற்காக விரைவில் தேர்தலை நடத்துவதற்கும் என்ன பிரச்னை?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வாதத்திற்காக அதை வைத்துக்கொள்கி
றோம். இலங்கைத் தமிழர் பிரச்சினை எப்பொழுது வந்தது?
அதற்கு முன்பேகூட வைத்திருக்கலாமே. அதில் என்ன சிக்கல்
இருக்கிறது?

(மாலை 5-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று.
ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நகராட்சித் தேர்தல்கள் நடை
பெறும் என்று அரசு அறிவித்தது. அதற்கேற்ப நடவடிக்கைகளை
யும் எடுத்தோம். வாக்காளர் பட்டியல்களைத் தயார் செய்தோம்.
வார்டுகளைப் பிரித்தோம். வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டு தயார் நிலையில் இருந்தோம். ஆனால் ஜூலை மாதக்
கடைசியில் இனப்படுகொலை ஆரம்பித்தது. அது எல்லோருக்
கும் தெரிந்த உண்மை. ஜூலை மாதக் கடைசியில் ஏற்பட்ட
அப்படிப்பட்ட இனப் படுகொலையின் காரணமாகத் தமிழினம்
கொதித்தெழுந்த சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டு, பல்வேறு
கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் என்ற முறையிலே நடந்தன.
(குறுக்கீடு) அதைத்தான் சொன்னேன். உங்களுடைய தோழமைக்
கட்சியினைச் சேர்ந்த திரு. குமரி அனந்தன் அவர்கள் தான்
போய்விட்டு........(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில பிரச்சினை
கள் சிலருக்குச் சரியாகத் தோன்றலாம். அரசாங்கம் அந்தப்
பிரச்சினைகள் காரணமாகத்தான் தள்ளிப்போட வேண்டி இருக்
கின்றது என்று சொல்லலாம்.......(கூச்சல் குழப்பம்). இலங்
கைப் பிரச்சினை காரணத்தால் தேர்தல் தள்ளிப்போடப்பட்டது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்..........



திரு என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலை ஒத்திப் போடுவதற்கு இதை ஒரு சாக்காக அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக அவர்கள் சொன்னார்கள். தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய பிரச்சினை இருக்கின்ற நேரத்தில் தேர்தலை நடத்துவது என்பது....(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏன் தள்ளிப்போடப்பட்டது என்பதற்கான காரணங்களை விளக்குகிறேன். தமிழினம் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் நமக்குள்ளாக இங்கே ஒரு தேர்தலை நடத்தி அதில், வெற்றி, தோல்வி என்பதைப் பற்றி கணக்கிட வேண்டுமா என்பதைத்தான் சொன்னேன். ஆகவே, கொஞ்சம் தாமதம் செய்யலாம் என்று சொன்னேன். (கூச்சல், குழப்பம்).

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் புதிதாகச் சொல்கிறார்கள்..........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இலங்கைப் பிரச்சினையைப் பற்றி ஏற்கனவே சர்வ கட்சி கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்த நேரத்திலேயே நான் சொல்லி இருக்கிறேன். ஆனால் அதற்கு பதில் எழுதியவர்கள் தான் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபற்றி குறிப்பிடாமல், நாங்கள் வேண்டுமென்று காலதாமதம் செய்வதாகச் சொன்னார்கள், இலங்கைத் தமிழர்களுக்காக நீங்கள் எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது என்று சொல்கின்ற வகையில் அந்த எண்ணத்தைக்கூட அவர்கள் பிரதிபலிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினைக்காக மூன்று முறை சர்வ கட்சி கூட்டத்தை நடத்தியிருக்கிறோம். (கூச்சல் குழப்பம்) அதுபற்றிச் சொல்லாமல் நாங்கள் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஏன் தேர்தலை ஒத்தி வைத்தது என்பதைத் தெரிவிக்கின்றபோது சில காரணங்களின்

அடிப்படையில் ஒத்திவைத்தது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் காரணத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டாலும் கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். இதுவரை, மற்றும் இங்கே பேசியதிலிருந்து எந்த காரணத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை என்பது தெளிவாகத் சொல்லப்பட்டுவிட்டது. மேலும், பிப்ரவரி மாதத்திலே தேர்தல் வரும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி விட்டதன் காரணத்தால் ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை. ஆனால் தேர்தலை ஒத்திவைத்ததற்கான காரணம் என்ன என்பதைப் பற்றித்தான அமைச்சர் அவர்கள் விளக்குகிறார்கள். (குறுக்கீடு) பிப்ரவரி என்றால் அந்த மாதத்திலே உள்ள 29 நாட்களில் ஏதாவது ஒரு நாளாக இருந்துதானே தீரவேண்டும்.

திரு. எஸ். எஸ். இராஜேந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலுக்கும் இலங்கைப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால், இலங்கைப் பிரச்சினையை காரணமாக வைத்து சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ஏன் ராஜினாமா செய்யவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் நிலைமை என்னவென் றால் அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே வந்து சர்வ கட்சித் தலைவர் கள் எல்லாம் ஏற்றுக்கொண்டது வருகின்ற பிப்ரவரி மாதத் திலே தேர்தலை நடத்தலாம் என்ற முடிவை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வருகிறபோது பிப்ரவரி மாத கடைசிக்குள் ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடிவு செய்வது என்ற எண்ணத்தை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். ஆகவே, அந்தத் தேர்தலை அறிவித்தாலும், ஸ்டே இல்லாத நேரத்தில் அறிவித்தாலும், அதற்குப் பின்னாலே உச்ச நீதி மன்றத்தில் யாராவது ஸ்டே வாங்கி விட்டால் என்ன செய்வது என்றும் இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆகவே, ஸ்டே கொடுக்காத அளவிற்கு நாம் ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் கொடுத்து, அதன் மூலம் ஸ்டே கொடுக்கக்கூடாது என்று கேட்டு, அந்த வகையில் தேர்தலை நடந்த இருக்கிறோம். ஆகவே, பிப்ரவரி மாத கடைசில் பஞ்சா யத்து தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள் றேன். (குறுக்கீடு).

இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய வர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. இளைய பெருமாள் அவர்களும், திரு. தியாகராசன் அவர்களும் ஜனவரி மாதம் 15-ம் தேதி முதல் 30-ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டார்கள். அந்தக் தேதிக்குள் நடத்த





முடியாது. காரணம், வார்டு பிரிவு செய்யவேண்டும். அதற்குப் பிறகுதான் நோட்டிபிகேஷன் கொடுக்கவேண்டும். நோட்டிபிகே ஷன் கொடுத்த பின்னாலே பொதுமக்களிடம் இருந்து எதிர்ப்பு ஏதாவது இருக்கிறதா என்பதற்கு 15 நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னாலே பைனல் நோட்டிபிகேஷன் செய்து, தேர்தல் நடந்த 21 கிளியர் டேஸ் கொடுத்து நோட்டிபிகேஷன் கொடுக்கவேண்டும். ஆகவே, இதையெல்லாம், செய்து முடித்தால், பிப்ரவரி மாதத்தில் தான் அதை நடைமுறைப் படுத்த முடியும். ஆகவே, ஜனவரி மாதத்தில் வைத்துக்கொள்ள ஏதுவாக இல்லை. பிப்ரவரி மாதத்தில்தான் நடைமுறைப் படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் இப்போதே தயார் நிலையில் இருக்கின்றன. வாக்காளர் பட்டியல் தயாராகி விட்டன. வார்டு ஒதுக்கீடு செய்து தயார் நிலையில் இருக்கிறோம். ஆகவே, அதுவும் பிப்ரவரி மாதத்தில் வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவை ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, நகராட்சித் தேர்தலையும், ஊராட்சி மன்றத் தேர்தலையும் வருகின்ற பிப்ரவரி மாதத்தில் நடைமுறைப்படுத்த முடியும். பிப்ரவரியில் தேதி குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் அதற்காகத்தான் சொன்னேன், சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து பேசி, முடிவு எடுத்து விடலாம். (குறுக்கீடு) நாங்கள் ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற நல்ல எண் ணத்தில் அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று இருக்கி றோம். தேர்தலுக்கு வேண்டிய நடவடிக்கைகள் நாளையதினத் தில் இருந்து துவங்க இருக்கிறது என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, மாமன்ற உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை இந்த மசோதாக்கள் மீது எடுத்துச் சொன்ன தற்காக நன்றி கூறி, இந்த அவை முன் இருக்கின்ற மசோதாக்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. திரு. அ. ரகுமான்கான் அவர்கள் தனது தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, பிப்ரவரியில் இத்தத் தேர்தல் நடத்த உறுதி கொடுத்து இருந் தாலும், சென்னை மாநகராட்சி பற்றி குறிப்பிடாததால் அதைக் கண்டித்து என் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

[1983 நவம்பர் 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''ஆளுநர் அவர்களால் 9—9—1983 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த அவசர சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1983) இப் பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவுஎண் 50/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1983 நவம்பர் 17]

(ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1983) * * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(பிற்பகல் 6–00)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

* 1983 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளன.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சிகள் (இரண்டாம்
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 52/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட
முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 54/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே,
இந்த மதுரை கார்ப்பரேஷன் சம்பந்தமாக அமைச்சரவர்கள்
கொண்டுவந்திருக்கிற மசோதாவின் மீது ஒருசில வார்த்தைகள்
சொல்ல விரும்புகிறேன்.

நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை
நினைவுபடுத்தவே இப்போது நான் பேசுகிறேன். ஏற்கனவே
அங்கே 5 உறுப்பினர்கள் என்று இருந்ததற்குப் பதிலாக இப்போது
6 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.
ஏன் ஒரு உறுப்பினர் அதிகமாக வேண்டுமென்று கேட்கிறார்கள்
என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : ''ஆப்ஜெக்ட்ஸ்
அன்ட் ரீசன்ஸ்'' என்பதிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
ஏற்கனவே 5 ஆண்டுகள் என்று இருந்ததை இப்போது 6 ஆண்டு
கள் என்று மாற்றியிருக்கிறோம். அதைப் போன்று 5 உறுப்
பினர்கள் என்று இருந்ததை 6 உறுப்பினர்கள் என்று மாற்று
வதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

* 1983 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதிய தமிழ்நாடு
சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



திரு. எல். இளையபெருமாள் : வருடத்திற்கு ஒரு உறுப்
பினரா? 6 ஆண்டு என்று உயர்த்தியதற்காக ஒரு உறுப்பினரையும்
அதிகமாக நியமிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால்
அரசாங்கம் விரும்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.
சென்னை கார்ப்பரேஷனில் 1920 ஆம் ஆண்டில், வெள்ளைக்
காரன் ஆட்சி காலத்திலிருந்து மேயராக ஒரு தாழ்த்தப்பட்ட
மகன் வருவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அது பற்றி
சென்ற முறையும் நான் அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று உறுதி கொடுத்தார்
கள். இந்த அவையில் மட்டுமல்லாமல் என்னிடம் நேரிலும்
சொல்லியிருக்கிறார்கள். கோவை மாநகராட்சியாக இருந்
தாலும், மதுரையாக இருந்தாலும், திருநெல்வேலியாக இருந்
தாலும், திருச்சியாக இருந்தாலும், சேலமாக இருந்தாலும்
''பொலிட்டிக்கல் ரிசர்வேஷன்'' இருக்க வேண்டும். மேயர் பதவி
வருகின்ற காலத்தில் எந்தக் கார்ப்பரேஷனாக இருந்தாலும் ஆதி
திராவிட மக்கள், மலைவாழ் மக்கள், பின்தங்கிய மக்கள்
மேயராக வருவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டு காலமாக முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன்
களில் அவர்களுக்கு ''ரிசர்வேஷன் இன் ப்ரமோஷன்'' என்பது
கொடுக்கப்படவில்லை. அப்பாயின்ட்மென்டும் அவர்களுக்குக்
கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு). இது முக்கியமான
விஷயம். வேறு யாரும் பேசவில்லை என்பதால் நான்
சொல்கிறேன். ஆகவே பத்தாண்டு காலமாக நாங்
களும் அதிகாரிகளைப் பார்க்கிறோம். அப்படிப் பார்த்த
போது ரிசர்வேஷன் இன் அப்பாயின்மென்ட், ரிசர்வேஷன் இன்
ப்ரமோஷன் வேண்டும் என்று கேட்கிறபோது அதிகாரிகள்
லோக்கல் போர்டில் இருப்பவர்கள் உத்தரவு கிடைக்கவில்லை
என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைக் கவ
னிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்
அவர்கள் இங்கே 18 சதவிகிதம் ரிசர்வேஷன் காப்படும் என்று
பேசிவிட்டு அவர்களுக்கு உத்தரவு அனுப்பாமல் இருக்கிறார்கள்.
அதை உடனடியாக செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே
என்னுடைய வேண்டுகோளாகக் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, மதுரை மாநகராட்சி 1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்
பட்டது. 1971 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே இந்தச் சட்டம்
நீடித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 5
நிலைக் குழுக்கள் இருந்தன. ஸ்டான்டிங் கமிட்டிகள் முன்பு
இருந்தன. முன்பு இருந்த ஆட்சியில் 5 ஆண்டு பதவிக்காலம்
என்று வைத்திருந்தார்கள். ஆனால் இன்று அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப்
பின்னாலே அது 6 ஆண்டு காலமாக இன்று நீடிக்கப்பட்டிருக்கிறது.
ஒவ்வொரு மேயரும் 2 ஆண்டு பதவிக் காலம் என்று உயர்த்தப்
பட்டிருக்கிறது. 5 நிலைக் குழுக்களில் இருந்து 6 நிலைக்

[திரு. ப. குழந்தைவேலு] [1983 நவம்பர் 17

குழுக்களாக மாற்றுவதற்கு இந்த திருத்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை நிறைவேற்றிக் கொடுக்குமாறு நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள **கேள்வி** :

"1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/83) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 54/1983) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 53/1983) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

---

* 1983-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1983 நவம்பர் 17]

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 53/1983) நிறைவேற்றப்பெற வேண்டும் ."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 9. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க, பேரவையில் சட்ட முன்வடிவுகள் கீழ்க்கண்ட வரிசையில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் :

1. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்—செல்திறன்) சட்ட முன்வடிவு.

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்டமுன்வடிவு.

3. 1983ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு.

4. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகர்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு.

5. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

6. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்டமுன்வடிவு.

7. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவு.

8. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

9. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

10. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு.

11. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்டமுன்வடிவு.

12. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

பேரவையின் அனுமதியோடு இதற்கேற்ப இன்றைய நிகழ்ச்சி நிரல் மாற்றி எடுத்துக் கொள்ளப்படும்.

நாளை (18-11-1983) கேள்வி நேரம் இல்லை. பேரவைக் கூட்டம் நாளையுடன் (18-11-1983) முடிவுறும்.

## அரசினர் சட்டமுன் வடிவுகள் (தொடர்ச்சி)

(ஓ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம் செல்திறன்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம் - செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1983)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

(இரவு 6-10)

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்காக கொண்டு வந்திருக்கின்ற இந்தக் சட்டமுன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

** 1983-ம் ஆண்டு அக்டோபர் 25 ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





நாட்டிலே இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு உணவு அளிப்பதற்கும், கட்டிடம், கொட்டகைகள் கட்டுவதற்காகவும், அந்த நிலையங்களிலேயிருந்து நிதியை எடுத்துக் கொள்வதற்காகவும், இந்தச் சட்ட முன்வடிவிலே ஒரு அனுமதி வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைய தினம் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிப்பதற்கு இந்த சட்ட முன்வடிவில் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்றும், அதற்குத் தேவையான கட்டடங்களை; கொட்டகைகளைக் கட்டுவதற்கும், இந்து சமயத் துறையின் நிலையங்களிலேயிருந்து அரசு நிதி எடுத்துக் கொள்ளவும், ஏற்செனவே எடுத்துக் கொண்டதற்கும், இனி எடுத்துக் கொள்வதற்கும் வகை செய்யும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது முக்கியமாக ஏழை எளியவர்களுக்கு உணவு தருவதற்காகக் கொண்டுவரப்படுகிறது என்று காரண காரிய விளக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருந்தாலும், இதனுடைய அடிப்படை நோக்கம், சத்துணவுத் திட்டத்திற்காக இப்படி முன் உத்தரவு போட்டு, கோயில்களிலேயிருந்தும், மடங்களிலிலேயிருந்தும், அந்த நிதியை எடுத்துக்கொள்வதற்கும், ஏற்கெனவே எடுத்த நிதிக்கு அனுமதி பெறுவதற்கும இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் என்று அந்த திட்டத்தைப் பற்றி இதிலே தெரிவிக்காமல் ஏழைகட்கு உணவு அளிப்பதற்காக, கட்டிடம் மற்றும் கொட்டகைகள் கட்டுவதற்காக என்று இந்த காரண காரிய விளக்கத்திலே தெரிவித்து இருக்கிறார்கள். இந்த நோக்கத்தை கொள்கை ரீதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்தவர்கள் என்ற அந்த அடிப்படையிலே, ஏழையின் சிரிப்பிலே இறைவனை காண்போம் என்று அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையிலே இதை நான் வரவேற்கிறேன். ஆனால் இதிலே அப்படிப்பட்ட காரியங்கள் செய்கின்ற நேரத்திலே பெருவாரியாக அந்தக் கோவில்களிலேயும், மடங்களிலேயும், இருந்து பெறுகின்ற அந்தப் பணம், அரசு சார்பிலே, கடினமான அளவிலே அவர்களிடமிருந்து வற்புறுத்துகின்ற அளவிலே இன்னும்சொல்லப்போனால் அவர்கள் அந்த நிலையத்தை நடத்தமுடியாது என்ற அளவில் பாதிக்கப்படாமல், கோயில்களிலேயிருந்தும் அந்த மடங்களிலேயிருந்தும் பணத்தைப்பெற்று, அவர்களும் தங்களுடைய நிலையங்களை நடத்துதற்கு ஏதுவாக இருக்கின்ற முறையில் இதைப் பயன்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காக இப்போது சற்றேறக்குறைய 48 லட்சங்களுக்கு மேல் இந்து அறநிலையக் கோயில்களிலேயிருந்தும் மடங்களிலேயிருந்தும் பெற்றிருக்கிறார்கள். மேலும் ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்காகவும், இந்த திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தவும், கோயில்களிலேயும், மற்ற மடங்களிலேயும் இருக்கின்ற உபரி பணத்தைப் பெற்று ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கவும் இந்தச் சட்டத்தினை

கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படிப் பணத்தைப் பெறுகின்ற
நேரத்திலே ஏற்கெனவே அரசுக்கு அதிகமான செலவு இருக்கிறது
என்ற காரணத்தாலும் இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காக அதிக
மாக செலவு ஆகின்ற காரணத்தினாலும் இன்னும் பலவேறு
அரசின் செலவுகளுக்காகவும், மதுவிலக்கை ரத்து செய்தார்கள்.
அதிலே சற்றேறக்குறைய 200 கோடிக்கு மேல் வருமானம் வரு
கின்றது. எனவே. கோயில்களிலேயிருக்கிற உபரி நிதியைப்
பெற்று, ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்கவும், மற்றும்
சத்துணவுத் திட்டத்திற்காகவும், இப்படிப்பட்ட கோயில்களி
லிருந்து பணத்தை பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
ஆனால் இப்படி உபரியாக இருக்கிற நிதிகளைப் பெற்று, ஏழை
எளியவர்களுக்கு உதவி செய்கிற வகையில், இந்த சத்துணவுத்
திட்டத்திற்கு உபயோகப்படுத்தவும், அதற்கான கட்டிடங்
களைக் கட்டவும், பயன்படுத்தவேண்டும் என்ற அளவிலே இதைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். மிக வேகமாக இந்த திட்டத்தை
அறிமுகப்படுத்தி, அமல் செய்திருக்கிற காரணத்தால், பல மாவட்
டங்களில் கட்டப்பட்டிருக்கின்ற அந்தக்கூடங்களுக்கான கட்டிடங்
கள் சரியான முறையில் இல்லை. பல லட்சங்களுக்கு மேல்
செலவழித்து, கிட்டத்தட்ட 1/2 கோடிக்கு மேல் செலவழித்துக்
கட்டப்பட்டிருக்கிற அந்தக்கட்டிடங்கள், குறிப்பாக என்னுடைய
தொகுதியிலேயும், என்னுடைய மாவட்டத்திலேயும், நல்ல முறை
யில் இல்லை. வெண்டிலேஷன் என்ற அளவிலே அதிகமான
அளவுக்கு இடைவெளி விட்டுவிட்டு கட்டப்பட்டிருக்கிற காரணத்
தால், மழை பெய்கிற போது, அதன் உள்ளே சாரல் அடித்து
உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிற குழந்தைகள் மிகவும் பாதிக்
கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அப்படி வீணாக விரயம்
இல்லாமல், இந்தப் பணத்தை நல்ல முறையில், நல்ல வழிகளிலே
செய்வதற்கு, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுகின்ற
நேரத்தில், நல்ல முன் யோசனையுடன் கொண்டு வரவேண்டும்.
ஆகவே, அந்த வகையில், குழந்தைகளுக்கு உணவு அளிக்கின்ற
திட்டத்தை நல்ல முறையில் நடத்துவதற்காக கொண்டு வரப்
படுகிற காரணத்தால் இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்ற
கழகத்தின் சார்பிலே கொள்கை அளவிலே வரவேற்று
அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் செய்தித் துறை மூலமாக
ஏழை எளிய குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்கும், அது
சம்பந்தமாக கட்டிடங்களைக் கட்டுவதற்கும், அறநிலையங்களி
லிருந்து பணத்தை எடுப்பதற்கு அங்கீகாரம் பெறுகின்ற முறை
யிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது வர
வேற்கத் தக்கது தான். அந்தத் தொகையை வாங்குவதற்குள்ள
அதிகாரங்களை அறங்காவலர் குழுவிற்கு தனி அதிகாரம் அளிப்
பதன் மூலமாக, அதிலே தவறுகள் ஏற்படாத வண்ணம் பாது
காப்பதற்கு அரசு முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற
வேண்டுகோளை முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





ஏனென்று சொன்னால் அறங்காவலர்கள் இப்படிப்பட்ட உரிமை
களைப் பெறுவதன் மூலமாக, தங்களுக்குள்ள அதிகாரத்தைப்
பயன்படுத்தி, அந்த நிதிகளை தவறான வேலைகளுக்கு பயன்
படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்
தான் ஆரம்பத்திலேயே இதை ஆலோசனையாகக் கூறுகிறேன்.

இப்படி இந்த அறநிலையங்கள் மூலமாக பெரிய வருமானம்
வந்து, இந்த துறைக்கு பணம் எடுக்கின்ற இந்த நேரத்தில் இன்
னொரு முக்கியமான விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்
களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பழநி
கோவிலில் இருந்து சில லட்சங்கள் இந்தத் துறைக்கு ஏற்கெனவே
நன்கொடையாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையில்,
பழனிக் கோவிலில் வேலை செய்கின்ற 330 முடி திருத்தும்-
க்ஷவரத் தொழிலாளர்களுக்கு கடந்த பல ஆண்டுகாலமாகவே
தீபாவளிப் பண்டிகையின் போது , 250 முதல் 300 வரையில்
போனஸாக வழங்கப்பட்டு வந்தது. அவர்கள் மிகவும் பின்
தங்கியவர்கள் அவர்களுக்கு கொடுக்க வேண்டியதுதான். ஆனால்
இந்த ஆண்டு அவர்களுக்கு 50 ரூ. , 60 ரூ. மட்டுமே கொடுக்கப்
பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், அவர்களுக்கு ஏற்கெனவே
வழங்கிய 250. ரூ. 300ரூ. என்ற முறையிலேயே, தொடர்ந்து
வழங்கச் செய்யவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்
கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களே, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்
களால், கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவை நான்
வரவேற்கிறேன். ஆனால் கொடுத்திருப்பது — Poor feeding and
construction of buildings என்று அதில் இப்போதிருக்கிற
சத்துணவுத் திட்டத்தின்படி கட்டப்பட்டிருக்கிற இடங்களுக்கு
மட்டுமா அதாவது அந்தப் பணம் இந்தத் திட்டங்
களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்தப்
படுமா அல்லது, கல்லூரிகள் மேல் நிலைப் பள்ளிகள், உயர்
நிலைப் பள்ளிகள் போன்றவற்றில் எங்கெங்கே கட்டிட வசதிகள்
மிகக் குறைவாக இருக்கின்றனவோ அங்கேயும் பயன்படுத்தப்
படுமா ?

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.
பல்வேறு இடங்களிலே அரசாங்கம் பள்ளிக் கட்டிடங்களை கட்டிக்
கொடுக்காத காரணத்தால், ஷிப்ட் முறையிலும், மரத்தடிகளிலும்
வகுப்புகள் நடப்பது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விஜய
சாரதி அவர்களுடைய தொகுதியான அரக்கோணத்திலே 1970-ம்
ஆண்டு பள்ளி தொடங்கப்பட்டு 1983-ஆம் ஆண்டுதான் நாம்
அதற்கு கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இது

போன்ற பணிகளுக்கும் அது உபயோகப்படுத்தப்படுமா என்று
தெரிய வேண்டும். இந்த சத்துணவுத் திட்டக் குழந்தைகளுக்காக
கட்டிடங்கள் கட்டுவதிலே எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் அந்த மாதிரி உபரியான பணங்கள் உங்களுக்கு
தேவையான அளவு கிடைக்குமானால், அவைகளை இதுபோன்ற
காரியங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். மேலும் சமூகக் கூடங்
களை கட்டலாம். ஏழை எளிய மக்கள், பின் தங்கிய மக்கள்,
ஆதிதிராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளிலே இருக்கின்ற கோவில்
கள் சரிவர பராமரிக்கப்படவில்லை; அவைகளுக்கு உதவி
செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள்.
சில இடங்களில் உதவியும் செய்திருக்கிறார்கள். நன்றாகத்
தெரியும்.

சத்துணவுத் திட்ட பிள்ளைகளுக்கு மட்டும் அல்லாமல்,
ஏழை எளியவர்கள், பின் தங்கிய மக்கள், ஆதிதிராவிட மலை
வாழ் மக்களின் பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிகளுக்கும், ஷிப்ட்
முறையிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கும், இந்தப் பணத்
தை உபயோகப்படுத்தி, அவைகளுக்கும் கட்டிடங்கள் கட்டிக்
கொடுக்க முயற்சி செய்யலாம். இன்னும் சொல்லப்போனால்,
இதற்காக மடங்களிலிருந்தும் பணத்தை எடுத்து உபயோகிக்க
லாம். நான் கூட ஒரு மடத்திற்கு மெம்பராக இருக்கிறேன்.
நான் அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன்.

(இரவு 6-20)

என்னிடத்திலே 82 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவை
களை எடுத்துக் கொள்ளுங்கள். கல்லூரி வையுங்கள் என்று கூட
நான் சொல்லுவேன். மடங்களிலே கூட நிலம் இருக்கிறது.
பணம் இருக்கிறது. அந்தப் பணங்களை ஏழைகளுக்கு உபயோ
கப்படுத்துவதற்கு நீங்கள் சட்ட வல்லுநர்களைக் கலந்து அவற்
றை எடுப்பதற்கு கூட நீங்கள் காரியங்கள் செய்தால் நான்
வரவேற்பேன் என்று சொல்லிக் கொண்டும் எல்லாவிதமான
மக்களுக்கும் நிச்சயமாகப் பயன்படும் வகையில் நடைமுறைப்
படுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அமைச்சர் அவர்கள்
அவ்வாறே அறிவிப்பார் என்று நம்பி இந்த பில்லை வரவேற்று
அமர்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளை சட்டத்தை
மேலும் திருத்துவதற்கான இந்த சட்ட முன்வடிவை இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் முதலில் வரவேற்கிறேன்.
இந்த சட்டத்தை வரவேற்கிற அதே நேரத்தில் இதிலே உள்ள
அறங்காவலர்கள் இந்த நிதியை நல்ல முறையிலே, நல்ல காரி
யங்களுக்கு குறிப்பாக, ஏழைகளுக்கு உணவு அளிப்பது





மேலும் 'ஷெட்' என்று சொல்லப்படுகிற கொட்டகைகள் கட்டப்
படுவதற்கான ஒரு திருத்தம்தான் இந்தச் சட்ட முன்வடிவு
என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை வரவேற்கின்ற இந்த சந்தர்ப்பத்தில்
ஏழைகளுக்கு உணவு அளிக்கவேண்டுமென்று சொல்கிற நம்
முடைய அரசு, கோயில் ஒன்று இருந்தால்தான் நிதி கிடைக்
கிறது, கோயிலை நம்பித்தான் மக்கள் காசு அளிக்கிறார்கள்;
அந்தக் காசுகளை வைத்துத்தான் நிதி உருவாக்கப்படுகின்றது
என்பதை அறிந்து, அந்த காசுகளை சேர்த்து நிதியாக உரு
வாக்குகின்ற ஊழியர்களுக்கு நல்ல ஊதியத்தை வழங்க, அவர்
களையும் இதிலே ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொண்டு அவர்
களுக்கும் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

கோயிலிலே இருந்து எடுக்கின்ற காசுகளை வைத்து,
அவைகளைப் பயன்படுத்தி நல்லது செய்வது என்று வருகிற
போது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்
பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாக எல்லாக் கோயில்களி
லும், அநேகமாக 95% கோயில்களில் அறங்காவலர்களாகப்
போடப்பட்டிருப்பவர்கள் ஆளும் கட்சிக்கு அனுசரணையாக
உள்ள தோழர்கள்தான். என்னுடைய உத்தேச மதிப்பீடு 95%
(குறுக்கீடு) உதாரணத்திற்கு சொல்கிறேன். தப்பு செய்
கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. எங்கள் மாவட்டத்
திலே அதுமாதிரித்தான் அதிகமான அளவிலே போட்டிருக்
கிறார்கள். அந்தத் தோழர்கள் எல்லாம் அறங்காவலர்களாக
இருந்து இந்த நிதியை எந்தவிதமான குறைபாடும்
இல்லாமல் செயல்படுத்தினால் நல்லது என்பது ஒரு பக்கம்.
மறுபக்கம், 60 வயதிற்கு மேற்பட்ட, வயோதிகப் பென்ஷன்
வாங்குகின்ற ஏழைகளுக்கும் இந்த நிதியில் இருந்து உணவு
அளிக்கப்படவேண்டும்.

ஏழை எளிய மக்களுக்கு உணவு அளிப்பது, கொட்டகை
கள் கட்டுவது போன்ற காரியங்களுக்கு கோயில் நிதியைப்
பயன்படுத்துவதற்கு இந்த அரசு இந்த சட்டத்தைக் கொண்டு
வந்திருப்பதை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்து
சமய அறக்கட்டளைகளுடைய (திருத்தம் செல் திறன்) என்
கின்ற சட்ட முன்வடிவை வரவேற்று அவையிலே இருக்கிற
எல்லா கட்சிகளுடைய உறுப்பினர்களும் ஆதரித்து இருப்பதை
நான் வரவேற்று அவர்களுக்கு அரசின் சார்பிலே நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நான் இதற்கு விளக்கம்

அளிக்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றாலும், இந்த
சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏன்
ஏற்பட்டது என்பதை சுருக்கமாகச் சொன்னால் மாண்புமிகு
உறுப்பினர்களுக்கும், அதன் மூலம் நாட்டிற்கும் அது பயன்
உள்ளதாக அமையும் என்று கருதி அதற்கான காரணத்தை
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்றுப் பேசிய உறுப்பினர்
கள் ஆலயங்களிலிருந்து எடுத்து செலவழிக்கலாம் என்று தரு
கிற இந்த அதிகாரத்தின் மூலம் அறங்காவலர்கள் தவறாக
இதை பயன்படுத்தி விடக்கூடாது என்கிற கருத்தை இங்கே
தெரிவித்து இருக்கிறார்கள். அறங்காவலர்கள் எடுத்து பயன்
படுத்துவதற்கு இந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட
வில்லை. ஆலயங்களில் அதிகமான வருவாய் வருகிறபோது
அந்த ஆலயங்களினுடைய தேவையை, செலவை எல்லாம்
சரிக்கட்டிக் கொண்டு உபரியாக இருக்கிற நிதியை ஆலயங்
களிலிருந்து எடுத்து இந்து சமயம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி
களுக்கோ அல்லது அதன் தொடர்பான பணிகளுக்கோ அல்லது
இந்துமக்களிலே கஷ்டப்படுகிற ஏழை எளியவர்களுக்கோ
சேரவேண்டும் என்று ஒரு குறிப்பிட்ட விதி சட்டத்திலே இருக்
கிறது. ஆனால் சட்டத்திலே எந்த விதியையும் விலக்களிப்
பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதி
காரம் ஒரு நோட்டிபிகேஷன் மூலம் விதிவிலக்கை அளிக்கலாம்
அல்லது அளித்த விதிவிலக்கை ரத்து செய்யலாம் என்று இருக்
கிறது. இப்போது நம்முடைய தமிழகத்திலே இருக்கிற ஆல
யங்களிலே 115 ஆலயங்கள்தான் ஒரு லட்ச ரூபாய்க்கும் மேற்
பட்ட வருமானத்தை உடைய ஆலயங்கள். ஆகவே அப்படி
இருக்கிற ஆலயங்களிலே 25 ஆலயங்கள்தான் லட்சக்கணக்கி
லே வருமானம் வருகிற ஆலயங்கள். அப்படி வருமானம் வரு
கிற ஆலயங்களிலிருந்து சமீபத்திலே ஏழை எளிய மக்களுக்கு
ஆதிதிராவிடமக்களுக்கு, கலப்பு மணம் செய்து கொள்கிற
வர்களுக்கு நாம் ஆலய நிதியிலிருந்து செலவழித்து சுமார்
800 திருமணங்களுக்கு மேல் கடந்த ஆண்டு நிறைவேற்றி
இருக்கிறோம். அதற்கு கூட முன்னாலே ஒரு சட்டத்தைக்
கொண்டுவந்து தான் அந்தக் காரியமே நடைபெற்றிருக்கிறது.
அதைப்போல் பள்ளிகளுக்கு அல்லது அநாதை விடுதிகளுக்கு
அல்லது ஏழைகளுக்கு உணவு வழங்குவதற்கு அல்லது உணவு
வழங்குகின்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு என்று எப்படிப்
பட்ட தலைப்பிலே நாம் நிதியுதவி அளித்தாலும் அதிலே இந்து
சமயத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு
சிலர், ஒரு சிலர் என்று நான் குறிப்பிட்டே சொல்கிறேன்.
காரணம் கோடிக்கணக்கான மக்கள், ஏழை எளிய மக்களுக்கு
ஆண்டவன் பெயரால், ஆலயத்தின் பெயராலே நன்மைகள்
நடத்தப்படுவதை வரவேற்கிறார்கள். ஏழை எளியவர்கள்
தான் ஆலயங்களுக்கே காணிக்கை செலுத்துகிறார்கள்.
ஆகவே அவர்கள் மீண்டும் ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பணம்



செலவழிக்கப்படுவதை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதற்கெடுத்தாலும் சிக்கலை உருவாக்க வேண்டுமென்று சட்டத்தைப் புரட்டிக்கொண்டு இருக்கிற சில மேதாவிகள் இந்த அரசாங்கம் எடுக்கிற அப்படிப்பட்ட நல்ல நடவடிக்கை களையும் குறுக்கிட்டு சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்துவதற்கு முயல்கிறார்கள். அப்படி நல்ல எண்ணத்தோடு அரசாங்கம் செய்கிற செயல்களுக்கு நோக்கம் கற்பித்து ஏதோ சமயத்திற்கே விரோதமான காரியம் நடப்பதைப்போல சிலர் அதற்காக் வரிந்துகட்டிக்கொண்டு வருகிறார்கள். நீதிமன்றங்களை எல் லாம் கூட அணுகுகிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்திலே இரண்டு திருத்தங்களைக் கொண்டுவந்திருப்பதால் அரசாங் கத்திற்கு ஏற்கனவே இருக்கிற விதிவிலக்கு அளிக்கிற உரிமை யில் வேறு சில வழக்குகளிலே நீதிமன்றத்திலே ஒரு சந்தே கத்தை எழுப்பியிருக்கிறார்கள். இந்த வழக்கிலே அல்ல, நான் அதற்குள்ளே நுழையவில்லை. வேறு சில வழக்குகள் போன பொழுது அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அளிக்கிற உரிமை நோடிபிகேஷனிலிருந்து இருக்கிறது. ஆனால் அதை முன்னாலே செய்திருக்கிற காரியத்திற்கும் விதிவிலக்கு அளிக்க முடியுமா என்பதை அரசாங்கம் சட்டத்திலே இடம் பெறுமாறு செய்யவேண்டுமென்று நீதிமன்றத்திலே அளித்த தீர்ப்பையொட் டித்தான் அரசாங்கத்திற்கு இருக்கிற விதிவிலக்கு அளிக்கிற உரிமையை, முன்னாலே செய்திருந்தாலும் அதையும் செல்லு படியாக்குகிற வகையிலே இங்கே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிறோம்.

இன்னொரு சட்டத் திருத்தத்தை —அதைத்தான் எல்லோரும் பேசும் பொழுது சத்துணவோடு இணைத்துப் பேசிக்கொண்டிருந் தார்கள் —சத்துணவுத் திட்டத்திற்காக மாத்திரம் இது கொண்டு வரப்படவில்லை, ஏனென்றால் பள்ளிகளுக்கு உதவுகிறோம், ஏழைகளுக்கு உதவுகிறோம், பள்ளிகளுக்கு உதவுகிறபோது இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். அந்த மதத் தையே தாங்கள்தான் தாங்கிக்கொண்டிருப்பதாக, பாது காத்துக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிற சிலர், பள்ளிக்கூடத்திற்கு இதை எப்படி நீங்கள் வழங்கலாம், பள்ளிக் கூடத்திலே யார் யாரோ படிக்கிறார்களே அதற்கு எப்படி நீங்கள் வழங்கலாம் என்று கூட கேட்கிறார்கள். அதற்குத்தான் விதி விலக்கு அளிக்கிற உரிமை இருக்கிறது என்றாலும்கூட சாப் பாடு போடுகிற இந்த விஷயத்தில் நம்முடைய ஆலய நிதியிலிருந்து சுமார் 59 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறோம். நல்ல வசதிமிக்க ஆலயங்களிலிருந்து அந்த அறங்காவலர் குழு வினர் ஆணையருடைய அனுமதியைப்பெற்று அரசாங்கத்திற்குத் தந்திருக்கிறார்கள். இந்த 59 லட்சமும் சாப்பாடுபோட்டு அழிப் பதற்காக அல்ல. அதை இந்த அவையின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். வெளியே இதைப்பற்றி தவறாக எண்ணிக்கொண் டிருக்கிற அந்தப் பெரியவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1983 நவம்பர் 17

மிகத் தெளிவாக ஜாக்கிரதையோடு அவர்கள் விரும்புகிற சம
யத்தைக் காப்பாற்றுகிற பணிக்காகத்தான் நாம் இதைச்
செய்துகொண்டிருக்கிறோம்.

[இரவு 6-30]

இந்த 59 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயும் சாப்பாட்டைக்
கொட்டிப்போட்டு முடித்துவிடுவதற்காக தரவில்லை.
40 ஆயிரம் செலவில் 148 உணவுக் கூடங்கள் கட்டுவதற்கு வழங்கி
யிருக்கிறோம். அது வெறும் உணவுக்கூடங்கள் மாத்திரமல்ல,
சமுதாய நலக் கூடங்களாக விளங்கிக்கொண்டிருக்கின்றன.
40 ஆயிரம் ரூபாய்க்கு திட்டமிட்டு இன்றைக்கு அரசு அந்த
கட்டிடங்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. அப்படி
148 உணவுக் கூடங்களை அமைக்கவேண்டும் அந்த உணவுக்
கூடங்களும் எந்த ஆலயம் நிதி தருகிறதோ அந்த ஆலயத்தின்
பெயராலே அமைக்கப்படவேண்டும் என்று நிபந்தனை.
திருவேற்காடு கருமாரி அம்மன் ஆலயத்தில் 4 உணவுக் கூடங்
களுக்கு பணம் தருகிறார்கள் என்றால் அங்கே திருவேற்காடு
கருமாரி அம்மன் உணவுக் கூடம். அதைப்போல கபாலீஸ்வரர்
ஆலயத்தில் தந்து இருக்கிறார்கள் என்றால் அதற்கு அருள்மிகு
கபாலீஸ்வரர் உணவுக் கூடம். இது என்றைக்கும் நிலைத்து
நின்று ஏழை எளிய மக்கள் அங்கே போய் உணவு சாப்பிடவோ,
அல்லது கல்வி கற்கவோ அல்லது சிறு குழந்தைகள் 5 வயதுக்கு
உட்பட்ட குழந்தைகளுக்குத் தான் அது பயன்படப் போகிறது.
பள்ளிகளிலே இருப்பதற்கு இது பயன்படுத்துவது அல்ல. கிராமங்
களிலே 2 வயதிலிருந்து 4 வயது வரை அந்த குழந்தைகளுக்கு
இப்போது நாம் உணவு போட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த
சத்துணவுக் கூடங்களுக்குத்தான் இதை வழங்கியிருக்கிறோம்.
ஆகவே இதுவே தவறு என்று அந்த சிலர் வெளியில் சொல்லிக்
கொண்டு இருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்குக்கு போய்
இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தெளி
வாக இருந்து விட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்டத்
திருத்தத்திலே உணவு வழங்குவது, உணவு கூடங்கள் கட்டுவது
என்று கொஞ்சம் தெளிவாகவே சொல்லியிருக்கிறோமே தவிர
இந்த சத்துணவுத் திட்டத்திற்காக மாத்திரம் என்பதற்காக அல்ல
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். எப்போதும் எந்த காலத்திலும் ஏழை எளிய மக்களுக்
காக நம்முடைய முன்னோர்கள் ஆண்டாண்டு காலமாக இந்த
ஏழைகளை வாழவைப்பதற்காக இந்த அறநிலையங்கள் மூலம்,
ஆலயங்கள் மூலம் வழி காட்டிகளாக செய்து கொண்டு இருக்
கிற காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு முறையான சட்ட
சம்மதம் வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சட்ட திருத்தம்.
ஏன் என்றால் நமக்கு தெரியும், ஆதி திராவிட மக்களுக்காக
மயான பாதைக்கு ஆர்ஜிதம் செய்த போது போட்ட உத்திரவில்
அதிலே ஆதிதிராவிடர்களுக்கு என்று சொல்லவில்லை என்ற கார
ணத்தைக் காட்டி ஒரு பெரிய கதையைச் சொல்லி அந்த



1983 நவம்பர் 17] [திரு. ஆர். எம். வீரப்பன்]

இன்டென்ஷன்' அதைப்பற்றி கவலைப் படாமல் நீதிமன்றம் நிரா
கரித்த அந்த வரலாற்றை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.
அப்படி எல்லாம் வந்து விடக் கூடாதே என்பதற்காகத்தான்
மிகுந்த எச்சரிக்கையோடு இந்த சட்டத் திருத்தம் கொண்டு வந்து
இருக்கிறோம். இதிலே ஆலயத்தில் இருக்கிற அறங்காவலர்
கள் அவர்கள் இஷ்டப்படி செலவு செய்தவற்கு அல்ல. அவர்கள்
செலவு செய்கின்ற அனுமதியை ஆணையரிடத்தில் பெற்று ஆக
வேண்டும். ஆணையர் அரசாங்கத்தினிடத்தில் இந்த விதி விலக்கை
பெற்று ஆகவேண்டும். அப்படி விதி விலக்கு கொடுக்கிறபோது
நாளைக்கு நீதி மன்றத்திற்கு போனாலும், எங்கே போனாலும்
நம்முடைய நீதிபதிகள் பார்த்து ஏன் இந்த சட்டத்தை நீங்கள்
ஒழுங்காக செய்யவில்லை என்று அவர்கள் சொல்லிவிடக் கூடாது
என்கிற அந்த நியாய உணர்வோடு அவர்களுடைய கருத்துக்களை
எல்லாம் நம்முடைய சிரம் மேல் ஏற்றுக்கொண்டு இந்த சட்டத்
திருத்தத்தை கொண்டு வந்து இருக்கிறோம். இதிலே வேறு
குறிப்பாக சத்துணவு திட்டத்திற்கு என்று அல்ல. ஏழை எளிய
மக்களுக்கு எல்லா வகையிலும் ஆலய உதவிகளை வழங்கி,
உபரியாக இருக்கிற நிதிகளை வழங்கி, அவர்களை பாதுகாப்ப
தற்கு, அவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு தான் இந்த
சட்டத் திருத்தங்கள் என்பதைச் சொல்லி இதை
ஏற்றுக்கொண்ட எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அரசின்
சார்பாக நன்றியை தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்
னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்து சமய
அறக்கட்டளைகள் (திருத்தம் செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/83) ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்
(திருத்தம் செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 38/83) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1983 நவம்பர் 17

9. அறிவிப்புகள், (தொடர்ச்சி)

(ஆ) நில உரிமை பதிவேடு (Patta Pass Book) வழங்கல் சட்ட
முன்வடிவு 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர்
அறிவிப்பு: ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப்
பதிவேடு (Patta Pass Book) வழங்கல் சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1981) (கூட்
டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள
ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஔ) நில உரிமை பதிவேடு (Patta Pass Book) வழங்கல் சட்ட
முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு எஸ் டி சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு
(Patta Pass Book) வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1981) (கூட்டாய்வுக் குழு
திருத்தி அமைத்தவாறு)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற
வேண்டும்.

திரு எல். இளயபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தப் பட்டா பாஸ் புத்தகம் கொண்டு
வந்திருப்பது, நல்லது, வரவேற்கிறேன். ஆனால், அதில இருக்
கிற மிகச் சிரமமான ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்பதற்
காகத்தான் இந்த மசோதாவில் நான் பேச விரும்புகிறேன். முன்
பெல்லாம் ஒரு கிராமத்திற்கு ஒரு கணக்குப் பிள்ளை, ஒரு மணியக்
காரர் இருந்தார். இப்பொழுது 5 ஊர்களுக்கு, 4 ஊர்களுக்கு,
3 ஊர்களுக்கு ஒரே விலேஜ் அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசர் கொடுத்
திருக்கிறார்கள். முன்பிருந்தவர்கள் கிராமத்திலே இருந்தவர்கள்.
கிராமத்தின் நிலம் எங்கே இருக்கிறது? புஞ்சை எங்கே இருக்
கிறது? நஞ்சை எங்கே இருக்கிறது? புறம்போக்கு எது? பட்டா
எது? யார் உரிமையாளர்? என்பவை எல்லாம் தெரிந்தவர்கள்
முன்பு இருந்தார்கள். இப்பொழுது இளைஞர்களாக இருப்ப
தால் அது தெரிய முடியாத நிலைமையிருக்கிறது.

---

* 1981ம் ஆண்டு மே 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்
வெளியிடப்பெற்றுள்ளது.



1983 நவம்பர் 17] [திரு. எல். இளையபெருமாள்]

அது மட்டுமல்ல, கணக்குப் பிள்ளை, மணியக்காரர் இரண்டு
பேருமே செய்ய வேண்டிய வேலையை ஒருவர் செய்ய வேண்டிய
தாக இருக்கிறது. இதை வரவேற்றாலும் முக்கியமாகச் செய்ய
வேண்டியது இரண்டு கிராமங்களுக்கு மேற்படாமல் ஒரு விலேஜ்
அட்மினிஸ்டிரேஷன் ஆபீசர் இருந்தாலொழிய நல்ல அட்மினிஸ்
டிரேஷனை அவர்களால் தர முடியாது. முன்பு கச்சாத்து முறை
இருந்தது. அந்தப் பழைய கச்சாத்து முறைக்குப் பதிலாகத்தான்
பாஸ் புத்தகம் கொடுக்கிறோம். இந்தப் புத்தகம் கொடுப்ப
திலே மிக நல்ல காரியம் இருப்பது ரிஜிஸ்டிரேஷன் ஆபீசுக்குப்
போகும்போது இதெல்லாம் குறிக்கப்படும். முன்பு யார் வேண்டு
மானாலும் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால்
இப்பொழுது செய்ய முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம், இப்பொழுது
இருக்கிற நிலைமையிலே இரண்டு கிராமங்களுக்கு மேல் ஒருவருக்கு
கொடுக்கப்படாது என்பது ஒன்று. குறிப்பாக அந்த அதிகாரி
கள் இளைஞர்களாக இருப்பதனால் அரசாங்கப் புறம்
போக்கு இருக்கிற இடங்கள், ஏரிப் புறம்போக்கு, நத்தம் புறம்
போக்கு, கிராமப் புறம்போக்கு, மாடு மேய்ச்சல் நிலங்கள்
என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அநேக
கணக்குப் பிள்ளைகள் அரசாங்கத்தின் மேலிருக்கிற கோபத்தி
னால் அந்த ரெக்கார்டுகளை முறையாகக் கொடுக்கவில்லை.
தாசில்தாரிடத்தில் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தர
விட்டிருந்தும் கூட இன்னும் சில இடங்களில் கொடுக்கவில்லை.
உதாரணமாக, தென் ஆற்காடு மாவட்டத்தில் திட்டக்குடி தாலு
காவில், கோழியூர் என்ற கிராமத்திலே ஆர்.எஸ். நெம்பர் 72-ல்,
144.6 செண்ட் இருக்கிறது. அதற்கு வேண்டிய ரெக்கார்டுகள்
இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன்
என்றால், இது போன்ற இடங்களை, பொதுவாக, தாழ்த்தப்
பட்டவர்கள், பின்தங்கிய மக்கள், ஏழை, ஆதி திராவிட மக்கள்,
மலைவாழ் மக்கள் அனுபவிக்க முடியாத ஆபத்தான நிலைமை
இருக்கிறது. ஒருவர் பெயரிலே பி. மெமோ நோட்டிஸ் கொடுக்
கப்படும். அடுத்த வருஷம் இன்னொருவருக்குக் கொடுக்கின்ற
அவல நிலை இருக்கிறது. இதற்கு இரண்டு காரணம். ஒன்று
இளைஞர்கள், அடுத்தது ரெக்கார்டுகள் இல்லை; இன்னொன்று
அவர்களைப் பழையவர்கள் ஏமாற்றுகின்ற ஒரு நிலையை உரு
வாக்கியிருக்கிறார்கள். அதிலும் 5 கிராமங்களுக்கு ஒருவர் என்று
வைத்திருப்பதால், அவர்கள் சரியாக கவனிக்க முடியாத நிலை
மையில் இருக்கிறார்கள். இதையெல்லாம் நமது வருவாய்த்
துறை அமைச்சர் அவர்கள் நன்றாகத் தெரிந்தவர்கள். அவர்கள்
இதற்கு ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த
மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்ட முன்வடிவின்
மீது என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். இந்தப்
பட்டா பாஸ் புத்தகம் வழங்குகின்ற இந்த மசோதாவை நான்

வரவேற்றாலும், அதிலே இருக்கிற சங்கடங்களை நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இந்தப் பட்டா பாஸ் புத்தகம் வழங்குகின்ற முறையை அமுல் நடத்த வேண்டுமென்றால், 100க்கு 75 பேர்கள் குத்தகை சாகுபடியாளர்கள்; 25 சதவீதத்தினர் தான் நிலச் சொந்தக்காரர்கள். எனவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு அது பயன் தராது என்கிற வகையில் உடனடியாக அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்க வேண்டும். தற்போது குத்தகைதாரர்களாக இருக்கிறவர்கள் உடனடியாக நிலச் சொந்தகாரர்களாக மாற்றப் பட வேண்டும். அதற்கான ஒரு சட்டத்தை இந்த அரசோ அல்லது நம்முடைய அமைச்சர் அவர்களோ கொண்டு வருவது பற்றி அறிவிப்பாரானால் உள்ளபடியே மனப்பூர்வமாக நான் வரவேற்பேன்.

தற்போது கிராம அதிகாரிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. ஒரே கிராம அதிகாரி 4,5 வட்டங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தற்போது இருக்கிற கிராமக் கணக்குகளை முறையாக அவர்களால் பார்க்க முடியுமா என்றால், முடியாது. இந்த நிலைமையில் அவர்கள் அளிக்கின்ற சான்றிதழ்கள்தான் ஆதாரமான சான்றிதழ்களாகத் தற்போது இருந்து வருகின்றன. பல இடங்களில் தற்போது விசாரணை செய்து கொண்டிருந்தாலும் குத்தகைப் பதிவேடு பதிவு செய்கிற முறையை நாம் பார்க்கிறபொழுது அவற்றில் எப்படிப் பட்ட முரண்பாடுகள் எல்லாம் வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

[இரவு 6—40]

எனவே அப்படிப்பட்ட முரண்பாடுகள் இந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்குவதில் வரக்கூடாது என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்குவது உள்ளபடியே விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்குதான் பயன் படுமே தவிர, விவசாயிகளுக்கு பயன் தருகிற வேறு எதற்கும் இது பயன்படாது என்று கருதுகிறேன். தற்போது வரி நிர்ணயிக் கிறார்கள். கிஸ்தி, நிலத் தீர்வை, தண்ணீர் தீர்வை இவைகள் எல்லாம் பல்வேறு சதவீதத்தில், பல்வேறு விகிதாச்சாரத்தில் தற்போது விவசாயிகளுக்கு விதிக்கப்படுகிறது. நிலச்சுவான்தார் களுக்கு சரியான அந்த வரிமுறை என்பது யாருக்குமே தெரியாது. ஏன், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட தன்னுடைய நிலத்திற்கு எந்த அடிப்படையில் வரி விதிக்கிறார்கள் என்று தெரியாது. எனக்கும் கூட அதே நிலை தான். அப்படிப் பட்ட குழப்பமான நிலை தற்போது அமலில் இருந்து வருகிறது. எனவே இந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்குகிற நேரத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய நிலத் தீர்வையை ஒருங்கிணைத்து ஒரே அளவாக ஒரே தொகையை நிர்ணயிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.





நஞ்சை நிலமாக இருந்தால் தண்ணீர் தீர்வை, லோக்கல்
செஸ், நில வரி இப்படி பல்வேறு விகிதாச்சாரத்தைக் கணக்கிட்டு
யாருக்குமே ஏக்சர் ஒ றிற்கு எவ்வளவு என்று தெரியாத நிலைமை.
இந்தக் குழப்ப நிலைமையை நீக்கி, நஞ்சை என்றால் ஒரு ஏக்க
ருக்கு இவ்வளவு தான்; புஞ்சை என்றால் ஒரு ஏக்கருக்கு இவ்
வளவு தான் என்று அறிவித்து பட்டா பாஸ் புத்தகத்தில் குறிப்
பிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கடந்த நான்கு ஆண்டு
காலமாக இந்த கிஸ்தி வசூல் செய்வதில் ஏற்பட்
டிருக்கிற சங்கடங்கள் நம்முடைய அமைச்சர் அவர்
களுக்கு தெரியாததல்ல. தற்போது வறட்சியலும்
வெள்ளத்தினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள்
கடந்த 5, 6 ஆண்டு காலமாக ஒழுங்கான முறையில் எந்த
ரெவின்யூ வில்லேஜிலும் ஒழுங்காக கிஸ்தி செலுத்தவில்லை.
ஆகவே அப்படி பாக்கியாக இருக்கிற அந்த கிஸ்தியை உடனடி
யாக தள்ளுபடி செய்து, வருங்காலத்திலாவது, அடுத்த பசலி
முதல் தொடர்ந்து இந்த வரியை வசூல் செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கிராமங்களில் இருக்கிற
பட்டாக்கள் பெரும்பாலான பட்டாக்கள் கூட்டுப்பட்டாக்களாக
இருக்கின்றன. அவைகளை சப்-டிவிஷன் செய்யவேண்டுமென்று
தாசில்தார்களிடத்திலோ அல்லது ஆர்.டி.ஓ.-க்களிடத்திலோ மனு
கொடுத்தாலும், மாதக் கணக்கில், ஆண்டுக்கணக்கில் சப்-
டிவிஷன் செய்து கொடுக்காமல் இருக்கிற நிலைமையை சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். எனவே பட்டா என்று கொடுக்கிற
போது, நில உரிமையாளர்களை நிச்சயிக்கிறபோது இப்படிப்பட்ட
சங்கங்கடங்களைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 75 சதவீதம் குத்தகை சாகுபடி
யாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான
பரிகாரம் காண்கின்ற வகையில் இந்த மாமன்றத்தில் எத்
தனையோ நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் வந்திருக்கின்றன.
அவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப் போல உழுபவ
னுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தை மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவையில் கூட முரண்பட்டக் கருத்துக்களை சொல்
லிக் கொண்டிருக்கிறார்கள். குத்தகை சாகுபடி நிலங்களைப்
பதிவு செய்கிற நேரத்திலே சில நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க
வேண்டுமென்று ஒரு அமைச்சரும், சில நேரங்களில் அப்படி
நாங்கள் விதிவிலக்கு அளிக்க மாட்டோம் என்று வருவாய்த்
துறை அமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
எங்களுக்கு உண்மையான நிலைமையை தெரிவிக்க வேண்டுமென்று

[திரு. செ. இராமலிங்கம்] [1983 நவம்பர் 17

பணிவோடு கேட்டு, எப்படிப்பட்ட நிலமாக இருந்தாலும் எந்தவகையிலும் விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கூட திருவிடைமருதூர் வட்டத்தில் பல்வேறு இனாம் கிராமங்கள் இன்னும் ரயத்வாரி கிராமங்களாக மாற்றப்படாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் ரயத்வாரி நிலமாக மாற்றப்பட வேண்டும். ரயத்வாரி கிராமமாக மாற்றப்பட்ட கிராமங்களுக்கு, குடிவாரதாரர்களுக்கு இன்னும் பட்டா வழங்கவில்லை. குறிப்பாக கோவிந்தபுரம், இரண்டாம் கட்டளை, சீனிவாசநல்லூர் இனாம் கிராமமாக இருந்து, ரயத்வாரியாக மாற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட குடிவாரதாரர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. எனவே அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நில உரிமைப் பதிவேட்டை வழங்குவதற்கு ஒவ்வொரு கிராமம், ஒவ்வொரு வட்டம் தான் யூனிட்டாக வைக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தற்பொழுது இரண்டு கிராம அதிகாரிகளின் வேலைகளை ஒரு கிராம அதிகாரி பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே 500 அல்லது 600 ஏக்கர் கொண்ட ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு கிளை கிராமமாக, அளவுகோலாக வைத்துக் கொள்ளலாம் என்ற யோசனையைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, 1983 ஆம் ஆண்டு நில உரிமை பாஸ் புத்தகம் வழங்கும் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் நீண்ட நெடுங்காலமாகப் இயக்கங்களை நடத்தி, இப்படிப்பட்ட ஒரு சட்டம் வர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துப் போராடி வந்தார்கள். அதன் பலன்தான் நமது வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இன்றையதினம் கொண்டு வந்திருக்கும் சட்டமாகும். எனவே, இந்தச் சட்டத்தை நான் விவசாயிகளின் சார்பில் வரவேற்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள மக்கள் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னால் நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தைப் பழைய நிலப் பிரபுக்களிடமிருந்து வாங்கியபொழுது சிலர் அளந்து வாங்கியிருக்கிறார்கள், சிலர் சர்வே பார்த்து வாங்கியிருக்கிறார்கள். சிலர் கூட்டுப்பட்டா வைத்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிக்கல்கள் நிறைந்திருக்கின்றன.



1983 நவம்பர் 17] [திரு. பொ. உத்திராபதி]

இதையெல்லாம் தீர்க்க வேண்டுமென்றால் இன்றைக்குச் சட்டத்தை அங்கீகரித்து முடிந்தவுடன் இதற்கு ஒரு நீண்ட நெடுங் காலத்தை எடுத்துக்கொள்ளாமல், ஒரு ஆறு மாதம் அல்லது ஒன்பது மாதம் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டுவிட்டு வெகு வேகமாக அந்த நிலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தப் பாஸ் புத்தகத்தைக் கொடுப்பதற்குத் துரிதமாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கிராம அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். மூன்று நான்கு பஞ்சாயத்துக்களுக்கு ஒரு அதிகாரி என்று இருக்கிறார்கள். அவர்களிடத்தில் இந்த வேலையை ஒப்படைத்தால் நீண்ட நெடுங்காலம் பிடிக்கும். ஆகவே, இந்தச் சட்டத்தை வேகமாக, விறுவிறுப்பாக நிறைவேற்ற வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு இன்னும் அதிகாரிகளை அதிகமாகப் பயன்படுத்தி இந்த வேலைகளை முடிக்க நமது வருவாய்த் துறை அமைச்சரவர்கள் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா கொடுக்கப் பட்டிருக்கிறது. பட்டா எப்படி என்றால் ஒரு காகிதத்தில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்தில், குறிப்பாகப் பரமக்குடியிலே, இன்றைக்கிருக்கின்ற பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க 98 பேர்களுக்குத் தற்காலிகப் பட்டா கொடுக்கப்பட்டு ஏழு வருடங்கள் ஆகியும் இன்னும் அவர்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. இப்படி இலட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் முன்னால் இருந்த அரசின் காலத்தில் ஒரே நாளில் இலட்சம் பட்டாக்களைக் கொடுத்தார்கள். ஆனால் பட்டா வாங்கிய அவர்களுக்கு இந்தப் பட்டா எங்கே இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை. வாங்கிய ரசீதாசி காணாமல் போய் விட்டது. எனவே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் நிலச் சொந்தக்காரர்களுக்குப் பட்டா புத்தகத்தைக் கொடுத்து அவர்கள் கடன் பெறுவதற்கும், மற்றக் காரியங்களைச் செய்வதற்கும் இந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு எப்படிப் பயன் அடைகிறார்களோ அப்படியே குடியிருப்பவர்களுக்கும் பட்டாப் புத்தகமாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த விவசாயிகளுக்கு இன்றைக்கு யூனியன் சார்பாக வரி போடுகிறார்கள். தண்ணீர் வரி போடுகிறார்கள், நிலத்திற்கு வரி போடுகிறார்கள். இப்படிப் பல்வேறு வரிகள் என்று வரும் பொழுது விவசாயிகளுக்கு எந்த வரி என்று புரியவில்லை. தொடர்ந்து பாக்கி வந்துகொண்டிருக்கின்றது. எனவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நிலவரி, நீர் வரி

[திரு. பொ. உத்திராபதி] [1983 நவம்பர் 17

போன்றவற்றை எல்லாம் ரத்து செய்யவேண்டும். புதிய வரிகள் போடுகின்றபோது 3, 4 வரிகளை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு முகப்படுத்தி ஒருமுகமான வரியாகப் போடவேண்டும். அந்த வகையிலே வசூல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால் சென்ற ஆண்டு கூட கடுமையான வறட்சி ஏற்பட்டது. இந்த ஆண்டும் கூட வறட்சி ஏற்பட்டது. எனவே இதுவரை உள்ள வரிகளை எல்லாம் ரத்து செய்து விட்டு புதிய வரிகளை ஒருமுகப்படுத்தி வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குரிய வகையிலே எதிர்காலத் திலே யோசிக்க வேண்டும், அந்த வகையிலே சட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டத்தை வர வேற்று நான் அமர்கிறேன்.

(இரவு 6-50)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தாலவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தீவிர மான நிலச் சீர்திருத்த சட்டங்களை எல்லாம் அமல்படுத்தவேண் டிய தேவை இன்னும் இருக்கின்றது. அந்த முறையிலே அந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டம் ஓரளவிற்கு உதவி யாக இருக்கும் என்ற முறையில் இந்தச் சட்டத்தைப் பொது வாக நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் சில கருத்துக் களை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக ஏழை எளிய மக்களைப் பொறுத்தவரையில் கடன் வாங்குவதற் காக வங்கிகள் போன்ற இடங்களுக்குச் சென்றால், அவர்களிடத் திலே உள்ள நிலத்திற்கு பட்டா இல்லை என்ற காரணத்தால் வங்கிகள் அவர்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அவர்கள் கடன் பெருவதற்கு ஓரளவுக்கு இது உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒருசில விஷ யங்களை இந்தச் சட்டம் சம்பந்தமாகச் சொல்லவேண்டி இருக் கின்றது.

இந்தச் சட்டத்தின் மூன்றாவது ஷரத்தில் தாசில்தார் ஒரு நோட்டீஸை வில்லேஜிலே பப்ளிஷ் பண்ணவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தரிசு, புறம்போக்கு நிலங்களை எல்லாம் கையிலே வைத்திருக்கின்ற ஏழை எளிய கிராம மக் களுக்கு இந்தச் சட்டம் பற்றித் தெரியவேண்டும் என்றால் வில் லேஜ் ஆஃபீஸர் ஒரு அறிவிப்பு கொடுத்தால் மட்டும் போதாது. கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கெல்லாம் தெரியக்கூடிய முறையிலே முரசு கொட்டி இன்னின்ன மாதிரி பட்டா பெறு வதற்கான மனுக்களைக் கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு தெரியப்படுத்துகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுக்கவேண் டும். பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் செய்து இந்தச் சட்டத் தினால் அந்த மக்கள் பயன்பெறுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.



1983 நவம்பர் 17] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அடுத்து இன்னொரு விஷயத்தையும் மனதில் எடுத்துக் கொள்ளவேண்டும். பட்டாக்கள் கொடுக்கவேண்டும் என்று வந்த பல்லாயிரக்கணக்கான மனுக்கள் ஒவ்வொரு தாலுக்கா ஆஃபீ சிலும், கலெக்டர் ஆஃபீசிலும் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் மறக்கக்கூடாது. அப்படி பட்டாவிற்காக மனுக்கள் போட்டிருப்பவர்களுக்கு என்னென்ன உரிமைகள் வழங்கவேண் டுமோ அதை வழங்க விரைவிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டத்தினுடைய பலட ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் பயன்படும்.

அடுத்து அரசுப் புறம்போக்கு நிலங்களிலே இருப்பவர்கள் பட்டாவிற்காக மனு கொடுத்தால், அதிலேயும் கூட காலதாமதம் ஏற்படுகின்றது. இப்படி சில எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியில் குலசேகரம் அரசு மருத்துவ மனைக்கு அருகிலே உள்ள ஒரு இடத்திலே நூற்றுக்கு அதிகமான ஏழைகள் வீடுகளைக் கட்டி அண்ணா நகர் என்று ஒரு காலனியை அமைத்து பட்டா கேட்டு மனு கொடுத்ததற்குப் பிறகும் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் ஒரு சில அப்ஜெக்ஷன்ஸ் ரெய்ஸ் பண்ணுகின்றது என்ற காரணத்தைக் காட்டி இன்றுவரை அங்கே பட்டா கொடுக் கப்படாத நிலைமை இருக்கின்றது. ஆகவே பட்டா வழங்கு வதற்காக என்று சட்டங்களை உருவாக்கும்போது இப்படிப் பட்ட கால தாமதங்களைத் தவிர்க்க நடவடிக்கைகளை நிச்சய மாக அரசாங்கம் எடுக்கவேண்டும். அந்த வகையிலே தகுந்த நடவடிக்கையினை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இதே போன்று இன்னொரு பிரச்சினை பல மாவட்டங்களில் இருந்து கொண்டு இருக்கிறது. காட்டுப் புறம்போக்காக இருக்கும் நிலங்கள் பற்றியது அது. ரெவின்யூ புறம்போக்கு நிலங்கள் என்று இருந்த இடங்கள் காட்டு இலாகாவிற்கு மாற்றப்பட்டு அது காட்டுப் புறம்போக்காக அதை இன்று வன இலாகா விளம்பரப்படுத்தி அந்தக் காட்டுப் புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை வெளியேற்றுகின்ற நட வடிக்கைகள் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. உண்மையிலே அவைகள் ரெவின்யூ புறம்போக்காக இருந்தவை தான். அதற்கு டி. மெமோ கூட வாங்கி வைத்து இருக்கிறார்கள் சிலர். அவர்கள் கையில் 4 செண்ட் அல்லது 5 செண்ட் என்று இருக்குமானால், அதையும் சேர்த்து காட்டுப் புறம்போக்கு நிலம் என்று அவர்களின் நிலத்தை வன இலாகா எடுத்துக்கொள் ளும் நடவடிக்கையில் இன்றைக்கு ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது. அது சரியல்ல. அது ஒரு காலத்தில் ரெவின்யூ புறம்போக்காக இருந்து இருக்கலாம், அவை என்றைக்கும் காட்டுப் புறம்போக்காக இருந்தது இல்லை. ரெவின்யூ புறம்போக்காக இருந்து, அதற்குப் பின்னால் காட்டு இலாகாவாக மாற்றப்பட்டது என்ற முறையில் அந்த இடங்கள் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலங்களில் உள்ள மக்களை வெளியேற்றுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அல்லது

அவர்களுக்கு அதற்கு பதிலாக வேறு பட்டா கொடுக்கவேண்டும் இது குறித்து அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அவர்கள் அருகிலேயே தோட்ட முதலாளிகள் வைத்து இருக்கும் இடங்கள் இருக்கின்றன. அந்தத் தோட்ட முதலாளிகளின் நிலங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வரவில்லை. ஏழைகள் இருக்கும் பகுதியில்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இது நியாயமாக இருக்காது, சரியாக இருக்காது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுப்பட்டா என்ற முறையில் உள்ள பிரச்னைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இருக்கின்றன. கூட்டுப் பட்டாவாக இருப்பதால், ரெவின்யூ அட்மினிஸ்டிரேஷனாக இருந்தாலும், காவல் துறையாக இருந்தாலும், நீதிமன்றங்களாக இருந்தாலும், அந்த இடங்களில் அதிகமான வழக்குகள் இருப்பது இந்த கூட்டுப் பட்டா வழக்குகள்தான். ஆகவே இந்த நிலையை மாற்றுவதற்கு தனிப்பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக கூட்டுப் பட்டா என்று சொல்லப் போனால், திருவிதாங்கூர் ஜில்லா இருந்த காலத்தில் ஜென்மம் லேன்ட்ஸ்—அதாவது நிலச்சுவான்தாரர்களுக்குச் சொந்தமான நிலங்கள்—அது ஒரு சிலருக்கு குத்தகைக்காக கொடுக்கப்பட்டது. அந்த குத்தகைதாரர்கள் அதை அப்படியே வைத்துக்கொண்டு விட்டதால், அவர்களுக்கு அந்த பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. அது கூட்டுப் பட்டாவாக இருக்கிறது. நிலச்சுவான்தார்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் சேர்த்து கூட்டுப் பட்டாவாக கொடுத்து இருப்பதால் பல பிரச்சினைகள் இன்றைக்கு அங்கே ஏற்பட்டு இருக்கிறது. அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் மற்றொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமானால் அதற்குத் தேவையான ஸ்டாப் நியமனம் செய்யவேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று சாதாரணமாக தாசில்தார்களுக்கு மாமூலாக இருக்கக்கூடிய வேலை பளு அதிகமாக இருப்பதால், இந்த வேலையையும் அவர்களிடத்தில் கொடுத்தால் நிச்சயமாக அரசாங்கம் எந்த அளவிற்கு இந்த வேலைகள் முடிக்க வேண்டும் என்று நினைக்கிறதோ அந்த அளவிற்கு வேகமாகச் செய்ய முடியாது. காலதாமதம் ஏற்படும். ஏற்கனவே, இன்று பல சட்டங்கள் நிறைவேற்றிய பிறகு அது அமல்படுத்தப்படாமல் இருக்கின்றன. அதன் காரணமாக அந்தப் பயன் யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்காமல் போய் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தின் பயன் விரைவில் மக்களுக்குப்





போய் சேர்வதற்கு, அவர்களுக்கு பட்டா பாஸ் விரைவில் கிடைப்பதற்கு, ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு தனித் தாசில்தார், ஸ்பெஷல் தாசில்தார் ஒரு வருஷ காலத்திற்காவது நியமனம் செய்யப்படவேண்டும். அவர்களுக்குத் தேவையான ஸ்டாப் நியமனம் செய்யவேண்டும். பட்டா கேட்டு விண்ணப்பிக்கிறவர்கள் அனைவருக்கும் விரைவில் பட்டா புக் கொடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த முறையில் நடவடிக்கை எடுத்தால்தான் இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேறும் என்று சுட்டிக்காட்டி அந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

(இரவு 7-00)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, நில உரிமை பதிவேடு சட்டத்தைப் பற்றி பேசிய நான்கு சட்ட மன்ற உறுப்பினர்களும் இதை பாராட்டி, வரவேற்று பேசியிருக்கிறார்கள். பேசாமல் அமர்ந்திருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களும் இதை பாராட்டுகின்ற முகத்தான்தான் இங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இந்த நில உரிமை பதிவேடு சட்டம் நீண்டகாலமாக வரவேண்டுமென்று நாம் எல்லோரும் விரும்பினோம். அதிலும் தஞ்சை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர், தஞ்சைக்கு இது பயன்படவில்லையே என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவரும்போது தஞ்சைக்குப் பயன்படுகிறதா அல்லது மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் தொகுதிக்குப் பயன்படுகிறதா என்று பார்க்காமல் பொதுவாக தமிழ் நாடு முழுவதும் அது பயன்படுகிறதா இல்லையா என்று பார்த்து கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அருமை சகோதரர் இளையபெருமாள் அவர்கள் பேசும்போது கிராமத்திற்கு ஒரு அதிகாரி என்று போட வேண்டுமென்று சொன்னார்கள். மிக விரைவிலே கிராமத்திற்கு ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த கிராம அதிகாரிகள் பகுதிநேர ஊழியர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது போடப்படுகிற கிராம அதிகாரிகள் முழுநேர ஊழியர்கள் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

அருமை சகோதரர் மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் பேசும்போது அவர்கள் இளைஞர் ஆயிற்றே, ஆகையால் அவர்களுக்கு சில செயல் இருக்கிறதே என்று சொன்னார்கள். அது அல்ல. இளைஞர்கள்தான் எதையும் உன்னிப்பாக கவனித்து தெரிந்துகொள்ள விரும்புவார்கள், அவர்களை வரவேற்க வேண்டும். அவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற பொதுவான கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருமை சகோதரர் இராமலிங்கம் அவர்கள் குத்தகைதாரர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு எல்லாம் இது பயன்படுமா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். எதுவுமே, நிரந்தரமில்லை. 'நத்திங் இஸ் பெர்மனன்ட்'. அப்படியானால் குத்தகைதாரர்களும் நிரந்தரமில்லை என்று நான் சொன்னால், குத்தகைதாரர்களை வெளியே அனுப்ப விரைவிலே சட்டம் வருமா என்று நீங்கள் எல்லாம் எண்ண மாட்டீர்கள் என்று கருதுகிறேன். எப்போதுமே நாம் முன்னோக்கித்தான் செல்வோமே தவிர பின்னோக்கிச் செல்ல மாட்டோம். இதற்கு முன்னால் இருந்த அரசு நிலச் சீர்திருத்தம் பற்றி எவ்வளவோ சட்டங்களைக் கொண்டு வந்திருந்தாலும் அந்தந்த காலத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டாலும், எந்த அரசும் படிப்படியாக அதிலிருந்து முன்னோக்கித்தான் செல்லுமே தவிர பின்னோக்கிச் செல்லாது. ஒவ்வொருவரும் முன்னுக்குதான் சென்றுகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சீர்திருத்தத்தைத்தான் நாடு ஏற்றுக்கொள்ளும் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆகையால் குத்தகைதாரர்கள் எதிர்காலத்தில் இருக்க மாட்டார்கள். புரியும் என்று கருதுகிறேன். உழுபவனுக்கே நிலம் என்று அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். தொடக்கத்திலேயே அப்படிக் கொண்டுவர வேண்டுமென்றுதான் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து வந்தேன். ஆனால் அதற்கு செய்ய வேண்டிய பல ஏற்பாடுகளைச் செய்வதிலே காலதாமதம் ஆகிவிட்டது. காலதாமதம் ஆகிவிட்டதில் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு வருத்தப்படுகிறார்களோ அதைவிட அதிகமாக இல்லாவிட்டாலும்; குறைவாக நான் வருத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தை மிக விரைவிலே, வேகமாகக்கொண்டுவர இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிக் கொண்டுவருகிறபோது, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்றால் யார்வீட்டு நிலத்தை உழுதாலும் அவனுக்குச் சொந்தம். ஆகையால் சட்டமன்ற உறுப்பினர் நிலம் ஆயிற்றே, சட்டமன்றத்திலே பாடு படுகிறாரே என்பதற்காக விதிவிலக்கு இல்லை. (குறுக்கீடு) சட்டத்திற்கு முன்னால் அருமை சகோதரர் நம்முடைய ராஜூம் ஒன்றுதான், கோவிலும் ஒன்றுதான். ஆகையால் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிறபோது உழுபவன் யாராக இருந்தாலும் அவனுக்கு சொந்தம். அது கோவில் நிலமா அல்லது ராஜூ நிலமா அல்லது வருவாய்த்துறை அமைச்சர் நிலமா அல்லது C.P.I. தலைவர் சங்கரய்யா நிலமா என்று பார்த்து யார நிலமாக இருந்தாலும் அதற்கு விதிவிலக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இங்கே பேசுகிறபோது வரியைத் தள்ளிக் கொடுக்கவேண்டும் என்று எல்லோரும் கேட்டார்கள். ஆனால் உங்களுக்குச் சொல்லவேண்டுமானால் இந்த



ஆண்டு மட்டும், 10.6 கோடி ரூபாய் வரி தள்ளி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி எல்லாம் தள்ளுகிற போது, இது போதாது நீங்கள் விளம்பரப்படுத்துவது போதாது. முரசு கொட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். முரசு மூலமாக அறிவிப்பு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கூறினார்கள். கிராமங்களிலே ஏழை எளியமக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாம் தெரியும்படி முரசு கொட்ட வேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கு வந்திருக்கின்ற இந்தச் சட்டம் நிறைவேறுகிறபோது அது நடைமுறைக்கு வருகிறபோது, கிராமம் கிராமமாக ஒரு முறைக்கு இருமுறை முரசு கொட்டப்படும். அங்கே சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அதிகாரிகள் முரசு கொட்டினார்களா இல்லையா என்பதை இங்கே இருந்து கொண்டு 12 ஆயிரம் கிராமங்கள் மற்றும் உட்கிராமங்கள் சேர்ந்து 50 ஆயிரம் கிராமங்களில் நான் ஒருவனே பார்க்க முடியாது. அதனாலே அங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், பொது வாழ்க்கையிலே ஈடுபடுகிறவர்கள் அங்கே தவறு நடக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். தவறு நடந்தால் உடனே சொல்லவேண்டுமே தவிர, தவறு நடக்கவிட்டு அதன் பிறகு சொன்னால், அந்தத் தவறு நடப்பதை பார்த்துக் கொண்டு இருப்பதால் அது பாவம், அநியாயம் என்று சொல்லிக் கொள்கிறேன். நான் முன்பே சொன்னதைப் போல நிச்சயமாக உடனடியாக அதைப் பார்த்து ஆவன செய்வேன் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்கு முன்னாலே உங்களுக்கு சொல்லவேண்டும் என்றால், இதிலே கூட்டாய்வுக் குழுவிலே இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் 20 முறை கூடி இருக்கிறார்கள். 20 முறை அவர்கள் கூடி அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். பல நிலச் சொந்தக்காரர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். நான் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். கூட்டாய்வுக் குழுவிலே உள்ள உறுப்பினர்களில் யார் சொன்னதையும் இதிலே சேர்க்காமல் இல்லை. அது ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, எல்லோர் சொன்னதையும் சேர்த்து இருக்கிறோம். காலதாமதம் ஆகிவிட்டதே என்று யாரும் கருத வேண்டியது இல்லை. எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலே மீண்டும் மீண்டும் கூட்டம் கூட்டப்பட்டது. ஒருவருக்கு மாறுபாடு வந்தாலும், முடிவு எடுக்காமல் அந்தக் கூட்டத்தை அத்தோடு முடித்து விட்டு, நன்றாக யோசித்து வாருங்கள் என்று சொல்லி மறுநாள் கூட்டத்தைக் கூட்டி, அதன் பிறகு எல்லோரும் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு இந்த ஷரத்தைப் போட்டு இருக்கிறோம். யாரும் ஏற்றுக் கொள்ளாத ஷரத்து இதிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக்

கொள்கிறேன். எல்லோருடைய கருத்தையும் முடிவையும் கேட்டு, முடிவு செய்யவேண்டியதால், இது காலதாமதம் ஆகியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 7—10)

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு 1 கோடியே 30 லட்சத்து ஏழாயிரம் ஹெக்டர் நிலம் இருக்கிறது. அந்த நிலையில் காடுகளின் பரப்பு 20 லட்சத்து 21 ஆயிரத்து 550 ஹெக்டேர் விவசாயத்திற்குப் பயன் படாத நிலங்கள். 6 லட்சத்து 3 ஆயிரத்து 243 (நான்-அக்ரி- கல்சுரல் லேன்ட்ஸ்) இன்றைக்கு அப்படி இருக்கிற நிலங்களில் நிலவுடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப் பட்டவை 80 ஆயிரம் சதுர மீட்டர்கள். இன்றைக்கு எவ்வளவு வேலை முடிந்து இருக்கிறது என்றால், இத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் சதுர மீட்டர்கள். தமிழகத்தில் இன்றைக்கு நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றால் 71 லட்சம் அல்லது 71½ லட்சம் இருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுப் பட்டா இருக்கிறதே, அதனாலே எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். இவைகளைத் திருத்துவதற்காகத்தான் இன்றைக்கு இந்தக் கூட்டுப் பட்டாவை சரி செய்வதற்காகத்தான் 28 வட்டங்களில் முதலிலே போட் டோம். இன்றைக்கு 128 வட்டங்களில் நில அளவைமேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக யாருக்கு கூட்டுப் பட்டா இருக்கிறது, யாரிடம் அரசு நிலம் இருக்கிறது, யார் வெள்ளாமை செய்கிறார் கள், யாருக்குச் சொந்தமாக இருக்கிறது, யார் மேல் பட்டா இருக்கிறது, அவருடைய பாட்டன் மேல் இருக்கிறதா? அல்லது பேரன் மேல் இருக்கிறதா, என்பதை எல்லாம் பார்த்து அளந்து வரைபடம் போட்டு, தேவையான இடத்திலே கல்லைப் போட்டு, தேவையான நிலத்திலே கல்லை ஊன்றி இது போன்ற பணிகளைச் செய்வதற்கு இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளை எல்லாம் செய்வதற்கு 33 கோடி ரூபாய் இதற்காக அரசு செலவு செய்ய உத்தேசித்து இருக்கிறது. அப்படி உத்தே சித்து இருக்கிறபோது, விவசாயிகள் இடத்திலே எவ்வளவு வசூல் செய்கிறோம் என்றால் 12 கோடி ரூபாய் வசூல் செய்கிறோம். அரசினுடைய நிகர செலவு 20 கோடியாகும், என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி நில அளவை மேம்பாடு திட்டத்தின் மூலமாக இன் றைக்கு 9 ஆயிரம் பேர்களை புதிதாக வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் பதவி உயர்வு பெற்றவர்கள் 1,724 பேர்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே நான் தெரிவித்தபடி நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் மூல மாக பட்டா கொடுக்கப்படுகிறது. மிகப் பழமையான ஏ-ரிஜிஸ் டர், செட்டில்மென்ட் ரிஜிஸ்டர், சிட்டா, நில அளவை கிராம





கணக்குகள், இவைகள் எல்லாம் மிகப் பழமையான முறையில் இருப்பதை மாற்றி, புதிதாக அமைப்பதற்கு இந்த அரசு திட்ட மிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது வரையில் 2,100 கிராமங்களில் இன்றைக்கு இந்த திட்டத்தின் மூலமாக அரசு நிலங்களை அளந்துகொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்புக்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி பல்வேறு வேலைகளை இன்றைக்கு வேகமாக இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிற பட்டா பாஸ் புத்தகம் எவ்வளவு என்றால் 1½ கோடி, ஏறக்குறைய 150 இலட்சம் பட்டா பாஸ் புஸ்தகங்கள் கொடுக்க வேண்டியது வரும் என்று இன்றைக்கு கணக்கிட்டு இருக்கிறோம். இந்த பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதற்கு மாத்திரம் 750 இலட்சம் ரூபாய், அதாவது 7½ கோடி ரூபாய் அரசு செலவு செய்ய இருக் கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நில அளவை மேம்பாடு திட்டத்திற்காக 20 கோடி செலவு என்று சொன்னேன். இந்த பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதற்கு 7½ கோடி ரூபாய் அரசுக்கு செலவு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அவசரமாகக் கொண்டுவரவேண்டும் என்று சொன்ன தற்குக் காரணம், இன்றைக்கு 13 இலட்சத்து 54 ஆயிரம் பேர் களுக்கு பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதற்கு நிலங்கள் தயாராக இருக்கிறது என்ற விவரங்களைச் சொல்வதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கிற போது, அதனுடைய நிலம் நஞ்சையா, புஞ்சையா, அது யாரிடத் திலே இருக்கிறது, எப்படிப்பட்டது, என்கிற எல்லா விவரங்களும் அந்த பட்டா பாஸ் புத்தகத்தில் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த பட்டா பாஸ் புத்தகத்திலேயே வில்லங்கச் சான்றிதழும் இருக்கும். ஆகையினாலே, இந்தப் பட்டா பாஸ் புத்தகத்தைக் காட்டினாலே, நிதி உதவும் நிறு வனங்களிடமிருந்தும், கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும், வேளாண்மைக் காரியத்திற்காக கடன் வழங்கும் நிறுவனங் களிடமிருந்தும், இன்னும் எந்தக் கடன் வழங்கு நிறுவனமாக இருந்தாலும், அவைகளிலிருந்து கடன் பெற இந்த பட்டா பாஸ் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும் என்று, இந்த புத்தகத்தை லீகலைஸ் பண்ணியிருக்கிறோம். சட்டப்படி அங்கீகாரம் அளித் திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்டா பாஸ் புத்தகத்திற்கு எல்லாவிதமான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 17

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அவர்கள் சொன்னார்கள். யார் நிலத்தை, யார் வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம், ரிஜிஸ்டர் ஆபீசில் என்று சொன்னார்கள். ரிஜிஸ்டர் ஆபிசில் நிலம் உனக்குச் சொந்தமா என்று கேட்கக் கூடமாட்டார்கள் என்று சொன்னார்கள். அரசுக்கு வரவேண்டிய பத்திரப் பணம், ரிஜிஸ்டர் பண்ணி வந்திருக்கிறதா என்பதை மட்டும் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். எனவே இதை எல்லாம் சரி செய்வதற்காகத்தான் ரிஜிஸ்டர் ஆபிசில் நிலத்தை விற்கும் போதும், அல்லது வாங்கும் போதும் இந்த பட்டா பாஸ் புத்தகத்தைக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு போய் கொடுத்தால் தான் வாங்குகிறவர்களும், விற்பவர்களும் அந்த பட்டா பாஸ் புத்தகத்தில் நிலங்களைப் பற்றி எழுதுவார்கள். நிலங்களை ரெஜிஸ்டர் பண்ணுவார்கள். நிலங்களை பதிவு செய்வார்கள் என்பதையும் அப்படிக் கொடுக்கிற போது, விற்பவர்கள் அதிலே இருக்கிற, அதாவது அந்த பட்டா பாஸ் புத்தகத்திலே இருக்கிற நிலங்களின் அளவை குறைத்துக் காட்டுவார்கள். அதிலே இருக்கிற வரைபடத்தை நீக்கிவிடுவார்கள். வாங்குபவர்கள் அந்த பட்டா பாஸ் புத்தகத்திலே நிலங்களைச் சேர்த்துக் காட்டுவார்கள். அதிலே இருக்கிற வரைபடத்திற்கு பதிலாக புதிதாக வரைபடத்தை போட்டுக் காட்டுவார்கள். ஆக, இது இரண்டும் நடக்கும். நடந்த பிறகுதான், இவைகளை ரெஜிஸ்டர் பண்ணும் போது, பட்டா பாஸ் புத்தகத்தில் அவைகள் கண்டு பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல, அந்த பட்டா பாஸ் புத்தகத்தின் நில உடைமையைக் குறிப்பைக் குறித்து யார் கேட்டாலும் தரவேண்டும் என்று வைத்து இருக்கிறோம். அதற்கு ஒவ்வொருவரும் அப்ளிகேஷன் கொடுக்க வேண்டும்.

அப்ளிகேஷன் மட்டும் அல்ல, டிக்ளரேஷனும் கொடுக்க வேண்டும். இந்த டிக்ளரேஷனை ஏன் வைத்திருக்கிறோம் என்றால், இன்றைக்கு ஒருவருக்கு நிலம் இருக்கிறது என்றால், எவ்வளவு நிலம் இருக்கிறது என்று அதிலிருந்து கண்டுபிடிக்க முடியும். எனக்கு இந்த மாவட்டத்தில், அல்லது வட்டத்தில் அல்லது இந்த மாநிலத்தில் அல்லது ஜில்லாவில் எவ்வளவு நஞ்சை இருக்கிறது, எவ்வளவு புஞ்சை இருக்கிறது என்று அவர்கள் டிக்ளரேஷன் பாரத்தில் உறுதி மொழி கொடுக்க வேண்டும். அதைத் தவறாகக் கொடுத்துவிட்டால், ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது 3 மாதம் கடும் தண்டனை. அப்படி ஒரு டிக்ளரேஷனை வாங்கிவிட்டு, அதற்குப் பிறகு தாசில்தார், வட்ட ஆட்சித் தலைவர், அதைப் பார்த்து, அந்த பட்டா பாஸ் புத்தகத்திலே கையெழுத்திட்டுக் கொடுப்பார்கள். ஒரு வட்டத்தில் இருக்கும் நிலங்களை, என்று குறிப்பிட்டு ஏன் வைத்திருக்கிறோம் என்றால், ஒரு வட்டத்தில் ஒரு தாசில்தார் இருக்க வேண்டும். ஒருவருக்குச் சொந்தமான நிலங்கள் வேறு வட்டத்தில் இருந்தாலும், அந்த வட்டத்தில் உள்ள தாசில்தாரிடமும் டிக்ளரேஷன் கொடுக்க



1983 நவம்பர் 17] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வேண்டும். இந்த தாசில்தாரிடத்திலும் சொல்ல வேண்டும். அந்த தாசில்தாரும் இன்னார் இங்கே டிக்ளரேஷன் கொடுத்திருக்றார்கள், இவ்வளவு நிலம் இருக்கிறது என்று அதாவது உங்களுடைய வட்டத்திலே இவ்வளவு நிலம் இருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள், அது உண்மை என்று அவர்களுக்குச் சொல்வார்கள். இப்படி எந்த விதமான தவறும் நடக்காதபடி இந்த பட்டா பாஸ் புத்தகத்தை செய்வதற்காக இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி அவர்கள் நிலத்தை, அவர்கள் விற்றாலும், வாங்கினாலும், மார்ட்கேஜ் செய்தாலும் அல்லது எதைச் செய்தாலும் அவை எல்லாமே அரசினுடைய ஆலோசனையின்படி பட்டா பாஸ் புத்தகத்திலே பதிய வைக்கப்பட்டு கணக்கில் வரும். கணக்கிட்டு வந்த பிறகுதான் அவைகள் எல்லாம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதைச் சொல்லி ; அது மட்டும் அல்ல, இந்தக் கூட்டாய்வுக் குழுவை நான் மிகவும் கவனமாக 20 முறைகள் அதனுடைய கூட்டங்களைக் கூட்டி, சட்டமன்ற உறுப்பினரைகளுடைய எண்ணங்களை எல்லாம் கேட்டு அதை நிறைவேற்ற இப்போது கொண்டு வந்திருந்தாலும், இன்னமும் இதை மிக நன்றாகச் செய்ய வேண்டும் என்கிற ஆசையில் இருக்கிறேன்.

ஆகவே, இங்கே இருக்கிற எல்லா கட்சித் தலைவர்களுக்கும் நான் ஒரு கடிதத்தை இன்றைக்கு எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தில் அடுத்த மாதம் 9 ஆம் தேதி, 10 ந் தேதி அளவில், இங்கே இருக்கிற எல்லா கட்சிகளிலும் ஒரு சட்டமன்ற உறுப்பினரை கொண்ட ஒரு குழு கூட்டி, எந்தெந்த இடத்தில் நில உடைமை மேம்பாடு திட்டம் நடக்கிறது. அது எப்படி நடக்கிறது என்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அந்தக் குழு கூட்டத்திற்கு வருவதற்கு முன்னால் 4 கிராமங்களுக்கு அல்லது 5 கிராமங்களுக்குச் சென்று நேரில் பார்த்து, நில உடைமை மேம்பாடு திட்டம் அங்கே எப்படி நடக்கிறது, அது திருப்திகரமாக நடக்கிறதா அல்லது அதிலே ஏதாவது குறை இருக்கிறதா என்பதை அறிந்து வந்துச்சொல்ல வேண்டும். அடுத்த மாதம் 9 ஆம் தேதி 10 ஆம் தேதி வாக்கில் என்று சேட்டிருக்கிறேன். அந்தக் கூட்டத்திற்கு உயர்தர அரசு அதிகாரிகளையும், நில உடைமை மேம்பாடு திட்டத்தில் இருக்கிற அதிகாரிகளையும், மிராசுதார்களையும் நிலப்பிரபுக்களையும் கூட்டி பேச இருக்கிறேன். அந்தக் கூட்டத்திற்கு நீங்கள் வருகிற போது வீட்டில் இருந்து நேராக அப்படியே வந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வீட்டிலிருந்து நேராக வந்துவிட்டால், நாம் மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை திறம்படச் செய்ய வில்லை என்றுதான் அர்த்தம்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 17

வாங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே, நில உடைமை உள்ளவர்களுக்கு மட்டும் இருக்கிறது என்று யாரோ உறுப்பினர் சொன்னார் என்று கருதுகிறேன். (குறுக்கீடு). நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிற பொழுது சொன்னார், நில உடைமைச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் பட்டா பாஸ் புத்தகம் கொடுக்க வகை செய்யப்படு கிறது ஆனால் கட்டுமனைச் சொந்தக்காரர்களுக்கு இந்த வசதி இல்லையே. அவர்களுக்கும் நில உடைமை இருக்கிறதே. அவர் களுக்கும் சொத்து இருக்கிறது. அதை வைத்து அவர்கள் கடன் வாங்க முடியாத நிலைமை இருக்கிறதே என்று சொன்னார்கள். அவர்களுக்கும், இதை முதலில் முடித்துவிட்டு, கட்டுமனைச் சொந்தக்காரர்களுக்கும் இது போன்ற பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கப்படும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு (Patta pass book) வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1981) (கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு (Patta pass book) வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன் றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 49/1981) (கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1883 நவம்பர் 17]

(சு) பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். அராகவானந்தம்: தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1983 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 56/1983) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

பணிக்கோட்டைச் சட்டத்தில் 2 (சி) எக்ஸ்ப்பிளனேஷன் 1இல் In t : cas of an mploye wh is not in unint rrupt d s rvic; f r on y ar, h shall be de m d o b in cnntinous us s rvic if h has b u actually mploy d by an mployer during th; tw lv months imm diat ly prec dig th y ar for not less than

i) 190 days, if mploy d b low th gr nd in a min , or

ii) 243 days in any oth r 5as , xc pt wh n h is mply d in a s asonal estabilshm nt.'

என்று இருக்கிறது. எக்ஸ்ப்பிளனேஷன் 2 இல்

An mpl y of s asonal stabishm ut shall b de m d to b in continuous s rvic if he has actually work d for not l ss than s v ty fiv p c nt of the numb r f days on which t estab-ishm nt was in operation during th y ar. என்று இருக்கிறது. எனவே இதைப்பற்றி சுப்ரீம் கோட்டில் ஒரு வழக்கு வந்தது. அந்த வழக்கு Lalapp Lingappa and oth rs v.-Laxmi Vishnu T xtil mills, Sholapur என்ற வழக்காகும். அந்த வழக்குல் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுக்கும்போது "actually employed" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிற காரணத்தினால் "actually mployed" என்பது "actually worked" 240 நாட்களும் சீஸனல் பேக்டரியாக இருந்தால் வேலை செய்கிற நாட்களில் 75 சதவீதம் வேலை செய்தே இருக்க வேண்டும். Subsisting Contract of employment இருந்தால் போதாது. Subsisting Contract of employment மட்டும் போதும் என்று லெஜிஸ்லேட்சர் கருதியிருந்தால் actually mployed என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்க மாட்டார்கள். எனவே, ஒரு ஆண்டில் 240 நாட்கள் வேலை செய்திருந்தால் தான் கிராஜுவட்டி கிடைக்கும். அதைப்போலவே சீஸனல் பேக்டரியில் மொத்த நாட்களில் 75 சதவீதம் நாட்களுக்கு வேலை செய்தால் தான் கிராஜுவட்டி கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்ட காரணத்தினால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

* 1983-ம் ஆண்டு நவம்பர் 9-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

அல்லது கிராட்டியூட்டி ஆக்ட் படி அந்த தொழிலாளர்களுக்கு
கிடைக்கக்கூடியது அதிகமாக பெனிபிட் இருந்தால் தான் எக்ஸம்
ஷன் கொடுக்கப்படவேண்டும். இன்று மின்சார வாரியம் உருவாக்
கக்கூடிய அந்த Death-cum-R tirem :'t Gratuity Schem
1972 ஆம் ஆண்டில் சட்டம் வருவதற்கு முன்னால் உருவாக்கப்
பட்டது மட்டும் அல்ல, கிராட்டியூட்டி ஆக்ட் படி இன்று ஒரு
தொழிலாளிக்கு கிடைக்கக்கூடிய அந்த பெனிபிட்டை விட குறை
வாக இருக்கிறது என்ற காரணத்தினாலே மின்சார வாரியத்திற்கு
எக்ஸ்ஸம்ஷன் கொடுப்பது நியாயம் அல்ல என்று இந்த
நேரத்தில் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இந்த
Obj c:s a'd Reaso--லே கொடுக்கப்பட்டிருக்கிற ஜட்ஜ்மெண்ட்
குறிப்பிலே இருக்கிற ஒரு பகுதியை இந்த நேரத்திலே நான்
பயன்படுத்திக்கொள்ளுகிறேன். The p licy of the Act should
bc more ben fici l to the persons in whose interest the Act has
been pass d, என்று சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது. ஆகவே,
இந்த நேரத்திலே நாம் பார்ப்போமானால், மின்சார இலாகா
விலே 60,000 தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்
கூடிய பெனிபிட் 23,000 தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய
முறையிலே நவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, மின்சார
வாரியத்திற்கு இலாபத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே ரெட்
ராஸ்பெக்டிவ் எபெக்டிலே எக்சம்ஷன் கொடுப்பதற்காக அரசு
கொண்டு வந்திருக்கக் கூடிய இருத்தத்தை என்னாலே ஆதரிக்க
முடியவில்லை என்று பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்
கிறேன். ஆகவே, இந்த நேரத்திலே அமைச்சரிடமும் அரசிட
மும் நான் கேட்டுக்கொள்வது, மின்சார வாரியத்திலே வேலை
செய்யக்கூடிய 60,000 தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய
பெனிபிடை 23,000 தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய
முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக இந்த
எக்ஸ்ஸம்ஷனுக்காக உள்ள புரவிஷனை வாபஸ் பெற வேண்டு
மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலதகிற்குப் பொருந்துகின்ற வகையில் 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்குதல் சட்டத்தைத் திருத்துவதற்குரிய சட்ட முன்வடிவை நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லக்கூடிய நேரத்தில் 1972 ஆம் ஆண்டில் பணிக்கொடை வழங்குதல் சட்டத்தின்கீழ் லாலப்பா-லிங்கப்பா ஆகியோருடைய வழக்கு சம்பந்தமாக பம்பாயில் நடைபெற்ற வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அதை வைத்து உச்ச நீதிமன்றத்தில் அதே தீர்ப்பை கன்பர்ம் செய்திருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பாராளு



மன்றத்திற்கு முன்னாலேகூட ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு. இன்னும் பல சங்கங்களெல்லாம் இந்தச் சட்டத்தினைத் திருத்த வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசாங்கத்தை எதிர்த்து கூட போராட்டம் நடத்தினார்கள். இதே சட்டமன்றம்கூட, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தி வந்து கொடுத்த மனுக்களில் இச்சட்டத்தினைத் திருத்த வேண்டுமென்று கேட்கப்பட்டதையும் அறியும். அந்தப் போராட்டத்தினுடைய விளைவாக இப்பொழுது அமைச்சர் அவர்கள் பணிக்கொடைச் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முன் பகுதியிலே சொல்லப்பட்டிருக்கிற திருத்தத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், பின்பகுதியிலே மின்சார வாரியத்திற்கு எக்சம்ஷன் கொடுக்கக் கொண்டுவந்திருக்கிற திருத்தத்தை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இந்தச் சட்டத்தின் ஒரு பகுதியாக, இன்றிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, கடந்த காலத்திலே, உச்ச நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தீர்ப்பின் அடிப்படையிலே பணிக்கொடை சட்டத்தின் கீழே வாங்கிச் சென்றிருக்கிற தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு திருத்ததையும் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களானால் உண்மையிலே நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பணிக்கொடை சட்டத்தின்கீழ் இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கிராச்சுவிட்டி பணம் ஒட்டுமொத்தமான சம்பளத்திலே இருந்து கொடுக்கப்படாமல் சம்பளத்திலே சீலிங் போடப்படக்கூடிய அடிப்படையில் மாதம் ரூ. 1,000, ரூ, 1,500 பெற்றால்கூட, ரூ. 750-க்குக் கணக்கிட்டு, கிராச்சுவிட்டி கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதையும் மாற்றி தொழிலாளர்களுக்குப் பயன்படக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தை இன்னும்—மேலும்—திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்கள் முன் பகுதியிலே சொல்லியிருக்கக்கூடிய திருத்தம் தொழிலாளர்களுக்குப் பயன்படக்கூடிய சட்டத் திருத்தம் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கிராச்சுவிட்டி சட்டத்திலே ஏற்கனவே எக்சம்ஷன் கொடுப்பதற்கு இடம் இருக்கிறது, வழிவகை இருக்கிறது. அந்த எக்சம்ஷன் எலெக்ட்டிரிசிட்டி போர்டுக்குக் கொடுத்தாகிவிட்டது. ஆனால், இப்பொழுது எக்சம்ஷன் கொடுக்கலாம் என்று இருக்கிறதே தவிர, அது ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கலாம் என்று இல்லை. எலெக்டிரிசிட்டி போர்டில் இப்பொழுது ஏற்பட்ட சூழ்நிலைக்காக மட்டுமல்ல, அதற்காக மட்டும் கொண்டு வந்ததல்ல இது,. எதிர்காலத்தில் எக்சம்ஷன் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று வைத்துக்

கொள்வோம். அது இந்தச் சட்டத்தில் இருப்பதைவிட, அதிகச் சலுகை அந்த நிறுவனத்திற்கு இருப்பதாக எடுத்துக்கொண்டு எக்சம்ஷன் கொடுக்க வேண்டுமென்று கருதினால், அதைப் பரி சீலனை செய்து பார்ப்பதற்குக் காலதாமதம் எல்லாம் ஆகும். பிறகு காலதாமதம் ஆகி, அந்த எக்சம்ஷன் கொடுப்போமானால், அந்தச் சலுகையில் உள்ள கிராச்சுவிட்டி திட்டம் உடனடி யாகக் கிடைக்காமல் போய்விடும். அதனால்தான் இப்பொழுது ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதற்கு வழியில்லை. ரெட் ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வருகிறோம். பொதுவாகவே எக்சம்ஷன் கொடுப்பது என்ற நிலை வரும்போது தொழி லாளர்கள் அந்த நிறுவனத்தில் இருக்கக்கூடிய கிராச்சு விட்டி சட்டத்தை விட இந்தத் திட்டம் அதிகப் பலன் அளிப்பதாக இருந்தால்தான் எக்சம்ஷன் கொடுக்கப்படும். எனவே அப்படி கொடுக்கக்கூடிய எக்சம்ஷன், ரெட்ராஸ் பெக்டிவ் எபக்டிலே இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் செய்கிறோம் என்று சொல்லி எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 7-40)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலை வர் அவர்களே, தற்போது ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்டிலே கொடுப்பதன் காரணமாக 23 ஆயிரம் தொழிலாளர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று அவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப் பட்ட பேசிக் பே-ஐ தவிர டியர்னஸ் அலவன்ஸிலே உள்ள கிராச் சுவிட்டி கிடைக்கக்கூடிய உரிமை பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எலக்ட்டிரிசிட்டி போர்டைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே எக்சம்ப்ஷன் கொடுத்தாகிவிட் டது. இந்தத் திருத்தத்தின் மூலமாக அவர்கள் யாருக்கும் எந்த இழப்பும் ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகரட்சகன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1983 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத் துக்கொள்ளப் பெற்றது.





பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1983 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் தமிழ்நாடு திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 56/1983) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 9. அரசினர் தீர்மானங்கள்.

#### அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :

"ஐந்தாவது இனமாக இருக்கிற தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1983) நான்காவது இனத்திற்கு முன்னதாக எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

### 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ங) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 58/1983) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

---

*1983 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 17

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, கோயம்புத்தூர் வேளாண் விளை பொருள் அங்காடி
1977 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. அநேகமாக ஜனாதி
பதியின் அட்சி நடந்துகொண்டிருந்த நேரம் என்று கருதுகிறேன்.
தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தேர்தல் நடப்பதற்கு ஒரு
மாதத்திற்கு முன்னால் அது கலைக்கப்பட்டது. இப்பொழுது
இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக 1984 ஆம் ஆண்டு மே
மாதம் வரையில் அதற்கு அந்த கலைப்பு நீட்டிப்பதற்கு
அரசாங்கம் அனுமதி கேட்கிறது. இதேபோல் தமிழ் நாடு
முழுவதிலும் இந்த வேளாண் விளை பொருள் அங்காடிகள்
மற்றும் அந்த கமிட்டிகள் சம்பந்தமாக அரசாங்கம் நீண்ட
நாட்களாக சொல்லிக் கொண்டு வருகிறது. இந்தக் கமிட்டிகளை
புனரமைக்க வேண்டும். இந்த கமிட்டிகளுடைய அமைப்பு
எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி விரிவாக திருத்தச்
சட்டம் கொண்டு வரவேண்டுமென்றிருக்கிற காரணத்தினாலே
அதனுடைய தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுக்கொண்டே இருக்
கிறது. அந்த விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் இந்த
விளை பொருள்கள் அங்காடிகளில் ஜனநாயக ரீதியாக தேர்ந்
தெடுக்கப்பட்ட கமிட்டிகள் செயல்பட்டால் தான் விவசாயிகளு
டைய உற்பத்தியாளர்களுடைய நலன்களை ஓரளவிற்கு பாதுகாக்க
முடியும். ஆகவே இந்த கோயம்புத்தூர் விளை பொருள்
அங்காடி சம்பந்தமாக மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும்
இருக்கிற விளை பொருள்கள் அங்காடிகளை அரசாங்கம்
திருத்தியமைக்க வேண்டுமென்று உத்தேசம் இருந்தால் உடனடி
யாக அதைத் திருத்தியமைப்பதற்கான ஒரு சட்டத்தைக்கொண்டு
வந்து அதை நிறைவேற்றி அல்லது ஏற்கெனவே இருக்கி
சட்டத்தின் அடிப்படையில் செயல்பட முடியுமென்றால்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனுடைய அந்த அங்காடித் தன்மையை அகலப்படுத்த
வேண்டுமென்றும், விரிவுபடுத்த வேண்டுமென்றும் முன்பு பேசப்
பட்டிருக்கிறது. அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்
படுத்தி, சாதாரண விவசாயிகள் அதில் உறுப்பினர்களாக
இருந்து, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற கமிட்டிகள்
ஏற்பட்டு, மாகாணம் பூராவும் அப்படி நடந்தால் விவசாயிகளின்
நலன்களும், விவசாய உற்பத்தியும் பாதிக்கப்படாது. அப்படி
யில்லாமல் மீண்டும் மீண்டும் ஒத்தி வைத்துக்கொண்டே
போவதில் பிரயோஜனமே இல்லை. இந்தச் சட்டத்தை நிறை
வேற்றினாலும், ஆறு மாதங்களுக்குள் வழி கண்டுபிடித்தாக
வேண்டும். இல்லையென்றால் இதை நீட்டிக்க வேண்டிய
அவசியம் இருக்கும். அந்த நிலைமை ஏற்படாமல் 1984 ஆம்
ஆண்டு மே மாதத்திற்குள் சட்டத்தை இயற்றி, தேர்ந்தெடுக்கப்
பெற்ற கமிட்டியை ஏற்படுத்த வேண்டுமென்று கூறி என்னுடைய
பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1983 நவம்பர் 17]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்
களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள்
கொண்டு வந்துள்ள இந்த மார்க்கெட்டிங் கமிட்டி இரண்டாவது
திருத்தச் சட்டத்தையொட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். ஏற்கனவே இந்த அவையில் இதுசம்பந்தமாகப்
பல நேரங்களில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய
நியாயமான விலைகள் கிடைக்கும் வகையில் இந்த மார்க்
கெட்டிங் கமிட்டிக்கு வேண்டிய திருத்தங்களோடு மாற்றங்களைக்
கொண்டு வர வேண்டும் என்ற சொல்லப்பட்டது. அவ்வாறு
கொண்டு வந்து அது சீராகச் செயல்படுகின்ற வகையில் தேர்ந்
தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் அதில் இருக்க வேண்டும் என்பது
அவசியம் என்றும் சொல்லப்பட்டது.

அமைச்சரவர்கள் சீக்கிரமாக இதற்காகத் தனிச் சட்டத்தைக்
கொண்டு வரவேண்டும். வாக்காளர்கள் சம்பந்தப்பட்டவரையில்
விவசாயப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், விவசாயிகள் சிலர்
இருக்கிறார்கள், நியமன முறையும் இருக்கிறது. ஆகவே,
முன்னால் உள்ள சட்டத்தின் அடிப்படையிலே அதிலே சில
திருத்தங்களைக் கொண்டு வந்து, விவசாயிகளுக்குப் போதுமான
பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள மார்க்கெட்டிங் கமிட்டி செயல்படும்
முறை எப்படியிருக்கிறது என்றால், வியாபாரிகளுக்கு ஒரே
யிடத்தில் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் அந்தப் பொருட்
களை வாங்குவதற்கு உதவியாக இருக்கிறதே தவிர, விவசாயி
களுக்கு அவ்வளவு அதிகமாக ஆதாயம் தரும் அமைப்பாக
இல்லை. காரணம் என்னவென்றால், அந்த வியாபாரிகள்
நான்கைந்து பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு விவசாயிகள்
குவித்து வைத்திருக்கின்ற விளைபொருட்களை இந்த விலைக்குத்
தான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து கேட்கிறார்கள்.
அந்த விலைக்கு இஷ்டப்படவில்லை என்றால் மறுநாள் அதை
எடுத்துச் சென்று விட வேண்டும். இந்த முறைக்குப் பதிலாக
அரசாங்கமே தகுந்த ஏற்பாட்டைச் செய்து அந்தப் பொருட்கள்
அங்கே போனவுடன் பணம் கிடைப்பதற்கான வழியைச் செய்ய
வேண்டும். இப்பொழுது அந்த நிலைமைக்கு இடமில்லை.
வங்கிகளின் மூலமாக வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு
வேறு வழி இருக்கிறதே தவிர, மார்க்கெட்டிங் கமிட்டியே
அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த முறையில் பருத்தியை
யோ, கடலையையோ விவசாயிகள் விற்பதற்கு இன்றைக்குள்ள
விதிகளிலே முறையான ஏற்பாடுகள் இல்லை.

அதோடு மட்டுமல்லாமல் மார்க்கெட்டிங் கமிட்டிக்கு
தேர்ந்தெடுக்கப்பட்ட யார் யார் ஓட்டுரிமை பெற்றவர்கள்?
விவசாயிகள் அத்தனைபேருக்கும் ஓட்டிங் உரிமை உண்டா?
அல்லது நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமா? அல்லது
இந்தந்தப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கா? இது

பற்றிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. தொடர்ந்து நான்
கைந்து ஆண்டுகளாக அந்தப் பிரதிநிதிகள் இல்லாமல் ஸ்பெஷல்
ஆபீசர் சட்டமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு திரு.
சங்கரய்யா அவர்கள் சொன்னதுமாதிரி 1984 ஆம் ஆண்டு மே
மாதத்திற்குப் பிறகும் நீட்டிக்காமல், அதற்குள்ளாக இதற்குத்
தெர்ந்தெடுக்கப்பெற்ற நிர்வாக அமைப்பைக் கொண்டு வர
வேண்டும். புதிய சட்டத்தைக் கொண்டு வந்து எப்படி எப்படி
அதன் அமைப்பு இருக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய
வேண்டும். முன்னால் இருந்த அமைப்பு சரியாக இல்லை. அதில்
தேர்தலை நடத்துவதற்கு இன்னின்னார்தான் வோட்டர்கள்
என்ற வரையறை இல்லை. அந்த முறையில் இல்லாமல் சரியான
சட்டத்தை விரைவில் கொண்டு வந்து, 1984 ஆம் ஆண்டு மே
மாதத்திற்குப் பிறகும் இந்த ஸ்பெஷல் ஆபீசர்களின் நிர்வாகம்
மார்க்கெட்டிங் கமிட்டியில் இல்லாமல் இருப்பதற்காக தேர்ந்
தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்திற்கு உட்படும்
அமைப்பாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அமைச்
சரவர்கள் கொண்டுவரவேண்டுமென்று கூறி முடித்துக்
கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண்
விளைபொருள் அங்காடிகள் இரண்டாம் திருத்தச் சட்ட
முன் வடிவின் மீது என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்பு
கிறேன்.

தற்பொழுது இந்த மார்க்கெட்டிங் கமிட்டியில் தனி அதிகாரி
கள்தான் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், நான்
காண்டுக் காலத்திற்கு முன்பு வரை தேர்ந்தெடுக்கப்பெற்ற
வியாபாரிகளும், விவசாயப் பிரதிநிதிகளும் இந்த நிர்வாகத்தைப்
பரிபாலனம் செய்து வந்தார்கள். அது அவ்வப்பொழுது விவசாயி
களுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களையெல்லாம் அங்கே
அமல்படுத்தி வந்தது.

(இரவு 7-50)

அந்தந்த மாவட்ட மார்க்கெட்டிங் கமிட்டிகளில் அரசாங்கம்
அறிவித்துள்ள பொருட்களை எல்லாம் உடனடியாக லிஸ்ட் ஆப்
கம்மாடிட்டீஸ்-ல் சேர்க்கின்ற வகையில் அமல் நடத்தப்பட
வில்லை. ஏனென்றால் அரசின் ஆணைகளை தனி அதிகாரிகள்
உடனடியாக அமல் செய்வதில்லை. விவசாயிகள் உற்பத்தி
செய்கின்ற அனைத்துப் பொருட்களும் லிஸ்ட் ஆஃப் கம்மாடிட்
டிஸ்-இல் இல்லை. அவை அனைத்தும் அந்தப் பட்டியலில்
சேர்க்கப்பட வேண்டும்.

மேலும் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் ஏராளமான ஓழுங்
கீனங்கள் இருக்கின்றன. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே
இருக்கின்ற அந்த மார்க்கெட்டிங் கமிட்டி சரியான முறையில்
இயங்கவில்லை. புதிதாக 4 தாலுக்காக்களை அங்கே





பிரித்திருக்கிறார்கள். அந்தத் தாலுக்காக்களில் எல்லாம்
மார்க்கெட்டிங் கமிட்டி துவங்கப்படவில்லை. அப்படிப்
பட்டப் பகுதிகளில் உடனடியாக மார்கெட்டிங் கமிட்டி
துவங்க ஆவன செய்ய வேண்டும். மார்க்கெட்டிங்
கமிட்டிகளுக்குத் தேவையான குடோன் போன்றவை கட்டு
வதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கி இருக்கின்றது. சென்ற
ஆண்டு கூட அவற்றை எல்லாம் செலவு செய்யவில்லை என்று
என்னிடத்திலே கூறினார்கள். தயவு செய்து அவற்றை எல்
லாம் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கும் வியா
பாரிகளுக்கும் பயன்படுகின்ற வகையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற
பிரதிநிதிகள் அந்த நிர்வாகத்தை ஏற்று செயல்படுத்துகின்ற வகை
யில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். என்று கேட்டு
இந்த அளவோடு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்
வடிவு கோயம்புத்தூர் வேளாண் விற்பனைக் குழுவினுடைய
தனி அதிகாரியினுடைய பதவிக் காலத்தை வருகின்ற மே திங்கள்
வரை நீட்டிப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்றது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக அங்காடிக் குழுக்
கள் எத்தகைய நிலையிலே இயங்க வேண்டும் என்பதைப் பற்றி
தங்களுடைய கருத்துக்களை எடுத்து விளக்கி இருக்கிறார்கள்.
ஆனால் இந்தக் கால நீட்டிப்பு செய்வதற்கான அவசியத்தை
நான் ஏற்கனவே கூட இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறேன்,
மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சுட்டிக்
காட்டியது போல் மார்க்கெட்டிங் கமிட்டிக்குத் தேர்தலை நடத்தி
அதிலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அங்காடிக் குழுக்களை
நடத்திச் செல்லத் தக்க அளவுக்கு நிலைமை இல்லை. அந்தச்
சட்டத்திலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு அங்காடிக்
குழுவிலே வியாபாரப் பெருமக்கள் உறுப்பினர்களாக இருக்கி
றார்கள் என்றால் அங்கே விளை பொருட்களைக் கொண்டு
வந்து கொடுத்து உரிய இலாபம் கிடைக்க வேண்டும் என்பதற்
காக விவசாயப் பெருமக்கள் அத்தனை பேரும் உறுப்பினர்க
ளாக இருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய அளவுக்கு
உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்ட அங்காடிக் குழுக்
களுக்குத் தேர்தலை நடத்துவது என்றால் ஏறத்தாழ ஒரு பொதுத்
தேர்தலை நடத்துவதற்கு சமமாகும். அப்படித் தேர்தலை
நடத்த வேண்டும் என்றால், அங்காடிக் குழுக்கள் தான் செலவுத்
தொகையை ஏற்க வேண்டி இருக்கும். அப்படி தேர்தல் செலவுத்
தொகையை ஏற்றுக் கொண்டால், அதன் பின்னர் ஆக்கபூர்வ
மான பணிகளைச் செய்வதற்கு அங்காடிக் குழுவிற்குப் பணம்
இல்லாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஆகவே, எந்த வகையிலே தேர்தலை நடத்திச் செல்வது
என்றும், விவசாயப் பெருமக்கள் பிரதானமாக அங்கம் வகிக்கக்
கூடிய நிலைமை ஏற்படுத்தி அங்காடிக் குழுக்களை நடத்திச்

செல்வதா என்றும், பல்வேறு வகையான ஆலோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன. பல்வேறு மாநிலங்களிலே இருக்கக் கூடிய விற்பனைச் சட்டங்களைப் பற்றி ஆராய்ந்து எந்த வகை யிலே நம்முடைய அங்காடிச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். மராட்டிய மாநிலம் போன்றவற்றில் எல்லாம் இருக்கக்கூடிய சட்டங்களை எல்லாம் எண்ணிப் பார்த்து அந்த வகையிலே விரிவான சட்டத் திருத்தங் களைக் கொண்டு வரலாமா என்ற வகையிலேயும் முயற்சிகளை மேற்கொண்டு அது தற்போது சட்டத் துறையின் பரிசீலனையில் இருக்கின்றது. அது நிச்சயமாக அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த அவைக்கு வரும். அந்தத் திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டதற்குப் பிறகு அந்தச் சட்டத்தினுடைய அடிப்படை யிலே தேர்தலை நடத்துவதிலே எந்த விதமான சிக்கலும் இருக்காது. அதற்கிடையில் விவசாயப் பெருமக்களுக்கு இந்த அங்காடிக் குழுக்கள் எந்த வகையில் பயன்பட வேண்டுமோ அந்த வகையில் பயன்படுவதற்குரிய காரியங்களை அரசு நிச் சயமாகச் செய்யும்.

திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகின்ற போது விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற அத்தனை பொருட்களும் விற்பனைக் கூடத்திற்கு வந்து சேர வேண்டும் என்று குறிப் பிட்டார்கள். அந்த வகையிலே அத்தனை பொருட்களையும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றால், அதற்கான முறையான வசதிகள் இல்லை. மேலும் அழுகும் பொருள் போன்ற சில பொருட்களை குறிப்பிட்ட நேரத் தில் விற்பனை செய்யாவிட்டால், விவசாயப் பெருமக்கள் பலன் பெற முடியாமல் போய்விடும். எனவே, அந்தப் பொருட்களை எல்லாம் பாதுகாப்பாக வைக்கவும் வழியில்லை. எனவே தான் உலக வங்கியின் உதவியுடன் விற்பனைக் கூடங்களைச் சீர்படுத்தி, பெரிய சேமிப்புக் கூடங்களைக் கட்டி விவசாயப் பெருமக்க ளுக்கு உரிய இலாபம் கிடைக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இக்குழுக்களின் தலையாய நோக்கமே இடைத் தரகர் களாக இருப்பவர்களை ஒழித்து விவசாயப் பெருமக்கள் உரிய இலாபத்தைப் பெறும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

அந்த வகையிலே இப்போது இருக்கும் சூழ்நிலையில் நாம் முழுமையாகச் செயல் பட முடியவில்லை. ஆங்காங்கு பல குறை கள் நிலவுகின்றன என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவை களை நீக்க வேண்டும், போக்க வேண்டும் என்று தான் நாம் விரிவான சட்டத் திருத்தம் கொண்டு வந்து தேர்தலை நடத்த இருக்கிறோம். ஆகவே, இப்போது கேட்கும் கால நீட்டிப்பைத் தந்து, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் முன்னுள்ள கேள்வி :-

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1983) நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

( ) விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண் டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ 18-11-1983 ஆம் தேதியன்று தளர்த்த வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18-11-1983 தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.57 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டபடிக்கான விதிகளும் ஆணைகளும்.

(220) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 7-2-1983 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணை மற்றும் 22 7-1983 ஆம் நாளிட்ட 636 ஆம் எண் அரசாணை ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—

எதுவுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY,

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4,
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3,
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1,
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1,

### IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry,
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 7-7-1984 Issued 7-7-1984

2045

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1983 நவம்பர் 18- தொகுதி LV எண். 2
**Friday 18th November 1983—Volume LV No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009
**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை: ரூ. 3-50 காசுகள்) (Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்.

18—11—1983

பக்கங்கள்.


1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிடாத வினாக்கள் .. .. .. 211—229

2. அறிவிப்புகள் :

(அ) பேரவை அலுவல் .. .. .. 230

(ஆ) நகரப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ) 231

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன் வடிவு 1983 (ஆ. இ.) .. 265

(ஈ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1983 (ஆ.இ). .. 339

3. அறிக்கைகள் அளித்தல் :

(அ) மதிப்பீட்டுக் குழு .. .. .. 230

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழு .. .. 230

4. அரசினர் தீர்மானங்கள் :

(அ) கூட்டாய்வுக் குழு—வெற்றிடத்தை நிரப்புதல் .. .. .. .. 231

(ஆ) பேரவை தேதி குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல் .. .. .. .. 359

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு 1983 .. 231—251

(ஆ) அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982 .. .. .. .. 252—265

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983 .. 266—291

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி | |
| (ஈ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு 1983 .. .. .. .. .. | 282—293 |
| (உ) கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983 .. .. .. | 294—312 |
| (ஊ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983 .. .. | 313—327 |
| (எ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு 1983 .. .. .. .. | 328—339 |
| (ஏ) மது விலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1983 .. .. .. .. | 339—356 |
| 6. தகவல் கோரல் : | |
| பாண்டியராஜபுரம் ஆலை மூடியிருத்தல் ... | 357—359 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... | 358—359 |




2949

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

1983 நவம்பர் 18, வெள்ளிக்கிழமை

கார்த்திகை 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கில்
திறம்தெரிந்து தேறப் படும்."

நீதிநெறி, பொருள், இன்பம், உயிருக்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பிறகே ஒருவனை ஒரு பணிக்கு உரியவனாக தேர்ந்து எடுக்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

**கோவை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்**

‡வினா : 5721 – திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள் சிலவற்றை கோவை நகரத்தில் மற்றும் சில பகுதிகளில் நிறுவ அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்த விவரங்கள் என்ன?

விடை –

(அ) இல்லை.

(ஆ) இதற்கு இடமில்லை.

[1983 நவம்பர் 18

### காவல்துறை மற்றும் தீயணைப்புப் படையினருக்கு வழங்கப்படும் சலுகைகளை சிறைக்காவலர்களுக்கும் வழங்கும் திட்டம்

2. வினா எண். 7491 : திரு பம்மல் நல்லதம்பி: திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) காவல் துறை மற்றும் தீயணைப்புப் படைக்கும் அளிக்கும் மலிவு விலை உணவுப் பொருட்கள், ரிஸ்க் அலவன்ஸ், வீட்டுவாடகைப்படி ஆகியவைகள் சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகிறதா—

(ஆ) வழங்கும் திட்டம் உண்டா?

விடை —

(அ) மற்றும்; (ஆ) இல்லை.

### இராயபுரம் மேம்பாலம்

3. வினா எண் 7744 :—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் மேம்பாலம் தற்பொழுது மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதனைப் புதுப்பிக்கவும், பலப்படுத்தவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை.

(அ) மேம்பாலம் பழுதடைந்த நிலையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1983 நவம்பர் 18]

### சேலம் ஆத்தூர் தாலுக்காவை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தாலுக்கா என அறிவிக்கும் திட்டம்

4. வினா-8594—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்காவை தொழில் வளர்ச்சியால் பின்தங்கிய தாலுக்கா என்று அறிவிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான தகுதி அடிப்படைகள் என்ன?

விடை—

(அ) இல்லை.
(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### மதுரையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கென தனித்தனி மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம்

5— வினா எண். 9500 – திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தனித்தனியாக மருத்துவமனைகள் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சங்கரன்கோவில் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை துவக்கும் திட்டம்

6— வினா எண். 9826—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கரன் கோவில் பகுதியில் கூட்டுறவு சக்கரை ஆலை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை -
இல்லை.

[1983 நவம்பர் 18

**பரமத்தி ஒன்றியத்திலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

7—வினா எண். 11237—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரி ஆற்றில் இருந்து க. பரமத்தி ஒன்றியத்திலுள்ள குப்பம் அத்திப்பாளையம், புன்னம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை -

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தனியார் கல்லூரி மற்றும் பள்ளிகளில் அமல்படுத்தப்படும் விகிதாச்சார ஒதுக்கீடு முறை**

8 - வினா எண் 11934—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தனியார் கல்லூரி பள்ளிகளில் மாணவர்கள் சேர்ப்பது மற்றும் ஆசிரியர்களை நியமிப்பது ஆகியவற்றில் விகிதாச்சார ஒதுக்கீடு முறை அமல் படுத்தப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில் அதை அமல்படுத்த அரசு பரிசீலிக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**மரவள்ளிக்கிழங்கிலிருந்து குளுக்கோஸ் தயார்செய்யும் திட்டம்**

9—வினா 12747—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத்தொழிலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மரவள்ளிக் கிழங்கிலிருந்து குளுக்கோஸ் தயார் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.



1983 நவம்பர் 18]

**காஞ்சிபுரம் வட்டத்தை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் திட்டம்**

10—வினா எண். 13060—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வட்டத்தை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுமா?

விடை—

இல்லை.

**பிளவக்கல் அணைப் பகுதியில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம்**

11—வினா 13278 :—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணைப் பகுதியில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**திருவிடைமருதூர் தாலுகாவில் தனி முன்சிப் கோர்ட்டும் குற்றவியல் நீதிமன்றமும் ஏற்படுத்தும் திட்டம்**

12—வினா எண் 13436—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவு சட்டஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்காவில் தனி முன்சிப் கோர்ட்டும் குற்றவியல் நீதிமன்றமும் ஏற்படுத்த அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### இராசிபுரம் ஒன்றியம் வடுகம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்

13—வினா 13560—டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இராசிபுரம் ஒன்றியம் வடுகம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வறட்சிப் பணிகளின் கீழ் 1981ம் ஆண்டு வெட்டப்பட்ட சமுதாய கிணறுகள்.

14—வினா 13822—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பணியில் 1981 ஆம் ஆண்டு வெட்டிய சமுதாயக் கிணறுகளை ஒன்றிய பராமரிப்பில் எடுத்துக் கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மொத்தம் வெட்டிய கிணறுகள் எத்தனை மாவட்ட வாரியாக ?

விடை—

(அ) இல்லை,

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### காஞ்சிபுரத்திலிருந்து சுங்குவார் சத்திரம், திருப்பெரும்புதூர் பூந்தமல்லி வழியாக சென்னைக்கு இருப்புப்பாதை அமைப்பதற்கான கோரிக்கை

15—வினா 13824—திரு. ப. வெங்கடசுப்ரமணியர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து சுங்குவார் சத்திரம், திருப்பெரும்புதூர் பூந்தமல்லி வழியாக சென்னைக்கு இருப்புப்பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?





விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ரெட்டணை பஸ் நிலையம் அருகே தொண்டியாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்

16—வினா 14032—திரு. கே. எம் தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம், ரெட்டணை பஸ் நிலையம் அருகில் வராகநதி என்னும் தொண்டியாற்றின் குறுக்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### அனந்தநாறு திட்டத்திற்கு சிமெண்ட்தளம் போடும் பணி

17—வினா 14191—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் அனந்தநாறு திட்டத்திற்கு சிமெண்ட் தளம் போடும் வேலையை பொறியாளர்கள் செய்ய மறுக்கிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) வேலை துவங்காமல் இருப்பதற்கு காரணங்கள் யாவை ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

[1983 நவம்பர் 18

வம்பனில் மல்லிகை மலர்களிலிருந்து வாசனை தைலம் தயாரிக்கும் திட்டம்

*18—வினா 14301*—திரு. பெ. திருமாறன் : *மாண்புமிகு ஊரக தொழிலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*புதுகை மாவட்டம், வம்பனில் மல்லிகை மலர்களில் இருந்து வாசனை தைலம் தயாரிக்க அரசுக்குத் திட்டம் உள்ளதா ?*

விடை—

இல்லை.

சாப்டூரில் பிற்பட்டோர் நலத்துறையின் முலம் மாணவர் விடுதி தொடங்கும் திட்டம்

*19—வினா 14418*—திரு. இரா. முத்தையா : *மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) மதுரை மாவட்டம், சாப்டூரில் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் மாணவர் விடுதி தொடங்கிட அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?*

விடை—

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினாவிற்கு இடமில்லை.

கலைக்கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒரே நேரத்தில் மாணவர்களைச் சேர்க்கும் திட்டம்.

*20—வினா 14475*—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் கலைக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவைகளில் மாணவர்கள் சேர்க்கையை ஒரே நேரத்தில் நடத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?*

விடை—

இல்லை.



1983 நவம்பர் 18]

பெரம்பலூரில் முந்திரி தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

*21—வினா 14562*—திரு. இரா. தாமரைக்கனி : *மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் முந்திரி தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலைனயில் உள்ளதா ?*

விடை—

இல்லை.

காஞ்சிபுரம் கைலாசநாதர் ஆலயத்தைப் புதுப்பிக்கும் திட்டம்.

*22—வினா 14628*—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : *மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காஞ்சிபுரம் கைலாசநாதர் ஆலயத்தைப் புதுப்பிக்கும் திட்டம் உண்டா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

விடை—

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

சிறு தொழில்களுக்கான பண ஒதுக்கீடு.

*23—வினா 14694*—திரு. மெ. ஆண்டி அம்பலம் : *மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறு தொழில்களுக்கான ஒதுக்கீடு 1980-81-ஐ விட இந்த ஆண்டு 1982-83 இல் குறைந்துள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?*

விடை—

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**டி. சண்முகபுரம் ஊராட்சி ஆத்திக் கிணறு குடியிருப்பை ஒட்டியுள்ள வன இலாகா பொறுப்பிலுள்ள நிலம்.**

24—வினா 14801—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவில்பட்டித் தாலுக்கா, டி. சண்முகபுரம் ஊராட் ஆத்திக்கிணறு குடியிருப்பை ஒட்டி வன இலாகாவின் பொறுப்பி லுள்ள நிலம் எத்தனை ஏக்கர் ?

(ஆ) வன இலாகாவிற்கு எந்த வகையில் அந்த நிலம் பயன் அளிக்கிறது ?

(இ) அந்த இடத்தில் ஒரு பகுதியை அப்பகுதியிலுள்ள அரிசனங்களின் வீட்டு மனைகளுக்காக ஒதுக்கித் தர அரசு முன் வருமா ?

விடை—

(அ) எதுவுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்வி எழவில்லை.

**வடலூர் பகுதியில் இ. எஸ். ஐ. மருத்துவமனை நிறுவும் திட்டம்.**

25—வினா 14892—திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வடலூர் பகுதியில் இ. எஸ். ஐ. மருத்துவமனை நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திருப்பத்தூரில் தொழில நுட்பக்கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம்.**

26—வினா 15032—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**பிரமகுண்டம்—ராவுத்தநல்லூர் சாலையில் முசுகுந்தா நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.**

27—வினா 15079—திரு. சோ. கலிதீர்தான் : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பிரமகுண்டம்—ராவுத்தநல்லூர் சாலையில் உள்ள முசுகுந்தா நதியில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் பாலம் அமைக்க ஆவன செய் யப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**சங்கரன்கோவில் நகர்மன்றப் பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்கான கோரிக்கை.**

28—வினா 15308—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோயில் நகர் மன்றத்திற்குக் கோவில்பட்டி குடிதண்ணீர் திட்டத்தின்மூலம் திட் டமிட்டு செயல்படுத்த குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 1980 இல் முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மணப்பாறையில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

29—வினா 15441—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மணப்பாறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

30—வினா 15443—திரு. இர. கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை அரசு மருத்துவமனையில் 100 படுக்கைகள் அமைத்து விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் பறவைக் கண்காட்சிசாலை அமைக்கும் திட்டம்.

31—வினா 15524ஏ—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் பறவைக் கண்காட்சிச்சாலை நடத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை.



பொள்ளாச்சிப் பகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

32—வினா 15703—திரு. எம். வி. இரத்தினம் ; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சிப் பகுதியில் சிறிய அளவில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் மருந்து தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

33—வினா 15902—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மருந்து தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தாழ்த்தப்பட்ட பார்மஸி பட்டதாரிகளுக்கு என்னென்ன தனிச் சலுகைகள் அளிக்கப்பட உள்ளது ?

விடை—

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை நகரிலுள்ள கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான கோரிக்கை.

34—வினா 16166—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள கல்லூரிகளில் இடத்தை அதிகரிக்கக்கோரி 'பொதுமக்கள் குழு' கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை மனுவை கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கிடமில்லை.

கோவையிலிருந்து செல்லும்
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள்

35—வினா 16342—திரு கு. ரமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவையிலிருந்து செல்கின்ற திருவள்ளுவர் பேருந்துகள் சில வழித்தடங்களில் போவது நிறுத்தப்பட்டு விட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு வழித்தடங்களில் நிறுத்தப் பட்டுள்ளன ?

(இ) அதற்கான காரணங்கள் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்களுக்கு இடமில்லை.

மத்தூர், பருகூர், போச்சம்பள்ளி ஆகிய ஊர்களிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரும் திட்டம்

36—வினா 16409—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம் மத்தூர், பருகூர், போச்சம் பள்ளி ஆகிய ஊர்களில் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக ஐந்து வகுப்பறைகளைக் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடமுண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சத்துணவு மையங்களுக்கு சிறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் காய்கறிகள் வழங்கும் திட்டம்

37—வினா 16410—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவு மையங்களுக்கு தேவையான காய்கறிகள் வாங்க கொடுக்கும் பணத்திற்கு பதிலாக, சிறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் காய்கறிகள் பெற்று, சத்துணவு மையங்களுக்கு காய்கறிகளாகவே வழங்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?



விடை : —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தர்மபுரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து அதன் சார்புப் பொருட்கள் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

38—வினா 16414—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து கார்பெட், மேட், கால்மிதியடி, பிரஷ் ஆகிய பொருட்கள் நெய்யும் தொழிற்சாலை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை : —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பஞ்சாயத்து சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

39—வினா 16440—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து சாலைகளைப் பராமரிப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**கோவை செல்வபுரத்தில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகள்.**

40—வினா 16513—திரு. ஆ. ரமணி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாநகரம் செல்வபுரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளை சில புரோக்கர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை தங்கள் கைவசம் வைத்துக் கொண்டு ஏழை மக்களுக்கு அதிக வாடகைக்கு விடுவது பற்றி அரசுக்கு புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**கொடைக்கானலில் அமையவிருக்கும் டி. வி. நிலையம்**

41—வினா 16516—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கொடைக்கானலில் அமையவிருக்கும் டி.வி. நிலையத்திற்கு தேவைப்படும் மீதி நிலத்தை தமிழக அரசு ஆர்ஜிதம் செய்து கொடுப்பதில் உள்ள தாமதத்தின் காரணமாகத்தான் செயல்பட தாமதம் என்று மத்திய அரசு கூறுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில இதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

விடை—

(அ) தகவல் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தஞ்சை மத்திய பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய சுரங்கப்பாதை கட்டும் திட்டம்.**

42—வினா 16622—திரு. சோ. இராசராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை நகரில் மத்திய பேருந்து நிலையத்திற்கு எதிரில் புதிய சுரங்க நடைபாதை ஒன்று கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) அதன் வேலை எப்பொழுது துவங்கப்படும் ?





விடை :—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**அமராவதி சாத்தனூர் பகுதிகளில் வளர்க்கப்படும் முதலைகள்**

43—வினா 16700—திரு. பெ. சு. திருவேங்கட[illegible] செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அமராவதி, சாத்தனூர் ஆகிய இடங்களில் வளர்க்கப்படும் முதலைகளின் தோல், இறைச்சி ஆகியவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படும் ?

(ஈ) ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) கேள்விகளுக்கு இடமில்லை.

**திண்டுக்கல் நகரில் பணியில் இருக்கும் பெண்களுக்கான விடுதி அமைக்கும் திட்டம்.**

44—வினா 16730—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திண்டுக்கல் நகரில் பணியில் இருக்கும் பெண்களுக்கான விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கிளையொன்றை புதுடெல்லியில் துவக்கும் திட்டம்.**

45—வினா 16780—திரு. செ. செம்மலை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கிளையொன்றை புதுடெல்லியில் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும் ?

[1983 நவம்பர் 18

விடை :—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமிலலை.

காட்பாடி தொகுதி காந்தி நகரில் பொறியியற் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம்.

46—வினா 16989—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காட்பாடி தொகுதி காந்தி நகரில் பொறியியற் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஒற்றாமரம் அரசு இடைநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்.

47—வினா 17405—திரு. டி. மணி: மாண்புமிகு கலவி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளவங்கோடு தாலுகா ஒற்றாமரம் அரசு இடைநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் வரும் கல்வியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சங்ககிரி கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

48—வினா 17425—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள சங்ககிரி கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?



1983 நவம்பர் 18]

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவரங்கம் ரயில்வே லைனில் மேம்பாலம் அமைக்கும் திட்டம்.

49—வினா 17549—திரு. வெ. அரங்நாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் திருவரங்கம் ரயில்வே லைனில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்பொழுது துவங்கப்படும் ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

காஞ்சீபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் சித்த வைத்தியம் பிரிவு அமைக்கும் திட்டம்.

50—வினா 17695—திரு. ப. வெங்கடசுப்பரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சீபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவு (Siddha Ward) தனியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை :

தற்போது இல்லை.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. அறிவிப்புகள்

### (அ) பேரவை அலுவல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்......................

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு, உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று கட்சித் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை எதையும் நான் இப்போது அனுமதிக்க முடியாது. பேரவையின் இந்தத் கூட்டத் தொடர் இன்றோடு முடிய இருக்கிறது. இன்று 12 மணிக்குள் எல்லாச் சட்டமுன் வடிவுகளையும் முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அதற்குப் பின்னால் ஒழுங்குப்பிரச்சினை கேட்பதற்கு அனுமதி அளிக்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ). மதிப்பீட்டுக் குழு

திரு. எஸ். ஜகத்ரட்சகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீனளத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் இருபத்தொன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசினர் உறுதிமொழிக் குழு.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.



## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) கூட்டாய்வுக் குழு—வெற்றிடத்தை நிரப்புதல்

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' சட்டமன்ற மேலவை உறுப்பினரும், சுற்றுப்புற நலத் துறை அமைச்சருமான மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா அவர்கள், தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப் படுவதை தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982) மீதான கூட்டாய்வுக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு, அவருக்குப் பதிலாக வேறு ஒரு சட்ட மன்ற மேலவை உறுப்பினர் அக் குழுவில் பணியாற்ற நியமிக்கும்படி தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 2. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

### (ஆ) நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு 1983-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 55/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (ஆய்வு செய்தல்)

### (அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1983) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''

---

** 1983-ம் ஆண்டு நவம்பர் 9-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 18

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் யுனைடெட் நேஷன்ஸ், அதுபோன்று இன்டர் நேஷனல் ஆர்கனைசேஷன்கள் போன்ற ஸ்தாபனங்களுக்கு விதி விலக்குக் கொண்டு வரப்பட்ட சட்டம், ஆனால், துரதிருஷ்ட வசமாக, எனககுத் தெரிந்தவரை இந்தச் சட்டத்திலே இன்டர் நேஷனல் ஆர்கனைசேஷன்கள் இவை என்று டிபைன் பண்ணப்பட வில்லை. இன்று நாட்டிலே ' கிரிட்' போன்ற பல ஸ்தாபனங் கள் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன்ஸ் என்ற பெயராலே தமிழ் நாட்டிலே செயலாற்றிக்கொண்டு வருகின்றன. அப்படிப் பட்ட ஸ்தாபனங்களுக்கு இந்த சட்டத்தின்படி விதிவிலக்குக் கொடுக்கப்படுமானால் அது மோசமான விளைவுகளை நாட்டிலே ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கும். ' கிரிட் ' போன்ற ஸ்தாபனங்கள் மத ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய முறையில் இருப்பதை அரசு அறியும் என்று நம்புகிறேன். ஆகவே இன்டர் நேஷனல் ஆர்கனைசேஷன் என்ற பெயராலே கிரிஸ்டியன் மெஷினரீஸ் பல்வேறு உதவிகளோடு, வெளிநாட்டுப் பண உதவியோடு இன்று இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் தமிழகத்திலே செயலாற்றிக்கொண்டு வருகின்றன.

வெளிநாட்டிலே இருந்து கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு அவர்கள் பல முறையற்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர். சமூகத்தினுடைய நலத்தைப் பாதிக் கும் நிலையில் உள்ள பல செயல்களை செய்துகொண்டிருக் கிறார்கள். அதே போன்று வகுப்பு வாதக் கலவரத்தை உண் டாக்கும் செயல்களுக்கு இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் செயலாற் றிக் கொண்டு வருகின்றன. அவர்களை இன்டர்நேஷனல் ஆர்க னைசேஷன்ஸ் என்று அங்கீகாரம் செய்தால் ஆபத்து. இந்தச் சட்டத்தில் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன்கள் இவை என்று திட்டவட்டமாக விளக்கப்படவில்லை.

அதேபோன்று மகரிஷி என்ற பெயராலே இன்னொரு ஸ்தா பனம். அதுவும் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்று சொல் லப்படுகிறது. ஆகவே இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்ற அந்த ஷரத்தின் கீழே இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் சலுகைகள் பெறாமல் இருப்பதற்கும் அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மகரிஷி இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனா என்பதல்ல பிரச்சினை. அவர்கள் மத சம்பந்தமாக ஏதோ பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்டர் நேஷனல் ஆர்கனைசேஷன் என்ற பெயராலே தவறு செய்கின்ற வர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுங்கள். ஸ்தாப னங்களின் பெயர்களைச் சொன்னால் அது தவறாகக் கருதப்படும். (குறுக்கீடு) ஒருவருடைய கருத்து ஒருவருக்குப் பிடிக்கும். மற்ற வர்களுக்குப் பிடிக்காது.



1983 நவம்பர் 18]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்று சர்வதேச நிறுவனங்கள் என்ற பெயராலே இந்த சட்டத்தின்படி உச்சவரம்பில் இருந்து விதிவிலக்கு, யுனைட்டட் நேஷன்ஸ் போன்ற ஸ்தாபனங்களுக்குக் கிடைத்தால் அதை நாங்கள் வரு வேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இன்டர்நேஷனல் ஆர்க் கனைசேஷன் என்ற பெயராலே இப்படிப்பட்ட பல போலி ஸ்தாபனங்கள், சர்வதேச கோட்பாட்டின் அடிப்படையில் செயல் படாத ஸ்தாபனங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்ற பெயரை வைத்துக் கொண்டு, தகாத முறையில் நடவடிக்கைகளில் ஈடு படுகின்ற இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் செயலாக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எங்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கொடுக் கக்கூடிய சட்டம் ஏற்கனவே அவசர நிலைப் பிரகடனம் அமுலில் இருந்தபோது கொண்டு வரப்பட்டது. அப்படிக் கொண்டு வரப் பட்ட சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கிறது என்ற காரணத் தைக் காட்டித்தான் அகில இந்திய அண்ணா தி.மு.க. சர்க்கார், அதற்குப் பிறகு சில நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என் பதற்காக இந்த நகர்ப்புறங்களுக்கு உச்ச வரம்பு என்று சொல்லி திருத்தங்கள் கொண்டு வந்து அது ஏற்கனவே இந்தச் சபையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய காலி இடங்களை கையகப்படுத்தி, ஏழை எளிய மக்களுக்கு, நடுத் தர மக்கள், இன்றைக்கு வீட்டு வசதிகள் பெறாமல் சிரமங்களை அனுபவித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு நியாயமான முறை யிலே அவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இன் றைக்கு சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால், ஏழை எளிய வர்கள், நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், அதிகமாக வாழ் கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி இருக்கிறதா என்று கேட் டால் இல்லை. காரணம் இன்றைக்கு கறுப்புப் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் நிலங்களை குறைந்த விலைக்கு வாங்கி,

அந்த நிலங்களை பல பிளாட்டுகளாகப் போட்டு, மனைகளாகப் போட்டு, விற்பனை செய்து கொள்ளை அடிக்கக் கூடிய நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கொடுமையிலே விருந்து விடுதலை வழங்குவதற்காக ஒரு முற்போக்கான சட்டமாக இன்றைக்கு சென்னை போன்ற நகரங்களில் உள்ள காலி இடங்களைச் சர்க்கார் கையகப்படுத்தி அதை ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆனால் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் பற்றிப் பேசும்போது கறுப்புப் பணக்காரர்கள் எங்கே வருகிறார்கள் ? மாண்புமிகு உறுப்பினர் மெத்தப் படித்தவர். இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்கு நிலத்தைக் கொடுக்கலாமா, வேண்டாமா, என்பதற்கான விளக்கங்களை மட்டும் சொல்லுங்கள்.

திரு அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அர்பன் லேன்ட் சீலிங் என்றால் என்ன என்பதை நாம் முதலிலே, அதற்கான விளக்கத்தை தெரிந்துக் கொள்ள வேண்டும். அந்தச் சட்டத்தின் கீழேதான் அமென்ட்மென்ட் கொண்டு வரப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தச் சட்டத்தை விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். நான் உங்களை மறுத்துச் சொல்வதாக நினைக்க வேண்டாம். அர்பன் சீலிங் என்றால் என்ன என்பதைப் பற்றிய விஷயங்களை எல்லாம் நாம் விவாதிப்பதற்கு இப்போது நேரம் இல்லை. தயவு செய்து சப்ஜெக்ட்டுக்குள்ளே பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : விதிவிலக்கு என்று சொல்கிறபோது இப்போது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற, அமென்ட்மென்டில் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன்ஸ், யுனைட்டட் நேசன்ஸ்





ஃபாரின் ஸ்டேட், இவைகளுக்கு எல்லாம் இன்றைக்கு காலி இடங்களை-உதாரணமாக சீலிங் வைத்ததற்குப் பிறகு இருக்கக் கூடிய நிலங்களை எல்லாம்,—இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன்களுக்கு விற்கக் கூடாது, அல்லது அடமானம் வைக்கக் கூடாது கிப்ட் கொடுக்கக் கூடாது, அப்படிக் கொடுத்தால் அந்த எக்சஸ் வேகன்ட் லேன்ட் நல் அன்ட் வாய்ட், செல்லாது, கோர்ட்டுக்குப் போனால் வெற்றி பெறாது, எனவே நகர்ப்புறங்களில் இருக்கக் கூடிய காலி இடங்களுக்கு உச்சவரம்பு வைத்து ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்று வரையறை செய்து விட்டு, மீதி இருக்கிற காலி இடங்களை சர்க்கார் கையகப்படுத்தவும், அப்படிக் கையகப் படுத்தப்பட்ட அந்த எக்சஸ் லேன்ட் தனிப்பட்ட நிறுவனங் களுக்குக் கொடுத்தால் செல்லாது, விற்பனை செய்தால் செல் லாது என்று ஏற்கனவே உள்ள சட்டத்திலே விதி விலக்கு கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள சட்டம் பயனற்ற சட்டமாக அதற்கு மட்டும் விதிவிலக்கு. விளக்கு என்று சொன் னால் வெளிச்சம், பசி என்றால் பால் தர வேண்டும்: வயல் என்றால் விளைச்சல் இருக்க வேண்டும். என்றால் ஏற்கனவே இருக்கிற அந்தச் சட்டமே ஓட்டைப் படகாக இருக் கிறது. காரணம் தொழிற்சாலைகள் என்ற பெயரால் எவ்வளவு வேண்டுமானாலும் வேகன்ட் லேன்ட் வைத்துக் கொள்ளலாம். ஆலைகள், பேக்டரிகள் வைக்கிறோம் என்று வேக்கன்ட் லேன்ட் வைத்துக் கொள்ளலாம். ஆட்டு தொட்டி வைக்கிறோம் என்று சொல்லி வேகன்ட் லேன்ட் வைத்துக் கொள்ளலாம். காபிக் கொட்டைக் கடை வைக்கிறோம் என்று சொல்லி வேகன்ட் லேன்ட் வைத்துக் கொள்ளலாம். அது மட்டுமல்ல. இன்றைக்கு தொழிற்சாலை என்ற ஒரு காரணத்தைக் காட்டி, 10 கிரவுன்ட் நிலங்கள் அவர்கள் வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற் கனவே உள்ள சட்டத்திலே இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மெட்ராஸ் போன்ற பகுதிகளில் சிலர் வீடுகளில் குரோட் டன்ஸ் செடிகளை வளர்க்கிறார்கள். அப்படி குரோட்டன்ஸ் செடிகளை வைப்பதற்காக, விவசாயம் செய்யப் போகிறோம் என்று சொல்லி, அதைக் காட்டி நிலம் வைத்துக் கொள்ளலாம். ஆகவே சென்னை போன்ற நகரத்திலே காலி இடங்கள் இன் றைக்கு உச்ச வரம்பு சட்டத்தின் கீழே எவ்வளவு நிலங்கள் கையகப்படுத்தியிருக்கிறார்கள்.

[திரு. அ. ரகுமான்கான்[ [1983 நவம்பர் 18

எவ்வளவு பேருக்கு இந்த நிலங்களிலிருந்து நியாயமான ஈக்குவட்டபிள் டிஸ்ட்ரிபியூஷன் முறையில் பிரித்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது ? அந்த விதி விலக்கிற்குள்ளே அவர்கள் ஒளிந்துக் கொள்ளுகிறார்கள். பழையபடியும் விதிவிலக்கு வைத்திருக்கிறீர் களே என்று நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் ஒருவர் பேசும்போது குறிப்பிட்டார். அந்த வகையில்தான் For ign States I ternatio al Organisation, Unit d Nations. என்று சொல்லி, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைக் குலைக் கின்ற விதத்திலே இதிலே வழி வகைகள் செய்யப்பட்டிருக் கிறது ; ஆகவே இதை நாங்கள் ஆதரிப்பதாக இல்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக என்ன நடைபெற்றிருக்கிறது ? இன்றைக்கு நம்முடைய சென்னை நகரத்திலேயே, மவுண்ட் ரோட்டிலே கூட பல இடங் களில் காலி இடங்கள் கிடப்பதை நாம் பல ஆண்டுக்காலமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தின் நோக்கமே இப்படிப்பட்ட நிலங்களை கையகப்படுத்தி, அரசு ஸ்தாபனங் களுக்கு உபயோகப்படுத்துவதாக இருந்தாலும் சரி, அல்லது வீடு மனை இல்லாத ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையிலாவது சரி என்று அந்த நோக்கங்களுக்காகவே இதை 1982ஆம் ஆண்டிலே கொண்டு வந்தாலும் கூட, இது வரையில் இந்தச் சட்டத்தின் மூலமாக இந்த அரசு கையகப்படுத் திய நிலங்கள் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், சர்வதேச ஸ்தாபனங்களுக்கு விதி விலக்கு கொடுப்பதற்காக இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சர்வதேச ஸ்தாபனங்கள் என்று கூறுகிறபோது, வெளிநாட்டு அரசுகளின்



1983 நவம்பர் 18] ]திரு. மு. அப்பாதுரை]

காரியாலயங்கள் அமைப்பதற்காகவும், ஐக்கிய நாட்டு சபைக்காக வும் என்று கூறிவிட்டு அனைத்து நாட்டு அமைப்பு என்று ஒரு 3-வது வகையையும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அனைத்து நாட்டு அமைப்பு என்று சொல்கிறபோது, அதனுள் பல்வேறு மத ஸ்தாபனங்கள், இன ஸ்தாபனங்கள் போன்றவையும் அடங்கும். உலகத்தின் அமைதியையும், மனித வாழ்க்கை முறைகளையுமே அழிக்கக்கூடிய ஸ்தாபனங்கள் கூட சர்வதேச அமைப்பைக் கொண்டுதான் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்திலே கூட நடைபெற்ற பல்வேறு ஜாதிக் கலவரங் களுக்கும், மதக்கலவரங்களுக்கும், இந்த அனைத்து நாட்டு சங்கங் களின் உறுதுணையைக் கொண்டே நடைபெற்றன என்று இந்த மன்றத்திலேயே நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம். அப்படிப் பட்ட சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு விதி விலக்கு கொடுப்பது என்பது பொருத்தமாக இருக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு அறக் கட்டளைகளின் பெயரால் பலர் ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கு சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக் காமல், அவைகளை கையகப்படுத்தி, வேறு வழிகளுக்கு பயன் படுத்திக் கொள்ளலாம். இதிலே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னையிலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்காக கட்டிக் கொடுக்கப்படுகிற விடுதி களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணம் சொல்லி, ராய புரத்திலே— ஒரே இடத்திலே 5 மாணவர் விடுதிகள் கட்டப்பட் டிருக்கின்றன. காரணம் கேட்டால், நிலங்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள் — இப்படி ஒரே இடத்திலே 5 ஆதி திராவிட மாணவர் விடுதிகளைக் கட்டிக் கொடுத்தால், அங்கே வந்து தங்கும் மாணவர்கள், அங்கேயிருந்து 15, 20 கிலோ மீட் டருக்கு அப்பால் இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரி களுக்கும் எப்படி சென்று படிப்பார்கள். அது மட்டும் அல்ல, அங்கே பார்க்கிற போது, 150 மாணவர்கள் இருக்க வேண்டிய

இடத்தில் 20 மாணவர்கள்தாம் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் போக்க வேண்டும் என்று சொன்னால், இந்தச் சட்டத்தின் மூலமாக, இவைகளுக்கு நிலங்களை எடுக்க முயல வேண்டும்.

அடுத்து நம்முடைய சென்னையில் இருக்கக்கூடிய தேனாம்பேட்டை என்ற பகுதியில் இருக்கக்கூடிய வானவில் என்று சொல்லக்கூடிய கைத்தறி கண்காட்சி நிலையம் இருக்கக்கூடிய கட்டிடத்திற்கு 40 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சுற்றிக் கூட ஏராளமான இடம் ........ (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திருப்பி திருப்பிச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குச் சொன்னபோதும் நீங்களும் கேட்டிருப்பீர்கள். பில்லுக்கு சம்பந்தம் இல்லாததை பேசக் கூடாது.

திரு. மு. அப்பாதுரை : சட்டத்தைப் படித்து விட்டுத்தான் பேசுகிறேன். நிலம் கையகப்படுத்துவது பற்றி சட்டத்திலே இருக்கிறதே. ஆகவே பேசினேன்.

ஆகவே இந்தச் சட்டத்தின் மூலமாக நீங்கள் நிலங்களை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் சர்வதேச ஸ்தாபனங்கள் என்றால் எவை எவை என்பதை வரையறுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்படிப்பட்ட மத ஸ்தாபனங்களுக்கும், இன ஸ்தாபனங்களுக்கும் இப்படி விதிவிலக்கு கொடுக்கக் கூடாது என்று கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே. 1983 ஆம் ஆண்டு நகர்ப்புற உச்சவரம்பு நிர்ணயிக்கிற இந்த மசோதாவில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவில் முக்கியமானது இன்டர்னேஷனல் ஆர்கனைசேஷன்ஸ் வெளிநாட்டு அரசுகள் ஐக்கிய நாடுகள் இவைகளுக்காக விதிவிலக்குக்



கொடுக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே வெளிநாட்டு ஸ்தாபனங்கள் மத ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் போன்ற இடங்களிலே கேடான காரியங்கள் செய்யப்படுகின்றன. யாரெல்லாம் நல்ல பணிகளைச் செய்கிறார்கள் ஏழைகளுக்கு நல்ல காரியங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுத்தால் அதனால் அரசுக்கு நல்ல பெயர் வரும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் புளியந்தோப்பிலே உள்ள டான் பாஸ்கோ பள்ளிக்குச் சேர வேண்டிய இடத்திலே வேறு ஒருவருக்கு வாடகைக்கு கொடுத்து வியாபாரம் நடக்கிறது. கதீட்ரல் ரோட்டிலே ஸ்டெல்லா மேரீஸ் காலேஜில் ஒரு பிஷப் இருக்கிறார். அங்கே நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று நோடிபிகேஷன் கொடுத்து அரசாங்க உத்திரவு அனுப்பப்பட்டும் அந்த இடத்தை யாருக்கும் தெரியாமல் ஏழைகளைப் பயமுறுத்தி தரித்திர நிலையிலுள்ளவர்களை ஏமாற்று வார்த்தைகளைச் சொல்லி ஏதாவது கையூட்டு கொடுத்து உண்மையாகவே அங்கே பல ஆண்டுகாலமாக வாழ்ந்து வந்த மக்களை —அங்கே இந்துக்களும் இருக்கிறார்கள் கிறிஸ்துவர்களும் இருக்கிறார்கள் — இரண்டு சாரார்களையும் துரத்துகிற நிலைமை அந்த பிஷப் என்ற பெயரால் மதத்தின் பெயரால்— அரசாங்கச் சட்டம் என்று சொல்லிக் கொண்டு — சுயநலத்திற்காகப் பயன்படுத்துகின்ற கேடான காரியம் நடக்கிறது.

அது மட்டுமல்ல. நகர்ப்புறங்களிலே 99 வருட லீஸ் என்ற முறையிலே கடற்கரையிலே புகாரி ஹோட்டலுக்கும் சினிமா அதிபர்களுக்கும் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிக்னிக் ஹோட்டல் என்ற முறையிலே எல்லாம்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூத்த தலைவருக்கே நான் விளக்கம் சொன்னால் என்ன ஆகும்? மத்திய சர்க்காரே உலக நாடுகளுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. புகாரி

[திரு. எல். இளையபெருமாள்] [1983 நவம்பர் 18

யெல்லாம் பிக்னிக்கெல்லாம் ஐக்கிய நாடுகளின் அங்கங்களா ?
அதைப்பற்றி ஏன் பேசவேண்டும். திருத்தத்தைப் பற்றி மற்றும்
பேசுங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : அவைகள் ஐக்கிய நாடுகளின்
அங்கங்கள் அல்ல. தாங்கள் சொன்ன திருத்தத்தை நான் ஏற்றுக்
கொள்கிறேன்.

நகரப்புறங்களிலே உச்ச வரம்பு என்பதைக் கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த
பில்லுக்கு அது சம்பந்தம் இல்லை என்பதை நான்
முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறேன். நான் கேட்டுக்
கொள்வதெல்லாம் அரசு செய்கிற நல்ல காரியங்களை ஏற்று
ரிட்டி சார்பாகவும் செய்யக்கூடிய கேடான காரியங்களை மைனா
கொள்வது சரியல்ல. அப்படிப்பட்ட நிலையை ஏற்றுக்
தடுத்துவிட வேண்டும். சங்கம் ரிக்ரியேஷன் கிளப்ஸ் கவனித்துத்
கூட்டங்கள் நடத்துவது என்று சொல்லி வாங்கிக்கொண்டு— பள்ளிக்
டர்டு சோஷியல் ஆர்கனைசேஷன்ஸ் என்று வாங்கிக்கொண்டு ரிஜிஸ்
உண்மையிலே அங்கே அப்படிப்பட்ட ஆர்கனைசேஷன் இல்லை.
தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்துக்கொண்டு அவர்
களுடைய சொத்தாக மாற்றுவது கேடான காரியம். எனவே
வருங்காலத்திலாவது கவனித்து விதிவிலக்கு என்பதற்கு உடனடி
யாகச் சட்டம் இயற்றுவதைவிட தீர்க்கமாக ஆலோசிக்கக்கூடிய
முறையிலே உண்மையான சமுதாய சேவை செய்தால் கொடுப்
பது சமுதாய சேவை என்ற பெயரால் தவறாகச் செய்தால் அந்த
நிலங்களை கையகப்படுத்தி ஏழை எளியவர்களுக்கு விடற்றவர்
களுக்குத் தருவது என்ற முறையில் கொண்டுவர அதற்காக ஒரு
குழு அமைத்தோ அல்லது தனி அதிகாரியை போட்டு அதிகாரம்
கொடுத்தோ செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவைக்
கொண்டுவருகிறபோது இங்கே இருக்கிற உறுப்பினர்கள், திரா
விட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் காங்கிரஸ்



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கம்யூனிஸ்டு கட்சியைச்
சேர்ந்த உறுப்பினர்கள் முழுமையாக இதை ஆதரிக்க வேண்டும்.
ஆதரித்து இருக்க வேண்டும், ஆதரிக்கிறார்கள் என்று நான்
கருதுகிறேன். இடையிலே அவர்களுக்கு சிறிது சந்தேகம் வந்
ததற்குக் காரணம் நாம் கொண்டு வந்துள்ள இந்தச் சட்ட முன்
வடிவை அமெண்டுமெண்டை மட்டும் படித்துவிட்டு இங்கேவந்து
பேசியிருக்கிறார்கள். காரணம் என்ன என்றால் 10, 15
நாட்கள் தொடர்ந்து சட்டமன்ற நடவடிக்கைகள் நடப்பதால்
அவர்கள் சட்ட முன்வடிவை நேற்றோ அதற்கு முன் நாளோ
படித்துவிட்டு வந்து பேசியிருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட
தவறே ஒழிய அவர்கள் வேண்டும் என்றே அதை எதிர்க்கிறார்கள்
என்று நான் கருதவில்லை. காரணம் இதனுடைய மூலச் சட்டத்
தை அவர்கள் படித்து இருந்தால் அந்த மூலச் சட்டத்திற்கு ஒரு
திருத்தம் வந்து அந்த திருத்தத்திற்கு ஒரு திருத்தம் இப்போது
வந்து இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்
கிறேன். திரு. ரகுமான்கான் போன்ற சட்டம் படித்தவர்கள்
நான் எதிர்பார்த்தது —திருத்தத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு
வரலாமா என்று அவர்கள் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்
தேன். ஆனால் அதில் இருக்கிற சட்ட முறையின்படி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலேயே விளக்கம்
சொல்லியிருந்தால் இவ்வளவு சர்ச்சை வந்து இருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தவறாகக் கருதக்
கூடாது. அப்படி விளக்கம் சொல்லாமல் இருந்தது நீங்கள்
இருக்கிறபோது சொல்லலாம் என்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் விளக்கம் சொல்
லியிருந்தால் இந்தப் பிரச்சனைகள் வந்து இருக்காது என்பதற்
காகச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசியதை நான்
தவறு என்று சொல்லவில்லை. அவர்களுக்கு இருக்கிற காலத்தில்
நாம் கொண்டு வந்த சட்ட முன்வடிவை மட்டும்தான் படித்து

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

விட்டு வந்து பேசியதால் சில இக்கட்டான நிலை வந்துவிட்டது என்று சொன்னேன். உறுப்பினர்கள் தவறாகப் பேசியதாகச் சொல்லவில்லை (குறுக்கீடு) இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்று யாராவது ஒரு போர்டைப் போட்டுக்கொண்டு இது தான் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்றால் எந்த அரசும் அதை ஏற்றுக் கொள்ளாது. அது அ.இ.அ.தி.மு.க. ஆனாலும் சரி, மக்களால் தெரிந்து எடுக்கப்பட்ட எந்த அரசும் அதை ஏற்றுக்கொள்ளாது. அவர்களிடத்தில் போர்டு இருக்கிறது. எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு அச்சு ஆபீஸ் இருக்கிறது, லெட்டர் பேடு போட்டுக்கொண்டு இருந்தால் அது 'இன்டர் நேஷனல்' ஆர்கனைசேஷன் ஆகாது. இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்றால் அதற்கு சில வரைமுறைகள் இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டும் அல்ல, இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்பது என்ன என்பதை 1978 ஆம் ஆண்டு வந்த மூலச் சட்டத்திலே இருக்கிறது. நான் இங்கே சொன்னதற்குக் காரணம் இந்த இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் விதிவிலக்குதருகிறார்கள். இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்கு விதிவிலக்கு தருகிறபோது அதில் மூலச் சட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் வேண்டும் என்று படிக்காமல் வரவில்லை. உங்களுக்கு அதற்குக் காலம் இல்லாத காரணத்தால் வந்ததால் வந்த இடர்ப்பாடு என்று சொல்ல விரும்புகிறேன். இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்று சொல்கிற போது "For the purpose of any office or for the residence of the Members of the staff of such Organisation"
என்று சொல்லப்பட்டிருக்கிறது. யுனைட்டடு நேஷன்ஸ் என்றால் For the purpose of "United Nation's Office or for the residence of the Members of their staff"
என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாரின் ஸ்டேட் என்றால் "For the purpose of the Diplomatics. . . . ."
என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய ஸ்தாபிதங்களுக்கு உள்ளது. அவர்கள் யார் என்று கேட்டால், 'a foreign State for the purposes of its diplomatic and consular missions or for such other official purposes. . .' இவைகளுக்கெல்லாம் உண்டு. அது மட்டுமல்ல.



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

'Provided that the exemption under this clause shall apply only if there is an agreement between the Government of India and such international organisation that such land shall be so exempted.'
இது இதிலே இருக்கிறது. அதைத்தான் சொன்னேன். நீங்க தவறாகச் சொல்லவில்லை. இது, இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்காக விட்டுக்கொடுக்கிறது, ஒரு அரசு விட்டுக் கொடுக்கிறது.

சட்டம் முதலில் 1978 இல் வந்திருக்கிறது. அதற்குப் பிறகு திருத்தம் வந்திருக்கிறது. திருத்தத்திற்கு ஒரு திருத்தம் வந்திருக்கிறது. அதில், இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்றால் என்ன என்பதை நீங்கள் படித்திருப்பீர்களானால் இதில் இப்படிப்பட்ட சந்தேகங்கள் உங்களுக்கு வந்திருக்காது என்று நான் நினைக்கிறேன். அப்படி வராததால்தான் இப்படி வந்தது. இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்றால் அவர்களுக்கு மட்டும்தான்.

அதுமட்டுமல்ல, மூலச் சட்டம் வருகிறபோது 1978 இல் விதிவிலக்கு யார் யாருக்குக் கொடுத்தார்கள் என்று அதை முதலில் சொல்லவில்லை என்று சொன்னார்கள். நம் பேரவைத் தலைவர் அவர்கள். அப்படி பேரவைத் தலைவர் அவர்கள் ஏன் சொன்னார்கள் என்றால் நீங்கள் படிக்காமல் வருவீர்கள் என்று அவர்களுக்குத் தெரியும் போல் இருக்கிறது, எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களைப் பற்றி குறை சொல்லாதீர்கள். நான் எதற்காகச் சொன்னேன் என்றால் (குறுக்கீடு) விளக்கம் கொடுத்துவிட்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் கட்டுக்குள் அடங்கியிருக்க முடியும். அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர்களை குறை சொல்லவில்லை. நேரமில்லை, மூலச் சட்டத்தைப் படிக்கவில்லை என்று சொன்னேனே தவிர அவர்களை குறை சொல்லவில்லை. நான் சொன்னதை தாங்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். நான் சொல்லும்போது, உறுப்பினர்களுக்கு நேரம் இல்லாததால் அவர்கள் மூலச் சட்டத்தைப் படிக்காமல் வந்துவிட்டதால் வந்த தவறு என்று சொன்னேனே தவிர வேறு அல்ல.

[1983 நவம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நிறையப் படிக்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் படிக்கவில்லை படிக்கவில்லை என்று எனக்கு அவர்கள் படிக்காதது தெரியும் என்று சொன்னால் நான் அவர்களைக் கட்டுப்படுத்துவது ரொம்பவும் கஷ்டம். ஆகவே, அதை விட்டு விட்டு மற்ற விஷயங்களைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்).

திரு. கு. ரமணி : நாங்கள் படிக்கவில்லை என்று சொல்வது பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு சட்ட முன்வடிவை இன்ட்ரடியூஸ் செய்யும்போது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இம்மாதிரி 1978 ஆம் ஆண்டு மூலச் சட்டத்தில் இன்னின்ன இருக்கின்றன, இன்னின்ன திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று நான்கு சென்டன்ஸ்கள் சொல்லி விளக்கியிருக்க வேண்டும். அப்படி ஏன் அவர்கள் இன்ட்ரடியூஸ் செய்யும்போது விளக்கவில்லை. படிக்கவில்லையென்றால் – எல்லோரையும் குறை சொல்வது மாதிரி அப்படி நிலைமையில்லை. சிலர் படித்திருக்கலாம், சிலர் படிக்காமல் இருக்கலாம். படிக்க வேண்டியது எங்கள் கடமை. அதேபோல் இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜில் விளக்கி அதைப் பற்றிச் சொல்ல வேண்டியது அமைச்சர் அவர்கள் கடமை இல்லையா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் படிக்கவில்லை என்று சொல்லவில்லை. நேரமில்லாததால் (குறுக்கீடு) நேரம் இருந்திருந்தால் அதையும் படித்து வந்திருப்பார்கள் என்று தான் தெரிவித்தேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூலச் சட்டத்தை 1978 இல் கொண்டுவந்து நிறைவேற்றுகிறபோது மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது மத்திய மாநிலச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் இவற்றிற்கு விதிவிலக்கு உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை விதிவிலக்கு உண்டு. வங்கிகளுக்கு விதிவிலக்கு உண்டு. பொது அறக்கட்டளைகள் – இங்குதான் இந்தத் திருத்தம் வந்தது. 1978இல் பொது அறக்கட்டளைகள், பப்ளிக் சாரிட்டபிள் இன்ஸ்டிட்யூஷன்ஸ், மத



[1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சார்பான ட்ரஸ்ட்கள், ரிலிஜியஸ் ட்ரஸ்ட்ஸ், கூட்டுறவு நிறுவனங்கள் இவைகளுக்கெல்லாம் 1978 சட்டத்தில் விதிவிலக்கு இருந்தது. அது மட்டுமல்ல கல்வி, கலாச்சாரம், தொழில் நுட்பம், அல்லது விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பயிற்சிக்கூடங்கள், பொழுதுபோக்கு இடம், க்ளப்ஸ், சங்கங்கள், சொஸைட்டீஸ் இவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு இருந்தது.

அதுமட்டுமல்ல நான் முதலிலே சொன்னபடி இன்டர்னேஷனல் ஆர்கனைசேஷனுக்கு இது போன்றவைகளுக்கெல்லாம விதிவிலக்கு இருந்தது. இப்படி விதிவிலக்கு வருகிறபோது அதிலே சங்கடங்கள் இருக்கலாம் என்று எண்ணி இந்த அரசு இதற்கு ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. 1978 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விதிவிலக்கில் சில திருத்தங்களைக் கொண்டுவந்து அந்த விதிவிலக்குட்படி அவர்கள் எவ்வளவு நிலங்களை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். தேவையில்லை என்றால் விற்றுவிடலாம் என்றிருந்தது. 1982 லே இந்த விதிவிலக்கை ரத்து செய்வதற்கு ஒரு திருத்த சட்டம் கொண்டு வருகிறபோது இந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. அவர்கள் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்றாலும் எதற்காக எந்த பர்பசுக்காக என்று சொல்ல வேண்டும். அப்படி இல்லாதபோது அந்த நிலத்தை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்படி ஒரு சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அப்படி அவர்களுக்கு செல்லுகிறபோது அதிலே 'பாரின் ஸ்டேட் யுனைடெட் நேஷன்ஸ் இன்டர்னேஷல் ஆர்கனைசேஷன்ஸ்' என்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் தங்களுக்கு வேண்டிய நிலத்தை வைத்துக் கொள்ளலாம். தேவையில்லாதபோது அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்பதாகும். எனவே 1978 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்ட விதிவிலக்கில் ரத்து செய்யப்பட்டது. அப்படி ரத்து செய்யக்கூடாது என்று மத்திய அரசில் சொன்னார்கள். 'பாரின் ஸ்டேட் யுனைடெட் நேஷன்ஸ் இன்டர்னேஷனல் ஆர்கனைசேஷன்ஸ்' ஆகியோருக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட உரிமை ரத்து செய்யப்பட்டு திருப்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

பித்தர வேண்டுமென்றால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற
உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொன்னதினாலே அதற்குப்
பிறகு அதை ஏற்றுக்கொண்டு இப்போது இந்த விதிவிலக்கு
தரப்படுகிறது. இதற்கு முன்னாலே மூலச் சட்டத்தில் என்ன
இருந்தது என்பதை நான் ஏற்கனவே படித்திருக்கிறேன். அந்த
மூலச் சட்டத்தில்

'Any international organisation for any official purpose or for the residence of the members of the staff of such organisation; United Nations means, its specialised agencies for any official purpose or for the residence of the members of their staff.

என்றிருக்கிறது. ஆகவே இன்டர்னேஷனல் ஆர்கனைசேஷன்ஸ்
என்பதிலே உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் வராது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசுகிறபோது நம்முடைய திரு.
ரகுமான்கான் அவர்களும் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும்
பேசுகிறபோது இன்றைக்கு இப்படியெல்லாம் நிலங்கள் எடுக்
கிறபோது' எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டது என்று கேட்
டார்கள். அது கேட்க வேண்டிய கேள்விதான் என்பதை தெரி
வித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த நில உச்சவரம்புச்
சட்டத்தின் மூலம் வரப்பெற்ற மனுக்கள் எவ்வளவு என்றால்—
இன்றைக்கு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் சென்னை,
மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய
ஆறு நகரங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன. அவர்களிட
மிருந்து வந்த மொத்த டிக்லரேஷன் 16,840 ஆகும். அவற்
றில் இதுவரைக்கும் முடிவெடுத்திருப்பது 14,000 ஆகும். இதிலே
இன்னும் முடிவு பெறாது இருப்பது 2,800 என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே எடுத்துக்கொள்ளப்பட
நிலங்கள் எவ்வளவு என்றால் 1,276 ஏக்கர்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிச் சொல்லுகிறபோது இன்றைக்கு தொழிற்சாலை
என்ற பெயரால் தொழில் என்ற பெயரால் எவ்வளவு வேண்டு
மானாலும் வைத்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு
உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அப்படி
அல்ல. இன்றைக்கு யாராக இருந்தாலும் ஒவ்வொருவரும்
500 ஸ்கொயர் மீட்டர் தான் வைத்துக் கொள்ளலாம்.



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

[முற்பகல் 9-40]

ஒரு குடும்பம் என்றால் 2,000 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம். அவர்கள் குடும்பமாக இருந்தாலும் சரி அல்லது நிறுவனமாக இருந்தாலும் சரி அல்லது தொழிற்சாலையாக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் தனிப்பட்ட மனிதர் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்றால் 500 ஸ்கொயர் மீட்டர் சென்னை நகரத்தில். ஆனால் கோயம்புத்தூரிலும் மதுரையிலும், திருச்சியிலும், சேலத்திலும் 1,500 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம் தனி மனிதர் குடும்பம் என்றறால் சென்னைக்கு 2 000 ஸ்கொயர் மீட்டர் மதுரை, கோயம்புத்தூர் திருச்சி சேலத்திற்கு, 3,000 ஸ்கொயர் மீட்டர், திருநெல்வேலிக்கு 4,000 ஸ்கொயர் மீட்டர். தொழில் நிறுவனமாக இருந்தாலும் சரி, அந்தத் தொழில் நிறுவனம் ஒரு குடும்பம் எவ்வளவு வைத்துக் கொள்ளலாமோ, அந்தக் குடும்பம் வைத்துக்கொள்ளுகிற அளவுக்குத்தான் தொழில் நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சென்னைக்கு 2,000 ஸ்கொயர் மீட்டர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலத்திற்கு 3,000 ஸ்கொயர் மீட்டர். திருநெல்வேலிக்கு 4,000 ஸ்கொயர் மீட்டர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப பிறகு தொழிற்சாலைகளில் இருக்கிற நிலங்களை உடனடியாக எடுத்துக் கொள்ள மாட்டோம். அவர்கள் இவ்வளவு நிலங்களை வைத்திருக்கிறோம். நாங்கள் தொழிலை அபிவிருத்தி செய்கிறோம் என்று அப்படி. அபிவிருத்தி செய்வதற்கு நிலத்தைக் கேட்கலாம். கேட்கிற பொழுது என்ன தொழில் அபிவிருத்தி செய்கிறீர்கள் ? அபிவிருத்தி செய்வதற்கு உங்களுக்கு பண வசதி, என்ன ஆகியிருக்கிறது, வரைபடங்கள் எல்லாம் போட வேண்டும், பணம் இருப்பதைக் காட்ட வேண்டும் லைசென்ஸ் காட்ட வேண்டும். இவற்றையெல்லாம் அளித்தால் அவர்களுக்கு விதிவிலக்கு தரப்படுகிறது. அப்படி விதிவிலக்கு தந்தாலும் விதிவிலக்கு என்று சொல்லி விட்டு விடுவதில்லை. இரண்டு வருஷத்திற்கு விதிவிலக்கு. இரண்டு வருஷத்திற்குள் அவர்கள் எந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்மென்று கருதினார்களோ, எந்தத் தொழிலைக் கட்ட வேண்டுமென்று கருதினார்களோ அதைச் செய்ய வேண்டும். 6 மாதத்ற்கு ஒரு முறை அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டும் தான் தொழிற்சாலைக்கு விதிவிலக்கு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, யாருக்கு வேண்டுமானாலும் லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை யென்பதையும் தொழிற்சாலைக்கு இப்படி விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

இந்தச் சட்டமுன்வடிவில் ஒரே ஒரு திருத்தம்தான். அது இன்டர்னேஷனல் ஆர்கனைசேஷன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் நான் தெரிவித்த பொழுது, திருத்தத்திற்குத் திருத்தமா என்றார்கள். இதற்கு முன்னோடி இல்லாவிட்டாலும் இதையே நீங்கள் முன்னோடியாக எடுத்துக்கொள்ளலாம். இதையே நீங்கள் எப்படி முன்னோடியாக எடுத்துக்கொள்வீர்கள் என்று கேட்டாலும், 1976 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். கான்ஸ்டிடியூஷக்குச் சில திருத்தங்களை 42வது திருத்தம் என்று செய்தார்கள். அப்பொழுது, சிலவற்றை நிறைவேற்றினார்கள், சிலவற்றை நிறைவேற்றவில்லை. அதற்குப் பிறகு அதற்கு ஒரு திருத்தம் வருகிறபொழுது, 1977 ஆம் ஆண்டில், எந்தத் திருத்தத்தை நிறைவேற்றவில்லையோ, அந்தத் திருத்தத்திற்கு திருத்தம் கொண்டு வந்து அதை நிறுத்தினார்கள். அதைப் போலத்தான் நாம் முதலிலேயே கொண்டு வந்த திருத்தத்தில் நிறைவேற்றப்படாமல இருப்பவற்றிற்குத் திருத்தங்களைக் கொண்டுவந்து அதை ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது நான் சரியாகப் படிக்கவில்லை என்று கூடச் சொன்னார்கள் நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. ஒரு பில்லை எடுக்கும் முன்னால் கொஞ்சம் காலம் கொடுக்க வேண்டும் என்பது ஒன்று. அதற்கு முன்பிருந்த சட்டத்தில் எத்தனையாவது ஆண்டுச் சட்டத்திற்கு திருத்தம் என்று கொடுக்க வேண்டும். திருத்தத்திற்குத் திருத்தம்தான் என்பதையும் முன்கூட்டியே சொல்லிவிடுவார்களானால் நிச்சயமாக எங்களுக்கு வாய்ப்புக் கொடுத்ததாக இருக்கும்.

இரண்டாவதாக திருத்தத்திற்குத் திருத்தம் கொண்டு வருகிறோம் என்று அமைச்சர் ஒத்துக் கொண்டிருப்பதனால் நகர் புறத்திலே தவறான முறையில் நம்முடைய அரசு சொத்துக்களை லீஸ் என்ற பெயரில் மிகக் குறைவாக ரூ. 1 என்ற வாடகையில் கொடுப்பதைத் தடுக்கிற முறையில் திருத்தத்திற்குத் திருத்தம் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1983 நவம்பர் 18]

[முற்பகல் 9-50 ]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் இருபதாவது பிரிவில் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்கு சீலிங் லிமிட்டிற்குமேலே இருக்கும் வேகன்ட் லேண்ட்டை டிரான்ஸ்பர் செய்யும் அதிகாரம் இல்லை என்றுதான் இருக்கிறது. ஏற்கனவே நீங்களே திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டு இப்பொழுது இது தேவையில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பது ஏன் ?

இன்னொன்றையும் நான் கேட்கிறேன். விதிவிலக்கு என்ற பெயரால நீங்கள் கொடுத்திருந்தாலும் நான்கு பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ஒன்பதரை கிரவுண்ட் என்ற அளவிலும் நபர் ஒன்றுக்கு 500 சதுர மீட்டர் என்ற அளவிலும் வருகிறது.

தொழிற்சாலை என்ற முறையில் எங்கெல்லாம் வருகிறது என்றால் ஆட்டுத் தொட்டி கசாப்புக்கடை காப்பிக்கொட்டை சம்பந்தபட்டது பால பவுடர் தொழிற்சாலை, ஐஸ்கிரீம் தொழிற்சாலை, அலுமினியம் வியாபாரம் செய்யும் தொழிற்சாலை போன்றவைகள் வருகின்றன. விவசாயம் என்ற பெயரால் குரோட்டன்ஸ் வருகிறது. இவைகளையெல்லாம் ஒன்பது கிரவுண்ட் வேகன்ட் லேண்ட்ஸ் வைத்துக்கொள்ள வாய்ப்பு உண்டா இல்லையா ?

ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்கு வைத்துக் கொள்ளக் கூடாது, இருந்தால் எடுப்போம் டிரான்ஸ்பர் செய்யக்கூடாது என்றெல்லாம் மாற்றியதும் நீங்கள்தானே. இப்பொழுது பழையபடி மாற்றுவதும் நீங்கள்தான். இதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்பதைத் தெரிவித்துவிட்டேன். எனவே அதிலே சந்தேகம் இல்லை என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட ஆர்க

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

னைசேஷனுக்கு நிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்பதும் ஆனால் வாங்கி விற்கும்பொழுது அரசினிடத்தில் சொல்லிவிட்டு விற்கலாம் என்று மூலச் சட்டத்தில் இருக்கிறது. அதைத் திருத் தும்பொழுது இவைகளுக்கெல்லாம் கொடுக்கப்படும் நிலங் கள் எந்தக் காரியங்களுக்காக கொடுக்கப்பட்டதோ அந்த பர்ப்பஸ் அதில் இல்லை யென்றால் அது அர்பன் லேண்ட் சீலிங் ஆக்டின் கீழே வந்துவிடும் என்பது திருத்தம். அதுவரையிலும் தெரிவித்திருக்கிறேன் என்று கருதுகிறேன்.

அப்படிக் கொண்டு வருகின்றபொழுது அவைகளிலே திருத் தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு கொண்டுவந்து மத்தியப் பேரரசுக்கு அனுப்பியபொழுது அவர்கள எல்லாவற் றையும் ஏற்றுக்கொண்டு விட்டு இந்த இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் என்பது சம்பந்தமானதை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். மறுமுறையும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கடிதம் எழுதியும் இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனுக்குக் கொடுக்கப்பட்ட விதி விலக்கை நாம் எடுக்கக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியதால்தான் நாம் மத்திய அரசு சொன்னதை ஏற்று இதற்குத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

நான் மீண்டும் முதலிலே சொன்னதைத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் திரு. ரகுமான்கான் அவர்கள் அப்போது வேறு விஷயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று கருதுகிறேன். தனிப்பட்டவருக்கு 500 ஸ்கொயர் மீட்டர் அதேபோல் ஒரு குடும்பத்திற்கு 2,000 ஸ்கொயர் மீட்டர் வைத்துக்கொள்ளலாம். அதாவது ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அதேஉரிமைதான் தொழிற் சாலைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு குடும்பத் திற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றால் 2,000 ஸ்கொயர் மீட்டர். 4 பேர் கொண்டது ஒரு குடும்பம். அதாவது ஒரு குடும்பத்திலே உள்ள ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் மேஜர் ஆகி கல்யாணம் ஆகாதவர்கள் உட்பட எல்லோருக்கும் சேர்த்து 2,000 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம். அதாவது தனிப்பட்டவர் ஒருவருக்கு 500



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

ஸ்கொயர் மீட்டர். ஒரு குடும்பத்திலே 4 பேர் என்று இருந்தாலும் அதற்கு மேலே போனாலும் மேக்சிமம் 2,000 ஸ்கொயர் மீட்டர் என்று ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மினிமம் 500 ஸ்கொயர் மீட்டர். இப்படி ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு என்று நிர்ணயித்திருக்கிறோமோ அதைத்தான் எல்லா தொழிலகங்களுக்கும், அதாவது எப்படிப்பட்ட தொழி லகமாக இருந்தாலும் நாம் நிர்ணயித்திருக்கிறோம். அதாவது 2,000 ஸ்கொயர் மீட்டர் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு முறைப்படுத்தல்) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத் துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1983 நவம்பர் 18

(ஆ) அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 48/1982)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. பொன்னையன் : இது ஒரு சிம்பிள் அமெண்ட் மெண்ட் தான். பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற மனிலெண்டர்ஸ் ஆக்ட் என்று சொல்லக்கூடிய வட்டிக்கடைக்காரர்கள் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒருவருக்கு இதற்காக உரிமம் வழங்குகின்ற போது என்னென்ன விதிகளுக்குட்பட்டு அவர் அந்தத் தொழி லைச் செய்யவேண்டும் என்பதற்கு விதி இருக்கின்றது. அந்த விதிகளை அவர்கள் மீறினால் எடுத்த எடுப்பிலேயே அந்த உரிமத்தை ரத்து செய்யலாம் என்றுதான் ஏற்கெனவே இருந்தது தற்காலிகமாக அந்த உரிமத்தை ரத்து செய்து பிறகு நடவடிக்கை எடுத்து, அவரிடத்திலே உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யக் கூடிய குறைபாடுகளாக இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்து மீண்டும் உரிமத்தை வழங்குவதற்குரிய வாய்ப்பில்லாமல் இருந்தது. தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையிலே ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்தல் போன்ற நடை முறைகள் கையாளப்படுகின்றபோது அவரவர்களுக்கு உள்ள நிலைமைகள் பற்றி எடுத்துச் சோல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும். அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாத காரணத்தால் 'டு சஸ்பென்ட், தேர் சுட் பி ய பவர்' என்ற வகையிலே தற் காலிகமாக உரிமத்தை ரத்து செய்கின்ற ஒரு அதிகாரம் இருக்க வேண்டும் என்ற வகையில் ஏற்கெனவே வட்டிக்கடைக்காரர் கள் சட்டத்திலே திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். அதைப் போன்றுதான் அடகுக் கடைக்காரர்கள் சட்டத்திலேயும் தற்காலிகமாக உரிமத்தை ரத்து செய்யக்கூடிய அதிகாரம் இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டி ருக்கின்றது.

*1982ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1983 நவம்பர் 18]

(முற்பகல் 10-00)

திரு. என். எஸ். வீ. சித்தன் : மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் திருத்த சட்டமுன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். அந்த உரிமங்களை ரத்து செய்வது என்பதற்குப் பதிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தற்காலிகமாக ரத்து செய்தல் என்ற முறையை நாம் வரவேற்கிறோம். முழுமையாக ரத்து செய்துவிடா மல் அவர்களுக்கு ஏன் ரத்து செய்கிறோம் என்ற காரணத்தை அறிவித்து, அவர்களிடத்தில் அதற்கான விளக்கத்தைக் கேட்டு, அதன் பிறகு அதை முடிவு செய்வதற்காக இந்தச் சட்டம் வழிவகை செய்யும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பொதுவாகவே அடகுக்கடைகாரர்கள் என்று சொல்கிற நேரத் தில் மக்களுக்கு இருக்கும் எண்ணம் அது ஒரு சமுதாய சாபக் கேடு என்பதுதான். எவ்வளவு சட்டங்களை நாம் வைத்து இருந்தாலும் அவர்கள் வாங்குகிற வட்டி விகிதத்தைப் பார்க்கிற போது, அந்தக் கணக்கு எந்தச் சட்டத்தின் கீழும் வராதஅளவிற்கு அவர்கள் ஏழை எளிய நடுத்தர மக்களை பாதிக்கும் அளவிற்கு இருக்கிற அமைப்பாக அது இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது.

அதேநேரத்தில் இன்றைக்கு அடகு கடைக்காரர்கள் இருக்கிற காரணத்தால் எந்தவிதமான ஈடும் இல்லாமல் அல்லது குறைந்த ஈட்டுக்கு சாதாரண மக்கள் கடன் பெறுவதற்கு ஒரு முறை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன். இந்த அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தை நீட்டிக் கொண்டே போகாமல் அதற்காக ஒரு காம்பிரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வரப்படும் என்று சொன்னது ஒருபுறம் இருந்தாலும், சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் எளிய முறையில் கடன் பெற வசதி வாய்ப்புகளை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். கூட்டுறவுத் துறை மூலமாக நாம் பல்வேறு திட்டங்களை நிறை வேற்றிவருகிறோம். அது நாட்டு மக்களுக்கு ஒரு பெரும் வரப் பிரசாதமாக இருக்கிறது. ஆகவே, இந்த அடகுக் கடைகளுக்கு மாற்று அமைப்பு என்ற முறையில் இந்தக் கூட்டுறவுத் துறை மூலமாக சாதாரண மக்கள் கடன் பெற வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி கொடுக்கப்படுகின்ற கடன்கள் மாலை நேரங்களிலும், இரவு நேரங்களிலும் ஏழை எளிய மக்களுக்கு எளிய முறையில் கிடைக் கும் வகையில் கூட்டுறவு சட்டத்தையும் திருத்தி, வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டு, இந்தத் திருத்தத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

[1983 நவம்பர் 18

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தற்காலிகத்
அவர்களே, நடைமுறையில் இருக்கின்ற அடகுக் தலைவர்
கள் தொடர்பான சட்டத்தில் மேலும் ஒரு கடைக்காரர்
செய்வதற்காக அரசாங்கம் கொண்டு வந்து திருத்தத்தைத்
முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக்கழகத்தின் இருக்கிற சட்ட
என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க சார்பில்
விழைகிறேன்.

நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் அடகுக் கடைக்காரர்
கள் உரிமையை ரத்து செய்யும் அதிகாரம் நிர்வாகத்திற்கு இருந்
தாலும் இப்போது கொண்டு வந்து இருக்கும் திருத்தம் தற்
காலிகமாக ரத்து செய்யும் ஒரு புதிய அதிகாரத்தை வழங்கு
வதாக அமைந்து இருக்கிறது. இந்தத் திருத்தத்தை ஏற்
கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்யும்
அந்தக் கட்டத்திலேயே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
சௌரிராஜன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொல்லி
யிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை மேலும் மேலும் திருத்திக்
கொண்டு போவது நல்லது அல்ல. அதே நேரத்தில் இந்தப்
பிரச்னைகள் ஒட்டுமொத்தமாக கவனித்து ஒரு காம்ரஹென்சிவ்
ஆக்ட், ஒரு ஒருங்கிணைந்த சட்டம் நிறைவேற்றப்படுமானால்,
இதிலே இருக்கும் தவறுகளை, ஓட்டைகளை நாம் அடைக்க
முடியும் என்று தெரிவித்தார். என்னுடைய நினைவில் இருக்கிற
அந்தக் கருத்தை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்
சொல்லிக்கொள்கிறேன். அப்போது மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அந்தக்கருத்தை ஏற்றுக்கொண்டு அப்படி ஒரு சட்டத்
தைக்கொண்டு வருவதாக அறிவித்தார்கள். அப்படி ஒரு
அறிவிப்பு வரும் என்றுதான் இந்த மன்றத்தில் இருப்பவர்களும்
வெளியே இருக்கிற பொதுமக்களும் எதிர்பார்த்தார்கள்.
ஆனால் என்ன காரணத்தாலோ அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை
அமைச்சர் அவர்கள் கொண்டு வரவில்லை. அதற்காக
உள்ளபடியே நான் வருத்தப்படுவதோடு, இப்போதே அப்படிப்
பட்ட ஒரு சட்டம் வரும் என்று அறிவிப்பு தெரிவித்தால்
நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டு இருக்
கிறேன். ஏனெனில் அவ்வப்போது சட்டத்தைத் திருத்துவதை
விட ஒட்டுமொத்தமாக ஒரு சட்டத்தைக்கொண்டு வருவது
எல்லோருக்கும் நல்லது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்று அதிக அளவில்
பணம் புரளுகிற ஒரு அமைப்பாக இருப்பது லாட்டரி சீட்டு,
சாராயக்கடை, அடகுக் கடை ஆகியவைகள் தான். நம்முடைய
மதிப்பிற்குரிய தொழில் அதிபர் நா. மகாலிங்கம் அவர்கள் ஒரு
முறை இது பற்றி புள்ளி விவரத்தோடு குறிப்பிட்டார்கள்.
தேசிய வருமானத்தில் (கிராஸ் நேஷனல் இன்கம்) 20 சத விகிதம்
வட்டிக் கடை மூலமாக, அடகுக் கடைகள் மூலமாகப் புரளுகிறது
என்று சொன்னார்கள். அதை நாம் ஒதுக்கி விடுவதற்கு
இல்லை.



1983 நவம்பர் 18] [திரு. ஜே. எஸ். இராசு]

வட்டிக்கடைகாரர்களும், நிலப்பிரபுக்களும் இன்றைக்கு சமுதாயத்தில் நலிந்த மக்களை, ஏழை எளிய மக்களை எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஏழை எளிய மக்கள் அவர்களிடம் கடன் வாங்குகிறார்கள். அந்த கடனுக்கு 5 வட்டி, 6 வட்டி என்று வட்டிக் கடைக்காரர்கள் வாங்குகிறார்கள். தற்போது திருட்டுப்போன பொருட்களை, முகமூடி திருடர்கள் கொள்ளையடித்த பொருள்களை கூட மார்வாடிகள், வட்டிக்கடைக்காரர்கள்தான் வாங்கியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற சட்டத்தில் அதைத்தடுக்க என்ன ஏற்பாடு இருக்கிறது என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட புதிய பிரச்சனைகளை எல்லாம் கவனத்திற்கொண்டு ஒரு நல்ல, புதிய சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

பொதுவாக ஏழை எளிய மக்கள், சமுதாயத்தில் இருக்கிற நடுத்தர மக்கள் அடகுக்கடைக்கு வட்டிக்கடைக்குப் போகிறார்கள். அரசாங்கத்தின் கணக்குப்படி 61 சதவீத மக்கள் ஏழை எளிய மக்களாக வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்னதைப்போல இந்த மக்கள் பலிவாங்கப் படுகிறார்கள். உறிஞ்சப்படுகிறார்கள். எத்தனையோ சட்டம் போட்டிருக்கிறோம். அப்படி எல்லாம் இருந்தாலும் அதை மீறி காரியங்கள் நடைபெறுகின்றன. இலட்சக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்கள் வட்டிக் கடைக்காரர்களிடம் தங்கள் வாழ்க்கையை ஒப்புவித்திருக்கிறார்கள், பண்டபாத்திரங்களை இழந்திருக்கிறார்கள். ஒருமுறை ஏதாவது ஒரு வட்டிக்கடைக்கு அமைச்சரவர்கள் சென்று பார்த்தால் நிலைமை தெரியும். இரவு பகல் என்று பார்க்காமல் அவர்கள் தொழில் நடத்துகிறார்கள்; நன்றாக கொழுத்து வருகிறார்கள்; மக்களுடைய ஏழ்மையை அடிப்படையாக வைத்து சம்பாதிக்கிறார்கள்.

எனக்கு வந்திருக்கிற தகவல்படி ஒரு விவரத்தைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைப் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் திருநாகேஸ்வரம் சரவணபவன் நிறுவனத்தார் அரசாங்கம் கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்களுக்கு அளித்த சலுகைகளை பொருள்படுத்தாமல் அவர்களுடைய தாலி முதலான பொருள்களை எல்லாம் ஏலத்தில் விட்டு, விற்றார்கள். இத்தகைய தவறுகளை அந்த அடகுக் கடைக்காரர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் இப்படித் தவறு செய்கிறவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதாக, அவர்களிடம் விளக்கம் பெற வாய்ப்பாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது நியாயம் என்று படுகிறது. ஆனால் அவர்களுக்கு உரிமை வழங்குகிற அதிகாரிகள் இதை ஒரு புதிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு தவறு செய்ய ஏதுவாக இருக்கிறது என்று சொன்னால் அமைச்சரவர்கள் தவறாகப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 நவம்பர் 18

கடன் நிவாரணச் சட்டமாக இருந்தாலும், வேறு எந்த சட்டமாக இருந்தாலும், அதை நிறைவேற்றும் போது அதிகார வர்க்கத்தில் எவ்வளவு தவறு நடக்கிறது என்பதை நாம் எண்ணி பார்க்க வேண்டும். ஆர். டி. ஓ. ஆபீசிலும், கலெக்டர் ஆபீசிலும் கடன் நிவாரணச் சட்டத்தின்படி எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். அதைப் போன்று போலீசாருக்கு கூடுதல் அதிகாரம் தருவதும் எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்பதில் நியாயம் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி தற்காலிகமாகச் செய்யக்கூடிய வாய்ப்பைப் பயன் படுத்தி அதிகார வர்க்கம் மேலும் மேலும் பொதுமக்களை மேயாமல் இருக்க வேண்டும். ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். அதையும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைக் குறிப்பிட்டார்கள். ஃபைனான்ஸ் இன்ஸ்டிடியூஷன் மூலமாக அவசர காலத்திற்கு, விவசாயக் காரியங்களுக்கு, வேறு பல காரியங்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. ஆனால் அதைவிட மேலாக பொது மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, சமுதாயத்திலிருக்கிற மற்ற பிரிவினருக்கு கடன் வழங்கும் வகையில், கூட்டுறவுத் துறையிலே அல்லது வேறு வகையிலே கடன் பெறும் வாய்ப்பை அரசாங்கம் செய்து தர வேண்டும். இத்தகைய பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் கருத்திற் கொண்டு, இது சம்பந்தமாக ஒரு புதிய ஒருங்கிணைந்த (காம்பிரஹென்சிவ் ஆக்ட்) சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

(முற்பகல் 10-10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மணிலெண்டர்ஸ் சட்ட சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.



1983 நவம்பர் 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அன்று சுட்டிக் காட்டப்பட்ட சில பிரச்சினைகள் இன்றும் அதே நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றன என்று எடுத்துச் சொல்வதற்கு நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். அன்று மணிலெண்டர்கள் பொறுத்த அளவிலே என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டதோ அதிலும் குறிப்பாக அவர்கள் வாங்கக்கூடிய வட்டி விகிதம் அடகுக் காரர்களுக்கும் பொருந்தும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 60 சதவிகிதம், 70 சதவிகிதம் வட்டி கூட இன்று அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களிடம் கொடுக்கப்படும் பொருள்களைக் கூட அவர்கள் விற்று விட்டு இன்று இது சம்பந்தமாக பல வழக்குகள் காவல் துறையிலே போடப்படுகிற நிலை இருக்கின்றது. ஏழை மக்களைப் பொருத்த அளவிலே மக்களுக்கு சிரமத்தையும், கஷ்டத்தையும் ஏற்படுத்துவதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கனவே கேன்சல் பண்ணுவதற்கு சட்டம் இருக்கிறது. ஆகவே சஸ்பென்ட் பண்ணுவதற்காக திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்று அவர்களை சஸ்பென்ட் பண்ணுவதோ அல்லது கேன்சல் பண்ணுவதோ முக்கியமான பிரச்சினை அல்ல. இந்த அமைப்பையும் இந்த ஏற்பாட்டையும் ஒழித்துக் கட்டுவதற்குள்ள ஒரு நிலையை தமிழக அரசு எடுப்பது தான் ஏழை மக்களைப் பொருத்த அளவிலே, சாதாரண மக்களைப் பொருத்த அளவிலே பயன் அளிக்கும்.

ஏற்கனவே சில உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல இப்போது ஏழை மக்களுக்குக் குறைந்த வட்டியிலே கடன் கிடைப்பதற்கு என்ன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதை தமிழக அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ஏற்கனவே, 'சிட் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இந்தப் பேரவையிலே சொல்லப் பட்டது. அதே போன்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி ஏழை மக்களுக்கும், சாதாரண மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் குறைந்த வட்டியிலே கடன் கிடைக்கும் முறையிலே உள்ள ஸ்தாபனத்தை கொண்டு வருவதற்கு இந்த அரசு சட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுகக வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொளகிறேன.

இன்று அவர்கள் செய்யும் சில தவறுகளுக்காக அவர்களை சஸ்பென்டு செய்வதாலே முடிந்து விடும் பிரச்சினை அல்ல இது. இன்று அடகுக்காரர்களைப் பொறுத்த அளவுக்கு அல்லது வட்டிக் கடைக்காரர்களைப் பொருத்த அளவுக்கு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கும் நிலை மிகவும் மோசமானதாகும்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 நவம்பர் 18

இந்த நேரத்திலே இன்னொன்றையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பல கோவாபரேடிவ் ஸ்தாபனங்கள் பொருத்த வரையில்- அக்ரிகல்சுரல் கோவாபரேடிவ் இன்ஸ்டிட்யூஷன்களைப் பொருத்த வரையில் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கடனை வசூலிப் பதற்கு நடவடிக்கைகள் ஒரு பக்கத்திலே பல ஸ்தாபனங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களிடம் கேட்டால் இந்த ரிசர்வ் வங்கியிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிபந்தனை காரணமாக அல்லது அவர்கள் இந்தப் பணத்தை திருப்பிக் கட்ட வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதற்காக நாங்கள் வசூ லிக்காமல் இருக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்ட நடவடிக்கை களை எடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். செக்ஷன் 65-ன் படி, கடன் பெற்றவர்களின் பொருள்களைக் கூட ஜப்தி செய் யக்கூடிய நிலை சில இடங்களில் இருக்கின்றது. இதன் காரண மாக அந்த ஏழை மக்கள் அவர்களுடைய பொருள்களை காப் பாற்றிக் கொள்வதற்கு வட்டிக் கடைக்காரர்கள் அல்லது அடகுக் கடைக்காரர்களிடம் போய் பணத்தைப் பெற்று அதிகமான வட்டிக்குப் பெற்று இன்று அந்த கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கக்கூடிய துரதிருஷ்ட வசமான நிலை ஏற்பட்டிருக் கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இன்று அடகுக் கடைக்காரர்களுக்கு அல்லது வட்டிக் கடைக்காரர்களுக்கு இப்படிப்பட்ட சில அரசு ஸ்தாபனங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் நிலையை உருவாக்குகின்றது என்பது துரதிருஷ்ட வசமான பிரச்சினை. ஆகவே இந்த தமிழகத்து மக்களைப் பொருத்த வரையில் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு, ஏற் கனவே குறிப்பிட்டதைப் போல, சிட் கார்ப்பரேஷன் போன்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, குறைந்த வட்டியிலே மக்களுக்கு கடன் கொடுக்கும் அமைப்பாக உருவாக்குவதற்கு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச் சினைக்குத் தீர்வாக இருக்குமே தவிர, இப்படி கேன்சல் பண்ணு அல்லது சஸ்பென்ட் பண்ணுவதாகவதோ சரியான தீர்ப்பாகஇருக்க முடியாது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் அது ஏழை மக்களுக்குப் பயன் அளிக்குமா என்பதில் நியாயமான சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே இந்த முறையிலே ஒரு காம்ப்ரஹென்சிவ் சட்டத்தைக் கொண்டு வருவதற்கும், குறைந்த வட்டியிலே கடன் கொடுக்கும் முறையிலே ஒரு ஸ்தாபனத்தை அரசு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



1983 நவம்பர் 18]

திரு. செ. சிவசாமி ; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்திலே ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு நன்மை செய்யும் முறையிலே இந்தச் சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லப் படுகிறது. ஆனால் நடைமுறையில் பார்த்தோமானால் ஏழை எளியவர்களை ஒதுக்கிவிட்டு, வட்டிக் கடைக்காரர்களுக்குச் சலுகைகள் அளிக்கும் வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலே நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒட்டு மொத்த மாகப் பார்த்தால், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்து. அதாவது 24-8-1982 ஆம் நாளி லிருந்து 18 திங்கள் வரை காலத்தை நீட்டிக்க முடிவு செய்யப் பட்டு இருக்கிறது. அதாவது 84 பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி வரை இந்தச் சட்டம் நீட்டிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதற்குப் பின்னால் என்ன என்றும் ஒன்றும் புரியவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தற் காலிகத் தலைவர் அவர்களே, இது அடகுக் கடைக்காரர்கள் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடன் நிவாரணச் சட்டத்தைப் பற்றி கருத்துக் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அடகுக் கடைக் காரர்கள் என்று அவர்கள் நிரூபிப்பது இப்போது தாசில்தார் பொறுப்பிலே வந்திருக்கிறது. அந்த அடகுக் கடைக்காரர்கள் அந்த தாசில்தாரை நேரடியாகச் சென்று பார்த்து விடுகிறார் கள். அப்படிப் பார்த்து நேரடியாகவே அனுமதி பெற்றுவிடு கிறார்கள். அதனால் ஏழை எளியவர்களுக்கு பாதகமான நிலை யில் தாசில்தார்கள் முடிவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை நடைமுறையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு). மனுக்களைப் பொறுத்த அளவிலே ஆயிரக்கணக் கான மனுக்கள் இன்றைக்கு பெண்டிங்காக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே லைசென்ஸ் கொடுப்பதில் அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்றும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டு மென்றும் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியதைப் போல ஒருவருக்கு அடகுக் கடைக்காரருக்கு, பான் புரோக்கருக்கு, அந்தத் தொழில் நடத்த உரிமம் வழங்கிய பின்னர், அவர் சட்ட விதிகளை மீறி, தவறு இழைக்கின்ற போது, அதிகபபடியான வட்டிக்கு கடனைக் கொடுத்து, அப்படிக் கொடுக்கின்ற போது அந்தத் தொகையில் வட்டியை முன்னரே பிடித்துக் கொண்டு, கொடுத்து அதே நேரத்தில் எழுதுகிறபோது, 12 சதவீதம் வட்டிதான் என்று எழுதி, உண்மையிலே கொடுப்பது, கழிப்பது 36 சதவீதம், 42 சதவீதம் என்றெல்லாம் கழித்து, சில நேரங்களிலே அந்த அடகு வைக்கின்ற ஏழை எளியவர்கள், அந்த அடகு வைத்த பொருள்களை காலத்தே திரும்பப் பெற முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றபோது, அவர்களுக்கு பரிவு காட்டாமல் கால நீட்டிப்பும தராமல் அந்த அடகுப் பொருட்களை எல்லாம் ஏலம் விடுகின்ற ஒரு நிலை அவர்களை இன்னல்களுக்கு உள்ளாக்குகின்ற நிலை, இவற்றை எல்லாம் அடகுக் கடைக்காரர்கள் கடைப்பிடிக்கின்ற தகவல்கள் அரசுக்கு வந்த காரணத்தால்தான் ஏற்கனவே நாம் இதற்கு ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று முடிவிற்கு வந்தோம். காரணம், இருக்கின்ற சட்டத்தில் எடுத்த எடுப்பிலே அவர்களுடைய உரிமைகள் ரத்து செய்ய மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது. ரத்து செய்வது என்பது அப்படி சட்டத்திலே இருந்த போதிலும் கூட reasonable opportunities must be given to the other side என்பது நியதியாக, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பாக இருக்கிறது. அப்படி இருக்கின்ற நேரத்திலே ரீசனபிள் ஆப்பர்ச்சுனிட்டி கொடுத்து, நீ குற்றம் இழைத்து இருக்கிறாயா? என்பதை எல்லாம் தெரிந்து அது நிருபிக்கப்பட்டு, பிறகு அவர்களுக்கு அந்த உரிமத்தை ரத்து செய்வது, இடையிலே அவர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று தடைகளைப் பெறுவது என்ற நிலைகளை எல்லாம் அவர்கள் கடைப்பிடிக்கின்ற காரணத்தால், பல நேரங்களில் ஒரு தவறை, ஒரு ஏழை சுட்டிக் காட்டி அரசு நடவடிக்கை எடுத்தாலும் கூட சட்டத்திலே இருக்கிற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, அந்த அடகுக் கடைக்காரர்கள், 2 ஆண்டு, 3 ஆண்டு, 4 ஆண்டுகள் கூட தண்டனை பெறுவதிலேயிருந்து தப்பித்து, ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சுகிற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.





(முற்பகல் 10-20)

இவற்றையெல்லாம் கண்ட காரணத்தினால்தான் குற்றம் என்று தெரிகிறபோது, எடுத்தவுடன் தற்காலிகமாக அவர்களுடைய உரிமத்தை ரத்து செய்து, தொடர்ந்து இந்த தவறுகளை மற்ற ஏழைகளுக்கு அவர்கள் அளிக்காமல் இருக்கக்கூடிய நிலைமையை உருவாக்கி, விசாரணையில் வைத்து, விசாரணையின் அடிப்படையில் பிறகு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற முறையிலே இந்த திருத்தத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. மணி லெண்டர்ஸ் ஆக்ட் என்று சொல்லக்கூடிய, வட்டிக் கடைக்காரர்கள் சட்டத்தில், ஏற்கெனவே இந்த திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதை ஒட்டிய திருத்தத்தையே தற்போது அடகு கடைக்காரர்கள் சட்டத்திற்கும் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, காம்பிரஹென்சிவ் ஆக்ட் என்று சொல்லக்கூடிய, திருத்தங்களைக் கொண்டு வந்தால் நல்லது. அப்படி ஏழைகளுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவேன் என்ற ஒரு உறுதிமொழியை முன்பே நான் இந்த அவைக்கு அளித்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த உறுதிமொழியை நான் அளித்த நேரம், இந்தச் சட்டத் திருத்தத்தை கொண்டு வர அரசு முயற்சி செய்த நேரம். அந்த அடிப்படையில் நான் ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மைய அரசினுடைய அனுமதி அதற்கு வரவேண்டியிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. காரணம், தற்போது தமிழகத்தில் நாம் கேள்விப்படுகிறோம். அடகுக் கடைக்காரர்களும், பான் புரோக்கர்களும், நகைகள் போன்ற பொருள்களையெல்லாம் அடகுக்கு எடுத்துக்கொண்டு லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்களோடு பல நேரங்களில் தமிழகத்தை விட்டே ஓடிவிடுவதும், அவர்களை தேடிப் பிடித்து கண்டு பிடிப்பது என்பது குதிரைக் கொம்பாக இருப்பதும் கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

அதுபோன்ற கடுமையான கொடிய தவறுகளை, அதுவும் குறிப்பாக, ஏழை எளியவர்களுக்கு பாதகமான தவறுகளை அளிக்கின்ற இந்த பான் புரோக்கர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்க, அதற்கான திருத்தங்களை இந்தப் புதிய சட்டத்திலே கொண்டு வர இருக்கிறோம். அது மட்டும் அல்லாமல்,

Insisting on the production of photograph, finger prints specimen writings along with the application for licence என்று இவைகளையெல்லாம் தற்போது புதிய சட்டத்திலே நாம் கொண்டு வருகிறோம்.

[திரு. சி. பொன்னையன்] [1983 நவம்பர் 18

அதுமட்டுமல்லாமல், ஒருவருக்கு இந்தத் தொழிலைச் செய்ய உரிமங்கள் வழங்கப்படுமானால், இரண்டு தெரிந்த resp ctable பெர்சன்ஸ்ஸினுடைய கேரண்டி இருக்க வேண்டும் என்றும் ஒரு புதிய விதியை இந்தச் சட்டத்திலே கொண்டு வருகிறோம். பான் புரோக்கர்ஸ்ஸுடைய இந்த கணக்கு வழக்குகளை எல்லாம் முறையாக Vouch செய்யக் கூடிய முறையில் வழிமுறைகள் சட்டத்திலே போதிய அளவுக்கு இல்லை. அப்படிப்பட்ட திருத்தத்தை கொண்டு வரவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சில நேரங்களில், அவர்களுக்கு எந்த அள வுக்கு சொத்து இருக்கிறதோ, பணம் இருக்கிறதோ, அந்தப் பண மதிப்பீட்டுக்கு மேல் அவர்கள் தொழிலில் ஈடுபடுகிறபோது, கடனை வாங்கிக் கடன் கொடுக்கிறார்கள். பிறகு பொருள் களை எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறார்கள் என்ற குற்றச் சாட்டு வந்திருக்கிற காரணத்தால், குறிப்பிட்ட அளவுக்கு அவர் கள் பாங்க் டெபாசிட் கட்ட வேண்டும் என்ற விதிமுறைகளையும்; அதே போல அவர்களுடைய பைனான்சியல் லிமிடட்டுக்கு மேல் அவர்கள் எந்த ஒரு தொழிலிலும் ஈடுபடக் கூடாது என்ற விதிமுறையையும் புதிய சட்டத்திலே கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று சொல்லி; இருக்கிற சட்டத்திலே, தவறு செய்வார்களேயானால், உடனடியாக அவர்களுடைய இடத்திற்குச் சென்று பிடித்து, அங்கேயிருக்கும், புஸ்தகங்கள் மற்ற பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கக் கூடிய வகையில், போதிய வழி வகைகள் இல்லாத காரணத்தால், அதைப் பயன்படுத்தி அவர்கள் தப்பித்துவிடுகிறார்கள்.

அதற்காகக் கூட தக்க சட்டத் திருத்தத்தை நாம் கொண்டு வர இருக்கிறோம். அதை விட மிக முக்கியமானது ; அவர்கள் ஏழை எளியவர்களுக்கு கடன் கொடுக்கிறபோது, பொருள்களின் மீது, ஆயிரம் ரூபாய் 2 ஆயிரம் ரூபாய் என்று வட்டிக்கு தருகி றார்கள். ஆனால் அந்த வட்டியை முன் கூட்டியே பிடித்துக் கொண்டு, அதுவும் மிகவும் அதிகமாக வட்டி வைத்து 36 சதவீதம் 48 சதவீதம் என்று வைத்து; அதை முன்கூட்டியே அவர்களிட மிருந்து பிடித்துக் கொண்டு, மீதிப் பணத்தை அவர்களுக்கு கொடுத்து, அதிலும் மாதா மாதம் வட்டி வாங்கக்கூடிய நிலை இருக்கிறது.



1983 நவம்பர் 18] [திரு. சி. பொன்னையன்]

ஆகவே, வட்டிக்கு வைத்த நகைகளை அந்த ஏழை எளியவர் வர்கள் எந்தக் காலத்திலுமே, மீட்க முடியாத அளவுக்கு அவர்கள் செயலாற்றி வருவதை தடுக்க, அதற்காக அவர்களை எந்த நேரத்தில், எந்த இடத்திலே சென்று சோதனை செய்தாலும் சோதனை செய்கிற நேரத்தில் அதிகப்படியான பணம் 1 ரூபாய் இருந்தாலும் கூட அது குற்றமாகக் கருதப்படும். காரணம், உரிய வட்டிக்கு மேல் வசூலித்த பணம் தான் அங்கே அதிகமாக இருக்கிறது என்று கருதப்படுகிற முறையிலேகூட சட்டத்திலே நாம் திருத்தங்களைக் கொண்டு வர இருக்கிறோம். அது மட்டு மல்ல, இப்படி ஏழை எளியவர்களின் பொருள்களுக்கு பாதகமான தவறுகளை இழைக்கின்ற அந்த பான் புரோக்கர்ஸ் என்று சொல்லப்படுபவர்கள் மீது சிறைத் தண்டனை நடவடிக்கையை கிரிமினல் அஃபென்ஸ் ஆக எடுக்கின்ற வழி முறைகள் தற்போ துள்ள சட்டத்திலே இல்லை. அப்படி குறைந்த பட்ச சிறைக் கால தண்டனையைக் கூட விதிக்க வழி இருக்குமானால், ஏழை களுக்கு நலமாகும் என்ற அந்தக் கருத்தைக் கொண்டு Comprehen- sive legislation என்று கொண்டு வந்திருக்கிறோம். அதில் மைய அரசினுடைய ஒப்புதலுக்காக நாம் காத்திருக்கி றோம். விரைவிலே அதைப் பெற்று புதிய ஒரு சட்டத்தை நடைமுறை படுத்த இருக்கிறோம் என்பதை அவைக்கு தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏழைகளுக்கு கடன் தாராளமாக வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். அது ஏற்கனவே கடந்த 5 ஆண்டுக் காலமாகவே, தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள், வங்கிகள் மூலமாக ஏழை மக்களுக்காக நகைகளின் மீது அளிக்கப்பட்டு வந்த கடன் 47 கோடி ரூபாய் என்ற அளவிலேதான் இருந்தது. ஆனால் ஏழைகள் இப்படி வட்டிக் கடைக்காரர்களிடமோ, அல்லது பான் புரோக்கர்ஸ் இடமோ சென்று அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக்கூடாது என் பதற்காக , கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக ஏழை எளியவர் களுக்கு அதிகமாக பணம் தர வேண்டும் என்று உத்தரவை இட்டதன் காரணமாக 47 கோடி ரூபாய் என்று நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் இருந்த நிலைமை மாறி, 170 கோடி ரூபாய் அளவுக்கு ஏழை எளியவர்களுக்கு நகைகளின் மீது கடன் கொடுக்க நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு, நடை முறையில் இருந்து வருகிறது என்பதையும் சொல்லி, ரிசர்வ் பாங்க் ரீ-பைனான்ஸ் பெசிலிடீஸ் தருவதில்லை. ஆனால் அந்த நகைகளை வைத்துக் கொண்டு ரீ-பைனான்ஸ் பெசிலிடீஸ்களை தமிழ்நாடு ஸ்டேட் கோவாப்பரேடிவ் பாங்க் தர வேண்டும் என்று அதற்கான அனுமதியை ரிசர்வ் வங்கியிடம் கேட்டு வருகிறோம்.

ரிசர்வ் வங்கியும், மைய அரசும் அதற்கு இணங்காமல் இருக்கின்றார்கள். நாம் மிக மிக வற்புறுத்தி வருகிறோம். ஆல் இண்டியா லெவலில் ஒரு பாலிசி டெசிஷன் எடுக்கவேண்டுமென்று மைய அரசு தெரிவித்து இருக்கிறார்கள். ரீபைனான்ஸிங் பெசிலிடீஸ் வருகிறபோது நகைக் கடன் 170 கோடி ரூபாய்க்கு தரப்படுகிற நிலையை பல கோடி ரூபாய் இன்னும் உயர்த்தக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி இச்சட்ட முன்வடிவை அவை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ''.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

''பிரிவு-1, உட்பிரிவு-(1)-ல் காணப்படும் '' 1982 '' என்ற எண்களுக்குப் பதிலாக, '' 1983 '' என்ற எண்கள் அமைத்துக் கொள்ளப்படவேண்டும். ''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.





முகப்புரை

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

'' முகப்புரை சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் .''

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

'' சட்டமியற்றுவதற்கான விதிமுறையில் காணப்படும் ' முப்பத்து மூன்றாம் ' என்ற சொல்லுக்குப் பதிலாக, ' முப்பத்து நான்காம் ' என்ற சொல் அமைத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/1982) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன் தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/1983) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983.**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள்
(நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு (சட்ட
எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் ''. முன்வடிவு எண் 1/1983) *ஆய்வுக்கு

நில உச்சவரம்புச் சட்டத்தினால் நிலங்களை எடுக்கிறபோது
அதைக் தொடர்ந்து, பல நீதிமன்றங்கள் இருப்பதால் நிலம்
எடுப்பதிலே காலதாமதம் ஆகிறது. அப்படிக் காலதாமதம்
ஆகாமல் அதை விரைவுபடுத்த வேண்டுமென்பதற்காக அரசியல்
அமைப்புச் சட்டப் பிரிவு 323(பி) இரண்டாவது விதியின்கீழ்;
எழுகிற தகராறுகள், இழைக்கப்பட்ட குற்றங்கள், செய்யப்படும்
புகார்கள், குறித்து நடுவர் மன்றங்களுக்கு விடவேண்டும் என்று
அவை விசாரிக்க வேண்டுமென்று 1976ஆம் ஆண்டு இந்திய
அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு செய்த 42வது திருத்தச் சட்டப்
படி கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

இப்படி இதை நடுவர் மன்றத்திற்கு கொண்டு வர வேண்டு
மென்று இதை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்று நில
உச்சவரம்பை அமுல் படுத்துவதில், உபரி நிலங்களை எடுப்பதில்
தாமதம் ஆகிறது இதை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் இந்திய
அரசின் 20 அம்ச திட்டத்தில் இதுவும் ஒன்றாக இருப்பதாலும்
இதை செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சருக்கு கூட இந்திய
துணைக்கண்டத்தினுடைய வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்கள் 22-10-1981 ஆம் தேதி அன்றும், அதற்குப் பிறகு
11-2-1982 ஆம் தேதி அன்றும் இப்படி கடிதங்களை எழுதி
இதை தீவிரப்படுத்த வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள்
என்ற காரணத்தினால் இப்படி இது கொண்டு வரப்பட்டு
இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்
றைக்கு இருக்கிறபடி ஒரு வழக்கு விசாரணை நடக்கும்போது
இதிலே பல தாமதங்கள் ஆகிறது. அதிலே ஆதரைஸ்டு ஆபீஸர்
இருக்கிறார்கள் அங்கே வழக்கு நடைபெறுகிறது. பிறகு லேண்டு
டிரிபுயூனல் டி.ஆர்.ஓ. லெவிலில் வழக்கு நடைபெறுகிறது. பிறகு
ஹைக்கோர்ட்டுக்கு போகிறது. இப்படி 3 கோர்ட்டுகளுக்குப்

*1983ஆம் ஆண்டு சனவரி 27-ந் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



போகிற போது இதனால் வழக்குகளின் தீர்ப்புகள் ரொம்ப தாமதம் ஆகிறது என்பதாலும் இன்றைக்கு ஏறக் குறைய 536 வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் இருப்பதாலும் அவைகளை எல்லாம் சரி செய்வதற்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இந்திய பேரரசு இதை 42 ஆவது அரசியல் சட்ட பிரிவின்படி விரைவு படுத்த வேண்டும் என்று எழுதியதாலும் இப்படி வழக்குகள் 500-க்கு மேல் இங்கே உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும் இது மாதிரியாக நில சீர்திருத்தச் சட்டத்திலே நிலங்களை எடுத்து மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதாலும் இந்த நடுவர் நீதி மன்றம் அமைப்பதற்கு இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நில சீர்திருத்த சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்த நில சீர்திருத்த மேல் முறையீட்டு நடுவர் மன்றம் அமைப்பதை முதலாவதாக நாங்கள் எதிர்க்கிறோம். தற்போது இருக்கின்ற அமைப்பின் படி ஆத்தரைஸ்டு ஆபீஸர், டிரிபியூனல், ஹைக் கோர்ட் ஆகிய அமைப்புகள் தற்போது நடைமுறையில் இருக்கிறது. தற்போது இங்கே கொண்டு வந்துள்ள இந்த சட்ட திருத்தத்தின் படி ரிட் மனு தாக்கல் செய்ய முடியாது. உயர் நீதிமன்றத்திற்கு செல்ல முடியாது. எந்த நீதிமன்றத்திலும், விசாரணை செய்ய முடியாது. இந்த நடுவர் மன்றம் எடுக்கின்ற முடிவு தான் இறுதியான முடிவு என்பதை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும். தற்போது நாம் எவ்வளவோ சட்டங்களை உருவாக்குகிறோம். நடைமுறைப்படுத்துகின்ற போது ஏராளமான தவறுகள் நடைபெறுகின்றன. தற்போது நீதிமன்றங்கள் தான் பொதுமக்களுக்கு ஒரு பாதுகாப்பான அமைப்பாக இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்தின் படி நீதி மன்றத்திற்கு போகவே முடியாத ஒரு நிலைமை இருப்பதால் நாங்கள் இதை முதலாவதாக எதிர்க்கிறோம்.

[திரு. செ. இராமலிங்கம்]



அதேபோல் தற்போது நில சீர்திருத்த சட்டங்களை அமல்படுத்துகிறபோது ஆத்தரைஸ்டு ஆபீஸர்கள் எல்லா மாவட்டங்களிலும் தற்போது பணியில் இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக கிடையாது. பல மாவட்டங்களில் அந்த ஆத்தரைஸ்டு ஆபீஸர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு ஆண்டு காலமாக அந்த ஆத்தரைஸ்டு ஆபீஸர் பதவி காலியாக இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற ஆத்தரைஸ்டு ஆபீஸர் பொறுப்பு அதிகாரியாக இருக்கிறார்கள். மாதம் 2 முறை கூட அங்கே வருவது இடையாது. ஏராளமான வழக்குகள், ஏராளமான கோப்புகள் தேங்கியிருக்கிற நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் என்னுடைய தொகுதியில் உச்ச நீதிமன்றம் வரை சென்று வந்த ஒரு வழக்கு. அந்த வழக்கின் தீர்ப்பின் படி இன்றைய தினம் வரை அந்த ஆத்தரைஸ்டு ஆபீசர் அதை செயல்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக திருவிடைமருதூர் வட்டத்தில் சாத்தனூர் கிராமத்தில் 10.6 ஏக்கர் நிலம் உபரி நிலமாக ஆத்தரைஸ்டு ஆபீசரால் எடுக்கப்பட்டதை மேல் அமைப்புக்கு முறையீடு செய்யப்பட்டு அப்பீல் செய்யப்பட்டு சுப்ரீம் கோர்ட் வரை சென்று தீர்ப்பு வழங்கியும் இன்றைய திலம் வரை அந்தத் தீர்ப்பு அமுல்படுத்தப்படாமல் ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு மேலாக தேங்கி கிடக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதற்காக நீதிமன்றத்தின் கதவை நீங்கள் அடைப்பது என்பது நியாயம் அல்ல என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று இதைத் துரிதப்படுத்துவதற்காக, வேண்டுமென்றால் நீங்கள் ஒரு கூடுதல் நீதிபதியை உச்ச நீதிமன்றத்திலே நியமிக்கலாம். ஒரு தனி பிரிவை ஏற்படுத்தலாமே ஒழிய அதற்காக உயர் நீதிமன்றத்திற்கே செல்லக் கூடாது என்கிற வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததை நான் முதலாவதாக எதிர்க்கின்றேன்.

ரெவினியூ போர்டை நாம் கலைத்திருந்துங்கூட, கொஞ்சம் கொஞ்சமாக அதற்கு உயிர் ஊட்டுகிற வகையிலேதான் அந்த அமைப்பை ஏற்படுத்துவதாக நான் கருதுகிறேன். மறு விசாரணை செய்யும் அதிகாரம் உயர்நீதி மன்றத்திற்கு இருப்பதற்குப் பதிலாக, மேல் முறையீடு உயர்நீதிமன்றத்திற்குச் செல்வதற்குப் பதிலாக, தற்போதைய இந்த நடுவர் நீதிமன்றமே இறுதியான தீர்ப்பு வழங்கலாம் என்று கூறுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறி, தி.மு. கழகத்தின் சார்பில் இந்த எதிர்ப்பை நான் தெரிவிக்கிறேன்.



திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய, உயர்நீதிமன்றங்கள் விசாரிக்கக்கூடிய அந்த வழக்குகள் எல்லாம், தனி நடுவர் நீதிமன்றத்திற்கு விடுவதற்கான இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். இப்பொழுது 500-க்கு மேற்பட்ட வழக்குகள் தேங்கியிருப்பதாகவும், அவற்றையெல்லாம் விரைவாக முடித்து, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் காரியத்தைச் செய்வதற்கான ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்பதோடு, இப்படி இந்தச் சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் விவசாயத் தொழிலாளிகளுக்கு, நிலத்தை வழங்க முடிகிறதா என்றால் முடியாத காரியமாகத்தான் இருக்கிறது. ஏறத்தாழ 20 ஆண்டு காலமாக பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் வந்தும் அந்தச் சட்டங்களின் மூலம் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக் கூடிய 1½ கோடி ஏக்கர் விளை நிலங்களில், ஏறத்தாழ 3/4 இலட்சம் ஏக்கர் நிலங்கள்தான் எடுத்துக் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். விவசாயத் தொழிலாளிகளுக்கும், கிராமத்திலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் நிலம் வழங்க முடியுமா என்றால் முடியாது. எனவே, இந்தச் சட்டங்கள் பூராவையும் திருத்தி, ஒரு ஒருங்கிணைந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அரசு விரைவாகக் கொண்டு வர வேண்டும்.

குறிப்பாக இன்று இருக்கிற சட்டத்தில், நிலத்திற்கு ஸ்டான்டர்ட் ஏக்கர் என்ற கணக்கு சொல்லப்படுகிறது. 1 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொல்கிறபொழுது ரூ. 10 வரையிலும் கிஸ்தி கட்டுகிற நிலம் ஒரு ஸ்டான்டர்ட் ஏக்கராகக் கணக்கிடப்படுகிற காரணத்தால், குறிப்பாக எங்கள் தஞ்சை மாவட்டத்திலே, எங்களுடைய கிராமத்திலே, 4½ மா நிலத்தை ஒரு ஏக்கர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப்படி கணக்கிட்டிருப்பதால் ஒரு குடும்பம் 60 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இந்தச் சட்டத்திலே இருக்கிறது. எனவேதான் இந்தச் சட்டத்தை உடனடியாக திருத்த வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

அது மட்டுமல்ல, சட்டத்திலே பலவித விதிவிலக்குகளைக் கொடுத்திருப்பதன் மூலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை அறக்கட்டளைகள் மூலமாகவும் தர்ம ஸ்தாபனங்கள் மூலமாகவும் வைத்துக் கொண்டு அவர்களே, நிலப் பிரபுக்களே எம்.டி.-க்களாக இருந்துக் கொண்டு நாட்டில் ஏழை, எளிய விவசாயிகளை, எளிய மக்களை, தொழிலாளிகளை வஞ்சிக்கக் கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம். எனவே, கோயில், மட, தர்ம ஸ்தாபனங்களுக்கு இருக்கிற விதி விலக்கை ரத்து செய்ய வேண்டும்.

[திரு. எம். செல்லமுத்து] [1983 நவம்பர் 18

இதற்கு முன்னால் இருந்த சட்டத்தில் ஒரு தொழிற்சாலை
என்று ஏராளமான நிலங்களை வேலிக் கம்பி போட்டுக் கொண்
டிருந்தால்கூட விதிவிலக்கு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது
பாக்குத் தோட்டம், பழத் தோட்டம், ரப்பர் தோட்டம் என்றும்
காடுகள் என்றும் பல்வேறு விதிவிலக்குகளைக் கொடுத்து, இன்
றைக்கு அந்த நிலச் சீர்திருத்தங்களினுடைய நோக்கமே நிறை
வேறாத அளவுக்கு தமிழகத்திலே நிலச் சீர்திருத்தம்
தோல்வியுற்றிருக்கக்கூடிய நிலையிலே, மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுதெல்லாம் உழு
பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம் என்று சொல்கிறார்
கள். அ.தி.மு.க. அரசு வந்து 6 ஆண்டுக் காலமாகியும் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற சட்டத்தின் மூலம் புதிதாக நிலம் எடுப்ப
தற்குத் திட்டம் இல்லை. பல திருத்தங்கள் கொண்டு
வருகிறோமே தவிர, உள்ளபடியே நிலத்தைச் சொந்த மாக்கும்
சட்டத்தைக் கொண்டு வர விரிவான, விரைவான ஏற்
பாட்டைச் செய்ய வேண்டும்.

பினாமிகளை எடுப்பதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு
மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருந்தாலும் அந்தச் சட்டத்தை
மத்திய அரசு திருப்பி அனுப்பிவிட்டது. அந்தச் சட்டதைக்
இந்த சட்டமன்றத்தில் மீண்டும் கொண்டு வருவேன் என்று
அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் கூற்றுப்படி அதை
கொண்டு வரவில்லை.

(முற்பகல் 10-40)

தேர்தல் வருமென்று சொல்கிறார்கள். அடுத்து நிலைமை
எப்படி மாறுமோ தெரியாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய ஏழை, எளிய மக்கள்,
தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிலம் வழங்குகிற முறை
யிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாக கொண்டு
வந்து, தமிழ் நாட்டிலே இருக்கிற நில பிரபுத்துவத்தை ஒழிப்
பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்தச்
சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.



1983 நவம்பர் 18] [திரு. தி. கா. நல்லப்பன்]

துணை நீதி மன்றங்களில் இருக்கிற வழக்குகள் முடியவில்லையென்றும், 534 வழக்குகள் நிலுவையில் இருக்கிறதென்றும், கூறி மாவட்ட வருவாய் அதிகாரியோடு கூடிய நில நடுவர் மன்றத்திற்கு மாற்றுதலாக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இதே சட்ட மன்றத்திலே நிலங்கள் குவியலாக இருக்கக் கூடாது, அவை உழுபவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டு, பரவலாக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அன்றைய தினம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திலே ஓட்டை, உடைசல்கள் இருக்கிற காரணத்தால மீண்டும் அந்தச் சட்டம், திருத்தத்தோடு சட்ட மன்றத்திலே நிறை வேறி இருக்கிறது. இன்றைய தினம் கூட இந்தச் சட்டத் திருத்தத்திலே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒன்றரை கோடி ஏக்கர் நிலம் இருந்தாலும், அவை முறையாக உழுபவர்களுக்கு சொந்தமாக்கப்படவில்லை என்பதற்காகத் தான் இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் கொண்டு வந்திருக்கிற திருத்தச் சட்டம், நீதி மன்றங்களில் வழக்குகள் இருப்பதை மாற்றி, பினாமிகளாக மாற்றப்பட்டு இந்த நிலம் நிலப் பிரபுக்களிடம் இருப்பதை மாற்றி, உடனடியாக உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற யோசனையோடு, அதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டு நான் இந்த சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு 1983 ஆம் ஆண்டு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்ததை நான் வரவேற்கிறேன். அமைச்சர் அவர்கள் முன்பு கூட பினாமி நிலச் சட்டம் கொண்டு வந்தார்கள். அது நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மத்திய அரசிலிருந்து திரும்ப வந்தது என்று சொன்னார்கள். அதில் ஏதாவது குறைகள் இருந்தாலும் அல்லது மத்திய அரசு மாநில அரசோடு தொடர்பு கொண்டு, இப்படிப்பட்ட முறையிலே தான் இது வர வேண்டுமென்று சொல்லியிருந்தாலும் சரி, அதைத் திரும்பவும் கொண்டு வருகிறேன் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள். செல்கிற இடங்களில் எல்லாம் கூட அதைக் கொண்டு வருவேன் என்று அவர்கள் கூறுகிறார்கள். நிச்சயமாகக் கொண்டு வருவார். 1948 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தில் மத்திய அரசு ஒரு நிலைமையை உருவாக்கியது.

[திரு. எல். இளையபெருமாள்] [1983 நவம்பர் 18

அதன் பிறகு காமராசர் அவர்கள் காலத்தில் இந்தச் சட்டம்
கொண்டு வருகிறேன் என்று கூறி—இதை ஒரு விளக்கத்திற்காக
சொல்கிறேன்—ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர்கள் என்று சொன்
னார்கள். ஒரு குடும்பம் என்றால் குறைந்த பட்சம் 5 பேர்கள்
இருப்பார்கள் என்ற அளவிலே கொண்டு வந்தார்கள். அதை
15 ஏக்கர்களாக குறைக்கிறோம் என்று அடுத்து வந்த அரசாங்கம்
சொன்னார்கள். ஆனால் என்ன இருந்தது என்று கேட்டால்
ஒரு தனி நபர் ஒரு குடும்பத்தில் வைத்துக் கொள்ளலாம் என்கிற
போது, குறைந்த பட்சம் அந்தக் குடும்பத்தில் 5 பேர்கள் என்று
வைத்துக் கொண்டாலும் 75 ஏக்கர்கள் வருகிற நிலைமை இருக்
கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம் இப்போது 10 ஏக்கர்
என்று சொல்லி, ஒரு குடும்பம் என்றால் 10 பேர்கள் என்று
வைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு பாவமான காரியத்திற்கு
போகக் கூடாது என்று கருதுகிறேன். விவசாயிகளுக்கும், தொழி
லாளர்களுக்கும், நிலமற்றவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டு
மென்று இந்த அரசாங்கம் கருதும் என்பதிலே எனக்கு எந்த
விதமான ஆட்சேபணையும் கிடையாது; சந்தேகமும் இல்லை.
இந்த சட்டத்தை வரவேற்க கடமைப் பட்டிருக்கிறேன். அதே
சமயத்தில் பழத்தோட்டம் என்ற பெயரால், பாக்குத் தோட்டம்
என்ற பெயரால், மேய்ச்சல் தரை என்ற பெயரால் பெரிய நிலச்
சுவான்தார்கள், எப்போதுமே நிலச் சுவான்தார்கள் எந்த
அரசாங்கம் வந்தாலும், எந்த முதலமைச்சர் வந்தாலும், அவர்
களுக்கு மாலை போட்டு, அவர்களோடு அன்றாடம் பேசுவதைப்
போல நடித்து, அல்லது முதலமைச்சர் அவர்களை தன் பக்கத்
திலே வைத்துக் கொண்டு தன் வீட்டிலே விருந்தோ, அல்லது
கூட்டமோ வைத்து, அங்கே வருகிற ரெவின்யூ அதிகாரிகளை,
போலீஸ் அதிகாரிகளை தன் வயப்படுத்தும் பாவமான காரியம்
சுதந்திரத்திற்குப் பின்னால் எல்லா ஆட்சிக் காலங்களிலும் நடந்து
கொண்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அதில் ஏமாற மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நிலச் சீர்திருத்தம்
என்ற பெயரில் மேய்ச்சல் தரை என்ற வகையில் சேலம் மாவட்ட
மாக இருந்தாலும், கோயம்புத்தூர் மாவட்டமாக இருந்தாலும்,
தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் இப்படி எங்கே இருந்தாலும்
அதற்கு எவ்வளவு தேவை என்பது அனுபவ ரீதியாகப் பார்த்தால்
தெரியும். எனவே, மேய்ச்சல் தரை என்றும், பழத் தோட்டம்
என்றும், வெற்றிலைக் கொடிக்கால் என்றும் ஏமாற்றும் வகையில்
அனுமதிக்கக் கூடாது. அந்தந்தச் சமயங்களில் சட்டங்களை
வளைத்து வளைந்து, சட்டம் என்றும், சட்டத் திருத்தம் என்
றும், சட்டத் திருத்தத்திற்கு இன்னொரு திருத்தம் என்று இப்படி
யெல்லாம் வருகின்ற நேரத்தில் இவையெல்லாம் அட்மினிஸ்ட்
ரேஷனுக்கு வசதியாக இருக்கும் என்றால் அவைகளை ஏற்றுக்
கொள்ளலாம்.



1983 நவம்பர் 18] [திரு. எல். இளையபெருமாள்]

உதாரணத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவ னத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நகர்ப்புறங் களில் 99 வருடங்களுக்கு லீஸ் என்ற பெயரில் அரசியல் காரணத் திற்காகவும், அதிகார காரணத்திற்காகவும், பணக்காரர்கள் என்ற காரணத்திற்காகவும், மதகாரணத்திற்காகவும் கொடுத்து ஆண்டு ஒரு ரூபாய் வாடகை அல்லது மாதத்திற்கு எட்டணா வாடகை என்றெல்லாம் சொல்லி அரசாங்கத்தின் சொத்தை, பொது மக்களின் சொத்தை அவரவர்கள் காலத்தில் இஷ்டப்படி தவறாகப் பயன் படுத்தும் நிலைமைகள் நடந்திருக்கின்றன. இப் படிப்பட்ட தவறுகளை நாங்கள் செய்ய மாட்டோம் என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் உறுதியாகச் சொல்லியிருக் கிறார்கள். அதில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. அதனால் தான் சொல்கிறேன், நகரமாக இருந்தாலும், கிராமப் புறங் களாக இருந்தாலும் இவைகளுக்கெல்லாம் குழு அமைத்து, அவைகள் எப்படி நடக்கின்றன என்று கண்காணிக்கவேண்டும்.

நீதி மன்றம் கூட சிறு காரணத்தைக் காட்டிச் சொல்கிறார் கள். ஆதி திராவிடர்களுக்காக நிலம் எடுக்கப்பட்டது. டிஸ்ட் ரிக்ட் வெல்பேர் ஆபீசர், அரிசன் வெல்பேர் டைரக்டர், சோஷியல் வெல்பேர் செக்ரட்டரி போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் ஒரேயொரு இடத்தில் அரிசனங்களுக்காக மயானப் பாதை என்று சொல்ல வில்லை. இந்த ஒரே ஒரு வார்த்தை இல்லாததன் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் அறி வோம். நீதி மன்றத்திற்கு நாம் முழுக்க முழுக்கத் தலை வணங்க வேண்டியது தான். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளின் அகலத்தையும், நோக்கத்தையும் அனுபவ ரீதியாக நினைத்துப் பார்க்கின்ற ஒரு நிலைமை இருக்க வேண்டும். அரிசனங்களுக்கு என்று ஒரு சுடுகாடு கிடையாது, ஒரு கோயில் கிடையாது, ஒரு கிணறு கிடையாது என்ற பாவமான நிலைமையைப் போக்க வேண்டும். எனவே, ஒரு குடும்பம் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் 100 ஏக்கர்களை வைத்துக் கொள்ளக்கூடிய நிலைமை உருவாகுமேயானால் அதன் காரணமாக இந்தச் சட் டத்தின் நோக்கமே கெட்டுப் போய் விடும், அது நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் நல்லெண்ணத்தைமய குறைத்து விடும்.

[திரு. எல். இளையபெருமாள்] [1983 நவம்பர் 18

நான் பத்திரிக்கைகளில் பார்க்கிறேன், கோயில், மடங்களுக்கு விதி விலக்கு என்று ஒரு பக்கத்தில் சொல்கிறார்கள், விதி விலக்கு இல்லை என்று இன்னொரு பக்கத்தில் சொல்கிறார்கள். நான் கூட ஒரு மடத்தின் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். சுவாமி சகஜானந்தா அவர்களின் மடம். அந்த மடத்திற்குச் சொந்தமான 85 ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறேன். அவைகளை எடுப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவே நான் இதைச் சொல்கிறேனே தவிர, இதை ரிகார்ட் செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அதில் கல்லூரிகளையும், பாலிடெக்னிக்குகளையும் வையுங்கள். எங்கள் மடத்திற்கு அந்த நிலம் இருப்பதை விட இது நல்ல காரியம். இது போன்றே எல்லா மடாதிபதிகளும் வந்தால் அது நாட்டிற்கும் நல்லது. வியாசர்பாடி மடத்திற்கு பாடியிலுள்ள மடத்திற்கு நிலம் இருக்கிறது. ஒரு வருஷத்திற்கு ஐந்து ரூபாய் என்ற பெயரில், படியாத சந்நியாசியிடம்கையெழுத்து வாங்கி நடந்து கொண்டிருக்கிறது. நல்ல வேளையாக நம்முடைய அறநிலையத் துறை அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட நிலங்களை அவர்களிடமிருந்து எடுக்க வேண்டுமென்ற உறுதிக்கு வந்திருக்கிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் களைவதற்கு உதவி செய்யும் விதத்தில் மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற இருபது அம்சத் திட்டம் அமைந்திருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்கு அது ஒத்தாசையாக இருக்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பை எடுத்துப் படித்துக் காட்டினார்கள், மத்திய அரசின் இருபது அம்சத் திட்டப்படி செய்திருக்கிறோம் என்று.

கேஸ்களைப் பொறுத்தவரையில் 500-க்கும் மேல் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கேஸ்களைத் தீர்ப்பதற்காக நீங்கள் நிச்சயமாக ஸ்பெஷல் கோர்ட்டுகளை மாவட்டத்திற்கு ஒன்றாக அமைக்க வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இளையபெருமாளிடத்தில் நிலம் இருந்தாலும் அந்த நிலத்தில் இளையபெருமாள் உழ முடியாமல் இருந்தால் நிச்சயமாக ஏதாவது ஒரு காம்பன்சேஷனைக் கொடுத்துவிட்டு அந்த நிலத்தை யார் ஏழையோ அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும்.



1983 நவம்பர் 18) [திரு. எல். இளையபெருமாள்]

கோயில், மடங்களின் நிலங்களை எடுத்துக்கொண்டு கோயில், மடங்களை அழிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை, இந்த அரசும் அவ்வாறு சொல்லவில்லை என்றே நான் கருதுகிறேன். கோயில்களில் எத்தனையோ காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. கோயில்களுக்கு வருமானம் கிடைக்கவில்லை.

அரசியலைக் காரணம் காட்டி, அரசாங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு அமைச்சர்களின் மூலமும், மற்றவர்களின் மூலமும் அரசாங்கத்தின் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்கின்ற இப்படிப்பட்ட அவல நிலைமைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

ஒன்றரைக் கோடி ஏக்கர் நிலம் இருக்கிறது என்று ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலங்களை உண்மையிலேயே யார் யார், அதாவது, நிலத்தை நேரடியாக உழுகிறார்களோ அந்த மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதாவது நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கவேண்டும். நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்களுக்குக் கொடுப்பதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. 5 கிராமங்களிலேயும் நிலத்தை வைத்துக்கொண்டு அதுபற்றி எல்லாம் கணக்குக் காட்டாமல் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குக் கொடுப்பது சரியல்ல. ரெவின்யூ ஆஃபீஸர் அல்லது தாசில்தார் வந்து நேரடியாகப் பார்க்காமல். உதாரணமாக, இளையபெருமாள் குத்தகைக்காரர் என்று சொல்வது சரியல்ல. 5 ஏக்கர் நிலம் என்ற வகையில் 8 கிராமங்களிலே வைத்துக்கொண்டு ஆக மொத்தம் 40 ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருப்பவரைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருப்பது ஒரு பாவமான காரியம். அப்படிப்பட்ட பாவமான காரியம் நடக்கின்றது. இதை எல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டு நல்ல நோக்கத்தோடு இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவது என்பது மட்டுமல்லாமல் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று உத்தமர் காந்தி அவர்கள் சொன்ன வாக்கு பலிக்கின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடிக்கிறேன்.

[1983 நவம்பர் 18

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் எல்லோருமே வரவேற்றுப் பேசியதாகத்தான் நான் ஏற்றுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசியவர்களும் நான் கேட்கின்றபோது தலையாட்டுகிறார்கள். எனவே எல்லோருமே வரவேற்றதாகத்தான் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக தவறு செய்து விடக்கூடாது என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். குறிப்பாக திரு. இளையபெருமாள் அவர்கள் முதலமைச்சராக யார் வந்தாலும் மாலைகளைப் போடுகிறார் கள் ; அது பாவமான காரியம் என்று சொன்னார்கள். ஆனால் முதலமைச்சருக்கு மாலை போடுவது பாவமான காரியம் அல்ல. மாலையை வாங்கிக்கொள்வதும் பாவமான காரியம் அல்ல (குறுக்கீடு) ஆனால் ஏமாந்து போனால்தான் தவறு. நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். முதலமைச்சரின் இடது பக்கத்திலே பெரியார் இருக்கிறார். வலது பக்கத்திலே அண்ணா அவர்கள் இருக்கிறார்கள். எனவே அண்ணா வழி நடக்கின்ற அரசு என்றைக்குமே தவறு செய்யாது என்பதை இந்த அரசின் சார்பிலேயும், முதலமைச்சர் சார்பிலேயும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் இப்படி நடந்துவிடுமோ, அப்படி நடந்துவிடுமோ என்றெல்லாம் பயப்படத் தேவையில்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.

1967-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதே அவையிலே நிலச்சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம் அப் போது கொண்டுவரப்பட்டது. அப்போது அண்ணா அவர்கள் உச்சவரம்பா, மிச்சவரம்பா என்று கேட்டார்கள். அப்படிச் சொன்னது நல்ல தமிழ்ச் சொல்லாக ஒரு அழகுக்காகச் சொல்ல வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்கள் அப்படிச் சொல்ல வில்லை. உள்ளதை உள்ளபடி அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்கான காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன். அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலே காங்கிரஸ் மாநாட்டிலே நிலச்சீர்திருத்தம் வரு



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கின்றது என்று பலமுறை சொன்னார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகின்றது என்று அப்போது அறிவித்தது வரவேற்கத் தக்கதுதான். அதுமட்டுமல்ல. ஆளுநர் இந்த அவையிலே உரையாற்றும்போதும் விரைவிலே நிலச்சீர்திருத்தச் சட்டம் வரும் என்று சொன்னார்கள். அது 1958-ஆம் ஆண்டு என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு கவர்னர் உரையிலே நிலச் சீர்திருத்தம் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் பார்த்ததற்குப் பிறகுதான் அண்ணா அவர்கள் உச்சவரம்பா, மிச்சவரம்பா என்று கேட்டார்கள். கவர்னர் உரையிலே அவ்வாறு நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட இருக்கின்றது என்று சொன்னது, யார் யார் எல்லாம் தப்பித்துக்கொள்ளவேண்டுமோ அவர்கள் தப்பித்துக்கொள் வதற்கு வழிவகை செய்திருக்கின்றது என்பதைத்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆகவே உச்சவரம்பா, மிச்சவரம்பா என்ற வார்த்தைகளை ஒரு அழகுக்காக மட்டும் அண்ணா சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே அவையில் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்த வத்சலம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். காங்கிரஸ் அரசினுடைய கொள்கை என்னவென்றால் நிலம் ஓரிடத்திலே இருக்கக்கூடாது என்பதுதான், ஆனால் அதனை யார், யாருக்கோ எழுதி வைத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற் பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஆகவே நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது என்றால் அதிகப் படியான நிலம் யாரிடத்திலே இருந்தாலும் அதை எடுக்க வேண்டும் ; அப்படி எடுத்து தகுதியுடையவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கின்றது என்பதை மீண்டும் மீண்டும் உறுதியாக இந்த அரசின் சார்பிலே யும், முதலமைச்சர் சார்பிலேயும் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டம் இந்த அவையில் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற பல சட்டப் பேரவைகளில் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அது காங்கிரஸ் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநில மாக இருந்தாலும் சரி, அல்லது, கூட்டு ஆட்சி நடக்கிற மாநில மாக இருந்தாலும்சரி, இந்த மாதிரி சட்டமன்றத்தில் கொண்டு

[திரு. எஸ்.டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

வருகிறபோது எல்லோருமே ஏகமனதாக நிலச்சீர்திருத்தச்
சட்டங்களை நிறைவேற்றவில்லை. தமிழகத்திலும் நிறை
வேற்றப்படவில்லை. ஆனால், நான் கொண்டு வந்த சட்டம்
தான்—அதை பினாமி சட்டம் என்று சொல்லவில்லை—முறை
யற்ற முறையில் செய்யப்பட்ட நிலமாற்றத்தைக் கட்டுப்
படுத்தவேண்டும், கண்டுபிடித்துத் திருப்பிக் கொடுக்கவேண்டும்
என்பதற்காகக்கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவுதான் இந்தச்
சட்டமன்றத்திலே இருக்கிற 234 உறுப்பினர்களாலும், எல்லாக்
கட்சிகளாலும், ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறை
வேற்றப்பட்டது. அப்படி நிறைவேற்றப்பட்ட சட்டம் மத்தியப்
பேரரசுக்கு அனுப்பப்பட்டது.

பல மாதங்கள் அவர்கள் வைத்துக்கொண்டு பல கேள்வி
களைக் கேட்டு அதை அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.
இங்கே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள்
பேசுகிறபோது அந்தக் கேள்விகளைப் பற்றிக் கேட்டார்கள்.
மத்திய அரசு கேட்ட கேள்வி இரண்டு தான். அது முதலிலேயே
தெரிந்தது தான். முதல் கேள்வி—இந்த நில உச்சவரம்புச்
சட்டம் உச்ச நீதிமன்றத்திற்குப் போனால் செல்லுமா?
என்பது. அது செல்லாது என்பது எல்லோருக்கும் தெரிந்தது
தான். தெரியாமல் கேட்கவில்லை. இந்த நில உச்சவரம்புச்
சட்டம் நீதிமன்றத்திற்குப் போகாமல் இருப்பதற்கு 9-வது
ஷெட்யூலில் எல்லாவற்றையும் சேர்த்து இருக்கிறார்கள்.
இதையும் சேர்க்கவேண்டும் என்று எழுதியிருக்கிறோம்.
ஆனால் என்னவோ தெரியவில்லை இந்தக் கேள்வியை மத்திய
அரசு கேட்டு இருக்கிறது. அங்கே சட்டத்துறை அமைச்சர்
இருக்கிறார். சட்டத்துறை இருக்கிறது. ஆனாலும் இந்தக்
கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்
கள். 20 வருஷத்திற்கு முன்னால் நடந்ததை எடுக்கிறபோது
அதிலே சில சங்கடங்கள் ஏற்படுமே என்று கேட்டு இருக்கிறார்
கள். அப்படி சங்கடங்கள் ஏற்படும் என்பது மத்திய அரசுக்கு
எந்த அளவிற்குத் தெரியுமோ அந்த அளவுக்கு மாநில அரசுக்கும்
தெரியும். சொல்லப்போனால், மாநில அரசுக்கு இன்னும் அதிக
மாகத் தெரியும். காரணம், மத்திய அரசை விட மாநில அரசு
தான் நேரடியாக மக்களோடு தொடர்பு கொள்கிறது. மாநில
அரசு மக்களோடு நேரடியாகப் பழகுகிற காரணத்தால்
மக்களின் கஷ்டங்களைத் தெரிந்து கொள்கிறது.
20 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததை எடுத்துக்கொள்வதில்
சங்கடம் இருக்கிறது என்பதை மாநில அரசு நன்றாக உணர்ந்து,
அந்தச் சங்கடங்களைப் போக்கடிப்பதற்காகத்தான் மக்கள்



1983 நவம்பர் 18] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

குழுவை அமைக்கவேண்டும் என்று அந்தச் சட்டத்திலேயே
போட்டு, அதிலே உறுதிப்படுத்தி அனுப்பியிருக்கிறோம்.
அதற்குப் பிறகும் அது இங்கே வந்து இருக்கிறது என்பதையும்,
அதை இந்த அரசு ஆராய்ந்துகொண்டு இருக்கிறது என்பதையும்,
அதை இந்த அவையில் கொண்டுவந்து நிறைவேற்றலாம்
அதை எப்படி இந்த அவையில் கொண்டுவந்து இருக்கிறது. அது விரை
என்பது பற்றியும் ஆராய்ந்துகொண்டு இருக்கிறது. அது விரை
விலே கொண்டுவந்து நிறைவேற்றப்படும் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் அவர்கள் அரசியல்
சட்டத்திற்கு இது விரோதமானது என்று சொன்னார்கள். நான்
அதற்காகத்தான் முன்கூட்டியே பதில் கொடுத்தேன். அரசியல்
சட்டத்தின் 42-வது திருத்தச் சட்டத்தில் இப்படி நடுவர் நீதி
மன்றம் அமைக்கவேண்டும் என்று அவர்கள் திருத்தம் கொண்டு
வந்து இருக்கிறார்கள். ஆகவே, அது அரசியல் சட்டத்திற்கு
உடன்பாடானது. அதற்கு மட்டுமல்ல, நான் சொல்கிறபோது,
இப்படி நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்படுகின்ற
நிலங்களை விநியோகிப்பது தாமதப்படுத்தப்படுகிறது என்ப
தால் இது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். அதற்
காக நடுவர் நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று மத்திய
அரசு சொல்லியிருக்கிறது.

நாம் இது குறித்து மத்தியப் பேரரசுக்கு இரண்டு முறை
கடிதம் போட்டு இருக்கிறோம். 28-10-81 மற்றும்
11-2-82 ஆகிய தேதிகளில் எழுதியிருக்கிறோம்.
அப்படி எழுதியது மட்டுமல்ல, அவர்களும் அதைத் தீவிரப்
படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். இங்கே 532
வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இருக்கின்றன என்ற காரணத்தால்
இதைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு செல்லமுத்து அவர்கள்
பலவற்றைச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது
ஸ்டாண்டர்ட் ஏக்கர் பிரிப்பதில் பல சங்கடங்கள் வருகின்றன
என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சங்கடங்களை இந்த
அரசு ஆராயும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11·00]

இந்த மூலச் சட்டம் 1961-ஆம் ஆண்டில் கொண்டுவர
பட்டது. அதில் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அந்த விப்
விலக்குகளினால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவற்றைதி

பயன்படுத்தி பலர் அந்த விதிவிலக்குக்குள்ளே நுழைந்து கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் கள் என்று சொன்னார்கள். அதையும் இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது நீதி மன்றத்திற்கு, கோர்ட்டுக்கே போகக்கூடாது என்பது நோக்க மல்ல. கோர்ட்டுக்குச் செல்வதை இந்த அரசு அடைத்துவிட வில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் தான் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இப்போது இருக்கிற படி, 'ஆதரைஸ்ட் ஆபீசர்ஸ்' இருக்கிறார்கள். அங்கே போக லாம். அதற்கு மேலே டி.ஆர்.ஓ., (லாண்ட் ரிஃபார்ம்ஸ்) இருக் கிறார். அவரிடம் போகலாம். அதற்கு மேலே ஸ்பெஷல் அப்ப லேட் ட்ரிபியூனல் இருக்கிறது. அங்கே போகலாம். இப்படி எல்லாம் இருந்தாலும் இந்த சட்ட முன்வடிவில் மக்கள் குழுவை நியமிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதிலே சங்கடங்கள் இருப்பதாகச் சொன்னார்கள்.

மேலும் அவர்கள் சொல்கிறபோது, எடுக்கப்பட்ட நிலத் தைக் கொடுக்கும்போது தகுதியானவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். யார், யாருக்குக்கொடுக்க வேண்டுமென்று மூலச்சட்டத்திலே 'ஆர்டர் ஆஃப் பிரிஃபரன்ஸ்' என்ற முறையில் பத்து பேர்களை வரிசையாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஃபர்ஸ்ட் பிரிஃபரன்ஸ் யாருக்கு என்றால் விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்து, உழுது பயிர்செய்துகொண்டு இருப்பவர் யாரோ அவர்தான். அவருக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டி ருக்கிறது. அதிலே எதாவது தவறு வந்தாலும் அதையெல்லாம் பார்த்துக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். வருவாய்த்துறையை (போர்டு ஆஃப் ரெவின்யூ) கலைத்துவிட்டு திரும்பவும் கொண்டு வந்துவிட்டீர்களா என்று கேட்டார்கள். மீண்டும் கொண்டுவரவில்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இதிலே சேர்மேனாக யாரையோ போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி யாரையோ போடுவதாக இல்லை. சேர்மேனாக போடப்படுகிறவர் —

"The Chairman of the Special Appellate Tribunal, unless he is, or he is qualified to be appointed as, or he has been, a judge of a High Court ......"

அதற்கு தகுதி படைத்தவராக இருக்க வேண்டும்.



ஹைகோர்ட்டில் இருக்கிறவராக இருக்க வேண்டும். ஹை-கோர்ட்டில் நியமிக்கப்பட தகுதி படைத்தவராக இருக்க வேண் டும். அப்படி இருந்தால்தான் இதற்கு சேர்மேனாக இருக்க முடியும்.

"...... Unless he is, or he is qualified to be appointed as, or he has been, a Judge of a High Court ......"

என்று இருக்கிறது.

அதற்கு பிறகு யார், யாரை உறுப்பினர்களாகப் போட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. யார், யார் மெம்பராக இருக்க வேண்டும் என்றால்

Secretary to the Government, Law Department for a period of not less than 3 years.

இன்னொரு உறுப்பினர் எப்படி இருக்க வேண்டுமென்றால், அவர் கமிஷனர் அன்ட் செகரட்டிரியாக இருக்க வேண்டும். சாதாரண செக்ரட்டரி அல்ல ; கமிஷனர் அன்ட் செக்ரட்டரி, அந்த அளவுக்கு புரமோஷன் ஆனவராக இருக்கவேண்டும். அல்லது அட்லீஸ்ட் அவருடைய சர்வீசில் ஒரு வருஷமாவது 'லான்ட் ரீபார்ம்ஸ்' பார்த்திருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் உறுப்பினராகப் போட முடியும். இப்படிப்பட்ட நல்ல அமைப்பு கள் இருப்பதால் எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். நீங்களும் வரவேற்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி. ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத் தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1983) ஆய் வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர வர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 1/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிலங்களிலே வருகின்ற வழக்குகளில் தீர்ப்பு கொடுப்பதற்கு லேண்டு போர்டு இருக்கிறது. அந்த லேண்டு போர்டுக்கு இன்றைக்கு ஒரு ஜட்ஜ் சேர்மனாக இருக்கிறார். இன்றைக்கு இருக்கின்ற நிலம் எல்லாம் குறைந்து விட்டது.

With the diminution in the work of the Land Board there is no need for a whole time Chairman.

வேலைகள் முடிந்து போய்விட்டதனாலே அதற்கு முழுமையான முழு நேர சேர்மன் வேண்டியதில்லை என்பதனாலே இந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல நான் முதலிலேயே சொன்னதைப் போல வருவாய் வாரியம் இப்போது போய்விட்டது. வருவாய் வாரியம் இல்லாததாலே வருவாய் வாரிய உறுப்பினர் என்று சொல்லுகிறபோதும் அதை மாற்றி 'லேண்ட் ரெவின்யூ கமிஷனர்' என்று போடுவதற்காகக் கொண்டு வந்து இருக்கிறோம். நிலத்திலே எப்படி தகராறு வருகிறது, அதை எப்படிப் பகிர்வது என்பதை எடுத்துப் பார்க்கிறபோது மலைத் தோட்டத்தை விரிவுபடுத்துவதற்காக மலைத் தோட்டங்களுக்கு இடையே உள்ள நிலங்களைப் பெற்று கையகப்படுத்துவதும் உச்சவரம்புக்கு மேலே உள்ள நிலத்தை

*1983-ஆம் ஆண்டு மார்ச் 4-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



மலைத் தோட்டத்திற்கு பயிரிடுவதற்கு பெறுவதற்காக பரிசீலிப்பதற்காகவும் அப்படி பரிசீலிக்கறபோது அங்கே வனத் துறை இருப்பதனாலே வனத்துறை அதிகாரிகளையும் இதுவரையில் சேர்க்கவில்லை. இந்தச் சட்டதின் மூலமாக வனத்துறையில் உள்ளவர்களைப் போட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் வந்து இருக்கிறது. யார் அதிலே இருக்கிறார்களோ அதாவது 'சீப் கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்ஸ்' ஆக யார் வருகிறார்களோ அவர்களைப் போட வேண்டும். ஏனென்றால் காட்டு நிலங்களை எடுப்பதிலும் கொடுப்பதிலும் சங்கடங்கள் வருகிறபோது வருவாய்த்துறை அதிகாரிகள் மட்டும் இருந்து இருக்கிறார்கள். அதை மாற்ற இந்த அரசு கருதி அவர்களைப் போடுவதற்காக இந்தச் சட்டம் வந்து இருக்கிறது.

அது மட்டுமல்ல, எக்ஸ்- அபிஷியோ மெம்பர் முதலில் இரண்டு பேர். இப்போது இரண்டு பேர் இருக்கிறார்கள். அஃபிசியல் மெம்பர்கள் அப்போது மூன்று பேர், இப்போது மூன்று பேர் இருக்கிறார்கள். இதிலே சிறிய மாற்றம் என்னவென்றால் இன்று வருவாய்த்துறை அதற்காக லேண்ட் ரிபார்ம்ஸ் கமிஷனரைப் போடுகிறோம். இரண்டாவது, டைரக்டர் ஆப் லேண்டு ரிபார்ம்ஸ் மூன்றாவது, வனத்துறையில் இருந்து யாரும் வரவில்லை. இப்போது சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்டைப் போடுகிறோம். யார் வருவார்களோ அவர்களைப் போடுகிறோம். இதைத் தவிர இதிலே புதுமையாக ஒன்றும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தின் படி தற் போதுள்ள நில ஆணையாளருக்குப் பதிலாக நிலச் சீர்திருத்த ஆணையாளரை நியமிக்க அரசு முடிவெடுத்திருப்பதாக நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட மாற்றங்கள் செய்தாலும் கீழ் மட்டத்தில் அதிகாரிகள் எடுக்கும் முடிவுதான் முடிவாக இருக் கிறது. பல்வேறு இடங்களில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப்

[திரு. செ. இராமலிங்கம்] [1983 நவம்பர் 18

பொறுத்தமட்டில் நிலச் சீர்திருத்த சட்டங்களைச் செயல் படுத்துகின்ற நேரத்தில் இதற்கு முன்னால் இந்த வனத்துறை தலைவர் சேர்க்கப்படாமல் இருந்தாலும் இனிமேல் சேர்க்கின்ற நேரத்தில் வனத்துறை நிலங்களைப் பாதுகாப்பதற்காகத்தான் அவரையும் சேர்த்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

முன்னால் நில ஆணையாளரும் உறுப்பினராக இருந் திருக்கிறார். அவரே இந்த வனத்துறை நிலங்களை கவனித் திருப்பார். இதற்காக புதிதாக வனத்துறை தலைவரை சேர்க்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதே போன்று தற்போது இருக்கிற அந்த தலைவருக்கு முழு நேர வேலை இல்லாத காரணத்தினால் நீக்கி விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இன்னும் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் கீழ்மட்டத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டிய பணிகள் ஏராள மாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பணிகளையும் இந்த நில வருவாய்த் தலைவர் ஏற்று செய்யவேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு விவகாரங்களில் ஏராளமான முரண்பாடுகள் பல்வேறு நிலைகளிலே விகிதாச் சாரங்கள் அமைப்பதிலே இருக்கின்றன. அவற்றை நீக்குகின்ற பணிகளிலும் இந்த நில ஆணையாளர் அல்லது அந்த வருவாய்த் தலைவரிடம் ஒப்படைக்கலாம் எப்பதையும் எடுத்துச் சொல்லி அமர்கிறேன்.

(முற்பகல் 11-10).

திரு கே. ஆர். சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான அடிப் படையான காரணம் போதிய வேலைகள் முடிந்துவிட்ட காரணத்தால் முழுநேரமாக ஒரு ஆணையர் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதி இந்தத் துறையில் இதுவரையில சேர்க்கப்படாமல் இருக்கிற வன இலாக்கா அதிகாரிகளை இதிலே சேர்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே முன்பே பேசப்பட்டபோது இந்த நிலச் சீர்திருத்தத்தில் உச்சவரம்பன் சட்டத்தில் பேசிய நேரத்தில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள்



1983 நவம்பர் 18] [திரு. கே. ஆர். சுந்தரம்]

இன்னும் கையகப்படுத்தப்படாமல் உழுபவர்வர்களுக்கே கிடைக்க
காமல் இருக்கிற நிலையை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே
முழுமையாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதன்
மூலமாக உழுபவர்களுக்கே நிலம் கிடைககிற முறையிலே சட்டங்
கள் கொண்டுவருவதன் மூலமாக இந்தப் பிரச்னையை தீர்க்க
வேண்டுமே ஒழிய, இன்றைக்கு ஏதோ தீர்ந்துவிட்டது முடிந்து
விட்டது என்ற ஒரு மனப்பான்மை, திருப்தி மனப்பான்மை
இந்த அரசுக்கு இருக்கிறதோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே
இன்றைக்கு முழு நேரமாக இருக்கவேண்டுமா, பகுதி நேரமாக
இருக்கவேண்டுமா என்பதிலே உள்ள கருத்துக்களை மீண்டும்
ஆராய்ந்து முழுமையான அளவிலே நில உச்சவரம்பு சட்டத்தைக்
கொண்டுவருவதன் மூலமாகத்தான் குழுவிற்கு முழு நேர வேலை
யாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு
வருவதன் மூலமாக இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு புதிதாக நியமிக்கப்படுகிற
வன இலாகா அதிகாரிகளை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம்.
சமுதாயக் காடுகள் என்ற பெயரால் விவசாயிகள் உழுதுகொண்டு
இருக்கிற இடங்களிலேயிருந்து எல்லாம் அவர்களை வெளியேற்ற
வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிற ஒரு இலாக்கா
விற்குக் கீழே இதைக் கொண்டு செல்வது என்பது எப்படி
விவசாயிகளை அது பாதுகாப்பதாக இருக்க முடியும் என்பதை
அரசு ஆராயவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
வனத்துறையின் கீழே இருக்கிற அதிகப்படியான நிலங்களை
இன்றைக்குப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு இது உதவிகரமாக
இருககும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது
நிச்சயமாக வனத்துறையே எஞ்சியுள்ள நிலங்களை எடுத்துக்
கொள்வதற்கு உதவியாக இருக்குமே தவிர, ஏழை விவசாயி
களுக்கு உதவிகரமாக இருக்காது என்று சொல்லி இதை அரசு
பரிசீலிக்கவேண்டும் என்று மீண்டும் கேட்டு முடிக்கிறேன்.

திரு இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு
நிலச்சீர்திருத்தங்கள், நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல் (இரண்
டாவது திருத்த) சட்டம் சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

இதிலும் பிரதானமாக இரண்டு முக்கிய அம்சங்கள் இந்த
திருத்தத்திலே இடம் பெறுகின்றன. ஒன்று, வனத்துறைத்
தலைவரை இதிலே சேர்க்க வேண்டும் என்றும், அதற்கான
காரணம், வனத்துறை சம்பந்தப்பட்ட நிலங்களை, இந்த நிலச்
சீர்திருத்தம் சம்பந்தமாக அமுல் செய்வதற்கான நடவடிக்கை
களை எடுப்பதற்கும் இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்
கொள்வதற்கும், நிலைமைகளை கவனிப்பதற்கும் இது அவசியம்
என்று கூறப்படுகிறது. இரண்டாவது பிரதானமான மற்றொரு
திருத்தம், இந்த அரசு இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்கனவே

[திரு இரா. கருப்பையா] [1983 நவம்பர் 18

இருக்கின்ற, நியமிக்கப்பட்டு இருக்கின்ற நிலச் சபை, லேண்ட் போர்ட், இந்த நிலச்சபையினுடைய தலைவர் ஏற்கனவே ஒரு நீதித்துறை அதிகாரியாக அவர்களை நியமிக்கவேண்டும் என்று ஏற்கனவே இருக்கின்ற முதல் சட்டத்தில், 1961 ஆம் சட்டத்திலே இருக்கிறது. இதை மாற்றுவது என்ற அடிப்படையிலே முதலாவ தாக இந்த நீதித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதாவது நீதித்துறையிலே உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் என்ற நிலைமக்கு வரக்கூடிய தகுதிகள் அந்த நீதித்துறையிலே செயல் படுவதற்கு உள்ளவர்களை அதிலே ஒரு உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்பதை முதலிலே நீக்குகின்றார்கள். அதாவது 24-வது பிரிவில், இரண்டாவது உட்பிரிவில் ஏ-பகுதியில் இவர் களை நியமிப்பதை நீக்குவது என்கிற அடிப்படையில் அதை நீக்கிவிட்டு, அடுத்து நில ஆணையாளரே இந்த நிலச் சபையி னுடைய தலைவராக நியமிக்க வேண்டும் என்ற அடிப் படையிலே கூறப்பட்டு இருக்கிறது.

எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள், மாண்புமிகு உறுப் பினர்கள் இந்தச் சட்டத்திலே இருக்கிற பல்வேறு நிலைமை களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிலச் சீர் திருத்தச் சட்டம் 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்டாலும், இன்றைக்கும் இந்தச் சட்டத்தினுடைய பயன், நிலத்தில் இறங்கி பாடுபடக்கூடிய அந்த ஏழை விவசாயிகளுக்கு போய்ச் சேராத நிலைமை இருக்கிறது.

சென்ற 1981 ஆம் ஆண்டிலே கூட இந்த அவையிலே, அந்த சீர்திருத்தச் சட்டத்திலே இருக்கிற ஒரு குறைபாட்டை நீக்குவதற்காக அதாவது பினாமி நிலங்களை வைத்திருப்பவர் களிடமிருநது பினாமி பெயர்களில் பல ஆயிரக்கணக்கான நிலங் களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் நிலப்பிரபுக்களிட மிருந்து, அதை கையகப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெறவேண்டும் என்றும் அந்த நிலங்களை எடுத்துக்கொள்வதற் கான முறையிலே இந்த மன்றத்திலே அந்தச் சட்டத்திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றி நாம் மைய அரசுக்கும் அனுப்பி னோம். மைய அரசு அதற்கான ஒப்புதலை கொடுக்கவில்லை என்பதும், அதை மீண்டும் இந்த மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான முறையிலே ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வருவோம் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். ஆனால் அது இன்னும் கொண்டு வராத நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தினுடைய முழுமையான பலன் கிடைக்கக் கூடாத முறையிலே, அதைச் சட்டபூர்வமாக கூட ஆக்கமுடியாத நிலைமையிலே தமிழகம் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.



1983 நவம்பர் 18] [திரு. இரா. கருப்பையா]

ஆகவே தான் தமிழகத்திலே நிலத்திலே பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கு, அந்தந்த நிலங்களை அவரவர்களுக்கே உரிமை யாக அளிக்கக்கூடிய முறையில், அந்தந்த இடத்தில் சொந்தக் காரர்களாக ஆக்கச்கூடிய முறையிலே சட்டத்தைக் கொண்டு வருவது அவசியம் என்று நாம் அனைவரும் வற்புறுத்தி வருகி றோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைக் கொண்டு வருவதாகக் கூறிக் கொண்டே வருகிறார்கள். ஆனால் அதற் கான சட்டமுன்வடிவை இந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே கொண்டு வந்திருப்பார்களேயானால், அது உண்மையிலேயே பாராட்டக் கூடிய நடவடிக்கையாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்ககூடிய அதே நேரத் தில், இன்றையதினம், மடங்கள், தர்மஸ்தாபனங்கள் என்ற பெய ராலே தமிழகத்திலே 4 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங் களை மடாதிபதிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதி னங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்கள் எல்லாம் கோவில்களின் பெயராலே இருக்கின்றன. அந்த கோவில் நிலங்களில் பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கே அந்த நிலங்களை முழுமையாக உரிமையாக்கக்கூடிய முறையிலே சட்டத்தை இயற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக் கின்றோம். அதுவும் வரவில்லை. அத்தோடு, அரசு தரப்பிலே யிருந்து ஒரு செய்தி அமைச்சர் அவர்களால் வெளியிடப்படுகிறது. அது தொடர்ந்து பேசப்படுகிறது. கோவில்களுக்குச் சொந்த மாக மடாலயங்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களில் உழக்கூடிய பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கு இன்றையதினம் இருக்கக்கூடிய உரிமைகளைக் கூட பறிக்கக்கூடிய முறையிலே சட்டங்களைக் கொண்டு வருவோம். அது தயாராக இருக்கிறது என்ற முறையிலே பகிரங்கமாகப் பேசப்படுகிறது. ஆகவே, நான் தெரிந்துக் கொள்ளவிரும்புவது, இந்த அரசாங்கம் விவசாயி கள் உழக்கூடிய அந்த நிலத்தை, முழுமையாக அவர்களையே உடைமையாளர்களாக ஆக்க வேண்டும் என்ற அந்தக் கொள்கை யின் அடிப்படையிலே சட்டங்களைக் கொண்டு வருவதற்கான முறையிலே செல்லப் போகிறீர்களா அல்லது அதிலிருந்து பின் வாங்கிச் செல்ல வேண்டும் என்ற முறையிலே இருக்கிறீர் களா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, அந்த அடிப்படையிலே நிலச் சீர்திருத்தச் சட்டத் திற்கான அந்த திருத்தத்தை அமைப்பதன் மூலமாக என்ன பாயிண்ட் தேவைப்படுகிறது என்று நாம் ஆராயக் கூடிய நேரத் திலே, அதிலே ஒரு திருத்தத்தைத் நாம் நிறைவேற்றியிருக்கிறோம், இதற்கு முன்பு இருந்த சட்டத்திற்கான ஒரு திருத்தத்தையும் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். உயர் நீதி மன்றங்களுக்கு இவைகளைக் கொண்டு செல்வதன் மூலமாக மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தினுடைய பயனை உரிய காலத்

தில் விவசாயிகள் அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது
என்ற காரணத்தாலே ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதை
தவிர்க்கக்கூடிய முறையிலே, கோர்ட்டிலே நிலுவையிலே இருக்கக
கூடிய விவசாயிகளுக்கு, இந்த சீர்திருத்தச் சட்டத்தின் பலன்
கிடைக்க வேண்டும் என்று, உள்ளபடியே இந்த திருத்தத்தைக்
கொண்டுவந்தோம். அந்த திருத்தத்தை அனைவரும் ஏற்று
நிறைவேற்றியிருக்கிறோம்.

ஆனால், அதே நேரத்தில், இன்றையதினம் கொண்டு வந்
திருக்கிற இந்த திருத்தத்தின் மூலமாக, கொண்டு வர உத்தேசிக்
கப்பட்டிருப்பது, நீதித்துறையின் அதிகாரி ஒருவரை நிலச்
சபைக்கு தலைவராக அமைக்க வேண்டும் என்பது. இன்றைய
தினம் நாட்டிலே அரசாங்க இலாக்காக்கள் இருக்கின்றன. அதில்
அரசாங்கத் துறைத் தலைவர்கள் இருக்கிறார்கள். ரெவின்யூ
போர்டு என்ற பெயர் நீக்கப்பட்டிருந்தாலும், ரெவின்யூ போர்டு
சம்பந்தப்பட்ட, அதனுடைய தொடர்புடைய பல்வேறு துறை
களையும் அந்தந்த அதிகாரிகளே ஏற்று, அந்தந்த துறைத்
தலைவர்களாக செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அமைப்
பிலே மாற்றம் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இல்லை.
விவசாயிகளுடைய பிரச்சனைகளையும், மக்களுடைய பிரச்சனை
களையும் தீர்ப்பதில், இந்த அதிகார வர்க்க இயந்திரத்தை
வைத்து பயன் பெறுவது என்பது இயலாத காரியமாகத்தான்
இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்பு
கிறேன்.

(முற்பகல் 11-20)

அதுமட்டுமல்ல, துறை அதிகாரிகள், அதாவது ஆதரைஸ்டு ஆபீசர்
கள் இருக்கிறார்கள்., அதற்கு மேல் அப்பீல் செய்வதற்கு அதிகாரி
கள் இருக்கிறார்கள், அதற்குமேல் லேண்ட் போர்டு என்ற
அமைப்புகள் இருக்கின்றன. எதை எதிர்பார்த்து மேல்முறை
யீடுகளை அனுப்பி வைக்கிறார்கள் என்றால், தங்களுக்கு முறை
யான நீதி கிடைக்கும் என்ற அடிப்படையில்தான். நீதிபதிகள்
நீதித் துறையிலே உள்ள சட்டங்களினுடைய பல்வேறு அம்சங்
களைக் கவனித்து, வாதப் பிரதிவாதங்களையெல்லாம் கவனித்து,
சட்ட நுணுக்கங்களைக் கவனித்து தங்களுடைய தீர்ப்பைக்
கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நீதித்துறையைச் சேர்ந்த
வர்கள் தலைவராக நீதிபதிகளாக இருப்பதன் காரணமாக அவர்
களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்
கள். ஆனால் இந்தச் சட்டத்தின் மூலமாக நில ஆணையர்
அவர்களை அதற்குத் தலைவராக ஆக்குகிறோம். எந்த முறை
யீடு வந்தாலும் வருவாய்த் துறையில் அவருக்குக் கீழே இருக்கின்ற
மற்ற அதிகாரிகள் என்ன உத்திரவைப் போட்டிருக்கிறார்களோ
அந்த அடிப்படையில்தான் அவர்களும் உத்திரவு போடுவார்கள்.
அந்த நிலையைத்தான் நாம் இன்றைய தினம் நடைமுறையில்





பார்க்கிறோம். ஒரு மாவட்டத்திலே இருக்கிற மாவட்ட ஆட்சித்
தலைவர் ஒரு உத்திரவைப் போட்டாரென்றால் அதை எதிர்த்து
முறையீடு செய்கிற போது மேலே இருக்கின்ற கமிஷனரிடத்திலே
நீதியை எதிர்பார்க்கிறபோது என்ன நிலைமை ஏற்படும்
என்றால், கீழே இருக்கிறவர்கள் போட்ட உத்திரவு சரியான
உத்திரவு என்று சொல்கிற நிலைமை ஏற்படும். காரணம்
அவரும் அதிகாரி, இவரும் அதிகாரி, கீழே இருக்கக்கூடிய
மாவட்ட ஆட்சித் தலைவர் மேலே இருக்கிற இடத்திலே வந்து
உட்காருவார், அப்போது அதற்கான முறையீடுகளைக் கவனிக்
கிற பரிசீலனை செய்கிற நிலைமை ஏற்படுகிறபோது அது
நிர்வாகத்திலே தவிர்க்கமுடியாதது, அங்கே இருப்பவரும்
ஐ.ஏ.எஸ். அதிகாரிதான், இங்கே இருப்பவரும் ஐ.ஏ.எஸ்.
அதிகாரிதான். அந்தப் பொறுப்பிலே இருக்கிற அவர் இரண்
டாண்டுகள் கழித்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது
தவிர்க்கமுடியாதது. ஆகவே அதே அதிகாரியை தலைவராக
லேண்ட் போர்டுக்குப் போட்டு சட்டத்தின் மூலம் அந்தப்
பொறுப்பைக் கொடுத்தால் அந்த இடத்திலிருந்து அவர் அதைப்
பரிசீலிக்கிறபோது அதன் மூலம் நியாயம் கிடைக்கும் என்று
எதிர்பார்க்க முடியாது. இன்றைக்கு மக்களுக்கு நீதித் துறை
யிலே நம்பிக்கையிருக்கிறது. அது எப்படி வழங்கப்பட்டாலும்
சரி, அது முன்சீப் கோர்ட்டாக இருந்தாலும் செஷன்ஸ் கோர்ட்
டாக இருந்தாலும் உயர்நீதிமன்றமாக இருந்தாலும் உச்ச நீதி
மன்றமாக இருந்தாலும் தீர்ப்பாகி விட்டால், அவ்வளவுதான்,
அதற்கு மேலே ஒன்றும் செய்யமுடியாது. நீதிதேவன் தீர்ப்பு
வழங்கி விட்டார்கள் என்ற முறையிலே எடுத்துக்கொள்கிற
கருத்து இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிறது. அந்த நம்பிக்
கையைப் போக்கக்கூடிய முறை இந்தச் சட்டத்திலே இருக்கிறது.
நிலச்சபையிலே தலைவராக நீதித் துறையைச் சேர்ந்தவர்தான்
தொடர்ந்து நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான்
வலியுறுத்துகிறேன். இல்லாவிட்டால் பாதகமான சூழ்நிலை
உருவாகும் என்பதாலே இந்தத் திருத்தத்தை இந்திய கம்யூ
னிஸ்ட் கட்சியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

வன இலாகா அதிகாரிகள் சம்பந்தமாகச் சொல்லப்பட்டது.
வன இலாகா அதிகாரிகள் யார் யார் அதிலே தேவை என்று
நினைக்கிறார்களோ அவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்கள்
அது சம்பந்தமான விவரங்களை தகவல்களை எடுத்துக் கூறு
வதற்காக இருக்கலாம். ஆனால் முடிவு செய்யக்கூடிய பொறுப்
பில், தீர்மானிக்கக்கூடிய பொறுப்பில் இருக்கக்கூடியவர் அத
னுடைய தலைவராக இருப்பவர் நீதித் துறையைச் சேர்ந்தவராக
இருக்க வேண்டும். அவர் இருந்தால்தான் சட்டங்களைப் பரி
சீலனை செய்கிற முறை இருக்கும். ஆகவே இந்தத் திருத்தம்
தேவையற்றது என்று கூறி என்னுடைய கருத்துக்களை முடித்துக்
கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பல உறுப்பினர்கள் தங்கள் அறிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் மீண்டும் அந்த மசோதாவிற்குள் போக விரும்பவில்லை. இந்த மசோதாவிலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் செய்து இருக்கிறார்கள். வழக்கமாக காட்டு இலாகாவுக்கும் வருவாய்த் துறைக்கும் பிடிப்பதே கிடையாது. இது தென் கோடி என்றால் அது வட கோடி அவ்வளவு முரண்பாடுகள், இந்த இரண்டுக்கும், இந்த இரண்டையும் இணைக்கிற ஒரு இணைப்பை, பாலத்தை இந்த மசோதாவின் மூலமாகத் தான் செய்து இருக்கிறார். வழக்கமாக இந்த காட்டு இலாக்கா அதிகாரிகளுக்கும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் எங்கு பார்த்தாலும் தகராறுகள். ஒரு ஏழை வீடு இல்லாது இருப்பான் நான் வீடு கட்டிக் கொள்கிறேன் என்று கேட்பான். பஞ்சாயத்தில் எங்கேயாவது ஒரு புறம்போக்கில் கட்டிக் கொள் என்று சொல்வார்கள். அவன் 5 ஆயிரம் ரூபாய் 6 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வீடு கட்டி முடிப்பான். மஞ்சு வீடோ, ஓடு வீடோ கட்டியிருப்பான். உடனே காட்டு இலாக்கா அதிகாரி வருவார். இது எங்கள் நிலம் அதனால் கொடு என்று சொல்வார். ஊரில் எங்கு பார்த்தாலும் அதிகமாக பரவி இருக்கிற ஒன்று காட்டு இலாக்கா. இப்போது சமுதாய காடு அது இது என்று இருக்கிறது பாந்தீபன் செடி என்று ஒன்று வருகிறது பாருங்கள் அதைப்போல அதிகமாக காட்டு இலாக்கா பரவி இருக்கிறது. வருவாய்த்துறை அதிகாரிகள் ஏதாவது அநீதி இழைத்தால் நேராக கலெக்டரிடம் போய் பார்த்து விடுகிறோம். இல்லை என்றால் ஆர்.டி.ஓ., டீ.டீ.ஓ., தாசில்தார் யாரை வேண்டுமானாலும் பார்த்து விட முடியும். ஆனால் காட்டு இலாக்கா அதிகாரிகளை பார்க்கவே முடிவது இல்லை. அவர் வீட்டை இடித்து தள்ளிவிட்டு காட்டுக்கு போய்விடுகிறார். நாம் அப்புறம் எங்கே கண்டு தேடுவது. எப்போது கேட்டாலும் அவர் ஏலகிரி மலைக்கு போய் இருக்கிறார். வேறு மலைக்கு போய்விட்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆக முக்கியமாக, கட்டப்பட்ட வீடுகளை திடீர் என்று வந்து எப்போதோ இருக்கிற கணக்கைக் காட்டி கிட்டத்தட்ட ஒரு 30, 40 வீடுகளை என்னுடைய தொகுதியில் அம்மூர் என்ற ஊரில் ஒவ்வொரு வீடும் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை செலவு செய்து கட்டினார்கள் அவைகளை இடித்துவிட்டார்கள். அவர்கள் அதற்காக பஞ்சாயத்துக்குக்கூட வரியையும் கட்டியிருக்கிறார்கள். ஆனால் திடீர் என்று உங்கள் காட்டு இலாக்கா அதிகாரி வந்தார் இந்த இடம் எல்லாம் எங்களுக்குச் சொந்தம் என்று சொல்லி அத்தனை வீடுகளையும் இடித்துத் தள்ளிவிட்டார்கள்.

மேல்விஷாரம் உங்களுக்குத் தெரியும். அந்த விஷாரத்தின் நடுவில் ஒரு ஓடை ஓடுகிறது. முழு ஊருக்கு நடுவில் தேம்ஸ் நதி மாதிரி ஒரு சின்ன ஓடை ஓடுகிறது. அந்த ஓடைக்கு மேலே





அங்கு இருக்கும் பீடித் தொழிலாளர் கட்டியிருக்கும் வீடுகள் என்ன ஆனது. திடீர் என்று ஒரு நாள் காட்டு இலாக்கா அதிகாரி வந்தார் எல்லா வீடுகளையும் இடித்து தள்ளிவிட்டார். நான் போய் என்ன என்று கேட்டேன். இந்த இடம் காட்டு இலாக்காவுக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். ஆக காட்டு இலாக்கா அதிகாரிகளுக்கும் ரெவின்யூ அதிகாரிகளுக்கும் எப்போதும் ஒத்து வருவது கிடையாது. இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் அதனால் அந்த காட்டு இலாக்கா அதிகாரிகளை நாங்கள் அங்கே அனுப்பி இருக்கிறோம் அந்த நிலைச்சபையில் உட்கார்ந்து கருத்துக்களை பறிமாறிக் கொள்ளட்டும் என்று சொலகிறார்கள். ரொம்ப நல்லது இவர் போய் அங்கே உட்கார்ந்து காட்டு இலாக்காவுக்கும் ரெவின்யூ இலாக்காவுக்கும் டிபரன்ஸ் ஆப் ஒப்பினியன் வராமல் பார்த்துக் கொண்டால் "வெல் அண்டு குட்" ஆனால் ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது மாதிரி இவர் அங்கே போய் உட்கார்ந்து கொண்டு ஏழைகளுக்கு கொடுக்கின்ற அந்த வீடுகளை பிய்த்து எறிகிற காரியத்தில் ஈடுபட்டால் அது இன்னும் மோசமாக போய்விடும் என்பதை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இந்த நேரத்தில் கொண்டு வருகிறேன் என்பதை கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவில் அதிகமாக எதுவும் இல்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதிலே நீதிமன்றத்து நீதிபதிகளை எடுத்துவிட்டார்கள் என்று ஒரு குறையாகச் சொன்னார்கள். இன்னொரு குறையாக இப்போது வேலை குறையவில்லை. வேலைகள் அதிகரித்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். வேலைகள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்கிறபோது நாடு பூராவும் பார்க்கின்றபோது வேலைகள் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கிறது. இந்த சட்ட முன்வடிவு சமவெளிப் பிரதேசங்களைப் பற்றியது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் மலையே இல்லாத ஒரு மாவட்டம் தஞ்சை மாவட்டம். தஞ்சை மாவட்டத்திற்கும் இந்தச் சட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று திரு. இராமலிங்கம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மலைத் தோட்டத்தை விரிவுபடுத்துவது அப்படி என்றால் மலை, மலையில் இருக்கின்ற தோட்டங்கள், மலைத் தோட்டத்திற்கு அடுத்த மலைத் தோட்டம் அந்த மலைத் தோட்டத்திற்கும் இந்த மலைத் தோட்டத்திற்கும் இடையில் இருக்கின்ற நிலங்கள் என்று வரும்போது இந்த லேண்டு போர்டு வருகிறதே ஒழிய லேண்டு போர்டுக்கும் லேண்டு டிரிபுனலுக்கும் ஸ்பெசல் அப்பலேட்டு டிரிபுனலுக்கும் சம்பந்தம் இல்லை. ஸ்பெசல் அப்பலேட்டு டிரிபுனலுக்கு யார் வேண்டுமானாலும் அப்பீல் செய்துக் கொள்ளலாம். அதனால் இதுதான் உச்ச மன்றம் என்பது இல்லை. இதற்கு மேலே அப்பீல் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவும் ஏன் எடுத்தோம் என்றால் மலைப் பகுதிகள்

எல்லாம் முடிந்துவிட்டது. இன்று தோட்டப் பயிர்கள் நடந்துக்
கொண்டு இருக்கிறது. அங்கே எந்தவிதமான சங்கடமும் இல்லை.
With the dimirution in the work of the Land Board
there is no need for a whole time Chairman
அவர்கள் வேலைகள் குறைந்து விட்டது என்பதற்காக எடுக்கப்
பட்டதே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இன்றைக்கு அந்த அரிய பணியில் சாதாரண
மானவர்களை போடவில்லை கமிஷனர் ஆப் லேண்டு ரிபார்ம்ஸ்
அவர்களை, இருப்பதிலே மிகப் பெரிய, மிக உயர்ந்த அதிகாரி
களைப் போடுகிறோம். ரெவின்யூ போர்டு இப்போது இல்லாத
தால் ரெவின்யூ போர்டு மெம்பர் என்று போடுவதற்குப் பதிலாக
கமிஷனர் ஆப் லேண்டு ரிபார்ம்ஸ் அவர்களை போடுகிறோம்.
அடுத்து டைரக்டர் ஆப் லேண்டு ரிபார்ம்ஸ் அவர்களை போடு
கிறோம். அடுத்து சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்டு அவர்களை
போடுகிறோம். அதைத் தவிர நான்-அபிசியல்ஸ் எப்போதும்
போல் இப்போதும் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். எதுவும் புதிதாக இல்லை என்பதை நான் தெரிவித்து
கொள்கிறேன். இது மலைத் தோட்டங்களுக்கு மட்டும் தான்
மற்ற இடங்களுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கி
றேன். இதனால் வேறு எதுவும் இல்லை என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன் திரு. கருப்பையா அவர்கள் பல தகவல்கள் சொன்
னார்கள். அதற்கு எல்லாம் நான் முதலிலே மாண்புமிகு உறுப்
பினர் இளையபெருமாள் அவர்களுக்கு கூறும்போது உச்சவரம்பு
சட்டம் பற்றி நான் தெரிவித்தேன். ஆக திருப்பி சொல்ல
வேண்டியது இல்லை என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 11.30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சொல்கின்ற
பொழுது வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் காட்டு இலாக்கா
அதிகாரிகளுக்கும் சண்டை என்று சொன்னார்கள். அந்த இரண்டு
இலாகா அதிகாரிகளும் ஒரே அரசிலே தான் இருக்கிறார்கள்.
இரண்டு இலாகா அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் ஒருவர் தான்.
ஆகையினால் அவர்களுக்குள் எங்கும் சண்டை நடக்காது. நடந்
தால் இவர் பார்த்துக் கொள்வார்.

அது மாத்திரமல்லாமல் நான் உங்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன், வருவாய்த் துறைக்கும், காட்டு இலாகாவுக்கும்
தகராறு இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு, இன்றைக்கு
ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வருவாய்த் துறை நிலங்
களை, புறம்போக்கு நிலங்களை, எதற்கும் உதவாத நிலங்களை,
மரங்களைப் போடுங்கள் என்று கொடுத்திருக்கிறோம். சில
இடங்களில் என்ன செய்கிறார்கள் என்றால், மரங்களைப் போடு
வதற்காக நாம் கொடுக்கின்ற பொழுது, தெரியாத வனத்துறை
அதிகாரிகள், தங்களுடைய நிலங்களில்தான் என்று தவறாக
எண்ணிக் கொள்கிறார்கள். மரங்கள் நட நிலத்தைக் கொடுப்பது,
குத்தகைக்குக் கொடுப்பதைப் போல. இன்றைக்கு ஆயிரக்





கணக்கான ஏக்கர்களைக் கொடுத்து வருகிறோம். அவர்கள் ஒழுங்காக செய்கிறார்கள் என்ற நல்லெண்ணத்தில்தான் வருவாய் துறை அவர்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிலச் சீர் திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆகப் பெற வேண்டும்".

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move—

That in clause 2, in sub-clause (1) (*a*), *for* item (ii), *substitute* the following item, namely :—

"(ii) for clause (*c*), the following clauses had been substituted, namely :—

(*c*) the Chief Conservator of Forests, ex-officio

(*cc*) the Director of Land Reforms, ex-officio"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1983), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

[1983 நவம்பர் 18

(உ) கடன் நிவாரணச் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

THIRU T. VENKATA REDDY: Hon. Deputy Speaker, Sir, while welcoming this amendment, I only refer that there is no need for such extension of period, if the authorities apprised of the act in the villages by the concerned authorities. Even after this amendment, I am afraid, if proper publication of the provisions of the Act, in the villages are not done, we may have to bring further extension of time for the Debt Relief Act. I, therefore, request the Hon. Minister to make necessary provision for the proper publication of the provisions of the Act in the villages and Towns, so that poor farmers and other debtors who are eligible for relief under this Act can avail themselves of the opportunity.

I would also like to submit in this connection that whenever applications are made to the Tahsildars, the Tahsildars are prolonging the enquiry. We are able to see that these enquiries are not able to see the end of the day. If the Tahsildars are not provided with any time schedule for the disposal of these enquiries, they are likely to prolong. Under this Act, nowhere any time schedule has been fixed for such disposal.

The Tahsildars must be directed that whenever such applications were received by them from the debtors, such applications must be disposed of expeditiously wihin six months. Otherwise, the debtors the poor people, who will be lotering and coming very often to the

* 1983ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





Tahsildar's office by spending a lot of money, will not get the benefit. Whatever relief they are likely to get by this Act, would be lost by spending huge amounts for coming to Tahsildar's office very often from villages.

The other aspect that I want to submit in this connection is that under Section 7 of the Act, the debtors have to apply for the release of mortgaged properties. Under the original Act—I may bring to the kind attention of the Hon. Law Minister—the relief is given not only to secured debts but also given to unsecured debts. The poor people have executed pronotes to the creditors. In most of the villages, pronotes are transacted instead of the mortgages. Transactions mostly take place under pronotes in most of the villages. If the pronotes are not attracted under Section 7, the people will be put to a lot of difficulties. Section 7 deals with mortgaged properties and not with the debts contracted under pronotes. Unsecured debts are not provided under the Act. Under this Act, persons who borrowed money either in the form of pronotes or bonds cannot go to the Tahsildar and seek relief. To get remedy under the Act, he has to go to the Court. The laudable object under the act should be extended to them also, so that they could get remedy at the Tahsildar's office and there will not be any need for paying fees to the lawyers, Court fees and a lot of money for litigation. They should be enabled to got cheap relief from the Tahsildar. Therefore I request that this laudable object should be extended to poor people to get relief from the Tahsildar, who decides the relief. The Tahsildars should be empowered to deal with unsecured debts. Otherwise the laudable object under this Act will be negatived and the poor people will have to suffer. As a lawyer, I know, many people go to the Courts to seek relief and for which they have to pay huge amounts. Therefore, I request the Hon. Minister to bring in a suitable amendment to the main Act itself so that unsecured debts can also be brought under the Tahsildar's purview of enquiry. While providing debt relief to the farmers, the Government also should see that the poor farmers are able to get loans from other sources also. We have got credit societies, Rural Housing Societies and other societies. Such societies must be directed to disburse the amount for the needy people. For instance, Rural Housing Societies and other societies are there. I am afraid for the last one year the Rural Housing Societies are not able to cater to the needs of the Houseless people. They are not getting loans from the Rural Housing Societies. When the Registrar was approached, he pleaded that there are no funds. In one way we are giving relief to the poor people and in another way we are depriving the poor people from getting loans from the societies and

[Thiru T. Venkata Reddy] [1983 நவம்பர் 18

they are forced to take loans from the usurious money lenders. We are not able to provide loans to the poor people from the Co-operative Societies or Rural Housing Societies. That is the situation prevailing at present. Therefore, I hope and trust that the Government will provide relief to the poor people and also provide adequate facilities to get loans for their needs from other societies under the control of the Government.

There is also a provision under which only persons who are owning less than Rs. 25,000 worth of lands or property are entitled to the benefits under the Act. No guidelines are fixed under the Act, as to how to fix the value of the land or value of the House. These guidelines must be given to the Tahsildars. Otherwise, Tahsildars will misuse their powers. It will only benefit the creditors rather than debtors. When you want to help debtors, you must fix the guidelines so that the Tahsildars can follow them.

With these few suggestions, I welcome this amendment.

(முற்பகல் 11-40)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையி னுடைய துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பெற்றிருக்கின்ற தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக் களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1982ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின்படி வட்டாட்சியரிடம் மனுக்கள் கொடுக்கும் தேதி மாத காலத்திற்கு, 23-2-1983 ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி மனு கொடுக்கும் காலக்கெடுவை நீட்டிப்பதன் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களைக் கடன் தொல்லையிலிருந்து மீட்டு விட முடியுமா என்றால் முடியாது, எனவே, நிரந்தரமாக அவர்களுக்கு ஒரு பரிகாரம் காணும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நமது மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டாட்சியரிடம் தற்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற ஏரா ளமான மனுக்கள் முடிவெடுக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த மனுக்களின் மீது உடனடியாக நட வடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக் கும் வகையில் முடிவு எடுக்க வேண்டுமென்று அரசு ஆணை



1983 நவம்பர் 18] (திரு. இரெ. இராசமாணிக்கம்)

இட வேண்டும். வட்டாட்சியரிடம் ஒரு மனு கொடுக்கப் படுகிறது என்றால் அதன் மீது முப்பது தினங்களுக்குள் ஒரு முடிவெடுத்து அந்த ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பிராமிசரி நோட் மூலம் கடன் வழங்கு கிறார்கள். நூறு ரூபாய் கடனுக்கு மாதத்திற்கு 5 ரூபாய் வட்டி வாங்குகிறார்கள். அந்த வட்டியைக்கூட கடன் கொடுக்கும்பொழுது எடுத்துக்கொண்டுதான் பாக்கித் தொகை யைக் கொடுக்கிறார்கள். இப்படி பிராமிசரி நோட் மூலம் கடன்களை வாங்குவதால் கிராமப்புற மக்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, பிராமிசரி நோட் மூலம் கடன் கொடுப்பதை உடனடியாகத் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட கடன் நிவாரணச் சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை மக்கள் கடன் வாங்கும் சூழ்நிலை குறைந்திருக்கிறது. ஏழைகள் கடன் வாங்கித்தான் குடும்பம் நடத்த வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற சூழ் நிலையில் ஏழைகள் கடன் வாங்காமல் வாழ முடியுமா என்றால் முடியாது. ஏழைகளின் அத்தனை பண்டங்களும், சாமான் களும் அடகுக் கடையில் இருக்கின்றன அல்லது தனியாரிடத்தில் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன என்ற நிலையை நாம் கிராமப் பகுதிகளிலே காண்கிறோம். ஆகவே, குடும்பம் நடத்துவதற்கு மேலும் மேலும் கடன் வாங்குவதற்கு முடியாமல் கஷ்டப்படும் விவ சாயிகளுக்கு அல்லது ஏழை மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். ஏழைகள் கடன் வாங்க வரும்பொழுது வரம்பில்லாமல் அவர்களுக்குக் கடனைக் கொடுப்பதற்கு எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே மூன்றாண்டுக் காலமாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி மூன்றாண்டுக் கால மாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஏழைகள் வாழும் வகையில் அல்லது குடும்பம் நடத்தும் வகையில் அரசின் சார்பாக ஏதாவது ஏற்பாடு செய்துதான் ஆக வேண்டும். பருவ மழை தவறிய தால் வறட்சியின் காரணமாக கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை, அப்படியே வேலை கிடைத் தாலும் நியாயமான கூலி கிடைக்கவில்லை. எனவே, கிடைக் கின்ற கூலியை வைத்துக்கொண்டு விலைவாசி உயர்ந்திருக்கின்ற இந்த நாளில் குடும்பத்தை நடத்த முடியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலை

(திரு. இரெ. இராசமாணிக்கம்) [1983 நவம்பர் 18

கிடைக்கும் வகையிலும், நிரந்தரமான வருமானம் கிடைக்கும் வகையிலும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்றாண்டுக் காலமாகக் கடும் வறட்சியால் அங்குள்ளவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தி லுள்ள 2,172 கிராமங்களில், 1,800 கிராமங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கும், ஏழைகளுக்கும் இந்த அரசின் சார்பாகச் சென்ற ஆண்டு எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை. தனியார் கடன் மட்டுமல்ல, அரசின் மூலமாக, கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களையும் திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் அல்லல்படுகிறார்கள். இப்படி பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளிடத்திலே அவர்கள் கொடுக்க வேண்டிய கடனுக்காக ஜப்தி நடவடிக்கைகள் கூட செய்யப் படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கூட கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதிலே ஈடுபட்டிருக்கிறார் கள். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 1,800க்கும் மேற்பட்ட கிராமங்களிலே உள்ள மக்கள் மூன்றாண்டுக் காலமாக வாங்கி இருக்கின்ற கடன்களை அரசின் சார்பிலே தள்ளுபடி செய்ய வேண்டும். அதற்கு முன்னாலே அவர்கள் வாங்கிய கடனுக் குரிய வட்டியையாவது ஓரளவுக்குத் தள்ளிப்போடவேண்டும் என்று நியாயத்தின் அடிப்படையில் விவசாயிகளின் சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு தண்ணீர் விடவில்லை. பல கிராமங்களில் சாகுபடி செய்யாமல் தரிசாக நிலங்கள் போடப்பட்டிருக்கின்றன. அப்படி நிலங் களைத் தரிசாகப் போட்டுவிட்டு விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத காரணத்தால் பட்டினியாகக் கிடக்கிறார் கள். வேலைக்காக அவர்கள் பல கிராமங்களைத் தாண்டிச் செல்லவேண்டிய நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு நியாயமான ஊதியம் கிடைக்கக் கூடிய வகையிலே ஏற்பாடு செய்வதோடு அவர்கள் வாங்கி இருக்கின்ற கடன்களையும் தள்ளுபடி செய்யக்கூடிய வகையில் இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்து கொடுங்கள் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் மீது இரண்டொரு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.



1983 நவம்பர் 18] (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)

இன்றைய தினம் கிராமங்களிலே பிராமிஸரி நோட் எழுதிக் கொடுத்து கடன் வாங்குகின்றவர்கள் தங்களுடைய சொத்து, சுகங்களை எல்லாம் இழக்கக் கூடிய நிலைமை இருக்கின்றது. அப்படி வாங்குகின்ற கடன்களுக்கு 100க்கு 5 ரூபாய், 10 ரூபாய் என்ற அளவுக்குக் கூட வட்டி வசூலிக்கப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று சில இடங்களில் 100 ரூபாய் கடன் கொடுக்கப்படு கின்றது என்றால் 10 ரூபாயை முதலிலேயே எடுத்துக்கொண்டு 90 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். சில இடங்களில் 3 மாத வட்டியைக் கூட மொத்தமாக எடுத்துக்கொண்டு மீதியினைத் தான் கொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது. மேலும் இப்படி கடன் கொடுக்கின்றவர்கள் சில இடங்களில் நிலங்களைக் கிரயமாக எழுதி வாங்கிக் கொண்டு, அதாவது லிமிடெட் கிரயம் என்ற வகையிலே 3 ஆண்டு 5 ஆண்டு என்று எழுதி வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள். கடன் வாங்கியவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்திலே கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக அவர்களைத் தேடும்போது கடன் கொடுத்தவர்கள் எங்கேயாவது போய் தலைமறைவாக இருந்துவிட்டு அதனால் குறிப்பிட்ட காலம் முடிந்துவிடுவதன் காரணத்தால் எழுதிக் கொடுத்தவர் களின் நிலத்தை அபகரித்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட கேஸ்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங் கெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இது பற்றி தாசில்தார் மூலமாகவோ அல்லது அதிகாரிகள் மூல மாகவோ புகார் கொடுத்தால் உடனே அதற்கான நிவாரணத்தை அளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

அடுத்து ஏழை மக்களுக்கு கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கப்படுகின்றது. அந்தக் கடன் களைப் பொறுத்தவரையில் ஃபர்ஸ்ட் இன்ஸ்டால்மென்ட் கொடுத்து ஓராண்டு ஆனதற்குப் பிறகு செகன்ட் இன்ஸ்டால் மென்ட் கொடுக்கப்படுகின்றது. இதனால் வீட்டையே கட்டி முடிக்க முடியாத சூழ்நிலைகள் கூட ஏற்பட்டுவிடுகின்றன. மொத்தமாக அந்தக் கடன் தொகை 6,000 ரூபாய் என்றால் அதிலே 4,500 ரூபாய் மூன்று முறையாகக் கொடுக்கப்படு கின்றது. அப்படிக் கொடுக்கப்படுவதன் காரணத்தால் ஏழை மக்களால், வீடு இல்லாத மக்களால் அந்தப் பணத்தை வைத்து உடனடியாக வீட்டைக் கட்டிக்கொள்ள முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே இதுபற்றி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் கலந்து பேசி உடனடியாக அந்தக் கடன்களைக் கொடுப்பதற் குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) [1983 நவம்பர் 18

அடுத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் கடன் வாங்கினால் 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி கட்ட வேண்டி இருக்கின்றது. அப்படி கட்டாமல் 3 மாதத்திற்கு மேல் காலம் கடந்துவிட்டால் அதற்கு காம்பவுண்ட் இன்டரஸ்ட் போடுகின்ற நிலைமை இருக்கின்றது. வெளியிலே 2 ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்கினால் வருகின்ற வட்டியினைவிட இது அதிகமாக ஆகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே இப்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வட்டி கட்டவேண்டிய நிலைமை இருப்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. அதாவது காம்பவுண்ட் இன்டரஸ்ட் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது. எனவே இதை பற்றி எல்லாம் மத்திய அரசுக்குஎழுதி காம்பவுண்ட் இன்டரஸ்ட் இல்லாமல் 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஆண்டுக்கு ஒரு முறை பணத்தைத் திருப்பிக் கட்டலாம் என்ற நிலைமையை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தால் அது சாலச்சிறந்ததாக இருக்கும்.

அடுத்து கடன் நிவாரணங்கள் அளிக்கப்படுவது பற்றி கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்குத் தெரியவில்லை. கடன் நிவாரணத்திற்காக மனுக்கள் கொடுப்பது பற்றி தெரியாமல் இருக்கிறார்கள். நாம் பத்திரிகையிலே போடுகிறோம், ரேடியோவிலே சொல்கிறோம். இருந்தாலும் தெரியவில்லை. எனவே இதற்கு இன்னின்ன காலம் என்று இல்லாமல் அப்போதைக்கப்போது சொல்லி, அந்த வகையிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே மனுக்கள் கொடுக்கப்பட்டால் அவற்றை உடனுக்குடன் பரிசீலனை செய்து நிவாரணத்தை கால விரயம் செய்யாமல் கொடுப்பதற்குரிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் மூலம் காலக்கெடுவை நீட்டிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை, வரவேற்கத்தக்கது. இப்படிக் காலத்தை நீட்டிப்பதன் மூலமாக கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் நிலை கிராமப் புறங்களில் இல்லை. கிராமப் புறங்களில் உள்ள மக்கள் மனு செய்வதற்குக் கூட உற்சாகப்படுவது இல்லை. அவர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை. மனு செய்கிறவர் தாசில்தார் அலுவலகத்திற்கும், ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கும் பலமுறை சென்று வருவதால் சலிப்பு ஏற்பட்டு கடன் நிவாரணம் பெறும் நிலையையே வெறுத்து விடுகிறார். இன்றைக்குக் கடன் நிவாரண மனுக்களைப் பரிசீலிப்பதற்காக தாசில்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.



1983 நவம்பர் 18] (திரு. கே. ஆர். சுந்தரம்)

இன்றைக்கு தாசில்தார்களுக்கு எத்தனையோ வேலைகள் சுமத்தப்பட்டு இருக்கின்றன. எனக்குத் தெரிந்து, மனு செய்தவர்கள் தாசில்தாரால் நேரடியாக அழைக்கப்பட்டு அலுவலகத்திற்குச் செல்லும் நேரத்தில், தாசில்தார் அவர்கள் வேறு வேலையாக வெளியே சென்று இருக்கிறார்கள் என்பதற் காக ஒரு நாள் முழுவதும் காத்து இருந்து திரும்பும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் கடன் மனுக்களைப் பரிசீலிப் பதற்காக தனித் தாசில்தார் நியமனம் செய்தால் இந்தப் பிரச்னையை ஓரளவிற்குத் தீர்க்கமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அரசு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் பட்டவர்கள் மனு செய்வதற்கு காலக்கெடு நிர்ணயிக்கும் நேரத்தில், அந்தத் தகவல் அவர்களுக்குத் தெரியும் வகையில் கிராமப்புறங்களில், பஞ்சாயத்து மூலமாகவும், கிராம நல அலுவலர்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் நல்லமுறையில் நிறைவேறுவதற்கு இது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கடன் பட்டவர்கள் 4 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்கள் என்ற சான்றிதழ்களை அவர்களே — கடன்பட்டவர்களே நிரூபிக்கவேண்டும் என்று இருப்பதை, கடன் கொடுத்தவர்கள் நிரூபிக்கவேண்டும் என்ற வகையில் திருத்தம் கொண்டு வந்தால் சரியாக இருக்கும் என்று கூறி, அந்த வகையில் கடன் பெற்றவர்கள் நல்ல வகையில் பயன்பெறச் செய்வதற்கு உகந்த முறையில் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து, அதற்காக தனித் தாசில்தார் அமைக்கவும் அரசு முன்வந்து, இந்தச் சட்டத்தை மக்களுக்குப் பயன் உள்ள வகையில் ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி : பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் திருத்தச் சட்டத் தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தின் மூலம் இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு கேட்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் இப்படி 6 மாதத்திற்குக் கால நீட்டிப்பு கேட்டுக் கொண்டு இருப்பதற்கான காரண காரியங்கள் என்ன என்பதைப் பார்த்தால், கிராமப்புறத்தில் உள்ள மக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் மனு செய்யாமல் இருந்தார்கள், ஆகவே, அந்த மக்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதற்காக இந்தக் கால நீட்டிப்பு தேவை என்று சொல்லப்படுகிறது. கடன் நிவாரணம் கோருவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி அந்த மக்களுக்குத் தெரியவில்லை. அவர்களின் நன்மைக்காக நிறைவேற்றப்பட்ட

(திரு. செ. சிவசாமி) [1983 நவம்பர் 18

சட்டங்கள் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது நமக்குத் தெரிகிறது. அதன் காரணமாக இந்தத் திருத்தத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இதிலே குறிப்பிட்டுள்ளபடி, 24—8—1982 ஆம் ஆண்டில் இருந்து 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாகச் சொல்லப் பட்டுள்ளது. அதாவது, 24—2—1984 வரை அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது. இப்படி குறிப்பிட்ட தேதி நிர்ணயிக்காமல், எந்த நேரத்திலும், எந்த அளவிலும், அந்தக் கடன்பட்டவர்கள் அந்த நிவாரணத்தைப் பெற தகுதியுடையவர்களாக இருந்தால் எப்போது வேண்டு மானாலும் நிவாரணம் பெறும் வகையில் இதை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிவாரணம் பெறவேண்டும் என்றால், நிச்சயமாக அவர்களால் நிவாரணம் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தக் குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்காமல், அவர்கள் எந்தக் காலத்தில் நிவாரணம் பெற முடியுமோ, நிவாரணம் பெற உரியவர்களாக ஆகிறார்களோ அந்தக் காலத்தில் அதைச் செய்து கொள்ளலாம் என்கிற அளவில் அவர்களுக்கு நிவாரணம் தருகிற முறையில் இந்தச் சலுகையைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்குத் தாசில்தார் ஆபிசில் போய்ப் பார்த்தால் ஆயிரக்கணக்கான மனுக்கள் குவிந்திருக்கின்றன. அங்கு செல்லக்கூடிய நேரத்தில் ஒரு சீட் கொடுத்து உட்கார வைக்கிறார்கள். உட்கார வைத்து எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்கிறார்கள். குறிப்பாக அடகுக்கடைக்காரர்கள் அந்த நன்மையைப் பெற்றுவிடுகிறார்கள். சாதாரண விவசாயி சென்றால் ' அழுக்கு வேட்டிகாரன் ', போ என்று சொல்லக் கூடிய நிலையில்தான் இருக்கிறது. அந்த அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. விவசாயிகளுக்கு மதிப்பு கொடுக்கப்படு வதில்லை ; அவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை, தேவையான ரிக்கார்டு இருந்தாலும் ஏற்றுக் கொள்வதில்லை; அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகளை விவசாயிகள் பெற முடியவில்லை.

அதே நேரத்தில் தாசில்தார்கள் எந்த நிலையில் இருக்கிறார் கள் என்று பார்த்தால், சில தாசில்தார்கள் காட்டு தர்பார் நடத்துகின்ற முறையிலே இருக்கிறார்கள். வேறு வழியிலே கவனத்தைச் செலுத்தி ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கக்கூடிய நிலை யில் இருக்கிறார்கள்.



1983 நவம்பர் 18] (திரு. செ. சிவசாமி)

இன்றைக்கு முகவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஓர ளவுக்கு மழை பெய்தது. அதற்குப் பின்னால் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலாக மழை இல்லை. நானும், திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும் அங்கே சென்று பார்த்தோம். மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதனால் அதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதிமக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஏழை எளிய மக்கள். இந்த நிலையிலே அந்த ஏழை எளிய மக்களுக்குக் கடன் நிவாரணம் கிடைக்கின்ற முறையிலே கடன் நிவாரணச் சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். அதைப்போன்று கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையிலும் அதிலிருந்தும் நிவாரணம் பெறக்கூடிய வகையில், அவர்கள் வாழ்வதற்கு நல்வழி செய்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் எத்தனை சட்டங்களைக் கொண்டுவந்தாலும் இன்றைக்குப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் மக்களின் வாழ்க்கை மேம்பாடு அடையவில்லை ; வறுமைக் கோடுதான் வளர்ந்து கொண்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டு கணக்குப்படி வறுமைக் கோட்டிற்கு கீழே இருந்தவர்கள் 45 சதவீதம் மக்கள். அந்தக் கணக்கு இன்றைக்கு 62 சதவீதமாக மேலே போய் இருக்கிறது. இந்த நிலைமை ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகை கள் அவர்களுக்கு கிடைக்கவில்லை ; வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவேதான் சர்வசாதாரண நிலையில் இருக்கிற மக்கள் மேலே வரமுடியாமல், வறுமையிலேயே வாடிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய வர்க்கத்தில் இருந்தவர்கள் ஏழைகளாக மாறுகிறார்கள் ; ஏழை விவசாயியாக இருந்தவர் கள் கூலி விவசாயிகளாக மாறுகிறார்கள் ; கூலியாக இருந்தவர் கள் இன்னும் கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையில் எந்தவிதமான சட்டம் வந்தாலும் செல்லு படியாகாமல் இருக்கிறது ; வறுமைக் கோடு வளர்ந்து கொண்டி ருக்கிறது. இதை எல்லாம் சிந்தித்துப் பார்த்து, ஒட்டுமொத்த மாக இப்படிப்பட்ட சங்கடங்களைப் போக்குகின்ற வகையில், மாற்றங்களைச் செய்து அரசாங்கம் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல சட்டத்தைக் கொண்டுவந்து சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படி சமுதாய மாற்றம் ஏற்படாதவரையில் இப் படிப்பட்ட கஷ்டங்கள் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். கஷ்டங்களைப் போக்க சட்டங்கள் பயன்பட வேண்டுமென்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில எந்த நல்ல நோக்கோடு இது கொண்டுவரப் பட்டது என்பது அவைக்கு ஏற்கனவே நான்கு முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் தமிழகம் இருந்தபோது ஒரு கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அது வட்டியைத் தள்ளுபடி செய்து, கடனையும் தள்ளுபடி செய்து, கிராமப்புற மக்களுக்கு மட்டும் உதவி செய்யும் நோக்கோடு கொண்டுவரப்பட்டது. ஆனால் 1976 ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டில் கடனை முழுமையாக ரத்து செய்து, ஏழை எளிய மக்கள், நலிந்த பிரிவு மக்கள் பட்டிருக்கின்ற கடன் தொல்லையிலிருந்து விடுதலை பெற எந்த ஒரு சட்டமும் கொண்டுவரப்படவில்லை என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1976 ஆம் ஆண்டிலே தமிழகம் குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கொண்டுவரப்பட்ட சட்டம் கூட கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டும், 2,400 ரூபாய்க்கும் கீழே வருமானம் உள்ள மக்களுக்கு மட்டுமே சலுகை கிட்டும் ஒரு நிலையில் கொண்டு வரப்பட்டது. ஆனால் 1980 ஆம் ஆண்டில்தான் தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக 4800 ரூபாய்க்கும் கீழ் வருமானம் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் — அவர்கள் நகரப்புறங்களில் இருந்தாலும், கிராமப்புறங்களில் இருந்தாலும், உழவர்களாக இருந்தாலும் — பயன்படுகின்ற வகையில், 4800 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்கள் என்று நிரூபிக்கப்படும்போது அவர்கள் சந்தித்த கடன், வட்டி முழுவதும் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற புரட்சிகரமான சட்டத்தை இந்த அரசுதான் முதன் முதலாக ஈடேற்றியது என்பதை இந்த அவை நன்கு அறியும்.

(நண்பகல் 12–00)

அப்படி அந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றியபோது பட்டி தொட்டிகளிலே இருக்கின்ற மக்களுக்கு அது கிராமத்திலுள்ள மக்களுக்குப் பலன் அளிக்க வேண்டும் என்ற நோக்கோடு போதிய அவகாசம் தரவேண்டும், விளம்பரமும் நல்லமுறையில் தரவேண்டும் என்ற முறையில் நாம் ஆரம்பத்தில் நீட்டிப்பைச் செய்தோம். நீட்டிப்புச் செய்கின்ற காரணத்தால் விளம்பரமே இல்லை என்ற பொருள் அல்ல. மக்களுக்கு விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. அந்தந்த அரசியல் கட்சிகளும்கூட பொறுப்பேற்று இப்படி ஒரு சட்டம் இருக்கிறது, தமிழக அரசு புரட்சித் தலைவர் அரசு தமிழக வரலாற்றில் முதல் முறையாக 4,800 ரூபாய்க்கும் கீழ் கடன்பட்டுள்ள அனைத்து ஏழைகளுடைய கடனையும் வட்டியை



யும் முழுவதுமாக ரத்து செய்திருக்கிறது என்பதை நீங்களும் சொல்லாமல் இல்லை ; நாங்களும் சொல்லாமல் இல்லை. அரசு இயந்திரம் இதுகுறித்து விளம்பரம் செய்யாமல் இல்லை. இருந்தபோதிலும் முழுவதுமாக அந்தப் பலன் அவர்களுக்குச் சென்று அடைய, விவரம் தெரியாத காரணத்தால் எப்படி தாசில் தாரை அணுகுவது, யார் மூலம் அணுகுவது என்பதுகூடத் தெரியாத அளவிற்கு படியாத மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், பட்டி தொட்டிகளில் அதற்காக சில அமைப்புகளை இந்த அரசு ஏற்படுத்தியது. ஏற்கனவே இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய சில ஆலோசனைகளை ஏற்று, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். அந்த உத்தரவின் அடிப்படையில் தாசில்தார்கள் சில நேரங்களிலே தவறு செய்கின்றார்கள் என்ற தகவல் வந்தபோது தக்க நடவடிக்கை எடுப்பதோடு அல்லாமல் ஒரு ஆலோசனைக் குழுவையும் அமைக்க வேண்டும் என்ற உத்தரவை இந்த அரசு இட்டிருக்கிறது.

ஏதோ தமிழகத்தில் இருக்கிற தாசில்தார்கள் அனைவருமே தவறானவர்கள் என்ற நோக்கத்தோடு நாம் பேசக்கூடாது. காணும் எந்த ஒரு சட்டமாக இருந்தாலும் அந்தச் சட்டத்தை ஈடேற்ற வேண்டிய பொறுப்பு அரசு இயந்திரத்திற்குத்தான் இருக்கிறது. அரசு இயந்திரம் சுழலவேண்டுமானால் அனைவருமே குற்றவாளிகள் என்று நாம் எண்ணுவோமேயானால் எந்தப் பிரச்சினையையும் நாம் ஈடேற்றமுடியாது என்பதையும் நாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. சில தாசில்தார்கள் ஏனோதானோ என்று இருந்தால், வேறு பல பணிகள் காரணமாக பிரச்சினையை அணுகாமல் இருந்தால் ஏழைகளுக்கு குறுகிய காலத்தில் எதிர்பார்க்கின்ற காலத்தில் எதிர்பார்க்கின்ற பலன் கிட்டாமல் போய்விடுகிறது என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால்தான் இந்தச் சட்டத்தை ஈடேற்றுவதற்கு தனி தாசில்தார்களை டெபுட்டி தாசில்தார்கள் என்ற அளவிலே, இதற்காக கடன் நிவாரணச் சட்டத்தில் ஏழைகளுக்கு சலுகை அளிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தனி அமைப்பையும் நாம் ஒவ்வொரு வட்டத்திலேயும் உருவாக்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என நான் எண்ணுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்னும் ஒரு உத்தரவை நாம் இட்டோம். அந்த உத்தரவின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பணி செம்மையாக நடைபெறுகிறதா, ஏழைகளுக்கு எத்தகைய ஆலோசனைகளை வட்ட அளவிலே வழங்குவது என்பதைக் கூறுவதற்கும் தாசில்தார்கள் தாமதப்படுத்தினால் அந்த தாமதத்தைக் களைவது எப்படி என்பதை அறிவுறுத்த

[திரு. சி. பொன்னையன்] [1983 நவம்பர் 18

வும் மாவட்ட அளவிலே ஒரு குழுவையும் வட்ட அளவிலே
ஒரு குழுவையும அமைக்க வேண்டும் என்ற உத்தரவை இந்த
அரசு இட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் இந்தக் குழு குறைந்தபட்சம் 5
உறுப்பினர்களை உள்ளடக்கி இருக்க வேண்டும் என்றும் அந்த
5 உறுப்பினர்களில் ஒருவர் விவரம் புரிந்த வழக்கறிஞராக
இருக்க வேண்டும் என்றும் நாம் உத்தரவிட்டு, இதுகாறும் 11
மாவட்டங்களிலே அது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு இருக்
கிறது என்று சென்ற அவையிலே நான் உறுதிமொழி தந்தேன்.
அந்த உறுதிமொழியின் அடிப்படையிலே மாண்புமிகு முதல்
வர் அவர்கள் ஆணையிட்டு தற்போது 11 மாவட்டங்களில்
ஏழைஎளியவர்களுக்கு—வட்ட ஆட்சியருடைய அலுவலகத்தை
நோக்கி ஏழைகள் செல்லுகிறபோது மாண் மிகு உறுப்
பினர் சிவசாமி ரெக்கார்டுகள் வந்தால் ரெக்கார்டு
களை வாங்குவதில்லை என்று சொன்னார்கள். அது கடந்த
காலமாக இருக்கலாம். ஆனால் தற்போது இல்லை. அவர்
களுக்கு— அப்படி உதவுவதற்காகத்தான் ஆலோசனைக் குழுக்கள்
போட்டு, அந்தக் குழுவிலே கண்டிப்பாக ஒரு வழக்கறிஞர் இருக்க
வேண்டும் என்றும் அந்த வழக்கறிஞர் கூட ப்ரி லீகல் எய்ட்
போர்டிலே இருக்கிறவர் — ஏழை எளியவர்கள் நலனில் அக்கரை
யோடு செயல்படுவதற்காக அமைக்கப்பட்ட அரசினுடைய
உதவியோடு இருக்கின்ற அந்த ப்ரி லீகல் எய்ட் போர்டிலே
அங்கத்தினராக இருக்கிற வழக்கறிஞர்கள் ஏழை எளியவர்களின்
நலனில் அக்கறை உள்ள வழக்கறிஞர்கள், அவர்களில் ஒருவர்
—இதில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டு
இந்தச் சட்டத்தை நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகி
றோம்.

அதுமட்டுமல்லாமல் இந்த அரசினுடைய நோக்கத்தை
பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் பலரும் பல
வாறு பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் வெங்கட்ட
ரெட்டி அவர்கள் பேசுகின்றபோது டைம் லிமிட் பார்
டிஸ்போசல் வேண்டுமென்று சொன்னார்கள். அந்த டைம்
லிமிட் பார் டிஸ்போசல் இந்த சட்டத்திலே கொண்டுவர வேண்
டும் என்பதல்ல. Fx cutvi instructi s also would b sufficient.
என்ற முறையிலே அந்த உத்தரவினையும் இட்டு, குறிப்பிட்ட
கால அளவிலே அதைக் கண்டுபிடித்து முடிக்க வேண்டும் என்ற
ஒன்றையும் நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

அதுமட்டுமல்லாமல் செக்யூர்ட் லோன், அன்-செக்யூர்ட்
லோன் என்ற இந்த 2 கடன்களையும், அன்செக்யூர்ட் லோன்
என்று சொல்லக்கூடிய பிராமிசரி நோட் போன்ற கடனையும்
எல்லாம் இதிலே பரிசீலிப்பது இல்லை என்ற கருத்தை மாண்புமிகு
உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள். அது தவறு.



1983 நவம்பர் 18] [திரு. சி. பொன்னையன்]

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும். Whether a debt is a
secured debt or unsecured debt, that is secured by the Act
காரணம் செக்யூர்டாக இருக்குமானால், சிலர் சொத்தை
வைத்து கடன் வாங்குகிறார்கள், மற்ற பிராட்பர்ட்டியை வைத்து
கடன் வாங்குகிறார்கள். இதற்கு தாசில்தாருக்கு அதிகாரம்
இருக்கிற அதேநேரத்திலே பிராமிசரி நோட் போன்ற ஒரு
கடனாக இருக்குமானால் தெளிவாக புரவிஷன் இருக்கிறது.

அன்-செக்யூர்ட் டெட்டைப் பொறுத்தவரைக்கும் unsecured
debt Act declares that the debt is wholly discharged
ஆனால் பிராமிசரி நோட் என்று வருகிறபோது Promissory
notes covered by the Negotiable Instruments Act
என்ற அந்தச் சட்டத்திற்கு உட்பட்டுவிடுகிறது. இந்தச் சட்
டத்திலே பாராளுமன்றம் திருத்தம் கொண்டுவர வேண்டியதிருக்
கிறது. பாராளுமன்றத்திலே இந்த சட்டத்திலே திருத்
தத்தைக் கொண்டு வருகிறபோதுதான், அன்-செக்யூர்ட் லோனுக்
கும் இதுபோன்று பாதுகாப்பைத் தரமுடியும். இருந்தபோதி
லும் இந்தச் சட்டத்தில் அன்-செக்யூர்ட் லோனுக்கு பாதுகாப்பு
எப்படி கிட்டுகிறது என்றால் அவருடைய கடன் முழுவதும் ரத்து
செய்யப்பட்டதாக சட்டம் அறிவித்து விடுகிறது. ஆனால் கட
னைத்தந்த அந்த கிரடிட்டார், இல்லை இந்தச் சட்டம் செல்
லாது, அல்லது கடன்பெறக்கூடிய தகுதியை இவர் பெற்றவர்
அல்ல என்று சொல்லுவாரேயானால், அவர்தான் நீதிமன்றத்திற்
குச் செல்ல வேண்டுமேயொழிய, அந்தக் கடனாளி நீதிமன்றம்
செல்லவேண்டியதில்லை. நீதிமன்றத்திற்கு அந்தக் கடன்
கொடுத்தவர் சென்று அந்தக் கடன் வாங்கியவர், அந்த பிரா
மிசரி நோட்டிலே கடன் வாங்கியவர், இந்தச் சட்டத்தினுடைய
பயனைப் பெறக்கூடிய தகுதியற்றவர், 4800 ரூபாய் வருமானத்
திற்கு மேல் வருமானம் உள்ளவர் என்று அவர் கருதுவாரே
யானால் நீதிமன்றத்திலே அதை நிரூபிப்பது அவருடைய
கடமை என்ற முறையிலேஇந்த அன்-செக்யூர்ட் லோனுக்கும் பாது
காப்பு இருக்கிறது என்பதை நான் சொல்லவிரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வெங்கட்ட ரெட்டி அவர்கள் பேசு
கின்றபோது ரூரல் ஹவுசிங் கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டி
களைப் பொறுத்தவரைக்கும் சொன்னார்கள். I think he refers
to the Rural Housing Co-operative Societies என்று
நான் கருதுகிறேன். அந்த Rural Housing Co-operative Society
பொறுத்த வரைக்கும் கிராமத்திலே இருக்கிற மக்
களுக்கு கடன் கொடுப்பதில் அவர்கள் தாராளமாகத்தான்
நடந்து வருகிறார்கள். ஆனால் பிரச்சினை ஒன்று இருக்கிறது
ரூரல் ஹவுசிங் கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிக்கு வேண்டிய
உதவியினை நாம் பெறுகிறபோது, எல்.ஐ.சி. மூலமாக கடனைப்
பெறுகிறோம், அதோடு ஹட்கோ மூலமாக கடனைப் பெறு
கிறோம். மத்திய அரசினுடைய உதவியும், உறு துணையும்

[திரு. சி. பொன்னையன்] [1983 நவம்பர் 18

இதற்குத் தேவையாக இருக்கிற காரணத்தால் சில நேரங்களில் போதிய அளவிற்கு நாம் எதிர்பார்க்கின்ற உதவி கிட்டாத நேரத்தில், பிரச்சினைகள் எழுமேயொழிய, இந்த அரசைப் பொறுத்த வரைக்கும், ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக வெற்றி யடையவேண்டும். அதன் மூலமாக நலிந்த பிரிவினருக்கு நலன் கிட்ட வேண்டும் என்பதற்காக தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் எதற்கு நீட்டிப்பு, நீட்டிப்பு என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டமே இல்லாத நேரத்தில், ஏழை எளியவர்களுடைய ரத்தத்தை உறிஞ்சு கிறார்கள் வட்டிக் கடைக்காரர்கள், மார்வாடிகள், பான் புரோக்கர்கள் என்று சொல்பவர்கள் எல்லாம். இந்தச் சட்டம வந்த பிறகு இந்தச் சட்டத்தினுடைய பலன் ஏழைகளுக்கு கிட்ட வேண்டும் என்று நாம் விழைகிறபோது, ஏன் நீட்டிப்பு' நீட்டிப்பு என்று கேட்பது ஏழை மக்களுடைய நலனுக்காக வாதாடு வதாக அமையாது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் 15,268 அடகுக் கடைக்காரர்கள் இருக்கிறார்கள். பான் புரோக்கர்ஸ், மணி லெண்டர்ஸ் என்று சொல்லக் கூடிய வட்டிக் கடைக்காரர்கள் 3,252 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்த வரைக்கும் இந்தச் சட்டமே வேண்டாம் என்ற கருத்தைக் கூட மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக கடன் ரத்து என்று வருகிறபோது பல்லாயிரக் கணக்கான ஏழை எளிய வர்களுக்கு கடன் பெற வேறு வசதியில்லாமல் போய் விடுகிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்னாம் மாள் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் ராஜ மாணிக்கம் அவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையில் அவர் கள் பேசினார்கள், இந்தச் சட்டத்தில்

Money Lenders' Act and Pawn Brokers' Act.

என்ற சட்டங்கள் எல் லாம் நடை முறையில் இருப்பது நமக்குத் தெரியும். 12 சதவீதம் வட்டி ஒரு ரூபாய்க்கு என எழுதுவார்கள். ஆனால் உண்மை யிலேயே அப்படி 1 ரூபாய்க்கு தருகிறார்களா ? என்றால் இல்லை என்பதை அவை நன்கு அறியும்.



1983 நவம்பர் 18] [திரு. சி. பொன்னையன்]

(பிற்பகல் 12-10).

அங்கத்தினர்கள் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு ரூபாய் என்று எழுதிவிட்டு, 3 ரூபாய் வட்டி, 4 ரூபாய் வட்டி, 48 சதவீதம் வட்டி., 36 சதவீதம் வட்டி என உண்மை யிலேயே வட்டியை வைத்து, அந்த வட்டியைக் கூட உதாரண மாக கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் அல்லது 100 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் என்றால், 100 ரூபாய்க்கு 48 ரூபாயை வட்டி யாக முன்னமேயே எடுத்து விட்டு, மீதம் உள்ள பணத்தை மட்டுமே அந்த ஏழைகளுக்கு தருகிற, மனிதாபிமானம் இல்லாமல் கடிய முறையிலே வட்டிக் கடைக்காரர்கள் பெரும்பாலும் செய்து வருவது நாடு அறியாத ஒன்று அல்ல. ஆனால் இந்தக் கொடுமை களிலிருந்து அந்த ஏழைகளைக் காக்க வேண்டும் என்ற கோரிக்கை யின் அடிப்படையிலும் ஏழைகளின் நலனில் இந்த அரசு அக்கறையோடு இருக்கின்ற காரணத்தினாலும் தான், 4800 ரூபாய்க்கு கீழே வாங்கியவர்கள், சிறு உழவர்களாக இருந்தாலும் சரி, குறுநில உழவர்களாக இருந்தாலும் சரி, நிலமற்ற ஏழை களாக இருந்தாலும் சரி, நகர்ப்புற நலிந்த பிரிவு மக்களாக இருந்தாலும் சரி, ஓரளவிற்கு ஊதியம் பெற்று, அந்த ஊதியம் 4800-ஐ தாண்டாத நிலையிலே உள்ள மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு நன்மையை செய்து தர வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதிலே இன்னொரு முக்கியமான விஷயம். நகையை, பாத்திரத்தை எல்லாம் அடகு வைத்து, அந்த வட்டிக் கடைக் காரர்கள் அதையெல்லாம் விற்கக் கூடிய நேரத்திலே, ஏழைகளால் கட்ட முடியாது. 100க்கு 48 ரூபாய் வட்டி என்று இருக்கிற போது வட்டியை முன் கூட்டியே முன் பணமாக பிடித்து விட்டு தருகிறபோது, அந்தக் கடனை வாங்குகிற ஏழை, கண்டிப்பாக எந்தக் காலத்திலேயும் அந்தக் கடனை திருப்பித் தரமாட்டான். நகை அவர்களுக்கு போய் விடுகிறது. ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு பார்க்கிறான் கடன் கொடுத்தவன். இது தான் வாய்ப்பு என எண்[illegible]கிறான். ஏழைகளின் சோதனையைப் பயன்படுத்தி, நகையை விற்று விடுகிறான். பாத்திரங்களை, மற்ற பிராப் பர்ட்டிகளையும் விற்று விடுகிறான். இந்தக் கொடுமைகளை யெல்லாம் போக்குவதற்கு ஒரு காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்று முழுவதும் மாற்றங்கள் நிறைந்த, ஏழை எளியவர்களின் நலனை பேணக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு ஏற்கெனவே அறிவிப்புச் செய்து, அதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு, மைய அரசின் ஒப்புதலோடு அந்தச் சட்டத்தை இயற்ற இருக்கிறது என்பதை அடகு கடைக்காரர் கள் சட்ட முன்வடிவிலே பேசும்போது ஏற்கெனவே நான் அவைக்கு கூறியிருக்கிறேன்.

அப்படி ஒரு புதிய சட்டம் வருகிறபோது 12 சதவீதம் என்று இருந்தால், 13 சதவீதம் அந்த வட்டிக் கடைக்காரன் வட்டியை விதிப்பானேயானால், அப்போது அவர்களுக்கு சிறைத் தண் டனை கூட, குறைந்த பட்சம் கொடுக்க வேண்டும். வட்டியை முன்கூட்டியே பிடித்துக் கொள்வதும், அதிகப்படியான வட்டியை விதிப்பதும் அல்லது நகை போன்ற சொத்துக்களை, அவன் ஏழ்மையைப் பயன்படுத்தி ஏமாற்றி விற்று விடுவதும், அல்லது நகைகள் போன்ற சொத்துக்களையெல்லாம் பத்து இலட்சம், 30 இலட்சம் ஒரு கோடி என, நகைகளையெல்லாம் அடகுக்கு வாங்கி திடீர் என்று தமிழகத்தை விட்டே ஓடிவிடுவது; முகவரியே தெரியாமலே ஓடி விடுவது போன்ற கொடுமைகளி லிருந்து ஏழைகள் காக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தக் கொடுமைகளையெல்லாம் களையக் கூடிய குறைந்த பட்ச சிறைத் தண்டனை அளிக்கக் கூடிய ஒரு புதிய சட்டத்தை இந்த அரசு விரைவிலே கொண்டு வர இருக்கிறது என்பதையும் ஏற்கெனவே நான் அவைக்கு தெரிவித்தேன்.

அந்த அடிப்படையில் பிரச்சினைகளை நாம் அணுகுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது கூட்டுறவுக் கடன் பற்றிச் சொன்னார்கள். ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எடுப்பது பற்றி சொன்னார்கள். மன்னிக்க வேண்டுகிறேன். அது மிகத் தவறான தகவல். நான் தெளிவாக எழுத்து மூலமாக முதலமைச்சருடைய ஆணையைப் பெற்று உத்தரவிட்டிருக்கிறது. எந்த ஒரு கூட்டுறவுக் கடனுக் கும், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்து மக்கள், இன்னல் களுக்கு இடர்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிற காரணத் தால், மைய அரசு விவசாயிகள் வாங்கிய கடனை திரும்ப பெறுங்கள் என்று வற்புறுத்திய போதிலும், ரிசர்வ் வங்கி வற் புறுத்திய போதிலும், உலக வங்கி அடுத்த பயிருக்கு கடன் தர மாட்டோம், தமிழகத்தை இருட்டடிப்புச் செய்து விடுவோம் என்று கூறிய போதிலும், விவசாயிகள் கடனை ரத்து செய்ய மத்திய அரசு மறுத்து விட்ட போதிலும், இந்த அரசைப் பொறுத் தவரைக்கும், ஜப்தி நடவடிக்கைகள் அறவே கூடாது என்று தெளிவான உத்தரவுகளை ஏற்கெனவே இட்டிருக்கிறது என் பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

விவசாயிகளுக்கு ஏழைகளுக்கு கூட்டுறவுத் துறையிலே என்ன செய்தீர்கள் என்று கூடக் கேட்டார்கள். இந்த அரசு தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு தான், பாரத இந்திய வரலாற்றிலே எந்த மாநிலத்திலும் இது காறும் இல்லாத அளவுக்கு வரலாற்றுச் சிறப்பாக 125 கோடி ரூபாய் உழவர்கள் மீது சுமத்தப்பட்ட கடனை, வட்டியை, முழுவதும் ரத்து செய்தது. மேற்கொண்டு 75 கோடி ரூபாய் கடனை





உழவர்கள் உலக வங்கிக்கு ரிசர்வ் வங்கி மூலமாக, தற்போதைய நபார்ட் மூலமாக கட்ட வேண்டிய கடனை, உழவர்களால் முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டபோது, 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற திருக் குறளுக்கு ஒப்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு உழவர்கள் கட்ட வேண்டிய கடனை, அவர்கள் கட்ட முடியாது தவித்த நிலையில், பரவாயில்லை உங்களுக்காக அந்தக் கடனை இந்த அரசு கட்டும் என்று சொல்லி, கட்டி, அந்த உழவர்கள் அடுத்தக் கடனை பெறக் கூடிய வாய்ப்பை ஏற் படுத்தி தந்தது, இந்திய வரலாற்றிலேயே தமிழக அரசு ஒன்று தான். இப்படி 200 கோடி ரூபாய் சலுகைகளை இந்த 5 ஆண்டுக் காலத்தில் உழவர்களுக்கு தமிழக அரசு செய்திருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மேலும் ஒன்றைச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்க ளுக்கு எந்த ஒரு நிவாரணமும் இல்லை என்று சொன்னார்கள். அதற்கும் நான் மறுப்பைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த 200 கோடி ரூபாய் சலுகையை தமிழக அரசு உழவர்களுக்கு அளித்திருக்கிறதே, அதிலே பெரும்பான்மையான சலுகைகளைப் பெற்றிருப்பது தஞ்சை மாவட்டம் தான் என்பதை நான் பெருமை யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளில் கடந்த 3 ஆண்டு காலமாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள உழவர்களுக்கு போதிய சலுகை செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். தஞ்சைத் தரணி இது காறும் பஞ்சத்தைச் சந்திக்கவே இல்லை என்று சொல்லவில்லை. சந்தித்து இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும் சந்தித்து இருக்கிறது. ஆனால் புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலே தஞ்சைத் தரணி யிலே அது போன்ற பஞ்சம் ஏற்பட்டபோது கர்நாடக மாநிலத்தி லிருந்து தண்ணீர் காவிரியிலே விடப்படாத நிலை ஏற்பட்ட போது அந்த உழவர்கள் எல்லாம் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு, 12 கோடி ரூபாய்த் திட்டத்தில் 5 ஆயிரம் பில்டர் ட்யூப் வெல்ஸ் அமைத்து இது காறும் தமிழ கத்திலே முதல் முறையாக தஞ்சைமாவட்டத்துவிவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிற அரசு இந்த அரசுதான் என் பதை நான் திரு. ராசமாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சிவசாமி அவர்கள் பேசுகிறபோது 'நோ டைம் லிமிட்' என்ற முறையிலே இந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டே போகக் கூடாது, எப்போதும் நிரந்தரமாக அமல் படுத்த வேண்டு மென்று சொன்னார்கள். இந்தச் சட்டம் அப்படி எப்போதும் அமலில் இருக்க வேண்டுமானால் 4,800 ரூபாய்க்கும் கீழே வரு

[திரு. சி. பொன்னையன்] [1983 நவம்பர் 18]

மானம் உள்ளவர்கள் கடன் வாங்கிய அனைவருடைய கடனும் ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுகிற போது, இந்தச் சட்டம் எப்போதும் அமலில் இருக்க வேண்டுமென்ற நிலை வந்தால் 4800 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்கள் எந்த இடத்திலும் எவரிடத்திலும் கடன் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடும் என்பதை கவனத்திலே கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொல்லி இந்த சட்ட முன் வடிவை அவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ,நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 43/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.



(ஊ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1983) **ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. என். எஸ். வ். சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் இரண்டாவது திருத்தத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிற நேரத்திலே காரண நோக்க விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 'இந்த பொது விற்பனை வரிச் சட்டத்தைச் செயல் படுத்துவதில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில்' என்று மட்டும் மொத்தமாகப் பொதுப் படையாகப் போட்டிருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் எனக்கு விளங்கவில்லை. இன்னும் கொஞ்சம் விவரங்களை—என்ன மாறுதல்களைச் செய்கிறோம், மாறுதல்களுக்கு அவசியம் என்ன வந்தது என்பதையெல்லாம் சொல்லியிருந்தால—அந்த அனுபவத்தை எங்களோடு சேர்ந்து அவர்களும் பகிர்ந்து கொண்டிருப்பார்களானால் எங்களுக்கு வெகு எளிதாக இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 12–20)

இந்தப் பிரிவில் 3-வது பிரிவைச் சார்ந்த 2-வது உட்பிரிவில் ஒருமுனை வரிவிகிதத்திலே பால் உணவுப் பொருட்கள் பால் நீங்கலாக ஆனால் பால் மாவு உட்பட மாநிலத்தின் முதல் விற்பனை முனையில் 4 சதவீதம் என்று இருந்ததை விட்டு விட வேண்டும் என்று போட்டிருக்கிறது. அப்படி பார்க்கிற நேரத்தில் ஒரு வேளை இதனை விட்டு விட்டார்களா எடுத்து விட்டார்களா 4 சதவீதம் பாலுக்கு வேண்டியதில்லை என்ற உணர்வோடு எடுத்து விட்டார்களா என்று பார்க்கிற நேரத்தில் பின்னால் 133-வது பிரிவில் பிஸ்கோத்துகள், மிட்டாய்கள், சாக்லெட்டுகள், இனிப்பு வகைகள், வெண்ணை, நெய், பாலாடைக் கட்டிகள் என்று வருகின்ற அதன் தொடர்ச்சியாக அதற்கு இடையில் இந்த பால் மாவு உட்பட உணவுப்பொருட்கள். என்று இடைச் சொறுகலாக இங்கே சேர்க்கப்பட்டு இருக்கிறது.

---

**1983-ம் ஆண்டு அக்டோபர் 26–ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 நவம்பர் 18

இதற்கு முன்னால் இந்த மாமன்றத்தில்
சொன்னோம். இந்த அரசு கொஞ்சம் பேசுகிற நேரத்தில்
மனிதாபிமான உணர்வோடு பெருந்தன்மையோடு
உணவு பண்டங்களான பிஸ்கோத்துகள், குழந்தைகள் சாப்பிடுகின்ற
களுக்கு எல்லாம் வரி விலக்கு செய்து இருக்கலாம். மிட்டாய்கள் இவை
ஒரு முனை வரி வேண்டியது இல்லை என்று இந்த 10 சதவீதம்
இதற்கு முன்னால் பேசுகிற நேரத்தில் மாமன்றத்தில்
என்ன காரணத்தினாலேயோ சொல்லியிருக்கிறோம்.
வரியை குறைப்பதற்கு அல்லது அவர்களுக்கு அந்த 10 சதவீத
வரவில்லை. காய்கறிகள், பழ வகைகள், விட்டுவிடுவதற்கு மனம்
மாவு, மார்க்கெட், பறவை, முட்டை, உணவு தானியங்கள்,
விலங்கியல் ரத்தம், மீன், நண்டு, நத்தை, இறைச்சி, கழிவு இறைச்சி,
விட்டுபோய் இருக்கிறதோ என்று இன்னும் என்னதான்
சேர்த்து 10 சதவீதமாக இந்த புரியவில்லை. அத்தனையும்
இருக்கிறார்கள். பேரவைத் ஒரு முனை வரியை சேர்த்து
நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள துணைத் தலைவர் அவர்களை,
இப்போது எதற்காக இந்த பால் உணவுப் விரும்புவது எல்லாம்
சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக பொருட்களுக்கு 4
அதற்கு இப்போது என்ன அவசியம் உயர்த்தி இருக்கிறீர்கள்.
கத்திற்கு. 4 சதவீதமாக இருப்பதை வந்து விட்டது அரசாங்
தான் அந்த நிதி கஷ்டத்தை சரி 10 சதவீதமாக உயர்த்தி
டைய வணிகத்துறை இருக்கிறதா கட்டக்கூடிய நிலையில் நம்மு
கொள்ள விரும்புகிறேன். என்று நான் தெரிந்து
பல கோடிக்கணக்கான ஏற்கனவே மது கடைகளை திறந்து
இருக்கிறது. ரூபாய்கள் இந்த அரசு பெற்றுக்கொண்டு
யாழ் இனிது' அப்படிப்பட்ட சூழ்நிலையில் 'குழல் இனிது
மழலைகள் என்று சொல்வார்கள் அப்படிப்பட்ட அந்த
பாலிலும் வயிற்றிலும் அடித்து அவர்கள் சாப்பிடுகின்ற அந்த
நான் கேட்க கொஞ்சம் வணிக வரி உயர்த்தவேண்டுமோ என்று
மதிய உணவு விரும்புகிறேன். நம்முடைய அரசு இலவசமாக
இருக்கிறது. கொடுக்கிறது. சத்துணவு திட்டம் கொண்டு வந்து
இங்கே பல கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் தான்
நேரத்தில் அதற்கு ஒதுக்கியிருக்கிறோம். அப்படி இருக்கிற
அதிகமாக இந்த பாலிலே கொஞ்சம் 6 சதவீதம் என்று சொல்லி
பிடுவது உயர்த்த வேண்டியது அவசியம் தானா? பால் சாப்
அவர்கள் பணக்காரர்கள் வீட்டு குழந்தைகள் மட்டும் தானா?
எளிய மக்கள் பாலுக்கு ஒதுக்குகின்ற தொகை எவ்வளவு? ஏழை
தொகை எவ்வளவு வீட்டு குழந்தைகள் பாலுக்கு செலவு செய்கின்ற
அமைச்சர் என்பதை பார்க்கவேண்டும். நம்முடைய
மனது உள்ளவர்கள், அவர்கள் தாராள மனது உள்ளவர்கள், நல்ல
என்று நான் இதை திரும்பப் பெற்று விடுவார்கள்
10 சதவீதம் கருதுகிறேன். 4 சதவீதம் என்று இருப்பதை
சொன்னாலும் என்று ஆக்குவதற்கு அவர்கள் என்னதான் விளக்கம்
அடிப்படையில், கூட ஒத்துக்கொள்ளமுடியாது. நியாயத்தின்
யின் அடிப்படையில் தர்மத்தின் அடிப்படையில் இன்னும் நேர்மை
எடுத்துக்கொண்டால் கூட எந்த விதத்



1983 நவம்பர் 18] [திரு. என். எஸ். வி. சித்தன்]

திலும் அவர் 4 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தியிருப்பது ஒத்துக்கொள்ள முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக சீப்பு, 143-வது இனத்தில் சீப்பு என்று இருப்பது ஒரு முனை வரியில் 8 சதவீதம் என்று இருக்கிறது. இதை விட்டுவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னாலும் அது 5 சதவீத பல முனை வரியாக வருகிறது. ஆகவே நான் முன்பு சொன்ன அதே காரணங்கள், அதே வாதங்கள் இந்த சீப்புக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். சீப்புக்கு போய் 8 சதவீதமாக இருக்கின்ற ஒரு முனை வரியை 5 சதவீத பல முனை வரியாக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது 4,5 கைக்கு மாறுகிறது என்று வைதது்க்கொள்வோம்—பலர் அதை உபயோகிப்பதால் அப்படி மாறுகிற நேரத்தில் 4 என்று எடுத்துக்கொண்டால் 20 சதவீதம் ஆகிறது. இதில் எவ்வளவு ரூபாய் அரசுக்கு வந்து விடப்போகிறது. இந்த பாலையும், சீப்பையும் உங்கள பார்வையிலிருந்து எந்தப் பொருளும் தப்பி விடக்கூடாது. எதற்காக இப்படி 5 சதவீதம் பல முனை வரியாக உயர்த்தவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இதில் எவ்வளவு ரூபாய் அரசுக்கு வரப்போகிறது. இதை மாற்ற வேண்டிய அவசியம் இப்போது என்ன வந்தது என்று எனக்குப் புரியவில்லை. எப்படி பார்த்தாலும் கூட இந்த 2 இனங்களில் மாறுதல் செய்ய வேண்டிய அவசியம் இப்போது தேவை இல்லை. ஆகையால் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், ஒன்று முழுமையாக இவைகளுக்கு வரியை நீக்கம் செய்யவேண்டும் அல்லது அப்படி முடியவில்லை என்று சொன்னால் இப்போது இருக்கிற நிலையில் இதை வைத்து விடலாம். மாறுதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக இந்த மாதிரி மசோதாக்கள் வருகின்ற நேரத்தில் புதியதாக வரிகள் விதிக்கின்ற நேரத்திலும் சரி, வரி மாற்றம் செய்கின்ற நேரத்திலும் சரி இந்த பேரவையினுடைய ஒப்புதல் வேண்டும் என் று விதி இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே இப்படி 4 சதவீதம், 5 சதவீதம் மாறுதல் செய்வதற்கு அல்லது புதிதாக விதிப்பதற்கு அல்லது விட்டு விடுவதற்கு இந்தப் பேரவையினுடைய அனுமதி வேண்டுமென்கிற அதே நேரத்திலே, பல கோடி ரூபாய் பெறுமான வரியை விலக்களிப்பதற்கு அரசாங்கம் அதிகாரம் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சபைக்கு வராமலே, எப்படி நாங்கள் வரி விதிப்பதற்கெல்லாம் அனுமதி கொடுத்திருக்கிறோமோ, அவ்வாறில்லாமல், எங்களுடைய அனுமதிஇல்லாமலேயே பல கோடி ரூபாய், எங்களுக்குத் தெரியாமலேயே, சலுகை செய்வதை, அந்த அதிகாரத்தை அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிறது. அதை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தாலும் சரி, இப்பொழுது அதிகமாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாலும் சரி, அந்த முறையை மாற்றி, அப்படி வரி விலக்கு கொடுக்கின்ற நேரத்திலேயும் சட்ட

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 நவம்பர் 18

மன்றத்தினுடைய கவனத்திற்கு, ஒப்புதலுக்கு வரவேண்டு
மென்று நான் கேட்டுக்கொண்டு, இங்கே இந்த வரி விதிதம்
செய்திருப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை என்று
சொல்லி, இந்த மசோதாவைக் கடுமையாக எதிர்த்து நான்
அமர்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரி திருத்தச் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக சார்
பில் வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்க்கிறோம் என்று
சொன்னால் அது மிகையாகாது. இந்த விற்பனைவரிச்
சட்டத்தை ஆராய்ச்சி செய்து, அதிலே பல பொருட்களுக்கு
விற்பனை வரி விகிதத்தை உயர்த்தியிருப்பது உண்மையாக, வன்
மையாகக் கண்டிக்கத்தக்கது. இன்றைய தினம் இதிலே ஒரு
மாயாஜாலமே உருவாகி இருக்கிறது என்று சொன்னால் மிகை
யாகாது. அதிலே பல உணவுப் பொருட்கள் பால் நீங்கலாக
என்று அறிவித்து விட்டு, இணைப்பில் 10-ல் பாலுக்கும் வரி
உயர்த்தப்பட்டிருக்கிறது. 10 சதவிதம் உயர்த்தப்பட்டிருக்
கிறது. அந்த நிலைமை, இன்றைய தினம் தமிழ் நாட்டிலே
இருக்கிற ஏழை எளிய மக்களை மிக அதிகமான அளவிலே
பாதிக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைய
தினம் பாலின் மூலமாக உற்பத்தியாகிற மற்ற பொருட்களுக்
கெல்லாம் வரி என்ற அளவிலே விதிப்பதால், ஏழை, எளிய
மக்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கூடப் பால் கொடுப்பது
பாதிப்பை ஏற்படுத்தும். டீ கடைகளிலே பாலோ, டீயோ
வாங்க வேண்டுமென்றால், டீயைப் பொறுத்தவரையிலே,
ரோடிலே இருக்கிற டீ கடையிலே 30 பைசாவுக்கு டீ கிடைக்
கிறது. இப்பொழுது வரியை உயர்த்துவதன் மூலமாக நிச்சய
மாக 50 பைசாவாக உயர்ந்துவிடும். (குறுக்கீடு) திருத்தத்
திலே பால்இருக்கிறது. ஆனால் அதிலே காய்கறிகள், பழவகைகள்
உள்ளன. தானியங்கள் உள்ளன. பால் உள்ளிட்ட பொருட்கள்
என்று 8-வதிலே இருக்கிறது. பால் மாவு பொருட்கள் என்று
எல்லாம் சேர்த்திருப்பதால், இதை எப்படி ஆய்வு செய்தார்கள்
என்று தெரியவில்லை. இதிலே விட்டு விட வேண்டுமென்று
சொல்லிவிட்டு, இன்னொரு இடத்திலே 8-வதிலே பால் மாவு
உள்ளிட்ட பொருட்கள் என்று கொடுத்திருப்பதால், சட்டத்
துறையினர் எப்படி இதை அனுமதித்தார்கள என்று எனக்குத்
தெரியவிலலை. அந்த அளவுக்கு இதிலே வரி வீதங்களை வைத்
திருக்கிறார்கள். சில பொருட்களுக்கு 10 சதவிதம் ஏற்றி
விட்டு அதை அமுல் படுத்தாமல் இருந்தாலுங்கூட வேறு இடத்
திலே அமுல்படுத்தலாம் என்று இருக்கிறது. குறிப்பாக, பிஸ்
கோத்துக்கள் என்று வைத்திருக்கிறார்களே, அவற்றிற்கு
10 சதவீதம் விதித்து விட்டால், ஏழை, எளிய மக்கள் ரொட்டி,
பொறை சாப்பிடுகிறவர்கள் நிச்சயமாக பாதிக்கப்படும்
நிலைமை இருக்கிறது.



1983 நவம்பர் 18] [திரு. பாபு ஜனார்த்தனன்]

அதேபோல் இனிப்பு வகைகள். இனிப்பு வகைகள் 3
வகையாக இருக்கின்றன. உயர்ந்த ரகம் இருக்கிறது. நடுத்தர
ரகம் இருக்கிறது. மூன்றாந்தர ரகம் இருக்கிறது. ஏழை,
எளிய மக்கள் சுவையாக கிச்சிலி மிட்டாய் வாங்க வேண்டு
மென்றால் கூட அதற்கும் வரி என்று சொன்னால் அவர்கள்
இன்பத்தை அனுபவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படும்.
அதே போல், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி உணவுப்
பொருட்கள் என்று உள்ளது. பாலாடைக் கட்டிக்கு அடுத்து,
பால் கொண்டு தயாரிக்கும் உப பொருட்கள்—பை புராடக்ஸ்—
என்றிருக்கிறது. நிச்சயமாக, பால் பை புராடக்ஸ் என்று வருமா
னால், பால் பவுடர் வரும். அந்தப் பால் பவுடரை வாங்குகின்ற
நேரத்திலே, பவுடர் பால் சாப்பிடும் குழந்தைகளைக் காப்
பாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அதே போல்
காய்கறிகள், என்று சொன்னால் அது எல்லோருக்கும்
பொருந்தும். இப்படி வரிகளை ரிசர்வாக வைத்துக்கொண்டு,
எந்த நேரத்திலேயும் அமுல்படுத்தலாம் என்று நினைக்
கிறார்கள். அதை நிச்சயமாக, தி.மு.க. சார்பிலே வன்மையாகக்
கண்டிக்கிறோம். அதேபோல் காய்கறிகள், பால் பொருட்
கள், உணவு தானியங்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது.
உணவு தானியங்கள், மாவு என்று சொல்கிற போது, கேழ்வரகு
மாவு, சோள மாவு கூட வரக்கூடும். இப்படிப்பட்ட நிலைமைகள்
உருவாகக் கூடாது. ஏழைகளின் அரசு என்று சொல்லிக்கொண்டு,
கேழ்வரகு மாவிற்கும், சோள மாவிற்கும் வரிபோடுகிற உத்
வேகத்தை சட்டத்திலே உருவாக்கி வைத்துக்கொண்டால் அது
நிச்சயமாக ஏழை மக்களை பாதிக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதைப்போல பறவைகள், முட்டைகள், இறைச்சி; இறைச்
சியிலே கழிவு இறைச்சி என்று சொல்வார்கள்; அப்படிப்பட்ட
கழிவு இறைச்சிக்கு கூட — அடுத்து விலங்குகளின் ரத்தம்;
அதை ஆட்டு ரத்தம் என்று சொல்லலாம், கோழி ரத்தம் என்று
சொல்லலாம், புறா ரத்தமென்று சொல்லலாம். வைத்தியத்
திற்கு உபயோகப்படுகிற புறா ரத்தத்திற்கு வரிபோடுகிற
நிலைமை இருக்கிறது. அதைப்போல மீன், நண்டு, நத்தை;
ஏழை மக்கள், வேலையில்லாத மக்கள் நண்டை பிடித்து நண்டு
குழம்பு வைப்பார்கள். அவர்கள் எல்லாம் கூட இனிமேல் நண்டு
பிடிக்கப் போனால் வரி வந்துவிடும் என்று பயப்படுகிற அளவிலே
நம்முடைய சட்டத்தை இலாக்காவிலே வைத்துக் கொண்டிருக்
கிறார்கள். இப்படிப்பட்ட சட்டத்தை உருவாக்கி நீங்கள் பாதிக்
கப்படக்கூடாது. ஒன்றை விட்டுவிட்டீர்கள்; உப்பை ஏன்
விட்டுவிட்டீர்கள் என்றுதான் தெரியவில்லை. ஆகவே, இப்படிப்

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1983 நவம்பர் 18

பட்ட நிலைமையில் இந்தச் சட்டத்தை தீவிரமாக,
யாக, மூர்க்கத்தனமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பிலே கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, இந்தச் சட்ட திருத்தத்தை எங்களாலே ஆதரிக்க முடிய
வில்லை என்பது மட்டுமல்ல, இந்தச் சட்டத்தை கடுமையாக
எதிர்க்க வேண்டிய நிலைமையில் நாங்கள் இருந்து கொண்டிருக்
கிறோம். ஏற்கெனவே இந்த அவையில் நுழைவுவரிச் சட்டத்தைக்
கொண்டு வந்து, தமிழகத்திலே இருக்கிற மக்களிடையில் ஏற்பட்ட
எதிர்ப்பின் காரணமாக இன்று அதை அமல்படுத்தாமல், ஒரு
நிலையில் போய் வைத்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை
பொறுத்தவரையில் என்ன முடிவு வரப்போகிறது என்பது யாருக்
குமே தெரியவில்லை. இன்று நுழைவு வரி வழியாக கிடைக்க
வேண்டிய வருவாய் இழப்பிற்கு பதிலாக அரசு இப்படிப்பட்ட
சட்ட திருத்தத்தைக் கொண்டு வருகிறதா என்ற நியாயமான
சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. இந்த நேரத்தில் ஒன்றை
பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். நடுத்தர மக்கள், ஏழை
மக்கள் கடுமையான அளவிலே பாதிக்கப்படக்கூடிய சட்டத்
திருத்தத்தை இன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிறார்கள். மில்க் புட்ஸ் இன்க்லுடிங் மில்க்
புராடக்ட்ஸ் — பால் வகையைச் சேர்ந்த அனைத்து பொருள்-
களையும் இந்தச்சட்ட திருத்தத்தில் உட்படுகிறது என்று பார்க்கிற
நேரத்தில் எப்படி இன்றைக்கு ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்
கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். நோயாளிகளாக இருக்கக்
கூடியவர்களுக்கு பால் கொடுப்பதற்கு மருத்துவர்கள் இன்றைக்கு
சிபாரிசு செய்கிற நேரத்திலே, அவர்கள் அவர்களுக்கு இருக்கிற
குறைந்த வருவாயிலிருந்து பால் வாங்க வேண்டிய நேரத்தில்,
ஏற்கெனவே 4 சதவீதம் விற்பனை வரி கொடுக்க வேண்டி இருந்
தது. இப்போது 10 சதவீதம் வரி உயர்கிற நேரத்தில் நிச்சயமாக
அவர்களுடைய வாங்கும் சக்திக்கு மேல் அதிகமான விலை
கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அது தமிழகத்திலே
உள்ள ஏழை மக்கள், நடுத்தர மக்கள், அனைவரையும் கடுமை
யான வகையிலே பாதிக்கக்கூடிய முறையிலே உள்ளது இந்த சட்ட
திருத்தம் என்ற காரணத்தால், எங்களாலே ஆதரிக்க முடிய
வில்லை. அதுமட்டுமில்லாமல் நாங்கள் கடுமையாக இந்த சட்ட
திருத்தத்தை எதிர்க்கிறோம். இந்த சட்ட திருத்தத்தை கொண்டு
வந்திருக்கிற நேரத்தில் இதன் வழியாக அரசிற்கு எவ்வளவு வரு
வாய் வரும் என்று அரசு எதிர்பார்க்கிறது என்பது தெரியவில்லை.
ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்பதிலே கூட எந்த அளவிற்கு
வருவாய் அரசிற்கு கிடைக்கும்; எவ்வளவு வருவாய் அரசு
எதிர்பார்க்கிறது என்பதை சுட்டிக்காட்டவில்லை.



1983 நவம்பர் 18] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதுமட்டுமல்ல, ஏற்கனவே நான்கு சதவீதம் விற்பனை வரி இருந்தது. ஆனால் பால் வகையறாக்களைப் பொறுத்த வரையில் பத்து சதவீதம் என்று உயர்த்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. பத்து சதவீதம் விற்பனை வரி போடப்பட்டிருக்கின்ற பல பொருள்களைப் பொறுத்தவரையில் — பிஸ்கட், சாக்லெட் போன்ற எதுவாக இருந்தாலும் சரி நடுத்தர மக்களின் வாழ்க்கையை விசாலமாகப் பாதிக்கும் நிலைமையிலுள்ள சட்டத் திருத்தமாகத்தான் இது இருக்கிறது.

ஏற்கனவே விற்பனை சம்பந்தமாக அரசுகளுக்கு இருக்கிற பார்வையே மாற்றப்பட வேண்டுமென்ற கருத்து இன்றைக்கு மேலோங்கி வளர்ந்திருக்கின்ற ஒரு கால கட்டத்தில் மக்களுக்குப் பயன்படுகின்ற பொருள்களுக்கு அதிமாக வரிகளைச் சுமத்துவதால் விலைவாசி உயரக்கூடிய நிலையை ஏற்டுத்தும். அந்த நிலை உருவாவது சரி அல்ல, நல்லதும் அல்ல என்று மக்கள் எண்ணிக்கொண்டு அந்தக் கருத்தைத் தெரிவிக்கின்ற நேரத்தில் உணவு வகைகள் என்ற முறையில் மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற இந்தப் பொருட்களுக்கு இப்படிப்பட்ட அதிகமான விற்பனை வரியை ஏற்படுத்துவது நியாயம் அலல, சரியல்ல என்று இந்த நாட்டிலுள்ள நடுத்தர மக்களின் சார்பாகவும், ஏழை மக்களின் சார்பாகவும் கூறி, இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க அமைச்சரவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துக்களைச் கூற விரும்புகிறேன். நான் ஆரம்பத்திலேயே தெளிவாகக் கூற விரும்புவது, இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது, சாமான்ய மக்கள் அன்றாடம் சாப்பிடக் கூடிய பால் போன்ற உணவுப் பொருட்களின் மீது வரியை விதிப்பதால் அவர்கள் மீது சுமையை ஏற்றும் என்ற முறையில் இது அமைந்திருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

பால் உணவுப் பொருள்கள் -- பால் நீங்கலாக ஆனால் பால் மாவு உள்பட இந்தப் பொருட்களுக்கு ஏற்கனவே மாநிலத்தில் முதல் விற்பனையில் நான்கு சதவீதம் விற்பனை வரி இருந்து வருகிறது. அது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்ற வகையில் அமைந்திருக்கிறது. ஆனால் அதைப் பலமுனை விற்பனை வரிக்கு உட்படுத்த வேண்டுமென்று என்ன காரணத்தால் அமைச்சரவர்கள் நினைத்தார்கள் என்று என்னைப் போன்றவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. இரா. கருப்பையா] [1983 நவம்பர் 18

காரணம், ஒருமுனை விற்பனை வரி நாட்டிலே உள்ள
பொருட்கள் அனைத்திற்கும் விதிக்கப்பட வேண்டுமென்று
ஒரு இயக்கம், ஒரு கிளர்ச்சி நடந்து கொண்டு வருகிறது. அது
மட்டுமல்லாமல், அரசாங்கமும் கொள்கையளவில் அனைத்துப்
பொருட்களுக்கும் ஒரு முனை விற்பனை வரியாக மாற்றுவோம்
என்பதை ஏற்றுக்கொண்டு அந்த முறையிலே படிப்படியாகச்
செய்து வருகிறோம் என்று ஒரு புறத்திலே அரசாங்கத்தாலும்,
அமைச்சராலும் சொல்லப்பட்டு வருகிறது.

இந்த மன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பப்பட்ட
வினாக்களுக்கு அல்லது பல்வேறு சந்தர்ப்பங்களில் இம்மாதிரி
யான விற்பனைச் சட்டம் சம்பந்தமாக நடந்த விவாதங்களின்
பொழுது இந்தப் பிரச்சனை எழுப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர
வர்களும், பலமுனை விற்பனை வரியிலுள்ள பல பொருட்களுக்குப்
படிப்படியாக நாங்கள் ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கு
வோம் ஆக்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி
அறிவிப்பு ஒன்றாக இருக்கிறது, நடைமுறை வேறாக இருக்
கிறது என்பதைத்தான் நான் இப்பொழுது சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். அந்த முறையிலே நான்கு சதவீதமாக இருந்த ஒரு
முறை விற்பனை வரியை இன்றையதினம் பத்து சதவீதமாக
மாற்றுவதற்கான முறையிலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது.

புதிதாகச சட்டத்திற்கான திருத்தங்களைக் கொண்டு வரு
கின்ற நேரத்தில் பெரிய முதலாளிகள், பெரிய கோடீஸ்வரர்கள்,
ஏகபோக முதலாளிகள் போன்றவர்கள் வரியேய்ப்பின் மூல
மாக கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

அந்த முறையிலே நடைமுறை நிகழ்ச்சியாக இருக்கின்றது.
சட்டத்திலே இருக்கின்ற ஓட்டைகளை அடைத்து அவர்களிடத்
திலே இருந்து வரியினை வசூலிப்பதற்கு பதிலாக, அதற்கான நட
வடிக்கையினை எடுப்பதற்குப் பதிலாக சாதாரண மக்கள் பயன்
படுத்தக்கூடிய பொருட்களின் மீது வரியினை உயர்த்துவது சரி
யல்ல. நான் இந்த மன்றத்திலே கேட்க விரும்பு
கிறேன், இதன் மூலமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு ரூபாய்
வருமானம் வரும் என்று. இதன் மூலமாகவெல்லாம் எவ்வளவு
வருமானம் வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தெரிவித்தால் நலமாக இருக்கும். இந்த மாதிரியான பால்
போன்ற பொருட்களுக்கெல்லாம் விதிப்பதால் அரசாங்கத்திற்கு
விற்பனை வரி ஆண்டுக்கு எவ்வளவு கூடுகின்றது என்பதை அவர்
கள் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு மாற்றத்தைக்
கொண்டுவருவதன் மூலமாக எவ்வளவு அதிகமான வரி கிடைக்
கும் என்பதைத் தெரிவித்தால் நலம்.



1983 நவம்பர் 18] [திரு. இரா. கருப்பையா]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஒரு புறத்திலே இந்த அரசு ஸ்டீல் ரோலிங் மில்களுக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்ட விற்பனை வரியினைத் தள்ளுபடி செய்திருக்கின்றது. அந்த வகையிலே 22 1/2 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு அரசு சலுகை செய்திருக்கின்றது. அவர்கள் பெரிய முதலாளிகள். அப்படி இருந்தும் அவர்களுக்குச் சலுகை செய்த காரணத்தால் இந்த அரசுக்கு 22 1/2 கோடி ரூபாய் இழப்பு இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை அனைவரும் அறிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது இந்த மாதிரியான பொருட்களின் மீது விற்பனை வரி விதிப்பதன் மூலம் அந்த 22 1/2 கோடி ரூபாயை ஈடுகட்டப்போகிறார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் இதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் சாதாரணமான வருமானமாகத்தான் இருக்கும். ஆனால் அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய பெயர் என்ன ? பாலுக்கு ஏற்கெனவே 4 சதவீதம் என்றிருந்ததை 10 சதவீதமாக உயர்த்தி விட்டார்கள் என்று சாதாரண மக்கள் கருதக்கூடிய நிலைமை ஏற்படும். எந்த மக்கள் உங்கள் மீது கொண்ட நம்பிக்கையால் ஆட்சி செய்துகொண்டிருக்கிறீர்களோ எந்த மக்களுக்கு உங்களிடத்திலே உள்ள நம்பிக்கை காரணமாக மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று கூறிக்கொண்டிருக்கிறீர்களோ அந்த மக்களிடத்திலே இது என்ன புது நம்பிக்கையை உருவாக்கப் போகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரி மாற்றம் செய்ய உத்தேசித்திருப்பது சரியானதல்ல. சீப்பினைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே அதற்கு ஒருமுனை வரிதான் இருந்தது. நான் கூட ஆரம்பத்திலே நினைத்தேன். சீப்புக்கெல்லாம் வரி போடுவதை அமைச்சர் அவர்கள் கைவிட்டுவிடுவார்கள் என்று (குறுக்கீடு) சாதாரணமான ஒன்று அது. அதிலெல்லாம் அதிகப்படியான வருமானம் கிடைக்கப்போவதில்லை. எனவே இதனைத் தள்ளுபடி செய்தால் ஒன்றும் நஷ்டம் வந்துவிடப்போவதில்லை. சீப்புக்கு ஒருமுனை வரியாக இருந்தது, அது பலமுனை வரியாக மாறுகின்றது. இவ்வாறு சீப்புக்கும் கூட வரி விதிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. அதிலே என்ன வருமானம் இந்த அரசாங்கத்திற்கு வரப்போகிறதோ தெரியவில்லை. இது அரசாங்கத்தின் நிதியினை எந்த அளவுக்கு ஈடு செய்யப்போகின்றது என்பது தெரியவில்லை. ஆனால் இதனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே அரசாங்கம் இப்போது கொண்டு வந்திருக்கக் கூடிய திருத்தத்தின் மூலமாக கொண்டுவருகின்ற புதிய வரி மாற்றம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாக எதிர்க்கிறது. இதுபற்றி இந்த மன்றத்திலே பேசிய அனைத்து உறுப்பினர்களும் விளக்கமாகப் பேசி இருக்கிறார்கள்.

[திரு. இரா. கருப்பையா] [1983 நவம்பர் 18

எனவே அந்த உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து இந்த சட்டத்
திருத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அது மட்டுமல்ல, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மற்றொரு
கருத்தையும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு
ஏற்கனவே ஏற்றுக்கொண்டு இருக்கிற கொள்கை ஒரு முனை
வரியாக அனைத்துப் பொருள்களுக்கும் மாற்ற வேண்டும் என்ப
தாகும். அந்தக் கொள்கை படிப்படியாக அமல்படுத்துவோம்
என்று அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கும் வாக்குறுதி
களுக்கு முரணாக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டு
இருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்துக்கள், காரணங்கள்
அனைத்தையும் அரசாங்கம் பரிசீலித்து, அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்து இருக்கிற இந்தச் சட்டத்திருத்தத்தை வாபஸ்
பெறவேண்டும் என்று கேட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் என் கருத்துக்களைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப்
பொறுத்த வரையில் அதிகமாக எதுவும் இல்லை என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்
இங்கே பேசியபோது, அவர்களுக்கே உரிய ஆற்றலாலும், பேசு
கின்ற திறமையாலும் இங்கே பலவற்றைப் பேசினார்கள்.
இதிலே முக்கியமாகச் சந்தேகப்பட எதுவும் இல்லை. எல்லாப்
பொருள்களுக்கும் வரி போட்டதுபோல் பேசினார்கள்.
நம்முடைய உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் அதுவும்
போது அவர்களுக்கே உரிய இயற்கையான வாதாடுகின்ற தன்மை
யில் நண்டு, நத்தை போன்றவற்றிற்குமா வரி என்று அவர்
கேட்கிறபோது திறமையாகக்கேட்டார்கள். அவருடைய திறமை
னயநான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோல்,
மற்றவர்கள் பேசுகிறபோதும் திறமையாகப் பேசினார்கள்.

நான் இங்கே ஒரு உறுதியை அளிக்கிறேன். இங்கே பேசிய
அத்தனை உறுப்பினர்களும் — என்னையும் சேர்த்து —
யாரும் எங்கே போய் மீன் அல்லது காய்கறி சாப்பிட்டாலும்,
பழங்கள் சாப்பிட்டாலும், நண்டு, நத்தை, இறைச்சி சாப்பிட்
டாலும், அதற்கு எல்லாம் வரி போட்டு இருக்கிறோம் என்று
நினைக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள்
எல்லாம் பேசியபோது, எனக்குக் கூட சந்தேகம் வந்தது. நான்
என்ன, கறி, மீன், நண்டு, இவற்றிற்கெல்லாம் வரி போட்டு
விட்டேனா என்று எண்ணினேன். நான் புதிதாக எந்த வரியை
யும் போடவில்லை. இப்போது போட்ட வரி எப்படி வருகிறது
என்றால், நீங்கள் அதைச் சாப்பிடுகின்ற கடைகளில் அதற்கு
வரி கிடையாது. பெரிய பெரிய கம்பெனிகள் டிரேட் மார்க்



1983 நவம்பர் 18] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

போட்டு, டின்னிலே அடைத்து, விற்பனை செய்கிறார்களே அந்த
டின்களில் உள்ளவற்றிற்குத்தான் வரி. அந்த டிரேட்மார்க்கை
வேறு யாரும் போட்டு விற்கமுடியாது. நம்மைப் போன்றவர்கள்
மீன் அல்லது நண்டு நத்தை சாப்பிட வேண்டும் என்று சொன்
னால் நேரடியாகக் கடைக்குச் சென்று, அல்லது கடற்கரைக்குச்
சென்று மீன் பிடித்து வருகிற மீனவர்களிடத்திலே சென்று
வாங்கி வந்து விடுவார்கள். இறைச்சிக் கடைக்குச் சென்று
இறைச்சி வாங்கி வந்து விடுவார்கள். அதற்கு எல்லாம் விற்பனை
வரி கிடையாது. டின்னிலே அடைத்து விற்கிறபோதுதான் வரி
வருகிறது. இது கூட புதிய வரி அல்ல. ஏற்கனவே உள்ளது
தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இதிலே எங்காவது ஏழை எளியவர்களை, நடுத்தர மக்களை
பாதிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்தால்,
அதை எப்போதுமே மறுபரிசீலனை செய்வதற்கு இந்த அரசு
தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆகவே, ஏதோ வரி போடவேண்டும் என்று அடாவடித்தனமாக
வரி போடுவதில் இருக்கிறோம் என்று எண்ணவேண்டாம். ரிஜிஸ்
டர்ட் டிரேட் மார்க் வாங்கி, பெரிய அளவில் வியாபாரத்தை,
டின்னில் அடைத்து விற்பனை செய்கின்ற கம்பெனி
களுக்குத்தான் இந்த வரியே தவிர மற்றவர்களுக்கு இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்கான
வரியைப் பற்றிச் சொன்னார்கள். சாதாரண கடைகளுக்கு
அது இல்லை. வணிக வரித்துறையில் பதிவு செய்து இருக்கிற
கடைகளுக்கு மட்டுமே இந்த வரி உண்டே தவிர மற்றபடி
இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதைப்போன்று இந்த ஒருமுனை வரியைப் பற்றி பலமுறை
சொல்லியிருக்கிறார்கள். நானும் பதில் சொல்லியிருக்கிறேன்.
இன்றைக்கு இந்த பலமுனை விற்பனைவரியினால் யாருக்கு
இலாபம் என்றால் சிறு சிறு வியாபாரிகளுக்குத்தான். இன்றைக்கு
பெரும்பாலான பொருள்கள் இந்த ஒருமுனை விற்பனை வரியின்
கீழ் வந்திருக்கின்றன. கிட்டத்தட்ட இந்த ஒருமுனை வரியின்
மூலம் வரி வசூலில் 86 சதவீதம் வருகிறது. மீதியிருக்கிற 14
சதவீதம்தான் பலமுனை வரியின் மூலம் கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, இந்த ஒருமுனை விற்பனை வரியினால்
பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பலமுனை விற்பனை வரியில்
30,000 ரூபாய் வரையில் கணக்கு வைக்கத் தேவையில்லை.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

அதன் பிறகு ஒரு லட்சம் ரூபாய் வரையில் 'கம்பவுண்டிங்'
செய்துகொள்ளலாம். ஒருமுனை விற்பனை வரி என்றால் 5
ரூபாய், 10 ரூபாய்க்கு சாமான்களை விற்றால்கூட கணக்கு
வைத்துக் கொள்ள வேண்டும். ஒருமுனை விற்பனை வரி
எங்கே விதிக்கப்படுகிறது என்றால், 'மானுபாக்சரிங் பாயின்டி'ல்
எங்கே உற்பத்தி செய்கிறார்களோ அது விவரமாகத் தெரிவ
தற்கு அங்கே ஒருமுனை வரி வைக்கிறோம்; விற்கிறவர்களுக்கு
விவரமாகத் தெரிவதற்கு வைக்கிறோம். அப்படி இல்லாத மற்ற
இடங்களில் அதை மாற்றி வைத்திருக்கிறோம். இந்த ஒருமுனை
விற்பனை வரி, பலமுனை விற்பனை வரி விதிப்புகளில் சங்கடம்
வருவதாகச் சொன்னர்கள். சங்கடங்கள் வந்தால், சுட்டிக்
காட்டினால் அரசு அதை பரிசீலிக்கும் என்று கூறி, இந்த சட்ட
முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது நாங்கள்
புதிதாக வரி போடவில்லை; ஏற்கெனவே இருக்கிறது என்று
சொன்னார்கள். நாங்களும் நீங்கள் புதிதாக போடுகிறீர்கள்
என்று சொல்லவில்லை. ஏற்கெனவே 4 சதவீதமாக இருந்ததை
இப்போது 10 சதவீதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அது
தேவையில்லை என்று சொல்லியிருக்கிறோம். அடுத்து, ரெஜிஸ்
டர்டு ட்ரேட் மார்க் உள்ளவர்களுக்குத்தான் இது பொருந்தும்
என்று சொன்னர்கள். நான் கேட்கிறேன். இந்த ரெஜிஸ்டர்டு
ட்ரேட் மார்க் உள்ள பொருள்களை வாங்கிச் சாப்பிடுகிறவர்கள்
பணக்காரர்கள்தானா? ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிட
வில்லையா? சீப்புக்கு ஏன் ஒருமுனை வரியிலிருந்து பலமுனை
வரி வந்தது? அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத்
தலைவரவர்களே, இன்றைக்கு ஸ்பென்சரில் ட்ரேடு மார்க்
போட்டு ஒரு மீன் டின் விற்கிறார்கள் என்றால் அங்கே போய்
வாங்கிச் சாப்பிட யார் போவார்? அங்கே போனால் பணம்
அதிகமாகச் செலவாகும் என்பதால் நேரடியாகப் போய் மீன்
பிடிக்கிற மீனவர்களிடம் வாங்கி சாப்பிடுவார்கள். ஆக ட்ரேடு
மார்க் போட்ட பொருள்களுக்கு வரி போட்டால் ஸ்பென்சருக்கு
போகாமல் மீனவர்களிடம் போவார்கள். அப்படியானால்
இலாபம் மீனவர்களுக்கு வருகிறது. ஸ்பென்சருக்கு போனால்
இலாபம் அவர்களுக்கு போகிறது. வசதி படைத்தவர்கள்,
இலட்சாதிபதியாக யார் இருக்கிறார்களோ அவர்கள் தான்
ஸ்பென்சருக்கு போவார்கள்; மற்றவர்கள் அங்கே போக
மாட்டார்கள். ஆகவே இந்தச் சட்டத்தினால் சாதாரண மக்க
ளுக்கு சங்கடம் இல்லை; சிறு வியாபாரிகளுக்கு கஷ்டம் இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 நவம்பர் 18]

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, இந்த
வரி தேவையில்லை. ட்ரேடு மார்க் என்று வருகிறபோது,
அமுல்டின் அதில் வருகிறது. அது ஒரு ட்ரேடு மார்க் தான்.
பணக்காரர் வீட்டு குழந்தைகளுக்கு மட்டுமா அதை வாங்கிக்
கொடுக்கிறார்கள்? ஏழை எளிய மக்களும்தான் வாங்கி,
தங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கிறார்கள். அதைப்போன்று
பிரிட்டானியா பிஸ்கட் இருக்கிறது. ஏழை குழந்தைகளும்தான்
சாப்பிடுகிறார்கள். அதுவும் ட்ரேடு மார்க்கில்தான் வருகிறது.
அதைப் போன்று நெய்யிலே நம்பீசன்ஸ் இருக்கிறது. அது
மட்டுமல்ல. இப்படி ட்ரேடு மார்க் பொருள்களுக்குத்தான்
வரி என்றால் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார்? கடைசி
யில் யார் தலையில் அது விழும்? உபயோகிக்கிற ஏழை எளிய
மக்கள் தலையிலேதான் போய் விழும்; அதை வாங்கிச் சாப்பிடு
கிற மக்கள் தலையில்தான் போய் விழும். அதற்கு என்ன
செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால் அமைச்சர் ஸ்பென்சருக்கு
போகிறது, பப்பட்ஜமாலுக்குப் போகிறது என்று திசை திருப்பக்
கூடாது. அமைச்சர் இதை வாபஸ் பெற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத்
தலைவரவர்களே, இந்த வரியின் மூலம், பெரும்பகுதி பணக்காரர்
களுக்கு வரி போட்டு, அதை எடுத்து ஏழைகளுக்காக அதிகம்
செலவிடுகிறோம். அதற்காக இந்த வரி இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்
திருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து எதிர்வரிசை
யிலே இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களும் கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறோம். இது ஒரு நியாயமான திருத்தம் இல்லை.
பிற்போக்கான திருத்தச் சட்டம்; ஏழைகளினுடைய வயிற்றிலே
அடிக்கிற சட்டம். அரசாங்கம் இப்போதாவது பெரிய மனது
பண்ணி, திரும்பப் பெறவேண்டும் என்று சொன்னோம். அந்த
எங்களுடைய வேண்டுகோளை ஏற்காமல் இந்தச் சட்ட திருத்
தத்தை இயற்றுகின்ற காரணத்தாலே இதை எதிர்த்து இந்திய
தேசிய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச்
செய்தனர்.)

[1983 நவம்பர் 18

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே எங்கள் கட்சியின் சார்பாக திருத்தத்தை எதிர்த்தோம். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை இது மேலும் பாதிக்கக் கூடிய காரணத்தால் இதை ஆட்சேபித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலே இது ஏழை எளியவர்களை பாதிக்கின்ற இந்த வரி விதிப்பு வேண்டாம் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னோம். எதிர்க்கட்சிகளுடைய நல்ல அறிவுரைகள் ஆளும் கட்சியினர் காதில் ஏறாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரூபிக்கின்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மசோதா நிறைவேறுகிற போது இந்த அவையில் இருக்கக்கூடாது என்ற காரணத்தால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே சாதாரண மக்கள் மீது அவர்கள் உபயோகப்படுத்துகின்ற அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் மீது விதிக்கக் கூடிய வரி உயர்வு கூடாது, அதைக் கைவிட வேண்டும் என்று அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே குரலில் கைவிட வேண்டும் என்று கோரியும், அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக அதை நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற உணர்விலே இருக்கிற காரணத்தாலே இந்த மசோதா நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல நண்பர்கள் தங்களுடைய ஆட்சேபணையை எழுப்பிய பிறகும், அரசு துணிந்து இந்த மசோதாவை நிறைவேற்றித் தீரவேண்டும் என்று முற்படு



1983 நவம்பர் 18] [திரு. பி. முகமது இஸ்மாயில்]

கிறது. அதோடு ஏற்கெனவே எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு பண்டங்களின் விலைகள் ஏறியிருக்கின்ற இந்த வேளையில் மேலும் அதன் மீது விலைகள் உயர்வதற்கு துணைபோகின்ற இந்த மசோதாவை ஜனதா கட்சி ஆதரிக்கவில்லை. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, எங்களுடைய ஆட்சேபணையை தெரிவிக்கின்ற வகையிலே நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற இந்த வரியை தள்ளுங்கள் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் எடுத்துச் சொல்லியும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு இரக்கம் காட்டக்கூடிய அமைச்சர் அவர்கள் இதை வலியுறுத்துகின்ற காரணத்தால், நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் வெளிநடப்பு செய்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1983 நவம்பர் 18

(எ) கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 42/1983) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''.

(பிற்பகல் 1-00)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கேளிக்கை வரி 4-வது திருத்தச் சட்டமுன் வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பில்லிலே அதிகமாக நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த மசோதாவை வரவேற்கிறேன். இதிலே ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே சினிமாவிலே கேவலமான முறையிலே காம வெறியினைத் தூண்டுகிற வகை யிலே படங்களைப் போட்டு இழிவு படுத்துகின்ற ஒரு கேவலமான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் எத்தனையோ தடவை, இது போன்ற கேவலமான முறையில் காமவெறியைத் தூண்டுகிற முறையில் இருக்கின்ற நிலைமைகள் எல்லாம் தடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் இதற்காக இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஏனெ னில் இன்னும் இந்த கேவலமான முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. "One Night" "Rape" "Sex Rape" என்று இப்படி எல்லாம் ஆங்கிலப் படங்களுக்கு பெயர் கொடுத்து இன்று நடைபெற்று வருகிறது. சென்சார் என்று ஒன்று இருக் கிறது. சென்சாரிலே என்ன செய்கிறார்களோ, அது அவர் களுக்கே தெரிகிறதோ இல்லையோ புரியவில்லை. அது யாராக இருந்தாலும் சரி, இப்படி எல்லாம் விட்டு வைப்பது சரியல்ல. இவைகளையெல்லாம் பார்க்கின்ற போது, மிகக் கேவலமாக இருக்கிறது.

* 1983-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1983 நவம்பர் 18] [திரு. பெ. சு. திருவேகடம்]

இந்த சினிமாக்களினாலே நல்லவைகளையெல்லாம் கூட கற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது வசதி இருக்கிறது. ஆனால் பொது மக்களை, குறிப்பாக இளைஞர்களை நல்ல வழிகளில் அழைத்துச் செல்வதற்குப் பதிலாக, கேவலமான முறையில் இளைஞர்களின் எண்ணத்தை பாழ்படுத்துகிற முறையில் இன்றைக்கு நடக்கிறது. இவைகளையெல்லாம் தடுப்பதற்கு ஒரு வழி முறைகளை காண வேண்டும். அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று, அதுதான் நான் இதிலே பேச விரும்புகிற முக்கியமான விஷயம்.

அடுத்து, அதேபோல புளு பிலிம்ஸ் என்று ஏதோ கேவலமான படங்களை எடுத்துவைத்துக் கொண்டு அவைகளை போட்டு வருகிறார்கள் என்று தெரிகிறது. இன்னும் தெலுங்கு மலையாளம் போன்ற படங்களில் இருக்கும் ஆபாசங்களை தனியாக படம் எடுத்து, டெல்லி போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று காட்டக்கூடிய வேலைகளை தமிழகத்தில் இருப்பவர்கள் தாம் செய்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே கேவலமான செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வருங் காலத்தில் இல்லாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி திருத்த மசோதாவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த சமயத்திலே சில பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கே சில நகரங்களை சேர்த்தும், சில நகரங்களை நீக்கியும், இருக்கிறார்கள். தேர்வு நிலை என்று சொல்கிறபோது, ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருந்தது, இப்போது ஏன் நீக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்களை விளக்கமாக் அளிக்கவில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய பெரியவர் இளையபெருமாள் அவர்கள் இங்கே சொல்லியது போல பெரும்பாலும் கேவலமான நிலையில் உள்ள இந்த சினிமாக்களின் மூலமாகத் தான் இன்றைய தினம் அரசாங்கத்திற்கு வருவாய் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. நாங்கள் சினிமாவே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இன்றைய தினம் இந்த சினிமாவினாலே, எந்த ஏழை எளிய மக்களுக்காக, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களுக்காக, அல்லது குடிசைகளிலே இருக்கிற மக்களுக்காக, அல்லது குடிசைகளுக்குள்ளும் குடிசைகளிலே இருக்கக்கூடிய மக்களுக்காக, குடிசைகளே இல்லாமல் பிளாட்பாஃர்மிலே இருக்கக்கூடிய மக்களுக்காக, நாமெல்லாம் பாடுபடுவதாகச் சொல்லுகிறோமோ, அந்த ஏழை எளிய மக்களை, பிளாட்பார்ஃர்மிலே இருப்பவர்களே சீர்குலைக்கின்ற ஒரு பயங்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 நவம்பர்

கரமான சூழ்நிலையைத்தான் அது தமிழகத்திலே உருவாகியிருக்கிறது என்பதை நான் மிகப் பணிவன்போடு இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது எங்கே பார்த்தாலும் சினிமாக் கொட்டகைகள் வந்திருக்கின்றன. நகரங்களிலேயும் வந்திருக்கின்றன. கிராமங்களிலேயும் வந்திருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் கிராமங்களிலே போடப்பட்டிருக்கின்ற டெண்ட் போன்ற கொட்டகைகளை நடத்துகின்றவர்கள் இன்றையதினம் லாபம் இல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக, அதிலே ஈடுபட்டிருக்கின்ற நண்பர்கள் சொல்கிறார்கள். காரணம் காம்பவுண்டிங் வரி என்று போட்டுவிட்டு, 14 ஷோக்களை அவர்கள் ஒரு வாரத்திற்கு நடத்த வேண்டும் என்றும், அவர்கள் கேட்டால் மேலே இரண்டு ஷோக்களை கூட அனுமதிக்க அரசாங்கம் உத்தரவு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகையினால் அதிலே அதிகமான லாபம் கிராமங்களிலே இருக்கிற டெண்டுகளை நடத்துகிறவர்களுக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் இன்றையதினம் நகரங்களில், தாலுக்கா நகரங்களில், தாலுக்கா நகரங்கள் என்று சொல்கிற போது—பேரூராட்சிகள் மாநகரங்கள் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் இன்றையதினம் இளைஞர்கள் வேலைக்கே போக முடியாத அளவுக்கு சினிமாக்கள் நடை பெறுகின்றன. நான் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்புவது வருவாய் வருகிறது என்று—என்னப்பா வருவாயே இல்லாமல் ஒரு அரசாங்கம் நடக்குமா என்று அவர் கேட்கலாம்—வருவாய் இருக்க வேண்டியதுதான். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இன்றையதினம் சினிமாவின் நிலைமை என்ன? ஒரு கால கட்டத்தில் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருவண்ணாமலையில் ஒரே ஒரு திரை அரங்கம்தான் இருந்தது. அந்த திரை அரங்கத்தில் அப்பொ தெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர், அவர்கள் நடித்த படமோ, அல்லது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த படமோ வந்தால் கூட்டம் தாங்காது. 50 நாட்களுக்கு 100 நாட்களுக்கு என்று படம் ஓடும். அப்போதிருந்த ரசிகர்கள் அப்படி. நாங்கள் எல்லாம் கூட ரசிகர்களாக இருந்தோம் நேற்றையதினம் கூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நாடோடிமன்னன் படத்திலே நான் தி.மு.க. வின் கொடியைக் காண்பித்தேன் என்றார்கள். அந்தக் கொடியைப் பார்ப்பதற்கு 50 மைல் தூரத்திலிருந்து எங்களுடைய கிராமத்திலிருந்து பல பேர்கள் சைக்கிளில் வேலூருக்கு போய் பார்ப்போம். அந்தப் படத்தை 3 முறைகள் பார்த்தவன் நான்கூட. இன்றைய தினம் திருவண்ணாமலையிலே 6 திரையரங்கங்கள் இருக்கின்றன. 100 நாட்கள் ஓடுகிற படங்கள் வருகின்றனவா என்றால் இல்லை 50 நாட்கள் ஓடு கின்ற படங்கள் வருகின்றனவா என்றால் இல்லை. ஒரு வாரம், 2 வாரம்



983 நவம்பர் 18] [திரு பெ. சு. திருவேங்கடம்]

அல்லது 4 நாட்கள், 5 நாட்கள் தான் ஓடுகின்றன. ஏற்கெனவே இரண்டு காட்சிகள்தான் உண்டு. சனிக்கிழமைகளில் கூட நடத்துவதில்லை ஞாயிற்றுக் கிழமைகளிலேதான் மேட்னி ஷோ என்று மத்தியான காட்சி போடுவார்கள். ஆனால் இன்றைய தினம் நிலைமை என்ன? 24 மணி நேரமும் படம் பார்க்க லாம், என்ற நிலைமையை உருவாக்குகிறீர்களானால் நம்முடைய இளைஞர்கள் எதிர்காலத்திலே சினிமா பார்ப்பதைத்தவிர வேறு எப்படி தொழிலிலே ஈடுபட முடியும். திருவண்ணாமலையிலே 6 திரையரங்குகள் இருக்கின்றன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? ஏழையெளிய குடும்பங்கள், நடுத்தரக் குடும் பங்கள், கூலிவேலைசெய்கிற குடும்பங்கள், வருவாய் இல்லாத குடும்பங்கள் தான். அதிலே எப்படி படம் பார்க்கமுடியும்? அதிலும் நம்முடைய தாய் மார்களுக்கு இந்த சினிமாவைவிட்டால் வேறு பொழுதுபோக்கே இடையாது, போனவாரம்தானே போனாய் என்று கேட்டால் அந்தக் கொட்டகையில் அந்தப் படம், இன்னொரு கொட்டகையில் புதிய படம் வந்திருக்கிறது என்கிறார்கள். இப்படி 6 திரையரங்குகளிலும் பார்க்கிறபோது ஒரு மாதத் திலே 12 நாட்களாவது சினிமா படம் பார்க்கவேண்டிய கட்டாய நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். தாய் என்றால் தனியாகச் செல்லமுடியுமா? பிள்ளைகளையும் அழைத்துச் செல்லவேண்டும், வருவாய் வருகிறதா அந்தக் குடும்பங்களின் நிலையென்ன? குழந்தைகளை ஒருவேளை பட்டினிபோட்டு விட்டாலும் சினிமா பார்க்கிற நிலையை அரசாங்கம் மறைமுகமாக—இப்போது போடப்படுகிற வரி நேர்முக வரிதான்—அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்கள் வயிற்றிலே அடிக்கிற கொடுமை தமிழகத்திலே நிலவுகிறது என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்கள். இளைஞர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறார்களா என்றால் காலைக்காட்சி உண்டு. தாய் தந்தையர் வேலைக்குப் போகிறபோது தன்னுடைய பிள்ளையோ மகனோ, மகளோ பள்ளிகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் காலைக்காட்சியை அவர்கள் பார்த்துவிட்டு வருகிறார்கள். காலைக்காட்சிக்குப் போய்விட்டு வந்து பாடசாலைக்குப் போய்விட்டு வந்ததாக பெற்றோர்களிடத்திலே சொல் கிற நிலைமை இருக்கிறது. அதுபோன்று பிற்பகல் காட்சி, பிறகு முதல் இரவு, பின் இரவு. இப்படி ஒரு நாளைக்கு 4 காட்சிகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளிலும் 6 காட்சிகள்கூட உண்டு, இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டாமா? சினிமா வேண்டும் தான். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கலாமா?

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 நவம்பர் 18

எனக்கு முன்பு இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இளைய
பெருமாள் அவர்கள் சொல்லியதைப்போல் இன்றையதினம் சினிமாக்கள்
ஆபாசமாக இருக்கின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால்
சென்சார் செய்கிற அதிகாரம் நமக்கு இல்லை, மத்திய அரசாங்கம் சென்சார்
செய்கிறது. ஆனால் பத்திரிகைகளிலே வருகிற செய்திகளைப் பார்த்தால்
சென்சார் செய்யப்படாத காட்சிகளை, வெட்டப்பட்ட பகுதிகளைச் சேர்த்துக்
காண்பிக்கிறார்கள் என்று வருகின்றன. சில இடங்களிலே போலீஸ் அதிகாரி
கள் அந்தக் காட்சிகளைப் பிடித்ததாகக்கூட செய்திகள் வருகின்றன. இப்படிப்
பட்ட நிலைமைகள் வளர்ந்து வருகின்றன, வளர்க்கப்பட்டு வருகின்றன, என்
பதை நான் அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன். அவைகளைக் குறைக்க வேண்டும். நகரங்களாக இருந்தாலும்
அரசாங்கத்திற்கு வருவாய் கிடைப்பது ஒரு பெரிய காரியமல்ல, ஏனென்றால்
வருவாயை மட்டும் பெருக்குவது ஒரு அரசாங்கத்தின் கடமையாக இருக்க
முடியாது. மக்களைக் காப்பாற்றவேண்டிய அரசாங்கம் வருங்கால இளைய
தலைமுறையை நல்ல தலைமுறையாக வளர்க்கவேண்டிய நிலைமையில் இந்த
அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது என்று நம்புகிறேன். நான் சொல்
வது நகரங்களாக இருந்தால் இப்போது இருக்கிற காட்சிகளைக்
குறைக்கவேண்டும். காலை காட்சி காட்டப்படக்கூடாது. சனிக்
கிழமை, ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மத்தியானக் காட்சிகள்
காட்டப்படக்கூடாது அல்லது இரண்டு காட்சிகள் தான் இருக்க
வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு பிறகு கம்ப
வுண்டிங் டாக்ஸ் போட்டு அதனால் கொட்டகைக்காரர்கள்
பாதிக்கப்படாதவாறு பார்க்கலாமே தவிர நீங்கள் எத்தனை
காட்சிகள் வேண்டுமானாலும் நடத்துங்கள் என்று சொல்லக்
கூடாது.

இன்றைய தினம் நிலைமை என்ன ? நம்முடைய நிதி
யமைச்சர் அவர்கள் அடிக்கடி வருத்தப்பட்டு சொல்கிறபோது
அமைச்சருடைய மனம் என்ற காரணத்தினால் அல்ல தமிழக
மக்கள் லாட்டரி சீட்டுகளினால் எப்படிப் அவதிப்படுகிறார்கள்'
பொருளாதாரத்தை எப்படி இழந்து வாழ்கிறார்கள் என்று சொல்
கிறபோது எத்தனை அக்கறையோடு இருக்கிறார்களோ அதே
அக்கறை இந்த காட்சிகளை அதிகப்படுத்துகிறபோதும் இருக்
கிறதா என்றால் இருக்கும். இருக்காது என்று நான் சொல்ல
மாட்டேன். அதே நேரத்திலே இன்னொரு பக்கத்திலே சாராயக்
கடைகளைக் கள்ளுக் கடைகளைத் திறந்துவிட்டிருக்
கிறோம். பாதிக்கப்படுவது யார் ? நடுத்தரக் குடும்பங்கள்
ஏழை எளிய மக்கள், பிளாட்பாரத்திலே இருக்கிற மக்கள் தான்
எல்லா வகைகளிலும் வரிகள் மூலமாகவும் மறைமுக வரிகள்
மூலமாகவும் கேளிக்கை வரி வசூலிப்பதன் காரணமாகவும்



1983 நவம்பர் 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

சாராயக் கடைகள், கள்ளுக்கடைகளைத் திறந்துவிட்டதன்
காரணமாகவும் ஏழை எளிய மக்கள் படுபாதாளத்திற்குத் தள்ளப்
பட்டிருக்கிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஏழை எளிய மக்களை நீங்கள்
கைதூக்கிவிடுங்கள். வருங்கால இளைஞர் தலைமுறையை நல்ல
தலைமுறையாக வளருவதற்கு நீங்கள் காரணமாக இருங்கள்
என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்
கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-10)

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகள் தரத்தை உயர்த்தக்
கூடிய காரணத்தினால் ஏற்கெனவே கேளிக்கை வரி கூட்டப்
பட்டு இருக்கிறது. இதனால் இன்றைக்கு சாதாரண மக்க
ளுடைய பொழுதுபோக்கு சினிமா என்பது மட்டும்தான்.
ஆகவே இப்படிப்பட்ட அந்த பொழுது போக்கு காட்சியை கூட
அது பாதிக்கும் என்பது எங்கள் கருத்து. அப்படிப்பட்ட ஒரு
சூழ்நிலையில் முதல் வகுப்பு அல்லது தனி அறை—பாக்ஸ்—
இப்படிப்பட்ட சில விசேஷ உயர்ந்த வகுப்புகளுக்கு உயர்த்தினால்
கூட அது சாதாரண மக்களை பாதிக்காது. ஆகவே, இந்த
குறைந்த பட்ச டிக்கட்டுகளுக்கு எல்லாம் வரி உயர்த்துவதை
நிச்சயமாக தவிர்க்கப்படவேண்டும் என்பதை நான் இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்பாகப் பேசிய
மாண்புமிகு உறுப்பினர் காலைக் காட்சியை தடை செய்ய
வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான்.
இன்றைக்கு கல்லூரிகள், பள்ளிகள் இப்படிப்பட்ட சில கல்வி
நிறுவனங்களில் உள்ள மாணவர்கள் காலைக் காட்சியை பார்க்க
செல்லவேண்டிய நிலமை ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்கு
பொதுவாகவே மக்கள் கூட்டம் எங்கெங்கு இருக்கிறது என்றால்
அதுவும் குறிப்பாக உழைப்பாளி, சாதாரண மக்களுடைய
அந்த உழைத்த பணம் லாட்டரி சீட்டுக்கு, சாராயக் கடைக்கு,
சினிமா தியேட்டருக்கு இப்படிப்பட்ட சில இடங்களுக்கு போய்
பணம் சேருகிறது. இதை நாம் பார்க்கிறோம். இப்படிப்
பட்ட சூழ்நிலையில் இதை மாற்றி அமைப்பதற்கு அரசு நட
வடிக்கை எடுக்கவேண்டும். சாதாரண மக்கள் உழைத்து
சம்பாதிக்கக்கூடிய பணத்தை விரயம் ஆகின்ற ஒரு நிலைமையை
உருவாக்காத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது அரசின் பொறுப்பு
என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னையில் இருக்கக்கூடிய சினிமா தியேட்டர்களைப்
பொறுத்தவரையில் ஏ.சி. தியேட்டர் என்று சொல்லப்படுகிறது.
ஆனால் பல தியேட்டர்களில் ஏ.சி. போடுவது கிடையாது. ஆனால்
சில நேரங்களில் ஃபேன் கூட போடுவது கிடையாது. இதை தயவுசெய்து
அந்தக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். இதை தயவுசெய்து
அது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் கவனிக்கவேண்டியது

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 நவம்பர்

அவசியம். ஒன்று ஏ.சி. போடவேண்டும், இல்லை என்றால்
கட்டணத்தைக் குறைக்கவேண்டும். ஏ. சி. போடுவது இல்லை.
கட்டணம் முழுவதுமாக வசூல் செய்யப்படுகிறது.
அரசுக்குத் தெரியும். தெரிந்து இருந்தாலும் கூட (குறுக்கீடு) இது
சென்னையில் இருக்கக்கூடிய தியேட்டர்கள்தான்—ஆகவே
இதை உடனடியாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு இப்படி இந்த கேளிக்கை
வரியை கூட்டுவது நியாயம் அல்ல. குறிப்பாக சாதாரண
மக்களுடைய பொழுது போக்கு வசதியை குறைக்கக் கூடாது.
அதோடு இன்றைக்கு பொதுவாகவே பாலுணர்வு தூண்டக்கூடிய
சினிமாக்கள், வன்முறையை தூண்டுகின்ற சினிமாக்கள் அதிகமாக
வருகின்றன. அதுவும் திட்டமிட்டு ஒரு பிரச்சார கருவியாக
பயன்படுத்தப்படுகிறது. இதற்கு தமிழ்நாடு அரசு முடிந்த
அளவுக்கு அதை தடை செய்வதற்கு அல்லது கட்டுப்படுத்து
வதற்கு ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும். நல்ல கருத்துக்கள்
உள்ள படங்களுக்கு இந்த மாதிரி கேளிக்கை வரிகளை குறைத்து
அதை ஊக்கப்படுத்தக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகள் செய்வது
சரியாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட சில நல்ல நட
வடிக்கைகளை எடுத்து இந்த பாலுணர்வு தூண்டக்கூடிய, வன்
முறைகளை தூண்டக்கூடிய இந்த சினிமாக்களைக் குறைப்பதற்கு
அல்லது இல்லாமல் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கேளிக்கை வரி 4-ஆவது திருத்தச் சட்ட
முன்வடிவின் மேல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏற்
கெனவே இருக்கக்கூடிய மாவட்டத்தில் பல்வேறு ஊர்களை,
சிறப்பு நகராட்சிகளில் இருந்ததை, சிறப்பு நகராட்சிகளிலிருந்து
தள்ளிவிட்டு, வேறு சில நகராட்சிகளை, சிறப்பு நகராட்சிகளாக
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் சினிமாவைப் பொறுத்தவரையிலும் பல்வேறு மொழி
களில் மொழி மாற்றம் செய்யப்படக்கூடிய படங்கள் மொழி
மாற்றத்தின் அர்த்தம் ஒரு மாதிரியாக இருந்தாலும், அவற்றை
சுவரொட்டிகளின் மூலம் விளம்பரப் படுத்துகின்றபொழுது
பொருள் வேறு மாதிரி, இன உணர்வைத் தூண்டக் கூடியதாக,
பால் உணர்வைத் தூண்டக் கூடியதாக இருக்கிறது.

அதே போல, தமிழ்ப் படங்களாக இருந்தாலும் சரி, அல்லது
வேறு மொழிப் படங்களாக இருந்தாலும் சரி, அந்தப் படங்களில்
இன்றையதினம் பால் உணர்வு அதிகமாக ஆக்கப்பட்டு, அந்தப்
படங்களிலே காட்டக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. இந்தச்
சூழ்நிலையின் காரணமாக, வருங்காலச் சமுதாயம் பாதிக்கப்
படக்கூடிய ஒரு நிலைக்குத் தள்ளப்படும் என்பதை மட்டும்
சொல்லி அமர்கிறேன்.



1983 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசுகின்றபொழுது, இந்தச் சட்டத்தை அவர்கள் எதிர்க்க
வில்லை. இன்றைக்கிருக்கிற நாட்டு நிலைமையை தெளி
வாகச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டு நிலைமையைச் சொல்
கிறபொழுது சமுதாயத்தினுடைய தேவையையும் சொல்லி,
சமுதாயத்தினுடைய தேவை எல்லாவற்றையும் சொல்லி
யிருக்கிறார்கள். அதை நான் முழுமையாக வரவேற்கிறேன்
என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் மாண்புமிகு கிருஷ்ணன் அவர்கள்
சொல்கிற போது, சினிமா, லாட்டரி சீட்டு, மதுபானம் இவை
யெல்லாம் கூடாது என்று சொன்னார்கள். லாட்டரி சீட்டி
னாலேதான் எல்லோரும் ஓட்டாண்டி ஆகிறார்கள் என்று
இதற்கு முன்னாலே இங்கும் சொன்னார்கள். அதையும் நான்
ஏற்றுக் கொள்கிறேன். எல்லா மாநிலங்களும் லாட்டரி சீட்டு
நடத்துவதால் நமது மாநிலமும் இங்கு வைத்திருக்கிறதே ஒழிய,
எல்லாவற்றையும் நிறுத்தினால் ஏழை எளியவர்கள் தப்பித்துக்
கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுபானம் என்று சொன்னார்கள். அதைக்கூட எல்லோ
ரும் குடித்துக் கெட்டுப் போகிறார்கள் என்பதுதான் என்னு
டைய அபிப்பிராயம்கூட. இந்த அரசு வேறு வழியில்லாமல்,
கள்ளச் சாராயத்தைக் குடிக்கிறார்களே என்பதற்காக, நல்ல
சாராயம் வைத்தோமேயொழிய, நல்ல சாராயம் குடிக்காமல்
இருப்பது நல்லதுதான். இந்தத் துறையை நான் வகித்திருந்
தாலும் சரி, வகிக்காவிட்டாலும் சரி, அது எங்களுடைய கூட்
டுப் பொறுப்புதான் என்பதாலே நான் சொல்லும்போது, குடிக்
காமலே இருப்பவர்கள் நன்றாகக் கொதிக்கவைத்து, சுட வைத்து
குடி தண்ணீரை, சாப்பிடுவார்கள். கள்ளச் சாராயத்தைக்
குடிக்கிறவர்கள் சாக்கடையைக் குடிப்பதைப் போலாகும்.
ஆனால், சாராயம் குடிப்பவர்கள் குளத்திலே எருமை மாடு
குடிக்கிற தண்ணீரைக் குடிப்பவர்கள். அதனாலே, இப்
பொழுது மட்டுமல்ல, அந்தப் பொறுப்பிலே இருக்கும்போதும்
சொன்னேன். ஆனால், வேறு வழியில்லாமல் சாக்கடைத் தண்
ணீரைக் குடிக்கிறார்களே என்பதற்காக, அரசு அதைக் கட்டுப்
படுத்துவதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறது. அரசினு
டைய கொள்கையே மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டுமென்
பதுதான். முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கைக் கொண்டு
வரும்போது, தவறு செய்தவர்களுக்கு ஓராண்டு, இரண்டாண்டு
தண்டனை கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இங்கே
நீங்கள் எல்லோரும் எதிர்த்தீர்கள். இந்த அரசைப் பொறுத்த
வரைக்கும் அண்ணாவைப் பார்த்துக் கொண்டிருக்கிற ஆட்சி
என்பதால், மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டுமென்ப
திலே இந்த அரசுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை
என்பதையும் ஆனால் நாட்டு நிலைமை அப்படியிருக்கிறது என்
பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1983 நவம்பர் 18

(முற்பகல் 1-20.)

திரு. கிருஷ்ணன் அவர்கள் சொல்கின்றபொழுது, சினிமாவை
யும் மதுபானத்தோடு, லாட்டரியோடு சேர்த்தார்கள். நான்
அப்படிச் சேர்க்கவில்லை. காரணம், ஏழை, எளியவர்களுக்கு,
பொழுதுபோக்காகத்தான் சினிமா, நாடகம் இருக்கிறது.
அது மாத்திரமல்ல, கலையை வளர்க்கிறது, பண்பாட்டை
வளர்க்கிறது. அதற்காக சினிமா, நாடகம் எல்லாம் ஏற்படுத்தப்
பட்டது. ஆனால், இன்றைக்கு எப்படி என்று
கேட்டால், Vulgar world wa ts Volgar amusem nt.
அதைத்தான் நம்முடைய இளையபெருமாள் அவர்கள் சொல்லி
றார்கள். அந்த நிலைமை இன்றைக்கு வந்திருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு
காரணம் தணிக்கை செய்கிற அதிகாரம் நம்மிடத்திலே
இல்லை. அது எங்கேயோ கண்ணிற்கு எட்டாத தூரத்தில்
இருக்கிறது. அவர்கள் எதை எதையோ தணிக்கை செய்கிறார்
கள். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு
சமீபத்தில் வெளிவந்த, எல்லோரும் பார்த்த படம். படத்தை
நீங்கள் சொல்லலாம். அதிலே, ஆஸ்திகம் எது, நாஸ்திகம் எது,
இதை ஆய்ந்து சொல்வாயே, இதைத் தெரிந்து சொல்வாயே,
என்று ஒரு பாட்டு. அந்தப் பாட்டை வெளியே வராமல்
கத்தரித்து விட்டார்கள். அதற்காக, ஆகும் நெறி எது, ஆகா
நெறி எது, இதை ஆய்ந்து சொல்வாயே, இதைத் தெரிந்து
சொல்வாயே என்று வந்தது. கத்தரிக்கோலை எங்கே வைத்தி
ருக்கிறார்கள் என்றால் பகுத்தறிவைப் பரப்புகிற இடத்திலே
வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு சகோதரர் நல்லப்பன் அவர்கள் சொல்கிறபோது
தெரிவித்ததைப் போல பால் உணர்வை வளர்க்கிற இடத்திலே
கத்தரிக்கோலை வைப்பதில்லை அவர்கள். நான் இந்த அவை
யிலே பலமுறை சொன்னதை திருப்பிச் சொல்கிறேன்.
திருவேங்கடம் அவர்கள் கூட சொன்னார்கள். நாடோடி மன்னன்
திரைப்படத்தை நாங்கள் எல்லாம் போயிருந்து பார்த்தோம்
என்று சொன்னார்கள். இன்றைக்கு தமிழக முதலமைச்சர்
புரட்சித் தலைவர் அவர்கள் படங்களிலே நடித்ததால் செல்
வாக்கு இருக்கிறதென்றால் அவர் நடித்த படங்களில் எல்லாம்
சமுதாயத்திற்கு தேவைப்பட்ட கருத்துக்கள் இருந்தன.
அப்படிப்பட்ட படங்களில் அவர் நடித்தது தான் காரணம்.
சமுதாயத்திற்கு தேவைப்பட்ட கருத்துக்களை அவர் தெரி
வித்தது தான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.
ஆனால் இன்றைக்கு அப்படி இல்லை. இன்றைக்கு வருகிற
படங்களில் கதை இல்லை, வசனம் இல்லை, சமுதாயத்திற்கு
தேவைப்படும் கருத்துக்களும் இல்லை. இன்னும் ஒன்று
மில்லை. சொல்லட்டுமா, மேலாடையும் இல்லை, போட்டும்
போடாமல் இருக்கிறார்கள். இன்றைக்கு அப்படித்தான்
இருக்கிறது நிலைமை.



1983 நவம்பர் 18]

திரு. செ. சிவசாமி : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிவசாமி அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எந்தப் படத்தில் நடித்தாலும், அந்தப் படம் சமுதாயத்தினுடைய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்தது என்பதில் அசைக்க முடியாத எண்ணம் உள்ளவன் நான். சொர்க்கவாசலைப் பற்றிய ஒரே ஒரு பாடலை பாடிக் காண்பித்தேன். நேரமிருந்தால் உங்களுக்குச் சொல்வேன். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கதைகள் அத்தனையையும் நீங்கள் படித்தால், நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு கருத்துக்களை எண்ணிக்கொண்டிருக்கிறீர்களோ, அதைவிட ஆழமான கருத்துக்களை அவை கொண்டிருக்கும். ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், " கத்தியை தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு " என்றார்கள். அப்படியென்றால் அதன் அர்த்தம் வெளிப்படையாக இருக்கிறது. கத்தியை தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்று சொன்னதற்கு காரணம் கத்தியை தீட்டினால் நீ வேதாசல முதலியாரைக் கொல்லுவாய். அதனால் வேதாசல முதலியார் செய்த அநியாயம் நாட்டிற்கு தெரியாமல் போகும். ஆனால் நீ தான் அநியாயம் செய்தாய் என்று தூக்கு தண்டனைக்குப் போவாய். நீ கத்தியை தீட்டினால் வேதாசலம் முதலியாரை கொன்றுவிடுவாய். வேதாசல முதலியாருக்கு தண்டனைக்குப் போவதற்கு பதிலாக நீ தான் போவாய். நீ தான் அநியாயம் செய்ததாக நாட்டிற்குத் தெரியும். நாட்டிலே எத்தனையோ வேதாசல முதலியார்கள் இருக்கிறார்கள்; உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது வேதாசல முதலியார் செய்த தவறுகளை எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லி அவரைத் திருத்த வேண்டும். நாட்டில் வேதாசல முதலியார்கள் உருவாகாமல் இருக்க வேண்டும். இருக்கிற வேதாசலம் முதலியார்களை மாற்ற வேண்டுமென்று தான் கத்தியை தீட்டாதே என்பதாக இவ்வளவு பெரிய கருத்துக்கள் இருக்கின்றன. வேதாசலம் முதலியார் மட்டுமல்ல, சாதாரண ஏழையாக இருந்த அந்த ஆனந்தன் பரமானந்தனாகி, அதற்குப் பிறகு அந்தப் பரமானந்தனுக்கு நல்ல பங்களா, நல்ல கார், அழ

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கம் செய்யப்பெற்றது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 நவம்பர் 18

கான மனைவி போன்ற இத்தனையும் வந்ததற்குப் பிறகு அந்த
ஆனந்தனுக்கு—பரமானந்தனுக்குத் தன்னுடைய தகப்பனைக்
கொன்றவனையே மறந்து விடுகிறது. தன்னுடைய தகப்பனை
யார் கொன்றானோ அவனையே மறந்து விடுகிறான் பர
மானந்தன். அப்படி மறக்கும்பொழுது அதை மறக்காதே
என்பதற்காகத்தான் மறக்கலியே என்று ஞாபகமூட்ட வேண்டி
யிருக்கிறது. அந்த மாதிரியாக இருப்பவர்கள் வசதியடைந்த
வுடன் அல்லது ஐசுவரியம் வந்துவிட்டால் ஏழைக்குப் பாடு
படுவேன் என்று சொல்லிவிட்டு சுகபோகத்தில் இருப்பார்கள்.
ஆகவேதான் பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள் அப்படி
யிருந்து விட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான்
மறக்கலியே என்று ஞாபகமூட்டி, ஏழை எளியவர்களை மறக்கா
தீர்கள் என்ற கருத்தை அந்தக் கதையிலே சொன்னார்கள்.
அப்படி எல்லாக் கதைகளிலும் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன.
ஆகவேதான் நான் சொல்கிறேன். இப்பொழுது அப்படிப்
பட்ட கதைகள் வருவதில்லை, அப்படிப்பட்ட கதைகளை
எழுதுவதில்லை.

இன்றைக்குள்ள நிலையில் படங்களைத் தணிக்கை செய்
கின்ற அதிகாரம் மத்தியப் பேரரசினிடத்தில் இருக்கிறது.
இருக்கட்டும். நமக்கு வேண்டாம். அந்த அதிகாரத்தை
அவர்களே வைத்துக்கொள்ளட்டும். அந்த அதிகாரம் அவர்
களுக்கிருந்தாலும் அந்தப் படங்கள் எந்தெந்த மாநிலங்
களுக்குப் போகின்றனவோ அந்த மாநிலங்களினுடைய பண்
பாட்டிற்கேற்றவாறு, நாகரீகத்திற்கேற்றவாறு மக்களுடைய பண்
பாட்டைக் காப்பாற்றுவதற்காக எந்தப் படமாக இருந்தாலும்
அது அந்த மாநில அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கைக் குழுவால்
தணிக்கை செய்யப்பட்ட பிறகுதான் அங்கேயிருக்கின்ற திரை
யரங்குகளில் திரையிடப்பட வேண்டும் என்பதற்கான முயற்
சியை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து, அவ்வாறு எடுக்க
வேண்டிய முயற்சிகளுக்கு இந்த அரசு முனையும் என்பதை
யும் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர
வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின்
முன்னுள்ள கேள்வி ; "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு
கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1983)
ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்றது.



1983 நவம்பர் 18] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையி
முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்
காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 42/1983) நிறைவேற்றப்பெற வேண்
டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட
முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள் —(தொடர்ச்சி).

(ஈ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1983(ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர்
அறிவிப்பு :

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம்
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண். 36/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது
இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி.)

(ஏ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம்
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண். 36/1983)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற
வேண்டும்."

* 1983 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதிய தமிழ்நாடு
சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 18

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திலே ஒன்
றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய வருவாய்த்துறை
அமைச்சரவர்கள் கூட இப்பொழுது அண்ணாவைப் பற்றிச் சொன்
னார்கள். அவர்கள் எழுப்பிய கருத்துக்களை நினைவுப்படுத்தித்
தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்
சரவர்கள் இந்த மது விலக்கால் ஏற்படும் தீமைகளையெல்லாம்
நன்கு புரிந்து சொன்னார்கள். சட்டங்களைக் கடுமையாக்
கினார்கள். ஆனால் இன்றைய நிலையிலே நாளுக்கு நாள் கேடான
நிலையை மக்கள் அனுபவிக்கிறார்கள். 1937 ஆம்
ஆண்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 1967 ஆம் ஆண்டு
வரையிலும் நிர்வகிக்கப்பட்டது. ஆனால் இந்தச் சட்டம் தளர்த்
தப்பட்ட முறையில் இன்னும் கேடு நடந்திருக்கிறது. அரசாங்கம்
மற்ற மாநிலங்களை உதாரணத்திற்குக் காட்டாமல் நம்முடைய
மாநிலத்திற்கு இது எவ்வளவு கேடான காரியம் என்பதை உணர
வேண்டும். இந்த வருவாயை வேறு வகையில் சரிக்கட்டத்தான்
மறைந்த பெரியார், இராஜாஜி அவர்கள் இந்த சேல்ஸ் டாக்
ஸைக் கொண்டு வந்தார்கள்,

(முற்பகல் 1–30.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனு
மதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: நான் குறிப்பிட்ட காரியங்
களை எல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு நல்ல காரியங்
களைச் செய்வதற்குரிய வகையிலே மறு பரிசீலனை செய்து முழு
மதுவிலக்கினைக் கொண்டுவரவேண்டும். செட்டி பெயரை அர
சாங்கம் வாங்காமல் மீண்டும் மதுவிலக்கினை அமல்படுத்தக் கூடிய
நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டு
இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து
அமர்கிறேன்.

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரால் இந்த
மன்றத்திலே முன்மொழியப்பட்டு மாண்புமிகு சட்ட அமைச்ச
ரால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்
லப்பட்டிருக்கின்ற மதுவிலக்கு சட்ட மசோதாவின் மீது நான்
சார்ந்திருக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்
துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 நவம்பர் 18] [திரு. துரைமுருகன்]

இந்த மசோதாவிலே அவர்கள் கூறி இருப்பது என்னவென்
றால் அதாவது சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்கான கார
ணங்களை எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். சாராயம் தயா
ரித்தல், அந்த சாராயத்தை மொத்தமாக விற்பனை செய்தல்,
இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளை
மொத்தமாக விற்பனை செய்தல் ஆகியவற்றை அரசு அல்லது
அரசுக்குச் சொந்தமான கழகம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள்
ஏற்று நடத்தவேண்டும் என்று பத்திரிகையிலே எழுதப்பட்டதன்
காரணத்தாலும், சட்டமன்றத்திலே பலரும் எடுத்துக் கூறியதன்
காரணத்தாலும் தான் இந்த சாராய சம்பந்தப்பட்ட வகையிலே
உள்ள இரண்டை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சாராயத்தை
மொத்தமாக விற்பனை செய்வதையும், இந்தியாவில் தயாரிக்
கப்படும் அயல்நாட்டு மது வகைகளை மொத்தமாக விற்பனை
செய்வதையும் அரசு எடுத்துக்கொண்டிருப்பதை நான் வரவேற்
கிறேன். ஆனால் என்னுடைய வரவேற்பும், பாராட்டும், முழு
மையாக இருக்காது ; மூன்றிலே ஒன்று என்ற அளவிலேதான்
இருக்கும். ஏன் என்றால் சாராய சாம்ராஜ்யத்தைப் பொறுத்த
வரையிலே 3 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று சாரா
யக் கலவை தயாரித்தல், அதாவது பாட்டிலிங் ப்ளண்டிங் யூனிட் ;
அடுத்தது சாராயத்தை மொத்தமாக விற்பனை செய்தல் ; அதற்
கடுத்தது இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை
களை மொத்தமாக விற்பனை செய்தல். இந்த மூன்றிலே
இரண்டை மட்டும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவதாக இருக்கின்ற பாட்டிலிங் ப்ளண்டிங் யூனிட்டையும்
எடுத்துக் கொண்டிருந்தால் என்னுடைய பாராட்டு முழு
மையானதாக அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும் என்பதைச்
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நான் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால்
ஏன் மூன்றிலே இரண்டை மட்டும் எடுத்துக்கொண்டார்கள் சாரா
யக் கலவை ஆலையை எடுக்கவில்லை என்பதற்கான காரணத்
தைச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.
சாராயக் கலவை ஆலைகளைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்
டிலே மொத்தம் 10 இருக்கின்றது.

** ** ** **

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, ** ** **
இந்த மேட்டரைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்திலே
இருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றிப் பேசுவது சப்ஜுடிஸ்
ஆகும்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றன.

கான மனைவி போன்ற இத்தனையும் வந்ததற்குப் பிறகு அந்த ஆனந்தனுக்கு—பரமானந்தனுக்குத் தன்னுடைய தகப்பனைக் கொன்றவனையே மறந்து விடுகிறது. தன்னுடைய தகப்பனை யார் கொன்றானோ அவனையே மறந்து விடுகிறான் பரமானந்தன். அப்படி மறக்கும்பொழுது அதை மறக்காதே என்பதற்காகத்தான் மறக்கவியே என்று ஞாபகமூட்ட வேண்டியிருக்கிறது. அந்த மாதிரியாக இருப்பவர்கள் வசதியடைந்தவுடன் அல்லது ஐசுவரியம் வந்துவிட்டால் ஏழைக்குப் பாடுபடுவேன் என்று சொல்லிவிட்டு சுகபோகத்தில் இருப்பார்கள். ஆகவேதான் பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள் அப்படியிருந்து விட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான் மறக்கவியே என்று ஞாபகமூட்டி, ஏழை எளியவர்களை மறக்காதீர்கள் என்ற கருத்தை அந்தக் கதையிலே சொன்னார்கள். அப்படி எல்லாக் கதைகளிலும் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவேதான் நான் சொல்கிறேன். இப்பொழுது அப்படிப்பட்ட கதைகள் வருவதில்லை. அப்படிப்பட்ட கதைகளை எழுதுவதில்லை.

இன்றைக்குள்ள நிலையில் படங்களைத் தணிக்கை செய்கின்ற அதிகாரம் மத்தியப் பேரரசிடத்தில் இருக்கிறது. இருக்கட்டும். நமக்கு வேண்டாம். அந்த அதிகாரத்தை அவர்களே வைத்துக்கொள்ளட்டும். அந்த அதிகாரம் அவர்களுக்கிருந்தாலும் அந்தப் படங்கள் எந்தெந்த மாநிலங்களுக்குப் போகின்றனவோ அந்த மாநிலங்களினுடைய பண்பாட்டிற்கேற்றவாறு, நாகரீகத்திற்கேற்றவாறு மக்களுடைய பண்பாட்டைக் காப்பாற்றுவதற்காக எந்தப் படமாக இருந்தாலும் அது அந்த மாநில அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கைக் குழுவால் தணிக்கை செய்யப்பட்ட பிறகுதான் அங்கேயிருக்கின்ற திரையரங்குகளில் திரையிடப்பட வேண்டும் என்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து, அவ்வாறு எடுக்க வேண்டிய முயற்சிகளுக்கு இந்த அரசு முனையும் என்பதையும் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி ; ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள் —(தொடர்ச்சி).

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1983(ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி.)

(ஏ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1983)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

---

* 1983 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. துரைமுருகன் : சரி அதை வேண்டுமானால் எடுத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றது.

திரு. துரைமுருகன் : கோவை, சென்னையைப் பொறுத்த வரையில் உடையாமல் பார்த்துக்கொள்கிறவரிடத்திலே அது இருக்கின்றது. கடலூரைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு ஹோட்டல் அதிபர் வசந்திலே இருக்கின்றது. செங்கற்பட்டிலே இருப்பதை ** ** ** **

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுபற்றி குறிப்பிடுவது சப்-ஜுடீஸ் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அமைச்சர் அவர்களும் அதுபற்றி பேசியது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன் : ஆல் ரைட். அதே போன்று நெல்லையிலே இருக்கிற ஒருவரும் தனக்குக் கிடைத்த லைசென்சை வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் அரசு என்ன செய்தது. 1—6—82ஆம் தேதி ஒரு ஆணை பிறப்பித்தது. நீங்கள் வேண்டாம் என்று சொன்னாலும், அந்த லைசென்சை எக்ஸ்பயரி ஆகிற டேட்டில் கொண்டு வந்து சரண்டர் செய்தாலும், மேலும் இரண்டு மாதம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இரண்டு மாதம், இரண்டு மாதம் என்று அதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருக்கிறது. போகட்டும்.

1983ஆம் ஆண்டு துவக்கத்திலே மாதம் ஒன்றுக்கு 84 லட்சம் லிட்டர் சாராயம் விற்பனை ஆகிறது என்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த 84 லட்சம் லிட்டரை அடைக்க 1 கோடியே 12 லட்சம் பாட்டல்கள் தேவைப்படுகிறது. சாராயக் கலவை ஆலை நடத்துகிறவர்களுக்கு பாட்டல் ஒன்றுக்கு 1½ ரூபாய் வீதம் மாதம் ஒன்றுக்கு 1 கோடியே 68 லட்சம் ரூபாய் லாபம் வருகிறது என்பதை எல்லாம் இந்த மாமன்றத்திலே எங்களுடைய கலைஞர் அவர்களாலே எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றைக்கு ஒரு பாட்டலுக்கு அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் விலை 2 ரூபாய். இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால் சாராயத்தை பாட்டலில் அடைத்து அவர்களுக்கு விற்கிறார்கள். 2 ரூபாய்க்குக் கொண்டு போய் சில்லரை வியாபாரிகளிடத்தில கொடுத்து மறுநாள் அவர்களிடத்தில் இருந்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எப்படி வாங்குகிறார்கள் என்றால் அதை ஒரு ரூபாய்க்கு வாங்குகிறார்கள். இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் இந்த இரண்டு ரூபாயை அரசு ஒதுக்கியிருந்தாலும், ரூபாய் 1.90 காசுக்கு சில்லரை வியாபாரிக்கு விற்று மறு நாள் சாராயம் காலியானவுடன் பழைய பாட்டிலை 90 காசு கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். ஆகவே, அதிலே ஒரு ரூபாய் லாபம் கிடைக்கிறது. இப்போது சாராய கலவை ஆலை அதிபர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் 90 காசுக்குக் கூட நாங்கள் திருப்பி எடுக்கமாட்டோம். 75 காசுக்குத்தான் அதை எடுத்துக்கொள்ளப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் சாராய கலவை ஆலை அதிபர்களுக்கு ஒரு பாட்டல் ஒன்றுக்கு 1.15 காசு லாபம் வருகிறது.

இது குறித்து சில்லரை வியாபாரிகள்—சில சாராய வியாபாரிகள் ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். சாராயம் நிரப்பி வருகிறபோது பாட்டலுக்கு மட்டும் ரூ. 1.90 காசு என்று நிர்ணயித்து விட்டு, காலி சாராய பாட்டல் ஒன்றுக்கு 90 காசு என்று எடுக்கிறார்கள், அதனால் 1 ரூபாய் நஷ்டம் வருகிறது. மேலும் அதை அவர்கள் 75 காசு என்று குறைப்பதாகச் சொல்கிறார்கள். இதனால் சில்லரை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

ஒரு முறை சாராயம் அடைக்கப்பட்ட பாட்டிலைத்தான் மீண்டும் பயன் படுத்துவதால் இந்த விலை குறைப்பு தேவையற்றது என்று அவர்கள ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தலைவர் அவர்களே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒரு பாட்டலுக்கு அரசு நிர்ணயித்த விலை 2 ரூபாய். சில்லரை வியாபாரிகளுக்கு அவர்கள் தருவதோ 1 ரூ. 90 காசு. அவர்கள் திருப்பி வங்குவதோ 90 காசு. அதுவும் இப்போது 75 காசு. ஆனால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சாராயம் அதிகமாக விற்பனையாகி இருக்கிறது. தற்போது சாராயத்தின் விற்பனை செப்டம்பர் மாதம் வரையில் என்னவென்றால் 1 கோடியே 8 லட்சம் லிட்டர் விற்பனையாகி இருக்கிறது. இதனை 750 எம்.எல். கொண்ட பாட்டலில் அடைத்தால், 1 கோடியே 40 லட்சம் பாட்டல்கள தேவைப்படுகிறது. (அதாவது 1 கோடியே 8 லட்சம் லிட்டர் சராயத்தை அடைக்க இந்த அளவிற்கு பாட்டல் தேவைப்படுகிறது.) இதனால் 2 கோடியே 52 லட்சம் ரூபாய் பாட்டல் வகையிலே அந்த சாராய கலவை ஆலை அதிபர்களுக்கு லாபம் வருகிறது.

[திரு. துரைமுருகன்] [1983 நவம்பர் 18

அது மட்டுமல்ல, கலவைத் தொழிற்சாலைகளுக்கு, பாட்டில்
களை வைத்து மொத்த விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச்
செல்வதற்காக ஒரு பாட்டில் ஒன்றுக்கு பேக்கிங் மெட்டீரியல்
(ஒரு காகிதத்திலே சுற்றி அனுப்புவார்கள்) அதற்காக ஒரு பாட்
டலுக்கு 17 பைசா என்று அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிறது.
அப்படித்தான் அனுப்பவேண்டும். ஆனால் எந்த கலவை ஆலை
அதிபர்களும் அப்படி அனுப்புவது இல்லை. இப்படி 17 பைசா ஒரு
பாட்டலுக்கு என்று அரசாங்கம் நிர்ணயித்து இருக்கிற காரணத்
தால், இந்த 17 பைசா அடிப்படையில் மட்டும் கணக்குச் சொல்கி
றேன், செப்டம்பர் மாத விற்பனை சாராய பாட்டல்களின்
எண்ணிக்கை 1 கோடியே 44 லட்சம். ஒரு பாட்டல் ஒன்றுக்கு
ஒன்றுக்கு 17 காசு என்றால், 1 கோடியே 44 லட்சம் பாட்டலுக்கு
மாதம் ஒன்றுக்கு 24 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு
மேலே வருமானம் வருகிறது. ஆனால் இவ்வளவு
செலவு செய்து அந்தக் கலவை ஆலை அதிபர்கள்
பாட்டில்களை அனுப்புகிறார்களா என்றால் கிடையாது
பிளாஸ்டிக் டப்பாக்களில் வைத்து அனுப்புகிறார்கள். நான்
இந்த அவையில் சேலஞ் செய்து சொல்கிறேன். அல்லது வேண்டு
கோளாக வைக்கிறேன். தயவு செய்து மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் என்னோடு 10 பேரை அனுப்பட்டும். இந்த சென்னை
மாநகரத்தில் எங்காவது பாட்டில்களில் பேக்கிங் மெட்டீரியல்
வைத்து அனுப்புகிறார்களா என்று நிருபிக்கட்டும். எந்த தண்
டனை கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறேன். பிளாஸ்டிக் டப்பாக்களில் வைத்து எடுத்துக்கொண்டு
போய் இறக்குகிறார்கள். பின்னர் அதை எடுத்துக்கொண்டு
விடுகிறார்கள். மறு நாள் அதே பிளாஸ்டிக் டப்பாக்களில் வைத்து
எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எனவே, அந்த பேக்கிங் மெட்டீரி
யலுக்கு என்று தரவேண்டியது இல்லை. அந்த வகையிலே
அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 24 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்
கிடைக்கிறது. இவ்வளவையும் பெற்றுக் கொண்டு இன்றைக்கு
பணம் புரளுகின்ற இடமாக காட்சி அளிப்பது இந்த சாராயக்
கலவை ஆலைகள்தான்: அவை தமிழ்நாட்டில் பத்து இருக்கின்
றன என்று சொன்னேன்; இவ்வளவையும் எடுத்திருக்கின்ற நீங்
கள் அவற்றை ஏன் எடுக்கவில்லை? நிறைய வருமானம் வருவது.

[பிற்பகல் 1-40]

கோடிக்கணக்கில் புரளுவது, லஞ்சம் நெளிவது, ஊழல் உற்பத்தி
யாவது அத்தனையும் இந்த சாராயக் கலவை ஆலைகளில்தான்.
எனவே, மொத்த விற்பனையையும் அயல்நாட்டு மது இந்தியா
வில் தயாராகிற அந்த மதுவகைகளையும் எடுத்த நீங்கள் இந்த
சாராயக் கலவை ஆலைகளை ஏன் எடுக்கவில்லை? அதையும்
எடுத்தால் இங்கே கறிக்கும் மீனுக்கும் குழந்தை சாப்பிடுகிற பால்
டின்னுக்கும் வரி போட வேண்டிய அவசியம் இல்லை என்பதை
தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1983 நவம்பர் 18] (திரு. துரைமுருகன்)

இன்னொன்று. நீங்கள் இந்தச் சாராய மொத்த விற்பனை, இந்தியாவில் தயாராகின்ற அயல்நாட்டு மதுவகைகள்; அவைகளை ஏன் எடுத்தீர்கள்? ஏற்கெனவே நீங்கள் பலருக்கு உரிமம் கொடுத்துவிட்டீர்கள்.

** ** ** **

அதை எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே எழுதினார்கள். எழுதியதற்குப் பிறகு, சட்டசபையிலே பேசியதற்குப் பிறகு............

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே,

* * * *

அதுவும் உச்ச நீதி மன்றத்தில் வழக்காக இருக்கிற காரணத்தால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

* * *

That is also a subject matter of enquiry before Justice Ramaprasad Rao Commission of Enquiry.
(குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : அந்த ரிட் டிஸ்போஸ் ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, ராம்பிரசாத் ராவ் கமிஷன் இன்னும் முடியவில்லை. முடியாதது மட்டுமல்ல.

Justice Ramaprasada Rao Commission subject matter has been taken over by the High Court by way of a Writ Petition. There is a stay now granted. Since a stay has been granted taking cognizance of Ramaprasada Rao Commission of Enquiry the subject matter is pending before the High Court. Hence, it is sub-judice.

திரு துரைமுருகன் : * *

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : * * என்பதும் It is the subject mater of enquiry before the Justice Ramaprasada Rao Commission of Enquiry. The subject matter is pending before the High Court because of a Writ Petition. So, it is sub-judice.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** ** பற்றிய எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இதுவரை தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். 15, 20 நிமிடங்கள் வரை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 நவம்பர் 1

யிலும் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதை யாரும் தடுக்க வில்லை. ஆகவே வழக்கு மன்றத்திலே ஒரு வழக்கு இருப்பதன் காரணமாக அதைப் பற்றிய கருத்துக்களை வெளியிடக்கூடாது என்று இருக்கிறபோது அந்தப் பிரச்சினைக்குள் போகாமல் கருத்துக்களை வெளியிட்டால் நல்லது. ஒன்றைச் சொல்வா னேன்? அந்த வழக்கு இருக்கிறது என்று சொல்வானேன்? ஆகவே அவர்கள் 20 நிமிடங்கள் பேசும் வரையில் யாரும் தடுக்கவில்லை. ஆகவே அவருடைய கருத்துக்களைச் சொல்லலாம், அவருடைய எண்ணங்களைச் சொல்லலாமே தவிர, வழக்கு மன்றத்திலே இருப்பதை ஏன் சொல்லவேண்டும். (குறுக்கீடு.)

திரு. துரைமுருகன் : It is parliamentary.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது சப்ஜுடிஸ் ஆக இருப்பதனால்தான் அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டியிருக்கிறது. வழக்கு, நீதிமன்றத்தில் உள்ளது. (குறுக்கீடு.)

திரு. துரைமுருகன் : சுப்பராம ரெட்டியினுடைய கேஸ் சுப் ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது என்று சொன்னேன். அதைச் சொல்லக்கூடாதா ? இது என்ன நியாயம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பராம ரெட்டியினுடைய வழக்கு சுப்ரீம்கோர்ட்டுக்கு போயிருக்கிறது என்று சொல்வதாலோ அல்லது அங்கே தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சொல்வதாலோ எந்தத் தவறும் கிடையாது. ஆனால் * * என்று சொல்லும் நிலைக்குப் போகக்கூடாதே தவிர (குறுக்கீடு) உயர் நீதி மன்றத்திலே இந்த பிரச்சினை இருப்பதன் காரணமாக அதற்குள்ளே போகாமல் இருக்க வேண்டும். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீதி மன்றத்திற்கு ஏன் போனார் என்று சொல்கிறபோதுதான் பிரச்சினை எழுகிறது. அதுதான் விசாரணையில் உள்ளது. அதனால்தான் திரு. துரை முருகன் அவர்கள் இது சம்பந்தமாகப் பேசியது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு.)

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்த அயல்நாட்டு மது வகையராக்களைத் தயாரிப்பது, வியாபாரத்தைச் செய்து, இது குறித்து சென்னையிலே ** (குறுக்கீடு).



1983 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * * is also a subject matter before the Commission of Enquiry.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சாரார் உச்ச நீதி மன்றத்திலே போயிருக்கிறார்கள் என்று சொல்லுவதிலேதவறு இல்லை. ஆனால் அது * * என்று இவர்கள் சொல்லக் கூடாது.

திரு துரைமுருகன் : * * * * அரசும் ஏற்றுக் கொண்டதன் காரணமாகத்தான் இதை எடுத் திருக்கிறார்கள் என்று கூறி, எனவே அரசு முழுமையாக இதை பாட்டிலிங், பிளேண்டிங் யூனிட்டுகளுக்கும் எல்லாவற்றிற்கும் எடுத்து, முழுமையாக எங்களுடைய பாராட்டைப்பெற வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. கி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற 1983 ஆம் ஆண்டு மது விலக்கு இரண் டாம் திருத்தச் சட்ட முன்வடிவினை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களாலே, இந்தச் சட்டத்திலே குறிப்பாக ஒரு ஷரத்து மட்டும் சேர்த்திருக்கிறார் கள், சாராயத்தையும், இந்தியாவிலே தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகளைத் தயாரிப்பதிலும், மொத்தவிற்பனை செய்வது ஆகியவற்றை தனியார் துறைகளிடமிருந்து எடுத்துக் கொண்டு, கூட்டுறவுத் துறையிலே செயல்பட்டு வருகின்ற தமிழ் நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு விற்பனை செய்கின்ற அந்த உரிமத்தைக் கொடுக்க வேண்டும் என்கின்ற இந்த ஷரத்தினை ஆதரிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுவதற்கு மனது இருந்த போதிலும் கூட தொட்டிலைக் கிள்ளி விட்டு (குறுக்கீடு சிரிப்பு) குழந்தையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவார்கள் என்பது போல .............
(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் எல்லோருக்கும் பசி வயற்றைக் கிள்ளுகிறது. இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சரத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்
களை எடுத்துச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். தனியார்
துறையிலிருந்து கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வந்து,
குறிப்பாக நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர்
அவர்கள், பல திட்டங்களைக் கூட்டுறவுத் துறையிலே கொண்டு
வந்து, இந்த மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்கி, அதன்
மூலமாக மாநிலத்திலே பலருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி
தந்திருக்கிற அந்தத் திட்டங்களில் இதுவும் ஒன்று என்று சொல்
கிற வகையில் தான், இன்று இந்தச் சட்டத்திலே, இந்த சரத்தை
புகுத்தி மாநிலத்திலே வருவாயைப் பெருக்குகின்ற வகையிலே
இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே அந்த வகையிலே நாங்கள் இதை ஆதரிக்கக் கடமைப்
பட்டிருக்கிறோம். இதற்கு முன்னாலே ஆண்டவர்கள் மது
விலக்குச் சட்டத்தை அமல்படுத்தாதபோது குறிப்பாக கள்ளுக்
கடைகளையும் சாராயக் கடைகளையும் மற்றக் கடைகளை
யும் ஏலம் எடுத்தவர்கள் வருவாயைப் பெருக்கவேண்டுமென்ற
நோக்கத்திலே கிஸ்தி செலுத்தாதவர்களுக்கு தன்னுபடி செய்து
அரசாங்கத்திற்கு குந்தகம் விளைவித்த தன்மைகளையெல்லாம்
பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரை
யில் மதுவிலக்கைக் கொண்டுவந்து, அதைத் தளர்த்தியதன் நோக்
கத்தை புரட்சித் தலைவர் அவர்கள் பலமுறைகள் இங்கே
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் இந்த வியாபாரத்திலே பலர்
ஈடுபட்டிருந்தாலும் சாராயக் கடைகள், கள்ளுக்கடைகளை
ஏலத்தில் எடுத்தவர்கள் கோர்ட்டிற்குச் சென்றார்கள் (மணி
யடிக்கப்பெற்றது) (அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்
பட்டார்.)

திரு டி. மணி : தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு
மதுவிலக்கு (இரண்டாம திருத்த) சட்டமுன்வடிவின் மீது சில
கருத்துக்களைச சொல்ல விரும்புகிறேன். சாராயம் தயாரித்
தால், சாராயம் விற்பனை செய்தல் சம்பந்தமாக அரசாங்கம்
மேற்கொண்டிருக்கிற சில நடவடிக்கைகள் நியாயமாக இருந்
தாலும்கூட, மிகவும் முக்கியமாக அதிக வருவாயைப் பெருக்க,
லாபத்தைத் தேடித் தரக்கூடிய அயல்நாட்டு மதுவகைகளை
இங்கே உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் அரசே
ஏற்பாடு செய்யவேண்டும். சாராய விற்பனையில் உள்ள ஒரு
சில குறைபாடுகளை நான் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சென்னை நகரத்திலே 100 மில்லி சாராயம் இரண்
டரை ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே 100
மில்லி சாராயம் 2 ரூபாய் அல்லது இரண்டே கால் அல்லது
2.30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில்லரை விலையிலே இப்
படிப்பட்ட மாற்றம் இருப்பதற்கு காரணம் சென்னையிலே சா



ராயம் விற்பனை செய்கிறவர்கள் ஒரு அசோசியேஷனை வைத்
திருக்கிறார்கள். அது விலை நிர்ணயம் செய்கிறது. சாராயம்
அதிகமாக விற்பனை செய்கிற காரணத்தினால் அரசாங்கமே
சில்லரை விலையை நிர்ணயிக்கிறபோது ஒரு நியாயமான விலை
யை நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிஸ்தி கட்டுகிறவர்கள் கட்டளையிடுகிற நிலை
மை இருக்கிறது. அது வரக்கூடாது என்று தெரிவித்துக்கொள்
கிறேன். ஒரு புட்டி, 750 மில்லி சாராயம் மொத்தவிலையிலே
கொள்முதலுக்கு 9 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். ஆனால்
அதை விற்பனை செய்கிறபோது அதனுடைய விலை 20
ரூபாயாகிறது. இடையிலே இவ்வளவு லாபம் வருகிற காரணத்
தினால் கள்ளச் சாராயம் பெருகுவதற்கு வாய்ப்பு வருகிறது.
ஆனால் அரசாங்க லைசென்ஸ் பெற்றிருக்கிற கடைகளிலே
சாராய விலை நகரங்களிலே அதிகமாகவும் கிராமங்களிலே குறை
வாகவும் இருக்கிறது. கள்ளச் சாராய நடமாட்டத்தைக்
குறைக்க வேண்டுமென்றால் அரசு அதற்கு ஒரு நியாயமான
விலை நிர்ணயித்து 9 ரூபாய்க்கு வாங்கி 20 ரூபாய்க்கு விற்கா
மல் நியாயமான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

எரிசாராயம் ஆலையிம் ஒரு லிட்டர் இரண்டே கால்
ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் ஒரு லிட்டர் எரி
சாராயத்தோடு 5 லிட்டர் தண்ணீர் கலக்கிறபோது
பாட்டிலிங் பிளன்டிங் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது.
சாராயத்திலே தண்ணீரை மட்டுந்தான் கலக்
கிறார்கள். அந்தத் துறையினையும் அரசாங்கமே வைத்துக்
கொண்டால் அந்த லாபம் பூராவும் அரசுக்கு வரும். பாட்டிலிங்,
பிளன்டிங் முறையை அரசே ஏற்று நடத்தவேண்டுமென்று
நாங்கள் பல நேரங்களிலே இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம்.

கடைகளைப் பொறுத்தவரையில் மக்கள் அதிகமாக ஜனநடமாட்
டம் இருக்கிற இடங்களிலே வைக்கக்கூடாது என்று பலமுறைகள்
கூறியிருக்கிறோம். மதுரையிலே முக்கியமான இடத்திலே ஜன
நடமாட்டம் இருக்கிற இடமாக காலேஜ் ஹவுஸிற்குப் பக்கத்திலே
வைத்திருக்கிறார்கள். அதைப்போன்றே குழித்துறையிலே பஸ்
நிலையத்திற்கு அருகிலே கல்லூரி மாணவர்கள் பஸ் ஏறுவதற்கு
வருகின்ற அந்தப்பகுதியிலே அயல்நாட்டு மது கடையை வைத்திருக்
கிறார்கள். கடைகளை அமைத்துக் கொள்வதற்கு ஜனநடமாட்
டமில்லாத பகுதிகளிலே அனுமதி கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளுக்கு பக்கத்திலே வைத்திருக்கி
றார்கள், பள்ளிகளுக்கு பக்கத்திலே வைத்திருக்கிறார்கள். கோயில்
களுக்குப் பக்கத்திலே வைத்திருக்கிறார்கள், இந்த நிலைமை மாற
வேண்டும். அயல்நாட்டு மதுவகைகளை உற்பத்தி செய்வதற்
கும் விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[1983 நவம்பர் 18

(பிற்பகல் 2-00)

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மது திருத்த மசோதா மீது கம்யூனிஸ்டு கட்சி
சார்பாக இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
இப்போது கொண்டு வந்து இருக்கிற திருத்தத்தை வரவேற்ப
தோடு முக்கியமாக வருமானம் வரக்கூடிய இந்த சாராய கலவை.
அந்த சாராய கலவையையும் அரசாங்கம் எடுத்தால் தான்
அதிகமாக நிதி கிடைக்கும். இப்போது தனியாருக்கு போகிற
வருமானங்களை நிறுத்தி அரசாங்கம் அதை எடுத்துக்கொள்
வதற்கு சிந்திக்கவேண்டும். இப்போது வரக்கூடிய இந்தத்திருத்
தம் இன்னும் ஒரு ஆண்டுக்கு முன்னால் வந்து இருந்தால் அர
சுக்கு அதிகமாக லாபம் கிடைத்து இருக்கும் என்று தெரிவித்
துக் கொள்கிறேன். நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த
மது விலக்கைத்தளர்த்துவதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி
ஆதரவு கொடுத்ததற்கு காரணம் எரி சாராயத்தை கலந்து
மக்கள் குடிப்பதால் மக்கள் வயிறு எல்லாம் புண்ணாகி அவர்கள்
பாதிக்கப்படுகிறார்களே என்ற காரணத்திற்காகத் தான்.
இன்றைக்கு எரி சாராயம் பெருகிவிட்டது. பச்சை அரிசியை
ஊற வைத்து அதை அரைத்து பனங்கல்லில் கலந்து விற்பதாக
சொல்லப்படுகிறது. காரணம் இரண்டும் ஒரே நிறமாக இருப்
பதால், எரி சாராயம் கலக்கப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கு முன்
னால் ஒரு ரெவின்யூ வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை நகரங்
களில் இரண்டு சாராயக் கடைகள் இருக்கும். ஆனால் இன்றைக்கு
யூனியன் ஆபிஸ் அருகிலும், ஹைஸ்கூல் அருகிலும், ரெயில்வே
ஸ்டேஷனுக்கு அருகிலும், பஸ் நிலையத்திற்கு அருகிலும்
சாராயக் கடைகளும் கள்ளுக் கடைகளும் இருக்கின்றன. இன்
றைக்கு கிராமங்கள் தோறும் கள்ளுக்கடைகளும்
கடைகளும் பெருகியிருக்கின்றன. தாய்மார்கள் தென்னைத் சாராயக்
தோப்புகளில் குடுவைகளாக தொங்குவதை பார்க்கிறார்கள்.
எங்கு பார்த்தாலும் 4, 5 கிளாஸ்களை வைத்துக்கொண்டு
சாராய பாட்டில்களை வைத்துக்கொண்டு விற்கிறார்கள். ஒவ்
வொரு தெருவுக்கும் இப்போது சாராயக் கடைகள் இருக்கிறது.
அங்குள்ள அதிகாரிகள் அனுமதிப்பதால் இவ்வளவு கடைகள்
இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்த கள், சாராயத்
தால் மாணவர்கள், பெண்கள், சம்பாதிக்கக்கூடியவர்கள் மிக
வும் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் கிராமங்கள் மிகவும்
பாதிக்கப்பட்டு இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களை வேண்
டிக்கொள்வது எல்லாம் முன்பு இருந்ததை போல் ஒரு ரெவின்யூ
வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை, நகரங்களுக்கு 2 சாராயக்
கடைகள் என்ற அளவிலே அனுமதித்தால், நல்லது. இன்
றைக்கு கிராமங்கள் தோறும் வீதிகள் தோறும், கோவிலுக்கு
அருகிலும், கடைகள் இருக்கிறன. திருத்துறைப்பூண்டி மேல்
நிலைப்பள்ளிக்கு அருகில் பக்கத்தில் சாராயக் கடை இருக்கிறது.
கோட்டூர் யூனியன் அலுவலகமா அல்லது சாராயக் கடையா
என்று கேட்கிற அளவுக்கு அங்கே கடை இருக்கிறது. இந்த



1983 நவம்பர் 18] (திரு. பொ. உத்திராபதி)

மாதிரி இடங்களில் எல்லாம் கடைகளை வைக்க அதிகாரிகள்
அனுமதி அளித்து இருக்கிறார்கள். இதைத்தடுத்து நிறுத்தி ஒரு
ரெவின்யூ வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை, பெரிய நகரமாக
இருந்தால் 2 சாராயக்கடைகள் என்ற அளவுக்கு அமைச்சர்
அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு
இந்தத்திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
அனைவருமே அரசுப்பொறுப்பிலே உள்நாட்டில் தயாரிக்கிற
சாராயம், அன்னிய நாட்டு மது வகைகள் ஆகியவற்றை வினி
யோகம் செய்யும் பொறுப்பை மேற்கொண்டதை பாராட்டிப்
பேசினார்கள். அரசு இந்தப் பொறுப்பை மேற்கொண்ட
பிறகு கடந்த 4 மாத காலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 8 கோடி
ரூபாய் இந்தக்கழகம் லாபத்தை ஈட்டியிருக்கிறது. அது மட்டும்
அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது குறிப்பாக
திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது நெல்லையிலே
உள்ளவருக்கு முன் நீட்டிப்பு ஏன் என்று கேட்டார். அங்கே
உயர்நீதிமன்றத்தில் தடை ஆணை பெறப்பட்டு அந்த வழக்கு
முடிந்து உச்ச நீதி மன்றம் சென்று அங்கும் தடை ஆணை
பெறப்பட்ட பிறகு தான் அந்த ஆணையே இடப்பட்டது என்
பதை நான் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

காலி பாட்டில்களைப் பொறுத்தவரைக்கும் கலவை
ஆலைகளைச் சேர்ந்தவர்கள் அதிக லாபம் பெறு
கிறார்கள் என்றும் அவர்கள் ரீடெயில் கடைகளுக்கு
விற்கின்ற அந்தச் சாராய பாட்டில்களைப் பிறகு திருப்பி
எடுக்கின்றபொழுது பழைய பாட்டில்களுக்கு 90 காசு
எனக் கொடுக்கிறார்கள். சாராயத்தோடு அந்தப் புட்டி
யைக் கொடுக்கும்போது, ரூ. 1.90-க்கு விற்கிறார்கள். அதில்
அவர்கள் அதிக இலாபம் சம்பாதிக்கிறார்கள் எனச்சொன்னார்கள்
இதிலிருக்கிற ஒரு பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகனும் அவையும் உணர வேண்டுமென நான் கூறவிரும்பு
கிறேன். ஒரு பாட்டிலினுடைய விலையை நிர்ணயிக்கும்போது
அந்த பாட்டிலுக்கு என்ன விலை மார்க்கெட்டிலே இருக்கிறது
என்பதை அறிந்து தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா பூராவும்
பாட்டிலினுடைய விலை என்ன என்பதை அறிந்து, இந்த விலைக்
குத்தான் அந்த ரூ. 2 மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்
போல, ரூ 1·90 என நிர்ணயிக்கப்பட்டது. அந்த விலைக்கு
அவர்கள் பாட்டிலை வாங்குகிறார்கள். சாராயத்தை அதில்
அடைக்கிறார்கள். அதைப் பிறகு விற்கிறார்கள். விற்கின்ற
பொழுது அந்த ரூ. 2 சாராய பாட்டில் விலையையும் வாங்கி
விடுகிறார்கள். ஆனால், திருப்பி அடுத்த முறை அவர்கள் சாரா
யத்தைத் தயார் செய்கின்றபொழுது அவர்கள் பாட்டிலை உற்
பத்தி செய்கின்ற கம்பெனிகளிடமிருந்தும் வாங்குகிறார்கள்.
மார்க்கெட்டில் எங்கு கிடைத்தாலும் வாங்குகிறார்கள். அதை
ரீடெய்லிலும் சென்று வாங்குகிறார்கள். கடையிலும் சென்று

[திரு சி. பொன்னையன்] [1983 நவம்பர் 18

வாங்குகிறார்கள். ரீடெயில் கடைக்காரர்களைப்
பொறுத்தவரைக்கும் நாங்கள் உங்களுக்கு 90 காசுக்குச் தர
மாட்டோம். அதே ரூ. 2-க்குந்தால் தருவோம்.
என்று அவர்கள் சொல்ல வேண்டும். இதை நான் சொல்வதற்குக்
காரணம், இதில் அரசு தலையிட முடியாது. சாராயக்கலவை
ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் அது தனியாரிடம் உள்ள
அமைப்பு. அவர்கள் எங்கு போய் பார்த்து வாங்க வேண்டும்,
என்ன, என்ன வாங்க வேண்டும், என்று சொல்ல முடியாது.
என்ன விலைக்கு வாங்க வேண்டுமென்று ரூ. 2 என்று விலையை
நிர்ணயித்திருக்கிறோம். ரூ. 2-க்கு வாங்குவதை, ரீடெயில்
கடைக்காரர்களிடம் 90 காசுக்கு வாங்கி, 90 காசுக்குத்தான்
கொடு, என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர்
திரு. துரைமுருகன் சொன்னதைப் போல ரீடெயில் கடைக்காரர்
கள் என்றால் அவர்களுக்குச் சொந்த பிராபர்ட்டி ஆகிறது.

Once it is — Bottle arraik— Purchased by the Retail shop it becomes he property of the Retail hop owner. Then it is for the Retail Shop owner to sell it at any rate that he desires.

அப்படி அவர்கள் அந்த பாட்டிலை விற்கின்றபொழுது 90 காசுக்
குக் கொடுக்கமாட்டோம், ரூ. 2-க்குத்தான் விற்போம் என்றால்
மீதம் உள்ள லாபம் ரீடெயில் கடைக்காரர்களுக்கு, சாதாரண
மானவர்களுக்குச் சென்று சேரும். இதை நான் விளக்கத்திற்
காகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது, சென்
னையிலே சிலருக்கு உரிமம் தருவதற்கு வாய்ப்பில்லாமல் போய்
விட்டது என்ற காரணத்திற்காகத்தான் இதை அரசே எடுத்துக்
கொண்டது என்று சொன்னார். அது முற்றிலும் தவறான
ஒன்றாகும். காரணம், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற அந்த
வழக்கில் கூட இந்த மொத்த விற்பனை உரிமையில், தற்போ திருக்
கும் முறையை உச்ச நீதிமன்றம் சரி என்றுதான் சொல்லியிருக்
கிறது. சென்னை மாநகரைப் பொறுத்த வரைக்கும் மக்கள்
அதிகமாக உள்ள பகுதி என்ற காரணத்தால் ஏற்கனவே தந்த
ஒன்றைச் சரியான ஒன்று எனச் சொல்லிவிட்டு மேற்கொண்டும்
ஒன்றிரண்டு முடியுமா என்ற ஆலோசனையை அரசுக்கு நல்கி
யிருந்தது. இது தானே தவிர, மற்றபடியாக அந்த முறை தவறு
என்று உச்ச நீதிமன்றம் ஒரு காலத்திலும் சொல்லவில்லை.
ஆனால், மேலும் இந்தச் சென்னைக்காக மட்டும் என்று சொன்
னால், தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை மொத்த விற்பனை,
எரி சாராயக் கலவை, அதாவது, சாராயம் மற்றும் ஐ.எம்.எப்.
எஸ். போன்ற அத்தனை பொருட்களையும் மொத்த விற்பனைக்கு
உட்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு அரசே பொறுப்பேற்க
வேண்டுமென்ற நோக்கோடுதான் முதற்கட்டமாக அரசு இந்தப்
பணியை மேற்கொண்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.



1983 நவம்பர் 18] [மாண்புமிகு திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகிறபொழுது
சென்னையிலே இருக்கிற ரீடெயில் கடையிலே விற்கப்படுகின்ற
சாராயத்தினுடைய விலைக்கும் கிராமப்புறத்திலே விற்கப்படு
கின்ற சாராயத்தினுடைய விலைக்கும் மாறுபாடு இருக்கிறது.
அந்த மாறுபாட்டைப் போக்க வேண்டும். சங்கம் ஒன்றை
வைத்துக் கொண்டு அவர்கள் சங்கத்தின் விலை என்ற நிலையிலே
இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ரீடெயில் கடைகளைப்
பொறுத்தவரைக்கும் ஒன்றை நான் அவைக்குத் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். சாராயம் 'ஆக்ஷன்-கம்-டெண்டர்'
என்ற முறையிலே, ஏலம் விடப்படுகிறது. ஏலத்திற்கு அவர்கள்
எடுக்கிறார்கள். யார் அதிகமான ஏலத் தொகையைக் கூறு
கிறார்களோ, அவர்கள் எடுக்கிறார்கள். அப்படி ஏலத்திற்கு
எடுத்த கடைக்காரர்கள் எல்லாம் ஒரு சங்கத்தைவைத்து இந்த
விலைக்குத்தான் ரீடெயிலில் விற்கவேண்டுமென்று முடிவு செய்
கிறார்கள். ஆனால், அவர்கள் ரீடெயிலில் விற்கும்போதுகூட
அவர்கள் எந்தத் தொகைக்கு எடுத்திருக்கிறார்களோ அந்தல
தொகைக்கு நட்டம் ஏற்படாத வகையில் அவர்கள் விற்கவேண்டு
மென்ற முறையில் இருக்கிறார்கள், ஆனால் மாண்புமிகு
உறுப்பினர் மணி அவர்கள் சொல்கின்றபொழுது, Thre shovld
be a celling on the retail rice also என்ற கருத்தைச்
சொன்னார்கள். அது அரசினுடைய வருவாயை மிகவும்
பாதிக்கும் என்ற காரணத்தால்தான் அதை அரசு ஏற்றுக்
கொள்ளாமல் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் இப்படி மாறு
பட்ட நிலை நகரத்திற்கும் கிராமத்திற்கும் இருப்பதாகவும்
ரீடெயில் கடைக்காரர்கள் அதைச் செய்கிறார்கள் என்றும்
சொன்னார்கள். ரீடெயில் கடைக்காரர்களுக்கு இருக்கிற
விதிக்கு உட்பட்டு நிர்ணயிக்கிற விலையை தடை செய்ய
அரசிற்கு அதிகாரம் இல்லை. என்றாலும் கூட சாதாரண
மக்களுக்கு பாதிப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து
அரசு ஆராயும்.

(பிற்பகல் 2—10.)

அடுத்து இன்னொன்றையும் சொன்னார்கள். இத்தகைய
கடைகள் எல்லாம் மாண்புமிகு உத்திராபதி அவர்களும்,
மாண்புமிகு மணி அவர்களும் பேசுகிற போது, பல இடங்களில்
குறிப்பாக பள்ளிகள், கல்லூரிகள், ஆலயங்கள், மருத்துவ
மனைகள் இது போன்ற இடங்களிலும், மக்கள் நெருக்கம்
அதிகமாக இருக்கிற பகுதிகளில் எல்லாம் சில்லறைக் கடை
களுக்கு உரிமம் வழங்கியிருப்பது சரியல்ல என்று சொன்னார்கள்.
இது குறித்து கண்டிப்பான உத்தரவை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் இட்டு எங்கெங்கு அப்படி உரிமம்
பள்ளிகளுக்கு அருகிலோ, கல்லூரிகளின் அருகிலோ
மருத்துவமனைகளின் அருகிலோ, மக்கள் நெருக்கம்
அதிகமாகவுள்ள சாலைகளிலோ கொடுக்கப்பட்டிருக்
கிறதோ அவற்றையெல்லாம் மாற்றி, அந்த மக்கள்
நெருக்கம் அதிகம் இல்லாத பகுதிக்கு மாற்ற வேண்டுமென்ற
உத்தரவை இட்டு அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது. இந்த நடவடிக்கை மேலும் துரிதமாக்கப்பட்டு

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப் போல மக்கள் நெருக்கம் அதிகமான பகுதிகளில், முக்கியமான பகுதிகளில் இது போன்ற கடைகள் இல்லாத நிலையை அரசாங்கம் ஆவன செய்யும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிறபோது ஒரு வட்டத்திற்கு இரண்டு கடைகள், நகரத்திற்கு ஒரு கடை என்று கொடுத்தாலே போதும்; எங்கே பார்த்தாலும் கடைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படித்தான் ஆரம்ப நிலையில் கடைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் குடிப்பழக்கம் உள்ளவர்கள் 3 மைல், 4 மைல், 5 மைல் சென்று மது வகைகளை பெறுவதற்கு பதிலாக அருகிலே கிடைக்கிறமுறை கேடாக தயார் செய்யப்படுகிற, உடலைப் பாதிக்கிற கள்ளச் சாராயத்தை அவர்கள் சுலபமாகப் பெற முடிகிறது என்ற காரணத்தினால் தான் இப்படி அதிகமாகக் கடைகளை ஆரம்பிக்கிற போது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல் மது என்பது கூடாத ஒன்று தான் என்றாலும் கூட, கள்ளச் சாராயம் உயிரைக் கொல்லக்கூடிய ஒன்றாக இருக்கிறதால், தரமாக ஏழை மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் அந்த கடைகள் அதிகமாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது தான் நோக்கம்.

அதோடு இன்னொன்றையும் கூட அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வருமானத்தைப் சுபருக்குகிற ஒரே நல்ல நோக்கத்தோடுதான் மதுவிலக்கை இந்த அரசு தளர்த்தியது என்பதை இந்த அவை அறியும். ஏழை மக்கள், பாமர மக்கள் எல்லாம் கள்ளச் சாராயத்தைக் குடித்து, உடல் நிலையைக் கெடுத்து, சில நேரங்களில் உயிர் போகிற நிலை கூட ஏற்பட்டது. அதிலிருந்து அவர்களுக்கு விடுதலை தர வேண்டும். அரசினுடைய வெல்பேர் மெஷர்ஸ்லை நடேற்று வதற்கு வருமானத்தைப் பெருக்க வேண்டும்; ஆகிய இரண்டு நோக்கங்களை நடேற்ற தான்-கொள்கை அளவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மது வகைகள் என்பது ஏற்புடையதல்ல என்றாலும் கூட தவிர்க்க முடியாதகும் நிலையில் கொண்டு வந்தோம். இப்படி இந்த மதுவிலக்கை தளர்த்திய பிறகு அரசிற்கு வருமானம் பெருக்கம் மிக அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். உதாரணமாக மதுவிலக்கை 1971-72-ல் ரத்து செய்தார்கள். அந்த 71-72-ஆம் ஆண்டில் அரசிற்கு கிடைத்த வருமானம் ஒட்டு மொத்தமாக 20 கோடி ரூபாய் கிடைத்தது. 1981-82-ல் மதுவிலக்கை இந்த அரசு தளர்த்தியதற்குப் பிறகு அந்த ஆண்டிலே கிடைத்த வருமானம் 104 கோடி ரூபாய் கிடைத்தது. 1971-72-ல் 20 கோடி ரூபாய் என்ற நிலை மாறி 1981-82-லே 104 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. அதைப் போலவே மதுவிலக்கு முன்பு ரத்து செய்யப்பட்ட இரண்டாவது ஆண்டான 1972-73-ல் 36 கோடி



ரூபாய் வருமானம் கிடைத்தது. ஆனால் மது விலக்கு தளர்த்தப் பட்ட இரண்டாவது ஆண்டில் இந்த ஆட்சியில் 148 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது 36 கோடி ரூபாய் அப்போது; 148 கோடி ரூபாய் தற்போது அரசிற்கு கிடைத்திருக்கிறது. 1973-74-ல் 55 கோடி ரூபாய் கிடைத்தது; தற்போது இது காறும் வருமானம் கிட்டத்தட்ட 90 கோடி ரூபாய் அளவிற்கு வந்திருக்கிறது. இந்த ஆண்டு வருமானம் ஒட்டு மொத்தமாக 186 கோடி வரும் என்று சொல்லப்படுகிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம், இந்த ஆட்சி மதுவிலக்கை தளர்த்தி யதற்குப் பிறகு மிக அக்கறையோடு, தூய்மையான முறையிலே நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கிற காரணத்தாலே தான் கடந்த காலத்திலே மதுவிலக்கை ரத்து செய்தபோதிருந்த வருமானத்தைவிட பல மடங்கு வருமானம் தற்போது உயர்ந் திருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவை அவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

திரு. என். சங்காய்யா; தலைவரவர்களே, பேசும்பொழுது இந்த பௌண்டிங் யூனிட்டுகளை அரசாங்கம் எடுப்பதைப் பற்றிய கொள்கையை ஏதாவது ஆராய்ச்சி பண்ணுமா. இல்லாவிட்டால் அதிலே அரசாங்கத்தினுடைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்வர்கள் ஒரு அறுடைய தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்வர்கள் ஒரு கொள்கை முடிவினைப் பற்றிக்கேட்கிறார்கள். பல பிரச்சனைகள் இருக்கின்றன. அது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கும் தெரியும். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசும்பொழுது கூட டி. வி. எஸ். குருப் நிறுவனத்திடம் 226 கோடி ரூபாய் சொத்திருப்பதாகவும், அசோக் லேலண்டிடம் 252 கோடி ரூபாய் சொத்திருப்பதாகவும், இதெல்லாம் ஏகாா பத்திய, ஏகபோக முதலாளிகளின் கைகளில் இருப்பதாகவும், எடுத்துச் சொன்ன அந்த நேரத்தில் கூட அதை நாட்டுடைமை யாக்க வேண்டுமென்ற நோக்கோடு அவர் சொல்லவில்லை.

ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் எத்தனையோ பிரச்னைகள் இன்னும் இருக்கின்றன. அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்; கோத்தாரி குரூப்பு டால்மியா சிமெண்ட்ஸ், தாரங்கதாரா கமிக்கல்ஸ், இண்டியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ், சாகுவாலா மில்ஸ் போன்றவைகள் எல்லாம் வடபுலத்து கோடீஸ்வரர்களிடம் இருக்கின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் பிர்லா போன்றவர்களெல்லாம் நீலகிரி மாவட்டம் போன்ற பகுதிகளில் தேயிலை, காப்பித் தோட்டங்களை எல்லாம் வாங்கி வைத்து கோடி கோடியாகக் கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். படிப்படியாக அரசே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய பணிகள் எத்தனையோ இருக்கின்றன. இது ஒன்று மட்டும் அல்ல என்பதற்காகத்தான் சொல்கிறேன். படிப்படியாக பல தொழில்களை, இலாபம் வருகின்ற தொழில்களைக் கண்டிப்பாக அரசு ஏற்க வேண்டும். அதனால் அரசுக்கு வருமானம் மிக வேண்டும். அந்த வருமானத்தைக் கொண்டு மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களை, வெல்பேர் மெஷர்ஸ் என்று சொல்லக் கூடிய திட்டங்களை ஈடேற்ற வேண்டுமென்பது தான் அரசின் எண்ணம். அந்த அடிப்படையிலே பிரச்னைகளை இந்த அரசு ஆயும் எனக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 36/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 36/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.



6. தகவல் கோரல்.

பாண்டியராஜபுரம் ஆலை மூடியிருத்தல்

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நேரத்திலே நான் பேசுவதற்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுத்தமைக்காக என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சென்ற மாதம் 24-ஆம் தேதியே பாண்டியராஜபுரம்மில்லைப்பற்றிய ஒரு ஒத்தி வைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன் ஆனால் இது வரையில் எடுக்கப்படாத காரணத்தினால் நான் சொல்கிறேன். வருகின்ற டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி அந்த மில்லைத் திறக்க வேண்டும். அந்த மில்லின் முதலாளிகளும், நிர்வாகஸ்தர்களும் விவசாயிகளைக் கொடுமைப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கு மட்டும் கரும்பைக் கொடுத்து அரைத்ததற்காக கிட்டத்தட்ட 79 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். ஏற்கனவே கரும்பு கொடுக்கும் விவசாயிகள் வங்கியிலிருந்து மில் நிர்வாகத்தின் மூலம் கடன் வாங்கியிருக்கிறோம். அவர்களின் பணம் முதலாண்டு 7 இலட்சம், இரண்டாம் ஆண்டு 54 இலட்சம் பிடித்தம் செய்து அந்தப் பணத்தைப் பேங்கிற்குக் கட்டாததால், பேங்கிலிருந்து விவசாயிகளுக்கு நோட்டீஸ் வருகிறது. இது வரைக்கும் 59,000 சர்க்கரை மூட்டை ஸ்டாக் இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் டிசம்பர் 1 ஆம் தேதி அந்த மில் திறக்கப்பட வேண்டும். ஒரு நாளைக்கு 1,250 டன் கரும்பு அரைக்கப்பட வேண்டும். அப்படியுள்ள சூழ்நிலையில் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய்களை அந்த மில் நிர்வாகஸ்தர்கள் ஏழை எளிய விவசாயிகளிடத்திலே கொள்ளை அடிப்பது மட்டுமல்ல, மில்லை ஓட்ட முடியாமல் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே 3 கோடி ரூபாயையும் அரசாங்கமே போட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த மில்லை அரசாங்கமே எடுக்க வேண்டுமென்ற கோரிக்கைக்காகத்தான் இதைக் கொண்டு வந்தேன்.

(பிற்பகல் 2-20)

அதுமட்டுமல்ல. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு மூன்று மாதமாகச் சம்பளம் கொடுக்கப்பட வில்லை. அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை. எனவே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்குப் பாதிக்கப் பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போனஸ் பிடித்தம் செய்யட்டிருக்கின்றது. ப்ராவிடன்ட் பண்ட் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. பாண்டியன் கூட்டுறவுச் சிறப்பங்காடியில் கடன் வாங்கியவர்களுக்கும் இந்தப் பணம் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி பிடிக்கப்பட்ட பணத்தை எல்லாம் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப் பட்ட சூழ்நிலையில் அந்த மில் ஒடியாக வேண்டும். அந்த மில்லை அரசாங்கமே எடுப்பதற்குரிய வழிவகை செய்து கொடுத்தால் நல்லது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை தேதி குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்ட அலுவல்கள் இத்துடவு முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

221. பேருந்து மற்றும் பார வண்டிகளின் அடிச் சட்டங்களை விற்கும் எந்த ஒரு வணிகருக்கும் விற்பனை வரியை 15 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 18-7-1983 ஆம் நாளிட்ட 774 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





222. அப்பத் தொழில் (Bakery) பொருட்களுக்கு விலக் களிப்பது குறித்து முன்னர் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 25-7-1983 ஆம் நாளிட்ட 822 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1959/53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள். ஏனைய தாள்கள்

59. கீழ்க்காணப் பெறும் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை 27-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி) பேரவையில் வைக்கப் பெறுகிறது.—

31-3-1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்.—

1. மாண்புமிகு திரு. க. இராசாராம்.
2. திரு. ஆர். உமாநாத்.

31-3-1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்.—

1. மாண்புமிகு திரு. க. இராசாராம்.
2. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.
3. திரு. இ. முத்துராமலிங்கம்.
4. திரு. ஆர். உமாநாத்.

31-3-1983 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்.—

1. மாண்புமிகு திரு. க. இராசாராம்.
2. திரு. இ. முத்துராமலிங்கம்.
3. திரு. ஆர். உமாநாத்.
4. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.
5. திரு. ஆர். கிருஷ்ணன்.
6. திரு. டி. கே. நல்லப்பன்.
7. திரு. எ. பாலுச்சாமி.
8. திரு. என். சங்கரய்யா.
9. திரு. கே. ரமணி.

60. மீனளத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து குழு அளிக்கும் இருபத்தொன்றாவது அறிக்கை.

61. 1983-84 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை (தமிழ், ஆங்கிலம்.)

62. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு-முறைப்படுத்தல்) திருத்தத் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 55/1983) நகலும் இணைப்பும்.

63. 1983 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வறிவு எண். 56/1983)—நகலும் இணைப்பும்.

64. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (1 முதல் 50 வரை) (ஆறாவது பட்டியல்).

136070
சென்னை-600 008
D
V2ıı,31 N83
N83

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vasia Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 302 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.